உ

சிவமயம்.

சகலாகமபண்டிதரென்னும்

திருத்துறையூர்

அருணந்தி சிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய,

சிவஞானசித்தியார் பரபக்ஷம்

மூலமும்,

தத்துவப்பிரகாசருரையும்.

இவை

கொன்றமாநகரம் ஸ்ரீ-ல-ஸ்ரீ,

ஷண்முகசுந்தர முதலியாரால்

பரிசோதித்த ப்ரதிக்கிணங்க

ஆ. சிங்காரவேலு முதலியாரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை

சிவஞானபோத யந்த்ரசாலையில்

மயிலை - அழகப்பமுதலியாரால்

பதிப்பிக்கப்பட்டன.

சாதாரண௵ மார்கழி௴

உ

சிவமயம்.

முகவுரை.

ஆன்மாக்கள் பலவற்றாலும் முத்தியையடைவதற்குக் காரணமாயுள்ளது மானுடப்பிறவியேயாம். அப்பிறவியை யடையப்பெற்ற நமதுசிற்றறிவிற்குப் பெருந்துணையா யுள்ளது கல்வியொன்றே. அக்கல்வியைச் சமஸ்கிருதமென் னும் ஆரியமொழியிலும், தமிழ்மொழியினும், தொன்றுதொட்டுப் பயின்று, அறம், பொருள், இன்பம், வீடென்னு நான் கின்பங்களையும் பெறலாம். தமிழ்நாட்டிற்பிறந்து தமிழ் பயின்றுவரு நாம் பாலியத்தில், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, மூதுமொழிக்காஞ்சி, இன்னாநாற்பது, இனியவைநாற்பது, திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், ஏலாதி, நீதிநெறிவிளக்கம் என்னும் சிறுநூற்களை நற்குண நற்செய்கையமைந்த உபாத்தியாயரிடத்திற் கற்றுக்கொளல்வேண்டும். இதன்பின் இலக்கண நூலிற் சுருக்கமாயுள்ளதை வாசித்தல்வேண்டும். பின்னர் ஸ்ரீமத் உமாபதிசிவாசாரியார் திருவாய்மலர்ந்தருளியபடி.—

> "வள்ளுவ, ரன்பர்மொழி வாசகந், தொல்காப்பியமே,
> தெள்ளு பரிமேலழகர் செய்தவுரை,—யொள்ளியசீர்த்
> தொண்டர் புராணம், தொகைச்சித்தி, யோராறுந்
> தண்டமிழின் மேலாந்தரம்."

என்னுநூற்களைக் கற்று அவ்வாறுவொழுகமுயலல்வேண்டும். வீடுபேற்றிற்குரிய சாதநங்களையுணர்த்துஞ் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள்விரிவாயு மிகத்தெளிவாயும் ஓதப்படுவது சிவஞானசித்தியாரொன்றே. "ஆருறு தத்

துவமு மாணவமும் வல்வினையு, நீருசமுத்திநிலை நிற்போர்க்குப்—பேருகப், பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே, யோர்விருத்தப்பாதி போதும்." என்று சிவபோக சாரத்தினும் "பாதிவிருத்தத்தாலிப் பார்விருத்தமாக வுண்மை, சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவதெந்நாளோ" எனத் தாயுமானவரினும் "சிவத்திற்கு மேற்றெய்வமில்லை, சிவஞானசித்திக்கு மேற்சாத்திரமில்லை" எனப் பழமொழி வழக்கினும் கூறியிருக்கின்றன.

இதனை மதுமாம்சபக்ஷணிகளல்லாத நற்குண நற்செய்கைகளையுடைய சற்சைவர்களே யோதலு மோதுவித்தலும் வேண்டும். இதனையோதியுணரும்பொழுது சிவதீக்ஷாவான்களாய்ப் பக்திசிரத்தையுடனோதி யுணர்வாராயின் மோக்ஷ வீட்டைதல் சத்தியம், சத்தியம், சத்தியம்.

நூலாசிரியர் வரலாறு.

அருணந்திசிவாசாரியார் திருத்துறையூரில் ஆதிசைவர் குலத்திலவதரித்து வேதாகமங்களை யோதியுணர்ந்து அக்காலத்துள்ள கல்விமான்களாற் சகலாகமபண்டிதரெனப்பெயர் பெற்றுச் செருக்குற்றிருந்தனர்.

அக்காலத்தில் திருப்பெண்ணாடகத்தில் வேளாளர் குலத்தில் திருவவதாரஞ்செய்து திருவெண்ணெய்நல்லூரில் நன்மாமனார் வீட்டில் வளர்ந்துவருஞ் சுவேதவனப்பெருமாளென்னும் மெய்கண்டதேவர், ஐந்துவயதிற்குள் அவ்வூரிலெழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாரிடத்தில் வேதசிவாகமாதிகளை யோதியுணர்ந்திருந்தனர்.

அருணந்திசிவாசாரியார் திருவெண்ணெய் நல்லூரிற் சென்று தமது சிஷ்யவர்க்கங்களுக்கு வேதசிவாகமாதிகளைப்

பாடமோதிவருநாளில், சிஷ்யவர்க்கங்கள் நாளுக்குநாட் குறைந்து தம்மிடத்தில் வராதிருப்பதைக்கண்டு யாதுகாரண மென வினவுகையில், யாவரும் மெய்கண்டதேவர் ஐந்துவ யதிற்குள் பொல்லாப்பிள்ளையாரிடத்தில் வாசிக்கப்பெற்று யாவர்க்குஞ் சந்தேகவிபரீதமற வேதசிவாகமாதிகளைக் கற் பித்துவருகின்றனரெனக் கேள்வியுற்றுச் சந்தேகமடைந்து சிஷ்யவர்க்கத்துடன் மெய்கண்டதேவர் வீற்றிருக்குமிடத்திற் குச் சென்றனர். அதுகாலையில் மெய்கண்டதேவரிடத்தில் தம்மிடத்தில் வராதிருக்கும் சிஷ்யர்களியாவரும் வாசித்துக் கொண்டிருந்தனர். அருணந்திசிவாசாரியார்வரவை அவ்விடத் துற்ற மாணாக்கர்கள்கண்டு பிரதமாசாரியரானதால் எழுந்து வந்தனை வழிபாடுகளைச்செய்ய மெய்கண்டதேவர்தலைகுனிந்து மௌனமுற்றிருந்தனர். அருணந்திசிவாசாரியார் மெய்கண்ட தேவர் தமக்கு மரியாதைசெய்யாது பராமுகராயிருப்பதைக் கண்டு கர்வித்திருந்தனர். மெய்கண்டதேவர் மாணாக்கர்கள் மீண்டும் வாசிக்கத்தொடங்க அப்பொழுது ஆணவமலத்தி னது பிரசங்கம் வந்தமையால் அருணந்தி சிவாசாரியார் மெ ய்கண்டதேவரை ஆணவமல மெத்தன்மையை யுடையதென உலாவிக்கொண்டே வினவ மெய்கண்டதேவர் அருணந்தி சிவாசாரியாரது வாசிப்பின் தேர்ச்சியும் அதனாலவரடைந்தி ருக்கும் கர்வத்தையுங்கண்டு குறிப்பாய் அவரைநோக்கிப் பார்த்தருளினர்.

மெய்கண்டதேவர் சிவாநுபூதிச் செல்வரானதினாலும், அருணந்திசிவாசாரியார் கல்வித்தேர்ச்சியான் அதிதீவிரபக் குவமடைந்திருந்தமையாலும், மெய்கண்டதேவர் தம்மைச் சுட்டிய குறிப்பறிந்து, தாமிப்பொழுதடைந்திருப்பது ஆண வமலமென வுணரப்பெற்று, உடனே அஞ்சுதலுற்று, மெய் கண்டதேவரடிகளில்வீழ்ந்து தமக்கு ஞானாநுக்கிரகஞ்செய் யும்படி வேண்டிக்கொண்டனர். மெய்கண்டதேவ ரவ்வாறே

யநுக்கிரகித்துத் தம்மிடத்திருந்த வடமொழிச் சிவஞானபோதமும் அதற்குத்தாம் செய்தருளிய தென்மொழி வார்த்திகப் பொழிப்பையுங்கொடுத்தருளினர்.

அருணந்திசிவாசாரியார் வடமொழியினும் தென்மொழியினும் மெய்கண்டதேவரடியார்கள் நாற்பத்தொன்பதின் மருள்மிகுந்த பயிற்சியுடையராய்த் தமது ஆசிரியராற்றந்த சிவஞானபோதத்திற்கு லோகோபகாரமாய் வழிநூல்செய்து சிவஞானசித்தியாரெனப் பெயரிட்டருளினர்.

சிவஞானசித்தியார் பரபக்ஷ சுபக்ஷமென
விரண்டுபிரிவையுடையது.

பரபக்ஷம்.

"முகவுரையிற்றசமெழுமூன் றதன்முப்பாரென்று
முதலகன்முப்பாரென்றெண்ணைந்தாம்புத்தன்
திகழ்மூவர்க்கோரெட்டாநிகண்டனுக்கெட்டீரேழ்
சீவகனுக்கிரைந்தோடிருமூன்றும்பாட்டன்
பகர்பதின்மூன்றிரைந்தேபாகரனீரிரண்டாம்
பரிணமகான்கிருநான்கேமாயாவாத
நிகழைம்மூன்றுமூன்றும்பாற்கரியற்கேழா
நிரீச்சுரற்குச்சதுராத்திரியெழுமுப்பாளென்றே."
என்னுந்தொகையையுடையது.

சுபக்ஷம்.

"ஐந்துதுதியீரேழுமளவையாகு
மாதிதனிலெழுபதுபின்தொண்ணூற்றுறு
நந்திசதுட்டயநாற்பானவமும்பின்னவமு
னனிநான்குநாற்பதினிலொன்றிழிந்தீராறுங்
கந்தன்முகமோராறுகரமங்கீராறுங்
கருதிடுவங்கணபதியைங்காமுமிருபதமுஞ்

சிந்தையிவைமுவொன்பதோடுமுந்நூறுஞ்
சிவஞானச்சித்திசுவபக்கமெனத்தெளியே."
என்னுந்தொகையையுடையது.

இந்நூலைத் தமிழிலியற்றவேண்டுங்காரணம்.

சீரார்கயிலைத்திருவாய்மலர்ந்தசிவாகமங்கற்
றோராய்வதுவடசொற்பயின்றோர்க்கெளிதம்மொழியைச்
சாராதவருமத்தத்துவஞானந்தலைப்படுதற்
கோரார்தமிழ்ச்செய்யுளான்மயறீரவெழுதுவனே.

உரையாசிரியர்களின் பெயர்.

இந்நூலிற்கு உரையாசிரியர்களின்பெயர்கள் பெரும்பாலும்பிரதிகளி லில்லாமலே யிருக்கின்றன. சிலபிரதிகளுளிருப்பினும் அவர்கள் சரித்திரங்களொன்றுங்காணப்படவில்லை. பரபக்ஷத்திற்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசரும், அவர் மாணுக்கர் தத்துவப்பிரகாசரும், வேலப்பபண்டாரமும் உரையிட்ட பிரதிகள் எனக்குக்கிடைத்திருக்கின்றன. வேலப்பபண்டாரமுறையில் அவர்பெயர் காணப்படவில்லை, வாசித்தோராலவருரையெனக் கூறக்கேள்வி. அவருரைப்பேதங்களை யிந்நூலிற்குறிப்பிட்டவிடத்தில் மற்றோருரையாசிரியரெனக் குறிப்பிட்டிருக்கின்றனன். ஸ்ரீ-ல-ஸ்ரீ, அருணகிரிப்பரதேசியார் கொடுத்தபிரதியும், உபாத்தியாயர் பு. தெய்வசிகாமணிமுதலியார் கொடுத்தபிரதியும், இன்னும் சிலரால் கொடுக்கப்பட்ட பிரதிகளு மொத்திருந்தன. அருணகிரிப்பரதேசியார் இப்பிரதியை மறைஞானதேசிகர் பிரதியெனக் கொடுத்தனர். பிரதிகளில் தத்துவப்பிரகாச ருரையெனக் கண்டிருக்கின்றது. ம-ா-ா-ஸ்ரீ, பு. பொன்னம்பலமுதலியார் கொடுத்தபிரதி திருவொற்றியூர் ஞானப்பிரகாசருரை. இவ்வுரையை விருத்தியுரையெனச் சொல்லக்கேள்வி. வேறுவிதவுரைகள் பரபக்ஷத்திற்குக் காணப்படவில்லை.

சுபக்ஷத்திற்கு மறைஞானதேசிகர், சிவாக்கிரயோகியர், நிரம்பவழகியர், திருவண்ணாமலையாதீனம் யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசர், சிவஞானத்தம்பிரான் முதலானவர்களுரையிட்டிருக்கின்றனர். இவைகளில் சிவஞானயோகியர் உரை நீங்கலாக மற்றையபிரதிகளெனக்குக் கிடைத்திருக்கின்றன. அவ்வுரைகளில் உரையாசிரியர்கள் பெயர் தெளிவாய்க் காணப்படுகின்றன. ஒவ்வோருரைகளிலும் இரண்டு மூன்று பிரதிகிடைத்திருக்கின்றன.

இங்ஙனம்,

கொ - ஷண்முகசுந்தர முதலியார்.

பதிப்புரை.

உலகமுய்யத் திருவுளங்கொண்டு தாம் தேக்கித்திளைத்த சிவாநந்தத்தில் தம்மையடுத்த பரிபாகிகளுமுண்டு களிக்க வெண்ணி அவற்றைச் சிவஞான சித்தியார் என அருளிச் செய்த சகலாகம பண்டிதராகிய ஸ்ரீ அருணந்திசிவாசிரியர், பரபக்ஷத்திற்குத் தத்துவப்பிரகாசர் உரையினை முதன்முதற் கொன்றமாநகரம் ஸ்ரீ-ல-ஸ்ரீ, கொ - சண்முகசுந்தரமுதலியாரவர்கள் அச்சிட்டு வெளியிட்டனர். அப்பதிப்பு ஆய்விட்டன. அதனை மீண்டும் மயிலை ம-ா-ா-ஸ்ரீ, அழகப்பமுதலியார் அவர்கள் அச்சிடத்தொடங்கி யென்னைச் சோதித்துத் தரக்கேட்டுக்கொண்டனர். அவ்வச்சிட்ட பிரதியின் உரைகள் இடையில் பொருத்தமிலாதனவாயும், சில இடங்களில் பொருள் இன்னவென விளங்காமலும் இருக்கின்றன. வேறு ஏட்டுப் பிரதிகள் கிடையாமையால் அவ் வச்சிட்ட பிரதியிலிருந்தவ்வகை திருத்திக்கொடுத்தனன்.

சாதாரண ஹூ } இங்ஙனம்,
தனுரவி } ஆ - சிங்காரவேலு முதலியார்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானசித்தியார்பரபக்ஷம்.

மூலமும்-உரையும்.

காப்பு.

விநாயகர்வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஒருகோட்டனிருசெவியன்மும்மதத்தனல்வாயைங்கரத்தனாறு, தருகோட்டம்பிறையிதழித்தாழ்சடையான்றருமொருவாரணத்தின்றாள்க, ளுருகோட்டன்பொடும்வணங்கியோவாதேயிரவுபகலுணர்வோர்சிந்தைத் திருகோட்டுமயன்றிருமால் செல்வமுமொன்றோ வென்னச் செய்யுந்தேவே.

(இ-ள்) (ஒருகோட்டன்—தேவே.) எ-து. கங்கையாறுங் கோணுதலைத்தருமழகியபிறையுங் கொன்றைமாலையுமுடைத்தாய்த் தாழ்ந்தசடையினையுடையபரமேசுவரன்பிள்ளையாகத் தந்ததேவன், ஒருகொம்பையு மிரண்டுசெவியையு மூன்றுமதத்தையு நான்றவாயையு மைந்துகரத்தையுமுடையோனாகிய வொப்பற்றயானையினது தாள்களுள்ளமுருகுதலைச்செலுத்துவதாகியவன்போடுகூடி வந்தித்தொழியாதிரவும்பகலுநினைப்போரது புத்தியிற்றிருக்கை யீண்டணுகாதபடிதூரக்கும். பிரமவிஷ்ணுக்கள்பதமு மொன்றல்லவென்னும்படி மிக்கவீட்டின்பத்தையு முண்டாக்குமென்றவாறு. கோடுஞ் செவியு மதமும் வாயுங் கரமு மைந்திணைப்பொருளாகிய யானையினதுசினைப்

பெயர்களாயினு மவ்யானைப்படிவத்தையுடையன்றேவனுதல் பற்றிச் சினைதோறும் அன்னிறுதியடுக்கிக்கூறினர்.

இச்செய்யுள் விநாயகர்வணக்கங்கூறிற்று. விநாயகன் தனக்குமேல் நாயகமில்லாதவர்.

உருகோட்டன்பொடுவணங்கி. என்பதற்கு. மிகுந்தபத்தியொடுந்தாழ்ந்தவணக்கத்தினலே யடையப்பட்ட சிவதீக்ஷாவான்களாய். எனவும், உணர்வோர். எ-கு, அந்தப்பாதத்தியாந முன்னாகச் சிவத்தியாநம்பண்ணுவோர். எனவும், சிந்தைத்திரு கோட்டும் எ-கு. அந்தச்சிவத்தியாநத்துவாரத்தினலே சிற்சத்தியினதுவிரிந்தவறிவுதொழில்களை மறைத்தமலசத்தியினது வியாபாரத்தைத்தடுத்து அதனுற்பண்ணப்பட்டவஞ்ஞானத்தைத்துரத்தும். எனவும், அயன்றிருமால் செல்வமுமொன்றோ வென்ன. எ-கு. பிரமத்துவம் விஷ்ணுத்துவமென்கின்ற ஐஸ்வரியமும் ஒருபொருளோவென்ன. எனவும், செய்யுந்தேவே. எ-கு.)தேவேசெய்யுமெனமாறி) தேவாந்தன்மையைச்செய்யுமென்றும். அஃதாவது, முன்னிருந்தசிவத்துவத்தைத் தானேவிளக்கித் தனித்தனியவர்களைச்சிவன்களாகத் தானேபண்ணும். எனவும், முத்திவியத்தி இரண்டுமோக்ஷமென்கையால் திருகோட்டு மென்றதனுல் பாசமுத்தியும், செய்யுந்தேவேயென்றதனுல் சிவத்துவாபிவியத்தியுஞ்சொல்லப்பட்டவெனவும் கூறினர், காருண்ணியமூர்த்தியாகிய திருவண்ணமலையாதீனத்தந்தம்பிரான், ஸ்ரீமத்யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசத் தம்பிரான், தமதுசுபக்ஷத்தருமைத்திருவுரையினும். இவ்வுரைநுட்பமதியாளர்க் கன்றிமந்த மதிகட்குத் தோன்றுவதரிதாயினுங் கற்றுணர்ந்தோர்பாற் கேட்டறிந்துகொள்ளக்கடவர். அஃதன்றிச்சிலரிவ்வுரையின் கருத்

தறியாது உரைவாசிப்பது கடினமெனவோ அல்லதிவ்வுரையைத்தெளிவிக்குமாசானில்லாமையோ, சிவசமவாதிகோட்பாடெனக்கூறிமறுக்கின்றார்கள் சாதகரிவ்வாறுகூறுவதுபெரிதாகியமடைமையே.

பரபக்ஷத்திற்குரையியற்றியஞானப்பிரகாசரும் "செய்யுந் தேவே" எ-கு. இதுவேகருத்தாய்க்கூறியதை யவருரையாற் காண்க.

இவ்விரண்டுரையாசிரியர்கருத்துக்களையும் இந்நூற்குரையியற்றியவேலையவாசிரியர் கோட்பாடுகளையும் பரபக்ஷசுபக்ஷங்களில் வேறுபட்டவிடங்களில்விசேடித்தவிடங்களிலாங்காங்கெடுத்துக் காட்டப்படும். இவ்வுரையாசிரியர் சரித்திரங்களை யிந்நூன்முகவுரையிற்காண்க.

சிவவணக்கம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஆதிநடுவந்தமிலாவளவில்சோதியருண்ஞானமூர்த்தியாயகிலமீன்ற, மாதினையுமொருபாகத் தடக்கிவானோர் மகுடசூளாமணியாய்வையம்போற்றப், பாதிமதியணி பவளச்சடைகடாழப்படரொளியம் பலத்தாடும்பரனார்பாதத், தாதுமலிதாமரைகள் சிரத்தேவைத்துத்தளராதபேரன்புவளராநிற்பாம். (௧)

(இ-ள்.) (ஆதிநடுவந்தமிலா—வளராநிற்பாம்.) எ-து. முதனடுவிறுதியின்றி ஒருவராலுமறியப்படாத பரசொருபப்பிரகாசத்தையுடையவருளாகியஞானமேதிருமேனியாகக்கொண்டுதமது காருண்ணியத்தினாலே சகளீகரித்துப் பிரபஞ்சத்தையு முண்டாக்கிய வந்தப்பரமேஸ்வரியையுந் தம்மிடப்பாகமுழுதினுமடக்கிப் பிரமவிஷ்ணுக்கண் முதலாகிய தேவர்

களுக் கவரதுமகுடரத்தினம்போலுமிக்கசத்திசிவமாகியசகள நிஷ்களசொரூபமா யுலகத்துள்ளார்துதிப்ப வர்த்தசந்திரனை யலங்காரமாகவணிந்தபவளம்போன்ற சடைகளைத்தாழவிட்டு விரிந்த வொளியையுடைய திருவம்பலத்தின்கண்ணேநிருத்தஞ்செய்தருளுகின்ற மேலானபரமசிவனது ஸ்ரீபாதங்களாகிய தாதுக்கண்மிக்க தாமரைகளைத்தலையின்மீதுவைத்துத் தளர்ச்சியில்லாதமிக்கவன்பு மிகவும்உண்டாம்படிநில்லாநின்றேம் எ—று. பூமிக்குச்சுழுமுனை திருவம்பலமாகையான் மற்றொருதலம்அநவரததாண்டவத்துக்குப் பொருந்தென்பதுகருத்து. திருமூலர்திருமந்திரம்;--"தத்துவமாடச் சதாசிவன்றனாடச், சித்தமுமாடச் சிவசத்திதானாட, வைத்தசராசரமாட மறையாட,வத்தனுமாடினா னநந்தக்கூத்தே" தானாடித்தன்தசையாடுமென்பதுகருத்து, அட்டமூர்த்தமாகையால்-'

இச்செய்யுள் சிவவணக்கங்கூறுமுகத்தான் அச்சிவம்உருவமும் அருவமும் உருபாரூபமென்னு மூன்றுதிருமேனியுமல்லவென்பது கூறிற்று.

ஆதிநடுவந்தமிலாவளவில்சோதியருண் ஞானமூர்த்தியாய் எ-து. (சோதியாய்அருள்மூர்த்தியாய்ஞானமூர்த்தியாய்என்று பிரித்து மூன்றிடத்துங்கூட்டுக. ஆதிநடுவந்தமிலாவளவில் சோதியாய் என்பது ஆகுபெயராதலால்) சோதியாய் எ-து. உற்பத்திதிதி நாசங்களினது உபசாரத்துக்குந்தூரமாய் மனோவாக்கதீதமாகியசுத்த சிவசோதியாகிஅதனதுமத்தியநிஷ்கள நிர்த்தசோதியாய்.என்பதாம். ஆகையால்,சகளாதிகாரரென்கின்றசதாசிவன், சகளநிஷ்களபோகரென்கின்றவநாகதசிவன் நிஷ்களவிலயரென்கின்றபரசிவன், இவர்கட்கதீதமாய்ஆகையால், மகாப்பிரளயத்திலேதான், யோகவிவேக பாவனை

யிலேதான், அணுபக்ஷமாகியபிரமாதிபரசிவாந்தமாகிய அதிஷ்டானங்களைவிட்டுச் சிவனிடத்திலுன்முகமாய்த் திரும்பிய சம்புபக்ஷமாகியபிரமா விஷ்ணுருத்திரன் மகேஸ்வரன்சதாசிவன் பரவிந்து பரநாதம்பராசத்தி பரசிவமெனநின்ற நவதத்துவ விலயத்தானமாய்த் திரும்பச்சகளநிர்த்தம்பண்ணும்படி, அருண் மூர்த்தியாய். எ-து. மகாமாயாமயமகாசபாபித்தியில் மாந்திரிக னெழுதியபூதாகாசவடிவாகிய மந்திரலிபியெனுமிலக்கில் மாந்திரிகனுச்சரிக்குமந்திரசரிவழியாய் வந்த அக்கிபோலாவிற்பவித்துத்திவ்ய மந்திரமாகிப் பலன்கொடுக்கும்படி சிவனது சங்கற்பத்தாலுண்டாயசத்தியசுத்தசம்மேளனமாகிச் சுத்தமாயாபுவனவாசிகளாகிய சாரூபிகளுக்குச் சத்தியவடிவாயுமிருக்கும்மாந்திரிகனதுசங்கற்பத்தாற்கற்பித சம்மேளனமாகிச் சிவனுக்குக்கற்பிதவடிவாயுமிருக்கும். வாசகமந்திரமாகிய பஞ்சதசாக்ஷரிபஞ்சாக்கரமாகித் தனதுபரிக்கிரகசத்தியாயிருக்கின்ற வாசக சத்திமயசரீரத்திலாவிற்பவித் தவினுபூதமாயிருக்கின்ற வாச்சியமந்திரமாகிய பஞ்சதசாக்ஷரிபஞ்சாக்கரமாகித் தனதுசமவேத சத்தியாயிருக்கின்றவாச்சியசத்திமயசரீரியாய். ஆகையால்,—ஞானமூர்த்தியாய். எ-து. சலையாயிருக்கின்றஜடமூர்த்திகட்குவேறாய்அசலையாயிருக்கின்றசித்தறுவாய். இப்படிக்கற்பித மூர்த்திக்குக் கரசரணாதிகளினதசைவுகூடாதாகையால், — அகிலமீன்றமாதினையுமொருபாகத்தடக்கி. எ-து அகிலமீன்ற. எ-து. பாரம்பரியமாய்ப்பராசத்தியா லதிஷ்டிக்கப்பட் டந்தப்பராசத்தித்துவாரத்தினுலேயுந் தன்னுலேசாக்ஷாத்அதிஷ்டிக்கப்பட்டபிரமாதித்துவாரத்தினுலேயுந் தநுகரணபுவனபோகங்களாகிய சகலத்தையும் உற்பவிப்பித்த,—ஒருபாகத்து. எ-து. வாமபாகத்து,—மாதினையும். எ-து நிர்த்தசாக்ஷியாய்நிற்கும்

உமாதேவியையும் நிர்த்தசாக்ஷியாய்த்தனது சத்திசாந்நித்தியத் தானமாய்நின்றநிலைநிற்கவும் ஓரங்கிசத்தினாலே,—அக்கி. எ-து. சமுத்திரத்துதித்தமுத்துப்போல வநந்தத்துவாரத்தினாலே மாயையினுற்பவிப்பித்துத் தனதுசம்மௌனசக்கிரவிக்கிரகத்திலாவிற்பவிப்பித்த ஸ்ரீகண்டமூர்த்தியிற் பிரவேசிப்பித்துச்சம்மௌனமாகத்திரும்பவதிற்றானுஞ்சாந்நித்தியமாய்,—வானோர்மகுடசூடாமணியாய். எ-து. பிரமாதிதேவர்க்கு மதிதேவராகிய ஸ்ரீ கண்டாதிதேவர் தேவராகிய அநந்தாதிகட்குந் தேவனாய்,—வையம்போற்ற. எ-து உலகங்களெல்லாந்துதிப்ப — பாதிமதியணிபவளச் சடைகடாழ. எ-து (பாதி. எ-து-சமபாகமன்று ஓரங்கிசமாதலால்) சந்திரகலையைத்தரித்தவிரித்தபவளக்கொடிபோன்ற சடைகள்பின்றாங்க,—படரொளியம்பலத்து. எ-து. பராசத்தியாலதிட்டிக்கப்பட்டுப்பரம்பாநின்றபிரகாசத்தையுடைய சுத்தமாயாமயமாகியசபையின்கண்ணே,— ஆடும். எ-து. நடிக்கும்,—பரனார். எ-து. சுத்தசிவனாரது,—பாதத்தாமரைகள். எ-து. பாதாரவிந்தங்களை,—சிரத்தேவைத்து. எ-து. சென்னியிற்றரித்து,--தளராதபேரன்புவளராநிற்பாம். எ-து யாம்நீங்காதமிகுந்தபத்திநிறைவாக்காநிற்பாம். எ-று. யாம். எ-து. தோன்றாஎழுவாய்.

இவ்வுரை திருவண்ணாமலையாதீன ஞானப்பிரகாசத் தம்பிரானார் கூறியது.

சிவசத்திவணக்கம்.

ஈசனருளிச்சையறிவியற்றலின்பமிலயமொடு போகமதிகாரமாகித், தேசருவமருவுருவ முருவமாகித் தேவியுமாய்த் தேசமொடு செல்வமாகிப், பேசரிய

வுயிரையெலாம் பெற்றுநோக்கிப் பெரும்போகமவை யளித்துப்பிறப்பினையுமொழித்திட், டாசகலுமடியருள த்தப் பனுடனிருக்குமன்னையருட்பாத மலர்சென்னி வைப்பாம்.

(இ-ள்.) ஈசனருளிச்சையறிவியற்றலின்ப மிலயமொடு போகமதிகாரமாகி. எ-து. கருத்தாவைவிட்டுநீங்காத சத்தியானது அவனதுதிருவுள்ளத்தாலே பராசத்தியுமிச்சாசத்தியு ஞானசத்தியுங் கிரியாசத்தியுந் திரோதானசத்தியு மிவையும் ன்றிச் சங்காரத்தோடுதிதிசிருட்டிகளுமாய்,—தேசருவமருவுருவமுருவமாகித் தேவியுமாய்த்தேசமொடுசெல்வமாகி எ-து அந்தப்பிரகாசமாகிய கர்த்தாவுக்கு அரூபம் ரூபாரூபம் ரூபமெனப்பட்ட மூன்றுமுறைமைக்கும் அம்முறைமைகளாகிய வடிவுந்தாமாய்க்கர்த்தாவெப்படிக்கொண்டருளுந்திருமேனிக்கந்தந்தச்சத்திகளுந்தாமாய்ப்பிரபஞ்சங்களும்பதார்த்தங்களுந்தாமாய்,—பேசரியவுயிரையெலாம்பெற்றுநோக்கி. எ-து. கர்த்தாவெடுத்துக்கொண்ட திருமேனிக்கேற்ற சத்தியாய் நின் றெண்ணுதற்கரிதாகியசர்வான்மாக்களையும் படைத்தளித்து,—பெரும்போகமவையளித்துப் பிறப்பினையு மொழித்திட்டு எ-து. ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கீடாக சொர்க்காதிபதங்களையுங்கொடுத்து ஜநநங்களையுங்கெடுத்துக்கர்த்தாவோடுங்கூடிநின்று முத்தியையுங்கொடுத்து,— ஆசகலுமடியருளத்தப்பனுடனிருக்குமன்னை. எ-து அஞ்ஞானநீங்கினவடியாரிதயத்திலுங்கர்த்தாவோடுங்கூடியிருக்குமுலகமாதாவினுடைய,—அருட்பாதமலர்சென்னிவைப்பாம். எ-து கிருபையாகிய திருவடித்தாமரைகளை யென்றலைமேல் வைத்துக் கொள்ளாநின்றேம். எ-று. அதிகாரமும் செல்வமும் தேசமும், பெற்றும் நோக்கியும் பெரும்போகமளித்துமென வும்மைநோக்கி நின்றது.

இச்செய்யுள் சிவசத்திவணக்கங்கூறுவரன் கர்த்தாவுடைய லீலைக்கெல்லாஞ் சத்தியேகருவியாய்நிற்குமென்பதுகூறிற்று. பிரபஞ்சத்தோற்றத்துக்குச்சத்தியுபாதானமென்றதன்று.(உ)

பிரபஞ்சத்தோற்றமுபாதானமென்றதன்று, குடங்கட்குக குலாலன்மாத்திரமென்ற தெனவும்? தோற்றஞ்சிவனிடத்தி லென்னில் மகாவிரதிகள் மதமாமெனவும்; விசேடித்தெடுத் துக்காட்டினர்பரபக்ஷத்திற்குரையியற்றியஞானப்பிரகாசர்.

ஓதனத்தினதுபாகஞ் சாத்தனதுபாகமென்கின்றது போல க் கர்த்தாவாகியசிவனற் கன்மமாகியஜடசித்துக்களிலே கிரி யையாகப் பண்ணப்படுகையால் சிவனதுசிருஷ்டி திதிசங் காரம்திரோபாவம் அநுக்கிரகம், ஜடசித்துகளதுசிருஷ்டிதிதி சங்காரம் திரோபாவம் அநுக்கிரகமென்றுஞ் சொல்லப்படு மென்றறிக. ஆகிஎன்பதனைப்பிரித்தெங்குங்கூட்டுக. ஈசனுக்கு அருளாகி அருளென்பதாகுபெயராதலால். அருளாகி. எ-து. சித்தாகியவான்மாவினிடத்திலேசிவனுக்கொப்பாகுமுத்திசித் திக்கும்பொருட்டு மலநீங்க முன்றடைபட்டிருந்த பேரறிவு பெருந்தொழிலாகிய சிவத்துவவிருத்திவிளக்க மென்னுமருளை அநுக்கிரகத்தைப் பண்ணும் பராசத்தியாகி,—இன்பமாகி எ-து. கிரமத்திலேபேரின்பமாவதாய் அந்தப்பேரின் பத்து க்குக் காரணமாகுஞ் சிற்றின்பத்துக்குநிமித்தமாகிய சிருஷ்டி திதி சங்காரம் திரோபாவமென்கிற நாலுகிருத்தியங்களை ஆரணி ஜநநீ ரோதயித்திரி ரூபமாயிருந்து பண்ணுந் திரோ தானசத்தியென்னுமாதிசத்தியாகி. (பரசிவாதீதமாகிய சிவ னுக்கின்பத்தைப்பண்ணும் பராசத்தியதீதமாகிய வின்பசத் தியாகி யென்றும் தொனிப்பொருளுமாம்.) இப்படிப்பஞ்ச கிருத்தியம்பண்ணுமிடத்து நியமித் தறிந் துத்தியோகித்துச்

சங்கற்பித்துப்பண்ண வேண்டுகையால்—இச்சையாகி. எ-து இந்தப்பொருளிப்படியாம் இந்தப் பொருளிப்படியாகாதென்னு நியமத்தைப்பண்ணுமிச்சாசத்தியாகி,—அறிவாகி, எ-து இதுகாரண மிதுகாண மிதுகாரிய மிதுபிரயோசன மென்னுஞ்சாத்தசவிகற்பஞானத்தைப் பண்ணுஞானசத்தியாகி,—இயற்றலாகி. எ-து கிரியாசத்தியாயிருந் திதைநான்பண்ணு நிற்பேனென் றுத்தியோகித்தலாகிய சாத்தசவிகற்பக்கிரியையுமைப்பண்ணித் திரும்பவிச்சாசத்திரூபமாகியிருந் திந்தவஸ்திப்படியாகக்கடவதென்று சங்கற்பத்தைப்பண்ணும் கிரியாசத்தியாகியந்தத்தூல பஞ்ச கிருத்தியங்களையும் அந்தத்தூல பஞ்சகிருத்தியங்களுக்கு யோக்கியத்தைப் பண்ணுமதாகிய சூக்குமபஞ்ச கிருத்தியங்களையும் பண்ணுமிடத்தில் இலய போகவதிகாரகாலங்களிலே பண்ணவேண்டுவதாகையால்—இலயமொடுபோகமதிகாரமாகி. எ-து. இலயபோகவதிகாரங்களுக்குள் இலயத்தைச்சொல்வாம். (அர்த்தமாத்திரயோசனநிர்விகற்பக்காட்சி, பிரத்தியர்த்தக்காட்சிமாத்திர சவிகற்பப்பார்வைபார்க்குஞ்சுத்தசிவன் போலிருந்தாலும் போகரையு மதிகாரரையு மநுக்கிரககிருத்தியமாத்திரங்குறித் ததிசூக்குமிப்பித் துள்வைத்ததி சூக்குமயோசனசாத்தசவிகற்ப ஞானக்கிரியா சங்கற்பவானுயிருக்கின்ற விந்துவைநீங்காத விலயருக்கு முத்திபண்ணுமநுக்கிரககிருத்திய மப்படியிருக்கும். விந்துவைநீங்கியவிலயருக்கு வியத்திபண்ணுமநுக்கிரககிருத்திய மெப்போதுமியற்கையாயிருக்கின்றதாகினுந் தூல பஞ்சகிருத்தியத்துக்கு யோக்கியத்தைப்பண்ணுமதாகிய சூக்குமபஞ்சகிருத்தியத்தைப் பண்ணும்படி இலய காலத்திலே போகரையும் அதிகாரரையுஞ் சூக்குமிப்பித்துள் வைத்துச்

சிருஷ்டிகாலத்திலேதானவர்க்குள்ளுமாயிருப்பர். இலயாாதலால் அந்தமுத்திவியத்திகிருத்தியமு முடித்துத் தூலப்ஞ்சகிருத்தியநிமித்தமாகிய சூக்குமபஞ்சகிருத்தியத்தையும் பண்ணுவர். ஆகையால், மகாப்பிரளயத்திலே தூலபஞ்சகிருத்தியங்களைவிட்டிருக்குங்கிரியாசத்திக்குச் சூக்குமபஞ்சகிருத்தியநிமித்தஞ் சூக்குமித்து நியமித்தல் சற்றேசவிகற்பித்தறிதல் அப்படியுத்தியோகித்தல் நிர்விகற்பசவிகற்பவேற்றுமைதோற்றச்சங்கற்பித்தலென்னுந் தொழில்களைப்பண்ணுமிச்சாசத்தி ஞானசத்திகிரியாசத்தி; அந்தக்கிரியாசத்திபேதமாகியவிச்சாசத்திகளை யந்நியமன்றித் தனக்குள்வைத்துநிர்விகற்பவறிவுமாத்திரத்தைப் பண்ணுஞானசத்திமாத்திரமாயிருத்தல்(இலயம்.)(போகத்தைச்சொல்வாம். அந்தக்கிரியாசத்திக்குச்சிருஷ்டியாதிதூலபஞ்சகிருத்தியங்களைப் பண்ணும்படி நியமித்தல் அறிதல் உத்தியோகித்தலென்னுந்தூலயோசன பவுத்தசவிகற்பவேற்றுமைதோற்றுஞ்சூக்குமயோசனசாத்த சவிகற்பத்தொழில்களின துள்ளுத்திரேகத்தைப்பண்ணி இச்சாசத்தியாயு ஞானசத்தியாயுங் கிரியாசத்தியாயுமிருத்தல்போகம்.) (அதிகாரத்தைச்சொல்வாம். அந்தக்கிரியாசத்திக்குச் சொல்லிய சாத்தசவிகற்பநிர்விகற்பவேற்றுமை தோற்றுஞ் சூக்குமயோசனசாத்தசவிகற்பசங்கற்பத்தினது அந்தர்முத்திரேகத்தைப்பண்ணிக் கிரியாசத்தி பேதமாகிய விச்சாசத்தியாயிருத்தலதிகாரம்.] ஆகையாற்றன்னைக்குறித்துப்பிரபஞ்சம்பிரயோசனமாகத்தோற்றாதலாற் றன்னைக்குறியாமற் பிரபஞ்சத்தைச் சொரூபமாத்திரமாகப் பார்த்தலைப்பண்ணுவது. "ஆதிநடுவந்தமிலாவளவில்சோதி"என்றுமுன்சொல்லியது, சுத்தசிவச்சுவபாவம். பிறர்பிரயோஜனத்தைக்குறித்துப்பார்த்தலைப்பண்ணுதலைச்செய்வதிப்போதுசொல்லியவிலயபோ

க அதிகாரச்சிவச்சுவபாவம். இந்தவிலயபோகஅதிகாரச் சுவபாமும் சர்வகருத்திருத்துவத்துக்குட்சிறப்புக்கருத்திருத்துவமாதலால், ஔபாதிகந்தடத்தலக்ஷண மன்று. நிருபாதிகமிருவகையொருவகைச்சுபாவமுஞ்சுரூபலக்ஷண மே. ஆதலால், இந்த விலயபோகவதிகாரங்கள், விருத்தி பரிணதி விவர்த்தாரம்பங்களினொன்றாகிய நித்தியங்கள் சோபாதிகங்கள் சத்தியங்களல்ல. பகிரங்கபேதமாய்ப் பிரித்தற்கரிதாகி அந்தரங்கபேதமாயிருக்கின்றசிவபேதமாயும் சிவசத்திபேதமாயும் சிவசத்தி வியாபாரபேதமாயுமிருத்தலால் வியாபாரங்கட்கு இலயபோகவதிகாரமென்னு மந்தரங்கபேதமுண்டு. சிவனுக்குஞ் சிவசத்திக்குமில்லை யென்று சொல்லப்படாது; காரணபேதமில்லாதிருந்தாற் காரியபேதமில்லையாதலால் சிவ சிவசத்தி சிவசத்திவியாபாரங்கள் மூன்றிற்குந் தனித்தனி இலயபோகவதிகாரங்கள் பிரித்தலில்லாத வந்தரங்கபேதமாயும் பகிரங்கத்துஅபேதமாயும் நித்தியங்களாயுஞ் சத்தியங்களாயுமிருக்கும்; கற்பிதமூர்த்திவடிவுமாத்திரத்தாற் கற்பிதவ நித்தியங்களாயு மசத்தியங்களாயு மிருக்குமெனவறிக. விந்துவுக்கும் வைந்தவசரீரிகட்குமாத்திரம் இலயபோகவதிகாரங்கள் பிரித்தற்கெளிதாகிய பகிரங்கபேதமா யச்சற்காரியத்தால் நித்தியங்களாயு மணுமூர்த்திவடிவுமுதற் காரியமாத்திரத்தா லநித்தியங்களாயு மசத்தியங்களாயுமிருக்குமெனவறிக. திரும்ப விலயபோகவதிகாரக்கிரமங்களிலே, — தேசருவமருவுருவமுருவமாகி. எ-து. சோதியாம்நிஷ்கள சகளநிஷ்களசகளமாகிப் பின்னுமதிகாரத்துக்குப் புறம்புமுள்ளுமாயிருக்கும் பரசிவனுனு மநாகதசிவனுனு மோர்கலையிரிருகலைக்கிரமத்திலே யதிஷ்டிக்கப் பட்டசாந்தியாதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை நிவிர்த்தியென்னுங்கலைகளில்விழுந்து பஞ்சசாதாக்கிய

ங்களையும் பஞ்சமூர்த்திகளையு மிந்தவிருகலப்பினுள்ள பஞ்சப்பிரமங்களையு முற்பவிப்பிக்கும் தூலகாரியபராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்திகளுமாகிப், பின்னும்ஈசானியாதிமூர்த்தியந்தமாகியபஞ்சசத்திகளுமாகிவாமாதிசர்வபூததமனியந்தமாகிய வஷ்டசத்திகளுமாகிப், பின்னுமனோன்மனியாதிசரஸ்வதியந்தமாகியபஞ்சசத்திகளுமாகி-- தேவியுமாய். எ-து. போகசத்தியுமாய்,—தேசமொடுசெல்வமாகி. எ-து. யோகசத்தியொடுவீரசத்தியுமாகிப்பின்,—பேசரியவுயிரையெலாம்பெற்று. எ-து. எண்ணிறந்தவான்மாக்களுக்குப் பரதேகமென்றும் சூக்குமதேகமென்றும் தூலதேகமென்றுஞ்சொல்லப்படுந் திரிதேகங்களோடுங்கூட்டி அறிவுவிளங்கச்சிருஷ்டித்து,—நோக்கி. எ-து. இரக்ஷித்து,—பெரும்போகமவையளித்து. எ-து. புவநபதிகளாயிருக்கின்றபரபோகங்களையும் புவநவாசிகளாயிருக்கின்றவபரபோகங்களையுங் கொடுத்துத்திரோபவித்து,—பிறப்பினையுமொழித்திட்டு எ-து. சங்கரித்துச் சிவனுக்கொப்பாகியிருக்கும்பரமுத்தியையும் சுத்தமாயா புவநப்பிராப்தியாகிய வபரமுத்தியையுங் கொடுத்தநுக்கிரகித்து,—ஆசகலமுடியருளத்து: எ-து.தீக்ஷாசுத்தராகியசாதகர் இருதயகமலத்திலேயவரவர்யோக்கியாநுகுணமாய்ச்சகள,நிஷ்கள,சகளநிஷ்கள,நிருத்தமத்தியநிலநிஷ்களாதீதமென்றுமுன்சொன்னசொரூபங்களாய்,—அப்பனுடனிருக்கும். எ-து, சிவனோடு கூடத்தியாகம்பண்ணப்படும்,—அன்னையருட்பாத மலர் எ-து. உலகமாதாவினதுபாதாரவிந்தங்களை,—சென்னிவைப்பாம். எ-து. சிரசிலேசூட்டிக்கொள்ளாநிற்கின்றோம். எ-று.

இவ்வுரை திருவண்ணமலையாதீனம் ஞானப்பிரகாசத்தம்பிரானார்கூறியது.

விநாயகர் வணக்கம்.

இயம்புநூலிருந் தமிழின் செய்யுளாற்றலிடையூறு தீர்ந்தினிதுமுடியவேண்டித், தயங்குபே ரொளியாகி யெங்குநின்றதலைவனார்மலைமாதுதன்னோடாடிப், பயந்தவைங்கரநாற்றோண்முக்கணிருபாதப்பரியதொரு நீள்கோட்டுப்பெரியபண்டிக், கயந்தனடிக் கமலங்க ணயந்துபோற்றிக் கருத்திலுறவிருத்தி மிகக்காதல் செய்வாம். (க)

(இ-ள்.) இயம்புநூல். எ-து. இப்பொழுதுசொல்லுநூல்,-- இருந்தமிழின்செய்யுளாற்றலிடையூறுதீர்ந்தினிதுமுடியவேண்டி எ-து. பெரியதமிழினாற்செய்யுமிச்செய்யுள் பஞ்சாதிகாரங்கள்சொல்லும் வழியால்வருங் குற்றந்தீர்ந் தினிதுமுடிதலைவிரும்பி,—தயங்குபே ரொளியாகி. எ-து. விளங்கும் பெரியவொளியாகி,—எங்குநின்றதலைவனார். எ-து. எவ்விடத்தும் பூரணமாய் நின்றகர்த்தா,—மலைமாது தன்னோடாடிப் பயந்த. எ-து. அசுரர்வதைநிமித்தமாக விமயமாதோடுங் கூடியுண்டாக்கப்பட்ட,—ஐங்கரநாற்றோண் முக்கணிருபாதப்பரிய தொருநீள்கோட்டுப்பெரிய பண்டிக்கயந்தன். எ-து ஐந்துகையினையுநான்குதோளினையு மூன்றுகண்ணினையுமிரண்டுபாதத்தினையும் பேரிதாகிநீண்டதொருகொம்பினையும்பெரிய வயிற்றினையுமுடைய யானைமுகவனது,—அடிக்கமலங்கணயந்துபோற்றிக் கருத்திலுற விருத்திமிகக் காதல்செய்வாம். எ-து. ஸ்ரீபாதகமலங்களைவிரும்பித் துதித்துச் சித்தத்திலுமுறும்படிவைத்துமிக்கவிருப்பத்தைச்செய்யாநின்றேம். எ-று.

இச்செய்யுள் சிவஞானசித்தியென்றுசொல்லப்பட்ட விந்நூல் விக்கினமின்றிவிரைய முடிப்பதுகாரணமாக விநாயகர் வணக்கங் கூறிற்று. (க)

கந்தர்வணக்கம்.

அருமறையாகமமங்கமருங்கலை நூறெரிந்தவகத்தியனுக்கோத்துரைக்குமருட்குருவாங்குருளை, திருமறைமாமுனிவர் முனிதேவர் கடந்தேவன் சிவனருள்சேர் திருமதலை தவநிலையோர் தெய்வம், பொருமறையார் கழல்வீரர் வீரன்கைபிற்பூநீர்கொண்டோவாது போற்றுமடியார்கள், கருமறையா வகையருளிக்கதிவழங்குங்கந்தன் கழலிணைகளெஞ்சிரத்திற்கருத்தில் வைப்பாம். (ச)

(இ-ள்.) அருமறையாகமமங்க அருங்கலைநூல்தெரிந்தவகத்தியனுக்குஓத்துரைக்குமருட்குருவாங்குருளை. எ-து. தெரிதற்கரியவேதங்களையு மாகமங்களையு மாறங்கங்களையு மரிதாகியகலைஞானங்களையு மாராய்ந்தவகத்தியமாவிருடிக்கு வேதவியாக்கியானத்தையருளிச்செய்த ஞானசாரியனாகியவிளைய பிள்ளையார்,—திரு மறை மா முனிவர் முனி. எ-து. அழகியவேதத்தைக்கற்றுவல்லமிக்கவிருடிகட்குத்தலைவனாகியவிருடி,—தேவர்கள்தந்தேவன். எ-து. தேவர்கட்குச் சுவாமி.—சிவனருள்சேர் திருமதலை எ-து சிவனுக்குக்கிருபையாலுண்டாகியபுத்திரன்,—தவநிலையோர் தெய்வம். எ-து. தவத்தின்மிக்கோர்க்குவழித்தெய்வம்,—பொருமறையார்கழல் வீரர்வீரன். எ-து. யுத்தத்தைப்பொருந்தின வீரக்கழலையுடையவீரர்க்குவீரன்,—கையிற்பூநீர்கொண்டோவாதுபோற்றுமடியார்கள் கருமறையா வகையருளிக்கதிவழங்குங்கந்தன். எ-து. ஒழியாதுகையின் மலருமஞ்சனமுங்கொண்டு துதிக்குமடியார்கள் கருப்பத்திலழுந்தாதவகையருள் செய்து மோக்ஷத்தைக்கொடுக்குங் கந்தசுவாமி,—கழல் இணைகளென்சிரத்திற் கருத்தில் வைப்பாம். எ-து. அவனது ஸ்ரீபாதங்களிரண்டையுமென் தலைமீதும் இதய

த்திலும் வைத்துக்கொள்ளாநின்றேம். எ-று. கழல்வீரரென்றது அசுரரை.

இச்செய்யுள் கந்தர்வணக்கங்கூறிற்று.

ஆதிநடுவந்தமிலாவளவில்சோதியென்றசெய்யுள்முதலிச்செய்யுள்காறுந் தெய்வவணக்கங்கூறிற்று. (௪)

கருமறையாவகையருளி. எ-கு. ஜநநமரணங்கட்குக்காரணமாகியமலமறையாதபடி கிருபைபண்ணிஎனவும்; கதிவழங்கும். எ-கு. சிவச்வரூபவிளக்கமாகியமோக்ஷத்தைக் கொடுக்குங்கந்தன்எனவும்; விசேடித்துரைத்தனர், திருவண்ணாமலையாதீனம் ஞானப்பிரகாசத் தம்பிரானார்.

குருவணக்கம்-

பண்டைமறைவண்டரற்றப்பசுந்தேன்ஞானம் பரிந்தொழுகச்சிவகந்தம்பரந்து நாறக், கண்டவிதயக் கமலமுகைகளெல்லாங் கண்டிறப்பக் காசினிமேல் வந்தவருட்கதிரோன், விண்டமலர்ப் பொழில்புடைசூழ்வெண்ணெய்மேவுமெய்கண்டதேவன் மிகுசைவநாதன், புண்டரிகமலர்தாழச்சிரத்தேவாழும் பொற்பாதமெப்போதும் போற்றல்செய்வாம். (௫)

(இ-ள்.) (பண்டைமறை-செய்வாம்.) எ-து. பழையதாகிய வேதவண்டுகளொலிப்பப் பரஞானமாகிய செவ்வியதேன் சிநேகத்தோடும் புறப்படச் சிவமாகியமணம் விரிந்துமணக்கச் சகலரிற்சத்திநிபாதம்பதிந்து தரிசித்தோரது விதயகமலங்கள்விட்டுவிரியப் பூமியிடத்தெழுந்தருளிய விரிந்தமலர்களையுடைய பொழில்கள் பக்கங்களிலேசூழப்படாநின்ற திருவெண்ணெய்நல்லூரைத்திருப்பதியாகப்பொருந்தின சுத்தசை

வத்துக்காதியாகிய மெய்கண்டதேவனென்னுந் திருநாமத்தை யுடையஞானசூரியனதழகிய ஸ்ரீபாதங்க டாமரைமலரு மொப்பழியும்படி யெமதுதலைமீதே யெப்பொழுதும் வாழு மாதலா லவற்றையேதுதியாநின்றேம். எ-று. கண்டவிதயக் கமலமுகைகள் கண்டிறந்தவிடத்துவண்டரற்றப் பசுந்தே னொழுகப் ..ரந்துமணக்கவெனக்கூட்டினுமமையும்.

இச்செய்யுள் குருவணக்கங்கூறிற்று. (ரு)

அவையடக்கம்.

மாலயன்மாமறை யறியாவாதிமார்க்கம் வையகத் தாகமம்வேதமற்றுமுள்ள, நூலையெலாமுணர்ந்திறை வன்கழலேநோக்கு நேர்மையருந்தவர் முன்யானு வலுமாறு, வேலையுலாவுந்திரைகள்வீசியேறி வேறே ழுமொன்றாகி நின்றபோது, சாலவுமான்குளப்படியி ற்றங்கி நின்றசலமது தானேரென்னுந் தன்மைத் தாலோ. (சு)

(இ-ள்.) மாலயன்மாமறையறியா வாதிமார்க்கம். எ-து. பிரமவிஷ்ணுக்களாலு நான்குவேதங்களாலு மறிதற்கரிதாகிய பரமேசுரனதுவழியை —வையகத்தாகமம்வேதமற்றுமுள்ள நூலையெலாமுணர்ந் திறைவன்கழலேநோக்குநோன்மையரு ந்தவர் முன்யானுவலுமாறு. எ-து. பிரபஞ்சத்தின்கண்ணே ஆகமத்தையும்வேதத்தையு மவற்றின்வழியுண்டாகிய சாத்திர ங்களையுங்கற்றறிந்து பரமேசுரனது ஸ்ரீபாதங்களையே பற்று க்கோடாகவுடைய நோய்முதலிய வற்றைப் பொறுக்குந்த போதனர்முன்னே யாதுமறியாதயான் சொல்லுநெறி,—வே லையுலாவுந்திரைகள்வீசியேறி வேறேழுமொன்றாகி நின்ற

போது சாலவுமான்குளப்படியிற்றங்கி நின்ற சலமதுதானே ரென்னுந்தன்மைத்தாலோ. எ-று. சமுத்திரத்தினுலாவுந் திரைகண் மிகுதலும் வேற்றுமைப்பட்ட சமுத்திரமொன்று படநின்றவிடத்து மிகவு மான்குளப்படியிற்றங்கி நிற்கும் ஜலத்தைப் பிரளயஜலத்துக் கொப்பென்னு முறைமையுடைத்து. எ-று. ஆலும் ஓவும். அசைகள்.

இச்செய்யுளவையடக்கங் கூறிற்று. (௬)

இதுவுமது.

நீடுபுகழ்உலகுதனின்மைந்தர்மாதர் நேயமொடுதாம் பயந்தபுதல்வர் வாயிற், கூடுமொழிமழலையொடுகுழறியொன்றுங்குறிப்பரிதாயினுமிகக்குலவிப்போற்றி மாடுநமக்கிதுவென்று கொண்டுவாழ்வ ரதுபோல மன்னுதமிழ்ப் புலமையோரென், பாடுகவிக்குற்றங்கள்பாராரிந்நூல்பாராட்டாநிற்பரருட்பரிசினாலே (எ)

(இ-ள்.) நீடு புகழ் உலகுதனின் மைந்தர் மாதர் நேயமொடு தாம் பயந்த புதல்வர் வாயிற் கூடு மொழி மழலையொடு குழறியொன்றும் குறிப்பரிதாயினுமிகக் குலவிப் போற்றி மாடு நமக்கிதுவென்று கொண்டுவாழ்வர். எ-று. நிலைபெற்றபுகழினையுடையவுலகின்கண் ஸ்ரீபுமான்கள் சிநேகத்தோடும் பெற்ற பிள்ளைகளிடத்துண்டாகிய வார்த்தை யிளமையோடுதடுமாறியொன்றுந்தெரிதற் கரிதாயிருந்ததாயினு மதனைமிகவுங் கொண்டாடிப்போற்றி யாம் பெறுமைச்வரியமென்று மகிழ்ந்து வாழாநிற்பர்கள்,—அதுபோல மன்னு தமிழ்ப் புலமையோரென்பாடுகவிக்குற்றங்கள்பாரா ரிந்நூல்பாராட்டா நிற்பாருட்பரிசினாலே. எ-று. அத்தன்மைபோல நிலைபெற்றதமி

ழ்ப்புலவரென்னிடத்துண்டாகிய கவியினது குற்றம்பாரார்,
யான்சொன்னநூலைப் பாராட்டாநிற்பர் ஞானத்தின்முறை
மைப்பாட்டினால். எ-று. (எ)

நூற்சிறப்பு.

சுத்தவடிவியல்பாகவுடையசோதிசொல்லியவாகம
ங்களெல்லாஞ் சூழப்போயு, மொத்துமுடியுங் கூடவோ
ரிடத்தே யொருபதிக்குப் பலநெறிகளுளவாறுற்போ
ற், பித்தர்குணமதுபோல வொருகாலுண்டாய்ப் பின்
னொருகாலமின்றிப்பேதையோராய்க், சத்திமான்
மாக்களுநரைக் கட்டிற்பட்டோர் கனகவரைகுழித்துப்
போய்க்கடற் கெவிழ்வார். (அ)

(இ-ள்.) சுத்த வடிவு இயல்பாகவுடையசோதி. எ-து. ஞான
மேதனக்குச் சுதந்தரவடிவாகவுடைய கர்த்தா,—சொல்லிய
ஆகமங்களெல்லாஞ் சூழப்போயுமொத்துமுடியுங்கூட வோரிட
த்தே. எ-து. சமயபேதங்கடோறு மவனருளிச்செய்தவாகம
ங்களெல்லாம்பலபேதமாயினும் ஞானபாதமெல்லாவாகமமுந்
தம்மிலொத்துச்சென் றொருபொருளையே நோக்கிமுடியும்.
அஃதென்போலவென்னில்,—ஒருபதிக்குப் பலநெறிகளுளவா
றுற்போல். எ-து. ஒரூர்க்குண்டாகியவழிகளெல்லாம் பலபே
தப்பட்டதாயினும் சேரவவ்வூரையேநோக்கிக்கிடந்தாற்போ
ல,- பித்தர்குணம் அதுபோலவொருகாலுண்டாய்ப் பின்னொரு
காலறிவின்றிப் பேதையோராய்ச் சத்திமான்மாக்களுரைக்
கட்டிற்பட்டோர். எ-து. எல்லாச்சமயத்திலு ஞானபாதமோ
க்ஷமென்றுகண்டு முத்தியடைந்திருக்குமான்மாக்கள் போலா
காமற் பித்தேறினர்குணம்போல மருளுந்தெருளுமாய் முத்தி
யடையத்தக்கநெறியைக்காணுமலந்நெறியைக்கண்டாற்போ

லக்கூப்பிட்டுத்திரியுமறிவிலோராகிய பரசமயிகளாகியவான் மாக்கள் பசுநூற்கட்டுக்குட்பட்டோர்,— கனகவரை குறித்துப்போய்க், கடற்கேவீழ்வார். எ-து. மகமேருவைக்குறித்துப் போகவொருப்பட்டவன் அவ்வழிபோகாமல் மற்றொருதிசையேபோய்க்கடற்கேவீழ்ந்தாழுந்தன்மைபோலும். எ-று.

இச்செய்யுள் பரசமயிகள்கொள்ளுநூல் பசுநூலாகையால் அவர்கள் முத்தியடையார்களென்பது கூறிற்று. (௬)

பரசமயிகள்முத்தியடையார்களென்பதற்குச் சிவதருமோத்தரம். “எடுத்ததோராக்கைதன்னி லிருண்மலசத்திதன்னைத் தடுத்தருள்சைவநூலின் சாதனமதனைத்தள்ளி, விடுத்துவேறற்றநூலின்சாதநம்விரும்புவார்முன், மடுத்தவாரமுதம் விட்டுப் புற்கையாதரிப்பாரன்றே” என்றெடுத்துக்காட்டினார் ஞானப்பிரகாசர்.

நூற்கதிகாரியும் நூல்வழியும் நூற்பெயரும்.

போதமிகுத்தோர் தொகுத்தபேதைமைக்கே பொருந்தினோரிவர்க்கன்றிக்கதிப்பாற்செல்ல, வேதநெறியெனுமவர்கட்கரியமுன்னோனிறைவனருணந்திதனக்கியம்பநந்தி, கோதிலருட்சனற்குமாரற்குக்கூறக்குவலயத்தினவ்வழியேகுருநாதன்கொண்டு, தீதகலவெமக்களித்தஞானநூலைத் தேர்ந்துரைப்பன் சிவஞானசித்தியென்றே.

(இ-ள்.) போதமிகுத்தோர். எ-து. சாத்திரஞானத்தான்மிக்கவர்கள்,—தொகுத்த பேதைமைக்கே பொருந்தினோர். எ-து. இந்தவகையாகச்சொல்லப்பட்டவறியாமையைக் கூடினோர்,—இவர்க்கன்றி. எ-து. இந்தவிருவர்க்குமன்றி,—கதிப்

பாற்செல்ல ஏதுநெறியெனுமவர்கட்கறிய முன்னாளிறைவனருணந்தி தனக்கியம்ப. எ-து. முத்தியின்வழிச் செல்லுதலுக்கு யாதுவழியென்றாராயுஞ்சத்திநிபாதத்தோர்க்கறியவேண்டி யாதியிலே பரமேசுரன்றன்னளவிற்பத்திசெய்யு நந்திகேசுரநாயனார்க்கருளிச்செய்ய, நந்தி கோதிலருட்சனற்குமாரற்குக்கூற எ-து. ஸ்ரீ நந்திகேசுர நாயனாருந் தம்மளவிற்குற்றமற்றபத்திசெய்யுஞ்சனற்குமாரபகவானுக்கருளிச் செய்ய,— குவலயத்தி னவ்வழியெங்குருநாதன் கொண்டு தீதகலவெமக்களித்தஞான நூலைத் தேர்ந்துரைப்பன் சிவஞானசித்தியென்றே. எ-து· அம்முறைமையாலே கேட்டருளிச்செய்துபிரபஞ்சத்திலெழுந்தருளி யெம்முடையசுவாமியாகிய ஸ்ரீமெய்கண்டதேவநாயனார் குற்றமற்றதமிழாகச்செய்து சிவஞானபோதச் சிறப்புநாமந்தரித் தெமகுஞ்ஞானநீங்கவருளிச்செய்த விந்த நூலை யோதியுணர்ந்துசொல்லாநின்றேன் சிவஞானசித்தியென்னும்பெயரினால். எ-று.

இச்செய்யுள் குருபரம்பரையும் பாரம்பரியமாகநூல்வந்த முறைமையுங்கூறிற்று. (௬)

நடுவாந்தன்மையராகிய சத்திநிபாதத்தோரிலக் கணத்திற்கு; "திரைக்கடலுட்சென்று சிதறியுடைந்தாழ்ந்த, மரக்கலங் கைவிட்டார்மனம்போ—லிருக்குமெனக், கையாவினைப்பிறவிக்கஞ்சிக்கலங்கினே, னுய்யுநெறிகாணவுணர்ந்து." எனவு மெடுத்துக் காட்டினர்ஞானப்பிரகாசர்.

நூற்கருத்து.

இறைவனையு மிறைவனாலியம்பு நூலு மீண்டளவும் பொருளியல்பும்வேண்டுஞ் செய்தி, முறைமைகளும் பெத்தமொடுமுத்தியெல்லா மூதுலகிலெமக்கியன்ற

முயற்சியாலே, சிறைபுலவெம்புனலிலவித் தோன்றும்
பேய்த்தேர்ச் செய்கைபோலுண்டாயபொய்கொண்
மார்க்கத், துறைபலவுங்கடாவிடையாற் சொல்லிப்
போக்கித் துகடீரவிந்நூலிற்சொல்லுகிற்பாம். (௫0)

(இ-ள்.) இறைவனையுமிறைவனாலியம்புநூலும். எ-து. பரமேசுரனையும்பரமேசுரனாலருளிச்செய்யப்பட்ட வேதாகமபுராணப்பொருள்களையும், ஈண்டளவும். எ-து. இவ்விடத்துண்டாகிய வளவைப்பிரமாணமும், பொருளியல்பும். எ-து அவ்வளவைகளாலறியும் பொருள்களினியல்பும்,—வேண்டுஞ்செய்திமுறைமைகளும். எ-து. அப்பொருளியல்பின் வழிநின்றோர் செய்யவேண்டு மாசாரங்களையும்—பெத்தமொடு முத்தியெல்லாம். எ-து. பெத்தலக்ஷணத்துடனே முத்திலக்ஷணங்களெல்லாம்,—மூதுலகிலெமக்கியன்ற முயற்சியாலே. எ-து. பழயதாய்வரும் பிரபஞ்சத்திலெமக்குக்கூடின செயலாலே,—சிறையுலவும்புனலிலவித் தோன்றும்பேய்த்தேர்ச் செய்கைபோலுண்டாயபொய்கொண்மார்க்கத்துறை பலவுங் கடாவிடையாற்சொல்லிப்போக்கி. எ-து. கரையிலகப்பட்டு நிற்கு நீரையொப்பத்தோன்றுகின்றபேய்த்தேரை மெய்யென்றுநிருமிக்குமிடத்துப் பொய்யானதன்மைபோல நூல்களாகவும் வழிகளாகவும் கேட்டார்க்குப்பொருந்தத்தக்கதாகவுண்டாய்ப் பொய்மைக் கைக்கொண்டவழிகளாகிய வுலோகாயதன்முதற்பாஞ்சராத்திரியீறாயசமயிகளுடைய பலதுறைகளையுங் கடாவாலும் விடையாலுஞ்சொல்லிநீக்கி,—துகடீரவிந்நூலிற்சொல்லுகிற்பாம். எ-து. சுற்றந்திர ஞானபாதத்தையறியவிந் நூலிலேசொல்லக்கடவேன். எ-று. அளவென்றது-அளவையை. அளவையாவன-காண்டன்முதலிய. ஒடு

எ-ம். நகடீரவென்றது அவரவர்களளவைமார்க்கத்தினின்ற குற்றந்தீரவென்க.

இச்செய்யுள் நூற்கருத்துக்கூறிற்று. (கா)

இவைபத்தும்பாயிரம்.

பாயிரமுற்றிற்று.

உலோகாயதன்மதம்.

இனி; உலகாயதன்முதற் பரசமயிகள்பிரமாணமும் பிரமேயங்களும் அவர்களை நிராகரிக்குமாறும் அருளிச்செய்கிறார்.

இந்திரபுரோகிதனியம்புமொருநாலின்
றந்திரமெனுதறி விசேடருளிலாமற்
சந்தனைபுயத்துமணமாலைகடயங்க
வுந்திபுலகத்திலுலகாயதனுரைப்பான். (க)

(இ-ள்.) (இதனைப்பொருளுக்கேற்பமாறுக.) சாந்தம்பொருந்தியதோளிடத்து நறுநாற்றம்பொருந்தியமாலைகள் பிரகாசிக்குங் கர்ப்பாசயரீங்காதவலோகாயதன் இந்திரபுரோகிதனுகியபிரகஸ்பதிபகவா னுன்மாக்கள்போசங்காரணமா யருளியநூலை யிப்பொழுதிடையூறின்றிக்கொள்ளுதற்கு ஞானமுங் கிருபையுமில்லாமலந்த நூலேயெமெய்யென்றுசொல்லாநிற்பன். எ-று. இயம்புநூல் உலோகாயதசித்தாந்தம். சந்தனைபுயத்துமணமாலைகடயங்க. எ-து. போகசாமியாகையாலே பலன்சந்தாதிகளையுடையனென்பது நோக்கியென்க. உந்திபுலகத்திலுலகாயதன். எ-து. ஸ்திரீபோகமே மெய்யென்றநுபவிக்குமவன் றநகங்கைவிடானென்பதுகருத்து. உந்து மூலகம்டா-மாயிற் கிளம்பினதென்க. இதனைச்சொல்லியது, இந்

திரன் றவத்தைப்புரியப் பிரகஸ்பதியவனைமயக்கி விடையத்திலேவிழ்வித்தசாத்திரமென்க. அஃதென் போலவென்னின் அருச்சுனன் றவத்தைப்புரிய வாசுதேவன் றேரிலேயிருந்து கீதையென்னுஞ்சாத்திரத்தினாலே மயக்கிக்கொல்லுவித்ததற்கொக்குமெனக்கொள்க. உலோகாயதன் சார்வாகனென்றும் பெயர்பெறுவன்.

இச்செய்யுளுலோகாயதன் பிரகஸ்பதிநூலையே பிரமாணமாகக்கொண்டுரைப்பனென்பது கூறிற்று. (க)

பிரகஸ்பதிகூறியமதனூல்வாசுதேவர்கூறியநூலுக்கொப்பாமோவெனில், விவகாரதிசையிலல்லது புண்ணியபாவங்களும் சொர்க்கமுதலானபிரபஞ்சங்களுங் கருத்தனு மான்மவர்க்கங்களும் பூசை ஜபம் தியானம் அநுஷ்டானம் யாகமுதலிய கன்மங்களும் பாரமார்த்ததிசையிலே மெய்யல்ல பொய்யென்றுசதாசாரவிரோதஞ்சொல்லலால்;ஒருபுடையொப்பாமென்க. என்றெடுத்துக் கூறினர்ஞானப்பிரகாசர். உந்தியுலகத்தில். எ-கு.கடலினாற்சூழப்பட்டவுலகம்எனப்பொருளுரைப்பாருமுளர், உந்தி-கடல்.

ஈண்டளவைகாட்சிமன மாதிரிருமூன்றாய்
வேண்டுமனுமானமுதலான பலவேண்டா
பூண்டபொருள்பூதமவைபுகழ்கடின சீதந்
தீண்டரியவெம்மைசலனத்தினொடுசேர்வே.

(இ-ள்) ஈண்டளவைகாட்சி. எ-து. இவ்விடத்தளவையென்றுகொள்ளப்படு முமதுகாட்சியை,—மனமாதியிருமூன்றாய் வேண்டும். எ-து. அக்காட்சியினைவிகற்பித் தையக்காட்சி முதலாறுவகைக் காட்சியாய்க் கோடல்வேண்டும்:—

எ-ம். நிகமரவென்றது அவரவர்களவைமார்க்கத்தினின்ற குற்றந்தீரவென்க.

இச்செய்யுள் நூற்கருத்துக்கூறிற்று. (௧௦)

இவைபத்தும்பாயிரம்.

பாயிரமுற்றிற்று.

உலோகாயதன் மதம்.

இனி; உலகாயதன்முதற் பரசமயிகள்பிரமாணமும் பிரமேயங்களும் அவர்களை நிராகரிக்குமாறும் அருளிச்செய்கிறார்.

இந்திரபுரோகிதனிரும்பு மொருநூலின்
மந்திரமெனுதறி விலேண்டருளிலாமற்
சந்தனைபுயத்துமணமாலைகடயங்க
வந்திபுலகத்திலுலகாயதனுரைப்பான். (௧)

(இ-ள்.) (இதனைப்பொருளுக்கேற்பமாறுக.) சாந்தம்பொருந்தியதோளிடத்து நறுநாற்றம்பொருந்தியமாலைகள் பிரகாசிக்குங் கர்ப்பாசடர்ந்காதவுலோகாயதன் இந்திரபுரோகிதனு யெம்பிரகஸ்பதிபகவா னென்மாக்கள்போசங்காரணமா யருளிய நூலையிப்பொழுதிடையூறின்றிக்கொள்ளுதற்கு ஞானமுங் கிருபையுமில்லாமலந்த நூலையேமெய்யென்றுசொல்லா நிற்பன். எ-று. இரும்புநூல் உலோகாயதசித்தாந்தம். சந்தனைபுயத்துமணமாலைகடயங்க. எ-து. போகசாமியாகையாலே பலசந்தாதிகளையுடையனென்பது நோக்கியென்க. உந்தியுலகத்திலுலகாயதன். எ-து. ஸ்திரீபோகமே மெய்யென்றநுபவிக்குமவன் ஆகநங்கைவிடானென்பது கருத்து. உந்து மூலகம்போ-மாயிற் கிளம்பினதென்க. இதனாற்சொல்லியது, இந்

திரன்றவத்தைப்புரியப் பிரகஸ்பதியவனைமயக்கி விடையத்திலேவிழ்வித்தசாத்திரமென்க. அஃதென் போலவென்னின் அருச்சுனன்றவத்தைப்புரிய வாசுதேவன் றேரிலேயிருந்து கீதையென்னுஞ்சாத்திரத்தினாலே மயக்கிக்கொல்லுவித்ததற்கொக்குமெனக்கொள்க. உலோகாயதன், சார்வாகனென்றும் பெயர்பெறுவன்.

இச்செய்யுளுலோகாயதன் பிரகஸ்பதிநூலையே பிரமாணமாகக்கொண்டுரைப்பனென்பது கூறிற்று. (௧)

பிரகஸ்பதிகூறியமதனநூல்வாசுதேவர்கூறியநூலுக்கொப்பாமோவெனில், விவகாரதிசையிலல்லது புண்ணியபாவங்களும் சொர்க்கமுதலானபிரபஞ்சங்களுங் கருத்தனுமான்மவர்க்கங்களும் பூசை ஜபம் தியாநம் அநுஷ்டானம் யாகமுதலிய கன்மங்களும் பாரமார்த்ததிசையிலே மெய்யல்ல பொய்யென்றுசதாசாரவிரோதஞ்சொல்லலால்;ஒருபுடையொப்பாமென்க. என்றெடுத்துக் கூறினர்ஞானப்பிரகாசர். உந்தியுலகத்தில். எ-கு.கடலினாற்சூழப்பட்டவுலகம்எனப்பொருளுரைப்பாருமுளர், உந்தி-கடல்.

ஈண்டளவைகாட்சிமன மாதிபிருமூன்றாய்
வேண்டுமனுமானமுதலான பலவேண்டா
பூண்டபொருள்பூதமவைபுகழ்கடின சீதந்
தீண்டரியவெம்மைசலனத்தினொடுசேர்வே.

(இ-ள்) ஈண்டளவைகாட்சி. எ-து. இவ்விடத்தளவையென்றுகொள்ளப்படுமது காட்சியை,—மனமாதியிருமூன்றாய் வேண்டும். எ-து. அக்காட்சியினைவிகற்பித் தையக்காட்சி முதலாறுவகைக் காட்சியாய்க் கோடல்வேண்டும்:—

அனுமானமுதலானபலவேண்டா. எ-து. இக்காட்சியில் விக ற்பமொழிந் தனுமானம் உரைமுதலிய வேண்டுவதில்லை,— பூண்டபொருள்பூதம். எ-து. அக்காட்சியானுமதன் விகற்பத் தானுங்கண்டு கைக்கொண்ட பொருள் பூதங்கணான்கும்,— அவை. எ-து. பூதங்கணான்கும்,—புகழ் கடினசீதந்திண்டரிய வெம்மை சலனத்தினோடுசேர்வே. எ-து. சொல்லப்பட்டகடி னம்சீதம் தொடுதற்கரியவெப்பம் சலனமென்னுஞ்சொருபங் களோடுங் கூடும். எ-று. மனமென்றதையக்காட்சி. பழுதை யைப்பாம்பென் றையப்படுவது மனமாகலின் மனக்காட்சி யென்றார். இனிக்காட்சியிருமூன்றுவன, ஐயக்காட்சி, வாயிற் காட்சி, விகற்பக்காட்சி, அந்வயக்காட்சி, வெதிரேகக்காட்சி, திரிவுக்காட்சியெனவிவை. இனி சவிகற்பக்காட்சிநிர்விகற்பக் காட்சியாவன, இவ்வாறினோடுங்கூடாது குற்றமறக் காண் பவை. ஐயக்காட்சியாவது, இருளிற்பாம்போ பழுதையோ வென்றையுறுதல், அதுவேமனக்காட்சி. வாயிற்காட்சியாவது, கண்ணொழிந்த விந்திரியங்களாற் காண்பது. விகற்பக்காட்சி யாவது பெயர் ஜாதி குணம் கன்மம்பொருளென்னு மைந்தி னுலுங் காண்பது. அந்வயக் காட்சியாவது, புகையினலநல றிதல். வெதிரேகக்காட்சியாவது, நாற்றத்தால்பூவறிதல். திரி வுக் காட்சியாவது, பழுதையைப் பாம்பென்றுகொள்வது.

இச்செய்யுள், உலோகாயதன் சித்தாந்தத்திற் கொள்ளுங் காட்சியளவையும் அதனின்விகற்பமு மதனலறியும்பொருளா கிய பூதங்கணான்கும் அவற்றின்குணங்களுங் கூறிற்று. (உ)

அனுமானமுதலாவன; அனுமானம், ஆகமம், உபமானம், அருத்தாபத்தி, அபாவம், சம்பவம், ஐதிகம், யுக்தி, பாரிசேட முதலானவை. அளவைமுதலியனதனியேயிந்நூலிற்கூறியிரு ப்பதை விவரமாய்க் காண்க.

சாற்றுபெயரானவைதலம்புனல்கனற்பின்
காற்றுமெனலாமிவைகலந்தகுணமோதி
னாற்றமிரதம்முருவநற்பரிசமாகும்
போற்றுமிவைநித்தவியல்பாமிவைபுணர்ப்பே. (௧)

(இ-ள்.) சாற்றுபெயரானவை. எ-து. அப்பூதங்களுன்கு மப்படிக் கூடினபின்பு அவையிற்றுக்குச் சொல்லும் பெயர்களானவை, தலம்புனல்கனற்பின் காற்றுமெனலாம். எ-து. பிருதிவியு மப்புவுந் தேயுவும் வாயுவுமென்றுசொல்லலாம்,— இவைகலந்த குணமோதின். எ-து. இப்பூதங்கள்கூடியகுணங்களின் பெயரை முறையானேசொல்லின், நாற்றமிரதம் முருவநற்பரிசமாகும். எ-து. கந்த ரிரத முருவம் பரிசமிவையாகும்,—போற்றுமிவை எ-து. தெய்வமாகத்தொழும் இப்பூதங்களுன்கும்,—நித்த வியல்பாம். எ-து. அழியாதவியல்புகளையுடையவாம்,—இவைபுணர்ப்பே. எ-து. இவைகூடுமிடத்து மேலானவாயுப்பூதத்திலே நின்று மூன்றுபூதங்களிலொன்றிலொன்ருக வடைவே கூடப்படும் எ-று. வாயுகண்ணுக்குத்தெரியாதாயினும் பரிசங்கொண்டு காண்கையாற் பின் காற்றுமெனலாமென்ருரெனினுமமையும்.

இச்செய்யுள் பூதங்களுன்கின்பெயரு மவற்ருேடுங்கூடிய குணங்களின் பெயரும் பூதங்கள்கூடு முறைமையுங் கூறிற்று (௬)

போற்றுமிவை நித்தவியல்பாமிவை புணர்ப்பே. எ-கு. புகழப்படுமிவை நித்தியமா யொருகர்த்தாவாலன்றிப் பொருந்திக்கூடுதல் சுபாவம். என்ருர்ஞானப்பிரகாசர்.

ஒத்துறுபுணர்ச்சிபினுருக்கள்பலவாகும்
வைத்துறுகடாதிபலமண்ணின்வருமாபோற்

புத்திகுணநற்பொறிபுலன்களிவையெல்லா
மித்தில்வருநீரினிலெழுங்குமிழியொத்தே. (௩)

(இ-ள்.) ஒத்துறு புணர்ச்சியினுருக்கள்பலவாகும். எ-து. அப்பூதங்களின்சொரூபங்களுங் குணங்களுந் தம்மிலொத்துக் கூடுகிற கூட்டத்திலே வடிவுகள்பலவுண்டாம். அஃதென்போலவென்னில்,—வைத்துறுகடாதிபலமண்ணின்வருமாபோல். எ-து. திரிகையிலேவைத்தமண்ணின் கண்ணே பலகடாதிக ளுண்டாமா போல,—புத்திகுணநற்பொறி புலன்களிவை யெல்லாமித்தில் வருநீரினிலெழுங்குமிழியொத்தே. எ-து. (இதனைப்பொருளுக்கேற்பமாறுக.) நீரினிற் கிளம்பியகுமிழி யையொத்துப் புத்தியுங்குணமு ஞானேந்திரியமாகிய பொறி புலன்களு மிவையெல்லா மிவ்வுருவின்கண்ணே யுண்டாம். எ-று. ஒத்துறுபுணர்ச்சியி னுருக்கள் பலவுண்டாமெனவே, ஒவ்வாமலுறும்புணர்ச்சியி னுருக்களுங் குணமு மேறிக்குறை ந்து வருமென்பதுகருத்தாயிற்று. உருக்கள் பலவாவன, எறு ம்புகடையானை முதலியவுருக்கள். புத்திமுதலாயினவு மிவ் வுருக்களின்வருமென்பது. புத்திமுதலாயினவை முன்பில்லா தவை இவ்வுருவிலேதோன்றி இவ்வுருவோடேமடியு மென் பதுகருத்து.

இச்செய்யுள் பூதங்களிலே யுருத்தோன்று முறைமையும், அவ்வுருவிலே புத்திமுதலானவை தோன்றுமென்பதுங் கூறி ற்று. முளை முதலானகூட்டத்து மதசத்தியுண்டானாற் போல வும் ஸ்ரீ புருஷர் கூட்டத்திற் சுகம்போலவும் சாதுர்ப்பூதசம வாயத்திலே ஞானசுகாதிகள்தோன்றி யவைவளரவளர்ந்துங் குறையக்குறைந்தும் பிரகாசியா நிற்குமெனக்கொள்க. (௪)

பூதமதினின்றுயிரியற்புலனிறக்கும்
நீதியினினிற்பனநடப்பனவுமற்போ

லோதும்வகையாகியுறுகாரியமூலந்தா
லாகியவையாமிதனையறிவதறிவாமே. (ரு)

(இ-ள்) பூதமதினொன்றுபிரியப்புலனிறக்கும். எ-து. அப்பூதங்களில்வாயுப்பிரிய விந்திரியங்கள்கெடும். புலனிறக்குமெனவே புலன்காரணமாகிய பொறி குணம் புத்தியவையுமிறக்கும்,—நீதியினினிற்பனநடப்பனவு மூற்போல். எ-து. இம்முறைமையாலே தாபரசங்கமங்களு மிறக்கப்படும்,—ஓதுமவையாகியுறுகாரிய மூலந்தாலாகியவையாம். எ-து. சொன்னமுறைமையிற் கூடிப்போந்த காரியமாகிய சொரூபகுணங்களிறந்தாற் காரணமாகிய பூதங்களேயாம்,—இதனையறிவதறிவாமே. எ-து. இவையிற்றையிம் முறைமைப் பாட்டாலேயறிவதே ஞானமாவது. எ-று. (ஞானம்) இந்தப்பூதங்கள் பிரியச் சகாதிசேதனரூபவிகற்பங்களு மண்ணிற்கடமு மக்கினியிற்றீபமு மின்னவற்றிபுக்கதென்றறியாம னசித்தவாறுபோல நசிக்குமெனக்கொள்க.

இச்செய்யுள் பூதம்பிரியுமாறும் பூதத்தொடனேயிந்திரியாதிகணங்களுருக்கள் கெடுமாறுங்கூறிற்று.

இந்திரபுரோகிதனென்றுஞ் செய்யுண்முத லிச்செய்யுட்காறுந் தம்மதங்கூறி மேற் பிறர்மதங்கூறுகின்றது. [ரு)

வேறு.

இப்படியன்றிக் கன்மமுயிரிறைவேறுண்டென்று,
செப்பிடுமவர்க்கு மன்னோர்செய்திடுங் குற்றமென்
னே, வொப்பிலாமலடிபெற்ற மகனொருமுயற் கொம்
பேறித், தப்பிலாகாயப் பூவைப்பறித்தமை சாற்றி
னாரே. (சா)

(இ-ள்.) இப்படியன்றி. எ-து. இப்படிப்பூதக் கூட்டத்தினுளுருக்கடோன்றி வாயுக்கெடக்கெடுதலன்றி,—கன்மமுயிரிறை

வேறுண்டென்று செப்பிடுமவர்க்கு மண்ணோர் செய்திடுங் குற்ற மென்னோ. எ-து. முன்செய்தகன்மம் பின்றொடரு மென்று மிதனைப் புசிக்கத்தக்கதோரான்மாவுண்டென்று மிவையிற்றைக் கூட்டுவாரொருகர்த்தாவுண்டென்றுஞ் சமயிகளுலகத்தாரை மயக்க வுலகத்தார்சமயிகளுக்குச்செய்த குற்றம்யாது?—ஒப்பிலாமலடிபெற்ற மகனொரு முயற்கொம்பேறித் தப்பிலாகாயப் பூவைப்பறித் தமைமாற்றினரே. எ-து. உலகத்தாரை மயக்கச் சமயிகள் கூறுமது, மலடிபெற்றவொப்பில்லாத மகனொருமுயலின் கொம்பிலேயேறி யாகாயம் பூத்தபூவைத் தவறின்றிப் பறித்தானென்னுந் தன்மைக்கொக்கும். எ-று. பூதமேதெய்வமாவது, பூதக்கூட்டத்தின் மிகுதிக்குறைவேகன்மமாவது, பூதக்கூட்டத்தினிகழு முணர்வேயான்மாவாவது, இதுவன்றிவேறே தெய்வமுங்கன்மமும் ஆன்மாவுமில்லையென்பதுகருத்து. மலடிபெற்ற வொப்பிலாமகனெனமாற்றுக. ஆகாயப்பூவைத்தப்பிலாமற் பறித்தமையெனமாறுக. பொய்யைப்பெருக்கிப் புராணஞ்செய் துலகத்துள்ளாரை மயக்கித்தீர்த்தயாத்திரை தபசுக ளக்கினிகோத்திரம் தானம் தன்மம் ஜபம் தியாநம் சமாதியென்றும் உபவாசவிரதமென்றும் பேரிட்டுப் பகற்பொழுதுபோக்கி உலகத்தார்கைப்பொருள் கவர்ந்து பொய்ப்பொருள் பேசிப்பொழுது போக்கி யவமேகழ்வதந்தோ வென்று நொந்தானெனக் கொள்க.

இச்செய்யுள் கர்த்தாவுங் கன்மமுமான்மாவுமில்லை யென்றிப் பொருளுவமை கூறிமறுத்துக் கூறிற்று. (கூ)

செய்திடுங் கன்ம மெல்லாஞ் செய்தவர் தம்மைப்
பற்றி, யெய்திடு மென்னினிங் கேமாய்ந்திடு மேய்வ

தெங்ஙன், மெய்தருதூலங்கெட்டுச் சூக்கமாய் மேவு மென்னி, ஐயனே தீபம்போன் றலதனொளியாவதுண் டோ. (எ)

(இ-ள்.) செய்திடுங்கன்மமெல்லாஞ் செய்தவர் தம்மைப் பற்றியெய்திடுமென்னில். எ-து. முற்பிறப்பிலான்மாக்கள் செய்தகன்ம மெல்லாங்கெடாம லான்மாக்களைப் பொருந்தி நின் றிப்பிறப்பிலேயூட்டுமென்றுகூறின்,—இங்கேமாய்ந்திடு மெய்வதெங்ஙன். எ-து. இப்பிறப்பிற்செய்த புண்ணிய பாவங்களிக்காயத்தோடு கெடுமாதலாற் பிற்பிறப்பிற்புக் குக் கூடுமாறெங்ஙனே?—மெய்தருதூலங்கெட்டுச் சூக்கமாய் மேவுமென்னில். எ-து காயத்தோடு தூலமுறைமை கெட்டுச் சூக்கமுறைமையாகப் பொருந்து மென்றுகூறின்,—ஐயனே தீபம்போன் றலதனொளியாவதுண்டோ. எ-து. திரியோடே கூடிநின்ற விளக்கொளி யத்திரியை நீங்கிவேறே நின்றொளி ருமென்னுந்தன்மைத்து, காயநீங்கிச் சூக்குமமாய்ப் பொரு ந்துமுறைமை. எ-று. ஐயனேயென்ற திழிவின் கண்வந் தது. (எ)

மாய்ந்துபின் வயலிலிட்டவைதழைபலிக்குமாபோ லேய்ந்திடுங் கன்மமென்னிலிட்டிடத்திசையு மேனி, யோய்ந்து வந்தவரையுண்ணப்பண்ணுஞ் சோறுதர த்தற்றால், வாய்ந்திடும் பலம்வரிற்றிற் கொண்டிடும் வழக்குவைத்தாய்.

(இ-ள்) மாய்ந்துபின் வயலிலிட்ட வைதழைபலிக்குமா போலேயந்திடுங் கன்மமென்னில் எ-து வயலுக்கிட்டவைக் கோழுந்தழையுந் தான்கெட்டுப் பின்புப்பயிர்க்கு நன்மையைக் கொடுக்குமாபோலக் கன்மந்தோன்றுமற்றன்மை கெட்டுப்

பொருந்துமென்றுகூறின்,—இட்டவிடத்திசையும். எ-து. நீயுவமைகூறிய வைக்கோலுந்தழையு மிட்டவிடத்திற்பயிர்க்கு நன்மையைக் கொடுக்குமதுபோலப் பிறர்காயத்திற்கு நன்மையைக்கொடுக்கவேண்டும். அஃதெங்ஙனெனின்,—மேனியோய்ந்து வந்தவரையுன்னைப் பண்ணுஞ்சோறுதரத் தற்றுல் வாய்ந்திடும் பலம் வயிற்றிற்கொண்டிடும் வழக்குவைத்தாய். எ-து. காயந்தளர்ந்து பசித்துவந்தவரை யுன்னைப் பண்ணுவித்தசோறு அவருதரத்து மாண்டாலுண்டாம் பிரயோசன மவர்வயிற்றின் மலங்கொள்வார்வழக்குக் கூறினாய். எ-று. இட்டதுகெட்டுப்பலித்தன் மலமெனக் கொள்க. (௮)

உருவமுமுணர்வுஞ்செய்தியொத்திரகன்மமென்
னின், மருவுகைவிரல் கடம்பின் வளர்வுடன் குறை
வுண்டாகி, வருவதிங்கென்ன கன்மஞ்செய்து முன்
மதியிலாதாய், பெருகுபூதங்கடம்பின் மிகுகுறைப்
பெற்றியாமே. (௯)

(இ-ள்.) உருவமு முணர்வுஞ்செய்தியொத்திரகன்மமென்னின். எ-து. ஒருகாயத்தின் செய்தியு மோருணர்வின்செய்தியு மொத்திராமற் பேதிக்கப்படுவது கன்மச்செய்தி யென்றுங் கூறின்,—மருவுகைவிரல் கடம்பின்வளர் வுடன் குறைவுண்டாகிவருவதிங்கென்னகன்மஞ்செய்துமுன்மதியிலாதாய் எ-து (இதனைப்பொருளுக் கேற்பமாறுக.) அறிவிலாதாய் முன்பெற்றக்கன்மஞ் செய்து பின்புதொழிலமருவின கைவிரல்களொன்றுக்கொன்றேறியுங் குறைந்து மிருப்பது,—பெருகுபூதங்கடம்பின்மிகு குறைப் பெற்றியாமே. எ-து. வளரும் பூதங்கடமிக்குக் குறைதலாற் காயமுமுணர்வும் பேதிக்கப்

பட்டதல்லது கன்மத்தினாலன்று. எ-று. கன்மபல மில்லை யென்பது கருத்து. (௯)

இன்பொடு துன்பமெல்லாமெய் துவகன்மமென்னி,
னன்புனல் சந்தனதிநனுகவுமனுகவொன்று, மின்
பொலியழலினோடுமேவுவ நன்மைதீமை, யென்செய்
ததியம்பிடாய்நீயிவையெலாமியல்பதாமே. (௧௦)

(இ-ள்.) இன்பொடு துன்பமெல்லா மெய்துவகன்ம மென்னில். எ-து. ஒருபொருட் கின்பதுன்பங்களெல்லாங் கன்மத்தாற் பொருந்துமென்று கூறின்,—நன்புனல் சந்தனதிநனுகவுமனுகவொன்றுமின் பொலியழலினோடுமேவுவ நன்மைதீமையென் செய்ததியம்பிடாய்நீயிவையெலாமியல்பதாமே. எ-து. தெளிந்த புனலானது சந்தனமுதலாகிய நறுநாற்றத் தோடுகூடவுங் கூடுதற் கரிதாகியவொளி மிகுதியையுடைய வனலோடுகூடவு மெந்த நன்மைதீமைசெய்ததென்று கூறுவாய், இவை யெல்லாமொரு பொருட்கியல்பாமாதலாற் பூத குண மன்றிக் கன்மமில்லை. எ-று. தோல் முதலானவை நெருப்பைக் கண்டாற்சுருண்டு நீர்கூடினனெகிழ்ந்தும் வருவது பதார்த்தவியல்பொழிந்து வேறுகன்மத்தால் வருவதல்ல, சர்வமும்பதார்த்தவியல்பென் றறிவாயாக.

செய்திடுங்கன்ம மென்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுள் காறு முறையானே கன்மமில்லை யென்று மறுத்துக் கூறிற்று. (௬௦)

காயத்தின்குணமதன்றிக் கன்மதான் மாவுண்டா
யின், மாயத்திற் சொல்லிடாதேமனமுதலாறினுக்கு.
நேயத்ததாக வேண்டுமன்றியே நிகழ்த்து முண்மை

தேயத்தின் முயற்கொம்பெல்லை செப்புவோர் செய்
தியாமே. (௧௧)

(இ-ள்.) காயத்தின்குணமதன்றி. எ-து. நூறுகாயிலை கூடவே யொருசிவப்புண்டாமாறுபோலப் பூதக்கூட்டத்திலோருணர்வுண்டாம். அஃதன்றி—கண்டதான்மாவுண்டாயின். எ-து. மற்றோரான்மாவென்று தனியே காணப்பட்டதுண்டாயின்,—மாயத்திற்சொல்லிடாதே. எ-து. உன்மயக்கநூலிற் சொல்லாதே,—மனமுதலாறினுக்கு நேயத்ததாக வேண்டும். எ-து. மனக்காட்சி முதலாயவாறு காட்சிக்கும் பொருந்தச் சொல்லவேண்டும்,—அன்றியே நிகழ்த்து முன்மை எ-து. காட்சிவிகற்பத்தாலொழிந்து கருதலானு முறையானுங் கூறுமது,—தேயத்தின் முயற்கொம்பெல்லை செப்புவோர் செய்தியாமே. எ-து. உலகத்திற் கோடில்லாதமுயலுக்குக்கோடு மதற்களவும்பெருமையுங்கூறுவோரது கூற்றாம். எ-று. மனமென்பது ஐயக்காட்சியை. நேயமென்பது பொருத்தம்.

இச்செய்யுண் முறையானே காயத்தின் குணமன்றியான்மாவில்லையென்று மறுத்துக் கூறிற்று. (௧௧)

காயத்தின்குணமதன்றி. எ-கு. சரீரத்தின்குணமாகியவாகாரம் நித்திரை பயம் மைதுநமென்னுநான்குமொழிய என்றார் ஞானப்பிரகாசர்.

அருவமேயிறைவனாகிலறிவின்றாகாயமாகு, முருவமேயென்னிற் பூதக்கூட்டத்தி லொருவனாகு, மருவியவிரண்டுங்கூடி நிற்பவனென்னின் மண்மே, லிருவிசும்பொருகல்லேந்திநிற்குமோ வியம்பிடாயே. (௧௨)

(இ-ள்.) அருவமேயிறைவனாகிலறிவின்றாகாயமாகும். எ-து கர்த்தாவருபியென்றுகூறி லறிவுமில்லையா யாகாயம்போல

வாம்,—உருவமேயென்னிற் பூதக்கூட்டத்திலொருவனாகும். எ-து. அந்தக்கர்த்தா வுருவமுடையவனென்றுகூறிற்பூதக்கூட்டத்திற்றொன்றுஞ்சரீரியாதல்வேண்டும். மருவியவிரண்டுங் கூடிநிற்பவனென்னில். எ-து. பொருந்திய ரூபாரூபத்தோடுங் கூடிநிற்பவனென்று கூறில்,—மண்மேலிரு விசும் பொருகல்லேந்தி நிற்குமோ வியம்பிடாயே. எ-து. மிக்கவாகாயமாகிய வரூபத்திலே யுரூபமாகிய கல்லைவிட்டாற் றம்மிற் கூடிநிற்குமோ பிரபஞ்சத்திலில்லா தாகையா லரூபாரூபங் கூடி நில்லாது. எ-று.

இச்செய்யுண், முறையானேபூதமே தெய்வமன்றி மற்றொருதெய்வமில்லையென்று மறுத்துக்கூறிற்று. (௧௨)

பூதத்தே யன்னமாகியன்னத்தாலுடம்பு புத்தி, பேதித்தே மனமுமாகிப் பிரிந்தமை திருந்த வின்று, வேதத்தேயுரைக்கவென்றே மேதினியோர்களெல்லாங், கேதத்தேவீழ்ந்துவேறுநெறியலகேட்குமாறே. (௧௩)

(இ-ள்.) பூதத்தே யன்னமாகி யன்னத்தாலுடம்பு புத்தி பேதித்தே மனமுமாகிப்பிரிந்தமைதிருந்தவின்று வேதத்தேயுரைக்க எ-து. பிருதிவி பூதத்தேயுணவுதோன்றி யவ்வுணவாலுடலுமவ்வுடலிலேபுத்தியும்புத்தியிலேபேதிக்கப் பட்டமனமு முண்டாய் வேறுபட்டவற்றை யிப்பொழுதுதெரியத் தங்கள் வேதஞ்சொல்லும்வழியும்,—என்றேமேதினியோர்களெல்லாங் கேதத்தேவிழ்ந்து வேறுநெறியல கேட்குமாறே. எ-து. (தங்கள்வேதமப்படிச்சொல்லவும்) பிரபஞ்சத்திலுள்ளோர்களெல்லாம் வருத்தத்திலே வீழ்ந்து வேறுவழியல்லா வகையைக் கேட்டதனை மேற்கொள்ளுமாறென்றோ

எ-று. புத்தியுமெனவும்மை தொக்கது. பிரிதல், வேறுபட்டிருத்தல்.

இச்செய்யுள், பூதத்திலேயாவையுந் தோன்றியதனிலே யொடுங்கு முறைமையேயன்றி வேறொருபொருளில்லை யென்பது கூறிற்று. (௧௩)

போகத்தை மண்ணிற்கண்டு விட்டுப்போய் விண்ணிற்கொள்ள, மோகத்தராகியல்லன் முயன்றுழன் மூடரெல்லாந், தாகத்திற் றண்ணீர்கண்டுவிட்டுப்போய்த் தண்ணீர்கேட்டுச், சோகித்தேயுண்ணவெண்ணித் துயருறுவார்களந்தோ. (௧௪)

(இ-ள்) போகத்தைமண்ணில் கண்டு விட்டுப் போய். எ-து. பூமியிலே மெய்யாக ஸ்ரீ போகத்தைக் கண்டிருந்தும் அதனை யநுபவியாது கைவிட்டுப்போய், --விண்ணில் கொள்ள மோகத்தராகியல்லல் முயன்றுழல்மூடரெல்லாம். எ-து சுவர்க்கத்திலே போகமுண்டென்று கேட்டதனைக் கைக்கொள்ளுதற் காசையுடையராய்த் தவமென்னுஞ் சிறையிலேமும்பற்கிட்டுத் தடுமாறுமறிவில்லாதவரெல்லாம், — தாகத்தில் தண்ணீர் கண்டுவிட்டுப் போய்த் தண்ணீர்கேட்டுச்சோகித்தேயுண்ண வெண்ணித்துயருறுவார்களந்தோ, எ-து. தாகித்தவிடத்தே தண்ணீரை மெய்யாகக்கண்டிருந்தும் அதனை யுண்ணாமற் கைவிட்டுப்போய் மற்றொரு தண்ணீரை யொருவன் தூரத்திலேயுண்டென்ன வதனைக்கேட்டத் தண்ணீரை யுண்டு தாகந்தீர வேண்டுமென்று போய்வழியிலேதுயரமுறுவோர் தன்மை போலும். ஐயோ! எ-று. அந்தோவென்பதிரக்கக்குறிப்பு.

இச்செய்யுள் காணப்படும் ஸ்ரீ போகத்தைக் கைவிட்டுக் காணப்படாத சுவர்க்காதி போகத்தைக்கேட்டதற்குவருந்து தலறிவன்றென்று கூறிற்று. (௧௬)

போகத்தை மண்ணிற்கண்டுவிட்டுப்போய் விண்ணில்தேடல் மோகத்ததாகியல்லன்முயன்றுழன்மூடரெல்லாம் எ-று. ஆடையாபரணஞ்சந்தனங்குங்குமகஸ்தூரிசுகந்தமாலிகைகளோடுங்கூடவனிதையர்சங்கசுகபோஜனாதிபோகங்களும் இப்பின்கண் பிரத்தியக்ஷமாகக் கண்டறிந்தும் இவையிற்றுக்கு மேலான சௌக்கியமில்லையென்றறிவற்றைவிட்டுப் போய்ச் சுத்தமித்தையாகியசுவர்க்காதிபோகங்கொள்ளவதற் கேற்றவநுஷ்டானங்கள் பண்ணவேண்டுமென்று பிராந்தராகி மிகவுங்கிலேசப்பட்டு முயற்சி பண்ணுகிற்குமறிவிலிகளெல்லாம், (யாவர்க்கொப்பென்னில்,)--தாகத்திற் றண்ணீர் கண்டுவிட்டுப்போய்த் தண்ணீர்கேட்டுச் சோகித்தேயுண்ணா வெண்ணித்துயருறுவார்களாந்தா. எ-று. வெய்யிலிலே தூர வழிநடந்திளைத்துத் தண்ணீர்தாக மிகுந்த போதவ்விடத்து நல்ல குளிர்ந்தஜலமானதிருக்கவதனைவிட்டப்பாற்போய்க் கண்டபேரை யெல்லா மெங்கே தண்ணீருண்டென்று கேட்டுச்சோகமுற்றுப் பிரயாசப்பட்டுத் திரிந்துகாணலைத் தண்ணீரென்றுண்ணவிரும்பிச்சலநப்படும் பேதையோர்க் கொப்பர். ஐயோ! என்றிரங்கா நின்றான். எ-று. இது ஞானப்பிரகாசர் கூறியது.

வாழ்வேவல்லோமெனக்கைதாவென்னுயிர்க்குத்,
தோழனீயன்னை யொப்பார்சொல்லிடவில்லைகண்டா
ய், கோழைமானுடர் தென்னுங் கொலைகளவாதிகொ

ண்டே, சூழும்வார் குழலார்மொய்ப் பச்சுடரெனத்
தோன்றினையே, (௧௫)

(இ-ள்.) வாழவேவல்லைவாமிவலக்கைதா. எ-து. இவ்வுலகத்து ளெம்மைப்போல நீயும்வாழவல்லை வாமதந்திரியே யுன்வலக்கையைத் தருவாயாக,-என்னுயிர்க்குத்தோழன்நீயுன்னையொப்பார்சொல்லிடினில்லை கண்டாய். எ-து. என்னுயிர்க்குத்தோழனீயே யன்றிச் சொல்லுங்காலத்து வேறில்லை கண்டாய்,—கோளழ மானுடர் தீதென்னுங் கொலைகளவாதிகொண்டே. எ-து. மனமில்லாதமானுடர் பொல்லாங்கென்றுசொல்லப்பட்டகொலைகளவு முதலியவற்றை யாங்கைக் கொள்ளுமுறைமைபோலக் கைக்கொண்டு,—சூழும் வார் குழலார் மொய்ப்பச் சுடரெனத் தோன்றினையே. எ-து. சுற்றுமொழுங்கு நீண்டகுழலினையுடையமடவார்சேவித்துப்போத விளக்குப் போலத்தோன்றினாயாதலாற்றோழனீயே. எ-று.

வலக்கைதாவென்றது, பிரியவசனஞ்சொல்லியது. கொலைகளவாதியாவது, கொலைகளவுகட்காமம்பொய் இவையும், காமக்குரோத லோபமோகமதமாற்சரியமுதலியபிறவும். மதுமச்சமாமிசமைதுன முத்திரையென்ற பஞ்சமாபாதகத்துடனே யருந்திச் சுகிக்கிறவன் சமர்த்தனென்பதுகருத்து.

இது வாமதந்திரியுங் கொலைகளவாதியோடு கூடுகையால் உலகத்தனோடு கூடியசமயத்தானென்று கூறிற்று. (௧௫)

கோளறுமானுடர். எ-கு. மித்தாதிக்க முடையோர் என்றார் ஞானப்பிரகாசர்.

சாங்கியனார் மாலெவ்வாடிந்திரன் றெரிவைமாயாற்,
பேசரு ஞானவகைகளெல்லாஞ் செய்தன்றோருபெரியோர்

ரானா, ஆகையாலவர்போனாமுமாகவேவேண்டுமாயி
ன், வாசமார்குழலாரோடும் வல்லவா கூடிவாழ்
மின். (௧௬)

(இ-ள்.) ஈசனாயனார்மாலோடிந்திரன்றெரிவைமார்பா
ல்பே சொனவகைகளெல்லாஞ் செய்தன்றோ பெரியோரா
னார். எ-து. உருத்திரன் பிரம்மா விஷ்ணு விவருடனிந்திர
னும் ஸ்திரீகளிடத்துச் சொல்லவொண்ணாதபடி தலையிற்றரித்
தும்நாவிற்றரித்தும் மார்பிற்றரித்துங்களதமர்சாபந்தரித்து
மற்றுஞ் செய்துமன்றோ பெரியோரென்றெல்லாருஞ்சொல்ல
ப்பட்டார்கள். ஆகையால், - ஆகையால் அவர்போல் நாமுமா
கவேவேண்டுமாயின்வாசமார்குழலாரோடும்வல்லவா கூடி
வாழ்மின். எ-து. அப்படி யவர்களைப்போல வெல்லாராலும்
பெரியோரென்று கொண்டாடப்படுதற்குநமக்குமாசையுண்
டாயின் மணம்பொருந்தின குழலினையுடைய மடவாரோடு
வல்லவண்ணம் வருந்தியும்பொருந்திவாழ்மின். எ-று. ஈசு
வரன், பாகத்திலே யொருத்தியைக் கரந்துஞ் சடையிலே
யொருத்தியைக் கரந்துவைத்தும், பிரமா நாவிலே யொருத்தி
யை வைத்தும் திலோத்தமை காரணமாகப்பிரமித்துத் தேடி
நான்முகனாயும், விஷ்ணு மார்பிலே யொருத்தியை வைத்தும்
பதினாறுபிரங் கோபிகைமகளிரைப்போகித்தும் மற்றும் பர
தாரகமனம்பண்ணியும், இந்திரனகலிகைகாரணமாக வாயி
ரங்கண்ணனாகிய விவ்வாறெல்லாங்காண்க. சமணனுமியக்
கியைக் கூடிக்கொண்டான்றானிலவனாக வேண்டுமென்பது
கருதியெனக்கொள்க. மற்றுமுள்ள தேவருஷிகள் கதைகளு
மறிந்து கொள்ளென்பது கருத்து.

இச்செய்யுள் ஸ்ரீ போகமே திவ்வியமான பதமென்பது கூறிற்று. (க௫)

ஈசனாரயனார்மாலோடிந்திரன் றெரிவைமார்பால், பேசாருவகைகளெல்லாஞ் செய்தன்றே பெரியோரானார். எ-து. மகாதேவரென்னும்பரமேஸ்வரரானவர் பார்வதியாரைவாமபாகத்தில் வைத்தும் கங்காதேவியைத் திருச்சடையிலே தரித்துவைத்தும் மகாவிஷ்ணுமோகினிரூப மெடுத்தபோது அவரைப் புணர்ந்து சாத்தனைப்பெற்றும் தாருகவனத்திருஷிகளுடைய ஸ்திரீகளெல்லாரையு மோகிக்கப்பண்ணியும் சுந்தரமூர்த்திக்காகப் பரவைநாய்ச்சியார்சங்கிலிநாய்ச்சியாரிடங்களில் தூது நடந்தவர்களைக் கூட்டிவைத்தும் இவைமுதலானவநேகம்லீலாவினோதங்களெல்லாம்பண்ணியும், பிரமதேவரானவர் சரஸ்வதிதேவியை நாவிலேவைத்தும் திலோத்தமைகாரணமாக மிகவும் பிரமித்துமோகமுற்றுத்தேடி நான்முகனாகியும் ஊர்வசியைக்கூடி மகருஷியாகிய வசிஷ்டரைப் பெற்றும், அந்தப்பிரமதேவனுக்கு மன்மதனுக்குந்தந்தையாகியநாராயண மூர்த்தியானவர்மகாலக்ஷ்மிதேவியை மார்பில் வைத்தும்பதினாறாயிரங்கோபிகாஸ்திரீகளுடன் பதினாறாயிரந் திருவுருக்கொண்டு போகித்தும் பிரதாபித்தும், முப்பத்து மூன்று கோடி தேவர்களுக்குங் கர்த்தனாகிய தேவேந்திரன் இந்திராணியைத்தொடையிலேவைத்துக்கூடிச்சுகித்தும் அகலிகைபொருட்டாக வாயிரங்கண்பெற்றும், இவர்களெல்லாருடைவாரிடத்து விருப்பத்தாலே சொல்லுதற்கரிய மார்க்கங்களெல்லாம் பண்ணியல்லவோவெல்லாரினுமேம்பட்டுப் பெரியோரானார்கள். இவையல்லாமலுஞ் சுப்பிரமண்ணிய

ரானவர் தெய்வானையைப் புணர்ந்தும், விருத்தப் பிராமண ராகியும் வேங்கைவிருக்ஷமாகி நின்றும் அநேகவிநோத மெல்லாம் செய்து வள்ளிநாயகியைப் புணர்ந்தும், அவ்விருதேவியரையுந்தமதிருபாரிசத்திலேயும் வைத்திருந்து மிகுந்தபோகமநுபவித்தும், இமவான் மேனையைக் கூடிச்சுகித்து ஈஸ்வரருக்குப் பெண்கொடுத்துப் பெரியோனாகியும், மன்மதன் ரதிதேவியைக் கூடிச்சுகித்து ஜகத்தையெல்லாமோகிக்கப் பண்ணுமகத்துவ முடையனாகியும், சந்திரன் அசுவனி முதலிய இருபத்தேழுபெண்களுடன் கூடிச்சுகித்திருந்து மிகுந்ததண்ணொளியுமுடையனாய்ப் பரமேசுரன்றிருமுடியிற் றரிக்கப்பெற்று மகுத்துவமுடையனாகியும், ஆதித்தபகவான் உஷாதேவி பிரத்தியுச்சையென்னுந் தேவியரைக் கூடிச்சுகித்திருந்தும், குந்திதேவியைக் கூடிக்கன்னனைப்பயந்தும், காசிபப்பிரமருஷிவெகுப்பிரயாசைப்பட்டு மாயாதேவியைப் புணர்ந்துசுகித்திருந்து சூரன்முதலோரைப் பெற்றுமேலோனாகியும், பராசரப்பிரமருஷி மச்சகந்தியைக் கூடிச்சுகித்து வேதவியாசரைப் பெற்றும், அகத்தியமாமுனிலோபா முத்திரையுடன் இன்புற்றிருந்தும், சந்திரசூரியர்முதலானோர்போக்குவரவில்லாமல் மிகவுமுயரவளர்ந்த விந்தபர்வதத்தைப்பாதாளத்தூடக்கிச் சத்தசாகரமுஞ் சத்தோதகமாக்கிப்பானம்பண்ணித் திருக்குற்றாலத்தில் விஷ்ணுவிக்கிரகத்தைச் சிவலிங்கமாக்கிப் பொதியமாமலையில் வந்திருந்து பூமியைச்சமன்பண்ணிப் பெரியோனாகியும், மரீசிசம்பூதியைக் கூடிச்சுகித்தும், அத்திரி அநசூயையைக் கூடிச்சுகித்தும், புலகன்கமையைக் கூடிச்சுகித்தும், புலத்தியன் பிரீதியைக் கூடிச்சுகித்தும், சத்தகிருதுசந்ததியைக் கூடிச்சுகித்தும், அங்கிரர் மிருதியைக்

கூடிச்சுகித்தும், வசிஷ்டர் அருந்ததியைக்கூடிச் சுகித்தும் குறுங்கியைக்கூடிச் சத்தியமாமுனியைப்பெற்றும், இங்ஙனங் கூறியசத்தவிருடிகளுந் தங்கண் மங்கையரைக் கூடிமகிழ்ந்தும் பெரியோராகியும், பிருதமாமுனி*திவ்வியையைக் கூடிச்சுகித்தும், கௌதமருஷியகலிகையைக் கூடிச்சுகித்தும், குச்சரமாமுனி புத்திரரான மிருகசிருங்கர் சத்தியமாமுனி மக்கள் சவுத்தை முதலான நால்வரையுமணஞ்செய்து கூடிச் சுகித்தும், காம்பிலி தேசத்துச் சௌபரியென்னும் பெரியோன் பொய்கைக்குள்ளே பன்னிரண்டு வருஷ மூழ்கியிருந்து மிகுந்ததபசு பண்ணிக் கொண்டிருக்கிற காலத்திலே சமவதமென்னும் வாளைமீன் மனைவி மக்களொன்றுஞ் சுற்றத்தாருடன் கூடிக்களித்துச் சுகித்திருத்தலைக் கண்டு நாமுமிப்படிக் கூடிச்சுகித்துப்பிரதாபிக்கவேண்டுமென்று வாஞ்சித்து விவேகஞானம் வந்தும் தபசைவிட்டுப்பொய்கையிலின்றும் நீங்கிவந்துமனுவம்சத்தின் மாந்தாதாவென்னு மஹாராஜாவின்மக்கள்ஐம்பதின்மரையுமணஞ்செய்துமகிழ்ந்துஞ் சுகித்திருந்தும் பெரியோனாகியும்'பாளியென்னும்பெரியோன் கலன்கழிமகளிரானவிராஜ ஸ்திரீகள் ஆயிரவருடன் கூடிப் போகித்து மகிழ்ந்திருந்து மேம்பாடுழந்தும், திருப்புகலூரில் போகநாதஸ்வாமியென்னும்பெரியோன்விரஸ்திரீயுடனேகூடிப்போகித்திருந்துஞ் சித்திபுருஷனாகியும், தர்மபுத்திரராதியான பஞ்சபாண்டவருந் தம்பியுடையஸ்திரீயென்றுந் தமயனுடைய ஸ்திரீயென்றும் விசாரியாமல் திரௌபதி யென்னுமொரு பெண்ணுடனே கூடிச் சுகித்திருந்து மஹாராஜாக்க

---

* பிருகுமுனிவர்மனைவிபுலோமை என அவராற் கூறப்பட்ட பார்க்கவபுராணமென்னும் விநாயக புராணம் கூறுகின்றது. பிருகு கூறியது பார்க்கவம்.

ளாகி, தேச முழுதும் பரித்துப் பெரியோராகியும் அரிச்சந்திரன் முதலான மேலான வரசரெல்லாரும் ஸ்திரீயுடனே கூடிச் சுகித்திருந்தும் பெரியோராயினர் என உங்கள் புராண சாத்திரங்களே சொல்லும். அவைகளை யெல்லாருங் கேட்டறிந்திருந்து மானுடர், யானை குதிரையாடு மாடுபக்ஷி இவை முதலான சகல ஜீவன்களும் ஸ்திரீபுமான்களாகக் கூடிச் சுகித்திருப்பதை யறிந்திருந்தும், அன்றியென்றும் பக்ஷி தனது பேட்டுடனேகூடி முகத்தோடுமுகம் வைத்திருக்கையிலே சற்றேமுகத்தைவிட்டு நீங்கினபோது அந்தவன்றிலானது மிகவுந்துக்கித்துக் கூப்பிடுதலும் பின்பந்தப்பேட்டின் முகத்திலே தன்முகம் வைத்தவுடனே கூப்பிடுதலுக்துக்கமு நீங்கிச் சுகித்திருத்தலை யறிந்திருந்தும், அந்தப் பக்ஷிக்குள்ள வறிவு மில்லாமல் பிரத்தியக்ஷ வின்பமா யிருக்கிற ஸ்திரீபோகத்தைவிட்டறிவில்லாமல்மறுமையுண்டென்றெண்ணிக் கெட்டுப்போகிற பேருக்கேயோவென்ன சொல்லப்போகிறேன். மோக்ஷத்திற்குப்பெயர்கலியாணமென்றும்நிருவாணமென்றுநீங்களே சொல்லுவீர்களே? ஸ்திரீயைக்கூடியின்பமநுபவித்தற்பொருட்டு மங்கலியந் தரிப்பதற்குக் கலியாண மென்றும் பின்பவளைக்கூடியநுபவிக்குங் கிரியைக்கு நிர்வாணமென்று பெயருண்டாயிருத்தலாலும், இவைதம்மையே மோக்ஷமென்றறியாமல் வேறுமொருமோக்ஷமுண்டென்றெண்ணலாமோ புன்சமயத்தாரென்னை யறிவிலாதவனென்றும் கிருபையிலாதவனென்றும் விசாரியாமற்சொல்லுவார்கள்; இவ்விரண்டு முடையவனுனேயெல்லாமறிந்தஎல்லாரிடத்துமுள்ள கிருபையினாலே யெல்லாருங் கெட்டுப்போகாமலிரங்கி யின்னமுஞ் சொல்லுகிறேன் கேட்பீராக். "கண்ணுதலியோகிருப்பக் காமனின்றிட வேட்கைக்கு, விண்ணூறு

தேவராதி மெலிந்தமை யோரார்மாறு, னெண்ணிவேண்மை
தனையேவவெரிவிழித்திமவான்பெற்ற, பெண்ணினைப் புணர்
ந்துயிர்க்குப்பேரின்ப மளித்ததோரார். என்றிப்படியுங்கள்
டரமேச்சுரரானவர் பார்வதியாரைப்பிரிந்துபோயோகத்தி
லிருக்கும்போது பிரம விஷ்ணு இந்திராதிதேவர்கள் முத
லான சகலஜனங்களும்ஸ்திரீ கூட்டரவில்லாமல் வருத்தமுற்
றார்களென்றும் உம்முடையசுவாமி பார்வதியாருடன் கூடிப்
பின்பு முன்சொன்ன பேரெல்லோருக்கும் ஸ்ரீ புணர்ச்சியு
மதனால்வரும்பேரின்பமு முண்டாக்கினாரென்றும் நீங்களுண்
டென்கின்றவுங்கள் நூலிலேநீங்கள்சொல்லுதலாலும், "ஞான
த்தாலென்னுடைய ஞானநானன்றனவானையபிராவத நானு
ச்சிரமத்தில்லறநான், கான முறுபறவைகளிற் கருடனுன்கதி
யதனி லீனமிலாமுத்திநானிராக்கதனி னிருதிநான்" என்றிப்
படிபாச்சிரமநான்கினுள்ளும் ஸ்திரீயுடன் கூடிச்சுகித்திருக்கு
மில்லறமானது நாமென்றுகருஷ்மாக வுங்கள் சுவாமி உங்
கள் சிவகீதையிற் சொல்லியிருத்தலாலும், உங்கள் திருநாவுக்
கரசுதம்பிரானென்னும்பெரியோரானவர் "பாறிறைய்ப் பாறி
நெஞ்சேபன்றிபோலளறுபட்டுத், தேறிநீதெள்ளியையாகில் சிவ
சசிதிண்ணமாகும், ஊறலேயுவர்ப்புநாறியுதரமே யொழு
கும் வாயில், கூறையான் மூடக்கண்டுகோலமாய்க் கருதி
னையே" என்றும், "பெண்டிர்மக்கள் பெருந்துணை நன்னிதி,
யுண்டென்றெண்ணியு வப்புறுமேழைகாள், கண்டுகொண்
மினோகானூர் முளையினைப், புண்டரீகப் பொதும்பிலொதுங்
கியே" என்றும்இப்படி விசாரியாமல் இவைகளைவெறுத்தோ
திப் பின்பு, "கனியினுங்கட்டிபட்ட கரும்பினும், பனிமலர்க்
குழற்பாவைநல்லாரினுந், தனிமுடிகவித்தாளுமரசினும், இனி
யன் றன்னடைந்தார்க் கிடைமருதனே. என்றும் ஸ்ரீபொகமு

தலானபோகங்களை யுத்கிருஷ்டமாகப் பிற்பாடெல்லாம்விசா
ரித்தறிந்தோதித்தேவாரந்திருவுளம்பற்றியிருந்ததனாலும், சுந்
தரமூர்த்திநாயனாரானவர்ஈஸ்வரப்பிரமாதிகளுக்கு மரியரா
ய்ப் பசுபதியென்னும் பெயரினையுடையராய்த் தமக்குச்
சுவாமியாயிருக்கிறபரமேஸ்வரரைத் தூதுசெல்லவிடுத்துப்
பரவை நாய்ச்சியாரையுஞ் சங்கிலிநாய்ச்சியாரையுங் கூடிப்
புணர்ந்து சுகித்தும் பெரியோராகியும், நீங்கள் விசுவாச
மாகப் பத்திபண்ணுமாணிக்கவாசகமூர்த்தியென்னும் பெரி
யோர் "குரவுவார்குழலார்திறத்தேநின்றுகுடிகெடுகின்றேனை"
என்றும் "வெஞ்சேலனைய கண்ணார்தம் வெகுளிவலைப்படப்
பட்டு, நைந்தனையேன்" என்றும். "தையலார்மையலிலே
தாழ்ந்துவிழக்கடவேனை" என்றும், "கொழுமணிபோர்நகை
யார் கொங்கைக்குன்றிடைச் சென்று குன்றிவிழுமடியேனை
விடுதிகண்டாய்." என்றிவைமுதலானவனேகந்திருவாசகங்கள்
ஸ்திரீகளைவெறுத்தோதியிருந்தும் பிற்பாடெல்லாம் விசாரி
த்து நன்றாகவறிந்தும் சகலரும்பிழைக்கும் பொருட்டுத்திருவு
ளத்திலே கிருபையுற்றிரங்கி மடவரலியாரையும் அவர்
களைச் சுகிக்கும் போகங்களையும் அநேகவிதமாகப் புகழ்ந்தும்
திருச்சிற்றம்பலக்கோவை யென்னுஞ் சிறப்புநிறைந்த நூல்
நானூறுகலித்துறையாகவோதினமையானும்; திருவள்ளுவரெ
ன்னும் பெரியோர் அறப்பால் பொருட்பால் இருவகைமுறை
மையு மோதிப்பிற்பாடு காமத்துப்பாலிலிருந்த கிருபையி
னாலே மிகவுஞ் சிறப்பித்து விரித்தோதியருளினமையானும்,
மற்றுநாலுமார்க்கங்களினும்ஸ்திரீ கூட்டரவில் வருமேலான
வின்பமே மெய்யென்றும் இஃதன்றிச் சொல்லப்படுவன
வெல்லாமித்தையென்றுங் கூறியதறிக.--ஆசையாலவர்போனு
மூடாகவே வேண்டுமாயின் வாசமார்குழலாரோடும்வல்லவ

கூடிவாழ்மின். எ-து. ஆனபடியினலேசசஞர்முதலானபெரியோர்களைப்போல் நீங்களுமிருந்தசிறப்புடைத்தாய்ப் பேர்பெற்றுக்கிரீடித்திருக்க விரும்பினீர்களானுல் சுகந்தநிறைந்த குழலினையுடையஸ்திரீகளுடனே விருப்பொடுகூடிப் புணர்ந்து சுகித்துவல்லவாறு வாழ்வீர்களாக. எ-று.

இவ்வுரைஞானப்பிரகாசரியற்றியது.

"தையலாருடலாடத்தாமவரோடுங் கூடிச், செய்யதாமரையை வென்றசீறடி செம்பஞ்சூட்டி, மெய்யெலாம்பாதஞ்சூடும்வேடத்தார்மெய்யிற்கூடா, மையன் மானுடர்பொய்மார்க்கவேடத்தேமாய்கின்றாரே (கஎ)

(இ-ள்.) தையலாருடலாடத்தாம்அவரோடுங்கூடி. எ-து. மகளிருடனகாலத் தவ்வுடலை நீக்கியவரோடுங்கூடி,—செய்யதாமரையைவென்றசீறடிசெம்பஞ்சூட்டி. எ-து. தாமரையினது சிவப்பையொப்பழித்தபாதத்தைச்செம்பஞ்சூட்டி,—மெய்யெலாம் பாதஞ்சூடும் வேடத்தார்மெய்யிற் கூடாமையல் மானுடர் எ-து. அவரதடிகளாற் றமதுகாயமெங்கும் புனைந்துகொள்ளும் வேடத்தினிற்பவராகியவுலோகாயதருண்மையிற்கூடாதமயக்கத்தையுடையமனுடர்,—பொய்மார்க்கவேடத்தேமாய்கின்றாரே. எ-து. பொய்வழியாகிய தவவேடத்தைப்புகுந்து மாயாநின்றார்கள். எ-று.

இச்செய்யுள், தவவேடத்தையிழித்துப் பொய்யென்றும் உலோகாயத மெய்யென்றுங் கூறிற்று. (கஎ)

மையன்மானுடர். எ-கு. ஜகத்தாரைமயக்கஞ்செய்யுமானுடருடைய, என்றும், பொய்மார்க்கவேடத்தேமாய்கின்றாரே. எ-கு. பொய்வழியாகிய வேடத்தை மெய்யென்றுமாய்

கின்று றறிவற்றோ, என்றும் விசேடித்தனர் ஞானப்பிரகா
சர்.

வாசமார்குழலினார்கண்மணியல்குற்றடத்தேமூழ்கி,
நேசமார்குமுதச்செவ்வாயமுதினைநிறைய வுண்டு
தேசுலாமணிமென்றோண்மேற்சேர்ந்து வீற்றிருந்தி
டாதே, மாசுலாமனத்தோரெல்லாமறுமை கொண்
டழிவர் மன்னே.

(இ-ள்.) வாசமார்குழலினார்கள்மணியல்குல்தடத்தே மூழ்கி. எ-து. மணம்பொருந்தின குழலினையுடைய மடவார்களது ரத்தினத்தினாலமைக்கப்பட்ட மேகலைபொருந்தின அல்குலென்னுந்துறையின்மூழ்கி, — நேசமார்குமுதச்செவ்வாய் அமுதினைநிறையவுண்டு. எ-து. சிநேகமிகுதியையுடையவாரு ஆம்பல்போலுஞ் சிவந்தவாயினினூறுமமுதத்தைப்பருகி,— தேசுலாமணிமென்றோண்மேல்சேர்ந்து வீற்றிருந்திடாதே, எ-து. ஒளிவீசியமணியினையுடைய மெல்லியதோண் மீதணைந்துவாழ்ந்திருந்திடாதே, — மாசுலாமனத்தோர்எல்லாமறுமைகொண்டழிவர்மன்றே. எ-து. குற்றஞ்சேர்ந்தமனத்தையுடையபரசமயிகளெல்லா மறுமைப்பயனுண்டென் றழிவார்கள். எ-று. நேசமாதல் சிநேகமிகுத்தல். தேசு விளக்கம். மாசுலா மாசுசேர்தல். மன்னு மோவு மசை. நிராடிப் போசநம்பண்ணிச்சுகத்துடனிராது பிறப்புண்டென்றுவியாகுலப்படுவதென்னென்பது கருத்து.

இச்செய்யுளிம்மைப் பயனாய பெண்போகமெய்யென்றும் மறுமைப்பயனாய சுவர்க்கம்பொய்யென்றுங் கூறிற்று. (௧௫)

மாசுலாமனத்தோர். எ-கு. மயக்கம்பொருந்தியமனதினையுடையோர், என்றார் ஞானப்பிரகாசர்.

மதிநிலாநுதலாரோடுமணிநிலாமுன்றிலேறி,முறுவல் நிலாவெறிப்பச் செவ்வாயிளநிலாமுகிழ்ப்ப மொய்த்த கதிர்நிலாவடங்கொள் கொங்கைக்கண்கண்மார் பகல மூழ்கும், புதுநிலாவியநன்போகம்விடுவர்புன்சமயத் தோரே.

(இ-ள்.) மதிநிலாநுதலாரோடுமணிநிலாமுன்றிலேறி என்-து. மதிபொருந்தியநுதலினையுடைய மாதரோடுங் கூடி யொளியையுடைய முன்றிலிற்சென்றேறி, — முறுவல்நிலா எறிப்பச்செவ்வாயிளநிலாமுகிழ்ப்பமொய்த்தகதிர்நிலாவடங் கொள்கொங்கைக் கண்கள்மார்பகலமூழ்கும்புதுநிலாவியநன் போகம்விடுவர் புன்சமயத்தோரே. என்-து. பூரணச்சந்திரன் விட்டுவிளங்க வவரதுசிவந்தவாயிலகை யொளிதோன்றச் செறிந்தவொளிமிக்க முத்துவடத்தைத் தாங்கிய முலைக்கண் கள் தமதுமார்பகலத்தே மூழ்கும்படி யமுந்தியநுபவித்து நாடோறும் புதுமைதங்கிய நல்லவநுபோகத்தைக் கைவிடு வார்க ளிவ்வழுநில்லாத வவமாயசமயத்தார். என்-று.

இச்செய்யுள் ஸ்ரீபோகமாகியவநுபவசுகத்தைக் கூறிற்று. ()

ஊடுவதுணர்வ துற்றகல்விமங்கையைப்புல்கி, வாடுவ தடியில்வீழ்ந்து வருந்துவ தருந்தவப்பயன்,கூடுவதுணர் வு கெட்டுக்குணமெலாம் வேட்கையேயாய், நீடுவ தின்பமுத்தியித்தினின்றார்கண்முத்தர். (உ௰)

(இ-ள்.) ஊடுவதுஉணர்வது உற்றகல்விமங்கையைப்புல்கிவா டுவதுஅடியில்வீழ்ந்துவருந்துவதுஅருந்தவம். என்-து. கல்விபொ ருந்தின மாதர்தம்முடன்புதிதாகக் கூடியபோதனை நினைத்து

தம்மோ டூடுவதாலு மவரையூடறீர்ப்பது பொருட்டாகத் தளர்தலு மவர்களடிகளிலே வீழ்ந்து வருந்துவதுமே யரிதாகச்செய்யுந்தவமானது — பின்கூடுவது உணர்வுகெட்டு. எ-து. அப்படித்தவத்திலின்றபின்பு அந்தமகளிரோடுந் தன்னறிவு கெட்டுக்கூடுவதுமுத்தியாம், — குணமெலாம் வேட்கைமேயாய் நீடுவது இன்பமுத்தி இத்தில் நின்றோர்கள்முத்தர். எ-து. இந்திரியங்களெல்லா மொருமைப்பட விருப்பம் நிலைபெறுவது முத்தியின்பமாவது, இவ்வழியிலே நின்றவர்களே முத்தராவர். எ-று. இன்பமுத்தியென்பதனை முத்தியின்பமென மாறுக.

இச்செய்யுள், ஸ்ரீபோகத்திற்றவமு முத்தியு முத்தியின்பமென்னுமுறைமையு மிதிலேநின்றவர்களே முத்தராவரென்பதுங் கூறிற்று. இதனாற்சொல்லியது, அறிவுந் தவமு மோக்ஷமுமிது வென்பது. (௨௭)

ஊடுவதுணர்வதுற்றகல்வி. எ-து. மடவார்—ஊடற்போதின்னதினாலேயிவளுங்கலாய்ப்புற்றாளென் றறிவதே மிருந்த கல்வி, என்றும், மங்கையரையுள்கிவாடுவதடியில் வீழ்ந்து வருந்துவதருந்தவம்பின். எ-து. அவர்பிணக்குற்றபின்னரம் மாதரையே நினைத்துக் கொண்டிருந்து வாட்டமுறுவதும் அவரடித்தலங்களில் வீழ்ந்துகிடந்தவருடல் தீர்க்குமகிழ்வுற்றுக் கூடும் பொருட்டு வருந்தாநிற்பதுமே யரிய தபமாகும், என்றும். கூடுவதுணர்வுகெட்டுக் குணமெலாம் வேட்கையாகி நீடுவதின்பமுத்தி. எ-து, குணமெல்லாமின்பவிருப்பமேயாய்க் கலவியில் வருங்காமாநுபவமாய் அறிவழிந்து கூடுவதுநீட்டித்துநிற்பதுமேலானவின்பத்தை விளைக்கு முத்தியாகுமென்றும் பிரித்துரையோதினர் ஞானப்பிரகாசர்.

மற்றோருரையாசிரியர்,ஊடுவது. எ-று. மடவார்களூடலைச் செய்யத்தாமவ் வூடலுக்குடன்படுதலும்,—உணர்வது. எ-து. அவ்வுடலைத் தீர்த்தலுமாகிய விரண்டும்,—உற்றகல்வி, எ-து. கற்றற்குரிய கல்வியாம்,—மங்கையரையுள்கி வாடுவதடியில் வீழ்ந்து வருந்துவதருந்தவம். எ-து. பிரிந்தகாலத்தில் மடவாரை நினைந்துடல் மெலிவதும் பிரிந்துவந்த காலத்திற் புலவிமிகுதியாலவருடைய பாதங்களிற்பணிந்து புணர்ச்சிக் குடன்படுமளவுமனம் வருந்துவதுமாகிய விரண்டுஞ் செய்தற் கரிய தவங்களாம்,—பின். எ-து. புணர்ச்சிக்குடன்பட்ட பின்பு,—கூடுவதுணர்வுகெட்டுக் குணமெலாம் வேட்கையாகி நிடுவது. எ-து. அவரோடுபுணர்வதும் புணர்ச்சியிலறிவுலயம் பட்டைம்பொறிகளு மாசைவடிவாய் நிலைபெறுவதுமாகிய விரண்டும் —இன்பமுத்தி. எ-து.மோக்ஷஇன்பமாம், என்று பிரித்துரையுரைத்திருக்கின்றனர். இவ்வுரையின் வித்தியாசங் களை யூகித்தறிக.

விட்டினையுளதென்றோடிமெலிவதிங்கென்னை வீடு, காட்டினோர் கண்டோர் கேட்டோர்களியவை யுண் டேற்காட்டீர், நாட்டினிலரசனாணைக்கிசையவே நட ந்துநாளு, மீட்டியபொருள் கொண்டிங்கேபின் பத்து ளிசைந்திடீரே. (உக)

(இ-ள்.) விட்டினையுளதென்றோடிமெலிவதிங்கு என்னை. எ-து. காணப்பட்ட பெண்போகத்தையநுபவியாது வேறே வீட்டின்பமுளதென்றுதடுமாறிமெலியுந்தவத்தைச் செய்வதி யாது,—வீடுகாட்டினோர் கண்டோர் கேட்டோர் களியவை யுண்டேல்காட்டீர். எ-து. அந்தவீட்டினைக் காட்டினவர்களை யுங் கண்டவர்களையு மதனைக்கேட்டவர்களையு முண்டாகிற்

சாக்ஷிகாட்டீர். அது காட்டமாட்டீராகையால், — காட்டினீரா சன் ஆனைக்கு இசையவே நடந்து நாளும் ஈட்டிய பொருள் கொண்டிங்கே இன்பத்தினைச் சிடிரேள-து. உலகத்தினீர் ஞானி ளுக்கிணை வழியிலே நடந்து நாள் போறத் தேடிய பொருள் கொண்டு ப்பிரத்தியக்ஷமான இன்பத்தை இவ்விடத்திலே பொருந்துவீராமின். எ-று.

இந்திரபுரோகிதனென்னுஞ் செய்யுண் முதலிச் செய்யுட்காறு மிருபத்தொன்றினாலு முலோகாயதன்மதங் கூறிற்று. தத்துவ முங்குணமுமவத்தைகளுங் காரணங்கள் முதலானவையும் மதத் தாலிற் கண்டு கொள்க. (௨௧)

உ லோகாயதன்மத முற்றிற்று.

பாயிரமுட்படசெய்யுள் - ௩௧.

உ லோகாயதன்மதமறுதலை

உள்ளதாவதுகண்டதென்றுரைகொண்டதென்றுலகத்துநீ, பிள்ளையாய்வளர்கின்றநாள்றனைப்பெற்றதாயொடுதந்தையைக், கள்ளமேபுரிகாலனுருபிருண்ணவின்றெருகாலையாய், மெள்ளவேயுளதென்று கொண்டிவிரும்புமாறு விளம்பிடே. (௧)

(இ-ள்.) உள்ளதாவதுகண்டதென்றுரைகொண்டதென்றுலகத்து. எ-து. உலோகாயதா? நீயுலகத்திற் காட்சியே மெய்யென்று மனுமானமுதலிய பொய்யென்றுங் கொள்ளப்பட்டதென்னை, — நீபிள்ளையாய்வளர்கின்றநாள்ளனைப்பெற்றதாயொடுதந்தையைக் கள்ளமேபுரிகாலனுண்டார். உயிருண்ணலின்

ஒருகாளையாய்மெள்ளவேயுளரென்றுகொண்டுவிரும்புமாறு விளம்பிடே. எ-து. நீபிறந்துவளர்கின்றநாளிலுன்மாதாவி னுயிரையும் பிறப்பதன்முன்னுன்பிதாவினுயிரையுங் கட்புல னாற்காணாத்தொழிலைப்புரியுமியமன்கொண்டுபோகநீயிளமை நீங்கியறிந்தபின்பு மாதாபிதாக்கமக்குண்டென்றுமெல்லக்கரு தியநெறி நீகூறியகாட்சியன்று, அனுமானமேகாண். எ-று. கள்ளமேபுரிகாலனார், எ-து. இயமன்றொழில் கட்புலனாகா மையின். உண்ணல்கோடல் விரும்பல்கருதல்.

இச்செய்யுள் உலோகாயதன்கூறியமதத்தை முறையானே மறுப்பானெடுத்துக்கொண் டவன் காட்சியளவையேயுள்ள தென்பதனைமறுத் தனுமானமுண்டென்பதுகூறிற்று. (க)

இடித்துமின்னியிருண்டுமேகமெழுந்தபோதிது
பெய்யுமென்,றுடுத்ததும்மகில்சந்தமுந்தியலைத்துவார்
புனலாறுகொண், டெடுத்துவந்திடமால்வரைக்கணி
ருந்துகொண்டல்சொரிந்ததென்று,முடித்ததும்மிவை
காட்சியன்றனுமானமென்றுமொழிந்திடே. (உ)

(இ-ள்.) இடித்துமின்னியிருண்டுமேக மெழுந்தபோதிது பெய்யுமென்றுடுத்ததும். எ-து. மேகமானதுமுழங்கியமின் னியுமிருண்டும்பரந்தெழுந்தவிடத்திதனான்மழைபெய்யுமென் றநினைப்புண்டானதும், — அகில்சந்தமுந்தியலைத்துவார்புன லாறுகொண்டெடுத்துவந்திட. எ-து. ஆறானதகில்சந்தனமுத லியவற்றைத்தள்ளி யலைந்தொழுகுநீரைக்கொண்டுவந்திட,- மால்வரைக்கணிருந்துகொண்டல் சொரிந்ததென்று முடித்த தும். எ-து. அதனைக்கண்டு பெரியமலையினிடத்தேமேகமிரு ந்துவருஷித்ததென்றநினைந்துநிச்சயித்ததும்,— இவைகாட்சி

யென்றனுமானமென்றுமொழிந்திடே, எ-து. இவையிரண்டு நீகூறியகாட்சியல்ல வனுமானமென்றுகூறுவாயாக.

இச்செய்யுள் மேகத்தின்றோற்றமு மதனுடைய விகற்பமுங் காரண அநுமானமென்றும், வெள்ளங்கண்டு மலைத்தலையில் வருடமுண்டென்று காண்கை காரியஅநுமானமென்றுங் கூறிற்று.

காண்டலோவநுமானமாவதுங் காட்சிமுன்னதுங்
காட்சியேற், பூண்டபூத வுடம்பினுள்ளெழு போத
மென்கொடுகண்டனை, மாண்டவாயின்மனங்கொண்
ஞானமுணர்ந்ததுமநுமானமென், றீண்டுபூதமியை
ந்ததிவ்வுடலென்பதென்பிரமாணமே. (ரு)

இ-ள்.) காண்டலோவநுமானமாவதுங் காட்சிமுன்னதுங்காட்சியேல். எ-து. நீ யநுமானமென்று கூறப்பட்டதுங் காட்சியே, அவை பூர்வக்காட்சியாகையால் பூர்வக்காட்சியுங் காட்சியென்று நீகூறில்.—பூண்டபூதவுடம்பினுள்ளெழு போதமென்கொடுகண்டனை. எ-து. பூதக்கூட்டத்தினுள் ளோரறிவெழுமென்று கூறியதநுமானமன்றியாதுகொண்டுகண்டனை. அன்றியும்,— மாண்டவாயின்மனங்கொண் ஞான முணர்ந்ததும்மநுமானமென்று. எ-து. சத்தாதிகளைப் பொறியிடமாக நின்றறியுமென்னு மறிவுங்காட்சியல்ல, வநுமானமென்றுகொள்வாயாக;— ஈண்டுபூதமியைந்ததிவ்வுட லென்பதென்பிரமாணமே. எ-து. இஃதன்றிப் பிரமாணமுமில்லையென்று கூறுவை. அங்ஙனங்கூறிற், பூதக்கூட்டத்தி னுருத்தோன்றுமென்று கூறியதியாது. உன்காட்சியு மநுமானப் பிரமாணமேயென் றறிவாயாக. எ-று.

இச்செய்யு ளநுமானமில்லையென்றுகூற மீளவுமறுத் தலை யநுமானமுண்டென்றுகூறிப் பிரமாண மூன்றென்பதற் கோரெல்லைகூறிற்று. இவ்விடத்துப் பூதங்களின்கூட்டத் துடம்பாமென்றுசொல்லிய தெந்தப்பிரமாணத்தா லநுமானத்தா லெனக்கொள்க. ஆதலா லிலிங்கத்தைக்கொண் டிலிங்கியை யூகிக்கிறஞான மநுமானமெனக்கொள்க.

இம்மூன்றுபாட்டானு மநுமானமுண்டென்று சாதித்த தெனக்கொள்க. (௩)

காண்டலோ வநுமானமாவதுங் காட்சிமுன்னதுங் காட்சி யேயல். எ-து. பிரத்தியக்ஷத்தைத்தானே வநுமானமென்று சொல்வது; ஏனென்னில் முன்பே மலையிலே மழைபெய்யக் கண்டு பிற்பாடதனால்வருகிறவெள்ளத்தையுங் கண்டவனல் லோ பின்புமொருவிசை வருகிற வெள்ளத்தைக்கண்டு மலை யிலே மழைபெய்ததென்றறிந்தான், ஆதலால் நீ யநுமானமெ ன்றதும் பிரத்தியக்ஷமென்கிறாயாதலால், காரியகாரணாநுமான வகை நீயறியாயாதலா லின்னஞ்சொல்லுகிறோம். என்றுவிரி த்துரையோதினார் ஞானப்பிரகாசர்.

பழுதிலாமறைகண்ட நூல்பழுதின்றியுண்டதுபாரி ன்மேன்,மொழிவர்சோதிடமுன்னிபின்னதுமுடியுமெ ன்பதுமுன்னமே, யழிவிலாததுகண்டனம்மவையன் றியுஞ் சிவாகமங்களி, னெழுதியோர்படியென்று கொண்டிருந்திடியெடுப்பதுமெண்ணிடே. (௪)

(இ-ள்.) பழுதிலாமறைகண்ட நூல்பழுதின்றியுண்டதுபா ரின்மேன் மொழிவர்சோதிட முன்னிபின்னது முடியுமென் பது முன்னமே யழிவிலாததுகண்டனம். எ-து. குற்றமில்

லாத வேதமுதலாகிய நூற்கள் குற்றமின்றிச்சொல்வனவுள. அஃதெங்ஙனமெனின், பூமியின்கட் சோதிடநூலோர்கருதி நிகழ்காலத்தினின்று மெதிர்காலத்துவினையை முன்புகூறுகிற்பர்கள். பின்பதுவு மழிவில்லாததாகக் கண்டனம்,—அவையுன்றியுஞ் சிலவாகமங்களி னெழுதியோர்படியென்று சொன்னஒரு நிதியெடுப்பதுமெனினிடே. எ-து. அவையொழிந்துஞ் சிலநூற்பிரமாணத்தினுள்ளபடியை யெடுத்துக்கொண் டிறந்தகாலத்தில் வைக்கப்பட்டுப் பூமியின்கண் மறைந்திடக்கும் பொருள்களையுமெடுக்கப்படும், அவை நூற்பிரமாணமேயென் றறிவாயாக. எ-று.

இச்செய்யுள் ஆகமப்பிரமாணத்தின் டென்றுகூறிற்று.

உள்ளதாவதென்னுஞ் செய்யுள்முதல் லிச்செய்யுட்காறுமொருதொடர். (௪)

சோதிடநூலோ ரெதிர்காலத்துவினையைச் சொல்லுதலாவது இன்னகால மிவ்வளவு இன்னகிரணந்தீண்டுமென்றும், உற்பாதங்கள் வருமென்றும், இன்னகால மழைபெய்யுமென்றும், இத்தனைகால மழையில்லையென்றும், இவள்பெறப்போகிற பிள்ளை யாண்பெண்ணென்றும், பிறந்தபிள்ளைக் காயுளிவ்வளவென்றும், மரணபரியந்தம்வருஞ் சுகதுக்கங்களுமிலாபச்சேதங்களுந் தொழிலு மித்தியாதியான முறைமைகளைச் சொல்லுதல், சிலசாத்திரப்படி பூமியிற்கிடந்தபொருளையெடுத்தலாவது, அச்சாத்திரவழிகூட்டிய அஞ்சனமெழுதிப்பார்த்தெடுக்கும்பொருளை என்றார் ஞானப்பிரகாசர். ஜோதிடசாத்திரப்படி பொருள்முதலிய பூமியிற்கிடப்பதை யெடுப்பதுமுள, அவை பிமேசுர உள்ளமுடையான்முதலிய ஜோதிடநூற்களில் ஆரூடபாகத்திற் சொல்லியகாண்டத்திற்காண்க.

பூதமானவை நித்தமென்று புகன்றதென்னை யுரு
க்களா, யாதலோடழிவாகுமாதலினாக்குவோரவர்வே
ண்டிடும், காதலோடுகெடாதிமண்கொடியற்றுவோரு
ளர்கண்டனஞ், சீதநீரிலெழுந்தகொப்புணிகழ்ந்தமா
ருதச் செய்கையே. (௫)

(இ-ள்.) பூதமானவைநித்தமென்றுபுகன்றதென்னை. எ-று. பூதநான்கு நித்தமென்று மழியாதவியல்பையுடைத்தென்றுங் கூறியதென்னை?—உருக்களா யாதலோடழிவாகுமாதலி னாக்குவோரவர்வேண்டிடும். எ-று. பூதக்கூட்டத்தி னுருத்தோன்றுதலுங்கெடுதலுமுண்டாதலா லிவைநித்தமன்றியிவை கூட்டுவானொருகர்த்தா வேண்டும். அஃதென்போலவெனின்,—காதலோடுகெடாதிமண்கொடியற்றுவோருளர்கண்டனம். எ-று. நீயுவமைகூறியகடாதிகளையு மண்ணைக்கொண் டுண்டாக்குவானைக்கண்டலால்.—சீதநீரிலெழுந்தகொப்புணிகழ்ந்தமாருதச்செய்கையே. எ-து. நீரிடமாகக்குமிழிதோன்றுமாபோல மனமுதலாயின தோன்றுமென்றுகூறினாய்; குமிழியும்வாயுவானுண்டாம். ஆகையா, லுருவிடத்திலும் மனமுதலானவற்றைக் கூட்டுதற்கொருகர்த்தா வேண்டுமென் றறிவாயாக. எ-று.

இச்செய்யுள் முறையானே பூதங்கணித்தமென்பதனையு மவற்றின்கூட்டத்தானுருக்கடோன்றி யவ்வுருக்களிற் புத்திமுதலாயின தோன்றுமென்பதனையுமறுத் திதனையாக்குவானொருகர்த்தாவுண்டென்றுங்கூறிற்று. (௫)

நீரின்வந்தெழுகொப்புணீரதுவாயெழுநிகழ்பூத
முமோரின்வேறுணர்வாயெழாவவைபூதமாகி யுதித்
திடுந்தேரினூறடைகாய்செறிந்தவை சேரவேறுசிவப்

பெரும்பாரினிற் பிரியாதுபுந்திபழிப்படம்பு கிடக்க
வே. (௬)

(இ-ள்.) நீரினவந்தெழுங்கொப்புளீரது வாயெழுந்திகழ் பூதமுமோரின்வேறுணர்வாயெழாவவைபூதமாகியுதித்திடும். எ-து. நீரின்கண்ணே தோன்றுங் குமிழியுநீராமாறுபோல, விளங்கியபூதமும்விசாரிக்குமிடத்து வேறாகவறியுமறிவாகாது காயபூதமேயாம்.--தேரினூறடைகாய்செறிந்தவைசேரவேறு சிவப்பெழும். எ-து. அன்றியும், நூறுங்காயுமடையுங்கூடி யவைகலந்தவிடத்தொரு சிவப்புண்டாமாபோலப்பூதக்கூட்டத்தி னொருறிவெழுமெனக்கூறியது, — பாரினிற்பிரியாது. எ-து. பூமியிடத்துச்சிவப்புச்சேர்வையைநீங்காது,—புந்தி பழிப்புடம்புகிடக்கவே. எ-து. அச்சேர்வைபோலப் புத்தியு மவ்வுடலைவிட்டுநீங்காதாகவேண்டும். அங்ஙனமன்றி யுடல் கிடக்கப் புத்திநீங்குகையானீகூறியதுபழிப்பாம். எ-று. பழி ப்பென்பதனைப் பின்னேகூட்டுக. கொப்புள் விகாரம். பிரி யாதென்னுஞ்சொல்லைப் புந்தியுடனுங் கூட்டுக.

இச்செய்யுள் பூதத்தின்கூட்டத்தி லறிவுமறிவுதோன்று மென்பதனைமறுத்துப் பூதத்திற்றோன்றியது காயபூதமேயா மெனக்கூறிற்று. (ஞானம்) பூதக்கூட்டத்துடம்பாமென்கிறது பிரத்தியட்சத்தாற்கண்டாயோ வநுமானத்தாலறிந்தாயோ வென்று லனுமித்தேயென்னிற் சிவனையுமநுமானத்தியா லதே துமல்லவென்றனுமித்துக்கொள்வாயாக். (௯)

கூறுசேர்வையின்வந்தபோதுசிவப்பெனுங்குண
மொன்றுமே, வேறுவேறுபுலன்குணங்களுடற்கண்
வந்துவிளைந்ததென், னூறுகாயடைகூடும் வேறொரு

வன் றனுலெனநோக்கிநீ, நேறுபூதசெயற்கும்வேண்
டுமொருத்தனென்றுதெளிந்திடே. (எ)

(இ-ள்.) கூறுசேர்வையின்வந்தபோது சிவப்பெனுங்குண மொன்றுமே வேறுவேறுபுலன்குணங்களுடற்கண் வந்திலை ந்திதென். எ-று. நூறுங் காயுமடையுமென்று கூறப்பட்டசேர்வையின் கண் வந்துவிடத்துச் சிவப்பெனுமொருதன்மையே காணப்படும் அப்படியொருதன்மையேயாகாது புலனென்றும் பிறிதியென்றுங் குணங்களென்றுந் தனித்தனியுடற்கண் வந்தில்லாதியதென்னை? அஃதன்றியும், - நூறுகாயடை கூடும் வேறொருவன் றனுலெனநோக்கிநீ தேறுபூதசெயற்கும்வேண்டுமொருத்தனென்று தெளிந்திடே. எ-று. நூறுங் காயுமடையுஞ் சிவப்பேறக்கூட்டுதற் கொருவன்வேண்டுமென்பதனை நீயறிந்தது போலப் பூதச்செயற்கு மொருத்தன் வேண்டுமென்று நிச்சயமாகத் தெளிந்திடுவாயாக. எ-று. தேறித்தெளிந்திடெனக் கூட்டுக.

இச்செய்யுளும் பூதக்கூட்டத்தறிவுமுதலிய தோன்றுமெனமறுத்துத் தோற்றுவிப்பானொருகர்த்தாவுண்டெனக்கூறிற்று.

ஆனவைம்பொறியுண்டிநித்திரையச்சமைதுனமாதியா, யானில்வந்திடுமுன்பிலாதவையென்றுரைக்கிறுனதுபோல், வானின்வந்திடுமாகாரணமியாகிமானுடராதியா, யோனிபன்மையுமொன்றுந்தமுறும்புணர்ச்சியோர்தன்மையே. (அ)

(இ-ள்.) ஆனவைம்பொறியுண்டிநித்திரையச்சமைதுனமாதியா யானில்வந்திடுமுன்பிலாதவை யென்றுரைக்கிறுனதுபோல். எ-று. சிலம்பியிடத்துநூல் தோன்றுமாபோல

முன்பில்லாதவையான வைம்பொறியுணர்வு தாயிற் பயமைந்
னமுதலியவைசாயத்திற் குணமாகவிப்போதுண்டாமென்று
நீ சொல்லில், — வானின் வந்திடுமாதராணவியாகிமாறுடா
தியாய். எ-து. மாதராணவியாகி மாறுடாதியாயு மாகாயத்
தினின்றுந் தோன்றல்வேண்டும்.— யோனிபன்மையுமின்று
பூதமூன்றும்புணர்ச்சியோர்தன்மையே. எ-து. பூதக்கூட்டமொ
ருதன்மையாகலான்மிருகபக்ஷிதாபரங்களாகிய யோனி
பேதமுமில்லையாம். ஆகையால்நீகூறியதுபொருளன்று. எ-ம்.
ஐம்பொறியென்றது முன்பில்லையா யிப்பொழுது
ண்டானவை யென்கையால். உலூதை சிலம்பி.

இச்செய்யுளைம்பொறிமுதலிய முன்பில்லையா யிப்போ
துண்டாமென்னின் மாதராணவியாகிய பேதங்களு மிப்பொ
ழுதுண்டாமெனப்படுமாகையாலவையிப்போதுண்டானவை
யன்றெனமறுத்துக் கூறிற்று.

பின்வந்தெழுமென்னுஞ்செய்யுண்முதலிச்செய்யுட்காறு
முறையானே புத்திமுதலியன விப்போதுண்டாமென்பத
னைக் கூறிற்று.

(ஞானம்.) சதுட்பூதசமவாயந்தானே யிப்படிப்பலவாம்
படிக்குக் காரணங்காட்டா வென்பதுகருத்து. (அ)

உலூதைபோல் என்பதனை ஞோதைகூ எனப்பாடமோதி
முன்பில்லாதவையுண்டென்று சொல்வாயாகில் அப்பொழுது
னுப்பற்றமகிழ்ச்சியுண்டாக்கும், பூவானது, — வானின்
வந்திடும். எ-து. ஆகாயத்திற்றோன்றி நிற்றமையிலே
எனமுடித்தனர் ஞானப்பிரகாசர். இல்லாததுண்டாகாதென்
பதுகருத்து. ஞைகை மகிழ்ச்சி. அன்றியு மாதராணவியாகிமாறு
டாதியா யோனி பன்மையுமின்று. எ-து. பெண்ணாணவி
யென்னும்பேதமு, மாறுடயோனி யொன்பத்தநூறுயிரபே

தமு, மமரயோனி பதினொருநூறுயிரமு, நாற்காலுடையன பத்துநூறுயிரமும் பறவைகள் பத்துநூறுயிரமு, நீர்வாழ்வன பத்துநூறுயிரமு, ஊர்வன பதினைந்துநூறுயிரமுந், தாபரங்கள் பத்தொன்பதுநூறுயிரமு,மாகவெண் பத்துநான்குநூறுயிரயோனிபேதங்களுமில்லாமல் என்றூர்.

மற்றோருரையாசிரியருமிதுவேபாடமோதி, ஒரோகை. எ-து. ஒருநதியும்,-பூ. எ-து. அதிற்றாமரைப்பூவும்,-வானின்வந்திடும். எ-து. ஆகாயத்திலுண்டாதல்வேண்டும், அவ்வாறின்மையான் முன்பில்லாதனதோன்றுமென்பதுகூடாது என்றுரைத்தனர். ஓகை பிரவாகத்தையுணர்த்தும் வடசொற்றிருபு என்றனர்.

உரையாசிரியர் தத்தங்கருத்திற்கேற்பச் செய்யுளைத்திருத்தல்செய் துரையுரைத்தனராயின் நூலாசிரியர்கருத்தையெங்ஙனமிவ்வாறெனத்துணிதல்கூடும். ஆயினுங்கருத்து வேறுபாடில்லாமையே பெரிதாய்ப் பெறும்பயன். அஃதன்றிச் சிலரொவ்வோரபிமானத்தா லொவ்வோருரையைச்சிறப்பித்து மற்றோருரையைத் தர்சித்திழிவுபடுத்தியும் பக்திசிரத்தையுடையசாதகரை மயக்கஞ்செய்கின்றனர்; வேதாகமங்கட்கே பாஷியமும் வியாக்கியாநங்களும் பலவாயின் இந்நூற்கிகர்களை யாம்சொல்வதியாது. சிவபிரான் அவ்வவர்பக்குவத்திற் கேற்பவும் புண்ணியபாவங்கட்கேற்பவுஞ் செய்யுஞ் சித்விலாசமென்றே மனச்சமாதானஞ்செய்துக்கொள்ளல் வேண்டும்.

ஐந்துநான்கொருமூன்றிரண்டொன்றதாயுடலங்களின்,வந்திடாவுணர்விந்தியங்களும்வன்னபன்னமயுமின்மையாம், புந்தியோடியவன்னபோகதுணங்கள்பூ

தபுணர்ச்சிதான், றந்திடாதிவை பேதமாயிடவந்தவா
வினை தந்தவா. (௧)

(இ-ள்) ஐந்துநான்கொருமூன்றிரண்டுடனொன்றதாயுடலங்களின்வந்திடா, வுணர்விந்தியங்களும்வன்னபன்மையுமின்மையாம். எ-து. நீ முன்பில்லையென்றுகூறிய கன்மமில்லையாயின் யோநிபேதமுமில்லையாய், அவ்வியோநிபேதங்களினுண்டாமுடலங்களிலிந்திரியங்களும், ஐந்துநான்குமூன்றிரண்டொன்றென்னுமறிவுகளுமில்லையாம். அஃதன்றியும், — புந்தியோடியவன்னபோககுணங்கள் பூதபுணர்ச்சிதான், றந்திடாது. எ-து. புந்தியாலறியுமக்ஷரங்களும்புசிப்புகளுங் குணபேதங்களும்பூதக்கூட்டத்தரயாற்றாது.— இவைபேதமாயிட வந்தவாவினைதந்தவா. எ-து. இந்திரியமிகக்குறைவாகவுஞ் சாதிபேதமாகவுங் குணபேதமாகவும் இப்படிபேதித்திடவந்ததுவினைக் கன்மந்தந்ததென்றறிவாயாக. எ-று. முன்னர் வன்னம்ஜாதி, பின்னர் வன்னம் அக்ஷரம்.

இச்செய்யுள் கன்மமில்லையென்பதனைமறுத்துக்கூறிற்று.

(ஞானம்,) ஆதலாற்பூமிசெலாக்கினிவாயுவானதுசதுட்டயங்கடன்னில் விருத்தமாகையாற் றம்மிற்கூடாததாம், தம்மிற்கூடியொன்றுதலரிதெனக்கொள்க. ஒருகுணமாகாசத்தைக்குறித்தன்று கலப்புக்குறித்ததாம். அன்றியு, மைந்திந்திரியங்கட்குமைந்தறிவுபிறக்குமோ வோரறிவைக்கினும்பிறக்குமோ, வைந்தினுமைந்தறிவுபிறக்கிலொன்றுக்கொன்று சம்பந்தமில்லையாம். ஒருணர்வைக்கிலும்பிறக்கிலதுவேசீவனென்றறிவாயாக.

வன்னபன்மை. எ-து. பலநிறங்களும் எனவும், புந்தியோடியவன்னபோகம். எ-து. அறிவுசெல்கின்ற அன்னமுதலிய போகங்களும் எனவுங்கூறினர் ஞானப்பிரகாசர். அன்றியும்

புன்மரமுதலவுற்றறியுமோரறிவுயிர், முரணந்தாதிநாவாலறிவோரீரறிவுயிர், சிதலெறும்பாதிமூக்கறிவின் மூவறிவுயிர், தும்பிவண்டாதிகண்ணறிவினாலறிவுயிர், வானவர்மக்களோற் கால்விலங்குபுள்ளாதி செவியறிவோடையறிவுயிரே. என்பதனானே இந்திரியபேதமு மறிவின்பேதமுங்காண்கவெனவும், ஐந்துநான்கொருமூன்றிரண்டொன்றதாயடங்கலின்வந்திடாவுணர்வு. எ-து. பூதகுணங்களைக்கொள்ளிற் பூதங்கட்குக் குணங்களியல்பல்லது சன்மத்தால் வந்ததல்லாமையானு முரணாயதனாலும் பூதமேகொள்ளாகாயங்கொள்ளாமையானு மஃதுரையாகாதென்க. என்றார்.

மற்றோருரையாசிரியரும் இதுகருத்தாய், புத்தியோடியையு மன்னம். எ-து. மனம்விரும்பியசோறுந் தின்றினிய விஷய பதார்த்தங்களையும்,—போகம். எ-து. விஷயானுபவத்தால் வருஞ்சுகதுக்கத்தையும்,—குணங்கள். எ-து. காமக்குரோதமுதலிய குணங்களையும் எனவும், அன்னமும் போகமுங் குணங்களும் என்றும் உம்மைதொக்கதென்றும், அன்னமென்றதேனைத்திலாதிகளுக்குபலக்ஷணமென்றும், புத்தி. எ-து. மனத்தை என்றும், விசேடித்துப் பிரித்துரை கூறினர்.

அறிவுபூதமென்னில்வெறுபுறத்துயிர்தமைகண்டிலேம், செறிவுதானுடலத்தெனிற்சவமானபோதுடனேறுறாமோ, குறிகொளாதுடல்வாயுவானதுகூடிடாமையிலெல்லினில், பிறிதராதுயிர்நிற்கஞானமுறக்குமென்பிறவாததே. (௧௦)

(இ-ள்.) அறிவுபூதமென்னின் வெளிப்புறத்துயிர்தமைகண்டிலேம். எ-து. பூதங்களையறிவாமென்றுகூறிற், புலப்படக் காணப்பட்ட மண்ணிலும் நீரிலும் நெருப்பிலுங் காற்றிலு மறிவு

கண்டிலமன்றே,—செறிவுதானுடலத்தெனிற்சவமானபோதுடனேருமோ. எ-து. உடலிலேசெறிந்தபோதுகாணும் தோன்றுவதெல்லிற். சவமாய்க் கிடந்தாலத் தறிவுகண்டதில்லையே,-குறிகொளாதுடல்வாயுவானதுகூடிடாமையினென்னின். எ-து. குறிக்கமாட்டாதுகாணும் வாயுப்பிரிந்தவாறேயென்று நீகூறில்,—பிரிதராதுயிர்நிற்கஞானமுறக்கமென்பிறவாததே எ-து. அந்தவாயுவானது முறக்கத்திலே பிரியாதுநிற்க வறியாமல் நிற்பானேன். ஆகையாற் பூதக்கூட்டத்தறிவுதோன்றாது, வேறோறிவுண்டென்றறிவாயாக. எ-று.

இச்செய்யுளான்மாவில்லையென்பதனைமறுத்துக்கூறிற்று. ()

அறிவிடற்குணமென்னிலானைபதாதியந்தமெறும்
பதாவுறுமுடற்பெரிதானவற்றினுதித்திடும்பெரிதாக
வெசிறுவுடற் செறிஞானமுஞ் சிறிதாயிடும் பரிணம
மும் பெறுமுடற்சிறிதாவதென் பெரிதாவதென்சில
பேசிடே. (௧௧)

(இ-ள்.) அறிவுடற்குணமென்னில். எ-து. அறிவென்று வேறொருமுதலில்லை யுடற்குணமேகாணு மறிவென்றுநீகூறின்,—ஆனையதாதியந்தமெறும்பதா வுறுமுடற்பெரிதானவற்றினுதித்திடும்பெரிதாகவே சிறுவுடற்செறிஞானமுஞ்சிறிதாயிடும். எ-து. ஆனைமுதலெறும்பீறாகவெடுத்தவுடலிற்பெரிதானவற்றினுதிக்குமறிவு பெரிதாயுஞ் சிறிதானவற்றினுதிக்குமறிவு சிறிதாயுமிருக்கவேண்டும். அங்ஙனமன்றி,--பரிணமமும்பெறுமுடற்சிறிதாவதென்பெரிதாவதென்சிலபேசிடே. எ-து. பரிணமத்தையுடையயானையுடன் கறிவுசிறிதாயுஞ் சிறியவுடலையுடையமாவுடற் கறிவுபெரிதாயுமிருப்பதென்? ஆகையாலறிவு

டற்குணமன்று, வேறுஞ்சொல்லத்தக்கதுண்டாயிற்சொல். எ-று.

இச்செய்யு ளறிவுடற்குணமென்பதனை மறுத்து ஆன்மாவின்குணமென்றுகூறிற்று. இதுகன்மத்தாலென்பது கருத்து அன்றியுஞ் சரீரம்வளருந்தோறு மறிவுவளரவுமதுகெடுந்தோறுங்கெடவுங் காண்டலானுஞ் சரீரத்தைப்பிரிந்து சேதநனிற்கக்காணப்படாமலானுஞ் சரீரகாரியமென்னிற், பிருதிவிசேடணமாகியவிந்தனம் பெருகுந்தோறும்பெருகிச் சுருங்குந்தோறுஞ்சுருங்கி யதனில்வேறுபட்டுப்படாதாகி யிந்தனமில்லாதவழியில்லையாகின்றவக்கினியிந்தனகாரியமாகி யிந்தனத்துடனொன்றுகாவாறுபோல வறிவுசரீரகாரியமாகிச் சரீரத்துடனொன்றுகா. அன்றியும் அறிவுமகாசரீரவானி லற்பசரீரியாயினுஞ் சகலசாத்திரஞானமுடையனுகக்காண்டலிற் சரீரவிருத்தியாற் சேதனத்துக்கு விருத்தியில்லையெனக்கொள்க. (கக)

போதமும்மெலிவாகியும்மலிபூதமானவைகூடலிற்
பேதமோடுபெருத்துடற்கள் சிறுத்தபெற்றிமையென்
றிடி னேதுடற்பெரிதானவுஞ்சிறிதாயிடாசிறிதானவு
நீதியிற்பெரிதாயிடாமுனமுள்ளதன்மையினீடுமே. ( )

(இ-ள்.) போதமும்மெலிவாகியும்மலிபூதமானவைகூடலிற்பேதமோடுபெருத்துடற்கள் சிறுத்தபெற்றிமையென்றிடின் எ-து. அற்றன்று, உடற்குணமோனுமறிவென்றது, பூதமானவைகூடுங்காலத்துப் போதமெலிவாகியும் பூதமலிவாகியுங் கூடலி லறிவுசிறுத்துக் காயம்பெருத்ததென்றும், போதமெலிவாகியும் பூதமெலிவாகியுங்கூடலி லறிவுபெருத்துக் காயஞ்சிறுத்ததென்று மங்ஙனமுறைமையென்றுங்கூறின், ஏதுடற்பெரிதானவுஞ் சிறிதாயிடாசிறிதானவு நீதியிற்பெரிதாயிடாமுன்

முள்ளதன்மையினீடுமே. எ-று. பூதக்கூட்டத்தாற்றோன்று மென்று நீகூறியவுடல் பெரிதான்வுடல்சிறிதாயிடாது, சிறிதானவுடல்பெரிதாயிடாது, முன்னமுன்னமுள்ளமுறைமைப் பாட்டினிற்கவேண்டும். அங்ஙனமில்லாது பெரியவுடல்காலஞ் சென்றாற் சிறிதாயுஞ் சிறியவுடல்காலஞ்சென்றாற் பெரிதாயு மிருத்தலாற் பூதக்கூட்டத்திற்றோன்றுமறிவன்று. கன்மத்துக் கீடாகவடிவெடுத்துக்கோடலாமென்று கருதுவாயாக. எ-று. நீடுதல் நிலைபெறுதல்.

இச்செய்யுளு மறிவுடற்குணமே, பூதங்களினுண்டாய புணர்ச்சிவிசேஷங்களினாலே காயமுமறிவுமேறிக் குறைந்திருந்த தென்றுகூறுவதனை யல்லவென்றுமறுத்துக்கூறிற்று. (௧௨)

போதரும் மெலிவாகியும் மலிபூதமானவை கூடலில்லென் பதனை போதவும்மெலிவாகியும்மலிபூதமானவைகூடலில்லென் றேறி மிகுந்தபூதங்களானவை மிகவுங்கூடினபோது என்று ரையுரைத்தனர் ஞானப்பிரகாசர். மற்றோருரையாசிரியரும் இதுவேகருத்தாய்க்கூறியிருக்கின்றனர்.

இயல்புகாணிவையெனின்வேறிசைபெண்ணோ
டாணிருதன்மையாகுஞ், செயல்கொளாவிவைசெய்தி
காரணமாகவந்துசெனிப்பதே, னியல்பதாமுடல்பூத
காரியமாவதும் மிலையாகுமான், மயலதாம்வினையா
லொருத்தன் வகுத்ததன்மையின்வந்ததே. (௧௩)

(இ-ள்.) இயல்புகாணிவையென்னில். எ-து. கன்ம முடலாகவெடுத்துக்கோடற்கறிவில்லை, இவையெல்லாம்பூதவியல் பென்றுநீகூறின்,—வேறிசை பெண்ணொடாணிருதன்மையாஞ்செயல்கொளா. எ-து. (இதனைப்பொருளுக்கேற்பமாறுக.)

இயல்பொருதன்மைப் பட்டிருத்தலின்றி வேற்றுமைப்பட் பொருந்தி யிரண்டுதன்மையாகிய பெண்ணாணென்னுமுறைமையைக்கொள்ளாது.—இவர்செய்திகாரணமாகவந்துசெனிப்பதென். எ-று. இஃதன்றியும், பூதகாரணமாகி யிரண்டு தன்மைப்பட்ட பெண்ணாணென்னுமுறைமை காரணமாகப் பிறப்பதென்னை? — இயல்பதாமுடல்பூதகாரியமாவதுமில்லையாகுமால். எ-து. ஆகையால், இயல்பாமென்றவுடல் பூதவிகற்பமல்லவாய்ப் பூதகாரியமாவதுமில்லையாம். அதனால், மயலதாம். எ-து. நீகூறியது மயக்கத்தையுடைத்தாம்.—வினையாலொருத்தன் வகுத்ததன்மையின் வந்ததே. எ-து. கன்மத்துக்கீடாகவொருத்தனுண்டாக்கப் பட்டதன்மையிலேவருமுருக்கொளென்றறிவாயாக. எ-று.

இச்செய்யுள்பாயம்பேதப்படுவதியல்பென்பதனை மறுத்துக் கூறிற்று. (ஞானம்.) பூர்வஜந்மவாசனைகாண் பிறந்தபோதே மாதாவின் முலையைப்பிடித்தல் பசுமுதலானவையிற்றினுங் காண்கையால் மறுபிறப்புண்டென்கை விசாரியாய். ஆதலாலியல்பாவதொருகுணமாய் வேறுபிரித்தாலும் விரியாதிருத்தல்வேண்டும். இதுவென்றுபடச்செய்தசெயலிலே பட்டுப் போதலாற் கர்த்தாவுண்டென்பதுகருத்தெனக்கொள்க. ()

காரணம்மவையென்றகதன்னைகடாதிபோனிகழ்
காரிய, நேரணைந்துசமைந்துநின்றிடுமெனப்படுமது
நேர்கிலோம், பேரணைந்திடுமொன்றொடொன்று
பொருந்துமாகில்வருந்தியு, நீரணைந்தொருதியினின்ற
துகண்டதாயினிகழ்த்திடே. (௧௭)

(இ-ள்.) காரணமுவையென்றதென்னைகடாதிபோனிகழ் காரிய நேரணைந்துசமைந்துநின்றிடு மென்பதும்மதுநேர்கி

மேலாம். எ-து. உருக்கட்குப் பெண்ணன்செய்திகாரணமெ ன்றாற்கூறியவென்னை? மண்ணின்கட்கடாதிகதோன்றுமாறு போலப்பூதகாரணத்திற் பெண்ணுன்காரியப்பட்டுத்தம்மிற் கூடியகூட்டத்தேயுருச்சமைந்திடுமென்று நீசொல்லுகிறவிது யாம்பொருந்துகிறேமில்லை. உம்மெதங்ஙனென்னில்,-போர ணைந்திடுமொன்றேமொன்று. எ-து. ரீகூறியபூதங்களுன்றுந் தம்மின்மாறுபடும்,—பொருந்துமாகில் வருந்தியுரைநெறி ருதியினின்றதுகண்டதாயினிசழ்த்திடே. எ-து. ஆகையமறுதலை யாகாமற்கூடுமாயினிருந்தியுமோரிடத்திற்கூடினின்றதன்மை யையுன்காட்சியளவையிற்கண்டதுண்டாயின் வருந்தியுஞ் சொல்வாயாக. எ-று.

இச்செய்யுள்பூதகாரணத்தாற் பெண்ணுமென்னுங்காரிய முண்டாகாதென்று மறுத்துக்கூறிற்று. அப்படியாகினீரிலே சித்தர்கள் விளக்கெரிக்கக்கண்டோம், சமுத்திரத்திலே வடவாமுகாக்கினிநிற்குமெனக்கேட்டோமென்னையாகிற், சித்தர் களுமவுஷதத்திலேநிறுத்தினதல்லது நீரில் விளக்குநில்லாது நிற்கிலெவ்விடத்திலுநிற்கவேண்டும்; வடவாமுகாக்கினியுஞ் சமுத்திரத்திலேநிற்கும், அது நாலுமலைக்குநடுவேநிற்கும், அது சாத்திரங்களிற்காண்க. விரிக்கிற்பெருகும். (கசு)

வடவாமுகாக்நி சமுத்திரத்தினிற்பது சிவாக்கினையென் றும் அது "தொலையாவிருட்டோராறுஞ்சூழ்வதுஞ் சூழ்மூந் நீர், நிலையாயிருப்பதுநீர்வானணைப்பதுநடுசெம்பொற், சிலையானமேருச்சலியாதிருப்பதுஞ்சேடனுச்சி, யலையாதிருப்பது மம்பலத்தாடிகளாணையிலே" என்பதுபோல் சமுத்திரத்தே நாலுமலைக்குநடுவேநிற்குமென்றும் எடுத்துரையுரைத்தனர் ஞானப்பிரகாசர்.

பூதமேவுபுணர்ச்சியேபுரிகாயகாரணமாகுமேற்,
காதலாரொடுபெண்ணுமேவு புணர்ச்சிகாரணமாவ
தென், ஆதியேயுலகத்திலாரொடுபெண்ணுமாயவினை
காரிய,நாதனாயகியோடுகூடி நயந்தகாரணமெய்யரே.

(இ-ள்.) பூதமேவுபுணர்ச்சியே புரிகாயகாரணமாகுமேல் எ-து. பூதக்கூட்டமே பொருந்தப்பட்டகாயத்துக்குக்காரண மாமாயின்,—காதலாரொடுபெண்ணுமேவு புணர்ச்சிகாரணமாவதென். எ-து. பெண்ணாண் காதலோடுபுணரும்புணர்ச்சி காரணமாக வுருக்கள்காரியப்படுவானேன். அங்ஙனமானது, ஆதியேயுலகத்திலாணொடுபெண்ணுமாயவினைகாரிய நாதனாயகியோடுகூடி-நயந்தகாரணமென்பரே. எ-து. அநாதியே கர்த்தா நாயகியோடுகூடிப்போகத்தைவிரும்ப வதுகாரணமாக வாதியேயுலகின்கணாண்பெண்காரியப்பட்டதுகாரணமாக வுருக்கள் காரியப்பட்டுவருதலன்றிப் பூதக்கூட்டங்காரணமெனப்படாது.

இச்செய்யுளுருக்கட்குப் பூதங்காரணமன்று கர்த்தாவே நிமித்தகாரணமென்பது கூறிற்று. ஜீவனுமுருக்களை வகுத்துக்கொள்ளவறியாது, ஸ்திரீபுமான்களுமப்படியே, கர்த்தாவுஞ்சத்தியுமாகவடிவுகொள்ளச் சந்நிதிமாத்திரத்திலே சன்மத்துக்கீடாகவுருக்கடோன்றுமென்றறிக.

இயல்புகாணிவை யென்னுஞ்செய்யுண்முதலிச்செய்யுட்காறு முருக்கட்குப்பூதங் காரணமன்றென்று மறுத்துக் கூறியதாம். (௧௫)

கந்தம்வெம்மைகளந்திடும்புலன்கண்மமெய்செய்தி
தென்றனை,சந்தமாந்தமுஞ்சாரநின்றிருதன்மையுற்றிடுமா
றதோர், அந்தகன்மமிரண்டணைந்துதருஞ்சுகத்தொடு
துக்கமுற்று, சிந்தியாவெழுநீவனுற்றிடும்மேவுற்றிடற்கிலை
தேபிடே. (௧௬)

(இ-ள்.) சந்தம்வெம்மைகலந்திடும்புனல்கன்மமென்செய்த
தென்றனை. எ-து. புனலானது சந்தனாதிகளைக்கூடிக்குளிர்
ந்தும் நெருப்பைக்கூடி வெப்பங்கலந்துமிருத்தலாலிஃதென்
னகன்மஞ்செய்தது, ஆதலாற்கன்மமில்லையென்று கூறினாய்,-
சந்தனந்தழல்சார நீரிருதன்மையுற்றிடுமாறதோர். எ-து.
நீயுவமங்கூறிய நீர் சந்தனத்தையுந்தழலையுஞ்சாரவொருபொ
ருட்கிரண்டுதன்மையுண்டானவாறுபோல விசாரிப்பாயாக.
தந்தகன்மமிரண்டணைந்துதருஞ்சுகத்தொடுதுக்கமும். எ-து.
கன்மமிரண்டுவகைப்படப்பொருந்திச் சுகதுக்கங்களைக்கொடு
க்கும்,—சிந்தியாவெழுசீவனுற்றிடும் வேறுடற்கிலைதேறிடே.
எ-து. அந்தச்சுகதுக்கங்களையுற்றறிந்திடுவது சேதநமானவுயி
ருக்கல்லது, அசேதநமானவுருக்கட்கில்லையென்றறிவாயாக.
எ-று. தந்தகன்மமாவது, முன்ஜநநத்திலறிவுண்டாக்கிக்கொ
ண்டதாய்ப் பின்ஜநநத்தில்வந்து கூடியகன்மம். சிந்தியாவெ
ழுசீவனென்றது சுகதுக்கங்களுக்குப் பிரியாப்பிரியப்படுதலை.

இச்செய்யுள், கன்மமில்லையென்பதனைமறுத்துக் கூறி
ற்று. உன்னிலிரண்டுபேதமாகச் சொல்லப்பட்ட விந்திய
சைதன்னிய வாதிபோலன்று, சரீரமுஞ்செவியுநாவு மூக்
குங்கண்ணுங்கிடக்கச் சைதன்னியமில்லாமையாற் சீவனே
சைதன்னியமென்றுகொள்வாயாக. (௧௬)

சுகதுக்கஞ்சேதனவுயிர்க்கு. எ-கு. ஜீவியாதசரீரத்திற்
காடைசாற்றி ஆபரணம்பூட்டிச் சந்தனம்பூசி மாலைசூட்டிப்
பிரேதாலங்காரம்பண்ணினபாடையிலெடுத்துப்போனபோ
து மக்நியுந்தானுமிரண்டறக்கலந்து வேகிறபோதுஞ் சரீர
த்திற்காணாமையாலே சுகதுக்கம்ஜீவனுக்கேயென் றுதஹரித்த
னர் ஞானப்பிரகாசர்.

இன்பமெய்தி யிருந்துநீ வினை யில்லையிங் கியல்பென்றிடிற், றுன்பமெய்திடுவானென் மற்றிது சொல்லிடாய்சொலவல்லையேன், முன்புசெய்திடுகன்மமென் றறிகன்மமுமுதல்வன்னறிந், தன்பினூ லுவிக்குமப்பயனுங்கமைப்பொடநாதியே. (௧௭)

(இ-ள்.) இன்பமெய்தியிருந்து நீ வினையில்லையிங்கியல்பென்றிடில். எ-து. நீ ஸ்திரீகளுடன்கூடிப் போகவின்பத்தையநுபவித்திருந்துமியல்பொழியக்கன்மமில்லையென்றகூறில், துன்பமெய்திடுவானென். எ-து. அந்தஸ்திரீகளைநீங்கினவிடத்துத்துக்கப்படுவானேன்,—மற்றிதுசொல்லிடாய் சொலவல்லையேல். எ-து. இஃதெதனால்வந்ததென்று சொல்லவல்லையாகிற் சொல்லுவாயாக,—முன்புசெய்திடுகன்மமென்றறி. எ-து. ஸ்திரீகளுடன்கூடிப்போகத்தையநுபவிப்பதும் அவரைநீங்கித்துன்பத்தையநுபவிப்பதும் நீமுன்செய்தபுண்ணிய பாவமென்றறிவாயாக,—கன்மமுமுதல்வன்னறிந்தன்பினூலுவிக்கும். எ-து. அந்தப்புண்ணியபாவங்களுந்தாமாகவனைவதில்ல, கர்த்தாவானவ னறிவுகள்செய்த கன்மத்துக்கிடாகவறிந்தநுக்கிரகத்தாலே யூட்டுவன்,—அப்பயனுங்கமைப்பொடநாதியே. எ-து. அறிவுங்கன்மமுமதனைக்கூட்டுதலு மநாதியேயுள்ளது. எ-று. மற்று—அசை. அறிவு அதிகாரமுறைமையால்வந்தது. பயன் கன்மம்.

இச்செய்யுள் புண்ணியபாவமுண்டென வறிவித்தலைக்கூறிற்று. துன்பம் மடலேறுகைமுதலானவை. வேம்புகைப்பதுங் கரும்புதித்திப்பதுமியல்பென்னிற் றித்தித்ததென்றுங்கைத்ததென்றுஞ்சொல்லுகிற சைதன்னியமொன்றுண்டு காணவன் கன்மத்துக்கீடாகச் சுகதுக்கப்படுவனெனக்கொள்க. (௧௭)

அநாதியேலமைவின்றெனின்மலமாயை கன்மமு
ணுச்சிவனநாதிகன்மமணுக்கள்செய்யவறிந்துகன்ம
முடற் செயா,வநாதிகாரியமாமுடற் களசேதனம் ம
ணையாவறிந், தநாதியாதியமைக்கவேண்டு மமைப்பி
னோடுமநாதியே. (கஅ)

(இ-ள்.) அநாதியேல் அமைவின்றெனின். எ-து. நீர் கூறியவை யநாதியேயாயாகில் ஒருவனுங் கூட்டுதலில்லை யென்றுகூறின்,-மலமாயைகன்மம்அணுச்சிவன் அநாதி. எ-து. மலமுமாயையுங் கன்மமு மான்மாவுங் கர்த்தாவு மநாதி,— கன்மம் அணுக்கள்செய்ய வறிந்து கன்மமுடற்செயா. எ-து. கன்மத்தையான்மாக்கள் செய்ய வந்தக்கன்மந்தானுயறிந் தான்மாக்களுக் குருவையெடுத்துக்கூட்டமாட்டாது—அநாதி காரியமாமுடற்கள்அசேதனம்மனையாவறிந்து. எ-து. அநாதியேகாரியப்பட்டுவருமுடற்கள் அசேதனமாகையா லான்மாவையறிந்து கூடமாட்டா,— அநாதியாதியமைக்கவேண்டும் எ-து. ஆகையா லநாதியாகியகர்த்தா வான்மாவையுங்கன்மத்தையு மதற்குப்பொருந்தின வுருவையுமாதியாகக் கூட்டல் வேண்டும்,-அமைப்பினோடும் அநாதியே. எ-து. அப்படியவன் கூட்டினகூட்டரவுமநாதியாகையா லிதுவுமநாதிதான். எ-று.

இச்செய்யுள், கன்மமு முயிருமுடலுமொருவன்கூட்டப்படுதலா லநாதியன்றென்றவிடத் திவையெல்லாமநாதியாகும், இவையசேதன மாகையாலே யொருவன்கூட்ட வேண்டும், ஆதிகொண்டாதியென்றுகூறப்படும். அக்கூட்டரவுமநாதிப்பட்டுவருகையா லிவையுமாதியென்பது கூறியது.

சந்தம்வெண்மைஎன்னுஞ்செய்யுள்முத லிச்செய்யுள்காறுங் கன்மமுண்டென்னு மதற்குப் பிரமாணங்களாற்கூறியது. ()

காணொணாகரணங்களுக்குயிர் கண்டிடாமையினின்
றெனிற், காணுமோகடங்கண்டகண்ணினைக்கண்டுநி
ற்பதுங்கண்ணதே, காணொணாதுயிர் தானுமிப்படிக்
கண்டிடுங்கரணங்களைக், காணொணாகரணங்களுக்குயி
ருண்மையாவதுங்கண்டிடே (க௯)

(இ-ள்.) காணொணாகரணங்களுக்குயிர் கண்டிடாமையினின்றெனின். எ-து. புறக்கரணங்களுக்குயிர்காணவொண்ணாதாகையாற் காட்சிக்குப்புலப்படாமையினான்மாவென்றொன்றில்லையென்றுகூறின்,—காணுமோகடங்கண்டகண்ணினைக் கண்டுநிற்பதுங்கண்ணதே எ-து. (இதனைப்பொருளுக்கேற்பமாறுக) சரீரமானது தன்னைக்கண்டகண்ணைத்தான்காணவற்றோ? அச்சரீரத்தைக் கண்டுநிற்பதுங் கண்ணுக்குள்ள தொழிலேகாண்,—காணொணாதுயிர்தானுமிப்படி. எ-து. காட்சியளவையாகியகண்ணுக்குக் காணவொண்ணாதென்றவுயிருமித்தன்மைத்து;—கண்டிடுங்கரணங்களை. எ-து. உயிர்சேதனமாகையாற் கரணங்களைக்கண்டுநிற்கும்,—காணொணா கரணங்களுக்கு. எ-து. கண்களைச்சரீரமறியாதவாறுபோலக் கரணங்களுமவ்வான்மாவைக்காணவொண்ணா,—உயிருண்மையாவதுங் கண்டிடே. எ-து. ஆகையாலான்மாவையுண்மையாகவுண்டெனவறிவாயாக. எ-று.

இச்செய்யுள் காட்சியளவைக்குக் காணப்படாதாகையாலான்மாவில்லையென்றவனை யுண்டெனமறுத்துக்கூறிற்று. ( )

அங்கியானதுதானுமொன்றை யணைந்துநின்றுநிக
ழ்ந்திடும், பங்கியாதுயிர் தானுமிப்படிப் பற்றியல்லது
நின்றிடா, தெங்குமார் தயிலத்தையுண்டெழுதீபமான
தெரிந்திடு, மங்கதாமுடனின்றுகன்ம மருந்தியாருயி
ராவதே. (உ0)

(இ-ள்.) அங்கியானது தானுமொன்றை யணைந்துநின் றங்கழ்ந்திடும் பங்கியாதுயிர் தானுமிப்படிப் பற்றியல்லதுநின்றிடாது எ-து. நெருப்பானதோரிந்தனத்தைப் பற்றிநின் றுதன் வடிவைக்காட்டுந் தன்மையன்றித் தனித்துநின் றுதன் வடிவைக்காட்டுந்தன்மையையுடைத்தன்று, அதுபோலவான்மாவுமோருருவைக்கூடியன்றிநிற்கமாட்டாது,— எங்ஙமார்த்தியிலத்தையுண்டெழுதீபமானதெரிந்திடும். எ-து. தகளியெய்குநிறைந்தவெண்ணெயைப்பருகி யோங்கியதீபமானதெரியாநிற்கும்,— அங்கதாமுடலின்றகன்மமருந்தியாருயிராவதே. எ-து. அப்படிக் கன்மத்தாலெடுத்துக்கொண்டகாயத்திலின்றுங்கன்மத்தைப்புசிப்பதான்மாவாம். எ-று. திரி, காயத்திற்கும், எண்ணெய்கன்மத்திற்கும், தீபமான்மாவிற்குமுவமை. பங்கியாது அழியாது.

இச்செய்யுளான்மாவொன்றைக்கூடியல்லது தனித்துநில்லாதென்பதை கூறிற்று. (௨௭)

அறிவுதானுடலத்தின் வேறதுவாயிறந்துபிறந்திடி,
னறிவுமுன்புள திங்குவந்துமறிந்திடாமையதின்றெனி,
னறிவையோகனவத்து நீநனவத்தையன் றுதரத்திருந்,
தறியுமவ்வறிவோமயக்கறிவாதலாலறியாதுகாண்.

(இ-ள்.) அறிவுதானுடலத்தின்வேறதுவாயிறந்துபிறந்திடினறிவுமுன்புளதுஇங்குவந்துமறிந்திடாமையதின்றெனின் எ-து அறிவானது இவ்வுடலத்தின்வேறுபட்டிறந்தும் பிறந்திருந்திரியமாயினவ்வறிவுமுன்புள்ளதாயின் பிறப்பிறுமறியாமையின்றியறிவேயாயிருக்கவேண்டும். அஃதில்லையென்றுநீகூறின்,— அறிவையோகனவத்து நீநனவத்தை. எ-து. நீகனவுகாணுமிடத் தக்கனவைநனவென்பதன்றிக் கனவென்பதறிதி

போ? அஃதன்றியும், — தன்றுதரத்திருந்தறியுமவ்வறிவோ
மயக்கறிவு. எ-நு. நீ மாதாவுதரத்திலிருந்தறிந்தவறிவோ பூத
தேகமானபின்புமயங்கினவறிவு, — ஆதலாலறியாதுகாண்.
எ-நு. ஆகையாலிறந்தும்பிறந்துந்திரிகையால் ஆன்மாவுக்கறி
யாமையே குணங்காண். எ-று.

இச்செய்யுளானீரறிவாகிலெப்பொழுதுமறியவேண்டு
மென்பதுணைமறுத் தான்மாவுக்கறிவுமறியாமையுங்குணமெனக்
கூறிற்று. (உக)

இறந்திடுமறிவேபிறந்திடுமென்பதிற் கிசையா
தெனின், உறங்கிடும்பொழுதினின்றுணர்விங்குறித்
திடுமாறதோர், பிறந்தவிவ்வுடல்போகவேறுடல்பின்
புவந்தமைபேசிடின், மறந்திடுங்கனவத்தில்வேறுடல்
வந்தவாறுமதித்திடே. (உஉ)

(இ-ள். இறந்திடுமறிவே பிறந்திடுமென்பதிங் கிசையா
தெனின். எ-நு. இறந்தவறிவேபிறக்குமென் றிவ்விடத்துக்
கூறியது பொருந்துமுடைத்தன்றென்று நீகூறின், — உறங்கி
டும் பொழுதின்று நின்றுணர்விங்குறித்திடுமாறதோர். எ-நு.
துயில்செய்யுமிடத்து முகத்திற்பாம்பேறவு மறிவின்றிக்கிட
ந்து விழித்தவிடத்துணர்வின்று பாம்பைக்காணவும் பயப்
படுமாறு விசாரிப்பாயாக, — பிறந்தவிவ்வுடல்போக வேறு
டல்பின்புவந்தமைபேசிடின். எ-நு. இப்போதெடுத்துக்கொ
ண்ட காயங்கெட்டாற் பின்புமற்றொருகாயமுண்டாம்படி
யெப்படியென்று சொல்லின், — மறந்திடுங்கனவத்தின் வேறு
டல் வந்தவாறுமதித்திடே. எ-நு. நனவைமறந்திடுங்கனவி
லன்னையெடுத்துக்கொண்டுதிரியும் அன்னைக்கூடியவாறெத்
தன்மையத்தன்மையாக வென்றறிவாயாக. எ-று.

இச்செய்யு ளிறந்தவறிவுபிறவாதென்னுமதனையு முன்புள்ளதுக்குமசந்தேகம்வந்து பின்புள்ளாகாதென்பதனையு மறுத்துக் கூறிற்று. அன்றியுமொரு ஜன்மத்திலவைத்தபொருளைப் பிறிதொருஜன்மத்திற் சாத்திரப்பிரமாணத்தா லறிந்தசாட்டுதலும், பிசாசாதிஜநநமரணகாலத்திலிருந்தாகந்தத்தை யடுத்தவர்க்கறிவித்துள்ளவாகவுங்காணுகின்றமையினதனையறிவாயாக.()

கரணம்வாயுவிடத்தடங்க வடங்கிவந்தெழுகாரிய
மரணமானவிடத்து மற்றிவைமாய்ந்து பின்புவருஞ்
செயல், கிரணமார்கலைகெட்டுதிப்ப விறப்பிலேறுபிற
ப்பையுந், தரணியோர்கண்மதிக்குரைப்ப ருயிர்க்கு
மிப்படி சாற்றிடே. (உ)

(இ-ள்.) கரணம்வாயுவிடத்தடங்க வடங்கிவந்தெழுகாரிய மரணமானவிடத்து மற்றிவைமாய்ந்துபின்பு வருஞ்செயல் எ-து. (இதனைப்பொருளுக்கேற்பமாறுக.) ஒருவன் மரணமானவிடத்திந்திரியங்கள்கெட்டுப் பின்பவைவருமுறைமை யாதன்மைத்தென்னில்? ஒருவன்மூர்ச்சித்தவிடத்துக்கரணங்கள்வாயுவிடத்தொடுங்க வவ்வாயுவுஞ்சேட்டைகெட்டுப் பின்பவன்மூர்ச்சைதீர்ந்தவிடத் தக்கரணங்கள்சேட்டைபட்டாற்போலும். இதன்றியும்,-கிரணமார்கலைகெட்டுதிப்ப விறப்பிலேறுபிறப்பையுந்தரணியோர்கண்மதிக்குரைப்பர் எ-து மதியினதுகிரணம்பொருந்தினகலைக ளின்னிடத்துக்கெட்டுத்தோன்றிய முலகத்துள்ளோ ரதனைமதிக்கு மிறப்பும்பிறப்புமாகக் கூறிநிற்பார்கள். அதுபோல,—உயிர்க்குமிப்படிச்சாற்றிடே, எ-து. ஆன்மாவுக்குமிப்படிக் கூறுவாயாக எ-று.

இச்செய்யு ளான்மாவினுடையதூலகாயத்திலுள்ள கரணங்கள் சூக்குமகாயத்திலும் பொருந்துமென்பதுமான்மா நித்தியமென்பதுங்கூறிற்று.

காரணகரணங்களுக்கென்னுஞ்செய்யுண்முதலிச்செய்யுட்காறு மீளவுமான்மாவில்லையென்று மான்மாவுக்கறிவில்லையென்று மிறந்தவறிவுபிறவாதென்றுங் கூறுவதனைமறுத்துக் கூறியதாம். இதனால்வாயுவியங்காரகாலத்துக் கரணமியங்காதெனக்கொள்க. (உரு)

பூதமானவைகாரியங்கள்பொலிந்துமன் னியழிந் திடி, னாதலாலொருநாதனிங்குளனென்றறிந்து கொளாயினே, பேதமானகடாதிமண்ணினில்வந்தவாறு பிடித்திடிற், கோதிலாதகுலாலனால்வருசெய்கையென்றுகுறிப்பரே. (உசு)

(இ-ள்.) பூதமானவைகாரியங்கள்பொலிந்துமன்னியழிந்திடினாதலாலொருநாதனிங்குளனென்றறிந்துகொளாயினே. எ-து. நீ கூறியபூதங்கள்காரியப்பட்டுப் பொலிவினையுடைத்தாய்ப் புசிப்பளவுநிலைபெற்று மீளவுமழியாநிற்கும். ஆதலாலிவையாக்கியுமழித்துஞ்செய்வானொரு கர்த்தாவுண்டென்றறிவாயாக. — பேதமானகடாதிமண்ணினில் வந்தவாறுபிடித்திடில். எ-து. (இதனைப்பொருளுக்கேற்பமாறுக) மண்ணினிடத்துக் கடாதிபேதம் வந்தாற்போலப் பூதகாரியமேகாயமென்னில், — கோதிலாதகுலாலனால்வருசெய்கையென்றுகுறிப்பரே. எ-து. அம்மண்ணுங் குற்றமில்லாதகுலாலனது செய்கையாற் காரியப்பட்டாற்போலக் கர்த்தாவினுடையசெய்கையாற் பூதமுங்காரியப்பட்டதென்றறிவாயாக. எ-று.

ஐயனே என்றதிகழ்வின்கண்வந்தது, ஆதலாலசேதனமாகிய மிருத்துச் சேதனனாகியகுலாலனாலே காரியப்படுமாறுபோலப்பிரபஞ்சமீசுரனாலேகாரியப்படுமென்றறிவாயாக.(௨௪)

பூதமானவைகாரியங்கள் பொலிந்துமன்னியழிந்திடு மாதலாலொருநாதனிங்குளன். எ-து. பூதங்களானவை காரியங்களாகப்பொலிந்துதோன்றி நின்றொடுங்காநிற்கும். ஆதலாலே யிவையிற்றைத்தோற்றி நிறுத்தியொடுக்க வொருகர்த்தாவுளன் என்றார் ஞானப்பிரகாசர்.

வேதனாரணனாரணம்மறியாவிழுப்பொருள்பேதை
பாற், றாதனாயிருகாலடைந்திடுதோழன்வன்மைசெய்
தொண்டனுக், காதலாலடியார்களுக்கெளியானடிக்
கமலங்களீ, காதலாலிணையிலாடன் வேண்டினவிம்
மையேதருங்கண்டிடே. (௨௫)

(இ-ள்.) வேதனாரணனாரணம்மறியாவிழுப்பொருள். எ-து. பிரம்மாவும் விஷ்ணுவும் இருக்கு யசுர் சாமம் அதர்வணமென்னு நான்குவேதமு மறிதற்கரிதாகிய விழுமியபொருள்,—பேதைபாற்றூதனாயிருகாலடைந்திடு தோழன்வன்மைசெய் தொண்டனுக்கு. எ-து. (இதனைப்பொருளுக்கேற்பமாறுக) வலிந்தாட்கொண்ட சுந்தரநாயனார்க்குத்தூதனாய்ப் பரவைநாய்ச்சியாரிடத் திரவின்கணிருகாலடைந்ததிணைவன்,— ஆதலாலடியார்களுக்கெளியான். எ-து. அப்படிப் பிரமவிஷ்ணுக்களுக்கரியனாயினு மடியார்களுக்கெளியனாயெண்ணியவை யிம்மையிலே கொடுக்கத்தக்கவனாகையால்,— அடிக்கமலங்களீ காதலாலிணை. எ-து. அவன் ஸ்ரீபாதகமலங்களை நீ விருப்பத்தோடும்வழிபடுவாயாக,—ஈண்டன் வேண்டினவிம்மை

யேதருங்கண்டிடே. எ-து. விரும்பியபோகத்தையு மிம்மை யிலேதருவனுதலால் அவனை மெய்யாகக் காண்பாயாக. எ-று. வன்மைசெய் தொண்டனென்பதனைக்கர்த்தாவையேவற்கொள்ளுந்தொண்டனெனினுமமையும்.

பூதமானவையென்னுஞ்செய்யுளு மிச்செய்யுளும், பூதங்களையுங்கூட்டிப் போகமோக்ஷங்களையுங்கொடுப்பவன் கர்த்தாவென்பதுகூறின. இதனால் வேண்டும்விடயமும் பத்திபண்ணுவையாகிலிம்மையினுமநுபவிப்பை. கடுகெனச்சிவனைவழிபடுகவென்பது. (உரு)

அடியார்களுக்கெளியன். எ-று. “பாரார்விசும்புளார்பாதாளத்தார்புறத்தார், ஆராலுங்காண்டற்கரியானெமக்கெளியபேராளன்” என்னுந்திருவாசகத்தை உதகரித்துக் காட்டினார் ஞானப்பிரகாசர்.

பொன்குலாவுமணிக்கலன்கண்மலம்புகிற்கைபொருந்திடா, மின்குலாமிடையார்கடாமுலகத்தின்வேட்கைவிடும்பொருள், புன்புலான்மலமூத்திராதிபொசிந்துநாறுபுலைக்கல, மெய்கொளாமலவர்மேல்விழுந்ததிலாற்றிலென்பெறுபெண்ணிடே. (உசு)

(இ-ள்.) பொன்குலாவுமணிக்கலன்கண்மலம்புகிற்கைபொருந்திடா. எ-து. பொன்னால்விளங்கப்பட்டநின்றமணிக்கலன் மலத்திடைவிழுந்தாலம்மலத்தினைத்தீண்டுதற் கையாலெடுத்தல் பொருந்தா, — மின்குலாமிடையார்கடாமுலகத்தின் வேட்கைவிடும்பொருள். எ-து. அதுபோல, உலகத்துமின் போலநுடங்கினவிடையையுடைய மகளிர்பாண்மிச்சவிருப்ப

முந் செயற்கையானுங்கிறேனுண்டாகிய வசுத்தமிருதிகண்டாசையைவிடத்தக்கபொருளாம். அஃதென்போலவென்னில், புன்புலான்மலமூத்திராதிபொசிந்நாறு புலைக்கலம். எ-று. புல்லிதாயவிரத்தமல மூத்திராதிகண்முதலானவைகசிந்துமிக வந்துர்க்கந்தத்தையுடைத்தாகிய பொல்லாக்காயமாகையால் என்கொலா மிவர்மேல்விழுந்த திவர்றினன்பெறுவெண்ணியே. எ-று. இம்மலமூத்திராதிகளி லென்னபெறுதற்குவிசாரித் திவர்களிடத்து விருப்பமுண்டாயது. அஃதல்லவாயின் யாதுண்டாம். எ-று. (உசு)

தோலிரத்தமிறைச்சிமேதையெலும்புமச்சைசுவே
தநீ, ராலெடுத்தமுடைக்குரம்பையாமழுக்கிறேடுபுழுக்
குழா, நாலொழுக்கிடுகோளைமயிரனுரைக்குமூத்திர
பாத்திரஞ், சேலடர்த்தகண்ணார்களென்பதுதேர்மல
த்திரடிண்ணமே. (உஎ)

(இ-ள்.) தோலிரத்தமிறைச்சிமேதை யெலும்புமச்சை சுவேதநீ ராலெடுத்தமுடைக்குரம்பை. எ-று. துவக்கு உதிரம் மாம்சம் மேதை அத்தி மச்சை சுக்கிலமுல மிவையிற்றினுலேயெடுத்துக்கொண்டதுர்க்கந்தமாகியகாயம்,— அழுக்கிறேடுபுழுக்குழா நாலொழுக்கிடுகோளைமயிர னுரைக்குமூத்திரபாத்திரம். எ-று. அதுவன்றியும் —ஊத்தையுடன் கிருமித்திரள் நாலொழுகுங்கோழை மயிர மிவைகளாற்பொங்கிநுரைக்கு மூத்திரபாண்டமாதலால் அப்படிப்பட்டகாயத்தையுடையமகளிர்,— சேலடர்த்தகண்ணார்களென்பது தேர்மலத்திரள்திண்ணமே- சேலிரண்டடுத்தாற்போலுங் கண்ணையுடையாரென்றுசொல்லுவதெத்தாலென்றுவிசாரிப்பாயாக; விசாரிக்குமிடத்துச் சர்வமுநிச்சயமாகமலத்தொகுதியாம். எ-று.

பொன்குலாவுமென்னுஞ்செய்யுளு மிச்செய்யுளும் பெண் போகத்தைமெய்யென்பதனை மறுத்துக்கூறின. (உஎ)

ஆசையுற்றுழல்சூகரங்களசுத்தமேவியளைந்துநின்,
றேசுகித்தனவாயிடுஞ் சுகமேழையோடு றுமின்பநீ,
மாசதற்றெளிர்நித்தசுத்தவளந்தருஞ்சுகவாரிகாணீச
னுக்கடிமைத்திறத்தினிசைந்துநாம் பெறுமின்பமே.

(இ-ள்.) ஆசையுற்றுழல்சூகரங்களசுத்தமேவியளைந்துநின் றேசுகித்தனவாயிடுஞ் சுகமேழையோடுறுமின்பநீ. எ-து. (இதனைப்பொருளுக்கேற்பமாறுக) அறிவின்மகளிரோடு நீ யின்பசுகமுறுவது ஆசைமிகுந்துத்தடுமாறும் பன்றியானது மலத்திற்புக்கதனைப்புசித்து அதனிற்புரண்டு மிகவுஞ் சுகத்தையடைந்தனவாய்நிற்பனபோலும். அங்ஙனமன்றியும்,— மாசதற்றெளிர் நித்தசுத்தவளந்தருஞ்சுகவாரிகாணீசனுக் கடிமைத்திறத்தி னிசைந்துநாம்பெறுமின்பமே. எ-து. (இதனைப்பொருளுக்கேற்பமாறுக.) கர்த்தாவுக்கடிமைத்திறஞ்செய்துயாங்கள்பெறுமின்பமாவது குற்றமற்றுவிளங்கும்படியாயழியாததாய் நின்மலமாயிருக்குஞ் சிறப்பினையுடைத்தாகிய வின்பசமுத்திரங்காண். எ-று. (உஅ)

இகழ்ந்தநீ ரேந்திழையார்தம்மைச் சீயென்றெண்ணு தகந்தனைவதென்னென்னிற் சொல்வோம் "புத்திரரைக்காமுற் றவர்தோட்புணர்வார்நல், லுத்தமரூ லோர்ந்தனைப்போலோ, காலமுமந்திரமு முண்டுகலவியினுங், காலமுமுண்டோ வுனக்குக்காண்" என்றுவிதந்துகூறினர் ஞானப்பிரகாசர்.

குரோதமேகுணமாயிருந்தவர் சாந்திநன்மைகுறிக்கொளார், ராகமேயணைவார்களாசை யறுத்தவின்பமறிந்திடார், பராவுதேவர்பராவுதூயபராபரன்னடி பற்றிநீ, விராவுமெய்யில்விடாதவின்பம் விளைந்திடும்மிது மெய்ம்மையே. (உக)

(இ-ள்.) குரோதமேகுணமாயிருந்தவர் சாந்திநன்மைகுறிக்கொளார். எ-து கோபமிகுதியையியல்பாகவுடையார் பொறையினாலுண்டாகிய நன்மையையறியமாட்டார், -ராகமேயணைவார்களாசையறுத்தவின்பமறிந்திடார். எ-து. ஆசையே தமக்குக்குணமாகவுடையவர்கள் அவ்வாசையையறுத்தவர்க்குண்டாகிய சுகத்தை யறியமாட்டார்கள், அவர்களைப் போல நீயுஞ்சிற்றின்பமாகிய அரிவையர் போகத்தைக்கைக்கொண்டுபேரின்பமாகியபிரமாநந்தத்தையறியாய். அஃதறிய விரும்பின், —பராவுதேவர்பராவுதூயபராபரன் னடிபற்றிநீ விராவுமெய்யில்விடாத வின்பம்விளைந்திடும் மிதுமெய்ம்மையே. எ-து. இந்திராதிதேவர்களாற்பரவப்பட்ட பிரமவிஷ்ணுக்களாற் போற்றிசெய்யப்படும் சுத்தமானபரைக்குமேலானவனது ஸ்ரீபாதங்களைப்பற்றுக்கோடாகக்கொள்வாயாக, அதனாலப்பொழுதே யுன்னுடைய சரீரந்தன்னிலே யொருக்காலு நீங்காத சுகாநந்தம்பிரகாசிக்கும். இதுசத்தியம். எ-று.

பராவுவிராவென்றசொல் நீட்டல்வழிநீட்டலென்க. (உக)

குரோதமேகுணமாயிருந்தவர் சாந்திநன்மைகுறிக்கொளார் ராகமேயணைவார்களாசை யறுத்தவின்பமறிந்திடார். எ-து "ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர், பொறுத்தா

னைப் பொன்போற் றெரிந்து" "பாபத்திற் கேதுநீங்காப் பழியினிற் கேதுவென்றே, கோபத்தைக்கடிந்தார்தாமே யின்புறுங்குணத்தாரிங்குங், கோபக்கூர்வாளையுள்ளாமெனுமுறை றவைத்துக்கொண்டாற்; றுபத்தையுறுவாரிங்கு மஞ்சுமார்சார் பாவாரே." "எதிர்யானை கோபமெழுபோதிலொறி யினிதாய கற்றெய்திரே, தெரியாதிரார்கள் பெரியோர்கள்சீற நினைவார்க் கல்வேறுசிலரே" "நஞ்சயின்றுகாத்தருளு நம்பனைப்போற் றெய்வமில்லை, யஞ்செழுத்தைப்போல்நல் லனுவுமில்லை, விஞ்சி யொளிர், சைவசமயந்தனைக் கொப்பாஞ் சமயமில்லை, தூய்ய டொனைறக் கொப்பாஞ் சுகம்" என்பதும், "அவாவென்ப வெல்லா வுயிர்க்குந், தவா அப்பிறப்பீனும்வித்து" "இன்பமிடையறா தீண்டுமவாவென்னுந், துன்பத்துட்டுன்பங்கெடின்" "வேண்டாமையன்ன விழுச்செல்வமீண்டில்லை, யாண்டுமஃ தொப்பதில்" "வேண்டுங்கால்வேண்டும் பிறவாமைமற்றது, வேண்டாமை வேண்டவரும்" "ஆசைபடப்படவாய்வருந் துன்பங்க, ளாசைவிடவிடவானந்தமாமே" "ஆசைக்கடியா னகிலலோகத்திற்கு, மாசற்றநல்லடியானவன்,—ஆசை, தனையடிமைகொண்டவனே தப்பாதுலகந், தனையடிமைகொண்டவனேதான்" "ஆசையறச்சொப்பா மருந்துமற்றொன்றில்லை, யாசையறற்கொப்பாமின்பாகிதனை-யூசைபணற், கொப்பாந்தருமமில்லையொன்றொருவற்கோதற்,கொப்பாம்பெருமையில்லையோர்" என்றும், மெய்யிலெவிடாத வின்பம் விளைக்கும். எ-து. திருவாசகம் "காயத்துள்ளமுதூறவூறநீ கண்டு கொள்ளென்றுகாட்டிய, சேயமாமலர்ச் சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே." எ-ம். சிவதருமோத்திரம். "ஆசைமுதலாமாசனைத்துமறுத்தேவடலும்வெறுத்தரிய, தேசன்சிவன்

பொற்பாதமலர் சேர்ந்தார்பிறப்பைமறந்தார்கள், பேசற்க
ரிய பெருமையினைப் பெற்றுச்செல்வர்களானார், மாசுமலிந்த வா
சையினான் மயங்கித்தியங்குமாறுடனே" எ-ம். நக்கீரர்
"வென்றைந்துகாமாதி வேரறுத்து மெய்ம்மலமே, வென்ற
வினைதீர வொன்றலாஞ்-செங்கை, மானுடையா னென்
னையுடையானவடகயிலை, தானுடையான் றன்னுடையதாள்."
எ-ம். உதஹரித்தனர் ஞானப்பிரகாசர்.

காமமாதி குணங்களைச் சுகமென்று கொண்டனை யாத
றாமமாரழலங்கி சீதமலிந்தபோது சுகந்தரு [வாற்
நாமமார்தருநீதம்வெம்மைமலிந்தபோதுதருஞ்சுகந்
சேமமாகியவின்ப மாமிகுதெய்வநன்னெறி சேரவே.

(இ-ள்.) காமமாதி குணங்களைச் சுகமென்று கொண்டனை, எ-து. காமக்குரோத லோபமோக மதமாற்சரிய மிடும்பை யகங்காரமென்கின்ற விவைகளைச் சுகமென்று கொண்டாய். அவ்விதத்தன்மையென்னில், காதலாற் றாமமாரழலங்கி சீதமலிந்த போது சுகந்தரும். எ-து. குளிர்மிக்ககாலம் வெப்பமிருப்பதனால் புகைபொருந்தின வழல் சுகத்தைத் தருவதுபோலவும்,—நாமமார்தரு நீதம்வெம்மை மலிந்தபோது தருஞ்சுகம். எ-து. வெப்பமிகுந்த விடத்துப் புனலென்று பெயரையுடைய நீரின் குளிர்ச்சியை யடைந்தபோது சுகத்தைத் தருவதுபோலவுமாம், காமமாதிகளா லுண்டாகிய சுகம். இஃதன்றி,—சேமமாகிய வின்பமாமிகு தெய்வ நன்னெறி சேரவே. எ-து. கர்த்தாவினுடைய ஞானமார்க்கத்திலே கூடினவொருக்காலும் விடாத வின்பமுண்டாம். அதனாலதனோடே கூடுவாயாக. எ-து. காமமாதி யென்றதனுற் காமக்

சுகமிருவகைத்து, அவை சாங்க முபாங்கமென்பன. சாங்கமாவன, ஆலிங்கனமு முத்தமு மிடற்றிறுவண்டாமொலி பேதங்களு நகக்குறிகளும் பல்லிடு குறியுமங்கதாடகமுஞ் சும்பகமுதலிய விவைபோல்வன. உபாங்கமாவன. அன்னவ ஸ்திரபூஷண சந்தன தாம்பூலாதிகள். (௩௧)

காமமாதி குணங்களைச் சுகமென்றுகொண்டனை காதலாற் றாமமார மலங்கிசீத மலிந்தபோது சுகந்தரு காமமார்தரு சீதவெம்மை கலிந்தபோது தருஞ்சுகம். எ-கு. காமமென்னுஞ் சுரத முதலிய குணங்களை யுனதறியாமையாலும் விருப்பமிகுதியாலுஞ் சுகமல்லாதிருக்கவும் ஒருபாதியினாலே சுகமென்று கொள்ளா நின்றனை, அவை சுகமன்று, எப்படியென்னில்? புகையொடுங் கூடியமலாகிற்கு மக்கினியானது சீதமானது மிகுந்தபோது சுகத்தினைத்தரா நிற்கும், பயத்தினைச்செய்யுஞ் சீதமானது உஷ்ணமிகுந்து வருந்தினபோது சுகத்தினை யுதவாநிற்கும். இவையிரண்டு மெப்போது நித்தியமாய் நிலைநிற்பதல்ல. அஃதன்றியும், ஒன்று மிகுந்து வருந்தினபோது ஒன்று சுகம்போன்றிருத்தலா லிரண்டுந் துக்கமென்றேயறிக. ஆதலாலிவைபோ லுன்னுடைய காமமென்னுஞ் சுரதமுதலிய குணங்களென்றார் ஞானப்பிரகாசர்.

படிக்குநூல்கள் சிவாகமம் பசுபாசமோடுபதித்திற, மெடுத்தியம்புவதீசன் வார்கழலேத்திடுந் தொழிலென்றுமே, விடுத்திடும் பொருள்காமமாதிகள் வேண்டிடும் பொருளீண்டருள், முடிக்குமும்மலம்விட்டு நின்மலனோடு நின்றிடன் முத்தியே.

(இ-ள்.) படிக்குநூல்கள் சிவாகமம். எ-து. சிவநெறியாகிய பேரின்ப மெய்தப்படிக்கு நூல்களாவன? வேதாகமங்

கள்,— பசுபாசமோடு பதித்திறமெடுத்தியம்புவது. எ-து. அவர்களெடுத்துச் சொல்லுஞ் சொல்லாவது? பதிபசுபாசத் திறங்கள்,—ஈசன் வார்கழலேத்திடுந் தொழில். எ-து அவர்கள் கிரியையாவன? பரமேச்வரனுடைய ஸ்ரீ பாதங்களை வணங்குகை,—என்று மேவிடுததிடும்பொருள் காமமாதிகள். எ-து எப்போது மவர்கள் கைவிடும்பொருளாவன? காமக் குரோதமுதலானவை,-வேண்டிடும் பொருளிண்டருள். எ-து. அவர்கள் வேண்டும் பொருளாவன? மிக்கவருள்,—முடித்து எ-து. ஆகையாலிப்படி மூன்று பதார்த்தத்தையு முற்றுப் பெறநிறுத்தி,—மும்மலம் விட்டு நின்மலனோடு நின்றிடன் முத்தியே. எ-று. மலத்திரயங்களையும் விட்டுக் கர்த்தாவோடு கூடுதல் முத்தியின்பம். ஆதலால், நீயு மிச்செயலிலே நிற்பாயாக. எ-று. இதனுள் நாலுபாதமு மடங்கியவாறு கண்டு கொள்க.

ஆசையுற்றுழலென்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுட்காறு முலோகாயதனை நிராகரித்துப் பேரின்பத்தை யநுபவியென்று கூறியது.

உள்ளதாவதென்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுட்காறுஞ் செய்யுண்முப்பத்தொன்றினு முலோகாயதன் மதத்தைமறுத்துக் கூறியது. பிரகஸ்பதி யிந்திரனை மயக்கியவழியை நீக்கிப் பரமேச்வரனை வழிபடுவாயென்பது கருத்து. உலோகாயதர் மிச்சிரசார்வாகன், இரணிய கர்ப்பசார்வாகனென் றிருதிறத்தர்.

உலோகாயதன் மதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்-௩௨.

பௌத்தரிற் சௌத்திராந்திகன் மதம்.

நீதியார்வேதநூலி னெறியலாவறங்களோது
மோதியோனைந்துசில முடையாயுடலூழிப்
போதிநீண்மரத்தின்மேவும் புத்தர்நால்வரினும்வைத்
துச், சாதிதானில்லாதகொள்கைச் சௌத்திராந்திகன்
முன் சாற்றும். (௧)

(இ-ள்.) நீதியார் வேதநூலி னெறியலாவறங்களோ மோதி. எ-து. நீதிசாத்திரத்தைத் தனக்கங்கமாகப் பொருந்திய வேதநூனெறியல்லாதவாக்கிய நெறியாகிய பிடகநூலை நாடோறு மோதி,—ஐந்து சீல முடையாய். எ-து. உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானமென்று மைந்து கந்தங்களின் குணங்களை யுடையாய்,— உடலூழி. எ-து. உடலைத் திவராடையாற் போர்த்து,—போதி நீண்மரத்தின் மேவும் புத்தர்நால்வரினும் வைத்து. எ-து. அரசினைத் தெய்வம்போலப்பேணி யதன்கீழ்ப் பொருந்தியிருக்கும் பௌத்தர் நால்வகையுள்ளவர்களையும்வைத்து அவர்களில்,—சாதிதானில்லாதகொள்கைச் சௌத்திராந்திகன்முன் சாற்றும். எ-து. வருண பேதமறக்காணுஞ் சாதியில்லாத சௌத்திராந்திகன் முன்னேசொல்லாநின்றான். எ-று. புத்தர்நால்வரினும் வைத்து. எ-து. பௌத்தர் நால்வரினு முட்கோளாகக் கொண்டென்க. நால்வராவார். சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்திமிகன், வைபாடிக னென்போர்.

மேற் பௌத்தன் மதங் கூறுவானெடுத்துக்கொண்டார் அதனுள்ளிச் செய்யுளாவர்களுள்வகையென்பது உம் அவனைமுன்

னர்ச் சொல்லப்படுவான் சௌத்திராந்திகனென்பதூஉங்கூறி யது. நீதியார் வேதமாவது:—லௌகிகதன்மமாகிய சோதிடம் வியாகரணம் சிற்பம் பாதம் சிக்ஷை சந்தஸ் எனக்கொள்க. நெறியலாவறங்களாவன:—ஐராத்மவாதமும், அகத்திருவாதமும், ஆகாசம், காலம், திக்கு. கர்மஜ்ஞாத்பாவமு மில்லையென்றும், குணியுமவயவியு மில்லையென்றும், பிறவுமெனக்கொள்க. ஐந்து சீலமாவன:—அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமசரியம், சங்கிரகம், எனக்கொள்க. இவ்வைந்து சீலமும் சார்வதற்கும், சாரணர்க்கு தசசீலம; உபசம்பன்னர்க்கு நூறுசீலம், சுவகிரருக்குக் கோடி சீலம், இப்படி நிலைதோறுஞ் சீலம் பலவாம். (க)

ஓத்யோனைந்து சீலமுடையாராய் என்பதனை மற்றொருவாசிரியர் (ஒதியீரைந்து சீலமுடையராய்) எனக்கொண்டு பத்துச் சீலங்களையுடையராய் எனவும் பொருள்கூறினர். பத்துச் சீலமாவன கொல்லாமை, பொய்சொல்லாமை, களவின்மை, காமமின்மை பிறர்பாலிரவாமை என வைந்தும், உயர்த்தவாதனத்திருத்தல், கிடத்தலின்மை, சந்தனமாலை முதலாயின தரியாமை, பொன்வெள்ளி கொள்ளாமை, பாடலாடல் விரும்பாமை உதயத்திற்குமுன்பு புசித்தல் எனவும் உரைத்திருக்கின்றார். ஞானப்பிரகாசர். ஐராத்மவாதமென்னுங் கொல்லாமை முதலியவைந்தும் பிரதம சீலமாகையாற் சீலமைந்தெனக் கொள்க என வற்புறுத்தியுரைத்தனர். அன்றியும் சாதிதாவில்லாதகொள்கை. எ-கு. சாதி திரவியம் நாம குணாதி கர்ப்பஞ்ஞாதிவேதனையில்லாத என்றார்.

முழுதுணர்ந் துலகிற்கோறன் முதற்செயன் முனிந்து
பழுதிலாவருளினாலே பரதுக்கதுக்கனுகித் [மற்றும்
தொழுதுவானவரும் போற்றத் தொல்பிடகங்களான
வழுவிலாகமங்கள் சொன்னமாதவனுதனுவான். (உ)

(இ-ள்.) முழுதுணர்ந் துலகிற்கோறன் முதற்செயன் முனிந்து. எ-து. சர்வத்தையுமறிந்து பிரபஞ்சத்திற்பொய் கொலை களவு கட் காமங்களை வெறுத்து,—மற்றும் பழுதிலா வருளினாலே பரதுக்க துக்கனுகி. எ-து. குற்றமில்லாத கிருபையாலே யெவ்வுயிர்த் துன்பமுந் தன்னுயிர்த்துன்பம் போற்கொண்டு,—தொழுது வானவரும்போற்றத் தொல்பிடகங்களான வழுவிலாகமங்கள் சொன்ன மாதவனுதனுவான். எ-து. தேவர்களுந்தொழுது துதிக்கப்பட்டுவரும் பழைய பிடகநூலாகிய விகழ்ச்சியில்லாத வாகமங்களை யருளிய புத்த முனியே கர்த்தாவாவான். எ-று. பழுதிலாவருளென்பன, இராச்சியத்தைக்கொடுத்தும் பிள்ளைகளைக் கொடுத்துந் தன் கண்ணைக்கொடுத்து முதிரமாம்ச முதலாயின புறவுக்கரிந்து கொடுத்தும் வையங்காத்தல் முதலியவை.

இச்செய்யுள் பரதுக்க துக்கனுய்ப் பிடகநூலை யருளிய சர்வஞ்ஞனுகிய புத்தமுனியே கர்த்தாவென்பது கூறியது. ()

"அருளெறியாற் பார்மித்தை யாறைந்து முடனடக்கிப், பொருண் முழுதும் போதிகிழ னன்குணர்ந்த முனிவரன் றன்" இஃது தவர்கள் சித்தாந்தத் தொகை. பிறர்க்கே யுறு திக்குழன்றுன். இது குண்டலகேசி. தொல்பிடகமென்றவை, தண்ணங்காரன் மகாவீரன் முதலாயின இருபத்துமூன்று புத்தர்களுஞ் சொன்ன பிடகசாத்திரங்கள். மரபே சொன்ன

மையான் அவை விம்மாய பிடகம், சூத்திர பிடகம், அபிதன்ம பிடகம் ஆக மூன்று மென்க. வழுவிலாகமம், மூன்ஞெடு பின் மலையாத சாத்திரம். மற்றும் என்றதனுல் ஸ்ரீ லக்ஷண பாவனையும், தசபார்மிதையும். "தானஞ் சீலம் சகிநிஷ்கர்மம் பிரக்கி,ஞாவிரியேந பஞ்சமம், கிரதி பஞ்ச திஷ்டாநமேத்ரீ விபட்சாநி தேதசா" இதுவும் பிடகம் பன்னிரு சார்பு முதலானவையாம். இவற்றில் ஸ்ரீ லக்ஷண பாவனையாவது, அநித்தியம் துக்கம் அநான்மா வென்று பாவிக்கை. தசபார்மித்தையாவது, தானம் சீலம் பொறை நிஷ்கர்மம் பிரக்கினை வீர்யம் சத்தியம் துணிவு மயித்திரி பிதாகம் இவை பத்து மூயிருறுப்புப் பொருணேர்ச் செய்கையான முப்பதாம். பன்னிருசார்பாவன, "பேதமை செய்கை யுணர்வேயருவுரு, வாயிலூறலே நுகர்வே வேட்கை, பற்றே பவமே தோற்றம் வினைப்பயனிற்றென வகுத்த வீராறு மண்ணிற், பிறந்தோரறியிற் பெரும்பேறறிகுவ, ரறியாராகிலாழ் நரகிருப்பர்" இது மணிமேகலை. பழுதிலாவருளாவது ராஜ்யத்தைக் கொடுத்தும் பிள்ளைகளைக்கொடுத்தும் கண்ணைக்கொடுத்தும் உயிர்முதலாயின கொடுத்தும் புறவுக்காகத் தசையரிந்து கொடுத்தும் அபயங் காத்தலிவை முதலாயினவாம். இதற்கவர்கள் வசநம் "மிக்கதநங்களைமாறி மூன்று பெய்யும் வெங்களிற்றை மிகுசிந்தாமணியை மேனி, யொக்கவரிந்தொரு கூற்றையிரண்டு கண்ணையொளிதிகழுந் திருமுடியை யுடம்பிலூனை, யெக்கிவிழுங் குருதிகளை யரசுதனை யின்னுயிர்போற்றேவியரை யீன்றெடுத்த செல்வ, மக்களை வந்திரந்தவர்க்கு மகிழ்ந்தேயீயும் வானவர் தாமுறைந்தபதி மாணூரே." "எண்ணிறந்த காலங்களெம்பொருட்டான் மிகவுழன், றெண்ணிறந்தகாலங்களிரு

டீர வொருங்குணர்ந்து, மெண்ணிசுத்தானமுஞ் சிலமிலை யர்க்கி, யெண்ணிக்கந்தருண த்திறு னெம்பெருமானல்லனே." இது திருப்பதிகமெனக்கொள்க. என்று விசேஷித்துரைத்த னர் ஞானப்பிரகாசர். இதில் மற்றொருவாசிரியர் தசபாரமிதையில் பிராகம் என்பதனை நீக்கி விராகம் என்றும், பன்னிருசார்பில், பேதைமைசெய்கை உணர்வு அருவுருவாயிலூறு நுகர்வு வேட்கை பற்று பவம் தோற்றம் வினைப்பயன் பிணி மூப்பு தணியாச்சார்பு. எ-ம் பழுதிலாவருள். எ-கு. உயிர் களை யிரக்ஷித்தலும் மரங்களை வளர்த்தலுமாம். எ ம். பிடக நூலில் விம்மாய பிடகமென்பதனை நீக்கி அபிநய பிடகத்தைச் சேர்த்து மூன்றெனவுங்கூறி விசேஷித்தெழுதியிருக்கின்றார்.

மருவியவளவைகாட்சி மானமென்றிரண்டிவற்றாற்,
கருதியபொருள்கள்ஞான ஞேயமாய்க்கணத்திற்பங்
கம், வருமுருவருவம்வீடு வழக்கென நான்கதாகித்,
தருமவையொன்றிரண்டாய்த்தான்விரிந்தெட்டினுமே

(இ-ள்.) மருவியவளவைகாட்சி மானமென்றிரண்டு. எ-து. பிடகநூலிற் பொருந்திக்கொள்ளப்படு மளவையாவன? காட்சியு மநுமானமு மென விரண்டாம்,—இவற்றாற் கருதிய பொருள்கண் ஞான ஞேயமாய்க் கணத்திற்பங்கம் வரும். எ-து. இக்காட்சியாலு மநுமானத்தாலு மறியப்படும் பொருள்க ளறிவு மறியப்படும் பொருளுமா யொருமாத்திரையிற் கெட்டுவரும்,—உருவருவம் வீடுவழக்கென நான்கதாகித் தருமவையொன்றிரண்டாய்த் தான்விரிந்தெட்டினுமே. எ-து. ஞானஞேயங்களினு உருவுமருவும் வீடும் வழக்குமென நான்காகி யக்நான்குமொன்றிரண்டாக விரிந்தெட்டாகத் தரும்

எ-று. கணத்திற்கெடுகை நால்வகை. அவையாவன:—கெட்டுவர்த்தித்தலும், கெட்டுக்ஷயித்தலும், கெட்டொத்து நிற்றலும், கெட்டுக் கெட்டேபோதலும். கணம் தாமரையிதழை யடுக்கி யுளியிட்டடித்தா லெட்டிதழறுமெல்லை.

இச்செய்யுள் பௌத்தசமயத்திற் கொள்ளுமளவை யின்னதென்று நால்வகைப் பாரிப்புங் கூறியது. (௩)

மருவியவளவை. அவிசங்வாதி விக்கியானம்; பிரமாணமாதி அதிற்பிரிவு. காட்சி. எ-து. பிரத்தியக்ஷம். கல்பனாபோதம் பிராந்தம். அப்பிரத்தியக்ஷந்தான், இந்திரியப்பிரத்தியக்ஷம் மானதப் பிரத்தியக்ஷம், யோகப்பிரத்தியக்ஷம், சுவசம் வேதனைப் பிரத்தியக்ஷம் என நால்வகைப்படும். அநுமானம், சுவார்த்தாநுமானம் பரார்த்தாநுமானம் என விரண்டு வகைப்படும் என விரித்தோதினர் ஞானப்பிரகாசர்.

மற்றொருரையாசிரியர், கெட்டுக் கெட்டுவருதலும், கெட்டொத்து நிற்றலும், கெட்டுக் குறைதலும், கெட்டு வளர்தலுமெனு நான்கும், முறையே வாயுவுந் தீபமும் நீருமெறும்பொழுக்கு முதாரணமாமெனவும், வழுவிலாகமங்கள் சொன்ன மாதவனுரைத்தனனக்கூறி யீண்டுபிரமாண மிரண்டென்றல் மலைவாமெனில் ஈண்டவ் வாகமமாகிய பிடகநூல் காட்சியுமநுமானமுமாகிய விரண்டினையுமே கூறுதலின் மலைவாகாதென்க என்று பொருளுரைத்தனர்.

உருவியல்பூதமோடங் குபாதாயரூபமாகு
மருவியல்சித்தங்கன்ம மென்றிரண்டாகும்வீட்டின்
மருவியல்குற்றங்கந்த மெனவழங்கிடும்வழக்கி
னிருவியலுள்ளதோடங் கில்லதாயியம்புங்காலை. (௪)

(இ-ள்.) உருவியல் பூதமோடங்குபாதாய ரூபமாகும். எ-து. உருவினதியல்பு பூதவுருவத்துடனே யுபாதாயரூபமென விரண்டாம்,—அருவியல் சித்தங்கன்மமென் றிரண்டாகும். எ-து. அருவியல்பு சித்தவருவென்றுங் கன்மவருவென்று மிரண்டாகும்,—வீட்டின் மருவியல் குற்றங் கந்தமென வழங்கிடும். எ-து. வீட்டினது பொருந்தின வியல்பு குற்றவீடென்றுங் கந்தவீடென்று மிரண்டெனப்படும்,—வழக்கினுருவியலுள்ளதோடங்கில்ல தாமியம்புங்காலே. எ-து. வழக்கினியல்புள்ளது; அஃதாவது உள்வழக்கென்று மில்வழக்கென்றும் வழங்கப்படுஞ் சொல்லுமிடத்து. எ-று.

இச்செய்யு ளுருவ மருவம் வீடு வழக்கென்னு நான்குமொன்றிரண்டான பகுதியை யுணர்த்திற்று. இயல் இயல்பு. உபாதாகம் உபாதாயமென்றும் பேராம். உபாதாயம் பற்றப்படுவது. உருவியல்பாவது சைதன்னிய ரூபமென்றும் அசைதன்னிய ரூபமென்றுமிரண்டாம். சைதன்னியரூபம் பதினெட்டுக்கூடியது. அதுதான், பஞ்சேந்திரியங்களு மவற்றின் விஷயங்களும் ஸ்ரீ பும் லகமான பாவரூபமிரண்டும் இருதயமொன்றும் ஆகார ரூடமும் பூதநாலுமாம். அசைதன்னியரூபம் முன்சொன்ன வெட்டாம். (சு)

மண்புனலனல்கால்பூதம் வலிகந்தமிரதம்வன்ன
மெண்டருமுபாதாயந்தா னிவைபிருநான்குங்கூடி
யுண்டொருபொருளுருப முறுபுலனுபாங்கமோடக்
கண்டதுசித்தங்கன்ம நன்றுதீதென்றல்காணே. (ரு)

(இ-ள்.) மண்புனலனல்கால் பூதம். எ-து. பூதவுருவாவது பிருதிவி அப்பு தேயு வாயு என நான்காம்,—வலிகந்த

பிரதம் வன்னமெண்டரு முபாதாயந்தான். எ-து. உபாதாய ரூபமாவது கடினம் கந்தம் இரதம் வன்னம் என நான்காக வெண்ணத்தகும்,—இவையிருநான்குங் கூடியுண்டொரு பெயருளுருபம். எ-து. இவையெட்டுங் கூடியவிடத்தில் யாதொரு பொருளுண்டாவது அஃதுருவாம்,—உருபுலனு பாங்கமோர் டக்கண்டது சித்தம். எ-து. புலன்கள் பொறிவழியோடி யறிய வதனைக்கண்டது சித்தவருவாம்,—கன்மநன்று தீதென் றல்காணே. எ-து. அப்படிக் கண்டபொருளை நன்றென்றுந் தீதென்றுங் காண்டல் கன்மவருவாம். எ-து. கன்மம் கன்ம பலம்.

இச்செய்யுண் முன்னுரைத்த வெண்வகை யுருக்களுமருக் களு மிரண்டுங்கூறியது. (ரு)

அட்டகருபத்துக்கு வசநம். "உருவியாதென மொழித் தாற் பூதமுபதாவுந், தெரிய வுரைப்பினில வீர்தீவளி பூத முபதாக்க, டெரிய வுரைப்பினிலனூர்ரஞ் சேறெண்ணெளி வலி நான்கு மூரியவான வெண்ணியல்வோடொழுக்தனவு முள வென்றனே." இன்னும். நிலம்வலிது நீரது வன்னத் தீத்தேறுங் காற்றுள்ளும், புலமா மாறிப் பொருள்வரையறுக் குமா கால, நலமாண்— காற்பூதமுஞ் சார்வாக வுபதாக்கள், சொலன்மாண்ட வியற்கை தானீ்முதலாகச் சொல்லற்பா ற்றே." புலனுபாங்கமோடிக் கண்டது சித்தமென்றது கண்க ளுஞ் செவிகளுஞ் கரசரணாதிகளும் வழங்கக் காண நின்றது சித்தமென்க. கன்மஞ் சுகதுக்கமாமென்க, கன்மமென்ப ததின் பலமென்பது கருத்து. இஃது ஞானப்பிரகாசருரை விசேடம்.

மற்றோருரையாசிரியர். கன்ம நன்று தீதென்றல் காணே, எ-று. கன்மமென்றுவது நன்றென்று சொல்லப்படும் புண்ணியமும் தீதென்றுசொல்லப்படும் பாவமுமாமென்றறிவாயாக என்றனர். தேயுவுக்கு வன்னமும் வாயுவுக்குக் கந்தமும் உபாதாய மெனக்கொள்க. சித்தத்துக்குப் புத்தியென்று மனமென்றும் பெயர். இருநான்கும்கூடி யுண்டொரு பொருளுருபம் என்றதனால் உருவ கந்தமும், உபாங்குஞ் சித்தம் என்றதனால் குறிப்புக் கந்தமும், ஓடக்கண்டது என்றதனால் விஞ்ஞானகந்தமும், நன்று தீதென்றல் என்றதனால் வேதனாகந்தமும் பாவனாகந்தமுமாகிய வைந்துகந்தமுங் கொள்ளக் கிடந்தமையுய்த்துணர்ந்துகொள்க. அவற்றுள், உருவகந்தமாவது, பூதநான்கும் உபாதாயநான்குமாகிய வெட்டுமாம். குறிப்பு கந்தமாவது சோத்திராதியைந்தும் சித்தமொன்றும் ஆகிய கருவிகளாறுமாம். விஞ்ஞான கந்தமாவது அந்தக்கருவிகளாலறிவு மாறறிவுமாம். வேதனாகந்தமாவது குசலாவேதனை, அகுசலா வேதனை, குசலாகுசலா வேதனை, ஆகிய மூன்றுமாம்; அவற்றுட் குசலா வேதனை சுகவறிவு, அகுசலா வேதனை துக்கவறிவு. குசலாகுசலா வேதனை சுகதுக்கவறிவு. பாவனா கந்தமாவது புண்ணியம் பத்தும் பாவம் பத்துமாகிய விருபதுமாம். அவற்றுள் புண்ணியம் பத்தாவன, அருள், அவாவின்மை, தவத்தின்கண் விருப்பம், என மனத்தானிகழு மூன்றும் இனியவைகூறல், மெய்மைகூறல், பயனுள கூறல், அறமுரைத்தல், என வாக்கானிகழு நான்கும் வணக்கம் ஈகை தவஞ் செய்தல் எனக் காயத்தால் நிகழு மூன்றுமாம். பாவம் பத்தாவன தீயன சிந்தித்தல், ஆசை, கோபம், என மனத்தால் நிகழு மூன்றும். கடுஞ்சொல், பொய்கூறல், பயனில்சொல்

கோட்சொல்லுதல், என வாக்காளிகளு நான்கும், களவுகொள்ளுதல் விண்செய்கை எனக் காயத்தாளிகளு மூன்றுமாம் ஆக பஞ்சகந்தவிரிவு ௪௫-ஆம். "எட்டிவை யுருவமொன்று வேதனை யாறு ஞான, மொட்டிய குறிப்போராறு செய்கையு மிருபதாகக், கட்டிய பஞ்சகந்தங் கணத்தினிற் பங்கமாகித், தொட்ட நாற்பத்து மூன்றுஞ் சுகத நூற்றுணிவுதானே" என்னு மவன் வசனத்தாலுணர்க, என்று விசேடித்துக் கூறியிருக்கின்றனர்.

குற்றவிடா ராகமாதிக் குணங்களைக் குறைத்தலாகு
மற்றவீ டுருவமாதி யைந்தையு மாய்த்தலாகுஞ் [மூன்று
சொற்றருந் தொகைதொடர்ச்சி மிகுத்துனா வென்று
யுற்றிடும் வழக்கிரண்டு மொன்றுமூன் றாகியாகும். (௯)

(இ-ள்.) குற்ற விடாராகமாதிக் குணங்களைக் குறைத்தலாகும். எ-து. இராகாதிகுணங்கள் பொன்றக்கெட்டு முத்தியின்பமடையாது கேட்டை கெட முத்தியின்பமடையு மென்றது குற்ற வீடாம்,—மற்ற வீடுருவமாதியைந்தையு மாய்த்தலாகும். எ-து. உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானமென்னும் ஐந்து கந்தங்களுஞ் சந்தானத்துப் பொன்றக்கெட்டடைவது கந்தவீடாம்,—சொற்றருந் தொகை தொடர்ச்சி மிகுத்துனாவென்று மூன்று யுற்றிடும் வழக்கிரண்டு மொன்று மூன்றாகியாகும். எ-து. உள் வழக்கில் வழக்கென்று கூறப்பட்ட வழக்கிரண்டில், தொகை யுண்மை வழக்குந் தொகையின்மை வழக்கும், தொடர்ச்சி யுண்மைவழக்குந் தொடர்ச்சியின்மை வழக்கும், மிகுத்துனையுண்மை வழக்கு மிகுத்துனையின்மை வழக்குமென வாறாகியியும். எ-து. அராகாதி குணங்களைக் குறைத்தல் குற்றவீடெனமாறுக. உருவமாதியைந்தையுமாய்த்தல் மற்றை வீடெனமாறுக.

இச்செய்யு ளிருவகைக்குற்றமும் வீடு வழக்கினைத்தென் பதுங் கூறிற்று. உருவமாதியைந்தாவன உருவ கந்தம் வேதனைகந்தம் சஞ்ஞான கந்தம் விஞ்ஞான கந்தம் சங்காரகந்தம் எனவாம். தொகை கூட்டம். தொடர்ச்சி சந்தானத்தொடர்ச்சி. மிகுத்துவ தோற்ற நாசம்.

ஒருவனென் றோதப்பட்டா னுருவாதியைந்துங்கூடி
வருபவனென் றுரைத்த றொகையுண்மைவழக்கதாகு
முருவமங்காதியாய வைந்தையுமொருவனின்று [லே.
தருவதுதொகையினின்மை வழக்கதாஞ் சாற்றுங்கா

(இ-ள.) ஒருவனென் றோதப்பட்டா னுருபாதியைந்துங் கூடி வருபவனென்றுரைத்த றொகையுண்மை வழக்கதாகும். எ-று. ஒருகர்த்தாவென் றுரைக்கப்பட்டவ னுருவமுதலிய வைந்தோடுங்கூடி வருபவனென்று கூறுதல் தொகையுண்மை வழக்காம்,—உருவமங்காதியாய வைந்தையு மொருவனின்று தருவது தொகையினின்மை வழக்கதாஞ் சாற்றுங்காலே. எ-று. உருவமுதலிய வைந்தையு மொருகர்த்தா வதனோடுங் கூடாம னீங்கிநின்றுண்டாக்குவனென்பது தொகையின்மை வழக்காம் சொல்லுங்காலத்து. எ-று.

இச்செய்யுண் முற்கூறிய வறுவகைவழக்கினுட் டொகையுண்மை வழக்குந் தொகையின்மை வழக்குங் கூறிற்று. (ஞானம்.) சுவரும் மரமும் மரக்கையுங் கற்றையுங் கூடின சமுதாயத்தை வீடென்று வழங்குமா போலவும், பல வூருங் கூடி நாடென்றும் பற்றென்றும் வழங்குமா போலவும், பஞ்சகந்த கூட்டத்தை யான்மாவென்று வழங்குமது கற்பனை நாமமெனக் கொள்க.

(எ)

மரங் கற்றை முதலியவற்றைப் பிரித்தால் வீடில்லையானாற்போலவும், ஊர்களைப் பிரித்தால் பற்று நாடுமில்லையானாற்போலவு மைந்துகந்தங்களையும் பிரித் துணருங்கால் ஆன்மாவில்லையாமெனக் கொள்க. இது பிரத்தியஞ்ஞாநிஷேதமெனக்கொள்க. பிரத்தியஞ்ஞாவாவது அதுவே யிதுவென்கை. என்றார் ஞானப்பிரகாசர்.

காரணகாரியத்தின் றொடர்ச்சியாய்க் காலமூன்றின்,
சோர்வறத்தோன்றுங்கெட்டு வழியென்கைதொடர்ச்
சியுண்மை, யோர்தனிஞொருவனையெக் காலத்துமுள்
ளானென்று, தேர்வது தொடர்ச்சியின்மை வழக்க
தாஞ் செப்புங்காலே. (அ)

(இ-ள்.) காரணகாரியத்தின் றொடர்ச்சியாய்க் காலமூன்றின் சோர்வறத்தோன்றுங் கெட்டுவழியென்கை தொடர்ச்சியுண்மை. எ-து. காரணகாரியமென்னுந் தொடர்ச்சியுடையவாய்க் காலமூன்றென்று மயக்கமறக் கெட்டுத் தோன்றுமென்னும்வழி தொடர்ச்சியுண்மை வழக்காம்,—ஓர் தனிஞொருவனே யெக்காலத்து முள்ளானென்று தேர்வது தொடர்ச்சியின்மை வழக்கதாஞ் செப்புங்காலே. எ-து. ஒருகர்த்தாவே காரணகாரியத்தின் றொடர்ச்சியா யெக்காலத்து முள்ளானென்று சொல்லுவது தொடர்ச்சியின்மை வழக்காமுணர் வினாற் சொல்லுமிடத்து. எ-று. ஓர்தரிற் செப்புங்காலென்று கூட்டுக.

இச்செய்யுள் தொடர்ச்சியுண்மை வழக்குந் தொடர்ச்சியின்மை வழக்குங்கூறிற்று. காலமூன்றாவன செல்காலம் வருகாலம் நிகழ்காலம். பொருளின் றிரிபொழியக்காலமென் றது கற்பனா நாமம்.

தோற்றியபொருள்களெல்லா நாசமாமென்றுசொல்லு, மாற்றமுன்னுரைத்தன்மற்றை மிகுத்துரைவழக்கினுண்மை, போற்றியபொருள்கண்கட்குப் போனதுபோன்முதிர்ந்து, வேற்றுமைப்பட்டதென்கை மிகுத்துரையில்வழக்கே. (௬)

(இ-ள்.) 'தோற்றியபொருள்களெல்லா நாசமாமென்று சொல்லு மாற்றமுன்னுரைத்தன் மற்றை மிகுத்துரை வழக்கினுண்மை; எ-து. தோற்றப்பட்டபொருள்களெல்லாங் கெடுமென்னு முத்தரத்தை முன்னர்ச் சொல்லுமது மிகுத்துரையுண்மை வழக்காகும்,---போற்றியபொருள்கண்கட்குப் போனது போன்முதிர்ந்து வேற்றுமைப்பட்டதென்கை மிகுத்துரையில் வழக்கே. எ-து. தோற்றிபிரதைக்ஷப்பட்டபொருள்கள் காரியங்கெட்டுக் காரணமாய் நின்றதென்று கூறல் மிகுத்துரையின்மை வழக்காம். எ-று. கண்கட்குப் போனதுபோன்முதிர்ந்து வேற்றுமைப்படுகை காரியமழிந்து காரணங்கிடக்கை.

இச்செய்யுள் மிகுத்துரையுண்மைவழக்கு மிகுத்துரையின்மை வழக்குங்கூறிற்று. தோற்றிய பொருள்களெல்லா நாசமென்பது 'சருவம் க்ஷணிகம் அசத்வாதம் இதி வசநு.' இவை தொகை தொடர்ச்சி மிகுத்துரையென்று முள்வழக்கில் வழக்கிரண்டினும் வழங்கும் வழியெனக் கொள்க.

உள்வழக்கில்வழக்குள்ளது சார்ந்தவுள்வழக்கே
யுள்ளதுசார்ந்தவின்மை வழக்குடனின்மைசார்ந்த
உள்வழக்கின்மைசார்ந்த வில்வழக்கென்றோராறு
முள்வழக்குளதுண்டென்கை முயற்கோடின்மையில்வழ
[க்கே.

(இ-ள்.) உள்வழக்கில்வழக் குள்ளது சார்ந்தவுள் வழக்கோடுள்ளது சார்ந்தவின்மை வழக்குடனின்மை சார்ந்தவுள் வழக்கின்மைசார்ந்த வில்வழக்கென்றோராறும். எ-து. முற்கூறிய வுள்வழக்கு மில்வழக்கு முள்ளது சார்ந்த வுள்வழக்குமுள்ளது சார்ந்தவில்வழக்கு மில்லது சார்ந்த வில்வழக்குமென்னு நான்கோடுங்கூடி யாறுவகையாம்,--உள்வழக் குளதுண்டென்கை. எ-து. அவற்றுளுள்ளதை யுண்டென்ப துள்வழக்காம். அது யானைக்கோடுண்டென்கை.—முயற்கோடின்றில் வழக்கே. எ-து. இல்லதனை யில்லையென்கை யில்வழக்காம். அது முயற்குக் கொம்பில்லை யென்கை. எ-று.

இச்செய்யுண் முன்னர்க்கூறிய வுள்வழக்கில் வழக்கினதியல்பு மிவ்விரண்டினானு முன்விரிந்த பகுதிநீக்கி மேல்விரியும் பகுதியுங் கூறிற்று. (கூ)

உள்வழக் குளதுண்டென்கை என்பதனை உள்வழக்குணர்வுண்டென்கை எனவோதி உள்வழக்காவதுள்ளதை யுண்டென்கை, அஃதாவது அறிவுண்டென்கை என்றார் ஞானப்பிரகாசர்.

மற்றோருரையாசிரியரும் இவ்வாறே கூறியிருக்கின்றனர். அன்றியும் வழக்கினை யிவ்வாறு பகுத்துக் கூறியவதனாற்பயன் ஆன்மா, ஆகாசம், காலம், திக்கு, இறைவன்முதலிய பொருள்களைப் புறச்சமயத்தாருண்டென்று கூறுவது இல்வழக்கென்றுந், தான் கொண்டபொருளை யுண்டென்று கூறுவது உள்வழக்கென்றும் நிறுத்திவதாம் என்றார்.

உணர்வுசார்ந்துணர்வுதிக்கை யுள்ளதுசார்ந்தவுண்மை
யுணர்வுபினின்றுமென்கை யுள்ளதுசார்ந்தவின்மை

யுணர்வுமுன்பின்றித்தோன்ற லில்லதுசார்ந்தவுண்மை
யுணரினல்லதுசாரின்மை யுள்ளங்கையுரோமநாணே.

(இ-ள்.) உணர்வுசார்ந் துணர்வுதிச்கை புள்ளது சார்ந்தவுண்மை. ௭-து. அறிவைச்சார்ந்தறிவுண்டாமென்கை யுளது சார்ந்தவுள்வழக்கு,— உணர்வுபினின்றுமென்கை யுள்ளது சார்ந்த வின்மை. ௭-து. அறிவுகெட்டாற் பின்பறிவுண்டாகாதென்பதுள்ளது சார்ந்தவின்மை வழக்கு,—உணர்வுமுன்பின்றித் தோன்றலில்லது சார்ந்தவுண்மை. ௭-து. அறிவுமுன்புள்ளதல்லவாய்ப் பின்புண்டாமென்பதில்லது சார்ந்தவுள்வழக்கு,—உணரினல்லது சாரின்மை யுள்ளங்கையுரோமநாணே. ௭-து. (இதனைப் பொருளுக்கேற்பமாறுக) உள்ளங்கையின் மயிருண்டென்பது மம்மயிராற் செய்த கயிறுண்டென்பது மில்லது சார்ந்த வில்வழக்கு. ௭-று. இவையன்றிச் சார்பு பன்னிரண்டுள. அவையாவன, பேதமை செய்கை உணர்ச்சி உருவருவவாயில் நுகர்ச்சி வேட்கை பற்று கருமத்தொகுதி முற்றோற்றம் பிணி மூப்புச் சாக்காடு எனவிவை.

இச்செய்யுளுள்ளது சார்ந்தவுள்வழக்கு முள்ளது சார்ந்தவின்மை வழக்கு மில்லது சார்ந்தவுள்வழக்கு மில்லது சார்ந்தவில் வழக்குமென்று நான்கையுங் கூறிற்று.

இத்துணையுந் தன்மதங்கூறி மேற்பிறர்மதங்கூறி மறுக்கின்றது. (கக)

அறுவகைவழக்கு நெறிப்படவுணர்ந்து என்ப தவன் வசனம் என்றார் ஞானப்பிரகாசர். அஃதிவ்வறு வகை வழக்குமாறாயவேண்டுமென்பதவன் கருத்துப்போலும்.

சொன்னநால்வகையுமின்றிச் சொல்லிடும்பொருள்க
ளெல்லா, மென்னேயோவறிகிலோம் பித்தேறியோ
வானமான்மா, மன்னுகாலங்கடிக்கு மனமுடன் வாக்
கிறந்திட், டென்னுமோரிறையுமுண்டென் றுரைப்பது
சித்தமன்றே. (கஉ)

(இ-ள்.) (சொன்ன-அன்றே.) முன்சொன்ன வுருவரு
விடு வழக்கென்னு நான்கு மதன் விரியுமன்றி வானமென்று
மான்மாவென்று நிலைபெற்ற காலங்களென்றுந் திக்குகளெ
ன்று மனவாக்கிறந்தறியுமதொரு கர்த்தாவுண்டென்றுஞ் சொ
ல்லுமது நிலையுடைத்தன்றகையா லிப்படிச் சொல்லும் பொ
ருள்கள் பித்தேறியோ சொல்லாநின்றார்கள், எப்படிச்சொல்
லுகின்றார்களென் றறிகிலேம். அவை நிலைபட்டனவல்ல.
எ-று.

இச்செய்யுள் முன்சொன்ன நால்வகையொழிந்த பிறர்
சொல்லும் வான்முதலிய பொருள்களல்லவென்று கூறுவா
னவையிற்றின் றொகை கூறிற்று. பஞ்சகந்தங்களு மற்றுள்ள
விவகாரங்களு,மிந்நால்வகையி லுள்ளுமடங்கும். (கஉ)

ஈங்குவான்செயற்குவாரா வியம்பியபொருள்களெல்
லாந், தாங்குவா னுளதேயென்னிற் றரித்திடா தருவ
மாத, லோங்குவானேனைக் காதியெனிலதங்குருவின்
கூட்ட, மீங்குவானின்றியெங்கு நின்றதே லெங்கு
மின்றே. (கந)

(இ-ள்.) ஈங்குவான் செயற்குவாரா. எ-து. இவ்விடத்
துக் கூறப்பட்டவானென்னும் பொருள் தொழிலிற் கூடாது,-
இயம்பிய பொருள்களெல்லாந் தாங்குவானுளதேயென்னிற்

றரித்திடா தருவமாதல். எ-து. பூத நான்குமுதலாகச் சொல்லப்பட்ட பொருள்களெல்லாவற்றையுந்தாங்குதற் காகாசமுளதென்று கூறின் அஃதருவமாதலால் பொருள்களைத் தரிக்கற்பாற்றன்று,—ஓங்குவானோசைக்காதி யெனிலதங்குருவின் கூட்டம். எ-து. பெரியவானானது சத்தத்திற்கு முதலென்று கூறி னவ்வோசையு முருக்கூட்டத்தன்றித் தோன்றாது,—நீங்குவானின்றியெங்கு நின்றதே லெங்குமின்றே. எ-து. அந்த வாகாய நீங்குதலின்றி யெங்குநின்றதென்று கூறி னஃதெங்குமில்லையாம். ஆகையாலாகாயமென்றொருபொருளில்லை. எ-று.

இச்செய்யுண் முன்கூறிய வைவகையு ளாகாயமில்லையென்று மறுத்துக்கூறிற்று. (௧௬)

நீங்குவானின்றி யெங்குநின்றதே லெங்குமின்றே. எ-கு. நீங்குதலின்றி யாகாயமெங்கு நிறைந்து நிற்குமென்னில்? எங்கு மென்பதொரு வஸ்துவுண்டோ? இல்லையே. ஆதலாலாகாயமில்லைகாண். எ-ம். ஆதலாற்குணமுங் கிரியையுமொழியப் பதார்த்தமில்லையென்பது கருத்து.' என்றார் ஞானப்பிரகாசர்.

மற்றோருரையாசிரியரும், நீங்குவானின்றி யெங்கு நின்றதேல். எ-து. உருவத்தை நீங்கிய வாகாயமானது குணக்கிரியையின்றி யெவ்விடத்து நின்றதென்று சொல்லுவீராகில்? வானெங்குநின்றதென்வே ஆகாயநிற்றற் காதாரமாயெங்குமென்றோரிட முண்டென்பதாயிற்று,—எங்குமின்றே. எ-து அவ்வாறெங்குமென்றோரிட மில்லை யதனாலாகாயமுமில்லை. எ-ம். இடங்கொடுக்குமென்றதைத் தரித்திடலாக்கி யவன் கூறியது காண்க. என்று விரித்துரையோதினர்.

போதமுண் டுயிர்கட் கென்னில் வாயிலைம் புலனு நூலு
மாய்தலின் றொட்டுத் தீட்டுக் கலப்பினி லறியு மென்னி
லேதமுண் டிரவிற் பச்சை சிவப்புட னேய்ந்த போது
கேதநின் றன்றோ வென்னு மையமுன் கிடத்த லாலே.

(இ-ள்.) போதமுண் டுயிர்கட் கென்னில். எ-து. உயிர்களுக் கறிவுண் டென்று சொல்லின்,—வாயிலைம் புலனு நூலுமாய்த லின்று. எ-து. இந்திரியங்களும் விடயங்களுஞ் சாத்திரங்களுங் கொண் டறிவானேன்,—ஒட்டுத் தீட்டுக்கலப்பினி லறியு மென்னில். எ-து. அப்படியல்ல விந்திரியங்களைக் கலந்தும் புலன்களைப் பரிசித்துஞ் சாத்திரங்களைப் பொருந்தி நின்று மறிவனென்னை யாகில்,—ஏதமுண் டிரவிற் பச்சைசிவப்புட னேய்ந்தபோது கேதநின் றன்றோவென்னு மையமுள்கிடத் தலாலே. எ-து. இருளிடத்துப் பச்சைசிவப்பென்னும் வன்னங்கிடக்க வதனைத் தொட்டுந் தீண்டியுங் கலந்துமறியா மற் கிலேசமுற்றன்றோ வென்னு மையங்கிடத்தலாற் கூறியது குற்றமுண்டு. எ-று.

இச்செய்யு ளான்மாவுக்கறிவில்லையாதலா லான்மாவில்லையென மறுத்துக்கூறிற்று. இந்திரியம் புல னூலினுக்கு, ஒட்டுத்தீட்டுக் கலப்பு மொழிமாற்று நிரைநிரையெனக்கொள்க.()

ஏதமுண் டிரவிற்பச்சை சிவப்புடனேய்ந்தபோது கேதநின்றன்றோவென்னு மையமுன்கிடத்தலாலே. எ-கு. இராத்திரியிற் பச்சைவஸ்திரமுஞ் சிவப்பு வஸ்திரமும் பொருந்தியிருந்த விடத்துச் சிவப்புவஸ்திரமெடுத்துவா வென்றபோ தவ்வஸ்திரங்களை யெடுத்துப் பச்சையெது சிவப்பெதென்று வியாகுலத்தினாலையப்பா டுண்டாதலா லறிவுபிறத்தல் கண்டிலமே. ஆதலாலதற்குக் குற்றமுண்டு. என்றுரைத்தனர் ஞானப்பிரகாசர்.

மற்றொருரையாசிரியரும் இப்பதத்திற்கு இருளிடத்துப் பச்சைநிறத்தையுடைய மணிதுகில் முதலிய பொருள்களும் சிவந்த நிறத்தையுடைய மணிதுகில் முதலிய பொருள்களும் விரவிக்கிடந்தபொழுது கலப்புத்தீட்டோடிருந்தாங் கருதிய பொருளை யறிந்தெடுக்கமாட்டாமையான் ஐக்கத்தினைப் பொருந்தி நின்று பச்சை சிவப்பினொரு யாதோவென்று மயங்குமையமான துரிபிலிடத்து முன்னமேயிருத்தலா லதற்கறிவுண்டென்று சொல்லுதல் குற்றமுண்டு என்றார். அன்றியும், நூலெனினும் உரையெனினும் ஒக்கும் என்றும், இச்செய்யுள் அறிவினையான்மாவின் குணமல்லவென்பது கருத்தென்றும், "இந்திரியமென்னுமைந்தி னியல்வது கலப்பென்றாகும், வந்தியைப் புலனைச்சார்ந்து மருவுத லதுவாந்தீட்டு, முந்தியப னுவலாலே மொழிவதை யறிதலொட்டு." என்றதனாற் கலப்புத் தீட்டொட்டிலக்கணமுணர்க என்றார்.

அறிந்திடாவாயிலின்றே லறிவின்றாமைந்தும்பற்றி
யறிந்திடுமறிவுண்டென்னி லைந்தினுமறிவொன்றாக
யறிந்திடவேண்டுஞ்சார்பி னறிந்திடுமென்னிலுன்னை
யறிந்திலோம்புத்தனென்றிங் கழகிதுசொன்னவாறே.

(இ-ள்.) அறிந்திடாவாயிலின்றேல். எ-து. இந்திரியங்களில்லையாயி னுயிரொன்றையுமறிய மாட்டாது,—அறிவின்றாமைந்தும்பற்றி யறிந்திடுமறிவுண்டென்னில். எ-து. இந்திரியங்கட் கறிவில்லையாதலா லவ்விந்திரியங்களைந்தையும் பற்றி நின்றறிந்திடு மறிவுயிர்க்குண்டென்று கூறில்,—ஐந்தினு மறிவொன்றாக வறிந்திடவேண்டும். எ-து. உயிரறியுமாயிற் புலன்களைந்தாலு மறியுமறிவை யொருபுலனாலறியவேண்டும்,—சார்பினறிந்திடுமென்னில் எ-து. அற்றன்று உயிரறியுமிடத்

லும் பொறிகளின் வழிகளிலே நின்று மவ்வவற்றின் புலன்களாகிய குணங்களை யறியுமெனக் கூறின்,—உன்னையறிந்திலோம் புத்தனென்றிங்கழகிது சொன்னவாறே. எ-து. உன்னையான்மவாதியென்றறிந்தோம், நீ சார்பிற்றோன்று மென்கையாற் புத்தனானாய், இஃதறிந்திலோம், நீயுயிரறியுமென்று சொன்னதழகிது. எ-று. அழகிதென்றதிகழ்ச்சிக்குறிப்பு.

இச்செய்யு ளிந்திரியங்களில்லையாயி னான்மாவறியாதாகையா லான்மா வில்லையென்று கூறிற்று. (க௫)

ஞானஞேயங்களன்றி ஞாதுருவென்றுசொல்ல
வானதிங்கறிவோவன்றோ வன்றெனிலவனிபோலுந்
தானதிங்கறிவேயென்னிற சமைந்திடுநன்பருப்புப்
போனகமதற்குத்தானே கறியெனப்புகன்றதாமே.

(இ-ள்.) ஞானஞேயங்களன்றி ஞாதுருவென்று சொல்லவானதிங்கறிவோவன்றோ. எ-து. அறிவுமறியப்படும் பொருளுமன்றி யறியும் பொருளுண்டென் றிவ்விடத்திற் கூறி லதற்குண்டாய தறிவோவறியாததோ,—அன்றெ னிலவனிபோலும். எ-து. அறிவில்லாததென்று சொல்லின் மண்போலுமசேதனமாம்,—தானதிங்கறிவேயென்னில். எ-து. அறியும் பொருடா னறிவென்று கூறின்,—சமைந்திடு நன்பருப்புப் போனகமதற்குத்தானே, கறியெனப்புகன்றதாமே. எ-து. பருப்பாற் கூட்டிச் சமைத்த சோற்றுக் கப்பருப்புச் சோறுதானே கறியென்று கூறியதன்மைத்தாகும். எ-து. இதனுட் பருப்புச் சோறென்றதற்குப் பெயராயிருக்கக் கறியும் பருப்புச்சோறென்பது புனருத்தியாய தோடமாம். அதுபோல, ஞானமறிவாயிருக்க ஞாதுருவுமறிவாகலிற் றனித்து வேண்டாமென்பது கருத்து.

இச்செய்யுண் ஞானஞேயங்களொழிந்து ஞாதுருவாய வான்மாவில்லையென்று கூறிற்று.

இச்செய்யுள் குணமொழியக் குணியில்லையென்றது. இனி, குணகுணிகள் தாதாத்மியமோ, ததுற்பத்தியோ? தாதாத்மியமென்னில், அதுதானேயானதாம்; ததுற்பத்தியென்னில் அக்கினியும் தூபமும்போல வேற்றுமை காட்டல்வேண்டும். அன்றியும் பூவுமணமும்போலென்னில் ஞானத்தையு ஞாதுருவையும் பிரித்துக்காட்டல் வேண்டும். இவை கூடாமையால் ஆன்மா வில்லை யறிவுள்ளதென்பது கருத்து. என்றார் ஞானப்பிரகாசர்.

மற்றுரையாசிரியரு மிதுவே கருத்தாய்க் கூறியிருக்கின்றனர்.

உயிரினையருவதென்னி லுருவுடனுற்றுநில்லா
துயிரினையுருவதென்னி லுடலினிலுடலடங்கா
துயிரினையணுவதென்னி லுடல்பலதுவாரமோடு
முயிரினைநித்தமென்னி லுணர்வுதயாந்தமின்றே. ௧௭

(இ-ள்.) உயிரினையருவதென்னி லுடலுடனுற்று நில்லாது. எ-து. நீயுண்டென்று கூறியவான்மாவை யருவமென்றுசொல்லி னுருவமாகியவுடலோ டருவமாகிய வான்மா பொருந்திநில்லாது ஆதலாலருவமன்று,—உயிரினையுருவதென்னிலுடலினிலுடலடங்காது. எ-து. அந்தவான்மா வுருவமென்று கூறின் ஓருருவி னொருருவடங்காது. ஆதலாலான்மா வுருவமன்று,—உயிரினை யணுவதென்னி லுடல்பல துவாரமோடும். எ-து. அந்தவான்மாவை யணுவென்று கூறின் உடலினில்லாது பலதுவாரத்தாற் போகவேண்டும். ஆதலாலான்மாவணுவன்று,—உயிரினை நித்தமென்னி லுணர்வுதயா

க்தமின்றே. எ-து. அந்தவான்மாவை நித்தமென்று கூறில் அறிவுதோற்றமுங் கேடுமில்லையாகவேண்டும். இவையிற்றை யுடைத்தாகையா லான்மா நித்த மன்று. எ-று.

இச்செய்யு ளான்மா அரு உரு அணு நித்தமென்பவை யல்லவாகையா லான்மாவில்லையென மறுத்துக்கூறியது.(கஎ)

இதற்கவன் சாத்திரமாகிய குண்டலகேசியிலுள்ள வசனம்.

"பழுதையாலராப்பூண்டு பாழூடம்புபுடைபுடைப்ப, வழுதையாவுறுகின்ற வத்தத்துயிரென்பாயே, விழுதையா வுரைத்தியே யெருத்தினுற் காலிற்றுக்கக், கழுதையார் மூடமாகக் கண்டதுண்டாமோ." "ஒருவகையாலருவென்னி லொரா த்துடம்பினகத்தடங்கா, வொருவகையா லுருவென்னி லுடம்போடு கலப்பில்லை, யிருவகையு நேர்ந்ததெனி லெழுகின்ற தொழுநோயும்,பெருவயிறுமாயினன் பிணிதீர்ந்தானுவனே." என்று தஹரித்தனர் ஞானப்பிரகாசர்.

எங்குமாய்நின்றதான்மா வென்றிடினெங்குமின்றுந்
தங்கிடுநிறைவுதத்தஞ் சரீரங்கடோறுமென்னின்
மங்கிடுமுடலத்தோடே வடிவினிலோரிடத்தே
யங்கதுநின்றதென்னி லடிமுடியறிவின்றாமே. (கஅ)

(இ-ள்.) எங்குமாய் நின்றதான்மா வென்றிடி னெங்குமின்றாம். எ-து. ஓரான்மா வெங்குநிறைந்து நின்றதென்று கூறின் உடற்றோறும் பலபேதப்படுமாகையா லோரான்மா வெவ்விடத்து முண்டாகாது,—தங்கிடுநிறைவு தத்தஞ் சரீரங் கடோறு மென்னின் மங்கிடு முடலத்தோடே. எ-து. அந்த வான்மா தத்தம் முடல்கடோறு நிறைந்து நிற்குமென்று கூறின் உடல் கெடுமிடத்துத் தானுங் கூடக்கெடவேண்டும்,-

வடிவினிலோரிடத்தே யங்கது நின்றதென்னி லடிமுடியறி வின்றாமே. எ-து. அந்தவான்மா வுறுப்பிலோரிடத்தைத் தனக்கிடமாகக் கொண்டுநின்றறியுமென்று கூறின் தானின்ற விடமன்றிப் பாதாதிகேசமளவாக வறியமாட்டாது. ஆதலா லறியும் பொருளாகிய வான்மாவில்லை. எ-று.

இச்செய்யு ளான்மா சம்பூரணனல்லவாகையாலும் சரீரவியாபியல்லவாகையாலும் ஏகதேசியல்ல வாகையாலும் ஆன்மாவில்லையென மறுத்துக் கூறிற்று. (கஅ)

எங்குமாய் நின்றதான்மா வென்றிடி லெங்குமின்றாம் எ-கு. இந்த வான்மா வெங்குமாய் நிறைந்து நிற்குமென்னி லெங்குமென்பதொருபொருளில்லையாம் என்றார் ஞானப்பிர காசர். மற்றோருரையாசிரியரும் எவ்விடத்துமான்மா வியாபித்து நின்றதென்று சொல்லல் எவ்விடத்திலு நிகழுஞ் செய்திகளை யறியக்கூடாமையி லெங்கும் வியாபித்து நிற்பதில்லையாம் என்றார்.

சாற்றியகாலமிங்குத் தங்கியவாறிதென்னே, தோற்றுவித்தளித்துப்போக்குந் தொழிலவைகாலமென்னிற், போற்றிய பொருளிற்புக்குப் பிணங்கிடும் பொருட்பினின்றாந், தேற்றியவில்வழக்குத் திரவியத்தியல்பின்றாமே. (கசு)

(இ-ள்.) சாற்றியகாலமிங்குத் தங்கியவாறி தென்னே எ-து. முற்கூறிய காலமிங்கு நின்றபடியெப்படி,—தோற்றுவித்தளித்துப் போக்குந் தொழிலவை காலமென்னில். எ-து. பதார்த்தங்களைத் தோற்றுவித்து நிறுத்தியும் போக்கியு நிற்பது காலமென்னில்,—போற்றிய பொருளிற்புக்குப் பிணங்

கிடும். எ-து. அந்த மூன்றுவிதப்பொருளுடன் காலங்கூடி மயங்கிடும்,—பொருட்பினின்றும். எ-து. அப்பொருட்குக் கேடுவந்தாற் காலமுமின்றும்,—தேற்றிய வில்வழக்குத் திரவியத்தியல்பினுமே. எ-து. பொருண் மூன்றுவிதப்பட்டதன்றிக் காலமூன்றுண்டென்று கூறப்பட்டது தெளிவையுடைய வில்வழக்காம். எ-று.

இச்செய்யுள் முன்கூறியவகையே காலமில்லையென மறுத்துக் கூறிற்று, பொருளியல்பாய வழக்கப்பெயரே, காலமெனக் கொள்க. "கற்பனையாய் வழங்குகின்றது காலமெனவுரைத்தார்" இஃதவர் வசநம். இவ்வழக்கு முயற்குக் கோடுண்டென்கை. (கக)

தோற்றுவித் தளித்துப்போக்குந் தொழிலவை காலமென்னில் எ-கு. பொருள்களையுண்டாகச் செய்து நிறுத்திநாசம்பண்ணுந் தொழிலைச் செய்யு மிறப்பு நிகழ்வு எதிரென்னுமவையே காலமென்று சொல்லில் என்று விரித்தோதினர் மற்றொருவாயாசிரியர்.

எனக்குநீ கிழக்கிருந்தா யாகின்மேற் கென்றுயென்பா, லெனக்குமேற் கிருந்தாலென்பாற் கிழக்கெனவியம்புந் திக்குத், தனக்குநாங் கொள்வதெப்பாற் சாற்றிடா யில்வழக்குத், தனக்குளதா குமுண்மை தானிலதாகுமன்றே. (உ0)

(இ-ள்.) எனக்குநீ கிழக்கிருந்தாயாகின் மேற்கென்றுயென்பாலெனக்கு மேற்கிருந்தானென்பாற் கிழக்கென வியம்பும். எ-து. நீ யெனக்குக் கிழக்கிருந்தாயாகின் என்னை மேற்

இருந்தானென்று சொல்லுவை, எனக்கு மேற்கிருந்தா னொரு
வன் யானிருந்தவிடத்தைக் கிழக்கிருந்தானென்று கூறுவன்,-
திக்குத்தனக்கு நாங்கொள்வதெப்பாற் சாற்றிடாய். எ-து.
ஆதலாற்றிக்கு நாங்கொள்வதெப்பகுதி, நீ கூறியகிழக்கையோ
வவன் கூறியமேற்கையோ சொல்லாய்,—இவ்வழக்குத் தனக்
குளதாகு முண்மைதா னிலதாகுமன்றே. எ-து. நீ கூறிய
வில்வழக்குளதாம் உள்வழக்கில்லையாம். எ-று.

இச்செய்யுண் முன்கூறிய முறையே திக்குமில்லையென
மறுத்துக் கூறிற்று. (௨0)

உலகினைப் படைத்தானென்று யொருவனிங் குள்ள
தாயி, னுலகினைப்படைக்கவேண்டா வில்லையேற்படை
க்கவொண்ணா, துலகினுக்குபாதாநந்தா னுள்ளதாய்க்
காரியத்தா, முலகினைப்படைக்கிலங்கு முளதிலதாவ
துண்டே. (௨௧)

(இ-ள்.) உலகினைபடைத்தானென்றுயொருவன். எ-து.
உலகத்தைப்படைத்தவ னொருகர்த்தாவென்று நீ கூறினாய்,—
இங்குள்ளதாயி னுலகினைப்படைக்கவேண்டா. எ-து. இவ்வு
லகமுன்புள்ளதாய்ப் பின்பு படைத்தானாயின் முன்புள்ளதை
யொருவன் படைக்கவேண்டுவதில்லை,—இல்லையேற் படைக்க
வொண்ணாது. எ-து. இவ்வுலகமுன்பில்லையாயினொருவன்
படைக்க வுள்ளதாகாது,—உலகினுக்குபாதாநந்தானுள்ளதா
ய்க் காரியத்தா முலகினைப்படைக்கில். எ-து. அவ்வுலகினுக்
குக்காரணமுள்ளதாய்க் காரியங்கெடுமாதலாற் காரியப்படு
முலகினைப்படைத்தானென்று கூறின்,—அங்கு முளதிலதாவ
துண்டே. எ-து. யாதொரு பொருளுள்ளது மில்லதுமாக
வுண்டோ. எ-று. அங்கு சுட்டு. ஏகாரம் வினா.

இச்செய்யுள் பிரபஞ்சம் படைக்கப்படாது, அதனாற் படைப்பானுமிலன் என்று மறுத்துக் கூறிற்று. (உக)

அங்குமுள்ளதிலதாவதுண்டே. எ-கு. உம்மிடத்திலு மருகனைப்போல வுண்டுமில்லையுமான வத்திநாந்தி யென்னு மதமுண்டாம். என்றுரையுரைத்தனர் ஞானப்பிரகாசர். மற்றொருவரும் அங்கும். எ-து. உம்முடைய சைவமதத்தினும் க்ஷமண மதம்போல உளதிலதாவதுண்டே. எ-து. அஸ்தி நாஸ்திவாத முண்டாகவேண்டுமென்றார்.

உள்ளதுகடாதிபோல வுதிப்பித்தா னென்றுரைக்கின்
மெள்ளவேயெங்குநின்று விதித்தனனுலகின்மீது
வள்ளறானின்றானென்னில் வந்ததாமுலகமுன்னே
தள்ளிடாதெங்குநிற்கி னெங்குமுன்றந்ததாமே.(உஉ)

(இ-ள்.) உள்ளதுகடாதிபோலவுதிப்பித்தானென்றுரைக்கின். எ-து. மண்போல வுலகிற்கு மூலமுள்ளதாய் கடாதிகளைக் குலாலன்றோற்றுவிக்குமாபோல விவ்வுலகங்களை யொருவனுண்டாக்கினானென்று நீ கூறின்,—மெள்ளவே யெங்குநின்று விதித்தனன். எ-து. இவ்வுலகத்தை யுண்டாக்கு மிடத்து எவ்விடத்து நின்றுண்டாக்கினான்,—உலகின்மீது வள்ளறானின்றானென்னில் வந்ததாமுலகமுன்னே. எ-து. பிரபஞ்சத்திலே நின்று கர்த்தாவுண்டாக்கினானென்று கூறிற் பிரபஞ்சமுன்னே யுண்டானதாம்,—தள்ளிடா தெங்குநிற்கி னெங்குமுன் றந்ததாமே. எ-து. நீங்கப்படாமலெங்குநிறைந்து நின்றுண்டாக்கினானென்று நீ கூறின் எங்குமென்பதொரு முதலாய்க் கர்த்தாவைப் பின்பு தந்ததாம். எ-று.

இச்செய்யுள் பிரபஞ்சம் படைப்பானொருவன் பிரபஞ்சத்தை நீங்கி வேறே நிற்குமிட மின்மையான் கர்த்தாவில்லையென்று மறுத்துக் கூறிற்று. மண் முதற்காரணம், சக்கிர சீவராதி துணைக்காரணம், குலாலன் நிமித்தகாரணம் என்னில்? துணைக்காரணமின்றிக் குலாலனுன் செயல் முடியாதாதலால் ஒருவன் பிரபஞ்சத்தைப் படைக்கமாட்டான் ஆதலாற் றுணைக்காரணமே யுள்ளதெனக் கொள்க. (உஉ)

இல்லதுகருணையாலே யியற்றின னிறைவனென்னிற்,
கொல்லரியுழுவைநாகங் கூற்றமுங்கொண்டுதோற்ற,
வல்லவன்கருணையென்னோ வலியினால்வேண்டிற்றெல்
லாம், பல்கவேபடைத்தானாயிற் பித்தனைப் பணிந்தி
டாயே. (உ௩)

(இ-ள்.) இல்லது கருணையாலே யியற்றின னிறைவனென்னில். எ-து. எல்லாவற்றிற்குங் கர்த்தாவானவ னிருக்குமிட நியமிக்கப்படாமையி னப்படியங்நியமான கர்த்தா காருண்ணியத்தினாலே யில்லாததொன்றைப் படைத்தானென்று கூறின்,—கொல்லரியுழுவை நாகங் கூற்றமுங் கொண்டுதோற்ற வல்லவன் கருணையென்னோ. எ-து. கொலைத்தொழிலைப் பொருந்தின சிங்கத்தையும் புலியையும் யானையையுங் கூற்றத்தையு முண்டாக்கிக்கொண்டு தோற்றவல்லவனுக்குக் காருண்ணியமென்னோ,—வலியினால் வேண்டிற்றெல்லாம் பல்கவே படைத்தானாயிற் பித்தனைப்பணிந்திடாயே. எ-து. கர்த்தா வல்லவனாகையாலே யெல்லாவான்மாக்களும் வர்த்திக்கும்படி படைத்தானென்று கூறின் அதோர்காரண காரியப்படாமற் பித்தர்செய்யுங் குணமாதலாற் பித்தனையே கர்த்தாவாக வணங்குவாயாக. எ-று.

இதுவு மொருவனாற் பிரபஞ்சம் படைக்கப்படாததனாற் கர்த்தா வில்லையென மறுத்துக் கூறிற்று. (உரு)

வலியினால் வேண்டிற்றெல்லாம் பல்கவேபடைத்தானா யிற் பித்தனைப்பணிந்திடாயே. எ-கு. தனது சாமர்த்தியத் தினாலே செய்யுங் கருமமீது தவிர்க்குங் கருமமீதென்று விசா ரியாமற் றன்கருத்திற்கு வேண்டியபடி யெல்லாவற்றையும் படைத்தானானாற் செய்காரியந் தவிர்காரிய மறியாமலேதாகி லுந் தமக்குவேண்டியவைகளைச் செய்யும் பித்துக்கொண்டா ரையுங் கர்த்தாவென்று பணிவாயாக, என விரித்தோதினர் ஞானப்பிரகாசரும் மற்றோராசிரியரும்.

பெறுவதிங்கென்படைத்துப் பெற்றதுவிளையாட்டெ ன்னிற், சிறுமழவிறையதாகுஞ் செய்திடுங்கன்மத் தென்னி, னுறுபெருங்கன்மஞ்செய்வோர் முன்புள ராவருண்மை, யறிவுறின்ஞாலமெல்லா மநாதியென் றறிந்திடாயே. (உசு)

(இ-ள்.) பெறுவதிங்கென் படைத்துப் பெற்றது விளை யாட்டென்னில். எ-து. சர்வான்மாக்களையு மிவ்விடத்துப் படைத்துப் பெறும்பே றென்னென்று கேட்டவிடத்துப் பெ றும்பேறு விளையாட்டென்று கூறின்,—சிறு மழ விறையதா கும். எ-து. உன் கர்த்தா விளையறிவாய்ச் சிறுபிள்ளையாக வேண்டும்,—செய்திடுங்கன்மத் தென்னினுறு பெருங்கன்மஞ் செய்வோர் முன்புளராவர். எ-து. கன்மத்துக் கீடாகப் படைத்தானென்று கூறின், கன்மஞ்செய்வோ ரநாதியாவர்,— உண்மையறிவுறின். எ-து. இதனை மெய்யாகவறியின்,—ஞால மெல்லா மநாதியென் றறிந்திடாயே. எ-து. பிரபஞ்சமெல் லாமநாதியே யுள்ளதென் றறிவாயாக. எ-று.

இச்செய்யுளும் பிரபஞ்சமொருவன் படைக்கவுண்டானதில்லை யதனாற் படைப்பானுமில்லையென மறுத்துக் கூறிற்று.

உருவொடு நின்றானென்னி னுருவமுன் படைத்தார் வேண்டு, முருவவனிச்சையென்னி னுலகெலாமிச்சையாகு, முருவுலகத்துளோர்கட் குறுவது கன்மாலென்னி, னுருவுடையோர்கட்கெல்லா முற்றது கன்மத்தாமே. (உரு)

(இ-ள்.) உருவொடு நின்றானென்னி னுருவமுன் படைத்தார்வேண்டும். எ-து. உன் கர்த்தாவுருபியென்று சொல்லி னவ்வுருவத்தை முன்புண்டாக்கினார்வேண்டும்,—உருவவனிச்சை யென்னி னுலகெலாமிச்சையாகும். எ-து. அவனதிச்சையாலே யுருவத்தை யெடுத்துக்கொண்டானென்னி னுலகத்துள்ளோருந் தமதிச்சையாலே யுருவெடுத்துக்கொண்டாரா வார்,—உருவுலகத்துளோர்கட் குறுவது கன்மாலென்னி னுருவுடையோர்கட்கெல்லா முற்றது கன்மத்தாமே. எ-து. உருவமுலகத்திலுள்ளவர்க்கு வருவ தவரவர் கன்மத்தாலென்று நீ சொல்லி னுருவமுடையவர்களெல்லார்க்கு முருவமுறுவது கன்மத்தாலேயே யாகவேண்டும். எ-று. கன்மத்தால். எ-து. கன்மாலென விகாரப்பட்டது.

இச்செய்யுள் கர்த்தாவுருவென்பதனை மறுத்துக் கூறிற்று.

அருவெனிற் பவத்தினின்று மெடுத்திடா னாகாசம் போன், மருவினைனிழல்போலென்னின் மருவினோர்க் காகுமாட்சி, பெருகியவறிவுண்டென்று பேசிடினே சத்தோடும், கருதிடவுருவம்வேண்டு மில்லையேற்கருதவின்றே. (உசு)

(இ-ள்.) அருவெனிற் பவத்திலின்றுமெடுத்திடா னுகாசம்போல், எ-து. உன் கர்த்தா வருபியென்று கூறி லாகாசம் போலச் சேட்டையிலனுகையா லான்மாக்களைப் பிறவித்துன்பத்தினின்று மெடுத்திடமாட்டாதவனுவன்,-மருவின னிழல் போலென்னின் மருவினோர்க்காகுமாட்சி. எ-து. யாவருஞ் சென்றடையத்தக்க நிழல்போல்வனென்னின்; அந்நிழல் தன்னிடத்துவந்து மருவினோர்க்கே நன்மையைக் கொடுத்தலால் வனும் வியாபியல்லன்,—பெருகிய வறிவுண்டென்று பேசிடினேசத்தோடுங் கருதிடவுருவம்வேண்டும். எ-து. ஏகதேசியாயினு நிறைந்த வறிவினை யுடையனென்று கூறின் விருப்போடுஞ் சிந்தித்தறியத்தக்கதோ ருருவுண்டாதல்வேண்டும்,- இல்லையேற் கருதலின்றே. எ-து. அப்படியறியத்தக்க வுருவில்லையாயி னறிவுமில்லையாம்,—எ-று.

இச்செய்யுள் கர்த்தாவருபியென்பதனை மறுத்துக் கூறிற்று.

(உ௫)

மருவினனிழல்போலெனனின்மருவினோர்க் காகுமாட்சி. எ-கு, சிலர்வழி நடந்து வருந்தி வெயிலினலே நொந்திளைப்புற்றுநிழலைத்தேடியடைந்தபோதவர் குளிர்ச்சிபெற் றிளைப்புப்போய்ச் சவுக்கியத்தை யடைந்த முறைமைபோல ஜநந மரண துச்கத்தால் வருந்தி யிளைப்புற்றவர்கள் கர்த்தாவைத்தேடியடைந் தந்தக்கிலேசமும்போயின்பத்தைப் பெறுகிற்பார்கள். ஆதலால் நிழலைப்போல் நின்றனன் கர்த்தாவென்னில் நிழலைத்தேடிச் சென்றடைந்தவர்க்கே மாட்சிமையுஞ் செயலுமுள்ள தல்லது, நிழலுக்கொரு செயற்கையில்லாத வாறுபோலக் கர்த்தாவைத்தேடி யடை

ந்து வழிபட்ட பேருக்கே செயலுமாட்சிமையு முண்டாமல் லது கர்த்தாவுக்கொரு செயலுமுதன்மையு மல்லவாயிடும் என்றுரை யுரைத்தனர் ஞானப்பிரகாசர். அன்றியு மீன்சினைகளைப் பீர்ச்சித் தான்பார்த்துநிற்க வவைவளருமாபோலப் பிரமாவானவர் அண்டமென்னு முட்டையையிட் டுலகினை வளர்ப்பரென்னில் அவருலகத்தினுக் கப்பாலா யுலகத்திலில்லையாய் விடுவரென்று வருவித்துரையிட்டிருக்கின்றனர் மற்றோருரையாசிரியர். பெருகியவறிவுண்டென்று பேசிடில். எ-சு. நிழலுக்கறிவில்லே, கர்த்தாவிற்குக் குறையாத ஞானமுண்டு அதனால் தன்னைச் சேர்ந்தோர் ஜநநதுக்கத்தையறிந்து நீக்குவனென்று சொல்லில் என்று விசேடித் துரையிட்டிருக்கின்றனர்.

எங்கணூலநாதியாக விறைவனுண்டென்னுமென்னி
னுங்கணூலுரைப்பாரின்றி யோதுவதழகிதாகு[ண்டே
மங்கவன்றன்னைநூல்கொண் டறிந்தன மவனைக்கொ
யிங்குநூலறிந்தோமென்னி லிதோராச்சரியமாமே.

இதுமுதலிய செய்யுட்கண் முன்னர்ப்பாரிப்பிற் கூறுதொழிந்தனவுங் கூறுகின்றது.

(இ-ள்.) எங்கணூலநாதியாக விறைவனுண்டென்னுமென்னி னுங்கணூலுரைப்பாரின்றி யோதுவதழகிதாகும். எ-து. எங்கணூலாகிய வேதாகமங்க ளநாதியுமாகிக் கர்த்தாவுண்டென்று சொல்லுமென்றுகூறி னுங்கணூலாகியவேதஞ் சொல்லுவாருமின்றித் தோன்றுமென்ப தழகிதாயிருக்கும்,—அங்கவன் றன்னை நூல்கொண்டறிந்தன மவனைக்கொண் டே யிங்கு நூலறிந்தோமென்னி லிதோராச்சரியமாமே. எ-து. அவ்வி

டத்துக் கர்த்தாவுண்டென்று வேதங்கொண்டறிந்தனமென்று மந்தக்கர்த்தாவைக்கொண்டே வேதங்கேட்கப்பட்டதென்றுங் கூறி னிதுவிங்ஙனமேமயங்கின திதனை முன்கேட்டுங்கண்டு மறிந்ததல்லவாம்.—எ-று. ஆச்சரியமென்றதிகழ்ச்சிக்குறிப்பு.

இச்செய்யுள் பூர்வப்பிரமாணத்தை யில்லையென மறுத்துக் கூறிற்று. இந்தத் திருவிருத்தத்தின் முடிபு வேறேபாடமோதிற் பராதபார தோடமென்கிற குற்றமுண்டாமென்றபடி, இதனை பாஷபராசிரியதோஷமென்றார் ஞானப்பிரகாசர். ()

எங்கணூலனாதியாகவிறைவனுண்டென்னுமென்னிலுங் கணூலுரைப்பாரின்றி யோதுவதழகிதாகும் எ-சு, எங்கள் சாத்திரநூலான தனாதியாக வொரு கர்த்தாவுண்டென்னுமெனீராகி லுங்கள்சாத்திரமான தோதுவாரொருவரில்லாமலோதுவது மெத்தவு மழகிய தாகுங்காணும் இப்படிச்சொல்லியது நீரெங்கள் தாயார் மலடியென்பதற்கொக்கும் என்றார். ஞானப்பிரகாசர்.

உற்றெழுமரங்களாதி யுயிரின்றிப்பூதரூபம்
பற்றியிப்பாரின்மீது பாங்குறப்பலவுமாகிப்
புற்றொடுமயிர்கொம்பாதி போலவேதோன்றிமாய
மற்றுளயோனிகட்குப் பயனெனவழங்குமன்றே. ()

(இ-ள்.) உற்றெழு மரங்களாதி யுயிரின்றிப் பூதரூபம் பற்றியிப்பாரின்மீது பாங்குறப்பலவுமாகிப் புற்றொடுமயிர்க் கொம்பாதி போலவே தோன்றிமாயும். எ-து. பூமியிலிடமாக நின்று வளருமரங்கண் முதற் புல்லீறாக வுள்ளன தாவரங்களாம். அவையுயிர் வர்க்கத்தில்லவாய்ப் பிருதிவி யப்பு தேயு வாயுவென்னும் பூதரூபத்தைப் பொருந்திய பதிகளாகப்

பலபேதப்பட்டுப் புற்றுப்போலவு மயிர்போலவுங் கொம்பு போலவு முண்டாய் வளர்ந்து மீளவுந் தோன்றின முறைமைப்பாட்டிலே கெடும். இஃது யாதுகாரணமாயுண்டாயதென்னின்,—மற்றுள யோனிகட்குப் பயனென வழங்குமன்றே. எ-து. அண்டசஞ் சுவேதசஞ் சராயுசமென்னு மூன்றுபேதத்திலுண்டாகிய வான்மாக்களுக்குப் பிரயோசனங் காரணத்தாலநாதியேயுண்டாய் வழங்கும்.—எ-று.

இச்செய்யுளாற்பிசவர்க்க மான்மவர்க்கத்ததல்லவென்று மறுத்துக் கூறிற்று. (உஅ)

கொன்றிடலாகாதென்றுங் கொன்றவைகொண்டு நாளுந், தின்றிடலாகுமண்ணோ டொத்திடுஞ் செத்தவெல்லா; மொன்றியவாசமூட்டி யுண்ணுநீர் வைத்தவர்க்கோ, சென்றுநின்றுண்டவர்க்கோ புண்ணியஞ் செப்பிடாயே. (உகூ)

(இ-ள்.) கொன்றிடலாகாதென்றும். எ-து. தானோரான்மாவைக்கோற லொருக்காலு நியாயமன்று,—கொன்றவைகொண்டுநாளுந் தின்றிடலாகுமண்ணோ டொத்திடுஞ் செத்தவெல்லாம். எ-து. மாண்டவெல்லா மண்ணோடொக்குமாதலாலொருவர் கொல்லப்பட்டவற்றைக் கைக்கொண் டெப்பொழுதும் புசிக்கலாம். அதனாற் றோடமுண்டாகாது,—ஒன்றியவாசமூட்டி யுண்ணு நீர்வைத்தவர்க்கோ சென்று நின்றுண்டவர்க்கோ புண்ணியஞ் செப்பிடாயே. எ-து. மணங்களாற் கட்டுப்பட்ட நீருமையான வழிகளிலே யுண்டாக்கிவைத்தவர்க்குப் புண்ணியமுண்டாயதோ? வழிநடந்து தாகித்துக் குடித்தவர்க்குப் புண்ணியமுண்டாயதோ? சொல்லாய். வைத்

தவர்க்கே புண்ணியமுண்டாமாதலாற் கொன்றவர்க்கேபாவ முண்டாவது, தின்றவர்க்குப் பாவமில்லையாம்.—எ-று.

இச்செய்யுள் உயிர்களைக் கொல்லலாகாது, தின்னலாகும். தின்றாற் பாவமில்லையென்பது கூறிற்று. தின்றவனுக்கு மேலுடன்பாடுண்டாகிற குற்றமாமல்லது குற்றமில்லையெனக் கொள்க. கொண்டுதின்றவனுக்குக் கொலைத்தோடம் வருமென்னில் ஓராற்றுக்குள்ளே கருவாட்டுப்பொதி யிட்டு வைக்கவிரவிலாற்று நீர்வந்தெடுத்துப்போக நாட்டிற்கொள்ள விருந்தவர்க்குத் தோடமாமோ? இல்லை. ஆதலாற் கொண்டு தின்றவர்க்குப் பாவமில்லையென்க. (உகூ)

கல்லியமாம்ஸத்திற்குத் தோஷமில்லை, அகல்லியமாம்ஸத்திற் பாவமுண்டாதலாலஃதாகாதென்க. அகல்லியமாம்சமாவது திரிகொடி ஷட்கொடி நவகொடிமாம்சமெனமூன்றும். திரிகொடியாவது கொலைசெய்தல், செய்வித்தல், உடன்படல் என மூன்றும். ஷட்கொடியாவது அம்மூன்றுடனே தன்னிமித்தம் வேறொருவன் சொல்வது, காண்டல், கேட்டல், ஐயப்படாமை கூடவாறும். நவகொடியாவது அந்தவாறுடனே சுவைமேல் விருப்பம், மிகைபடத்தின்னுங் கருத்து, இனிமை கூறும் கொல்லுதலாகிய புகழ்ச்சிகூட வொன்பதாம், இவற்றினொன்று வரினும் அகல்லியமாம்ஸமாம். இந்த வொன்பதுந் தின்னப்படாதென்க. கொடி என்பது தொழில். இவை யொழிந்தவை கல்லியமாம்ஸம் அவைகொள்ளலாமென்க. மாம்ஸம் கொள்ளலாகாதென்கிற நீங்களும் பால் தயிர் நெய் கொள்ளுதலான் மாம்ஸவிந்யோகங்கொண்டீராவிர்; ஆதலான் மாம்ஸநிவர்த்தி யுங்களொருவராலு முடியாதென்பதாம்.

இஃது ஞானப்பிரகாசர் விசேடக்குறிப்பு. மற்றொருவாசிரியரும் கல்லியமாம்ஸம் அகல்லிய மாம்ஸமென்பதனைக் கற்பியமாம்ஸம், அகற்பியமாம்ஸமெனக் கூறி விசேடித்திருக்கின்றனர்.

ஓங்கியவுருவமோடும் வேதனைகுறிப்பினோடுந்
தாங்குபாவனைவிஞ்ஞானந் தாமிவையைந்துங்கூடிப்
பாங்கினுற்சந்தானத்திற் கெடுவதுபந்தநுக்க
மாங்கவைபொன்றக்கேடா யழிவதுமுத்தியின்பம். ()

ஓங்கிய வுருவமோடும் வேதனை குறிப்பினோடுந் தாங்கு பாவனை விஞ்ஞானந் தாமிவை யைந்துங்கூடிப் பாங்கினுற் சந்தானத்திற் கெடுவது பந்தநுக்கம். எ-ஞ. மிக்கவுருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞான மென்னு மைந்துகந்தமு மொருமைப்பட்டொழுங்கிலே சாரியங்கெடக் காரணங்கிடக்குமென்பது மிகுத்துறையில் வழக்குமாய்ப் பந்தநுக்கமுமாம். இது குற்ற வீடு,—ஆங்கவை பொன்றக்கேடா யழிவது முத்தியின்பம். எ-து. அவ்விடத்துச் சொல்லப்பட்ட கந்தங்களைந்து நேராகக் கெட்டு விட்டையடையுமென்பது முத்தியின்பமாம். எ-று. இது கந்த வீடு.

இனி யுருவமாவதெட்டு. அவை—பூதவுருநாலு, உபாதன வுருநாலுமாம். அவை வருமாறு—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, என நாலும் பூதவுரு. வலி, கந்தம், இரதம், வன்னமெனநாலு, முபாதானவுரு. ஆ (அ) வேதனையாவது மூன்று. அவைவருமாறு—குசலாவேதனை, அகுசலாவேதனை, குசலாகுசலாவேதனை, ஆ (ங.) குறிப்பாவதாறு. அவைவருமாறு-சோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்குவை, ஆக்ராணம், மனம், ஆ (சு.) பாவனையிருபது. அவைவருமாறு. தீக்குணம் (க.)

நற்குணம் (கO.) தீக்குணமாவன—பொய்சொல்லல், கோட் சொல்லல், கோபித்துச் சொல்லல், பயனில சொல்லல், எனவாக்கின்குணம் (ச.) களவிற்குப்போகுதல், வறிதே தொழில்செய்தல், கொலைசெய்தல், எனக் காயத்தின்குணம். (ந.) கொலைநினைக்கை, காமப்பற்று, ஆசை, என மனத்தின் குணம் (ந.) ஆ தீக்குணம் (கO.) இனி நற்குணமாவன-மெய்யுரை, நல்வார்த்தை, இனியன கூறல், பயன்படுசொல், என வாக்கின்குணம் (ச.) பள்ளிவலம் வரல், தவம் புரிதல் தானஞ்செய்தல், எனக்காயத்தின்குணம் (ந.) அருணினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று, என மனத்தின்குணம் (ந.) ஆக நற்குணம் (கO.) ஆ பாவனை (உO.) உம், மானசமாசிக காயங்களானன் வருவனவாம். விஞ்ஞானமாறு. அவையாவன-சத்த, பரிச, ரூப, ரச, கந்தம், சித்தம், ஆ (சு.) ஆகப் பஞ்ச கந்தத பேதம் (சந.) இதற் கவன் வசநம் "எட்டிவையுருவ மூன்று வேதனையாறுஞான, மொட்டிய குறிப்போராறு செய் கையு மிருபதாகக், கட்டிய பஞ்சகந்த கணத்தினிற் பங்கமா குந், தொட்டநாற்பத்து மூன்றுஞ் சுகத நூற்றுணிவுதானே." சந்தானமாவது—தொடர்ச்சி. அந்தத் தொடர்ச்சி நால்வகை யாம். அவை வாயுசந்தாநம், தீபசந்தாநம், தாராசந்தாநம், பிபீலிகாசந்தாநம் என்பனவாம்.

இச்செய்யுள் குற்றவீடுங் கந்தவீடுங் கூறிற்று. விஞ்ஞா னகந்த மாறுவன: இந்திரியங்களையு மனத்தையும் பற்றிப் பிறக்கு மறிவுகள். (நO)

இச்செய்யுளில் "எட்டிவை" என்னுஞ் செய்யுளுடன் "தீவினையென்பதி யாதெனவினவி, லாய்தொடி நல்லாயாங் கதுகேளாய், கொலையேகள வேதாகமத்தீவழக், குலையாவுடம்

பிற் றேன்றுவமூன்றும், பொய்யேகுறளை கடுஞ்சொற்பய னில், சொல்லெனச் சொல்லிற் றேன்றுவநான்கும், வெஃகல் வெகுளல் பொல்லாக்காட்சி, யுள்ளந்தன்னிலுருப்பனமூன் றும், பத்துவகையெனப் பயன்றெரிபுலவ, ரித்திறம்படாதார் படர்குவராகில், விலங்கும்பேயு நாகருமாகிக், கலங்கியவுள் ளக் கவலையிற்றேன்றுவர், நல்வினையென்பதி யாதெனவின விற், சொல்லியபத்தின் றொகுதியினீங்கிச், சீலந்தாங்கித் தானந்தலைநின்று, மேலெனவகுத்த வொருமூத்திறத்துத், தே வருமக்களும் பிரமருமாகி." எ-து. மணிமேகலை. துறவாதலி னாற் சமஸ்காரகந்த மறிந்துகொள்க. இதற்கு "ஓங்குருவம் வேதனை யுளக்குறிப்புப்பாவனை மெய், தாங்குணர்வென்றைந் தாங் கந்தம்" "உருவமுடல் பூதமுபாதாயமென்னு மிருவிதத் தினுலு மெழுமேன்" "வேதனையின்பதுன்பிவற்றின் விரவ லுமென், றேதவொருமூன்றுமென்றோர்" "பொறிவிதமோ ரைந்தும் பொறியைப் பொருந்தியறியுமனமுங் குறிப்பென் ருய்" "வாக்குமனமாக்கையிவை பாவனையென்றே மதியா யாக்குமிவை தாமறம்பாவம்" "இந்நால்வகைவிதத்தினுமே யந் தையமறவெண்ணுமெணம் விஞ்ஞானமென்றேவிளங்கு" "இந்தவிதமைந்துஞ் சந்தானத்தெழுந்தழிகை பந்தமெனவே நீதான்பார்" "அறக்கெடுதலே பரம முத்தியவையைந்து மறக்கெடுமாறு கூறுவாம்." "இப்படிப் பரமததிமிரபானுவெ ன்னுந் திருவாக்கினுந் தெளிக என விசேடித்துரைத்தனர் ஞானப்பிரகாசர்.

பாங்கினாற் சந்தானத்திற்கெடுவது. எ-னை படுவதெ னப் பாடமோதி, சந்தானத்திற்குக் கெட்டுத்தோன்றி வருவ தென்றுரையுரைத்தனர் மற்றேருரையாசிரியர் படுதல்-கெடுத லுமுண்டாதலும்.

அழித்திடுமோராகமாதி யகற்றிநல்லறங்கள்பூரித், திழித்திடும் புலன்கள்போக்கி யின்பொடு துன்பம்வாட்டிப், பழித்திடாப்பழுதில்வாழ்க்கை யெட்டையும் பாரித்தெல்லா, மொழித்திடுஞானசீல சமாதியினுறுதியாமே. (௫க)

(இ-ள்.) அழித்திடுமோராகமாதியகற்றி. எ-து. நன்மையைக் கெடுக்குங் காமக்குரோத லோபமோக மதமாற்சரியங்களைநீக்கி, நல்லறங்கள்பூரித்து. எ-து. நன்றானதன்மங்களை நிறையச்செய்து,—இழித்திடும் புலன்கள்போக்கி. எ-து. பொல்லாங்கைச் செய்யும் புலன்வழிச்சேறலைக் கைவிட்டு,—இன்பொடுதுன்பம் வாட்டி. எ-து. துன்பவின்பங்களையொழித்துப் புண்ணியபாவங்களைக்கெடுத்து,-பழித்திடாப் பழுதில்வாழ்க்கை யெட்டையும் பாரித்து. எ-து. பிறராற்பழிக்கப்படாத குற்றமில்லாத நல்வாழ்க்கை யெட்டையும்விரித்து. எனவே பழிபடுதீவாழ்க்கை யெட்டையுஞ் சுருக்கி,—எல்லாமொழித்திடு ஞானசீல சமாதியினுறுதியாமே. எ-து. மற்றுந்தோஷங்களானவை யெல்லாமொழித்திடும் ஞானகுணமாவது (தீவாழ்க்கை யெட்டையுங் கெடுத்திடு மறிவின்குணம்) சமாதியினுறுதியாம். எ-று. பழுதிலா வாழ்க்கை யெட்டாவன—நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர்தலைப்பாடு, என வெட்டு. தீவாழ்க்கையெட்டாவன—நற்காட்சி முதலாயினவற்றை மாறிக்கொள்க. சமாதியினுறுதிவாழ்க்கை இவை யெட்டையுங் கடைவிருத்தல். இதற்கவன்வசநம் "சகலமுமான்மாவுங் காரணனுமில்லை, சகலமுமாமனித்தஞ்சார்பாற் பிறவி, வகைவினையுண்டு பதிபொன்றமாய்தல், சுகதநான்முத்தித்துணிவு" என்பதாம்.

இச்செய்யுள் சமாதியின்முறைமை கூறிற்று.

நீதியாரென்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுட் காறுஞ் செய்யுண் முப்பத்தொன்றானும் பௌத்தன்மதங் கூறிற்று.

நல்லறங்கள் பூரித்து. எ-கு. நல்லறங்களாகிய தசபாரமித்தையும் பன்னிருசார்பு நிறையச்செய்து என்றார் ஞானப்பிரகாசர். தசபார்மித்தையாவது, தான சீல சமாதி நிஷ்கர்மம் பிராக்ஞா வீரிய சத்திய துணிபு மயித்திரி ஆசை யறுதியென்பவை. இது உயிருறுப்புப் பொருளான்முப்பதாம். இதற்கவன்வசநம். "அருணெறியாற் பார்மித்தையாறைந்து முடனடக்கிப், பொதியின்கீழ் முழுதுணர்ந்த முனிவரன்ற, னருண்மொழியானல்வாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பார், மருணெறியாம்பிறநூலு மயக்கறுக்குமாறுளதே." எ-ம். "இன்பஞ்சார்பெரும்பார மீரைந்துமுடனிறைந்து, நன்கன் நிலைபெற்றநாதன்." எ-ம். வருவன கண்டுகொள்க. இவன்ஸமாதிபிரக்கிஞையுடையவனென்க. இந்தப் பாட்டினுக்கு "ஆசைகதமாதியறுத்தடக்கியைம்புலனுந் தேசாருநல்வினையுஞ்செய்து" "பழுதில்வாழ் வெட்டினையும் பாரித்து ஞானந்தொழ வைகுமாதியுறின்" "முத்திதான்வாய்க்கு முனைப்பொழுப்பென்று சொல்லும் பெத்தமவருக்குண்டோபின்." "நற்காட்சி நல்லொழுக்க நல்வாய்மை நல்வாழ்க்கை நற்செய்கை யோடைந்துநாடு" "நன்முயற்சி நன்காங்கடைப்பிடி நல்லோர்தம்பாற் செல்கையுடனெட்டினைத்துந்தேறு" என்னுந் திருவாக்கினுங்காண்க என்று விசேடித்துரைத்தனர் ஞானப்பிரகாசர்.

மற்றொருவரும். இதேகருத்தா யுரையுரைத்ததன்றி, ஞானசீலம் ஞானத்தார் செய்யுஞ் சீலமென விரியும். எ-ம். ஒழித்திடு மென்னும் பெயரெச்சம் சீலமென்னும் பெயர்கொண்டு

முடிந்தது. எ-ம். ஞானமென்பது முத்தியைப்பெறுதற்கு முன்பு நடந்தன வெல்லாம் அநித்தியம் துக்கம் அநான்மாவென்று பாவிக்குமறிவு. எ-ம். விசேஷக்குறிப்பிட்டனர். இவ்வாசிரியர் (௫௰) வது செய்யுளை (௫௧) வதாகவும் (௫௧)வதை (௫௰) ஆவ உம், மாறியுரை யெழுதியிருக்கின்றனர்.

பௌத்தரிற் சௌத்திராந்திகன்மத முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்-௯௫.

சௌத்திராந்திகன் மதமறுதலை.

அனைத்தினையுமுணர்ந்தானெம் மிறைவனென்றிங்கறி
யாது புத்தநீயறைந்தாயென்று, மனைத்தினையு மறிந்
திடானளவிலாமை யொன்றொன்று வனைத்தினையு மறி
ந்தானென்னி, னனைத்தினையுமளவிறந்த தென்னவே
ண்டா வளவிலாஞானத்தா லறிபின்ஞான, மனைத்தி
னையு மறியாது கணத்திற்றோன்றி யழிதலாலறிந்தமை
யின்றாகுமன்றே. (க)

(இ-ள்.) அனைத்தினையு முணர்ந்தானெம் மிறைவனென்றிங் கறியாது புத்தநீயறைந்தாய். எ-து. புத்த, நீ முழுவதையுமுணர்ந்தா னெம்முடைய சுவாமியென் றறியாமற் கூறினாய்,—என்றுமனைத்தினையு மறிந்திடானளவிலாமை. எ-து. எப்போதுஞ் சர்வமு முணர்ந்தறியமாட்டான் பிரபஞ்சபேதமளவிட வரிதாகையால்,-ஒன்றொன்று வனைத்தினையுமறிந்தானென்னினனைத்தினையு மளவிறந்த தென்னவேண்டா. எ-து.

முழுதையுமோரொன்றாக வறிந்தானென்று நீ கூறினப்படிய றியுமிடத்துச் செலவு கலப்பு நீக்கத்தாலறியவேண்டும். ஆதலா லதனை யளவிறந்த தென்றுகூறவேண்டாம்,—அளவிலாஞா னத்தா லறியின் ஞானமனைத்தினையு மறியாது. எ-து. எல்லை யில்லாத ஞானத்தா லறிந்தானென்று நீகூறினனது ஞான மனைத்தினையு மறியமாட்டாது. அஃதியாங்ஙனமென்னில்,— கணத்திற்றோன்றி யழிதலா லறிந்தமை யின்றாகுமன்றே. எ-து. ஒருமாத்திரையி லறிவுதோன்றிக் கெடுமென்று நீ கூறு கையா லனைத்தினையுமறிந்தானென்கையிலலையாம். எ-று.

இச்செய்யுள் புத்தனுக்கு ஸர்வஞ்ஞத்துவமில்லை யென்பது நிற்கிறமலையினையும், குளிர்கிற ஜலத்தினையும், சுடுகிற நெருப்பையும், ஊறுங்காற்றினையுங் கணமொன்றிலறியக்கூடாதாகையாலென்று கூறிற்று. (க)

புத்தக்கடவுள் க்ஷணத்தினுள்ள பொருளொன்றையு மறிவதல்ல தப்பால் க்ஷணத்திலுள்ள பிறவற்றுக்களை யறிய மாட்டானென்க. தத்க்ஷணத்திலுளவாகிய சகலபதார்த்தங்க ளையு மறியானோவென்னில், அறிவானென்றறிவனாகிற் சுடுவதாகிய நெருப்பை யறிவதோரியல்பும், குளிர்வதாகிய நீரையறி வதோரியல்பும், செல்லுவதான காற்றையறிவதோரியல்பும், நிற்பதான மலைமரமுதலான வஸ்துக்களையறிவதோரியல்பும், நடப்பனவான சரமென்னுமற்றுள்ள பிராணிகளாய பதார்த் தமநேக சுபாவமுளதாதலாலவையெல்லாவற்றையு மொருக ணத்திலே யறிதல் கூடாதாகும். பதார்த்தங்கடோறு ஞானம் பிறத்தலாலொருகணத்திலறியக் கூடாதென்க. பிரதிக்ஷணத் திற் கூடுமென்னி லந்தஞானமுதற் கணத்திலே கெடும். ஆத லால் சர்வஞ்ஞத்துவங் கூடாதாகும். ஒருவன் புண்ணியபா

பங்கள் கணத்திலே கெடுமாகிற் பலமில்லை, ஆதலினாலவை சம்பவிக்கும்படி சொல்லவேண்டும். அன்றியும், அவிசம்வாதி விஞ்ஞானம்பிரமாணமென்றாவது, அர்த்தக்கிரியாஸ்திதியென்றாய் ஆகில் அத்தக்கிரியாத்திதி க்ஷணபங்கங்கொண்டமையாலது கூடாதாதலா னீகொண்டபிரமாணம் நிஷ்பலமென்றறிவாயாக. என்று விரித்தோதினர் ஞானப்பிரகாசர்.

சிலபொருளை யறிந்தவற்றின் றிறத்தேயொட்டிச் சிந்திப்பனெப்பொருளு மென்னிற்சென்று, பலபொருளாயொன்றுபல பேதமாகிப் பயின்றுவரு மாதலாற் பார்க்குமாறென், னுலகுதனிலொருபொருளங் குணரும்போதி னுற்றுணர்தலாராய்த றெளிதலுண்டாய், நிலவுமதனுணர்வு பன்மைமுன்பி னின்றிடாதென்னையெல்லா நினைப்பதெங்கே. (உ)

(இ-ள்.) சிலபொருளையறிந் தவற்றின் றிறத்தே யொட்டிச் சிந்திப்பனெப்பொருளுமென்னில். எ-து. பிரபஞ்ச பேதத்திற் சிலபொருள்களை யறிந்தவன் பகுதியிலே யெல்லாப் பொருள்களையு மொட்டிச் சிந்திப்பனென்று புத்த நீகூறின்,— சென்றுபல பொருளா யொன்று பலபேதமாகிப் பயின்றுவருமாதலாற் பார்க்குமாறென். எ-து. அறிவாலறியும் பொருள் பலவாகச் சென்றவற்றின் பலபகுதிபேதமாகிப் பொருந்திவருமாகையா லொன்றைக்கொண் டதன்பேதமறியுமாறெங்ஙனம். அன்றியும்,—உலகுதனி லொருபொருளங் குணரும்போதி னுற்றுணர்தலாராய்த றெளிதலுண்டாய் நிலவுமதனுணர்வுபன்மைமுன்பி னின்றிடாதென்னை யெல்லா நினைப்பதெங்கே. எ-து. பிரபஞ்சத்தி லொருபொருளையறியுமிடத்

துக் கூடியறிந்தாராய்ந்து தெளிதல் வேண்டுமாதலா லொன்றையறியும்போது பலபேதப்படுகையாலு நீ முன்புண்டான வறிவு பின்பில்லையென்று சொல்லுவையாகையாலு மொரு பொருளையறிந் ததனோடு மற்றொருபொருளைச் சேர்த்தறியு நெறியாண்டுள்ளது. எ-று.

இச்செய்யு ளிரண்டும். புத்தரிருபத்துநால்வரி லொருவன் முழுதுணர்ந்தா னென்றதனை மறுத்துக் கூறிற்று. புண்ணியபாவமாகிய கன்மம் மறுமையிலே பலிக்கையாலும் புத்தன் "யான் கண்டீர் நோன்புகள் முற்பிறப்பின் முயலாதேன்" என்கையாலு மெல்லாம் க்ஷணபங்கமில்லை.()

இவை யொவ்வொரு பொருளாக விசேஷமாக வறிவனோ? பன்மையினாலறிவனோ? எல்லாவற்றையுமொவ்வொன்றாய் யறிவனென்னில் க்ஷணபங்கமென்பது கெடும். பன்மையிலறிவனென்னிற் பதார்த்தங்கள் பேதித்திருந்தமையா லுள்ளபடி யறிந்தவனல்லனாம். இனி ஞானம், க்ஷணந்தோறுங் கெடுமாகில் அந்த க்ஷணத்திலுற்பத்தி நிலை நாசங்களாகவேண்டும். உற்பத்தி க்ஷணமும், திதிக்ஷணமும், விநாசம் க்ஷணமுமாகையால் க்ஷணபங்கமென்பது கூடாதாம். அன்றியும் பூர்வக்ஷணத்திற்றோன்றிய ஞானமும் பாசக்ஷணத்திற்றோன்றிய ஞானமும் அந்நியமாகில் "யான் கண்டீர் நோன்புகள் முற்பிறப்பின் முயலாதேன்" என்னு முங்களுரைய சத்தியமாம். அன்றியு மிவர்சர்வக்ஞானபடி நீருக்குப் பரிசமில்லை நெருப்புக்குப்பரிசமுண்டு. அது விதனுள்ளே கலந்துநிற்குமாதலா லிதற்குப் பரிசம்போற் றோன்றுவதேயுள்ளதென்ன ஞானம்பிறந்தவர்பெரியவரல்லவோ, அன்றியும் "ஸக்ஷணிகஞ் சத்தவாதியிதிவசனாத்" ஞானமுங்க்ஷணத்திலே தோன்றிக்கெடும்.

ஞேயமுங் கணத்திலேதோன்றிக்கெடும். பின்றோன்றிய ஞானமும் பொருளும் பொழுதுவேறுபட்டுப்போதலாற் சர்வஞ்ஞத்துவங் கூடாதென்க. இதனாலேயா லக்ஷணமும் சோதித்தாராம், என்றார் ஞானப்பிரகாசர்.

முத்திநிலங்கண்டறங்கண் மொழிந்தானுபின் முதன்
முழுதும் பொன்றிப்பின் மொழிந்தவன்ன, மொத்திடுந்தே னெய்கூட்டி யுண்டிறந்தோனொருவ னுலகினில் வந்திதுதீதென் றுரைத்தாலொக்குஞ், செத்தது பின்னென்றுரைக்கிற் கதியிற்செல்லாத் தேரனுரைநீர் பெருகிச் சென்றுறுகு, மத்தினளவறியாதிக்களையோர்தம்மை யக்களைக்கே செல்லவிடுமாசையாமே. ([illegible])

(இ-ள்.) முத்திநிலங்கண்டறங்கண் மொழிந்தானுயின் முதன்முழுதும் பொன்றிப்பின் மொழிந்தவன்ன மொத்திடும். எ-து. வீட்டிடத்தைக்கண்டு பின்பு அற முதலியவற்றைச் சொன்னானென்று புத்தநீ கூறின் ஒருமுதல் சேரக்கெட்டுப் போய்ப் பின்புவந்து சொன்னதென்னு முறைமையொக்கும். அஃதென்போலவென்னில்,—தேனெய் கூட்டியுண்டிறந்தோனொருவனுலகினில் வந்தித் தீதென்றுரைத்தாலொக்கும் எ-து. தேனையு நெய்யையுங்கூட்டிக் குடித்துச் செத்தோனொருவன் மீளவுமுலகின்கண் வந்து தேனுநெய்யுங்கூடினது விஷமென்று சொன்னதன்மைத்து,—செத்தது பின்னென்றுரைக்கிற் கதியிற் செல்லா. எ-து. (இதனைப்பொருளுக்கேற்பமாறுக) அறமுதலியவற்றைக்கூறி வீட்டிடத்தைப் பின்படைந்தானென்னில் அவன் முத்தியையறிந்தவனல்லன் ஆதலால

வன் கூறியவாறுமுங் கதியிற்செலுத்தமாட்டாது,—தோறுணை நீர் பெருகிச் சென்றாற்றுமத்தினளவறியாதிக்கரையோர் தம்மை யக்கரைக்கே செல்லவிடுமாசையாமே. எ-து. புத்தனு ணையானது ஜலமானது பெருகிச்சென்றேடுமாற்றினளவறி யாதானொருவ னிக்கரையினின்றேனை யக்கரையிலே செலுத் திவிடுவேனென் றுசைப்படுத்துங்கொக்கும். எ-று.

இச்செய்யுள் புத்தரிருபத்து நால்வரினு மொருவன்முத் தியிடங்கண் டிவ்விடமுங்கண் டாமுதலியன கூறினனென்ப தனை மறுத்துக் கூறிற்று. [௫)

உருவாதியைந்து கந்தங்களு மறக்கெடுதலே மோக்ஷமா கையால் பின்பு வந்துசொல்வது கூடாதென்றார். ஞானப்பிர காசர். முன்சொன்னனென்னில் தானறியாமுன் சொன்ன வைமயக்கநூலாமென்றார் மற்றொருவாசிரியர்.

நீர்போல நின்றுயிர்கட் களித்திடாதே நெருப்பாய துயர்பிறப்பினிகழ்ந்துநின்று, பாரோருக்களித்தபடி வலைபிற்பட்ட பலகலைமான் கண்டொருநீள் கலைபாய் ந்தோடி, நேரேசென்றவ்வலைக்கே நேர்ந்தாலொக்கு நீள்பாவக் குழியில்விழு நீர்மையாகு, மாரோவிங்கவ னைப்பா ரறத்தையாக்கப் பிறந்தறமாக்கினனென் னிலடங்கவாமே. (௪)

(இ-ள்.) நீர்போலநின் றுயிர்கட்களித்திடாதே நெருப் பாயதுயர்பிறப்பினிகழ்ந்துநின் றுபாரோருக்களித்தபடி வலை யிற்பட்ட பலகலைமான் கண்டொருநீள் கலைபாய்ந்தோடி நேரேசென் றவ்வலைக்கே நேர்ந்தாலொக்கும். எ-து. கர்த்தா

ஜலமுமதனிரதமும்போலச் சர்வான்மாக்களிடத்திலு நீங்காமனின்றிரக்ஷிப்ப னென்றதே கொடிதாகிய தீத்தன்மையையுடைய துன்பப் பிறவியின்கண்ணே தோன்றிநின்று பிரபஞ்சத்தார்க் கருள்செய்வனென்னுமது, வலையிற்பட்ட பலமான்களையுங் கலைகளையுங் கண்டப்பாற்பட்டு நிற்ற வோர்கலையானதிவற்றை யிரக்ஷிக்கத்தானுமோடித்தவருமற் சென்றந்தவலைக்குள் அகப்பட்ட தன்மைக்கொக்கும்,—நீள் பாவக்குழியில்விழு நீர்மையாகும். எ-து. மிக்கநரகத்திற்செல்லும் வழியாமிதனை,—ஆரோவிங் குனையொப்பார். எ-து. மெய்யேயிரக்ஷிக்கும் வழியென்று சொல்லுகிற புத்தனை யொப்பார்யாவர்,-அறத்தையாக்கப்பிறந்தறமாக்கின னென்னில். எ-து. அறமுதலியனவற்றையுண்டாக்க வேண்டித் தான்பிறந்தறத்தையுண்டாக்கினனென்னில்,—அடங்கவாமே. எ-து. சர்வான்மாக்களுந் தருமத்தையுண்டாக்கவேண்டிப் பிறந்தார்களாம். எ-று. ஆரோவென்பதிகழ்ச்சிக் குறிப்பு.

இச்செய்யுளா லிரக்ஷகாரணமாயினுந் தன் மங்காரணமாயினுங் கர்த்தாபிறந்தானென்னிற் கர்த்தாவன்றென்னுந் தோடமென மறுத்துக் கூறிற்று. நீர்போல நின்றுயிர்கட்கென்பது பானீயம் ஆன்மாக்களுக்கிரக்ஷை, சலமாமென்கையால். நீள்பாவக் குழியிலென்றதனால் யாம்சந்தின்று தன்மஞ்சொல்லுதல் நரகவேதுவாம். (௪)

அறத்தையாக்கப் பிறந்தறமாக்கினனென்னில். எ-கு. ஆன்மாக்களிடத்துவைத்த கிருபையாலே யிரக்ஷமுற்றெல்லாருந் தன்மத்தைப்பண்ணிப் பிழைக்கவேண்டுமென்று தான்பிறந்து தன்மத்தைச்செய்து பரிபாலனம்பண்ணினனென்னில்.

எ-ம். அடங்கவாமே. எ-கு. உலகத்தின்கண் ணெல்லாப்பிராணிகள் பிறந்தது மித்தன்மைத்தாம். அன்றியும், பிறப்பினுக்குக்காரணம் வினையாதலால் புத்தக்கடவுள் பிறப்பதற்கு முன்வினையுண்டாகவேண்டும். வினையின்றிப் பிறந்தானென்னில் யாவரும் வினையின்றிப் பிறந்தாராகவேண்டும். என்றார். ஞானப்பிரகாசர்.

நீர்போலநின்றுயிர் கட்களித்திடாதே. எ-கு. நின்று. எ-து. உன் கடவுள் பிறவாமல் நின்று,—நீர்போலவுயிர்கட்களித்திடாதே. எ-து. தண்ணீரான துயிர்கட்குத் தாபசோபத்தை நிவிர்த்திரக்ஷிப்பதுபோல உயிர்கள் துக்கத்தை நிவர்த்திரக்ஷியாதே என்றார் மற்றொருவாசிரியர். வலைக்கேநேர்ந்தாலொக்கும். எ-து. இல்பொருளுவமை.

அலகிறந்தயோனிகளிற் புகுந்ததெல்லா மறத்தையளித்திடவென்னி லவற்றினெல்லா, நிலவுவது கன்மத்தாலாகுமன்றி நினைந்ததோரிச்சையினு னிகழ்ந்தானுமி, னுலகுதனிலுள்ளோர்க்கு மதுவேயாகு மொருத்திவயிற்றினி லிருந்தங்குதரந்தளித், தலமதில்வந்தானென்னிற் றுயைக்கொன்றான் றருமத்தை யின்றெனக்குச் சாற்றிடேலே. (௫)

(இ-ள்) அலகிறந்தயோனிகளிற் புகுந்ததெல்லா மறத்தையளித்திடவென்னில், எ-து. எண்ணிறந்தயோனிகளிற் சாதனானதெல்லாந் தன்மத்தையுண்டாக்கவேண்டியென்று புத்தனீ கூறின்,—அவற்றினெல்லாநிலவுவது கன்மத்தாலாகும். எ-து. அங்ஙனம் பலயோனிசாதனானது கன்மத்தாலாகவேண்டும்,—அன்றி நினைந்ததோரிச்சையினு னிகழ்ந்

தானாகில். எ-து. அற்றன்று, தான்கருதிய விருப்புக்காரண த்தாற்காய மெடுத்துக்கொண்டானென்று கூறின்,—உலகுத னிலுள்ளோர்க்குமதுவேயாகும், எ-று. பிரபஞ்சத்திலுள் ளோர் காயமெடுத்துக்கொண்டதேயாம்;—ஒருத்திவயிற்றினி லிருந்தங்கு தரந்தள்ளித்தலத்தில் வந்தானென்னில், எ-து. அங்ஙனமான்மாக்கள்போல யோனிசாதனானதில்லை, மா தாவினுதரத்தேயிருந்தவ்வுதரத்தைப்பிளந்து பூமியின் கண் ணே வந்தறத்தையுண்டாக்கினானென்று நீ கூறின்,—தாயை க்கொன்றான் றருமத்தையின் றெனக்குச்சாற்றிடேல், எ-று. அங்ஙனமாதாவைக்கொன்றான் கூறியதன்மத்தை யுண்டாக்கி னானென்னில், அத்தாயைக்கொன்றான் கூறியதன்மத்தையிப் போதெனக்குக் கூறுவாயல்லை. எ-று. புத்தன்பிறக்கிறகா லத்து மாதாவினுடைய வலமருங்குலாற்பிறந்தான், அவளு மாறு நாள் குற்றுயிரோடே கிடந்தேழாநாளிறந்தாள். இது புத்தர்மாதாக்களிருபத்துநால்வர்க்குமொக்கும். (இதற்கு.) உ-ம். "உலும்பிலிவனத்து ளொண்குழைத்தேவி, வலம்படு மருங்குல்வடுநோயுறும, லான்றானவ்வழித்தோன்றினனா தலி, னின்றேழாநாளின்னுயிர்வைத்தான்" இது விம்பசா ரகதை யென்னுங்காவியம் பௌத்தருடைய நூல், அதன்கண் கண்டுகொள்க. "முத்தாரம் புத்தர்தோன்றித்தாய் பழுவை முறித்தேயிட்டார், கொத்துவாழ்குழலாளாகுங் குண்டலகே சிதானுங், கத்திருவாங்கணவ னக்காள்தனையுங்கொன்றிட்டா, ரித்துணையாரிருவரும்வந் திங்ஙனேதவமுரைப்பார்." இது சிவபத்தர்கள் வசனம், ஆகையா லவன்மாதாவேழுநாளிலே மரித்தாளென்பதவர்கருத்து. (௫)

மாதாவுதரத்தைப் பிளந்து வருவது யோனியைப்பரிசிக்கலாகாதென்றும் யோனிசாதகமழிவென்று மெண்ணிமாதாவயிற்றைக்கிறிப்பிறத்தல் புத்தமதக்கோட்பாடு. உதரம் வயிறு.

அலகிறந்தயோனிகளிற் புகுந்து சஞ்சாரிஜீவன்கள் படுகிறவிடுக்கண்கண்டு கருணாபரவசனாகி யெண்ணிறந்த பிறப்பினாருயிரங்கர்ப்பம் பிறர்க்குழன்றானாகில் இவன்செய்துகொள்ளுங்காரியம்யாவதாம், புத்ததத்துவம்வேண்டிப்பிறர்க்குழன்றானல்லன். இவன் பிறர்க்குழலபுத்ததத்து வந்தானேவரும். புத்ததத்துவம் வருவதறிந்துழலுமோ, வருவதறியாதுழலுமோ அறியாதுழன்றானாகில் உலகத்தார் மாத்திரமாவான். அறிந்துழன்றானாகில் ஆகாசகாமிகளாய்ப் புத்தர்களையும் போதியையுங்கண்டு ஞானம்பிறந்ததென வேண்டாம். தன்னை யாச்ரயித்தார்க்குச் சந்தானநாசஞ்சொல்வதோ தத்துவவுபதேசமாவது, அஃதுபதேசமாகாது. துக்கரூபமான சம்சாரத்திலவத்திப்பதிற்பொன்றக்கேடழகிதெனின்? ஸம்ஸாரதுக்கமுளதேயெனினுந் தபசானுந்தானத்தானுமுண்டாகிய சுவர்க்காதிசவுக்கியமுண்டன்றே, இதனாற்குணமொழிந்தானாகான். பழியும்பாவமுமாக்கி யாசரித்தாரைக்கெடுத்தானும். கன்மத்துக்கீடாகவுழன்றானே சுவேச்சையாலே யுழன்றானே? கன்மத்துக்கீடாக வுழன்றானென்னில் தனையாளனாகிய தாசனைப்போற் பெருமையிலனாகும். சுவேச்சையாலுழன்றானென்னின் நரகத்திற்றுன்புறுவார்க்குப் புத்த தத்துவங்கொடுக்கவேண்டும். அவ்வாறு செய்வனென்னில் என்று நரகதுன்பமில்லையாதும். என்று விசேஷக்குறிப்பிட்டனர் ஞானப்பிரகாசர்.

அரியினொடுநரியுழுவையாதியாக வானபோதறந்திரிந்துகோறலாதி, பரிவினொடுஞ் செய்தனனுமில்லையாகிற் பசிதனக்குத்தின்பதவன் பழுதையோதான், கருதிலவன் பாதுக்கனாகிற் கணவனிழந்தோர்கட்குங்கண்ணிகுத்தித், திரியுமவர்துயரினுக்குமிரங்குவோன்றன் செயலறத்துக்கழகியதாஞ் செப்புங்காலே. (௫)

(இ-ள்.) அரியினொடு நரியுழுவையாதியாக வானபோதறந்திரிந்துகோறலாதி பரிவினொடுஞ்செய்தனனும். எ-து. உன்னுதிபுத்தனலகிறந்த யோனிகளிற் பிறந்தானென்றும் அப்படிப்பிறந்தது கொலைமுதலிய பாவங்களைநீங்கித் தன் மத்தைப்பரிபாலிக்க விரும்பியென்றுங் கூறினாய். அங்ஙனமாயின் புத்தன், சிங்கம் நரி புலி முதலியயோனிகளிலே சாதனனானவிடத்துத்தன்மத்தை விட்டுக்கொலையை விரும்பிப்பலவான்மாக்களையுங்கொன்று தின்றவிதுபிரியத்தோடுஞ்செய்தானாகவேண்டும்,—இல்லையாகிற்பசிதனக்குத் தின்பதவன் பழுதையோதான், எ-து. அப்படிக்கொன்றுதின்றானில்லையென்றுசொல்லுவையாமாயி னந்தயோனிசாதனனாய்த் திரிந்தவிடத்துண்டானபசிக்குப் புத்தன்றின்பதுபழுதையோ? அன்றேன் மாமிசமன்றோ? இதன்றியும்,—கருதிலவன்பாதுக்கதுக்கனாகிற் கணவனிழந் தோர்கட்குங் கண்ணிகுத்தித்திரியுமவர்துயரினுக்கு மிரங்குவோன்றன்செய லறத்துக்கழகியதாஞ்செப்புங்காலே. எ-து. பாதுக்கதுக்கனென்று நீ சொலின் பூகேதனாய்ப்பலவான்மாக்களைக் கோறலாற்பொல்லாதவனானதன்றியும், கணவனைநீங்கிச் சோரத்திற்செல்லுமகளிருறுந்துயரத்தினுக்கும், கண்ணிமுதலியதொண்டு கொலைத்

தொழிற்புரிவோர்துயரத்தினுக்கு மிரங்குவனென்னி லச்செ ய்தி யவன்றன் மதத்துக்கழகிதாஞ் சொல்லுங்காலத்துங்கருதா ங்காலத்தும். எ-று. ஆதி. எ-ணை. ஆதிபுத்தனென்று முன்னே கூட்டுக. கருதில். எ-ணை. கருதுங்காலத்தென்று பின்னேகூட் டுக. ஆம். எ-ணை. அல்லவென்க. அழகிதாமென்பதிகழ்ச்சிக் குறிப்பு.

அலகிறந்தயோனிகளென்னுஞ் செய்யுளு மிச்செய்யுளு மொருதொடர். அலகிறந்தயோனிகளிற் பிறந்து கொலைமுத லியன கடிந்துதன்மம் பாலித்தானென்பதனையும் பரதுக்கதுக் கினென்பதனையு மறுத்துக்கூறிற்று. கணவனிறந்ததென்றும பாடம். ஊனுண்டுயிர்க்கருளுடையோமென்கை மித்தியா வாதமெனக்கொள்க. கோறல்பொருளல்ல தவ்வூன்றினலென் றும்பெரியோர் சொல்லுகையால். (௬)

கண்ணிகுத்தித்திரியுமவர்துயரினுக்கும். எ-து. கண்ணிகுத் திவைத்துக்காத்திருந்து பறவைகள்வரவில்லை யொன்றிரண்டு வந்தவையுமகப்படாமற் றப்பிப்போயினவென்று மிகவுந்து யர்ப்படும் வேட்டுவர்கட்கு மிரங்கித்திரியுமவனது, என்றும் "நல்லார் துயக்கத்திரங்குமது நலங்காண், பொல்லார்க்கிரங் குதல் பொல்லாது." என்னும் திருவாக்கானுங் கண்டுகொள்க. எ-ம். எம்முடைய தேவனைப் பரதுக்கதுக்கனென்றது பிறர் கிலேசப்படுங்காலத்துயிர்க ணன்மார்க்கத்திலொழுகாம லவ மேயோகிலேசப்படாநிற்கின்றன வென்றிரங்கிக் கிலேசப் படுதலாலென்க. இஃதன்றி நீர்சொல்லுமது விஷமங்காணு மென்னில் இது நீ விசாரித்தறியாது சொன்னாய். பூர்வகண த்திற் கிலேசித்த சித்த மக்கணத்திற்கெட வுத்தரகணத்திலு

ண்டாகிய சித்தம் வேருதலான் முற்பட்ட சித்தக் கிலேசத்துக்குக் கிலேசித்ததனாலே பரதுக்கனென்றததனை. ஒருவனை யிரக்ஷிப்பானொருத்த னுகாரத்தால்வந்த வியாகுலத்தை யுபவாசத்தான் மாற்றுனாற்போலவும் சமுசாரத்தால்வந்த கிலேசத்தைத் துறவானீக்கவேண்டுமென்றியே கண்ணைக் கொடுத்தான் குருதியைக்கொடுத்தான் மாம்சத்தைக் கொடுத்தான் என்பதிரக்ஷையல்ல. பின்பு மாம்சாதி வாங்கிக்கொள்ளுவானுக்குத் தோஷமென்ப துனக்குத்தெரியாது "பொருளல்ல தவ்வூன்றினல்" எ-ம். "பொருளாட்சி போற்றாதார்க்கில்லை யருளாட்சியாங்கில்லை யூன்றின்பவர்க்கு" எ-ம். பெரியோர் சொல்லுதலாலே ஊனுண்டுயிர்கட் கருளுடையோமென்கை மித்தியாவாதமென்க. ஓரசுரன்வந்து மாம்சந்தாவென்றால் அவனையறிவினாற்போதித்து மாம்சத்தைமாற்றி யன்னாதிகளினாலுருசிக்கப்பண்ணிற் கிருபாளுவாவன், அப்படியன்றி மீண்டுமாம்சமேகொடுக்கில் அவனந்த வசுரனுக்கொப்பாவனென்க ஆகையினாலே நீ சொன்னதாகாதென்க. என்றார் ஞானப்பிரகாசர்.

ஒருபொருளைத்தேடியதற்குரையுந்தேடி யுரைப்பதன்
முன் னுணர்விறக்குமுனக்குநூலென், மருவிவருஞ்
சந்தானவழியிலென்னில் வாயுரைத்ததேயுரைத்து வ
ழங்குமாகும், பெருகுவது கெட்டென்னிலதுபோ
லாம்பின் பித்துரைத்ததறியாது பேதைசொல்லுந்,
தருவதுநூலெப்பரிசு முதனடுவோடீறுதி தான்விரு
த்தமின்றியது சாற்றிடாயே. (எ)

(இ-ள்.) ஒருபொருளைத்தேடி யதற்குரையுந்தேடி யுணாப்பதன்முன்னுணர்விறக்குமுனக்குநூலென். எ-து. ஒருபொருளைத்தேடி யதற்கேற்றதோர் சொல்லையுந்தேடிச் சொல்லொடுபொருளைக்கூட்டி நூலாகக்கூறுதன்முன்னே யுன்ஞானங்கெடுமாதலாலுனக்கு நூலுண்டாம்படியென்? அற்றன்று,—மருவிவருஞ் சந்தானவழியிலென்னில் வாயுரைத்ததேயுரைத்துவழங்குமாகும். எ-து. அவ்வறிவு பொருந்திவருந் தொடர்ச்சிவழித்தோன்றின நூலாமென்று புத்தன்கூறின், முன்சொன்னவக்கரமொன்றையே பின்சொல்லி நிற்கவேண்டும். அற்றன்று,—பெருகுவது கெட்டென்னிலதுபோலாம் பின். எ-து. முன்னறிவுகெட்டுப்பின்றோன்றுமறிவு மிக்கவறிவாமென்றுகூறின் அங்ஙனம் பின்றோன்றுமறிவுங் கணத்திற் கெடுகையாலே முன்னறிவேயாமத்தனை,—பித்துரைத்ததறியாது பேதைசொல்லுந்தருவதுநூல். எ-து. உனது நூல் பித்தர்சொல்லுஞ்சொல்லு மறியாதார் சொல்லுஞ்சொல்லுஞ் சொல்லிற்றும்,—எப்பரிசுமுதநடுவோடிறுதி தான் விருத்தமின்றியது சாற்றிடாயே. எ-து, நூலாவது முதனடுவிறுதி மாறு பாடில்லாததாதலா லெப்பெற்றியதுனதுநூல், உன்னுடைய பழுதுநூலையென்றுன் சொல்வாயல்லை. எ-று. பித்துரையும் என உம்மைவிரிக்க. சந்தானவழியாவன—நால்வகை. அவை தீபசந்தானம், வாயுசந்தானம், தாராசந்தானம், பிபீலிகாசந்தானமென்க. பெருகுவது கெட்டென்பது, கெடுதல் நால்வகையில் கெட்டுவர்த்தித்தல்.

இச்செய்யுண் முதற்புத்தன்பிடகநூலை மறுத்துக் கூறிற்று. (எ)

நீகற்பஞானம் பிராந்தி என்பதனாலும் "விகல்பயோநயப்பதா" என்பதனாலும் நிர்விகற்பஞானியாயிருக்கிற சுக

தனுடைய சத்தம் பிறவாதாகலின் சாத்திரஞ்சொன்னபடி யெங்ஙனே? சொல்லாய். முன்னேறுபின் மலைவுடையவே யெனக் கொள்க என்றார் ஞானப்பிரகாசர்.

முன்னாகப்பலவறங்கள் பூரித்தெம்மிறைவன் முழுது
ணர்ந்திங்கருளினானுயிர்கண் முத்தியடையப், பின்னா
கப்பிடகநூலுரைத்தானென்று பேசினாயிவன் முன்பு
பேரறங்கள்புரிநூல், சொன்னாரிவனைப்போன்முன்
னொருவனென்னி லவனுக்குச் சொன்னாரெனத்
தொடர்ச்சியாகி, யன்னாய்பின்னவத்தைப்படுமொருவ
னின்றுமாதலான் பாழியிருப்பாரிதனையறையே. (அ)

(இ-ள்) முன்னாகப்பலவறங்கள் பூரித்தெம்மிறைவன் முழுதுணர்ந் திங்கருளினானுயிர்கண் முத்தியடையப் பின்னாகப் பிடகநூலுரைத்தானென்று பேசினாய். எ-து. ஆதியிலே யெம்முடையவிறைவன் பலதருமங்களைச் செய்து நிறைந்து சருவஞ்ஞனாய்க் கிருபையாலே யான்மாக்கள் வீட்டின்பமடைதற்கும் பின்பறஞ் செய்தற்கும் வழியாகிய பிடகநூலையருளினானென்று புத்த! சொன்னாய்,—இவன்முன்பு பேரறங்கள் புரிநூல்சொன்னாரிவனைப்போன் முன்னொருவனென்னில். எ-து. பெரியவறங்களை யுண்டாக்க விவனுக்கு முன்புநூல் சொன்னவரார் அவனுக்குச் சொன்னாரெனத் தொடர்ச்சியாகி யன்னாய் பின்னவத்தைப் படுமொருவனின்றும். எ-து. அவனாசாரியன் றனக்குச் சொன்னாரென மேன்மேற்றொடர்ச்சிப்பட்டுப் பின்சொற்குத்தரமின்றி முட்டுப்படுமாகையாற் கர்த்தாவுமில்லையாம். இதன்றியும்,—ஆரோவுன்பாழி யிருப்பா ரிதனையறையே. எ-து. உன்பள்ளியுள்நீ தெய்வமெ

ன்றேத்த விருப்பாராரோ நீ கூறுவாயாக. எ-று. அனவத்தைப்படுமொருவனென்றாய், அனவத்தையென்பதொரு தோடங்கொண்டு நின்றுசொன்னொருவனென்றுயென்பது. அநவத்தையாவது, தலைகாணாதது, அல்லது முடிவுகாணாதது. அன்றாய் அசை. (அ)

முன்னொருவருளினன் என்பதற்கவன்வசநம். "எண்ணிறந்தகாலங்களெம்பொருட்டான் மிகவுழன், றெண்ணிகந்தவுலகங்களிருடர வொருங்குணர்ந், தெண்ணிகந்ததானமுஞ்சீலமுமிகையாக்கி, யெண்ணிகந்த குணத்திறனெம்பெருமானல்லனோ" அவனைப்போல் முன்னொருவராவர் தண்ணங்காரன் முதலாயினோர் என்றார் ஞானப்பிரகாசர்.

இந்நூலைச்சொன்னவன்று னிங்கிருந்தானென்னிலிவனிருத்தியேத்துமவனெங்கிருந்தானெவனோ, வந்நூலோகுருவந்தவடைவுமுனக் கில்லையடைவுதரின்முடிவின்கணாதிபோதன், சொன்னுமைவேதாகமங்களாகுஞ் சுருக்கியூண்டவம்புரியச் சொல்லுவதெல்லோரு, முன்னூல்கண்கழுவாதேயுதிப்பதன்மூன்புலாலோடுண்பானோநின்பிரியனுரைத்ததொருநூலே. (கூ)

(இ-ள்.) இந்நூலைச்சொன்னவன்று னிங்கிருந்தானென்னில். எ-து. இந்தப் பிடகசாத்திரஞ்சொன்ன புத்தாசாரியனிப்பள்ளியிலிருந்தானாகில்,—இவனிருத்தியேத்துமவனெங்கிருந்தானெவனோவந்நூலோகுரு வந்தவடைவுமுனக்கில்லை. எ-று. இவனாசாரியனாக வேத்தப்பட்டவனாவானெவ்விடத்தான், கடவுளாவதெவன், அவனாற்சொல்லப்பட்ட நூலெவ்

விடத்தது, அவைகாணப்பட்டதில்லை ஆதலாற் குருசந்தான வமைவுமுனக் கில்லையாம்,—அடைவுதரின் முடிவின்க ணாதிபோதன் சொன்னுமவைவேதாகமங்களாகும். எ-து. நூலடைவுசொல்லப்புகின் சங்காரத்தின்க ணழிவில்லாதபரமேஸ்வரன் சொல்லப்பட்டதாம். அவை வேதாகமமென்பர்,-சுருக்கியூண்டவம்புரியச் சொல்லுவதெல்லோரும். எ-து. இவ்வாகமங்களின் சார்வு சொல்லுவார்களு முணவைச் சுருக்கித்தவத்தைப்புரிதலே. இவையன்றி,—உன்னூல்கண் கழுவாதே யுதிப்பதன்முன்புலாலோடுண்பானே ருன்பிரியனுரைத்ததொருநூலே. எ-து. உன்னுடைய பிடகநூல் கண்கழுவாதுதிக்குமுன்னே புலாலுடனுண்பானொரு போசநப்பிரியன் சொல்லப்பட்டநூலாம். எ-று. ஊண்சுருக்குதல் தபசுபண்ணுமவர் போஜநத்துக்கு முத்திரையும்பார்த்து வாயுவுக்குவழக்கமுஞ்சலத்துக்கிடமுமாக வூணைச்சுருக்குவது. (சு)

கண்வழுவாதுதிப்பதன்முன் புலாலோடுண்பான் என்றதனாற் புத்தன்சர்வஞ்ஞனல்லனென்பதும் அவன் பிடகநூல் மலைவுள்ளநூலென்பதும் அந்நூலிற்கூறியது தாராசாரமென்பதும் போந்தவாறுகாண்க. என்றோருரையாசிரியர்.

முன்னூலும் வழிநூலுஞ் சார்புநூலு மூன்றுகு முலகத்து மொழிந்தநூல்க, ளிந்நூலிலுன்னூலிங்கெந்நூலென்னிலிந்நூல் காணென்னூலென்றியம்பமாட்டா, யுன்னூலு மொருநூலாயுரைப்ப தென்னே யுலட்டுநூல்பருத்திநூல் சிலம்பிநூல்க, ளந்நூலுமல்லாதே பொய்ந்நூல் கொண்டிங் கறநோற்றுத்திரிந்த வாறழகிதாமே. (கo)

(இ-ள்.) முன்னூலும் வழிநூலுஞ் சார்புநூலு மூன்றுகு முலகத்துமொழிந்தநூல்கள். எ-து. பரமேஸ்வரனருளிச் செய்யப்பட்டிவ்வுலகின்கண் வழங்குநூல்கண் முதனூலும் வழிநூலும் சார்புநூலுமென மூன்றுவிதமாம். அவைவேதாகம புராணங்கள்,—இந்நூலிலுன்னூலிங் கெந்நூலென்னி லிந் நூல்காணென்னூலென் றியம்பமாட்டாய். எ-து. இங்ஙன மூன்றுவிதமான நூலிலுன்னூலெந்தநூலென்றுகேட்டாலிந் தநூல்களி லென்னுடையநூல் இந்நூலென்று சொல்லவ ல்லையல்லை. ஆதலால்,—உன்னூலுமொருநூலா யுரைப்பதெ ன்னே. எ-து. உன்னூலை யொருநூலாய்ச் சொல்வதெப் படி,—உலட்டுநூல் பருத்திநூல் சிலம்பிநூல்க ளந்நூலுமல் லாதே பொய்ந்நூல் கொண்டிங் கறநோற்றுத்திரிந்தவாறழகி தாமே. எ-து. உலண்டாற்செய்தநூல் பருத்தியாற் செய்த நூல் சிலம்பியாற்செய்தநூலென்று சொல்லப்பட்டநூல்க ளின்ற குதியுமல்லாத வனதுபொய்யாகியநூலைக்கொண்டிங் கறத்தையுண்டாக்கி நடந்ததாச்சரியம். எ-று.

ஒரு பொருளைத்தேடி யென்னுஞ்செய்யுண்முத லிச்செய் யுட்காறும் பிடகநூலை மறுத்துக் கூறிற்று. (கா)

அழகிதாமென்றது கற்கரித்து நன்றட்டாய் என்பது போல் மோசக்கொண்டாட்டம். "முதல்வழி சார்பென நூன் மூன்றாகும் அவற்றுள், வினையினீங்கி விளங்கியவறிவின், முனைவனகண்டது முதனூலாகும்." "முன்னோர்நூலின் முடிபொருங்கொத்துப், பின்னோன்வேண்டும் விகற்பங்கூறி யழியாமரபினது வழிநூலாகும்." "இருவர்நூற்கு மொருசிறை தொடங்கித் திரிபுவேறுடையது புடைநூலாகும்." என்பதுங் கண்டுகொள்க. என்றார் ஞானபிரகாசர்.

புத்தனவன்பொன்றக்கெட்டுப்போனானென்றுபோற்
றுவதிங்காரைநீபொய்த்தவஞ்செய்புத்தா, செத்த
வர்க்குச்சில்கிரியை செய்யவிங்குச் செய்தவர்க்கும்
புண்ணிய மாமென்றுசெப்பி, னித்தவுயிராதலாற்ப
லிக்குஞ்செய்தி நினைந்துதருவானுமுளனுனக்கிவ்வா
றில்லை, வைத்தசுடர்த்தீப மறமாய்ந்தக்காலதற்கு
மருவுதிரிநெய் கூட்டுமதிகேடுன்வழக்கே. (கக)

(இ-ள்.) புத்தனவன் பொன்றக்கெட்டுப்போனானென்று போற்றுவதிங்காரைநீ பொய்த்தவஞ்செய்புத்தா. எ-து. பொய்த்தவத்தைச் செய்யும் புத்தா, நீயுன்னாசாரியன் முதலறக் கெட்டுப்போயினானென்றுஞ்சொல்லி இவ்விடத்துப் போற்றுவதியாவரை,—செத்தவர்க்குச் சிலகிரியைசெய்யவிங்குச் செய்தவர்க்கும் புண்ணியமாமென்றுசெப்பின். எ-து. இறந்தோரைநோக்கிச் செய்தநன்மை இருந்தோர்க்குப் புண்ணியமாமென்றுகூறின்,—நித்தமுயிராதலால், எ-து. ஆகையாலுயிர்களநித்தமன்று, நித்தமாதல்வேண்டும்.—பலிக்குஞ் செய்திநினைந்துதருவானு முளனுனக்கிவ்வாறில்லை. எ-து. அதனானீகொடுக்கும் பலியாலுண்டாகிய புண்ணியமித்தன்மையென்றுநினைந் தப்புண்ணியபலமருளுவானு மொருகர்த்தாவுண்டாகவேண்டும். இந்நெறியுன்னானெறியன்று,—வைத்தசுடர்த்தீபமறமாய்ந்தக்காலதற்கு மருவுதிரிநெய்கூட்டு மதிகேடுன் வழக்கே. எ-து. பொன்றக்கெட்டவர்க்குச் செய்யுஞ் சிறப்பாகிய வுனதுவழக்குத் தீபம்பொன்றக்கெட்டவிடத் திறந்த தீபத்துக்குபகாரமென்று கருதிநெய்யுந்திரியுங்கூட்டு மறிவின்மையாமுன் வழக்கு. எ-று.

இச்செய்யுள் புத்தன் கத்தாவில்லையென்கையாற் செய்யுங் சன்மத்தாலும் பலமில்லையென்று மறுத்துக்கூறிற்று. உருவகந்தமாகிய புத்தரென்பு தாதுநாயனென்றுந் தாடகநாயனென்றுமின்றும் ஸ்மிருதிகாட்டுகிருரென்கையால், உருவகந்தங் கெட்டதில்லையாம். ஆகவே மற்றநாலுகந்தமுங் கெடா. அதனாலவர்பொன்றக்கெடலாகிய முத்தியுமடைந்திலர். புத்தன் சுகதன்மகன். உன்னுனெறியன்றென்றதனால் எமது மதக்கோளென்பது கருத்து. (கக)

நூலுரைத்தானொருவனுளனென்றநுமானத்தானால்
கொண்டிங்கறிந்தாற்போனூலாநூலின், பாலுரைத்த
பொருள்களெல்லாமநுமானமென்னிற் பரலோகபா
தாளலோகங்களொருசொல், லாலுரைத்தநூலின்றி
யறையாயின்றே லவையறிந்தபடியெனுனதநுமானமன்றே,
மேலுரைக்கும்பிரமாணமுனக்கில்லைக் காட்
சியநுமானம்விட்டபொருள்விளக்குவதாகமமே· கஉ

(இ-ள்.) நூலுரைத்தா னொருவனுளனென் றநுமானத்தானால்கொண்டிங் கறிந்தாற்போனூலாநூலின் பாலுரைத்த பொருள்களெல்லா மநுமானமென்னில். எ-து. நூலைச்சொன்னவனொருவனுண்டென்று நூலைக்கண்டநுமித்தாற்போல நூலின்பகுதியிற் சொன்னபொருள்களெல்லாமறிகை யநுமானமென்று புத்தர்கூறின்,-பரலோகபாதாள லோகங்களொருசொல்லாலுரைத்தநூலின்றியறையாய். எ-து. பூமிக்குமேலான வுலகங்களின் செய்தியுங் கீழானவுலகங்களின் செய்தியுநூல்கொண்டு சொல்லுவதின்றி யநுமதித்துச் சொல்லலாமாயிற்சொல்லாய்,—இன்றேலவை யறிந்தபடியெ னுனதநுமா

னமன்றே. எ-து. அந்தநூலில்லையாயினந்தவுலகங்களிற் செய்தியறிந்தபடியென்? உனதநுமானத்தாலறியும்பகுதியன்றே, ஆகையால்,—மேலுரைக்கும் பிரமாணமுனக்கில்லைக் காட்சியநுமானம்விட்டபொருள் விளக்குவதாகமமே. எ-து. (மேலுரைக்கும் பிரமாணமுனக்கில்லையெனப் பின்னேகூட்டுக.) சாட்சியானு மநுமானத்தானு மறியாதபொருளை யறிவிப்பது நூல். அந்நூற்பிரமாணமுனக்கில்லையென்று நீ கூறின், நீ, முன்சொன்னபிடகநூற்பிரமாணமு முனக்கில்லையாம்.எ-று.

இச்செய்யுள் பிரமாணமில்லை யென்பதனை மறுத்துக் கூறிற்று. நூலுண்டேலறைவாய் பாடபேதம். (கஉ)

இனி யநுமானத்தாலறிந்தோ மென்பையாகிற் காரியாநுமானத்தாலறிந்தாயோ? காரணாநுமானத்தாலறிந்தாயோ? காரியாநுமானத்தாலறிந்தாயாகிற் புகையைக்கொண் டக்கியுண்டென் றறிந்தாற்போலவும், ஆற்றுநீர் பெருகிவருதலைக் கொண்டு மலைத்தலையின் மழைபெய்த துண்டென் றறிந்தாற் போலவும், பரலோக பாதாளலோகங்களுண்டென் றெந்தக் காரியத்தாலறிந்தாய். அன்றிக்காரணாநுமானத்தாலறிந்தாயாகில் மேகமானதிருண்டு மின்னிடித்தாரவாரமாயெழுந்தது கண்டிந்தமேகமானது மழைபெய்யுமென்று நிச்சயித்தறிந்தாற்போலவுங், கர்ப்பிணியாயிருப்பாளைக்கண் டிவள் பிள்ளை பெறுவாளென்று நிச்சயித்தாற்போலவு மிந்தப் பரலோகபாதாளலோகங்க ளுண்டென் றறிந்த தெந்தக்காரணத்தாலே சொல்லுவாயாக. மேகோந்நதி விசேஷாத் புசியாததியாதது பெய்தாலும் பெய்யும் பெய்யாமற்போனாலும்போம் ஒருத்திவயிற்று விக்கங்கொண்டிவள் கர்ப்பிணியென்றும்

பிள்ளை பெறுவாளென்றுஞ் சொல்ல விசுவாசமில்லை. பெற்று மும் பெறுவள் மகோதரத்தினாலே வயிறு வீங்கிப் பிள்ளைபெறு மற்போனாலும்போவள். ஆதலா னீர் சொன்ன காரிய காரணாநுமானங்கள் கூடாவென்னில் நீ காரியகாரணமான விலக்கணங்களையறியாமல் மழை பெய்யு மேக சொருபமும் பிள்ளைப்பெறுங்கர்ப்பிணி யிலக்கணமுமறியாமற்சொன்னாய், காலிழுந்து கருகிவருதன் முதலான இலக்கணமுடைய மேகமானது பெய்யுமென்றும் தோலு நெகிழ்ந்து வாயும் வெளுத்துக், கண்களும் பசலையாய், முலையும் புடைத்து, முலைக்கண்களுங்கறுத்து, சுருங்கியுமிருக்கு மிவைமுதலான குறிகளையெல்லாமுடைய கர்ப்பிணி பிள்ளைபெறுவாளென்றும் இந்த முறைமைகளை நீ யறியாய். இவைநிற்க, இவையிரண்டுமல்ல தர்மதர்மியநுமானத்தால் அறிந்தோமென்னில், இது கடாதிகளைக் கொண்டு குலாலனுண்டென்று காண்கையாகும். இதுவாதிகணிமித்தகர்த்தாவுக்குக் காட்டுமிலக்கணமாதலா னீசொன்னதடாது. சுவார்த்தாநுமானம் பரார்த்தாநுமானமெனு மிரண்டிற் பரார்த்தாநுமானத்திலேதுவாக்கிய வந்நுவயவெதிரேகிக்குப் பக்ஷ ஸபக்ஷங்களாலறிவிக்கக்கூடாது. ஸபக்ஷத்துக்குப் பிறிதுகாட்டல் துச்சமானவுலகங்களில்லை அதனாற்கூடாது. அன்றியும் பாதிதமும் சற்பிரதிபக்ஷமுங் கொண்டிலை, அதனாலும் பொருள்விளங்காது. ஆதலாலுனக்குச் சாத்திரப்பிரமாண முண்டென் றறியப்போகாது, பிரத்தியக்ஷாநுமானத்தா லறியப்படாத பொருள்களைச் சாத்திரங்கொண்டறியவேண்டும். அந்தச் சாத்திரம் வேதாகமமென் றறிவாயாக. என்றார் ஞானப்பிரகாசர்.

எப்பொருளுமநித்தமெனவியம்பிடுவையநித்த மில்ல
தற்கோவுள்ளதற் கோவுளதிலதானதற்கோ, செப்பி
டினில்லதற்கில்லதென்றுமில்லை சென்றடைவதுள்ள
தற்கேயுள்ளதென்றுமுண்டா, மப்படிதானுளதிலதா
மப்பொருளுக்கென்னி லுளதிலதாகாதிலதுமுள்ளதா
கா, விப்பொருளுக்கநித்தமில்லை யென்றொன்றைக்காட்
டாயெனிற் றோன்றும்பொருணின்றிங்கிறுதியாமே.

(இ-ள்.) எப்பொருளுமநித்தமென வியம்பிடுவை. எ-று. எல்லாப்பொருளு நித்தமில்லை யநித்தமென்று புத்தா நீ சொல்லாநிற்பை,—அநித்தமில்லதற்கோ வுள்ளதற்கோ வுளதிலதானதற்கோ. எ-து. நீ கூறியவநித்த மில்லாத பொருளுக்கோவுளதிலதான பொருளுக்கோ,—செப்பிடினில்லதற் கில்லதென்றுமில்லைசென் றடைவதுள்ளதற்கே யுள்ளதென்றுமுண்டா மப்படிதானுளதிலதாமப் பொருளுக்கென்னி லுளதிலதாகாதிலது முள்ளதாகா. எ-து. அநித்தமில்லாததற்கென்று நீ கூறின் இல்லாத தென்றுமில்லையாம், ஆகையாலில்லாததற்குண்டான தில்லை. உள்ளதற்கென்று கூறின் உள்ளதில்லையாகா தென்று முண்டாகவேண்டும். உளதிலதாப் பொருட்கென்று கூறி னதுவுமுளதிலதாகையா லுள்ளதில்லையாகா வில்லாததுண்டாகாது. அதனாலிவையநித்தியமன்று,—இப்பொருளுக் கநித்தமில்லையென்றொன்றைக் காட்டாயெனின். எ-து. தோன்றும்பொருள்களி லிப்பொருணித்தமல்லாத நித்தமென்றொன்றைக்காட்டாயென்று கூறின்,—தோன்றும்பொருணின்றிங்கிறுதியாமே. எ-று. தோன்றும் பொருள்களாகிய துலவுடல்தோன்றிநின்று கெடுதலை யுடைத்தாம். எ-று.

ஆதலால் சூக்குமவுடலுக் கநித்தமில்லையென்பது கருத்து. அன்றியுந் தோன்றியிடுந் தூலதேகமும் வன்னபேதமு மொருக்காலு மிடையறுமற் றென்று தொட்டு வருதலாலதுவு நித்தியமென்னுங் கருத்தாகக் கொள்ளினுமமையும். (௧௫)

"இல்லாதன பிறந்தலானமாயுமென் றிம்மயக்கம், நல்லாகமவறிஞர்க்கில்லை நாட்டிய தத்துவங்க, ளெல்லாமியம்புமுறையே பிறக்குமிறக்குமுத்த, ரல்லாவணுக்கட் கநுபவகாரியமாகிநின்றே." என்னுந் திருவாக்கினுள் ளுமறிக. ஸர்வம்க்ஷணிகம் ஸகிருதுவாக்கு என்று சொல்லுவை, பூர்வக்ஷணவத்தியாகியயான் கையறக்கெடேன் வபரக்ஷணி வத்தியாகியயானவனிலங்கியனென்றாய், இவ்வாறு முன்புண்டாகிய முழுக்கேட்டினையும் பின்புண்டாகிய தனதந்நியத்துவமுஞ் சொல்லுகின்ற பூர்வக்ஷணவத்தியையறியுமாறென் விசாரியாய், பூர்வம்க்ஷணங்கெட்டுத் தத்க்ஷணந்தோற்றுகிறது சத்தோ அசத்தோசதசத்தோ? சத்தெனில் க்ஷணபங்கமில்லையாம், அசத்தெனிற்காணும்பொருளில்லாதாம், சத்து மசத்துமாயிருக்கும்பொருளுக்கென்னில் அநேகாந்தபக்ஷ பிராந்தனானை, ஆதலானீயெப்பொருளுக்கநித்தியஞ்சொன்னாய். எல்லாங்கணத்திலேதோன்றியழியுமென்னையாகின் முடிவிற் கணத்திலேகெ மாகி லந்நியோந்நியம் பரிசித்துப்பிறக்குமோ பரிசியாதுபி க்குமோ பரிசியாது பிறக்கிற் சம்பந்தமின்மையாம் இனை யறவுதிண்ணிதாம் பரிசித்துப் பிறக்கினுசம்பிறவாதுநின் தத்க்ஷணத்திற் சம்பவித்தலால் அத்தியந்தநாசம் பிறந்ததி லையாம். அத்துவிதஞானமாகிய வான்மசித்தியுமாம். க்ஷ நம் சத்ததிஷ்டந்தியென்னு முன்வசநம் வியத்தமாமெ கொள்க என்றார் ஞானப்பிரகாசர்.

அங்குரம்வித்தின்கேட்டிற்றோன்றுமதுபோல வினைத்
துருவுங்கெட்டுவழியாகுமென்னி, னங்கவற்றுக்காக்
கக்கேடணைந்தாயெல்லா மநித்தமெனுமுரைமறந்தா
யருகனுமானாய்நீ, யிங்குமுளையிலைமரமா யெழுந்தீண்
டிச்செல்லாதிறந்ததேயெழுந்தபடி நில்லாதென்னின்,
மங்கிபிடாதேபாலதருணவிருத்தையாய் வரும்வடிவு
திரிந்துநின்றுமாயுங்காணே. (கசு)

(இ-ள்) அங்குரம் வித்தின் கேட்டிற்றோன்றுமதுபோல வினைத்துருவுங்கெட்டு வழியாகுமென்னில். எ-து. முளையானது வித்தைக்கெடத்தோன்றுமதுபோல வெல்லா ரூபங்களுங் கெட்டுப்பின்பவ்வழியே தோன்றுமென்று புத்தநீ கூறின்,—அங்கவற்றுக்காக்கக் கேடணைந்தாயெல்லா மநித்தமெனுமுரைமறந்தாயருகனுமானாய் நீ. எ-து. (இதனை எல்லாமநித்தமெனு முரைமறந்தாயங்கவற்றுக் காக்கக்கேடணைந்தாயருகனுமானாயென்றுமாறுக.) எல்லாமநித்தமெனுஞ் சொல்லைமறந் துருக்கட்காக்கக் கேடுகூறினாய். அதனால் நீயும் க்ஷமணன் மதவழியிலேயாயினாய். அற்றன்று,—இங்குமுளையிலைமரமாயெழுந்தீண்டிச் செல்லாதிறந்ததே யெழுந்தபடி நில்லாதென்னின். எ-து. இவ்விடத் தம்முளையிலையுமரமுமாய் வளர்ந்து செல்லாதவளர்ச்சியைக் கைவிடுவானேன். ஆதலாலெழுந்தபடி நில்லாதென்று நீ கூறின்,-மங்கியிடாதே பாலதருண விருத்தையாய் வரும்வடிவுதிரிந்து நின்றுமாயுங்காணே. எ-து. தோன்றினவடிவுருவங்கெடாம னின்று பாலதருண விருத்தவவத்தையைப் பொருந்தி யவ்வவத்தைதோறும் பேதப்பட்டுப் பின்பு தூலவுடல் கெட்டுப்போம். எ-று. எனவே தூலவுடல்கெட்டுச் சூக்குமவுடலினிற்கு மென்பது கருத்து.

எப்பொருளு மநித்தமென்னுஞ் செய்யுளு மிச்செய்யுளு
மநித்தியமென்பதனை மறுத்துக்கூறின. க்ஷமனானுதல் அல்
திநாஸ்தி வாதஞ்சொல்லலால். (கச)

செம்பட்டபுத்தரென்றுந் திரிபிடகசாத்திரச் சாக்கியருஞ்
சாசவர்க்கருமன்றே நாத்தியர்க்கு நாதராவார் என்றும், ஊ
தியத்துக்குப் புக்குமுதலிழந்தாயென்று மவர்கள் சாத்திரத்
திலே யுன்னைப்பங்கிக்கவு மிலச்சைகெட்டங்கேறலைமடுத்து
விழுந்தாய்காண் அப்படியாகிலுனக்கொக்குஞ் சார்வாகனுக
வமையாதோ வென்றுச் சரியப்பட்டதெனக்கொள்க. நீல
கேசியிலுன்னையவன் பரிக்ஷிக்கும் வசநங்கேட்டறியாயோ
வெனநிந்தித்ததெனக் கொள்க. என்று விசேஷித்துரைத்த
னர் ஞானப்பிரகாசர். (கரு) வரை பாலன் (ஙஉ) வரை தரு
ணன் (அ௦) யௌவனன் அதற்குமேம்பட்டவன் விருத்தன்.

உடல் பூதமெனினொன்றுக் கொன்றுபகையொன்
றுதிரசுக்கிலமென்னின் மரத்தினுளுக்கல்லி, னிடமா
கத்தவளையுருவந்தவா றியம்பா யிருவினைகாணெனின்
வினைகளிரண்டுருவாய் நிற்கும், திடமாகவன்னமுரு
வெனினுண்ணவுண்ணச் சென்றுவளருங் காயந்தேயு
முணாவென்னின், மடவோலையருவுணர்விங்கசேத
னமாயுருவாய் வளராதுவருட்டில்லா தெனின்மலர்
வாள்வருமே. (கரு)

(இ-ள்.) உடல்பூதமெனினொன்றுக்கொன்று பகையொ
ன்று. எ-து. புத்த நீயுருக்கள் பூதரூபமென்று கூறின் பூதங்
களொன்றோடொன்று பகையாதலா லவைதம்மிற்கூடி யுரு
வாகா,-உதிரசுக்கிலமென்னின் மரத்தினுளுக் கல்லினிடமாகத்

தவளையுருவந்தவாறியம்பாய். எ-து. சுக்கில சுரோணிதங்கள் கூடி யுருவாமென்று நீ கூறின், மரமிடமாகத்தோன்று முளுவுங் கல்லினிடமாகத்தோன்றுந் தவளையு முருப்பெற்றதற்குச் சுக்கில சுரோணிதங்கள் கூடிவந்தவாறுசொல்லாய்,—இருவினைகாணெனின் வினைகளிரண்டுமுருவாய்நிற்கும். எ-து. புண்ணியபாவங்கடாமே யுருவமாமென்றுகூறிற் புண்ணியமும்பாவமு மிரண்டுந் தம்மிற்கூடி யோருருவந்திரண்டதாக வேண்டும். அது கூடாது,—திடமாக வன்னமுருவெனி னுண்ணவுண்ணச் சென்று வளருங்காயந்தேயும். எ-து. நிச்சயமாகவே யன்னசாரமேயுருவாமென்றுகூறிற் போஜனத்தால் வளருங்காயம் விருத்தாவத்தையில் வளராது தேய்தல் காண்டும், அதனாலன்னசாரமுமன்று,—உணர்வெனின் மடவோனே யருவுணர் விங்கசேதனமா யுருவாய்வளராது. எ-து. உணர்வுதானே யுருவமெடுத்துக்கொண்ட தென்றுகூறின் அறியாதவனே யருவமாயிருக்குமறிவு அசேதநமாயிருக்கு முருவமாயிவ்விடத்து வளராது,—வருமில்லாதெனின் மலர்வான்வருமே. எ-து. இல்லாததொன்றுருவமாய் வருமென்று கூறின் இல்லையாயதில்லையேயாம். ஆகையா னீகூறிய விதுமயக்கமாம். எ-று.

இச்செய்யுள், பூதங்கள் சுக்கில சுரோணிதங்கள் கன்மமன்னமய முணர்வென விவைதனித்தனியே யுடலெடுக்குமென்பதனை மறுத்துக்கூறிற்று. மலர்வான்வருமேயென்று பாடமாகலால் ஆகாயத்தே புட்பம் வர வேண்டுமென்க. புண்ணியமும் பாவமுமாறுகையா லிரண்டுங்கூடி யோருருவாராதென்றார். (கரு)

பூதங்களொன்றுக்கொன்று பகையாவது நீர் குளிர்ந்து நெருப்பைக்கெடுக்கும், நெருப்புச் சுட்டுத்தண்ணீரைக் கெடுக்கும், மண் வலிதாய் நிறைந்து காற்றினைச் சலிக்கவொட்டாது, வாயுவானது மண்ணைப்பறக்கடிக்கும் ஆதலாலொன்றுக்கொன்று விரோதங்கூடிநில்லாவாகையா லுன் பக்ஷமாகாதென்றறிவாயாக. பூதமுஞ் சுக்கில சுரோணிதமு மிருவினையு மன்னமுஞ் சரீரமல்லவென்றது பஞ்சபூத பரிணாமமுஞ் சுக்கில சுரோணிதமு மிருவினையேதுவாகவு மன்னசாரமு மிவையித்தனையும் சகாவாகக்கொண்டு சூக்ஷமரூபங்காரணமாகத் தூல சரீரமுண்டாயினதெனக் கொள்க. இவ்வாசிரியர் "தூலமா முருவினுக்குச் சூக்குமமுதல்" என்றதனுனுமறிக. உணர்வு சரீரமல்லவென்றது இங்ஙனஞ் சொன்ன வேதுக்களினாலே யுணர்வுகூடி யுணர்வுக்குவேறாகச் சரீரமுண்டானதல்ல துணர்வே சரீரமல்லவென்றதெனக்கொள்க. இல்லாததுண்டாகாதென்றது. "இல்லாதன பிறந்துள்ளன மாயுமென்றிம்மயக்கம் நல்லாகமவறிஞர்க்கில்லை" என்னுந் திருவாக்கினானு மில்லாததுண்டாகாதெனக் கொள்க. "மாயையினுள்ளவஞ்சம் வருவதுபோவதாகு, நீ யதிங்கில்லையென்னி னிகழ்ந்திடு முயலிற்கோடு" "உள்ளதேதோன்று முபாதானத்தாடைதா னுள்ளதோ மண்ணினுனையோர்ந்து." என்னும் திருவாக்குகளுள்ளும் கண்டுகொள்க. இல்லாதது வருமென்பதற்கவன்வசநம். "தோன்றுவதுளதாகிற் சூல்கன்னிக்குளதாகும்" உள்ளது கெடுமென்பதற்கு வசநம்; தீவாயுவிற்கெடும். அன்றியும் மரத்தினுளுங்கல்லிற்றவளையு மில்லாதது தோன்றுமென்பதற்குவமையென்னில், ஜநநங்கணிர்ப்பீஜ பீஜமெனவிரண்டாம். அவை நிர்ப்பீஜஜநநங்களாம். அதுதானில்லாததே

யன்றேவெனில் அன்று. அவை பிரம சிருஷ்டி விதியெனக் கொள்க. பிரம சிருஷ்டியில்லாதது தோற்றுவிக்குமோ, தோற்றுவிக்குமெனில் ஆகாசத்திற் பிரபஞ்சந் தோற்றுமென்பதற் றொக்குமெனக் கொள்க. இது ஞானப்பிரகாசர் கூறியது.

என்றுமிலாதொன் றின்றாய் வருமுருவம் வித்தினெழு
மரம்போலெனின் வித்தினுண்டாய் நின்றெழுங்கா,
ணின்றதேல்வித்தின் மரங்கண்ட தில்லையென்னினெற்
கழுகாய்நீளாது நெல்லாயேநீளு, மொன்றிலொன்
றங்கிலாமைபிறு லுதியாகாரணம் பெற்றுதிப்பது கா
ரியமதுவுமுள்ளதாகு, மன்றமதிக்கலைபோலக் கந்த
மைந்துமருவியுளதெனுமுரையுமறந்தனையோவின்றே.

(இ-ள்.) என்றுமிலாதொன்றின்றாய் வருமுருவம்வித்தினெழுமரம்போலெனில். எ-து. யான்கூறிய மயக்கமன்று என்றுமில்லாததொன்றுண்டாய் வரும். அஃதெங்ஙனென்னின் வித்தினிடத்திலே மரந்தோன்றுமாபோலவென்று புத்த நீ கூறின்,—வித்தினுண்டாய் நின்றெழுங்காண். எ-து. அம்மரம்வித்தினிடத்திலேயுண்டாய் நின்றெழுதலன்றி யில்லையாய் நின்றெழாதுகாண்,—நின்றதேல் வித்தின் மரங்கண்டதில்லையென்னினெற்கழுகாய் நீளாது நெல்லாயே நீளும். எ-து. அப்படி வித்திலே மரமுண்டாமாயின் வித்தினிடத்திலே காணவேண்டும். வித்தினிடத்தின் மரங்கண்டதில்லையென்று கூறின் நெல்வித்துக் கமுகாய்வளராது நெல்லேயாமித்தனை,—ஒன்றிலொன் றங்கிலாமையிலுதியா. எ-து.

ஒருமரத்தி லொருமரமுண்டாகாதாகையாலில்லாததுண்டாகா,—காரணம் பெற்றுதிப்பது காரியமதுவுமுள்ளதாகும். எ-து. வித்துக்காரணமாக மரங்காரியப்படுதலுள்ளதாம்,— மன்றமதிக்கலைபோலக் கந்தமைந்து மருவியுளதெனுமுனாயு மறந்தனையோவிலீறே. எ-து. நிச்சயமாகமதியுங்கலையும் போலக் கந்தங்களைந்தும் பொருந்தியுருவுண்டா மென்னுஞ் சொல்லு மின்றுமறந்தாயோ. . எ-து. மதியுங்கலையுமென்ற வும்மைகள்தொக்கன. அதுகாரணத்திலே காரியந்தோன்று மென் றறிவித்தது. உதியாது என்ற திறுகெட்டது.

இச்செய்யுளில்லாத துண்டாமென்பதனை மறுத்துக் கூறிற்று. (கக)

அப்படியேன் சொல்லுகிறீர் கன்னிவயிற்றிலில்லாதகுல் பிறப்புண்டாகக்கண்டோமே ஆதலாலில்லாததுண்டாமென்னில், பூமியின்கண் விதையிடுவதற்குமுன் முளை தளி ரிலை மலர் பிஞ்சு காய் பழ மரமுதலியவை கண்டிலம். பக்குவத்தில் வித்திட்டவாறேமுளைமுதலியவை தோன்றுமாறுபோலக் கர்ப்பமில்லாததல்ல. அதற்குக்கர்ப்பமுண்டாகக் காரணங்களுண்டாயே யுண்டாமென் றறிக. உவர் நிலத்திலிட்ட விதையானது முளைத்துப் பிரபலமாகாது, மலடிவயிற்றில் கர்ப்பமுண்டாகாது மண்ணிற் படமுண்டாகாது, முயலின்கட் கோடுண்டாகாதாதலாலேயுஞ் சித்தானதிலுள்ளகாரணத்திலுள்ள காரியமே யுண்டாகாநிற்கு மல்லதில்லாததொருக்காலுமுண்டாகாதெனக்கொள்க. இது ஞானப்பிரகாசர்கூறிய விசேஷம். அன்றியும் இல்லாததுண்டாகுமென்பது அசத்காரியவாதம். மதிக்கலைபோலென்றது மதிக்குக்கலைகள் கூடி விம்பமானதும் அத்தாற் பிரகாசித்துத்தோன்றுதல்போலப் பஞ்சகந்தங்களுங் கூடி யுருவுண்டாமென்கை என்றார்.

உருவமெலாம்பூதவுபாதாயசுத்தாட் டகவுருவமென்
னினீ யுலகத்துக்கு ,மருவுமனலோடுநீர்மண்கந்தமிர
தம் வன்னமில்லைவன்னிக்குவளிநீர்மண்வாசந், தருமிர
தமில்லைநீர்க்குத், தழல்கான்மண்கந்தந்தானில்லைத்தலத்
தினுக்குச்சலமனல்கால்கூடி, வருவதில்லையிந்திரியவிட
யமான மாபூதங்களுமறியாய்மதிகெட்டாயே. (கஎ)

(இ-ள) உருவமெலாம்பூதவுபாதாயசுத்தாட்டகவுருவ
மென்னினீ. எ-து. புத்த நீயுருவமெல்லாம் பூதவுரு நான்கு
முபாதானவுருநான்குமாகிய வெட்டுங்கூடியே வருமென்று
கூறின்,—உலகத்துக்கு மருவுமனலோடு நீர் மண் கந்தமிரதம்
வன்னமில்லை. எ-து. அவை யெட்டு மொன்றோடொன்று
கூடா. அஃதெங்ஙனமென்னிற் காற்றுக்குத் தன்குணமாகிய
சலித்தலொழிந் தனலுநீரு மண்ணுமிவையிற்றின் குணமாகிய
வுருவமிரதங்கந்தங்களாகிய விவையுங் கூடுவதில்லையாம்,—
வன்னிக்குவளிநீர் மண்வாசந்தரு மிரதமில்லை. எ-து. அக்கி
னிக்குத் தன்குணமாகிய வுருவமொழிந்து வாயுநீரு மண்ணு
மிவையிற்றின் குணமாகிய பரிசரசகந்தங்கள் கூடுவதில்லை
யாம்,—நீர்க்குத் தழல்கான் மண் கந்தந்தானில்லை. எ-து.
அப்புவுக்குத் தன்குணமாகிய விரதமொழிந்து அக்கினியும்
வாயுவும் பிருதிவியு மிவையிற்றின் குணமாகிய ரூபசலனகந்த
மென்னு மிவைகூடுவதில்லையாம். தலத்தினுக்குச் சலமனல்
கால் கூடிவருவதில்லை. எ-து. பூமிக்குத் தன் குணமாகிய கந்த
மொழிந்து ஜலமு மக்கினியும் வாயுவு மிவையிற்றின் குணமா
கிய விரதமு முருவமுஞ் சலித்தலுமென்னுமிவையுங் கூடுவ
தில்லையாம். ஆகையா லிவையெட்டுங்கூடி யுருவாகா,—

இந்திரிய விடயமான மாபூதங்களுமறியாய் மதிகெட்டாயே. எ-து. அந்தமகாபூதமுங் குணமு மிந்திரிய விடயங்களென் பது மறியாய் புத்தியில்லாதாய். எ-று.

இச்செய்யுள், பூதவுருநாலு முபாதாயவுரு நாலுங் கூடித் தூலவுடலெடுக்குமென்றதனை மறுத்துக் கூறிற்று. நீருக்குப் பரிசமில்லையென்பது நெருப்புக்கே பரிசமென்று நீ சொன்ன நூலிலே கண்டுகொள்க. கூடிவருவது அடைநிலைத் தீபகம்.

மருத்தெண்ணெய் தனின்மருந்துநின்றாற்போலம
றைந்தெட்டுஞ் சூக்குமமாய்மருவுமென்னிற், றிருத்
துமவன்மருந்தெண்ணெய் சேர்த்தாற்போலச் சேர்ப்
பவன் வேறுண்டெல்லாவுருவுமெட்டும், பொருத்திய
தேலொருதன்மையாம் பொருள்களொன்றின் குண
மொன்றிற் புகாதறைகைபொருளறியாய்பூத, வுருப்
பொருள்வேறுபாதாயப் பொருள்வேறுகாட்டாயுபா
தாயம் பூதகுணங்குணகுணியாமூலமே. (௧௮)

(இ-ள்.) மருத்தெண்ணெய்தனின் மருந்துநின்றாற்போல மறைந்தெட்டுஞ் சூக்குமமாய் மருவுமென்னின். எ-து. மருத் தெண்ணெயின் மருந்துதோன்றாமற் கரந்துநின்று நன்மை யைத் தருமாபோலப் பூதவுருவுமுபாதாயவுருவுமாகிய வெண் வகையுந் தூலங்கெட்டுச் சூக்குமவுருப்பெற்று நிற்குமென்று புத்தநீகூறின்,—திருத்துமவன் மருந்தெண்ணெய் சேர்த்தாற் போலச் சேர்ப்பவன் வேறுண்டு. எ-து. அவ்வியாதியைத் தீர்க்குமருத்துவ னவ்வெண்ணெயையு மருந்தையுஞ் சேர்த் தாற்போலப் பூதவுருவையு முபாதாய வுருவையுங்கூட்டி யுண் டாக்குவானொரு கர்த்தாவேண்டும்,—எல்லாவுருவு மெட்டும்

பொருத்தியதே லொருதன்மையாம் பொருள்கள். எ-து. எல்லாவுருவத்தையு மிவ்வெட்டுமே யுண்டாக்குகின்றனவென்று கூறினப்பொருள்களெல்லா மொருதன்மைப்படவேண்டும்,- ஒன்றின்குண மொன்றிற் புகாதகைகை பொருளறியாய். எ-து. அவ்வுருக்களின்குண மொன்றிற்குண மொன்றிற் கூடாதாகையாற் சொல்லுனக்குப் பொருளறியாய்,—பூதவுருப்பொருள் வேறுபாதாயப்பொருள் வேறுகாட்டா யுபாதாயம் பூதகுணங் குணகுணியாமுலகே. எ-து. அன்றிப் பூதவுருப் பொருளையு முபாதாயவுருப்பொருளையும் வேறு காட்டவல்லையாயிற் காட்டாய், உபாதாயமாவது பூதகுணமாம். அந்தக்குணத்தையுடையது பரபஞ்சமாம், எ-று.

இச்செய்யுள் பூதவுருவு முபாதாயவுருவுமாகிய வெட்டுந் தம்மிற்கூடிச் சூக்குமமாகநின்று பின்பு தூலவுடலெடுக்குமென்பதனை மறுத்துக்கூறிற்று. (கஅ)

நீ குணியில்லை குணமேயுள்ளதென்பையாதலா லுனக்குப் பதார்த்தசொரூபந் தெரியாதுகாண். என்னேமதியில்லாதவனே! குணமுண்டாகிற் குணியில்லையாமோ "குறைவில்லாக்குணத்தானைக் கூறுதற்கு மேற்கொண்டான்." எ-ம். குணமுங்குணியுமாகக் கூறுகின்றுயன்றே. குணியையொழியக் குணமானது தனியே சம்பவிக்குமோ. சம்பவிக்குமென்பையானல், "நிலம் வலிது நீர்துவளுந் தீத்தெறுங்காற்றுலவும்" என வேண்டாவாம், "நிலமென்பதோர் பொருளாகவும் வன்மையென்ப ததன்குணமாகவும் நீர் சொல்லியதென்னே, இத்தனை வயுத்தங்களும்மையொழியச் சொல்லுவாரில்லை. குணிகுணமென்னு மவ்விருவிதமாகச் சொல்லும்பொ

ருள் ஒன்றென்னில், நீசொல்லிய பஞ்சஸ்கந்தமும் நித்தியமு மநித்தியமும் பிரித்துப்பெறப்படாமையி னொன்றாகாது, குணமுங்குணியும் பிரித்துப்பெறப்பட்டன. இனி குணத் திற்குக் குணியொன்றில்லையாகிற் குணநிராதாரமாய் நில் லாது. இனி புத்தர் தசபாரமித்தையுடையரென்றாய் பாரமி த்தையொழியப் புத்தரில்லையாக வேண்டும். குணிகுணங்கட் காதாரமாயுள்ள குற்றமெல்லாம் புத்தனோடு மவன்குணங்க ளோடுங் கண்டுகொள்க. நிராதாரமாகிப் பெறப்படுவதோர் குணங்காணாமையி னுற்பத்திமுதலாகிய குணம்பெறப்படா தாயிற் குணத்தினுக் காதாரமாகியதியாது அது குணியென்ப தாதலிற் குணியும் பெறப்படுமென்பதூஉங் கண்டுகொள்க. என் றார் ஞானப்பிரகாசர்.

அழிந்துணர்வையுணர்வுதரு மெனினழிந்ததாக்கா தா
முணர்விற்பொருள் வினைகளெனையாவாகு, மழிந்திடுவ
தாக்கியெனின் முன்னொருகாலத்தே யறிவிரண்டுநில்
லாதங்கறக்கெடின்றி, யழிந்துணர்வையுணர்வுதருமெ
னினித்தாநித்தமடையு முணர்வுக்கநித்தமாயேசெல்
லா, தழிந்தெருவையாக்குவது போலாக்குமென்னி
னும்பொருள் வேறழிந்து சத்திகிடந்தாக்குமவையே.

(இ-ள்.) அழிந்துணர்வையுணர்வு தருமெனின். எ-து. தோன்றியவறிவுகெட்டுப் பின்னோரறிவையுண்டாக்குமென்று புத்தநீ கூறின்,—அழிந்ததாக்காதா முணர்விற் பொருள்வி னைக ளெனையாவாகும். எ-து. கெட்டவறிவு மற்றோரறிவை யுண்டாக்கமாட்டாது, அன்றியுமாகிறவறிவு முன்னறிவுகெடுத

லாற் கெட்டவறிவு மறியும்பொருளையுஞ் செய்யும்வினையையு மறிந்துஞ் செய்யமாட்டாது,-அழிந்திடுவதாக்கியெனின் முன்னொருகாலத்தே யறிவிரண்டு நில்லாது. எ-து. முன்னையறிவு பின்னையறிவை யுண்டாக்கிக் கெடுமென்று கூறி னொருகாலத்தே யிரண்டறிவு நேராநிறில்லா,-உழுங்கறக்கேடின்றிய ழிந்துணர்வை யுணர்வு தருமெனி னித்தாநித்த மடையுமுணர்வுக் கநித்தமாயே செல்லாது. எ-து. அவ்விடத்து முன்பிலறிவு முற்றக்கெடாது சிறிது நின்றுமே லோரறிவையுண்டாக்கிப் பின்னிறந்திடுமென்றுநீ கூறின், உணர்வுக்குச் சுபாவ நித்தாநித்தமாதலா லுணர்வ நித்தமென்று கூறியது பொருந்தாதாம்,-அழிந்தெருவையாக்குவது போலாக்குமென்னிலும் பொருள்வேறழிந்து சத்திகிடந்தாக்குமவையே. எ-து. பயிருக்கிடுமெருவைக்கோலுந் தாங்கெட்டுப் பயிருக்கு நன்மைகொடுப்பதுபோல முன்னையறிவுகெட்டுப் பின்னையறிவையு முண்டாக்குமென்று கூறின், அவ்வெருவும் வைக்கோலுந் தலங்கெட்டுச் சூக்குமமாகிய வீரியங்கிடந்து பயிர்க்கு நன்மைகொடுக்குமதுபோல வுன்னறிவுசேரக்கெடா தென்னவேண்டுமாகையால், நீ கூறியவதற்கு நித்தியமில்லையென்ன வேண்டா. எ-று.

இச்செய்யு ளறிவநித்தமென்பதனை யநித்தமல்லவென மறுத்துக்கூறிற்று. ஆம்பொருள் வேறென்றதனால் எருவால் நன்மை பெறும் பயிர் வேறுனாற்போல அறிவாலாம் பொருளும் வேறென்க.

இனி விஷயசந்நியாசத்துணர்வு பிறக்கவேண்டும், பிறவாதொழிந்த திச்சையில்லாமையெனி லிச்சைபிரத்தியேக முளதென்னி லெல்லாவுணாவுமெப்பொழுதும் பிறக்கவேண்

டும். இச்சையிடமாக வறிவுபிறக்குமென்று நீ சொல்லியது ஞானத்துக் காதாரமாகிய சீவனை யிச்சையென்று பெயரிட்டு வழங்கினாய்போலும். இச்சைதானும் க்ஷணிகசத்தியாதலிற் பிறந்தகணத்தே கெடுதலல்ல துணர்வைப் பிறப்பிக்கச் சத்த மிருக்காது. என்னை கறக்கின்றபால் கறக்குக்கறக்கப் பாண்டத்திற் சுவருமாகில் அந்தப்பாலில் தயிர் மோரென்பன சம்பவிக்குமோ தான். அன்றியும் ஆறுவிஞ்ஞானங்களு மொருவிஞ்ஞான சந்தான நிகழ்கின்ற காலத்தொழிந் தைந்து விஞ்ஞான சந்தானங்களுமுளவா யைந்துநிகழா தொழிந்த தென்ன வில்லையாகக் கெட்டு நிகழாதிருந்தனவே யுள்ளவாய் நிகழாதிருந்தனவோ வென்னி லவற்றுண்மை யறிந்தவாறெமக்குச் சொல்வாயாக. நிகழ்கின்ற விஞ்ஞான சந்தான மநுபவபாரார்ஜிதமானாற்போல வவையுந் தோன்றவேண்டுமன்றோ? நகாரணநன விஷயமென்பதனால் விஷயங் காரணமாவதன்றோ ஞானம்பிறப்பது? விஷயமில்லாத வழி ஞானம் பிறக்குமாறுண்டோ? இனி நிகழ்கின்ற சந்தான மொழிந்த தொழிந்தவைந்து விஞ்ஞானமுங்கெட்ட தென்னிற் பின்பு விஷயம் பெற்றாலும் பிறவாதொழிதல்வேண்டும். பிறக்கிற கந்தமறக்கெட்ட புத்தனும் பிறக்கவேண்டும். இனிச் சத்திமாத்திரங் கிடந்ததென்னில் அவை தாழ்ந்துகிடத்தற் கொருவாதாரமுளதாகவேண்டும். நீ யான்மாவில்லையென்கையா லுனக்குத் தெரியாது. திருஷ்டியைப் பிரிந்தாற் றினங்காணப் பாடாதவாறுபோலெனக் கொள்க. என்றார் ஞானப்பிரகாசர்,

---

கேடிலாச்சந்தானத்தேபலிக்குமென்றுகிளக்குநீ சந்தானநித்தமாகு, மோடுநீர்போலழிந்தா மூணர்வொ

மூக்கமென்னி னொழுகுநீரிட்டதெல்லாமுடன்கழிதல்
போலத்," தேடுபொருள்சீலம்பாவனைகுறிவிஞ்ஞான
ஞ்சென்றவுணர்வோடேகு நின்றுணர்வினையா, நீடு
நீர்முன்னொழுகிக்கெடாதுநிறைந்தோடு நிகழுணர்வுங்
கேடின்றி நிறைந்துசெலுங்காணே. (௨௦)

(இ-ள்.) க்ஷேலாச் சந்தானத்தே பலிக்குமென்று கிள
க்குநீ சந்தான நித்தமாகும். எ-து. உணர்வுகெடாத தொடர்ச்
சியாலே யுணர்வுதோன்றுமென்று புத்தநீகூறி னந்தத் தொ
டர்ச்சிதா னித்தமாகவேண்டும்,—ஓடுநீர்போலழிந்தா முணர்
வொழுக்கென்னின். எ-து. ஆற்றின் கணோடுநீர் முன்சென்
றதுவற்றப் பின்சென்றதவ் வெல்லையினிறந்துபோமாறுபோ
லமுன்னையறிவுகெடப் பின்னையுண்டாகியவறிவு மிக்கவறிவா
மென்று நீ கூறின்,—ஒழுகு நீரிட்டதெல்லா முடன்கழிதல்
போலத் தேடுபொருள் சீலம்பாவனை குறிவிஞ்ஞானஞ் சென்
றவுணர்வோடேகு நின்றுணர்வினையா. எ-து. ஓடுகின்ற
நீரின்க ணுண்டானவையெல்லாம் மந்நீரோடு கூடக் கழிந்து
போகப் பின்னர் செல்லுநீ ரதனைக் கூடமாட்டாதுபோல,
முந்தையறிவாற்றேடும் பொருள்கள் சீலம் பாவனை குறி விஞ்
ஞான மிவையெல்லா முன்னையறிவோடு கெடுமாகையாற்
பின்னையுண்டாமறிவிற் கூடமாட்டா,—நீடுநீர் முன்னொழு
கிக்கெடாது நிறைந்தோடு நிகழுணர்வுங் கேடின்றி நிறைந்து
செலுங்காணே. எ-து. விடாமலோடுநீர் முன்னொழுகிய
தன்மைகெடாம னிறைந்தோடியவாறுபோல வறிவிடையறு
மற்றேன்றுமென்று நீ கூறின் அப்படியுண்டாமறி வநித்திய
மன்று; நித்தியமாய் நிறைவுபெற்றுச்செல்லவேண்டும்.எ-று.

இச்செய்யுளு மநித்தமென்பதனை மறுத்துக் கூறிற்று,௨௦

தீபச் சிரசும் ஒடு நீருந்திட்டாந்தமிட்டா யதுவு மேற்கோளாகிய தானத்தையுந் தவங்களையுங் கொண்டோடிப் போமாதலா லுனக்கவைபலமாகா வெனக்கொள்க. சந்தானமுங் கணந்தோறுங் கெடுமாகிற் கணந்தோறு முத்தியாகும். இனி பாதிரிப்பூவும் பூஞ்சோடு முதலானவையும் நசிக்கவும் நாற்றங்கெடாது பூவினின்று மோட்டினு மோட்டினின்று நீரினும் வந்தவாறுபோலப் பூர்வசித்தத்துள்ள ஓர் வாதனை கெடாதுத்தரசித்தத்துக்கு வருமென்பது நின் கருத்துக்கு மொத்ததாயினொருடம்பு நசிக்கவோருடம்பில்வருவதொரு சீவனுக்குத் திட்டாந்தம் அதாவதறிந்திலைகாண் எனக்கொள்க. அன்றியும் பூர்வசித்தத்தினின்று முத்தரசித்தத்திற் சென்றதியாதெனி லது சத்தியென்ப தொன்றென்னில், சத்தியாவது, பஞ்சகந்தபிண்டத்துடனொன்றோ வேறோவென்னில் ஐந்துகந்தமுமன்றி யாருவது மொன்றுண்டாகவேண்டும். சத்தியாவது பஞ்சகந்தமயபிண்டந்தானே யென்னிற், பூர்வபிண்டத்தினின்றசக்தி கெடாதே யுத்தரபிண்டத்தே வந்தாகிற் கணபங்கமென்பதில்லையாம். ஆதலாற் சந்தானத்தே கேடென்பதொழிவாயாக. அன்றியும் நினக்குமோக்ஷமாவது ஞானவிநாசமன்றேயாதலா லின்கர்மாநுஷ்டான ஞானத்துக்குப் பகையாமன்றே. பகையாதலா லின்கர்மாநுஷ்டானம் வளர வளர ஞானந்தேய்ந்து சூந்யமாகவேண்டும் ஆதலாற் புத்தத்துவம் பெற்றவழி யத்தியந்தமற்ப ஞானியாக வேண்டும். ஆதலாலிவ னநாவஸ்தரு மிவையுங்கண்டுகொள்க. தீபச்சிரசுப் போலக் கெடக்கெடச் சந்தானம் வர்த்திக்குமென்றாய் அதற்குத் திரியினிற்கின்ற வக்கினியாதாரமானாற்போல வுன்ஞானக் கேட்டுக் கான்மா வாதாரமாகவேண்டுமென் றறிந்து கொள்வாயாக. என்றார் ஞானப்பிரகாசர்.

சந்தானங்காரணமோகாரியமோவிரண்டின் றன்மை யதோகாரணமுங்காரியமும்நித்தம், வந்தாருஞ்சந்தா னத்தொடர்ச்சியெனினதற்கும்வரும் நித்தந்தோற்றக் கேடடைதலின் மற்றொன்றே, ஸந்தானகந்தங்களன் றாய்நித்த மடைபொருளா மறிவுமறிவடைவுமின்றிச், சிந்தா முன்பின்னாகிப் பின்முன்னாகித் திரிந்துவருந்திரி வறிந்துதேராதேரோ. (உக)

(இ-ள்.) சந்தானங்காரணமோகாரியமோ விரண்டின் றன்மையதோ. எ-து. நீ தொடர்ச்சியென்றது காரணமாய் நின்றதோ, காரியமாய்நின்றதோ, காரணகாரியமாய் நின் றதோ,—காரணமுங் காரியமும் நித்தம். எ-து. காரணமெ ன்னி னென்றுங் காரணப்பட்டுவருகையால் நித்தமாம், காரி யமென்னி னென்றுங் காரியப்பட்டுவருகையா லதுவு நித்த மாம்,—வந்தாருஞ் சந்தானத்தொடர்ச்சியெனி னதற்கும்வ ரும் நித்தந்தோற்றக் கேடடைதலின். எ-து. காரணகாரிய மாகிய தொடர்ச்சி மீளவந்து பொருந்துமென்று நீ கூறினப் படிக் காரணகாரியப்படுதலுமாய்த் தோன்றுதலுங் கெடுதலு மாய்த் தொன்றுதொட்டுவருதலாலதற்கும் நித்தியத்துவமுண் டாம்,—மற்றொன்றே ஸந்தான கந்தங்களன்றாய் நித்தமடை பொருளாம். எ-து. மற்றோரறிவென்னில் அப்படிக் காரண காரியப்படுதற் கிந்திரியங்களோ டொருபொருளாகாமலவ்வ றிவு வேறொருபொருளாகலானு மிந்திரியங்க ளவ்வறிவுக்கு மூலமல்லவாகையானு மவ்வறிவு நித்தியமாக வடையும் பொ ருளாம்; அங்ஙனமாயின்,—அறிவுமறிவடைவுமின்றிச் சிந்தா முன்பின்னாகிப் பின் முன்னாகித் திரிந்து வருந்திரிவறிந்து

தேராதேரே. எ-து. ஆன்மாவுமான்மாவா லடையும் பொருளுமாக வறிதலின்றி முறையேகெட் டிந்திரியங்களறிவாகவுமறிவதிந்திரியங்களாகவு முறைபிறழ்ந்துவரும், இவையிற்றின் றிரிவையறிந்து விசாரியாய், புத்தனே. எ-று.

இச்செய்யுள் அறிவநித்தியமென்பதனை மறுத்துக்கூறிற்று.

இனிப் பீஜாங்குரம்போலச் சித்தத்தின்வழி சித்தம் பிறந்து செல்லின் சித்தவொழுங்கினைச் சங்காரமென்றும் வெந்தவித்துப்போல் மேற்சித்தம் பிறவாது பொன்றக் கெடுதன் மோக்ஷமென்றுஞ் சொல்லினையன்றே, இந்தச் சங்காரமோக்ஷங்கள் யாவைதாமுடையன. சித்தங்களுடையன எனில், அஃதியதன்று. சித்தங்கள் பூர்வக்ஷணத்துள்ளனவன்றி யுத்தரக்ஷணத்தே நசிக்கும் நில்லாதென்றவுனக்குச் சங்காரமென்பது சம்பவியாதாம். இனி பெத்தமானதற்சோ முத்தியுமாதலாலவற்றுக்கு மோக்ஷமும் சம்பவியாதாம். நீ சந்தானமென்று கொண்டது மோக்ஷபரியந்தமாகா நின் சித்தங்களையன்றே "குருவாகித் தடுமாறியீறுவிடாவுடையானி லுன்னைவேறேவெனவுரைத்தான்" என்பது நின்னூலின் சந்தானங்களச்சித்தங்களியல்பாகப் பிறப்பது. இலி யட்டகபிண்டமாகிய மாதுளை வித்திலீற் செவ்விதாகக் கூட்டப்பட்ட விதைவழி செம்பூவாகியுங் கார்கூட்டப்பட்ட விதைவழிக் கரும்பூவாகியுந் தோன்றியவாறுபோலச் சந்தானத்தே பலிக்குமெனின் மாதுளங்காய் பீஜசந்தானம் புஷ்பிக்குமளவுஞ் சாவாதொழி, இன்றே லாச்சாரசகாரியந்தோன்றுவது. இனி வித்திலூட்டப்பட்ட வாச்சாரசங்கையற நசித்தலில் அங்குரத்தின் கண்ணுங் காணப்படாத பீஜத்துக்குப் புஷ்பத்துக்காரியஞ் செய்ததென்பது, கெட்டுநின்ற தத்துவங்கொண்ட சுகதனை

யும் போத்தாவாகச் சொல்லல் என்னை அவன் போத்தாவாயினவாறென்னை கையறக்கெட்ட வாச்சாரசமும் புண்ணிய பாவ கர்மங்களுஞ் சிலநாட்டரித்துக் காரியப்படில் கையறக் கெட்ட வித்தியா ராசாதிகளும் கையறக்கெட்ட சுகதனும் பின்புதோன்றவேண்டுமென்றே. இனி பஞ்சகந்த பிண்டங்களிடையறவின்றித் தோன்றும் தொடர்ச்சியைச் சந்தானமென்றேன் வாயுசந்தானமே தீபசந்தானமே தாராசந்தானமே நதிப்பிரவாகசந்தானமே பிபீலிகாசந்தானமே என்றிவைபோல வென்னி லதுபொருந்தாதவை பலபல வுண்மையினு லொன்றேடொன் றியைந்து சந்தானமாகலாமென் றிங்குள்ளகாலத் தொன்றின்மையிற் சந்தானமென்பதின்மையாம். அன்றியு மூர்ச்சித்தவழி சந்தான மிடையறுதலின் மேன்மூர்ச்சைநீங்கிச் சித்தம் பிறத்தற்குக் காரணமின்மையின் மூர்ச்சாவவத்தையிற் சித்தசந்தானமாழ்ந்து கிடந்த தென்பாயெனிற் சந்தானமாவதொரு சித்தங்கெட வொருசித்தந் தோன்றி வருவதன்றே. சித்தம் பிரவர்த்தியில்லாதவழிச் சந்தான மின்மையிற் கூடாது. அன்றியும் பூர்வசித்தத்தினா தொன்றுத்தரசித்தத்து வருமெனவே பூர்வசித்தங் கையறக்கெட்டதில்லை, நீ வாதனையென்பதுங்கெடும். வாதனை மேன்மேற் செல்லாதாகிற் பூர்வசித்தவிருத்தி யுத்தரசித்தத்தே தோன்றாதாம். சர்வம் க்ஷணிகமென்பதனு லெனக்கொள்க என்றார். ஞானப்பிரகாசர்.

ஒருகாலத் துணர்வுகெட்டா மெனினுதிப்பி றென்று மொருபொருளின் றிரிவனக்குக்காலமானல், வருகாலநிகழ்காலங் கழிகாலமென்று வழங்குவதென் பொ

ருள்வரவு நிலேகழிவாலின்றேல், திரிகாலஞ் செப்பி டாய் பொருட்செயலுமொன்றுஞ் செயன்மூன்று மொருகணத்தே சேருமென்னிற், றருகாலமூன்றுந் தாமமைநூறிதழிற் றள்ளுசியுங்காலமூன்றினையுந் தருமே. (உஉ)

(இ-ள்.) ஒருகாலத்துணர்வுகெட்டாமெனி னுதிப்பீரென்றும். எ-து. காலம்பேதப்படா தொருகாலத்திலே யறிவுகெடுதலு முண்டாதலுஞ் செய்யுமென்று புத்தர் கூறிற் சங்காரமுஞ் சிருஷ்டியு மொருதொழிலாகவேண்டும்,— ஒருபொருளின்றிரிவுனக்குக் காலமானல். எ-து. ஒருபொருளின்றிரிவே யுனக்குக் காலமென்றுசொல்வை. அப்படியானல்,—வருகால நிகழ்காலங் கழிகாலமென்று வழங்குதென். எ-து. எதிர்காலமென்றும் நிகழ்காலமென்றும் கழிகாலமென்றும் வழங்குவானேன்,—பொருள்வரவுநிலே கழிவாலின்றேல். எ-து. அப்படிவழங்கியது பொருள்களானவை வருதலுநிற்றலுங் கழிதலுமாதலாற் காலமில்லையென்று சொல்லுவையாயின்,—திரிகாலஞ் செப்பிடாய் பொருட்செயலுமொன்றும். எ-ம். மூன்று விதமானகாலத்தின் பெயரை நீ சொல்வாயல்லே. அங்ஙனங் காலபேதமில்லையாயின் இருதுபேதாதிகளுங் குணபேதாதிகளுமில்லையாய்ப் பொருள்களெல்லா மொருசெயலாகவேண்டும்,—செயல்மூன்று மொருகணத்தே சேருமென்னில். எ-து. அப்படிப்பேதித்த மூன்றுசெயலு மொருகணத்திலே சேருமென்னில்,—தருகால மூன்றுந் தாமமைநூறிதழிற் றள்ளுசியுங் காலமூன்றினையுந் தருமே. எ-து. அப்படிக்கணத்திலே யுண்டாயதுவுங் காலமூன்றினையு முடைத்தாம் அஃதெங்ஙனெ

ன்னிற் றுமனையிதழ்நூறடுக்கிற் செலுத்தினவூசியு மிதழ்தோறும் பற்றுகையு முருவுகையுங் கழிகையுமாய் மூன்று காலத்தைத் தருமாதலாற் பொருட்செயலல்ல காலமுண்டாமென்றறிவாயாக. எ-று.

இச்செய்யுள் காலமில்லையென்பதனை மறுத்துக் கூறிற்று. பஞ்சகந்தமொருகணத்திலே கெடுமென்பதனை மறந்தாயோ, இதனைக் கருதிக்கொள்வாய். (உஉ)

காலமூன்றென்பதற்கு "ஒன்றே விளக்கினுதய மழிவிரண்டு மன்றிநிலைமையு முண்டாங்கு." என்னுந் திருவாக்கானறிக என்றார் ஞானப்பிரகாசர்.

உணர்வுகாரண முணர்வுக்கென்னி னித்தமுணர்வுக்
குண்டாகி நின்றுணர்வையுதிப்பியாதிங், குணர்வுசந்
தானவிடத்தொழிந்தாற்பின்னை யுண்டாகாதுடனுணர்
வுக்குபாதானமென்னி, னுணர்வுடனிடையறாதிக்
கவேண்டு முடனுணர்வின்வினை பின்னுணர்வுதிக்குமென்
னி, னுணர்வுவினையுளதொடுங்கா வுணர்வுதருஞ் செ
ய்திவுணர்வை வினைதரினொருவன் செயல்வினையின்
றாமே. (உக)

(இ-ள்.) உணர்வுகாரண முணர்வுக்கென்னின். எ-று. அறிவுகாரணமாக மற்றோறறிவுண்டாமென்று புத்தநீகூறின்,- நித்தமுணர்வுக் குண்டாகி நின்றுணர்வையுதிப்பியாதிங்கு. எ-து. நீ யநித்தியமென்று கூறுகையா லறிவுக்கு நித்தியமுண்டாகிநின்று மற்றோ றறிவையுண்டாக்கமாட்டாது. அன்றியும்,- உணர்வு சந்தானவிடத்தொழிந்தாற் பின்னையுண்டாகாது.

எ-து. அவ்வறிவுதான் வருகிறதொடர்ச்சியிலே கெட்டாற் பின்னை யறிவுதோன்ருது, — உடலுணர்வுக் குபாதானமென் னில். எ-து. உணர்வுக்கு மூலகாரணமாகிநின்றுடலந்தோ ற்றுவிக்குமென்னில்; — உணர்வுடலினிடையரு திதிக்கவேண் டும். எ-து. அவ்வறிவுடலி னூக்கத்தின் கண்ணுமிடையரு மலுண்டாகவேண்டும், — உடலுணர்வின் வினையினுலுணர்வுதி க்குமென்னில். எ-து. உடலுணர்வின் வினையாலே யுணர்வு தோற்றுமென்று கூறின், - உணர்வு வினையுளதொடுங்கா. எ-து. இந்திரியங்களெப்பொழுதுங் கன்மத்தையுடைத்தாதலாலத ஞலுண்டா மறிவழியப்படாது, — உணர்வுதருஞ் செய்தியு ணர்வை வினைதரிஞெருவன் செயல்வினையின்றுமே. எ-து. அதுவன்றி யுணர்வுவினையைத் தருமென்றும் நீகூறி ஞெரு வர்க்குச் செய்யப்பட்ட கன்மமென்ப தல்லவாம். எ-று.

இச்செய்யுள் உணர் வான்மாவிடத்தொழிந் துடலினும் வினையினுந் தோன்ருதென மறுத்துக் கூறிற்று. (உரு)

உடம்பேயறிவுக்கு மூலகாரணமென்னில் உடம்புள்ளள வுமாருமலறிவுதோற்றல் வேண்டும், விஷமூர்ச்சையினு நித் திரையிலும் பிரேதமானபோது முடலினிடத்தறிவான துண் டாகக்கண்டதில்லை யென்பது மறிவாயாக. எ-ம். வினையான தறிவைத்தரின் அவ்வினையினுக்கறிவுண்டாகவேண்டும், அஃ தின்மையான் நீ சொன்னதாகாது. எ-ம். காரணங்காரிய முண்டாவ தெங்ஙனே சர்வமும் க்ஷணபங்கமாங்காலத்துக் காரணநின்று காரியத்தைத் தோற்றுவிக்கிற க்ஷணபங்கமில் லையாம். உண்டாமாகிற் அபாசித்தத்தாற் பூர்வசித்தக்ஷணம் விருத்தியறிந்து சொல்வதரிதெனக்கொள்க. என்ருர் ஞானப் பிரகாசர்.

வினையுணர்வுதரும் வினையையுணர்வுதருமென்று விளம்பினீயுணர்வுபோல் வினையினுக்கு, நினைவுவருமொன்றையொன்று நிகழ்த்திடாபின் னிலையின்மையானிகழ்த்திக்கெடுதல்செய்யா, கனல்விறகிற் பிறந்ததனைப்பொடிசெய்தாற்போற் கருத்துவினையிற்றோன்றிக்கழிக்கும் வினையென்னின், முனமுணர்வுபிறந்தளவேவினைகெடுக்குமுன்பினுதியாதுமுகிழ்நெருப்பின் விறகுதியாவாறே. (உச)

(இ-ள்.) வினையுணர்வுதரும் வினையை யுணர்வுதருமென்றுவிளம்பினீ, எ-து. கன்மமறிவையுண்டாக்குமென்றுங் கன்மத்தையறிவுண்டாக்குமென்றும் புத்தநீ கூறின்,—உணர்வுபோல் வினையினுக்கு நினைவுவரும். எ-து. அறிவுக்கு நினைவுண்டானாற்போலக் கன்மத்துக்கு நினைவுண்டாகவேண்டும்,-ஒன்றை யொன்று நிகழ்த்திடாபின். எ-து. அப்படிக் கன்மத்துக் கறிவில்லையாகையா லொன்றையொன்றுண்டாக்கமாட்டாது,-நிலையின்மையா னிகழ்த்திக்கெடுதல்செய்யா. எ-து. அவை யநித்தியமென்று சொல்லுகையா லொன்றையொன்றுண்டாக்கிக் கெடமாட்டா,—கனல் விறகிற் பிறந்ததனைப்பொடிசெய்தாற்போற் கருத்து வினையிற்றோன்றிக் கழிக்கும் வினையென்னின். எ-து. காட்டத்திலேயக்கினிதோன்றி யந்தக்காட்டத்தைத்தகித்தாற்போல அறிவுகன்மத்திலேபிறந்து மீளவுமக்கன்மத்தையே கெடுக்குமென்று நீ கூறின்,—முனமுணர்வுபிறந்தளவே வினைகெடுக்குமுன்பின்னுதியாது முகிழ்நெருப்பின் விறகுதியாவாறே. எ-து. முன்பிறந்த வறிவுபிறந்தபோதே கன்மத்தைக்கெடுக்கும். பின்னக் கன்மமறிவையுதிப்பிக்கமாட்டாது. அறிவும் பின்னர்க் கன்மத்தை யுதிப்பிக்க

மாட்டாது. அஃதென்போலவென்னிற் காட்டத்திலுண்டா மக்கி யக்காட்டத்தைச் சுட்டான் மீண்டொரு காட்டத்தை யுண்டாக்கமாட்டாதுபோல். எ-று.

இச்செய்யுள் கன்மமறிவினையுண்டாக்கு மென்பதனையும் அறிவுகன்மத்தை யுண்டாக்குமென்பதனையு மறுத்துக் கூறிற்று. (உச)

பேயுநரகருஞ் சுரரும்பிரமருமாயுலகிற் பிதாமாதா வாதாரமொன்றுமின்றிக், காயமொடுதாம்வருவரென்றுரைப்பைகாயங் காரியமாய்வருதலினுற் காரணமுண்டாகு, மாயுமுணர்வோசுத்த வட்டகமோகன்மம் வடித்ததோ வடிவுசெய்துவைத்தாருமுண்டோ, வாயுமுணர்வுண்டாகி லறைந்திடாயுலகுக் காதிதுணை நிமித்தகாரணமறிவதறிவே. (உரு)

(இ-ள்.) பேயுநரகருஞ் சுரரும் பிரமருமாயுலகிற் பிதா மாதாவாதாரமொன்றுமின்றிக் காயமொடுதாம் வருவரென்றுரைப்பை. எ-து. பேயென்று நரகரென்றுஞ் சுரரென்றும் பிரமாமுதலாயினரென்றுஞ் சொல்லப்படுவா ருலகின்மாதா பிதாக்களுமின்றி யிருப்புமின்றிக் காயத்தோடுகூடின வடிவ முடையராய் வருவரென்று புத்தநீ கூறுவை,—காயங்காரிய மாய் வருதலினுற் காரணமுண்டாகும். எ-து. அக்காயங்கா ரியப்பட்டு வருகையினு லொருகாரணத்தானன்றி யுண்டா காது. அக்காரணகாரிய நியதியா யறிவையாகில்,—ஆயுமு ணர்வோ சுத்தவட்டகமோ கன்மம் வடித்ததோ வடிவுசெய்து வைத்தாருமுண்டோ வாயுமுணர்வுண்டாகி லறைந்திடாய். எ-து. அக்காயங்க ளீயாராய்ந்தவுணர்வுதானே, சுத்தாட்ட

கமோ, வன்றிக்கன்மமுண்டாக்கியதோ, வன்றி யவ்வடிவை யுண்டாக்கினு ரொருவருண்டோ, உனக்காராயத்தக்க வறிவுண்டாயிற் சொல்லாய்,—உலகுக்காதிதுணை நிமித்தகாரண மறிவதறிவே. எ-து. அவற்றையுண்மையாக வறியுங்காலத் தப் பிரபஞ்சத்துக்குற்பத்தி யாதிகாரணமென்றுந் துணைக் காரணமென்று நிமித்தகாரணமென்று முண்டாம். அதனை யறிவதுகாணறிவு. எ-று.

இச்செய்யுள் பேய்முதற் பிரமரீறுகிய நால்வகைக் காயத்திற்குங் காரணத்தானன்றிக் காயமுண்டாமென்பதனை மறுத்துக் கூறிற்று. (உரு)

யாதொருகாரியத்திற்குங் காரணத்திரயங்கள் வேண்டும். அஃதெங்ஙனமென்னிற் சோற்றுக்கு முதற்காரணமரிசி, துணைக்காரண நீரு நெருப்பும் விறகும் அடுப்பும் பானைமுதலாயின. அவையிற்றைக் கூட்டிப் பாகம்பண்ணுகிறவ னிமித்தகாரணம். முதற்காரணந் துணைக்காரணத்து மடங்காதோவென்னில், அடங்காது. அஃதெத்தாலென்னில், முதலுந் துணையும் அசேதநமாதலாற் றமாகவோன்றைச் செய்யமாட்டா. ஆதலாற் சேதநனுகிய நிமித்த னிவையிற்றைக் கூட்டிச் செய்து முடிக்கவேண்டுமாதலாலெனக்கொள்க. "தோன்று நிமித்தந்துணை முதற்காரணமா, மூன்று முன்வழியே முதறரு—மேன்றுவரு, மந்நியமார்க்கங்களாறுமிரண்டேதுவு, முன்னுதலான் முத்தியுறர்." என்ப தெம்முடைய சாத்திரமாக. இது கன்மவாதியாகிய வனக்கும் க்ஷமணனுக்கும் மீமாங்கிசனுக்கும் நாத்திக வாதியாகிய சார்வாகனுக்கும் சன்மசாங்கியனுக்கும் பொருந்தாது. அவர்கள் ஞானத்தாலெனக் கொள்க. திருமாலுந்தியிற் பிரமதேவரானவர் ஜநித்தாரென்

றும், திருமாலினது சித்தத்தின் மன்மதன் ஜனித்தானென்றும், யமதர்மதேவனுக் காதித்தன் புத்திரனென்றும், ஆதித்தன் புத்திரன் சனிபகவானென்றும், சந்திரன் புத்திரன் புதனென்றும், இந்திரன் புத்திரன் சயந்தனென்றும், பேய்களினிலியு நிலனுமுடன் பிறந்தாரென்றும், சோதிடமுதலான நூல்களிடத்து வழங்குதலா லான்மாதாபிதா வில்லையென்றதுலகவிருத்தமெனக்கொள்க. என்றார் ஞானப்பிரகாசர். இஃதன்றியும் தேவவங்கிசமநுவங்கிசத்தோற்றங்களை இலிங்கபுராணங்கள் கூறியிருப்பதிற் காண்க.

உருவாதிகந்தங்களைந்துங்கூடி யொருவன்வேறொரு
வனில்லையென்றுரைக்கும்புத்தா, உருவாதியைந்தினையு
முணர்பவன்வேறென்ன வுணரும்விஞ்ஞானமென்று
யஞ்ஞானமுணர்ந்தவரா, ருருவாதிபொருள்காட்டித்
தனைக்காட்டுஞ்சுடர்போ லுணர்வுபிறிதினையுணர்த்தித்
தனையுணர்த்துமென்னி, னுருவாதிபொருளினையுஞ்
சுடரினையுங்காணு முலோசனம்போ லுணர்வுபொரு
ளுணர்வதுவேறுண்டே. (உக)

(இ-ள்.) உருவாதி கந்தங்களைந்துங்கூடி யொருவன் வேறொருவனில்லை யென்றுரைக்கும் புத்தா. எ-து. உருவம் வேதனைகுறிப்பு பாவனை விஞ்ஞானமென்கின்ற கந்தங்களைந்துங் கூடி யான்மாவாயன்றித் தனித்தோரான்மா வில்லையென்று கூறும் புத்தா,—உருவாதியைந்தினையு முணர்பவன்வேறென்ன வுணரும் விஞ்ஞானமென்றாய். எ-து. அவ்வுருவமுதலிய கந்தங்களைந்தையுமறிவா னொருவனுளனென்று நாம் கூறு

வதல்ல. அதனை யறிவது சித்தமேயென்று கூறினாய்,—அஞ்ஞான முணர்ந்தவரார் எ-து. அந்தச் சித்தத்தை யுணர்ந்தவ ரானென்று வினயவிடத்து,—உருவாதிபொருள்காட்டித் தனைக்காட்டுஞ்சுடர்போ லுணர்வுபிறிதினை யுணர்த்தித் தனையுணர்த்துமென்னில். எ-து. உருவங் கண் முதலாய பொருள்களையுங்காட்டித் தன்னையுங்காட்டும் விளக்குப்போலச் சித்தமும் பிறிதுண்டாகியவற்றையு மறிவித்துத் தன்னையுமறிவித்து நிற்குமென்று கூறின்,—உருவாதி பொருளினையுஞ் சுடரினையுங் காணு முலோசனம்போ லுணர்வுபொருளுணர்வது வேறுண்டே. எ-து. உருவங்கண்முதலாகிய பொருள்களையு மவற்றைக் காட்டிநிற்கும் விளக்கையும் கண்டு நிற்குங்கண் போலச் சித்தத்தையும் விடயத்தாலறியு மிந்திரியங்களையு முணர்வானொருவன் வேறுண்டென் றறிவாயாக. எ-று.

இச்செய்யுள் உருவாதிகளாகிய கந்தங்களும் அவற்றின் விஞ்ஞானமு மான்மாவென்றதனை மறுத்துக் கூறிற்று. (உகூ)

ஞானமுஞாதாவுங் குணகுணிகளு மிவை பிரித்துப் பெறப்படுதல் குற்றமுண்டென்னில் நித்தியாதியும் பஞ்சகந்தமும் பிரித்துப் பெறப்படாமை யுனக்குக் குற்றமுடைமையில்லை, அதுபோலவெமக்குங் குற்றமாகாதென்பது கண்டுகொள்க. என்னை? யாவர்க்கு மொக்குமது குற்றமன்று. என்றார் ஞானப்பிரகாசரு மற்றேருரையாசிரியரும்.

காயமுடனிந்திரியமனநானென்று கதறுவாய் காயமுறக்கத்தறியாவாகும், வாயில்களுமப்படிபி லொன்றையொன்றங்கறியா மனங்கணத்திற் கெடுங்காலமு

ன்றின்வரவறியா, தாயுமறிவாகியுடல் பொறிமனமூன்றறிந்தாங்கவை நானல்லேனென்று மறிந்துமனத்தாலே, யேயுமொருபொருள்கருதியிந்திரியப்பாலே யிசைவித்துக்காயத்தா லியற்றுவதான்மாவே.

(இ-ள்.) காயமுட னிந்திரியமனநானென்று கதறுவாய். எ-து. உடம்புடனிந்திரியங்களு மனமுமேயான்மா, வேறேயான்மாவென் றொன்றில்லையென்று கூப்பிடும் புத்தா,— காயமுறக்கத் தறியாவாகும். எ-து. அக்காய முறக்கத்தினிடத் தறியாமையை யுடைத்தாம்,—வாயில்களுமப்படியிலொன்றையொன் றங்கறியா. எ-து. இந்திரியங்களு முறக்கத்திலும் வியாத்தியிலுமொன் றறிந்த விடயத்தை யொன்றறியமாட்டா,—மனங்கணத்திற்கெடுங் காலமூன்றின் வரவறியாது. எ-து. மனமுங் கணத்திற்கெடுமாகையாற் காலமூன்றின் செய்தியையுமறியமாட்டாது. ஆகையாலிவை யான்மாவன்று, — ஆயுமறிவாகியுடல்பொறிமனமூன் றறிந்தாங்கவை நானல்லேனென்று மறிந்து மனத்தாலே யேயுமொருபொருள்கருதியிந்திரியப்பாலே யிசை வித்துக்காயத்தாலியற்றுவதான்மாவே. எ-து. உடல்முதலாயின மூன்றினையுமாராயத்தக்கவறிவுமா யவற்றின் குணங்களையுமறிந் தவையிற்றை யென்னுடலென்பொறி யென்மனமென்றுசொல்லியு மவையுநானல்லேனென் றறிந்து மனத்தாற் பொருந்தத்தக்கதொருபொருளைக்கருதி யிந்திரியங்களின் பகுதிகாட்டக்கண்டு காயத்தாலே தொழிலைச்செய்வதான்மாவென் றறிவாயாக. எ-று.

இச்செய்யுள் காயமு மிந்திரியமு மனமு மான்மாவல்லவென்று மறுத்துக்கூறிற்று. கால மூன்றாவன—பூத பௌஷிய வர்த்தமான காலமாம். (உஎ)

ஆதலால்நீ முன்பு சொல்லுமசேதந மான்மாவல்லவென்றும் உணர்ந்துசெய்து பயன்கொள்வதோரான்மா வேறேயுண்டென்று மறிவாயாக. உன்னுடைய கந்தங்களைப்பிரியாது சகசமாய்க்கொண்டவற்றுக்காதாரமுஞ் சுவாமியுமாகிநின்றதோர் குணியாகியவான்மா வுளதாதல்வேண்டுமெனக் கொள்க. அறுவகைப்பட்ட விஞ்ஞானங்களிலேக விஞ்ஞானசந்தானமொழிந்தாழ்ந்துகிடந்த விஞ்ஞானங்கட் காழ்ந்துகிடந்த விஞ்ஞானத்திற் கோராதாரம் வேண்டும். சரீரமாதாரமென்னில், ஏககத்தாவாகிய புத்தன் "யான்கண்டீர நோன்பீர்காள் முன்னையோர்பிறப்பின் முயலானேன்" என்று சொன்னானென்றாய். முற்பட்ட முயற்பிறப்பைவிட்டிந்தத் தேகமெடுக்கவருகிறபொழுதே தாரகமாகவந்து அந்தச் சரீரமாதாரமாகக் கிடந்தஞானம்ஆலய விஞ்ஞானமாதாரமாகக் கிடந்ததென்னில், அதுவன்றோ நாங்க ளான்மாவென்றோமென்றே என்றார் ஞானப்பிரகாசர்.

கழிந்தவுணர் வேபின்னு மியானறிந்தேனென்று கருதலினவ்வுணர்வறிந்த தென்னின்முன்னே, மொழிந்தமொழி நான்மொழிந்தேனென்றல்வாய்தான் மொழிந்ததோ மொழிந்தவன்வேறுனாற்போல, வெழுந்தவுணர் வெல்லாங்கொண் டியானறிந்தேனென்ற தெதுவதுகா ணுயிருணர்வால் வாக்கான்மற்றை, யொழிந்தகாயந்தன்னாலுணர்ந்துரைத்துச் செய்தங்குணர்வினுக்கு மாதாரமாய் நிற்குமுயிரே. (உஅ)

(இ-ள்.) [1]கழிந்தவுணர்வேபின்னு மியானறிந்தேனென்று கருதலினவ்வுணர்வறிந்ததென்னின். எ-து. முன்னொருபொ

ருளையடுத்துக் கெட்டவறிவுதானே பின்புண்டாகியவற்றை யானறிந்தேனென்று விசாரிக்கையாலே யவ்வறிவே காணுமறிவதன்றி யான்மாவென்றொன்றில்லையென்று புத்தர் கூறின்,— முன்னே மொழிந்தமொழி நான்மொழிந்தேனென்றால் வாய்தான் மொழிந்ததோ மொழிந்தவன் வேறானாற்போல. எ-து. முன்னேசொன்னசொல்லு நான்சொன்னேனென்று சொல்லுதல்வாயார்பிறத்தலால் வாய்சொன்னதோ அன்றே, அச்சொல்லைச்சொன்னவ னொருவனுண்டானாற்போல, எழுந்தவுணர்வெல்லாங்கொண் டியானறிந்தேனென்ற தெதுவதுகாணுயிர். எ-து. உண்டாயவறிவுகளெல்லாவற்றையுங் கொண்டறிந் ததனையானறிந்தேனென்றதெது வதுகாணான்மா,-உணர்வால்வாக்கான் மற்றையொழிந்தகாயந்தன்னாலுணர்ந்தனைத்துச்செய்தங் குணர்வினுக்கு மாதாரமாய்நிற்குமுயிரே. எ-து. மனத்தாலும் வாக்காலு மொழிந்ததாகச் சொல்லப்பட்டகாயத்தாலு மறிந்துஞ் சொல்லியுந் தொழில்செய்து மம்மனத்திற்குப் பற்றாய்நிற்குமான்மா. எ-று. ஈண்டுணர்வென்றது மனத்தை.

இச்செய்யுள் மனதான்மாவல்லவென்று மறுத்துக் கூறிற்று.

இந்திரியவீதியெழுஞ் சித்தநெஞ்சத்தெழுஞ்சித்த
மென்றிரண்டுமொன்றுகெட்டேயொன்று, வந்தெழு
வதெனிற்கனவிற்கண்டபடிநனவில் வாய்திறவார்நன
வுகண்டபடிகனவிற்காணா, ரந்தனுருவன்னங்க ளறிந்
திடானின்றே லறிகனவுமிறந்துணர்வு மழிந்துறக்கம
டைந்தா, லுந்துவதோர்சந்தான மில்லையுணர்வுதிப்ப
வுயிர்கனவுநனவினையு முணருங்காணே. (௨௬)

(இ-ள்.) இந்திரிய வீதியெழுஞ் சித்த நெஞ்சத்தெழுஞ் சித்தமென்றிரண்டு மொன்றுகெட்டே யொன்றுவந்தெழுவதெனில். எ-து. இந்திரிய வியாபாரத்தா லுண்டாமறிவென்று மனத்திலுண்டாமறிவென்று மிரண்டா யொன்றுகெட்டொன்று தோன்றுமென்று புத்தநீ கூறின்,—கனவிற்கண்டபடி நனவில்வாய்திறவாய், நனவுகண்டபடி கனவிற்காணார். எ-து. கனவிற்கண்டதெல்லா நனவிற்சொல்லமாட்டார், நனவிற்கண்டதெல்லாங்கனவிற் சொல்லமாட்டார். அன்றியும்,- அந்தனொருவன் வனங்களறிந்திடான். எ-து. பிறவிக்குருடன் பிறர்வடிவத்தையும் வன்னத்தையு மறியமாட்டான்,—இனறேல். எ-து. இந்திரியக்குறைவாலே யறிவுதோன்றிற்றில்லையென்று நீகூறின்,—அறிகனவுமிறந்துணர்வு மழிந்துறக்கமடைந்தா லுந்துவதோர் சந்தானமில்லை. எ-து. அறியத்தக்க கனவுமழிந் துணர்வுமழிந் துறக்கத்தையுமடைந்தா லுண்டாகத்தக்க தொடர்ச்சியில்லை,—உணர் வுதிப்பவுயிர்கனவு நனவினையு முணருங்காணே. எ-து. ஆன்மாக்களுக் கிச்சாஞானக் கிரியைகளுண்டாக்கக் கனவினையு நனவினையு மறியாநிற்கும். எ-று. அன்றேல் எனவே யிந்திரியங்க ளறியிக்குமென்பது புலப்பட்டது. வீதி நேரேசெல்லுதல்.

இச்செய்யு ளிந்திரியமான்மாவுக்குக் கருவியாகவுள்ளதன்றி யிந்திரியமான்மாவல்லவென்று மறுத்துக் கூறிற்று.

இந்திரியமு மனமுந் துணையாகக்கொண்டறியு மானமாஅவையில்லாதபோ தறியானேவென்னிற் கருவியாகிய வெழுத்தாணியில்லாதபோ தெழுதமாட்டாதவனைப்போல வறியானெனக்கொள்க. அனலமசேதநமோ விவனுக்கறிவைக் கொடுப்பதெனில் அன்று; கருவிகளைத் துணைக்காரணமெனக்கொ

ள்க. இந்திரியங்களைச் சாதியே கவசநமாகவைத்தார் என்றார் ஞானப்பிரகாசர்.

ஒருகாலத்தோரிடத்தி லோருணர்வேற்செவிதா னொ
ன்றுணரா திருசெவியு முணருமோசை, யொருகாலத்
திருகண்ணு மிருசெவியுமனமு மொருவனைக்கண்டவ
னுரைகேட்டுணர்ந்திடுமைம்பொறியு, மொருகாலுமு
ணராவுள் ளுணர்வின்றிப்பொறிக ளொன்றொன்றுவு
ணர்வதுள்ளுணர்வைந்துமுணரா, வொருகாலும்பொ
றிவிகற்பித்துணராவுள்ளுணர்வுக் குள்ளதுகாண் விக
ற்பமிரண்டு முணர்வதுபிரே. (௯௦)

(இ-ள்.) ஒருகாலத்தோரிடத்தி லோருணர்வேல். எ-து. ஒருகாலத்திலே யொருபொறியிடத்திலே யோருணர்வாகவறியுமென்று புத்தநீ கூறினாய். அப்படியாயின்,—செவிதானொன்றுணரா திருசெவியு முணருமோசை. எ-து. இரண்டு செவியுமறியுமோசையை யொருசெவியாகவறியமாட்டா திரண்டு செவியாலுமறியவேண்டும். அஃதன்றியும், — ஒருகாலத்திருகண்ணுமிருசெவியுமனமு மொருவனைக்கண்டவனுரைகேட்டுணர்ந்திடும். எ-து. ஒருகாலத்தே யிரண்டுகண்ணு மிரண்டு செவியு மனமுங்கூடி யொருவனைக்கண்டவன் வார்த்தைகேட்டதனையறியாநிற்கும்,—ஐம்பொறியு மொருகாலுமுணரா வுள்ளுணர்வின்றி—ஐம்பொறிகளு மனங்கூடாமற் றனித்தொருகாலும் மறியமாட்டா, —பொறிகளொன்றொன்று வுணர்வது. எ-து. பொறிகளோரோவொன்றாகத் தாமறியும் விஷயத்தையறியுமத்தனை,—உள்ளுணர்வைந்து முணரா. எ-து. அம்மனமுமேககாலத்து ஐம்பொறியின் விஷயவறிவுகளைந்

துங் கூடியறியமாட்டா. அதுவுமன்றி,—ஒருகாலும் பொறி விகற்பித்துணரா. எ-து. பொறிகளொருக்காலுந் தாமறியு மறிவின்றிவிகற்பித்தறியமாட்டா, — உள்ளுணர்வுக்குள்ளது காண்விகற்பம். எ-து. அந்தப்பொறிகளுடனேகூடி நின்று விகற்பித்தறிவது மனத்துக்குள்ள குணங்காண்,—இரண்டு முணர்வதுயிரே. எ-து. இப்பொறிகளையு மனத்தையுங் கொண் டறிவதான்மாவாம். எ-று.

இச்செய்யுள் பொறிகளையுமனத்தையுங்கொண் டறிவ தான்மாவென்று கூறிற்று. (ரு௰)

இராவணனுக்குப் பத்துத்தலையு மிருபதுகண்ணு மிரு பதுசெவியு மிருபதுகையுமன்றே. இவையெல்லாங்கொண் டிவன் கயிலாயமலையையெடுத்தபோ திவனை நெஞ்சில்நெக்க வப்போதிவைகள் சேட்டையற்றுக்கிடந்தனவு மொழிந்தனவு மிவ்வாறு கண்டுகொள்க.

அருவுணர்வுமாயாறுமாறிமாறி யங்கங்கேதோன்றிபி டினகத்துநிலையின்றி, யுருவினொடுபாலதருண விருத் தாவத்தை யுண்டாகாதுறக்கத்திலுடறட்டவுழைப்ப, வருவதுணர்வெங்கிருந்து நெஞ்சிலிருந்தென்னில் வாயில்வினையறிந்தெழுப்பாவாயுவறியாதாந், திரியொ ழியவிடிஞ்சிறொடத்தீபமெழாவடக்கஞ் சென்றபொ ழுதாலுணர்வுநின்ற நிலைசெப்பே. (ரு௧)

(இ-ள்.) அருவுணர்வுமா யாறுமாறிமாறி யங்கங்கே தோன்றியிடினகத்துநிலையின்றி யுருவினொடுபாலதருண விருத் தாவத்தை யுண்டாகாது. எ-து. மனமானதருவுமா யுணர்வு மாய்ப் பொறிகளெங்கோடுங்கூடி யாறுவிதமாய் மாறிமாறித்

தோன்றியிடுவதென்று புத்தநீ கூறின் மனமருவமாகையா லுரு விறு நிலையுடையவுமல்லவாய்க்காயத்தோடுகூடிப்பாலதருண விருத்தாவத்தையு முண்டாகாதாதல்வேண்டும். அஃதன்றியும், — உறக்கத்தினுடறட்டவழைப்பவருவ துணர்வெங்கிருந்து நெஞ்சிலிருந்தென்னில். எ-து. அவத்தைப்பட்ட விடத்துடலிற்றட்டவுமழைப்பவு மறிந்தவரு மறிவெவ்விடத்திருந்ததென்று சொல்லாய். நெஞ்சிலிருந்தென்றுநீ கூறின்,-வாயில் வினையறிந்தெழுப்பாவாயுவறியாதாம். எ-து. சத்தாதிவிடயங்களிலே செல்லுந்தொழிலையறிந்து செலுத்துமனமறியாதாம். அஃதென்போலென்னில்,—திரியொழியவிடிஞ்சிலுடைத்தீபமெழா. எ-து. திரியைப்பற்றி நின்றவொளி யத்திரிமாய்ந்தா லுடன்மாய்தலன்றி யிடிஞ்சிலைப்பற்றித்தோன்றுதாகையால்,—அடக்கஞ்சென்ற பொழுதாலுணர்வுநின்ற நிலைசெப்பே. எ-து. உணர்வுக்கு மூர்ச்சைவந்தபொழு தறிவு நின்ற நிலைசொல்வாயாக. எ-று. ஆயு-மனம். உரு-தேகம். ஆல் அசை.

இச்செய்யுள் பொறியுமனமுங்கூடி யறுவகையாயறியுமென்பதனைமறுத்து அவை கருவியாகக்கொண்டறிவதான்மாவென்று கூறிற்று. (கூக)

விஞ்ஞான நின்றநிலையை விஞ்ஞானமறியவுஞ் செய்யாது, தானுகவறிந்தெழவுமாட்டாது, அந்தவிஞ்ஞானநின்ற நிலையை யிந்திரியங்களும் வாயுவுங் கன்மமும் ஜடமாதலாலறிந்தெழுப்பவுமாட்டா. ஆதலாலே யிவையிற்றைக்கூட்டியுணர்த்துங்கர்த்தா வொருவனுண்டுகாண் இந்தச்செய்தி யுனக்கெல்லாந் தெரியாதென்க. அப்படியன்றுகாணு முடமுமூன்றுகோலும் மாற்றுக்கக்கரைக்குப் போகமாட்டா. விவன்றுனு

மிவையின்றித் தனித்தாற்போகமாட்டான். ஆனாலு முடமு மூன்றுகோலுங் கூடினாற்செல்வானன்றோ, அப்படிப்போல இந்திரியங்களும் வாயுவுங் கன்மமும் விஞ்ஞானமுங்கூடினா லெழுந்திருக்கலாமென்னில்; செய்தியறிந்தோடம் விடுவானை யன்றி யோடமு மூன்றுகோலு முடமுமேறுவானுங்கூடினாலு மக்கரையேறக்கூடாததுபோலக் கத்தாவையன்றி இந்திரியமும்வாயுவுங் கன்மமுங் கூடினாலு மறிந்தெழுந்திருக்கப் பேகாதாதலா லறிவுடைய கத்தாவொருவன் வேண்டுமாதலான் நீயிட்டதிட்டாந்தமாபாசம். அத்திற சத்தியாவிகல்பமடையு மெனக்சொல்க என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவர், இடிஞ்சிலொடத் திரியொழியத் தீபமெழா. எ-து. அகலிடத்து நெய்பொருந்தியிருக்கவுந் திரியில்லாமற் றீபங்களெரியமாட்டா, அதுபோல உடலிடத்து மனமு மிந்திரியங்களுமிருந்து மான்மாவில்லையாகி லறிவுசீவியாது. என்றுவமானத்துக்கு வமேயம் வருவித்துரைத்தனர். திரிபோலுமான்மா, இடிஞ்சில்போலுமுடல், நெய்போலுமனமு மிந்திரியங்களும், தீபம்போலுமறிவு. இடிஞ்சில்-அகல்.

இச்சைவெறுப்பியற்றலின்பதுன்பஞானமிவையனு
வின்குறியாகு மிவற்றிலிச்சை, நச்சிநுகர்ந்தொருப
மத்தினிணங்கண்டுமுன்புநா னுகர்ந்தகனிபினினமெ
ன்றுநச்சல்பின்பு, மெச்சவெறுப்பாதிகளுமிப்படியே
யாகு மிவைமுன்பும்பின்பு முணர்ந்திடுதலாலே, நிச்ச
யகர்த்தாவொருவனுளனென்றுநல்லோர், நிறுத்திடு
வர்வெறுத்திடுவர் நின்னுடையபொருளே. (௩௨)

(இ-ள்.) இச்சை வெறுப்பியற்றலின்ப துன்பஞான மிவையணுவின்குறியாகும். எ-து. ஆசை வெறுத்தல் தொழில் செய்தல் சுகதுக்கப்படுதல் அறிவு இவை முதலியவெல்லா மான்மாவின் குணங்களாம்,—இவற்றிலிச்சை நச்சிநுகர்ந் தொருபழத்தினினங்கண்டு முன்பு நானுகர்ந்த கனியினினமெ ன்று நச்சல் பின்பும். எ-து. இவைகளிற்றிலாசையாவது முன் னொரு பழத்தை யாசைப்பட்டு நுகர்ந்து பின்பதனை யொப்ப தொருகனியைக்கண்டு முன்பு நானுகர்ந்தகனியினினமிதெ ன்று பின்பதனை யாசைப்படுதல், எச்சவெறுப்பாதிகளுமிப்ப டியேயாகும். எ-து. ஒழிந்த வெறுப்புமுதலாயினவு மித் தன்மையேயாகும்,—இவை முன்பும் பின்பு முணர்ந்திடுத லாலே நிச்சய கர்த்தாவொருவனுளனென்று நல்லோர் நிறுத் திடுவர் வெறுத்திடுவர் நின்னுடையபொருளே. எ-து. அவ் விச்சாஞானக் கிரியைமுதலாயினவற்றை யான்மா முன்பும் பின்பு மறிகையாலே நிச்சயமாகவான்மா வொருவனுளனெ ன்று சொல்லுவர் பெரியோர். நீ யான்மாவில்லையென்று சொல்லுஞ்சொல்லை யப்பெரியோர் தள்ளாநிற்பர் எ-று. இவ்விடத்துக் கர்த்தாவென்பதான்மாவை. கன்மத்துக்குக் கர்த்தாவென்றபடி.

உருவாதியென்ற செய்யுண்முத லிச்செய்யுட்காறு மான் மாவில்லையென்பதனைமறுத் துண்டென்று கூறிற்று. (௩௨)

நீயுணர்வுகளெல்லா மிச்சாரூபமாகப் பிறக்குமென்று சொன்னாய். இச்சையுணர்வுக்கு முன்னேயுள்ளதாகவேண் டும். ஆதலாலிந்த விச்சை யெவ்விடத்துள்ளது, சரீரத்தென் னில்? அசேதநமாகிய சரீரத்தி லிச்சைகூடாதாம். கூடிற்பிர

திணைகளுக்கு மிச்சையுண்டாகவேண்டும். இனி இச்சை ஞானத்தென்னில் நீ யிச்சை முன்பேயுண்டாயினல்லது ஞானம் பிறவாதென்கையின் ஞானத்துக்கிச்சையுண்டாதல் கூடாதாம். ஞானத்தால் வருவனவாகிய சமுசாரவேதனைகளு மிலவாகிச் சூனியமாதலால் அந்தவிச்சையு ஞானமுங் கன்மமு மற்றுள்ளகுணங்களுக்கு மநதார மான்மாவாமெனக்கொள்க. நீ சொல்லியது மாலை கண்டோன்றமையால் வருமிடையூறு பரிகரித்தற்காகப் பகதற்சுவாகழப்புக்குத் தன்பிராணனை யிழந்தவனேபோல நீயும் விஞ்ஞானத்திற்குப் பிறப்பிடமின்மையால் ஆலயவிஞ்ஞானமென்பது வேண்டின் ஐரான்மிகபக்ஷத்தைக் கெடுத்தாய். அன்றியும் பொறிகளிலே புலன்களுற்றபோ துணர்வுபிறக்குமென்று சொல்லுதியாயின் கேவலமசேதநமாகிய விந்திரியங்கள் விஷயத்தையுறவுணர்வுபிறக்கிற் சபசரீரத்துப் புலன்களுற்றால் உணர்வு பிறக்கவேண்டும். அன்றியும் பவுதிகமு மிந்திரியங்கள் சொருபமும் புலன்விகாரமு முனக்குத்தெரியாது. க்ஷணந்தோறுங் கெடுமவனன்றோ, ஆதலால். என்றார் ஞானப்பிரகாசர்.

மற்றொருவர் இச்சைவெறுப்பியிற்ற லின்பதுன்பஞான மிவையணுவின் குறியாகும். எ-து. விருப்புவெறுப்புந் தொழிலுஞ் சுகமுந் துக்கமு மறிவுமாகிய விவைகள் குணியாகிய வான்மா வுண்டென்றறிதற் கடையாளமாம். என்றார்..

எப்பொருட்குமிரந்தரமா யிடங்கொடுத்துநீங்கா திரு
ள்வெளிதானன்றிப்பிரண்டினுக்குமிடவகையா, யொப்
பில்குணஞ்சத்தமதாய்வாயுவாதியு தித்தொடுங்கநிற்
கும்வானுயிர்முன்னேசொன்னேந், செப்பிடுங்காலம்

பொழுதுநாளாதியாகித் திரிவிதமாய்த்தீமைநன்மை
செய்யுந்திக்குத், தப்பில்குணக்குக்குடக்குத் தெற்கு
வடக்காதித் தானாகித்திரியாதே நின்றுபலந்தருமே.

(இ-ள்.) எப்பொருட்கு மிரந்தரமா யிடங்கொடுத்து நீங்காதிருள்வெளிதானன்றி யிரண்டினுக்கு மிடவகையா யொப்பில் குணஞ்சத்தமதாய் வாயுவாதி யுதித்தொடுங்க நிற்கும் வான். எ-து. முன்னர் வானமுமான்மாவுங் காலமுந் திக்கு மில்லையென்ற புத்தனே நீ கேட்பாயாக. எல்லாப்பொருளுஞ் செல்லுதற்கு வழியுமா யிடங்கொடுத்து நீக்கமின்றி யிருளும் வெளியுமல்லவா யிரண்டு நிற்கத்தக்கவிடமுமா யுவமையில்லாதகுணஞ் சத்தமாய் வாயுமுதலிய பூதங்களுளுந் தோன்றியொடுங்குதற்குத் தாரகமுமாய் நிற்கும்வானம்;—உயிர் முன்னேசொன்னோம். எ-து. ஆன்மாவுண்டென்று முன்னமேசொன்னோம்,-செப்பிடுங்காலம் பொழுதுநாளாதியாகித் திரிவிதமாய்த் தீமைநன்மைசெய்யும். எ-து சொல்லத்தக்க காலமானது காலையு முச்சியு மாலையுமென்னும் பொழுதாயும். நெருந லின்று நாளையென்னு நாளாயும், இத்தன்மையிலே மூன்றுவிதமாய் வேற்றுமைப்பட நன்மைதீமைகளைச் செய்யும்,—திக்குத்தப்பில் குணக்குக் குடக்குத் தெற்கு வடக்காதித்தானாகித்திரியாதே நின்று பலந்தருமே. எ-து. திக்கானது கிழக்கு மேற்குத் தெற்கு வடக்கென்று தவறில்லாததாயநாதியிலுமாதியிலுமுள்ளதாய்ப் பிறழாம லத்திசைகளை நோக்கிக் கன்மஞ்செய்தோர்க்குக் கன்மபலத்தைக்கொடுக்குமாகையா லாகாசமு மான்மாவுங் காலமுந் திக்குமுண்டென்றறிவாயாக. எ-று.

இச்செய்யுளாகாசமு மான்மாவுங் காலமுந் திக்குமுண்டென்று கூறிற்று. நெருனலின்று நாளை. எ-து. பூத பௌஷிய வர்த்தமானம். அதுவே இறந்தகால எதிர்கால நிகழ்காலங்கள். (௫௫)

சர்வர்க்கும் சகலத்திற்கும் ஆகாயமிடங்கொடாத போது போக்குவரத்து வியாபாரமில்லையாம். சத்தங்குணமானபடியெங்ஙனே பொருளின்கூட்டமல்லவோ வென்னிற், பொருட்கூட்டமன்று. ஏகாந்தத்தே இராத்திரி யாரவாரங்களொடுங்கியகாலத்திருந்து சூக்ஷமஞானிகள்பார்க்கிற கிறுசத்தமுடையவற்றானு மறிந்துகொள்க. காலமு நீ க்ஷணபங்கங்கொண்டபோது க்ஷணத்திற்பொருளுற்பத்தி நாசப்படுமென்றாய். அந்தக்ஷணமென்றதுகாண் காலம். திக்கானது நீ கிழக்குநோக்கியிருந் தெல்லாத்திக்குகளிலு மிருந்துவந்த பேர்களைப்பார்த்து நானெந்த்ததிக்கைநோக்கி யிருக்கின்றேனென்றபோது சர்வருங் கிழக்குநோக்கி யிருக்கின்றாயென்பார்கள், அதுகாண்திக்கு. இல்லாதபோது திசைத்த நிர்ணயொழிந்து பலன்களொருத்தருக்கும் படாவாம், அத்தாற்றிக்குளவாம். காலமுண்டென்றல் நீ கற்பனையென்றும் பிராந்தியென்றுஞ் சொன்னாய், நீ சொல்லிய க்ஷணபங்கமும் போதிவிருக்ஷமும் பிராந்தியென்னாய். அன்றியுஞ் சர்வஞ்ஞர்சொல்லும் பிதாமாதருங்கெட் டவர்கள் வேறுபிராந்திகளிற் கூடாரென்றாய். புத்ததேவருக்கு ஞாதியாவானொருவன் அந்தகனென்பானவனுக்குத் தர்மவுபதேசம்பண்ணித் தவப்படுத்தி யவன்பிடகமோதுவிப்ப வவனித்திராசமயத்துத்தனது ஸ்திரீயாகிய பரசுந்தரியென்று வாயாற்ற வந்தவேட்கையைத் தவிர்ப்பான்

வேண்டித் தேவலோகத்தப்சர ஸ்திரீகளைக்காட்டிப் பரசுந்தரிமேலுபேக்ஷையைப்பண்ணுவித்தலூறவவனுமப்சரசுகளைக் கண்டு ஸ்திரீவேட்கைமிகுத்துத் தவம்விட்டுப் போயினன். இவ்வாறுசமத்தரன்றே புத்தரென்று முறுவல்செய்தாருலகத்துள்ளோர் என்றறிவாயாக. என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவர், செப்பிடுங்காலம் பொழுதுநாளாதி எ-று. நீக்ஷணமென்று சொல்லப்பட்ட காலமானது காலை யுச்சி மாலை முதலியபொழுதும், அசுவனி பரணிமுதலியநாளும், ஆதி என்றதனுல் மாதமுமிருதுவுமயனமும் வருஷமுமாகி எ-ம் குணக்குக்குடக்குத் தெற்கு வடக்காதிதானுகி. எ-று. கிழக்குமேற்குத் தெற்கு வடக்கும். ஆதி என்றதனுல் கோணத்திசைகளுமாகி. எ-ம். வாயுவாதி யுதித்தொடுங்கும்வான். எ-து. மாயாவாத மேற்கொண்டு கூறியது. எ-ம். போதிவிருக்ஷம் வடக்கேயிருப்பதென்று புத்தன் ரெழுதலால் திக்குளதென்க. எ-ம். கூறினர்.

காரியமாயுலகமெலாமிருத்தலாலே கடாதிகள்போற்
காரியகர்த்தா வொருவன்வேண்டு, மாரியமாயறம்
பொருளோடின்ப விடெல்லாமறைந்துபிர்கட் கறிவு
செயலளிப்பது நூலந்நூல், கூறியராயுள்ளவர்களோ
தவோதிக் கொண்டுவரலான்முன்னே குற்றமின்றிச்,
சிரியபேரறிவுடையோன் செப்பவேண்டுஞ் செயலி
னுக்குங்கரிவேண்டுஞ் சிவனுளனென்றறியே. (கூச)

(இ-ள்.) காரியமாயுலகமெலா மிருத்தலாலே கடாதிகள் போற் காரியகர்த்தாவொருவன் வேண்டும். எ-து. கர்த்தாவு நூலுமில்லையென்று கூறிய புத்தனே, பிரபஞ்சமெல்லாங்

கடாதிகள்போலக் காரியப்பட்டுவருதலாலே யிதனைச் செய்வானொரு கர்த்தா வேண்டும்,—ஆரியமாயறம்பொருளோடின்பவீடெல்லாமறைந்துயிர்கட் கறிவுசெயலளிப்பது நூல். எ-து. வடமொழியாயறம்பொருளின்பம் வீடென்னு நான்கு காரியமுஞ் சொல்லியான்மாவுக்கறிவையுஞ் செயலையுங்கொடுப்பது வேதாகமங்கள்காண்,—அந்நூல் கூறியராயுள்ளவர்களோதவோதிக் கொண்டுவரலான் முன்னே குற்றமின்றிச் சீரியபேரறிவுடையோன் செப்பவேண்டுஞ் செயலினுக்குங் கரிவேண்டுஞ் சிவனானென் றறியே. எ-து. அவ்வேதாகமங்கள் குசாலராயுள்ள பிரமாதிகளோதுவிக்க மகாவிருடிகளாலேயோதப்பட்டவர்கள் வழியாகத்தொன்றுதொட்டு வருதலாற் றவறின்றி மிக்கபெரியவறிவையுடையோராலே சொல்லவேண்டும். அவ்வேதாகமங்களாற் சொல்லப்பட்ட கன்மத்துக்குக் காண்பானொரு சாக்ஷியும்வேண்டும். ஆகையாலே சிவனாலே நூல் சொல்லப்பட்டதென்று மவனே கர்த்தாவென்று மறிவாயாக. எ-று

இச்செய்யுள் கர்த்தாவுஞ் சாத்திரமு முண்டென்பதனைக் கூறிற்று.

உலோகாலோகங்க ளடுக்காயிருத்தலாலே மாட கூடகோபுராதிகளைப்போல வொருவனுண்டாக்கினனென்க. என்னை இந்தக் கோபுராதிகளைப் பண்ணுவானைக் கண்டோம், உலகஞ் சிருஷ்டிப்பானைக்கண்டோ மில்லையேயென்னில், சீனத்துள்ள பணிகள் பண்ணுமவனை நாங்கண்டோமில்லையாகிலும் அந்தப் பணியைக்கண்டு கைத்திருத்தங் கொண்டாடினமன்றே, ஆதலாலவன் பண்ணுகையிலே யவனைக்கண்டோ மில்லையாகிலு மநுமானத்தாற் கொண்டோமன்றே, அப்ப

டிப்போல உலகஞ் சிருஷ்டித்தானு முண்டென்று கொள்வாயாக. "அந்நியதிவிற் கௌசிகாதி விதமாக்கினரை, யுன்னுவர் சாமானியத்தை யோர்ந்து" எ-து. கண்டுகொள்க. அப்படியாகிற் சீனத்துப்பணிதிபண்ணினவ னிங்கேவந்தாலுங் காணலாம், அல்லது நாமங்கேபோனாலு மவனைக்காணலாமே அப்படிப்போலப் பிரபஞ்ச கர்த்தாவையுங் காணலாமோ வென்னில், ஒருவனைப் பேய்பிடித்தபோ தவனது விகாரகிருத்தியங்களைக்கண் டிவனைப்பேய்பிடித்ததென் றறிந்தோமா, முன்னையொரு பேயைக்கண்டறிந் தந்தப்பேய் பிற்பாடொருவனைப் பிடித்தபோதே யிவனைப்பேய்பிடித்ததென் றறிந்தோமா, அப்படியல்லவே? அவனது விகாரகிருத்தியங்கண்டறிந்ததுபோலப் பரமேஸ்வரனது கிருத்தியவல்லமையைப் பிரபஞ்சகாரியத்திற்கண் டிதற்குமொரு கர்த்தாவுண்டென் றறிந்துகொள்க. "கூளியினைமாந்தர் விகாரத்தினாற் குறிப்பர், கூளியினை முன்கண்டோகூறு." எ-ம். கண்டுகொள்க. கூளி பேய். யாதொரு கிருத்தியம் பண்ணுமவரெல்லாம் தேகேந்திரியாதிகளுடனே கூடியிருந்து கிருத்தியம்பண்ணக்கண்டோமே, அப்படிப்போல வும்முடைய சேகரகர்த்தாவுக்குத் தேகேந்திரியாதி யுண்டாகவேண்டுமென்னில், அப்படியன்று பின்னையெப்படியென்னில், சரீரமில்லாதவான்மா சரீரத்தை நடத்துமதுபோலக் கர்த்தாவுஞ் செய்வனெனக்கண்டுகொள்க. "ஆக்கையிலையாக்கையினை யூருமுயிர்க்காக்கையுமற், றாக்குமெலா நின்மலனெம்மான்" எ-ம். கண்டுகொள்க. இனி நித்திய முத்த சுத்த சர்வஞ்ஞனுயிருக்கு மொருவனாலே சொல்லப்பட்ட சாத்திரமானது பெரியோரா லுபதேசிக்கப்பட்டவர்கள் குருபாரம்பரையாகக் கிரமமாகக் கொண்டுவந்தது

சாத்திரமாதலா லிதற்கு முன்கூறிய கர்த்தாவேண்டுமென் றறிக. "ஆக்கையிலான்வாக்குமிலர் ஞாகமத்தை வேதத்தை, யாக்குவனோ) வாக்கானெனில்." ஆக்கையுமற்றைந்தொழிலு மாக்குமுறை முன்னறைந்தா, மாக்குவனாலு மவைபோ லாங்கு'? என்பதினாலறிக. என்றார் ஞானப்பிரகாசர். மற் றொருவர், செயலினுக்குங் கரிவேண்டும். எ-கு. ஆன்மாக் கள் செய்யுங் கன்மங்களையறிந்து பலன்கொடுத் தந்தக்கன்ம சாக்ஷியாக வொருகர்த்தாவேண்டும் என்றார். அன்றியும், கிஞ்சிஞ்ஞராகிய வான்மாக்கள் தன்மகிமையறிதற்குச் சர்வஞ் ஞான சிவன்சொன்ன நூலாகலின் இதரேதராச்ரய தோஷ மில்லையென்பது "குற்றமின்றிச் சீரியபோறிவுடையோன் செப்பவேண்டும்" என்பதனாலுணர்க என்றார்.

மரங்களுயிரல்லவென்று மறுத்துச்சொன்னாய் வாடு தல்பூரித்தலான் மரங்களுயிராகுந், திரங்குநீர் பெரு தொழிமிற்பெறிற் சிரத்தைசேருஞ் சீவனலவெனிலு லகிற் சீவனெல்லா, மூரங்கொள்வதூண்பெறிற் சோ ருமூண்பெறாவே லுலர்ந்தமரநீர் பெற்றாலுய்யாதுள் ளுயிர்கள், கரந்தசினை முட்டைகட்கு வாயிலின்றுவா யில் கண்டிலதேற் பூத்துக்காய்த்தெழலான் மரங்களு யிரே. (௬௫)

(இ-ள்.) மரங்களுயிரல்லவென்று மறுத்துச்சொன்னாய் வாடுதல் பூரித்தலான் மரங்களுயிராகும். எ-து. மரமுதலி யன வுயிருள்ளனவல்லவென்று புத்தநீ சொன்னாய், அவைமெ லிதலாலும் பருத்தலாலு மரமுதலியவை யுயிருள்ளனவா கும்,—திரங்குநீர் பெருதொழிமிற் பெறிற்சிரத்தைசேருஞ்

சீவனலவெனில். எ-து. மரமுதலியன நீர்பெருதொழியில் வாடுதலு மந்நீர் பெற்றாற் பூரித்தலுமியல்பு, ஆன்மாவல்ல வென்று நீ கூறில்,—உலகிற் சீவ னெல்லா மூாங்கொள்வ தூண் பெறிற் சோரு மூண்பெருவேலூர்ந்த மரநீர் பெற்று லுய்யாது. எ-து. உயிருள்ளவற்றுக்கெல்லா மூண்பெற்றாற் பருத்தலு மூண்குறைந்தான் மெலிதலுங் குணமாகையா லுல ர்ந்தமரத்துக்கு நீரைவிட்டாற் பரிணாமமில்லையாதலான் மர முதலியவுயிருடைத்தாம். அற்றன்று, மரமுதலியனவற்றுக் கிந்திரியங்களில்லையாகையா லுயிரல்லவென்று கூறின்,—உள் ளுயிர்கள் கரந்த சினைமுட்டைகட்கு வாயிலின்று, எ-து. ஆன் மாவை யுள்ளடக்கி நிற்கு முட்டை சினைமுதலியவற்றிற்கு வாயிலின்றுவாறுபோல மரமுதலியவற்றுக்கும் வாயிலின்று ன்றுது,—வாயில் கண்டிலதேல். எ-து. அம்முட்டை சினைமு தலியவற்றுக்கு வாயில் பின்பு தோன்றக்கண்டனம் இதற்கு வாயிலின்றுக் கண்டதில்லையென்று கூறில்,—பூத்துக் காய்த் தெழலான் மரங்களுயிரே. எ-து. அம்மரமுதலியன வற்று க்கு இந்திரியங்கட்புலனாகாதாயினும் பூத்துக் காய்த்துவளர்த லுங் காண்டலாலிந்திரியமு முயிருமரமுதலியனவற்றுக் குண் டென்றறிவாயாக. எ-று. மரமுதலியனவெனவே புல்லீரு யினவாயிற்று.

நீர் சொல்லியதைப்படிக்காணும் கொம்பு மயிரு முகிரும் பல்லும் புற்று முயிரில் பொருளாகியும் வளராநிற்றலா லிந் தவேது விபசாரமென்று சொல்லுவையாகில், இவ்வாறு நீ சொல்லியதுமிகவும் பேதைமைத்தாம். நீகாட்டிய புற்றுவது கறையான் முதலான ஜீவன்கள் கிழ்மண் மேலேயேறிட வோங்கும். மயிரு நகமுந்தந்தமும் ஜீவசரீரத்து நீங்கினல்

வாரா. அன்றியும் நரைத்தமயிருக்குக் கறுப்பிடுவாருமை யும் உகிருக்கைவணமிடுவாருமையுங் கண்டுகொள்க. ஆதலா லவைக டேய்ந்தல் வளர்தல் இல்லையெனக்கொள்க. ஆதலா னீயிட்ட திருஷ்டாந்தமாகாதென்றும் மரங்களுயிருடைய வென்றுங்கொள்க. ஏகேந்திரிய ஜீவன் மக்களுட்டோன்றி னுஞ் சமேகேந்திரிய ஞானமாகவேண்டுமென்னில், முயலாய் ப்பிறந் தற்பஞானத்தையுடையது புத்தராய்ப் பிறந்தகால த்து மிகுந்தஞானவானானதுபோல மரங்களுமக்கள் யோனி யிற்பிறந்தாற் பஞ்சேந்திரியஞானமுடையனவாம் எனக்கொ ள்க. என்றார் ஞானப்பிரகாசர்.

ஒருமரத்தினுயிரொன்றேற்கொம் பொசித்துநட்டா லுய்யுமுயிரொன்றுபல வாமோவென்னிற், கருமரத் தின்வித்துவேர்கொம்புகொடி கிழங்கு கண்கலந்து கொள்ளுமுயிரண்டம் வேர்ப்புத், தருபிறப்புச்சராயு சங்கள் சநநமும்பெற்றுற்போற் றனையுமுற்பீசந் தலநடவாவென்னிற், பெருநிலத்திற்கவிலார் நடப் பரோபேதாய் பிறப்பின்விதமநேகங்காண் பேசுங் காலே. (ந சூ)

(இ-ள்.) ஒருமரத்தினுயிரொன்றேற் கொம்பொசித்து நட்டாலுய்யு முயிரொன்று பலவாமோ வென்னில். எ-து. மரத்துக்கான்மாவுண்டாமாயி னொருமரத்தின் கொம்பை முறி த்துநட்டா லதனைப்போலவளர்தலா லோருயிர் பலவுயிரா மோவென்று புத்தநீ கூறில்,—கருமரத்தின் வித்துவேர் கொ ம்புகொடி கிழங்கு கண்கலந்துகொள்ளுமுயிர். எ-து. இதனை

(மரத்தின்வித்து வேர்கொம்பு கொடி கிழங்கு கண் கருக்கலந் துயிர்கொள்ளும் எனமாறுக, மரத்தினுண்டாகிய வித்து வேர் கொம்பிவையிற்றையும் பிறவற்றிற் கொடி கிழங்கு கணுக்களி வையிற்றையுங் கருப்பமாகக்கொண்டு ஆன்மாக்கடோன்றும், அண்டம் வேர்ப்புத்தருபிறப்புச் சராயுசங்கள் சநநமும் பெற் றற்போற் றனடையுமற்பீசந் தலநடவாவென்னில். எ-து. முட்டையிலுங் கசிவிலுந் தோன்றியவான்மாக்கள் பையிற் றோன்றுமான்மாக்கள்போல நடைபெற்று வித்திற்றோன்று மரமுதலியன பூமியிடத்து நடைபெறுவாகையாலான்மாவன் றென்று நீகூறில்,—பெருநிலத்திற் காலிலார் நடப்பரோபே தாய் பிறப்பின்வித மநேகங்காண் பேசுங்காலே. எ-து. இதனை (பேசுங்காற் காலிலார் பெருநிலத்து நடப்பரோ பிற ப்பின்வித மநேகங்காண் பேதாய்) என மாறுக. சொல்லுங் காலத்துக்காலிலார் பெரியபூமியிடத்து நடக்கவல்லரோ அப் படியிந்திரியங் குறைவான வான்மபேத மநேகமாக வுடைத் துக் காணறியாதாய். எ-று. கண்-கணு.

இச்செய்யுளிரண்டு மரங்கட்குயிருண்டென்று கூறிற்று.

பிறப்பின்வித மநேகம். எ-து. சன்மபேதங்கட் கீடாக ஜநநபேத மநேகங்களாயிருக்கும். அதை "படைத்ததொரு படியன்றிப் பறவை பசுநராய்ப் பண்ணியதென் முன்னே வினைப்பான்மையென்பர்." என்பதனுற் கண்டுகொள்க என் றார் ஞானப்பிரகாசர்.

தின்னுமது குற்றமிலைச் செத்ததெனும்புத்தா தின்பை யெனக் கொன்றுனக்குத் தீற்றினர்க்குப்பாவ, மன் னுவதுன்காரணத்தாற் றின்றுநார்க்கு வதைத்தொ

ன்றை யிடாமையினால் வதைத்தவர்க்கேபாவ, மென்
னிலுனையூட்டினர்க்குப் பாவஞ்சேர வென்னதவம்
புரிகின்றாய் புலால்கடவுட்கிடாயோ, வுன்னுடலமசு
சியென நாணிவேறோ ருடலுண்ணிலசுசியெனவுணர்
ந்திலைகாணீயே. (௯எ)

(இ-ள்.) தின்னுமது குற்றமிலைச் செத்ததெனும் புத்தா. எ-து. தான்கொல்லுமது குற்றமுடைத்து, செத்ததுதின்னுமது குற்றமில்லையென்று கூறும்புத்தா,—தின்மையெனக்கொன்றுனக்குத் தீற்றினர்க்கும் பாவமன்னுவதன் காரணத்தாற் றின்னாதார்க்கு வதைத்தொன்றையிடாமையினால். எ-து. நீ தின்மையென்று கருதி யுனக்கொன்றைக் கொன்றூட்டினர்க்குப்பாவ முன்காரணத்தாலுண்டாம். அஃதெங்ஙனமென்னிற் றின்னாதார்க்குக் கொன்றூட்டுவாரில்லையாகையால்,—வதைத்தவர்க்கே பாவமென்னில் எ-து. என் காரணத்தாற் பாவமுண்டாகாது கொன்றவர்க்கே பாவமுண்டென்று கூறின்,—உனை யூட்டினர்க்குப் பாவஞ்சேர வென்னதவம் புரிகின்றாய். எ-து. உன்னைப்பரிந்தூட்டினர்க்குப் பாவமுண்டாக நீ என்னதவத்தைச் செய்கின்றாய். அஃதன்றியும்,—புலால்கடவுட்கிடாயோ. எ-து. நீ புலால் நுகருங்காலத்துன்கடவுளுக்கும் புலாலை யூட்டுவை. அஃதன்றியும்,—என்னுடலமசுசியெனநாணி வேறோருடலுண்ணி லசுசியென வுணர்ந்திலைகாணீயே. எ-து. உன்னுடம்புசுத்தமில்லையென் றிலச்சிக்கின்ற நீ பிறவுடலை நுகருமது சுத்தமில்லையென் றறிந்தாயில்லை. எ-று. நாணியென்றது தொழிற்பெயர்.

இச்செய்யுள் பிறர்கொன்றிடத்தின்னலா மென்பதனை மறுத்துக் கூறிற்று. (௯எ)

என்னதவம்புரிகின்ற யென்னவே அவன் பண்ணுவது தவமல்லவென்பது கருத்து. இனி கல்லியமாம்ஸம் புசித்தாற் பாவமில்லையென் றகல்லியமாம்ஸங் கொள்ளேமென்பை யாகிலெண்ணத்தாலு மாம்ஸந்தின்பார்க்குக்கொலை பாவமுண்டென்பது பொருந்தும். இந்தவொன்பது தோஷமொழியத் தின்னயாவர்க்குமரிது. என்னை, ஐயுறவொழிதல் கூடாமையாலே மிருகமாம்சம் தின்னலாமோவென்னில், அவ்வாறு அந்தமாம்சமுண்ட ஜீவன்களுக்கு ஜீவதானங்களிலே புத்தி பிறக்குமென்பதற் குலகமேசாக்ஷி. ஸவயமேவபதிதமாகிய பால் நுகரக்கறந்தான் கொம்பினின் றபலத்தையறுத்து நுகர்விக்குமாதலா லெனக்கொள்க. இனிகாரணத் புண்ணியங் கெடா, அது புண்ணியத்துக்குக்காரணமாகிய புத்தர்பத்திக்குக் காரணமென்று போதிவிருக்ஷந்தொழுதல்.-பாவத்துக்குக் காரணமாகிய மாம்சமுண்டல் காரணத்பாவமாம். காரணத் புண்ணியங்கையாண்ட புத்தனுற் காரணத்பாவங் கருதாமை "ஏரிக்கூரொருகாதம் அவ்வூருக்கேரியொருகோல்" என்பதற் கொக்குமென்க. அன்றியு மிழமடியப்படுத்தாடை யாழ்வ ரென்னும் வேதி சத்துரையவ ருள்ளகாலத்து வணங்கினோர்க்குப்பின்பவர் புலவினைத்தொழுதார்க்குப் புண்ணியமுண்டாகி லுயிரோடுகூடிய சரீரத்தை யழிப்பார்க்கும் பாவமுண்டென்க. "உகுநெற்பல கூட்டி யுண்டி முடிப்பான், மிகநெல்லு திர்வதனை வேண்டுந்-தகவுடையோ, ருண் ணப்படு முடையை யுண்பானுயிர்மாள, வெண்ணுதவாறுண்டோ விங்கு" என்ப வாகலின். இனியொருதன்மத்தைப் பொருள்கொடுத் தெடுப் பவனுக்குப் புண்ணியமுண்டானவாறுபோல வத்தன்மத்தைப்பொருள்கொடுத் திடித்தவனுக்குப் பாவமுண்டாவதுபோ

லப் பொருள்கொடுத்து மாம்சந்தின்பவர்க்குப் பாவமாகும் புத்தர்பாதப்பூவென்றுபேசூறித்துப் பூவாங்காதவன் புண்ணிய ம்பெறுதவாறுபோலக் கொலையால்வந்தவூனென்றுபேசூறித் தூன்வாங்காதவன் பாவப்பட்டான். இனிகுறிக்கப்பட்ட ஆற்றினால் அக்கினியினூர்கையசன்று தின்னுமையா லவர்க்குப் பாவமில்லையே யென்னில் உண்டு; அவருமாம்சங் கொடுவந்தார்க்கு விலைகொடுத்துக் கொள்வோமென நினைந்திருந்தமையிற் கொலையுடன் பட்டுப் பாவமெய்துவரென்க. அன்றியு மாம்சங்கொள்வோமென்னு நினைவாற் கொலை பாவமுண்டு. என்னை, ஒருமகாநகரத்துள்ளாரனைவரு முபாசகராதலிற் பிக்ஷாகாலத்து மண்டையிலிடவேண்டி யாதரவுகொண்டிருந்தா ரவனுமொருவழிப் பிச்சைபண்ணி மீண்டானாயினு மவனுக்குப் பிச்சையிடவேண்டியிருந்தார் யாவரும் புண்ணியம் பெற்ற வாறுபோலக்கொள்க. தின்பவர்க்கு மாம்சம்வர வேண்டுவதல்லது கொலைவேண்டுமோ வெனில், தலைகொடுவந்தார்க்குப் பொருள்கொடுத்துமென் றிருந்தான் கொலை வேண்டினவாறுபோலப் புலால்கொடுவந்தார்க்குப் பொருள் கொடுத்துமென்றிருந்தானுங் கொலைவேண்டினானாகும் என்னை, "தலைகொணர்ந்தார்க்கீதுந் தனமென்றிருந்தான், கொலையுகந் தானாகுமதுபோற்-கொலையுசுந்தா, னன்றருவார்க்கீதும் பொருளென்றிருந்தானுஞ், சான்றுலகமல்லவோதான்" அன்றியும் "கள்வர்வருவது கையறிந்துகொண்டான், களவாளனாவதூஉங் கண்டு-வளவின்றிக், கொன்றுவருதலறிந்தது கைக்கொண்டான், கொன்றவனல்லனோ கூறு" அன்றியுங் காமாநுபவம் பண்ணுவானுக்கு முறையல்லாதாளுழைக் காமவுள்ளம் பிறவாதவாறுபோல மாம்சமுண்டாரெனினுங் குணவான்களாயி

ஞர் நினையாரெனில் முறையல்லாதாளுழைக் காமஞ்செல்லா தென்பதியாதார்கூறினை "ஈன்றாண்மகளுடன் பிறந்தாளாயினுஞ், சான்றோர் தனித்தாயுறையற்க-கான்றருவி, வந்திழியு நாடாவலித்தேயிருக்குமோ, வெந்தீயணைந்நமெழுகு" "ஐம்புலனுந்தாங்கற்கரிதாகையால்" எனவும் "மாத்திராபுத்திராப் பரிசாவாம் மனசிவித்தாசனோ்பவா, பெலவானித்திரியக்கிராமோ, வாஞ்சம் பிச்கிலிமிருசதி" எனவுங் இவைகேட்டறியாயோ, காமபிரீதியில்லையாயினு முள்ளஞ் செல்லுமெனக் கொள்க. அன்றியும் ஸ்திரீக ளுருப்பெற்புச் சட்டமென்றுந் தசைதோனரம்புமுதலிய வென்றும் புறத்துநறிந் தசுசிபாவனை பாவிக்கின்றாய், காமவுள்ளங் கற்றறிபொருட்டன்றே, மாம்சத்திற்றோன்றிய பாலுமத்தோடொக்குமென்னில் அசுசியென் றூனைப்பாவிக்கின்ற நீயும் பாலையுமவ்வாறு சொல்லுகிலை. என்னை, "ஊனை முலைப்பாலினை யொக்கும்" என் றெத்தேயத்தாரு மிழுக்கின்றாரில்லை. மாம்சிம்யாவராலு மிழிக்கப்படுகின்றதன்றோ, "தம்புண்கழுவி மருந்திடுவர் தாம்பிறிதின், செம்புண் பருத்தவரை தின்பர்" எனவும். "உண்ணாமை வேண்டும் புலா அல்பிறிதொன் றன், புண்ண தணர்வார்ப்பெறின்" "விலைப்பாலிற்கொண் டூன் மிசைவதுங்குற்றம்" எனவுமிருத்தலால் மாம்சத்தைப் பாலோடொப்புரைத்த லுலகவிருத்தமாம். சுக்கில சுரோணிதத்தால் வந்தமாம்சஞ் சுத்தமானவாறுபோல மாம்சத்தால் வந்தபாலும் சுத்தமெனிற் பாலானது மாம்சத்தால் வந்ததன்று, பசுவாற் கொள்ளப்பட்ட புல்லுந் தண்ணீரும் பாலாகப் பரிணமித்ததாம். என்னை, வேப்பிலை முதலானவற்றைத்தின்ற பசுவின்பால் கசப்பதூஉஞ் சோறுமுதலாயின புசித்த பசுவின்பாலானது

மிகவும் ரசிப்பதூஉம் மருந்துகுடிப்பவள் முலைப்பால் பிள்ளையினது வியாதியைக்ஷமிப்பிப்பதூஉம் பிறவுங்காணப்படுகின்றமையி னித்தன்மையைக் கண்டுகொண்டு பாலானது மாம்சத்திற் பிறந்ததல்லவென்க. அப்படியல்ல, மாம்சத்திற்பிறந்ததே பால் அந்தப் பாலு மாம்சத்திற் கொக்குமென்னையாகிற், சேற்றிற்பிறந்த தாமரையுஞ் செங்கழுநீரும்போலவுங், கடலின்கண் முத்துப்போலவும், மண்ணின் மரமும் பொன்னும்போலவும், நாவியினிடத்துப் புழுகு சவ்வாது போலவும், மானின்கட் சவரம்போலவும், பாலானது மாம்ஸத்திற் பிறந்ததேயெனினு மந்தமாம்சத்திற்கு வேறுமாய் மேம்பட்டதுமாயிருக்குமெனக்கொள்க. நீரென்னசொன்னாலு மாம்சத்திற் பிறந்த பாலானது மாம்சமே யென்னையானால், முலைப்பால் குடிப்பாரும் பசுவின்பால் குடிப்பாரும் நரமாம்சமுங் கோமாம்சமுந் தின்றாராகவேண்டும். அன்றியு, நீயுங் குழவிப்பருவத்திலே முலைப்பாலுண்டு பிற்பொழுது பசுவின்பாலுங் குடித்ததினாலே யிருவிதமாம்சமும் தின்றவனாகுவை. பாலு மாம்சமுஞ் சரியாமாகில் அப்படிப்பட்டபாலை நீ வழிபடுந் தேவதைக்கு நைவேத்தியம்பண்ணுதலு மபிஷேகம் பண்ணுதலுங் குற்றமாய் முடியவேண்டும். அன்றியு முலகவிருத்தமுமாமென்க. தோலிற்பட்ட நெய் முதலாயின வொழிந்தவோ? பாதிமாம்சத்திற்பட்டாலு மொழியவேண்டுமென்னில், ஜீவனோடுகூடிநின்ற சரீரகமான மாம்சஞ் சுத்தமன்று. என்னை, உள்ளங்கைப்பட்ட நீர் சவத்தின் கைப்பட்ட நீர்போல வசுத்தமென்று கொள்ளப்படாமையினென்க. அன்றியுங் கோமயமுங் கோஜலமுங் கோக்ஷீரமுஞ் சுத்ததிரவியமென் றுலகத்தாராற்கொள்ளப்படும். ஆதலால் மாம்சத்துடன் பாலை யொ

ப்புரைத்த நூலகமலைவாமென்க. கள்ளையு நஞ்சினையும்போல மாம்சமு மேன்மக்களாற் றுறக்கப்பட்டதல்லவோ. மேன்மக்களாவார் தபசிகளன்றோ. உன்னையொழ்யத்துறந்து தபசுபண்ணுவார்களின் மாம்சநன்றென்பாரெங்குளர். உன்னையொழிந்தபன்மக்களு மாம்சமுண்பது நன்றென்றுண்ணார். என்னை, சோமவாரமேகாதசியமாவாசை முதலான விரததினமான சுபதினங்களிலும் பிறவற்றுள்ளுந் தவிர்கின்றாராதலாலே. அன்றியும்புசிப்பதல்லது ஜீவன்களைக் கொல்லவேண்டுமென்னு முள்ளமின்மையி னுன்னையொப்பக்கொலைபாவமிலரென்பது சொல்லுக. அன்றியும், பந்தலிற் றண்ணீர்குடிப்பார் தண்ணீர்வைத்தாரை யிந்தக்கானகத்திற் றண்ணீர்வைத்தார் மிகவும் புண்ணியவான்களென்று மிகவுமகிழ்ந்து வாழ்த்தித் தண்ணீர்வைத்ததற் குடன்பட்டுக் குடிப்பாராதலா லவர்க்குநன்மை யேறினாற்போல, மாம்சந்தின்பான் சொன்றுசொணர்ந்தானைப்பிரியப்படுத்தின்னுமாதலினிவனுக்குப்பாவமென்க "கோடாதகோலாய் கொடிதாயமாதவத்தை விடாது நூறாண்டுமேனின்று - வாடாது, செய்தவனு மூனைன்று தின்னனுமொப்பாகும், கைதவமன்றென்காணது" 'ஏழ்கடல்சூழ்ஞாலமதை யீந்தவர்க்குமெஞ்ஞான்றுந், தாழ்வுடையூனுண்டி தவிர்ந்தவர்க்கும் - வாழ்வுடைய, புண்ணியந்தானொக்குங்காண் போர்வேந்தே யென்றுரைத்தா, னெண்ணிகந்த சிராமனெடுத்து" "மேவியதன்னூன்வளர்ப்பான் வேறொன்றினூனுகரும், பாவியிறந்தாற்படுநரகின் - மேவப், படுமென்று நாரதன்றான் பண்டுரைத்தான்பார்மேல், வடுவொன்றுமில்லாய்மதி." இறவுளவர்சான்றோரிளிவரவுந்தூய, விறவுளவர்வூனலானும்-பறைகறங்கக், கொண்டானிருப்பக்

கொடுக்குழையா டெய்வமுமொன், றுண்டாகவைக்கற்பாற்ற ன்று" "தன்னூன்பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பா, னெங்ஙனமாளுமருள்." 'உண்ணாமையுள்ள துயிர்நிலையூனுண்ண வண்ணாத்தல்செய்யாதளறு." "பிணமென்றுதாவி பிரிந்தவுடலூனை, யுணவென்பேறத்தானுரை." "கொன்றவன்குறைத்தவன் கொணர்ந்துவிற்றவ, னொன்றியபொருள்கொடுத்துவந்து கொண்டவ, னன்றடுமடைமகனுவிற்பெய்தவ, னென்றிவராறுவருநரகிலெய்துவார்." என்பனவு மற்றும்பிறவாற்றானுமறிந்து நீ சொன்னவையெல்லா மாகாவெனக்கொள்க. என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவர், எற்புச்சட்டமென்றுந்தசையென்று மூலையசுசிபாவனைபண்ணுதல் புத்தனுக்குண்மையாதல் என்னுமலை யசுசியென நாணியென்றதுவூன்றின்றல் கொலைக்கேதுவென்பது "தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனில்யாரும், விலைப்பொருட்டா லூன்றருவாரில். என்பதனுலுணர்க என்றார்.

குடைநிழலுங்கண்ணாடிச் சாயையும்போற் பிறப்புக் கொள்ளுமுணர்வென்னிற் காரணமழியவழியு, மடைநிழல்போற் கந்தமைந்துமழியுமுனக்கிங்கே யவையழிந்தாலருங்கதிபினணையுமுணர்வின்று, மிடைகனவிலெழுமுணர்வு நனவுணர்வாறுற்போ லெழுமுணர்வு கன்மத்தானினைந்துகதியென்னின், மிடைசினையுமந்தனுமுட்டையு முயிர்விட்டக்கான் மேவுவதெவ்பிறப்பினுடல் விடாதுகன்மவுணர்வே. (கஅ)

(இ-ள்.) குடைநிழலுங் கண்ணாடிச் சாயையும்போற் பிறப்புக்கொள்ளுமுணர்வென்னில். எ-து. குடையின்கட்

குடைபோல நிழறோன்றுந்தன்மையும் கண்ணாடியிற் காட்டின வுருப்போல வுருத்தோன்றுந் தன்மையும்போலவு மிக்காயம் விட மற்றொருகாயத்தை யெடுத்துக்கொள்ளுமென்று புத்தநீ கூறின்,—காரணமழிய வழியுமன்றே நிழல்போற்கந்தமைந்து மழியுமுனக்கிங்கே. எ-து. குடையுங்கண்ணாடியுமாகிய காரணங்கெட வதிற்பொருந்திய நிழலாகிய காரியங்கெட்டாற் போலக் கந்தங்களைந்துமுனக்கிவ்விடத்தேகெடும். அவை கெடவே யிந்திரியங்காரணமாகக் காரியப்படுமறிவு மிங் கேயழியுமாகையால்,—அவையழிந்தா லருங்கதியினையுமு ணர்வின்றாம். எ-து. காரணமாகிய கந்தங்களைந்து மழிந் தாற் கதியையடையுமறிவில்லையாம்,— இடைக்கனவிலெழுமு ணர்வு நனவுணர்வானாற்போலெழுமுணர்வுகன்மத்தாலினை ந்து கதியென்னில். எ-து. கனவிடையிலெழுந்திருக்குமறிவு மெய்யறிவாய்ப் பரிணமித்தாற்போலக் கன்மங்கட்கீடாக நினைந்துண்டாமுணர்வு கதியிற்கூடுமென்று நீ கூறின்,— மிடைசினையுமந்தனு முட்டையு முயிர்விட்டக்கான்மேவுவ தென். எ-து. இந்திரியவறிவுகெட்டாற் றம்மினெருங்கிய சினையும் பிறவிக்குருடனு முட்டையு முயிர்போனாற்பெறுங்க தியாது. அதனால்,—பிறப்பினுடல் விடாது கன்மவுணர்வே. எ-து. பிறப்பினுடலைக் கன்மவுணர்வு விடாதுகாண். எ-று. கன்மவுணர்வென்பது ஆன்மஞானம். சினையும் அந்தகனும் முட்டையும் பூர்வகன்மத்துக்கீடாகத் தொழின்மறந்து கிடக் கையாற் கதியடையாரென்பதாயிற்று. கதியென்றது நற்பி றப்பு.

இச்செய்யுள் கன்மமுமுணர்வுங்கெட்டுக் கதியடையு மென்பதனை மறுத்துக் கூறிற்று. (௫௮)

சாயையுங் காரணமும்போல வென்பை, க்ஷணபங்க மாதலாற் காரணமுங் காரியமுமில்லா. மோக்ஷமு மோக்ஷத்தையடையும் விஞ்ஞானமு மழியும் கனவுணர்வு மயக்கவறிவு நனவுணர்வதென வுடையவாதலா லுனக்குப்பொருந்து மதுபோ லிருப்பதொழிய வுண்மையிற் பொருந்தாதாம். சினைமுட்டைகட்கறிவு பிரகாசமில்லாமையாற் சாயையடையமாட்டா வெனக்கொள்க. என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவர் கனவினிடை யெழுமுணர்வு நனவுணர்வானாற்போல். எ-து. கனவிலிடத்துண்டாகு மற்பவறிவு அக்கனவு கெட்டுந் தான்கெடாமல் நனவறிவானாற்போல, — கன்மத்தாலினைந் தெழுமுணர்வுகதியென்னில். எ-து. கன்மத்தினாலினைந்துண்டாமறிவு அக்கன்மங்கெட்டுந் தான்கெடாது நின்று பிறப்பாற் பொருந்துமென்று சொல்லில்,—மிடைசினையு மந்தனு முட்டையு முயிர்விட்டக்கான்மேவுவ தெப்பிறப்பினுடல். எ-து. மிகுந்தவறியாமையையுடைய சூலு மூடனு முட்டையு மரணத்தையடைந்தால் அவ்வுயிரறிவில்லாமையா லெந்தப்பிறப்பினுடலைப் பொருந்துவது. எ-ம். குடையுங் கண்ணாடியு மறிவுக்குவமை. நிழலுஞ் சாயையும் பிறவிக்குவமை. கதி-பிறப்பு. எ-ம். கூறினர்.

ஐந்துகந்தஞ்சந்தானத் தழிதல்பந்ததுக்க மறக்கெடுகைமுத்திபின்பமென்றறைந்தாய்கந்த, மைந்துமழிந்தான்முத்தியணைபவர்யாரென்ன வணைபவர்வேறில்லையென்றுயார்க்குமுத்திபின்ப, மைந்தினுணர்வினுக்கென்னிலழியாதவுணர்வுண்டாகவேயவ்விடத்துமுருவாதிகந்த, மைந்துமுளவாமதுவும்பந்தமாகி யரந்தைதருமுத்திபின்ப மறிந்திலைகாணீயே. (ரு கூ)

இ-ள்.) ஐந்துகந்தஞ் சந்தானத்தழிதல்பந்ததுக்க மறக் கெடுகைமுத்தியின்பமென் றுறைந்தாய். எ-து. கந்தங்களைந் தும் தொடர்ச்சியிலே சேட்டைகெடுதல் பந்ததுக்கமென்று மவை கற்பூரதீபம்போலச் சேரக்கெடுகைமுத்தியின்பமென் றும் புத்தநீ கூறினாய்,—கந்தமைந்து மழிந்தான் முத்தியணை பவர்யாரென்னவணைபவர்வேறில்லை யென்றாய். எ-து. கந்த மைந்துங் கெட்டால் முத்தியிற் செல்வார்யாரென்றுழிச் செல்வாரொருவருமில்லையென்று கூறினாய், — ஆர்க்குமுத்தி யின்பம். எ-து. முத்திபெறுவாரில்லையாயின் முத்தியின்பம் யாவர்க்கு,—ஐந்தினுணர்வினுக்கென்னில். எ-து. கந்தங்க ளைந்திற்குமென்றுமறிவிற்கென்று கூறின், — அழியாதவுணர் வுண்டாகவே யவ்விடத்து முருவாதிகந்தமைந்து முளவா மதுவும் பந்தமாகியரந்தைதரு . முத்தியின்ப மறிந்திலசா ணீயே. எ-து. மனத்தாலறியுமறிவுகெடாதிருக்குமாயி லவ் விடத்திலு முருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞான மெ ன்னுங் கந்தங்களைந்து முண்டாதல்வேண்டும். அவையுண் டாகவே முத்திடத்திலும் பந்ததுக்கமுண்டாய்க் கிலேசத் தையுந்தரும். ஆதலால் நீ மோக்ஷசுகத்தையறிந்திலை யதனைக் கேட்பாயாக. எ-று. கேட்பாயாகவென்ற தொடர்ச்சி பின் னர்வருஞ் செய்யுளின் கருத்துப்பற்றி.

இச்செய்யுள் கந்தங்களைந்தினறிவே யறிவுமாய் மோக்ஷ சுகத்தை யடையுமென்பதனை மறுத்துக் கூறிற்று. (௩௧)

பஞ்சகந்தங்களு மொழிவறக்கெடுகை மோக்ஷமாகில், உருவகந்தத்தில் புத்தருடைய பல்லுமென்பு மின்றுமிருக்க வவற்றைத் தாடகையாழ்வாரென்று நீ பூஜிக்கையாற் கெட்ட

தில்லை. இவ்வுருவகந்தங் கெடாதபடியினாலே மற்றுள்ள கந்தங்களுக்குங் கேடில்லையாதலா லினைக்கு முத்தியுங்கூடாமற் பந்தமாயிற்றெனக்கொள்க. "கந்தமைந்துங் கடந்தோனீ", என்றவுனது தோத்திரமும் புருஷனைக்காட்டிற்று. என்றார் ஞானப்பிரகாசர்.

அநாதிமுத்தனாய்ப் பரனாயசலனாயெல்லா வறிவுதொழிலநுக்கிரகமுடையவரன்கன்ம, நுனாதிகமற்றொத்தவிடத்தேசத்திநிபாத நுழைவித்து மலங்களெல்லா நுங்கநோக்கி, மனாதிகரணங்களெல்லா மடக்கித்தன்னைவழிபடுநல்லறிவருளி மாக்கருணைக்கையா, லினாதபிறப்பினினின்றுமெடுத்துமாறா வின்பமுத்திக்கேவைப்பனெங்கண் முத்திபிதுவே. (ஈ0)

(இ-ள்.) (அநாதி—இதுவே.) எ-து. அநாதியிலேமலாகிதனா யெப்பொருட்குமேலாய்ச் சலநமில்லாதவனுமாய்ச் சர்வஞ்ஞத்துவமுஞ் சர்வகிருத்தியமுஞ் சர்வானுக்கிரகமுமுடையனாகிய பரமேஸ்வர னான்மாக்கள்செய்த புண்ணியபாவ மிகுதிக்குறைவறத் துலையொத்தவிடத்துக் குருமூர்த்தியாயெழுந்தருளிச் சத்திநிபாதம்பதிவித்து மலங்கள்கெடத் திருக்கண்சாத்தியருளி மநமுதலாகிய வுட்கரணங்களையு மிந்திரியமுதலாகிய புறக்கரணங்களையுங்கெடுத்துத் தன்னைவழிபடுநால்வகையாகிய வழிபாட்டையுமருளி மிகுத்தகாருண்ணியக்கையாலே பொல்லாப்பிறவியில் வீழாமலெடுத்தொழியாதவின்ப முத்தியிலேவைத்தருளுவன். இதுவே யெங்கண் முத்தியாகையால் நீயுமிவ்வழியினின்று முத்தியின்பத்தையநுபவிப்பாயாக. எ-று.

இச்செய்யுள் பௌத்தரிற் சௌத்திராந்திகன்மதத்தை மறுத்து மோக்ஷசுகங்கூறிற்று. நூனுதிகம், அடிநோக்கி நுனுதிகமென விகாரப்பட்டது. (௬௦)

"இருட்டருதுன்பப் படலமறைப்ப மெய்ஞ்ஞானமென்னும், பொருட்டருகண்ணிழந் துண்பொருணாடிப் புகலிழந்த, குருட்டருந்தம்மைப் பரவக்கொடுநரகக்குழிநின், றருட்டருகை கொடுத்தேத்துமையாற னடித்தலமே." எ-ம். "ஈண்டியமாயாவிருள்கெட வெப்பொருளும் விளங்கத், தூண்டியசோதியை மீனவனுஞ்சொல்ல வல்லனல்லன், வேண்டியபோதே விலக்கிலைவாய்தல் விரும்புமின்றோள், பாண்டியனாரருள் செய்கின்ற முத்திப்பரிசிதுவே." எ-ம். "அவமாயதேவரவகதியிலழுந்தாமே, பவமாயங்காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி, நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து, சிவமானவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ." எ-ம். "இருவினை நேரொப்ப வின்னருட்சத்தி, குருவெனவந்து குணமல நீக்கித், தருமரன் ஞானத்தாற் றன்செயலற்றுப், பெருமல நீங்கப் பிறவாமை சுத்தமே" எ-ம். இப்படிச் சொல்லாநிற்குந் தேவாரதிருவாசக திருமந்திரத்தினுங் கண்டுகொள்க. "ஆசையுற்றுழல்சூகரங்க ளசுத்தமேவியளைந்துதின், றேசுகித்தனவாயிடுஞ்சுக மேழையோடுறுமின்பநீ, மாசதற்றொளிர் சுத்தநித்த வளந்தருஞ் சுகவாரிகா, ணீசனுக்கடிமைத்திறத்தினியைந்துநாம் பெறுமின்பமே." என்றிப்படி யுலகாயதனென்னும் பாமததூஷணமுந் தன்மதநிறுப்புங் கூறின்முறைபோல வீண்டு மம்முறைகூறியருளினாரென்க. என்றார் ஞானப்பிரகாசர்.

சௌத்திராந்திகன் மதமறுதலை முற்றிற்று.
பாயிர முட்பட செய்யுள்—௧௩௩

யோகாசாரன்மதம்.

போதமேபொருளாய்த்தோன்றும் பொருளதாயெ
மூலாற்போதம், வாதனையதனாற்கூடி வருதலால்வடி
விலாமை, யாதலாற்கனவேபோலுஞ் சகமுளதறிவே
யாமென், றோதினனேதானுய வுணர்வினால்யோகா
சாரன். (க)

(இ-ள்.) போதமே பொருளாய்த் தோன்றும் பொருள
தாயெழலாற் போதம் வாதனையதனாற் கூடிவருதலால் வடிவி
லாமையாதலாற் கனவேபோலுஞ் சகம். எ-து. அறிவேயிந்
திரியங்களுமாய்த் தோன்றப்பட்ட வுருக்களுமாய் வருதலானு
மவ்வறிவிந்திரியவாதனையினாலே கூடிவருதலானு மவ்வறிவ
ரூபமாதலானும் அநித்தியரூபமாகிய பிரபஞ்சம் சுவப்பனம்
போலும்,—உளதறிவேயாமென் றோதினனே தானுயவுணர்
வினால் யோகாசாரன். எ-து. அந்நுவயம். சாத்திரத்தை
யதிகரியாதவறிவினையுடைய யோகசாரன் சௌத்திராந்திக
னின் வேறுபட்டு இந்திரிய வாதனையா லறிவுண்டாமென்றும்
பிரபஞ்சங்கனவேபோலு மென்று மறிவேயுள்ளதென்றுங்
கூறினன். எ-று.

இச்செய்யுள் யோகசாரன்மதங் கூறிற்று. (க)

இவன் முற்கூறிய சௌத்திராந்திகன்மதமும் பக்ஷமா
கக்கொண்டு பின்னும் விசேஷவுணர்வாகச்சொன்னா னெனக்
கொள்க என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவர் இவன்
சௌத்திராந்திகன் கோட்பாடெல்லா முட்கொண்டு அவற்று

ளறிவேயுள்ளது, மற்றப்பொருள்களெல்லா முருவமாக வில்லை, அறிவு வாதனையின் லருவமாகவுண்டென்று கொண் டவாறு காண்க என்முர். சிலர் யோகாசாரனை மகாயானிகள் என்று கூறியிருக்கின்றனர்.

யோகாசாரன்மத முற்றிற்று.
பாயிர முட்பட செய்யுள்—கஙச.

யோகாசாரன் மதமறுதலை.

போதமுந்தவிரவேமுேர்வாதனை புகன்முய்போதம்,
வாதனையிரண்டுண்டென்னுய் போதம் வாதனையுமெ
ன்னிற், காதலாற்பொருளினேடு கலந்தபினெழுங்க
ருத்தாம், வாதனைகனவுகண்டபொருளின்மேல்வருங்
கருத்தே. (க)

(இ-ள்.) போதமுந் தவிரவேமுேர் வாதனைபுகன்முய். எ-து. யோகாசார நீ யறிவுமொழிய வேருெருவாதனை யுண் டென்று சொன்னுய். அப்படியாயின்,—போதம் வாதனை யிரண்டுண்டென்னுய். எ-து. போதமென்றும் வாதனை யென்றுமிரண்டுண்டென்று கூருய்,—போதம்வாதனையுமென் னில். எ-து. வாதனை தானுமறிவேயென்று கூறின்,—காத லாற்பொருளினேடு கலந்தபி னெழுங்கருத்தாம்வாதனை. எ-து. அறிவுசத்தாதி விடயத்திலே கலக்கவேண்டுமென்னும் ராகத்தாற் கலக்க வக்கலப்பிலே பலகாற் செலுத்துதல்காண் வாதனை. ஆகையால் வாதனையறிவன்று,—கனவுகண்ட பொ

ருளின்மேல் வருங்கருத்தே. எ-து., கனவாவது நனவிற்கண்ட பொருளின்மேற் கருத்துச்செலுத்துவதாதலாற் பிரபஞ்சங் கனவுமல்ல, அதனால். நீ கூறியது மித்தையேயாம். எ-று. மித்தை-பொய். (க)

அறிவும் வேறு, வாதனையும் வேறு. மெய்யாகக் காணப்படும் பிரபஞ்சத்தைக் கனவுபோற் பொய்யென்றல் கூடாது. என்பதாம் என்றார் ஒருரையாசிரியர்.

அறிவதேபொருளதாயின கஞ்சடமென்னவேண்டும்,
பிறிபொருளாகும்பேதித் திதம்பிரபஞ்ச மென்னி,
லுறுபொருளுருவந்தோய்ந்தா லுணர்வுமவ்வுருவாய்
நிற்குஞ், செறிபொருளதுவாய்நிற்குந்தெளிபளிங்க
துவேபோல. (உ)

(இ-ள்.) அறிவதே பொருளதாயின் எ-து. யோகாசார நீ கூறியவறிவுதானே பிரபஞ்சரூபமென்று கூறின்,—அகஞ் சட மென்னவேண்டும். எ-து நானுடம்பென்று சொல்லவேண்டுஞ் சடங்கள்,—பிறிபொருளாகும். எ-து அறிவுமுருவும் வேறுபாட்டையுடையன,—பேதித்திதம் பிரபஞ்சமென்னில் எ-து. அறிவுமுருவும் வேறுபாட்டையுடைத்தாமென்னி லுருவைநீங்கினின் றறிவுதானே நான்பொருளென்றுகூறும் பகுதியாம்,—உறுபொருளுருவந்தோய்ந்தா லுணர்வுமவ்வுருவாய் நிற்கும் எ-து. அறிவுமுருவு நீகூறியதன்றி யறிவுருவத்தோடு கூடின லுருவந்தானாய்நிற்கும் அஃதென்போலவென்னில்,—செறிபொருளதுவாய்நிற்குந் தெளிபளிங்கதுவேபோல.எ-து அடுத்தவன்னத்தோடு கூடியபளிங்கு மவ்வன்னத்தானாகத் தோன்றுமாபோல வறிவுருவத்தோடு கூடின லுருவந்தானாக நிற்குங் காண். எ-று.

இச்செய்யுளிரண்டும், யோகாசாரன்மதத்தை மறுத்துக் கூறியதாம். (உ)

பளிங்குமதனை யடுத்தபொருளும் வேறானாற்போல வறிவும் பொருளும் வேறென்றறிக. அன்றியும் அறிவான தருபமாயுள்ளேயிருக்கும். பொருளான துருவாய்ப்புறம்பே யிருக்குமாதலாலும் வேறெனக்கொள்க. இவனும் பிடகசாத்திரத்திற் றன்மிதன்மத்தைப் பேதித்துநின்று சொல்லாநிற்பனெனக்கொள்க. "போதம்பொருளேற் பொருள்விரும்பினான் வனத்தும், வாதைப்படலேன் பொய்வந்து." "காண்டலறு மானங் கதைக்கும் விருத்தங்கா, ணீண்டுநீ சொன்னவிழுக்கு" "போதமும் வேறுபொருள்களும் வெவ்வேறு, பேதாய் நின்கொள்கை பிழை." என்னுந் திருவாக்கினுங் கண்டுகொள்க என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவர். அறிவதே பொருளாதாகில். எ-து. அறிவுதானே அறியப்படும்பொருளாயிருக்குமென்று யோகாசார நீ சொல்லில்,—அகங்கடமென்ன வேண்டும். எ-து. ஒருவன் கடத்தையறிந்தகாலத்து நான்கடமென்று சொல்லவேண்டும். அவ்வாறின்மையால்,—பேதித்திதம் பிரபஞ்சமென்றல் பிறிபொருளாகும். எ-து. வேறுபடுத்திது பிரபஞ்சமென்றறிந்தால் அறிவு மறியப்படும் பொருளுமொன்றாகாது வேறாகும்பொருளாம் எனப்பாடபேதமும் தெளிபொருளும் விளங்கவோதினர். இதம் என்னும் வடமொழி இது என்னும் பொருட்டு.

யோகாசாரன் மதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—கஙசு

மாத்மீகன் மதம்.

அவயவம்பொருளாய்த்தோன்றுமவயவமொழிந்தாற்பின்னை, யிவைபொருளென்னவேறென்றிலாமையாற்பொருள்களின்று, மவைபொருளிலாமையாலேயறிவுமின்றாகுமென்று, நவைதருமொழியினாலே நவிலுமாத்மீகன்றானே. (க)

(இ-ள்.) அவயவம் பொருளாய்த்தோன்றும். எ-து. இந்திரியம்பத்தும் பொருளாய்த்தோன்றும்,—அவயவமொழிந்தாற் பின்னை யிவைபொருளென்ன வேறென்றிலாமையாற் பொருள்களின்றும். எ-து. இந்திரியங்கள்கெட்டாற் பொருளிவையென்றறிதற் கிலாமையாற் பொருளுமில்லையாம்,—அவை பொருளிலாமையாலே யறிவுமின்றாகும். எ-து. அந்தப்பொருள்களிலாமையினாலே பொருளைக்கூடிநின்றறியு மறிவுமில்லையாம்,—என்று நவைதருமொழியினாலே நவிலுமாத்மீகன்றானே. எ-து. என்றிப்படிக் குற்றத்தைத்தருஞ் சொல்லாலே மாத்மீகன்சொல்லுவான். எ-று. பொருளென்பது சரீரம், அவயவியில்லையென்பது கருத்து.

இச்செய்யுள் மாத்மீகன்மதங்கூறிற்று. (க)

சௌத்திராந்திகன் மதத்திற்சிறிதுகொண்டு அறிவு மறியப் படும்பொருளுஞ் சூநியமாதலி னுலகஞ்சார்பிற்றோன்றுவதுமில்லை என்பதவனுட்கோள் என்றோருரையாசிரியர்.

மாத்மீகன்மத முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—கஙஎ.

மாத்மீகன் மதமறுதலே.

கடத்தினிலவயவங்கள் படத்தினிற்புகாமற்காத்தும்,
படத்தினிலவயவங்கள் கடத்தினிற்புகாமற்கொண்டு,
மிடத்தினினிற்குமாகுமவயவிபிரண்டுங்கூடி, யுடைத்
தொருபொருளுண்டாகப் பொருளுமுண்டுணர்வுமு
ண்டே. (க)

(இ-ள்.) கடத்தினிலவயவங்கள் படத்தினிற்புகாமற்கா த்தும் படத்தினிலவயவங்கள் கடத்தினிற்புகாமற்கொண்டு மிடத்தினினிற்குமாகுமவயவி. எ-து. மாத்மீக நீயவயவமே பொருளாவது அவயவியில்லே யென்றுகூறிளுய் கடாதிகளி னவயவங்கள் பாடாதிகளிற்செல்லாமை நீக்கிக்கொண்டும், படாதிகளினவயவங்கள் கடாதியிற்செல்லாமை நீக்கிக்கொ ண்டும், அவ்வவ்வவயவங்களிலே யவ்வவ்வவயவிநிற்குமா கையால்,— இரண்டுங்கூடி யுடைத்தொருபொருள். எ-து. அவயவமு மவயவியுங்கூடியே யொருபொருளாக வுண்டா வது,—உண்டாகப்பொருளு முண்டுணர்வுமுண்டே எ-து. அப்படியுண்டாகவே யதுபோலப் பொருளாகிய சரீர முண்டுணர்வுமுண்டென் றறிவாயாக. எ-று கடாதிகட்கவய விமண். படாதிகட்கவயவி நூல். பொருள் அவயவம். உணர்வு அவயவியாகியவான்மா. (க)

கடத்தவயவம் படத்திற்காகா படத்தவயவம் கடத்திற் காகா. அந்த வவயவங்களிலே யந்தந்த வவயவியே யுண்டா யிருந்துதோன்றும். இஃதன்றி யவயவமே பொருளாய்த் தோன்றுமாளுல் ஒருபொருளுக்கான வவயவத்தில் எல்லாப்

பொருளுந்தோன்றவேண்டும். அஃதில்லாமையா லவயவந் தானே பொருளல்ல, அவயவம் வேறு பொருளும் வேறெனக் கொள்க. என்றார் ஞானப்பிரகாசர்.

கருவியுமொளியும்வேறுகருதிடுங்கருத்துநிற்கப், பொ
ருள்புணராமையாலே போதம்வந் தெழுவதின்று,
மருவிடும்பொருளுண்டாக வந்தெழும்புந்தியானற்,
பொருளுளதாகுமாகப் போதமுமுள்ளதாமே. (உ)

(இ-ள்.) கருவியுமொளியும்வேறு கருதிடுங்கருத்து நிற்கப் பொருள்புணராமையாலே போதம்வந்தெழுவதின்றும். எ-து. இந்திரியங்களு மிந்திரியவிடயமாகிய சத்தாதிகளு மதனாற் காணப்படும் பொருள்களை வேறுபடவாராயு மந்தக்கரணங்களு முண்டாய்நிற்கவு மான்மாவந்துகூடா ததுகொண் டொருபொருளையுந் துணிந்தறியுமறிவில்லையாம்,—மருவிடும் பொருளுண்டாக வந்தெழும்புந்தியானல். எ-து. இந்திரிய விடயங்களோடு மந்தக்கரணங்களோடுங் கூடிநின்றறியுமான் மாவுண்டாக வறிவுமுண்டாமாகையால், — பொருளுளதாகு மாகப் போதமுமுள்ளதாமே. எ-து. ஆன்மாவுண்டாகும். அஃதுண்டாகவே யறிவுமுள்ளதாம். எ-று. இவ்விடத்துப் பொருளென்றதான்மாவை.

இச்செய்யுளிரண்டு மாத்மீகன்மதத்தை மறுத்துக் கூறிற்று.

பொருள்புணராமையாலே என்பதன்முன் சுழுத்தியில் எனவருவித்துரையுணர்த்துக்கொள்க.

இவ்விரண்டு செய்யுளுஞ் சூநியமென்பதை மறுத்து அவயவத்திற்கு வேறாயவயவியுமறிவு முண்டென்று கூறிற்று.

மாத்மிகன் மதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—௧௩௧.

வைபாடிகன் மதம்.

அரிசனநூறுகூடவருணம்வந் தெழுந்தாற்போல, விரிசகம்பொருள்கண்ஞானம் விரவிடமேவித்தோன் றுந், தெரிசனமிதுவேயென்று தெளிந்திடுந்தேரர் வீடு, பரிவொடுமடைவீரென்று பகரும்வைபாடிகன் ருன். (௧)

(இ-ள்.) அரிசனநூறுகூட வருணம்வந் தெழுந்தாற் போல. எ-து. மஞ்சளுஞ் சுண்ணம்புங்கூட வோர்சிவப்புத் தோன்றுமாபோல,—விரிசகம் பொருள்கண் ஞானம் விரவிட மேவித்தோன்றும். எ-து. காணப்பட்டபொருள்களு மிந்திரிய விடயமான வறிவுங்கூடினபோது பிரபஞ்சப் பொருள்க டோன்றும்,—தெரிசனமிதுவேயென்று தெளிந்திடும். எ-து. இதுவே ஞானதெரிசனமென்று தேறுவீராக,—தேரர் வீடு பரிவொடுமடைவீரென்று பகரும்வை பாடிகன்ருன். எ-து. அப்படித்தெளிந்திராயின் புத்தர் வீடு தருமின்பத்தை யடைவீரென்று பரிவோடுஞ் சொல்லாநிற்பன், வைபாடிகன். எ-று.

இச்செய்யுள் வைபாடிகன் மதங் கூறிற்று. (௧)

இவனுமாத்மீகனும் பௌத்தர்மதபேதகரெனக்கொள்க. என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவர், பொருள்கண்ஞானம் என்பதனைப்பொருள்ஞானங்கள் எனப்பாடமோதி, கடம்படமுதலிய பொருள்களு மவற்றையறியுமறிவும்,—விரவிட. எ-து. கலக்க,—விரிசக மேவித்தோன்றும். எ-ம். சௌத்திராந்திகன் கோட்பாட்டிற் சிறிதுகொண்டு ஞானமும் பொருளுமிசிரமாயிருப்பதே யுலகமென்று சொல்வதவன் கருத்து. எ-ம். கூறினர்.

வைபாடிகன்மத முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—கசா

வைபாடிகன் மதமறுதலே.

பொருளதுபுறம்பதாகும் போதமந்தரமதாகுந்,
தெருளிடினிரண்டுஞ்சென்று சேர்ந்திடுமாறதின்று,
மருவுணர்வுருவஞேய மாதலினாலுங்கூடா, வுருவருவுடையவைபாடிகற் கினிமாற்றமின்றே. (க)

(இ-ள்.) பொருளது புறம்பதாகும் போதமந்தரமதாகுந் தெருளிடி னிரண்டுஞ்சென்று சேர்ந்திடுமாறதின்றாம். எ-து. அறியப்படும் பொருள்புறத்ததாகும், அறியுமறிவகத்ததாகும். ஆதலாற் றெளியவறியுமிடத் திரண்டுஞ்சென்றுகூடுந்தொழிலில்லையாம்,—அருவுணர்வுருவஞேய மாதலினாலுங்கூடா. எ-து. அன்றியு ஞானமாகியவறி வருபமாகையாலும், ஞேயமாகிய பொருளுருவமாகையாலுங் கூடா,—

உருவருவுடைய வைபாடிகற்கினி யாற்றமின்றே. எ-து. உருவுமருவுங்கூடுமென்ற வைபாடிகனுக்கினிச் சொல்லுமுத்தரமில்லையாம். எ-று. உணர்வுடையனென்ற திழிவின்கண் வந்தது. பொருள்-பிரபஞ்சம், ஞேயமுமது.

இச்செய்யுள் வைபாடிகன்மதத்தை மறுத்துக் கூறிற்று.

உருவருவுடையவைபாடிகன். எ-னே. மருளுணர்வுடைய வைபாடிகன் எனப்பாடமோதிப் பிராந்திஞானமுடைய வைபாடிகன். எ-ம். "இல்லையதீதத்திலெண்ணமுலகப்போ, தில்லையோ சொல்லாயெனக்கு." எ-ம். "அபிதனப்பொருளென்றிப் பொருளென்றுழியக்கணிகமடங்கலும்." எ-ம். க்ஷணபங்கமாத்திரமே நிலையுடையன. எ-ம். ஞானமொன்றுமே பொருள். எ-ம். விவகாரவகையான்மா. எ-ம். அவாச்சியமேபொருள். எ-ம். சூநியமேபொருள். எ-ம். இப்படிப் பலவாகச்சொல்வரெனக்கொள்க. எனக்கூறினர் ஞானப்பிரகாசர். மற்றொருவர், "இப்படியிறைவர்தம்பாலெய்திய வரங்களாலே, முப்புரத்துள்ளாரெல்லா முவுலகழிக்குமாற்ற, றப்புதல் குறித்துக்கண்ணன் சார்ந்து நாரதர் தம்மோடுஞ், செப்பியமதங்களுன்குந் தீர்ந்திடவுரைத்தவாறே." என்னும் ஞானாவரண விளக்கத்திருவிருத்தத்தாற் புத்தர்மத வரலாறு காண்க என்றார்.

வைபாடிகன் மதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—௧௫௪.

க்ஷமணரில் நிகண்ட்வாதி மதம்.

வாசமாமலரசோகுபேணிமறை நீதியோடுமலையுந்தவத், தாசையாலுடையகன்று மாசினையடைந்தில் வாழ்தருமறத்தினிற், பூாசமானதுதவிர்ந்துபண்டிபடவுண்டுபாயினொடுபீலிமே, னேசமாயவைதரித்துளோர்களினிகண்டவாதியை நிகழ்த்துவாம். (க)

(இ-ள்.) (வாசமா—நிகழ்த்துவாம்.) மணமும் வண்டும் பொருந்திய மலர்களையுடைய வசோகவிருக்ஷத்தைத் தெய்வம்போலப்பேணி வேதமார்க்கத்தோடு மறுதலைப்பட்டுரைக்குந் தவத்தினையாசைப்பட்டு உடுக்கையைக்கைவிட்டுக் குளிக்குந் தன்மையின்மையி னழுக்கடைந்து பிரமசாரியமுதலாகிய வாச்சிரம மூன்றுக்கும் பற்றுயிருக்கிற கிருகத்தாச்சிரமத்தை விட்டு வயிறு பெருக்கவுண்டு பாயுடுத்துப் பீலிகைப்பிடித் திங்ஙனஞ் சொல்லியவற்றிலே சிநேகமா யவையிற்றைத் தரித்துளோர்களின் நிகண்டவாதி மதத்தைச்சொல்லுகின்றேன். எ-று.

இச்செய்யுள் நிகண்டவாதிமதங் கூறுவா னவனித்தன்மையனென்று கூறிற்று. வாசமாமலர், வாசம்-நாற்றத்தையும், மா-வண்டையுமுடையமலர். கண்டம்-உடை. நிகண்டம்-உடையின்மை. அஃது க்ஷமணரில் நிகண்டவாதியெனக் கொள்க. ஆசீவகர்க்கு உடையுளவாம். மறைநீதியோடு மலையுந் தவம் யக்கியாதி கர்மங்கொள்ளாமையாலுங் கத்திருவாதஞ் சொல்லாமையாலும் பஸ்மருத்திராக்ஷமில்லாமையாலு மெனக்கொள்க. (க)

நேசமாயவைதரித்துள்ளோர் மூவர். அவர், நிகண்டவாதி, ஆசீவகன், அருவாதி என்போர். நிகண்டவாதி. எ-து. காரணப்பெயர். நிகண்டவாதி மதத்திற்கு நிகண்டவாதி என்றது ஆகுபெயர். "நவிவிரும்பி நிலைத்தியாவருநாளுமி யாகமியற்றியே, மனிதராகியும் விண்ணடைந்திட வருதல் கண்டு தவிர்த்திட, இனிவைதிகமாக மூன்றினுமேற்றமாமம ணர்மத, முனிகணந்தொழுநான் முகன்சொலு மூன்றுபேதமு மோதுவாம்." என க்ஷமணர் மூவரு மவர் வரலாறுங் கண்டு கொள்க. என்றுரோருரையாசிரியர்.

ஈறிலாதனவநந்தஞானமுத லெண்குணங்களொனு மொண்குண, மாறிலாதமதிமேவுசீதமென மன்னி வானவர்வணங்கவே, வேறுலாவுகுண ஞானமாவ ரணியாதியெட்டினையும்விட்டசீ, ரேறுபான்மையுடை நீடுவாழருகனெங்களுக் கிறைவனென்றனன்.

(இ-ள்.) ஈறிலாதன வநந்தஞானமுத லெண்குணங்க ளொனு மொண்குண மாறிலாத மதிமேவு சீதமென மன்னி. எ-து. கேடில்லாதனவான் வநந்தஞானமுதலிய நற்குண மெட்டையு மதிக்குக் குளிர்ச்சி தன்னிடத்திலே தோன்றினு லொப்பத் தோற்றுவித்து,—வானவர்வணங்கவே வேறுலாவு குண ஞானமாவரணியாதி யெட்டினையும் விட்டசீர். எ-து. அந்நற்குணங்களோடு கூடாத பரந்த தீக்குணங்களென்று சொல்லப்பட்ட ஞானவரணியமாதியாகிய வெட்டுக்குணங்க ளையும் விட்ட வழகினையுடையனாய்,—ஏறுபான்மையுடை நீடு வாழருக னெங்களுக்கிறைவனென்றனன். எ-து. இந்திராதி தேவர்கள்போற்ற மிக்கபான்மையையுடையனாய் நெடிது

வாழ்கின்ற வருகபரமனெங்கள் கர்த்தாவென்று கூறினான். எ-று. வானவர்வணங்க. எ-னே. ஏறு பான்மையுடைய னென்னுஞ் சொற்குமுன்னே கூட்டுக. நற்குண மெட்டா வன—அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்த சுகம், நிர்நாமம், நிர்கோத்திரம், நிராயுஷ்யம், சம்மியதா பாவம், என-அ. சம்மியதாபாவம் அழிவின்மை. ஞானா வர்ணியமெட்டாவன—ஞானாவர்ணியம், தரிசனாவர்ணியம், வேதநீயம், மோகநீயம் ஆயுஷ்யநாமம், கோத்திரநாமம், ஆயுவந்தராயம், காயவந்தராயம், என வெட்டாம். இவை யேதிக்குணங்களென்றும் பெயர்பெறும். சிலபிரதிகளுள், மதிஞானாவர்ணீயம், சுருதிஞானாவர்ணீயம், அவதிஞானாவர் ணீயம், கேவலஞானாவர்ணீயம், சக்ஷுதரிசனாவர்ணீயம், அசக்ஷுதரிசனாவர்ணீயம், அவதிதரிசனாவர்ணீயம், கேவல தரிசனாவர்ணீயம் ஆ அ. எனக் கூறியிருக்கின்றன. சீரேறு பான்மை. எ-து. நின்மலத்துவமுதலியன. (உ)

மாறிலாதமதி. எ-கு. வேறுபாடில்லாத பூரண சந்தி ரன். எ-ம். நீடுவாழருகன். எ-கு நித்தியனாய் நிலைபெற்ற வருகபரமேட்டி. எ-ம். மோகநீயம். எ-கு. யோகநீயம். எ-ம். சீரேறு பான்மையுடையன். எ-கு. நிர்மலனாய், சர் வஞ்ஞனாய், தேவர்களாலே நிர்மிதமான சிங்காதனமும், பிரகாசமண்டலமும், சர்வபரிமளமும், சமஸ்த ஜீவன்களுக் குமித்திரபாவமும், சந்தோஷப் பிரவிருத்தியும், பதினன்க திசயமும், சுவர்க்கதாநமும், மகாப்பிரசவாநங், கேவலோற் பத்தி, பரிநிருவாணமென்னும் பஞ்சகலியாண சகிதனுமாகி அற்புதசகிதனுமாகி அற்புதமகிமையுடையவனுமாகி யுள்ளா

னென்றதெனக்கொள்க.என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவர் அருகனுக்குச் சகலாத்தன் என்றும் பெயர். எ-ம். தீக்குணத்தில் ஆயுஷ்யநாமம், கோத்திரநாமம், ஆயுவந்தராயம், காயவந்தராயம், என்பவைநீக்கி நாமமுண்மை, கோத்திரமுண்மை, ஆயுவுண்மை, அந்தராயமுண்மை என்னுமிவை. அந்தராயம் துக்கம், எ-ம். சிராவண—நின்மலமாதல், யாவையுந்தேர்தல், சீவகாருண்ணியம், சந்தோஷம், பிரவிருத்தி ஆகியவைந்தும், பதிமூன்கதிசயமும், தேவ நிருமித சிங்காசனத்திற் பிரகாசமண்டலத்திருத்தல் முதலியனவாம். எ-ம். என்ன என்னு மூவமையுருபு என வென விகாரப்பட்டது. எ-ம். கூறினர்.

கருவிகண்படுதுடக்கொழிந்து வருகாலமூன்றினிகழ்
காரியம், பெருகநின்றொருகணத்திலே யுணர்பெருந்
தவக்கடவுள்பிடினான், மருவிநின்றுவழிபட்டவர்க்கு
மலேவுற்றவர்க்குமனமொத்திடுங், குரிசிலெங்களிறை
யென்றுபின்னு நிகழ்குற்றமின்மையதுகூறுவான்.

(இ-ள்.) கருவிகண்படுதுடக்கொழிந்துவரு காலமூன்றினிகழ்காரியம் பெருக நின்றொரு கணத்திலே யுணர்பெருந்தவக்கடவுள். எ-து. (கருவிகண்படுதுடக்கு கண்ணொழிந்து வருங்காலம்) எனமாறுக. இந்திரியவிடயத்தால்வருந் துடக்கத்தைத் தன்னிடத்து நின்றுங் கைவிட்டுப் பெருங்காலமுதலாக மூன்று காலத்திலுமுள்ள காரியங்களை மிகவுமொருகணமாத்திரத்திலே யநந்தஞானத்தாலே யறியத்தக்க பெரிய தவத்தையுடையதேவன்,—பிடினான் மருவிநின்று வழிபட்ட

வர்க்கு மலைவுற்றவர்க்கு மனமொத்திடுங்குரிசில். எ-து. தனது பெருமையினாலே பொருந்த நின்று வழிபாடு செய்தவர்க்கு மாறுபட்டவர்க்கு மொருநீர்மையான தலைவன்,—எங்களிறை யென்று பின்னுநிகழ்குற்ற மின்மையது கூறுவான். எ-து. எங்கள் சுவாமியென்றுகூறி யவனுக்குக்குற்றமில்லாத தன்மையைப் பின்னுஞ் சொல்லுவான். எ-று. மனமொத்திடுகை சமதரிசனமாகை. (௬)

கருவிகண் படுதடக்கொழிந்து. எ-து. பாஹியாப்பியந் தாரகூஷங்களை நீங்கி என்றதாம். காலமூன்றி னுணர்பெருந்த வக்கடவுள். எ-து. "திரிலோக்கியஞ் சகலத்திரிகாலவிசயஞ் சரலோக மாலோஹிதம், சாக்ஷாத்தெய்கயதாஸ்வதம், ஆத லெரெகாத்திரய மஞ்சாங்குலிராத்து வேஷபயாநக, மாயாந தங்கசானலோலத்துலோ பாயோத நலமயக்குபதலம்வாநா யஸம், ஆதேவோமயா கன்னியதே." இதிவசனாத் எனக் கொள்க. பின்னு நிகழ்குற்றமின்மையது கூறுவான். எ-து. பதினெண்குற்ற மொழிந்தவரேவிட்டவரெனக் கொள்க. இவை சகலாத்தரின்லக்ஷணம். என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவர், கருவிகண்படுதுடக்கொழிந்து. எ-ரே. கருவி. எ-து. உட்கருவியாகிய வந்தக்கரணங்களாலும்,— கண். எ-து. புறக்கருவியாகிய கண்முதலிய விந்திரியங்களாலும்,— படும். எ-து. உண்டாகும்,—துடக்கொழிந்து. எ-து. ஐய மும் விபரீதமுமின்றி. எ-ம். கண் முதலிய விந்திரியத்திற்குக் கண் என்றது தலைமைபற்றிய வழக்கு. துடக்கு என்றது ஈண்டையமும் விபரீதமுமாம். எ-ம். கூறினர்.

பசித்தருகபயசெற்றமோடுவகை மோகசிந்தனைப ழித்தநோய், நசித்தல்வேர்விநொடு கேதமோடுமதம் வேண்டலீண்டதிசயித்தலும், புசிப்புவந்திடுபிறப்புறக் கமிவைவிட்டொரட்டகுணபூதனாய், வசித்தவனுலகின்மே லிருந்தொருசொலிகலனுக்கருளுமென்றனன். (ச)

(இ-ள்.) பசித்தல். எ-து. பசியுண்டாதல்,—தாகம். எ-து. ஆசை,—பயம். எ-து. அச்சம்,—செற்றம். எ-து. மாற்சரியம்,—ஓடு. எ-து. இவையிற்றுடனே,—உவகை. எ-து. ஒன்றன்மேற் பிரியப்படுதல்,—மோகம். எ-து. மயக்கம்,—சிந்தனை. எ-து. ஒன்றைச் சிந்தித்தல்,—பழித்தல். எ-து. ஒன்றை நிந்தித்தல்,—நோய். எ-து. வாதபித்தசிலேஷ்மம்,—நசித்தல். எ-து. சாதல்,—வேர்விநொடு. எ-து. வியர்வோடும்,—கேதமோடு. எ-து. கிலேசப்படுதலோடும்,-மதம் வேண்டல். எ-து, கர்வத்தை விரும்பல்,—ஈண்டதிசயித்தலும். எ-து. இவ்விடத்ததிசயப்படுதலும்,—புசிப்பு. எ-து. உணவு,—வந்திடுபிறப்பு. எ-து. ஜநித்தல்,—உறக்கம். எ-து. மூவகைநித்திரை,—இவைவிட்டு. எ-து. இவை பதினெட்டையு முற்றக் கைவிட்டு,—ஓரட்டகுணபூதனாய். எ-து. அநந்தஞானமாதியாகச் சொல்லப்பட்ட வெட்டுக்குணங்களையுடையனாய்,—வசித்தவனுலகின்மேலிருந்தொருசொலிகலனுக்கருளுமென்றனன். எ-து. (உலகின்மேலிருந்தொருசொ லிகலனுக்கு வசித்தருளும்) என மாறுக. உலகத்துக்கு மேலாகிய பொன்னெயில் வட்டத்திருந்து சித்தபரமேட்டி-

கள் கேட்டதொருசொல்லினுக் குத்தரமருளுமென்று கூறி னான். எ-று. ஒடு எண்ணோடு ஈண்டென்பதனை எல்லாவற் றோடுங் கூட்டுக. வசித்தல் சொல்லுதல். பிறப்பு, தேவமநு ஷியநாகவிலங்கென நால்வகை. மூவகை நித்திரையாவன. நித்திரா நித்திரை. பிரசலாப்பிரசலை. நிக்கிரககதியனுக்கிரக கதியென்க. இதற்கருகன் கூறிய சொல்லாவது பொன்னெ யில் வட்டத்திருக்கிற சித்தபரமேட்டி என்னும் சகலாத்தரை இகலாத்தர் "தன்மம்பகவ" என்றுகேட்க, முரசுதாக்கச் சத் தங்கிளம்பினாற்போல வொருசொல் "பஞ்சாஸ்தமயம்" என்று சகலாத்தர்சொல்ல அதுகொண்டு விசாரித்தானெனக் கொள்க.

இச்செய்யுள்கண்மூன்று நிகண்டவாதி தனது கர்த்தா வினுடைய நிர்ணயங் கூறியவாறு கூறிற்று. உலகின்மேலி ருந்தொருசொ லிகலனுக்கருளுமென்றனன். எ-து. பொன் னெயில்முதல்வனைச் சித்தபரமேட்டிகேட்ப. (௪)

இராகமின்றியிருப்போர் தேசத்துபதேசங்கூடுமோ வென்னில், கடிப்பினாலறையப்பட்டுப்பிறிதினையபேக்ஷியாது முழங்காநின்ற படகத்தொனிபோலவும், வழிகேட்க இராக மின்றி வழிகாட்டுவானியல்புபோலவும் சொல்லப்பட்டதெ னக்கொள்க. "அரசருமமரருமீர்வரைவினவலின், வரைவில் பிறர்களு மனநிலைமகிழ்வெய்த, வுரைபலவகையிலு முறுபொ ருளுணர்வோர், முரசெனவதிருமுனைவான்மொழியே." இஃ தவனுடைய நீலகேசி என்றார் ஞானப்பிரகாசர். மற்றொரு வர், மதம்வேண்டல். எ-னை. மதம்-செருக்கும், வேண்டல்- விருப்பும், எனப்பிரித்தும். புசிப்புவந்திடுபிறப்பு. எ-னை.

புசிக்கவந்திடுபிறப்பு எனத்திருத்தி, போகம் புசிக்கவரும் பிறப்பும் என்றெருபொருளாக்கியும். உலகின்மேலிருந்தொருசொலிகலனுக்கருளுமென்றனன். எ-து. உலகத்தின்மேலாகிய பொன்னெயில்வட்டத்திருந்து "பஞ்சாஸ்தமயம்" என்னுமொருசொல்லை இகலாத்தனுக்குச்சொன்னவன்,— அருளுமென்றனன். எ-து. யாவரையும் ரக்ஷிப்பான் என்று சொன்னான் என்றார்.

அந்தவாய்மொழியினலவன் சரணமாதியோகமுதலானநூ, லிந்தமாநிலமயங்கிடாதவகை யிங்கியம்பினனிதன்பொருள், வந்தகாலமுயிர்தன்மதன்மியறமற்றும்விண்மருவுபுற்கலம், பந்தம்வீடினொடநாதியாயிவைபடைப்பதின்றி யுளபத்துமே. (௫)

(இ-ள்.) அந்தவாய்மொழியினலவன் சரணமாதியோக முதலானநூ லிந்தமாநிலமயங்கிடாதவகை யிங்கியம்பினன். எ-து. அந்தப்பஞ்சாஸ்தமயமாகிய வாக்கியத்தினலே யந்தச் சித்தபரமேட்டி சரணமாதியாகிய முதனூலை யிப்பெரிய நிலத்துள்ளோர் மயங்காதவகை யிவ்விடத்தேசொன்னான்,- இதன்பொருள். எ-து. இந்தநூலிற் கூறியபொருள்,—வந்தகால முயிர்தன்மதன்மியறமற்றும் விண்மருவு புற்கலம் பந்தம் வீடினொடநாதியா யிவைபடைப்பதின்றியுளபத்துமே. எ-து. உண்டானகாலம், ஆன்மா, தன்மம், அதன்மம், புண்ணியம், பாவம், ஆகாசம், அணுவாய்த்திரண்டான்மத்தன்மை பொருந்தின புற்கலம் பந்தம் வீடொடுகூடப் பத்தும் ஒருவராற் படைக்கப்படாதனவா யநாதியேயுள்ளனவாம். எ-று. தன்மம். எ-து. தன்மாத்திகாயத்தை. தன்மி. எ-து. அதன்மாத்திகாயத்தை.

இச்செய்யுள் நிகண்டவாதி சாத்திரந்தோன்றின முறைமையு மந்தச்சாத்திரத்திற்கூறும் பத்துவகை பதார்த்தமுங் கூறிற்று. சரணம்—ஆதிசரணம், சித்தசரணம், ஆசாரிய சரணம், தன்மசரணம் என-ச. மற்றுள்ளனவுங் காண்க.

அந்தவாய்மொழி. எ-து. சகலாத்தர்கூறிய "பஞ்சாஸ்தமயம்." என்னுமந்தவார்த்தையை. சரணமாதி. எ-து. பூர்வாகமம், அங்காகமம், வெகு சுருதிமுதலான நூல். இயம்பினன். எ-து. இகலாத்தன் அருளிச்செய்தனன். காலமுதலிய பொருளுக்கவன் வசநம். "எனக்கேட்டங்கெடுத்துரைப்பாவிந்திரர்கடோழப்படுவான், றனக்காய ததர்மமுந் தருமமுங் காலமுங், கனப்பாட்டிலாகாய முயிருருவும் புண்ணியமே, நினைக்குங்காற்பாவமே கட்டுவீடென நிறுத்தி." இது நீலகேசி. இவையிற்றிற்காலமாவது—சமயப் பிறசமயமாகிய ஆவடிகையும், பிராணனும், ஸ்தோகமும், இலவமும், நாழிகையும், முகூர்த்தமும், திவசமும், பக்ஷமும், மாதமும், இருதுவும், அயனமும், சம்வற்சரமும், யுகமும் இவைமுதலான கற்பாந்தமாகச் சொல்லப்படும்பேதமும். பூதபௌஷியவர்த்தமான விகற்பத்து "போதலிருத்தல் புணர்தன்முதல்வினையி, னேதுவினைக்காலமெனவெண்" என்பதும் காண்க. உயிராவது—ஞான தரிசனம்; இதக்கிரியா சைதந்நிய லக்ஷணத்ததாகிய பதார்த்தம், பிண்டஜீவன், சொரூபஜீவன், சுத்திஜீவன் என மூன்று வகைப்படும் ஆன்மாவைவிடாத குணமயம். அவையாவன—அஷத்தித்துவம், ஞாத்திருத்துவம், திருஷ்டத்துவம், கத்திருத்துவம், போக்திருத்துவம், அதிசூக்ஷமத்துவம், அவகாஹத்துவம், அகுருலத்துவம், அமூர்த்தித்

துவம், அசங்கூரப்பிரதேசத்துவம், சைதந்நியோவலம், சைதந்நியோவயோகம், சைதந்நிய சமஸ்காரம், சொரூபவெதிரேகதர்மம் என்னும் ஸவரூபாநுவயங்களாம். ஆன்மாவை நீங்கிவருங் குணங்களாவன — ஞானோபலப்பியந்தாநோபயோகம், கிரியாசமஸ்காரசைதந்நியோபலம் பதினொன்றுமாம். சாய்யசரீரபரிணும பிரமாணுதி நீன்றபஞ்சேந்திரியமனோவாக்குக்காயம் ஸ்வாசமாதியவற்றால் ஜீவியாநிற்பன். ஜீவனுத்திரம், "உடலிளைந்துநிற்குமுயி ருட்கரணத்தாலும், விடயமறியும்விரைந்து." என்பதும்காண்க. தன்மாத்திகாயமாவது—சலசாகமனங்கட்குச் சலம்போலக் கெதிபரிணுமோமுக சலக்கிதையிடத்தேவா சிக்கத்திரவிய புண்ணியமுமென். அவற்றுட் பாவபுண்ணியஞ் சத்தவிதமாகும்.—காருண்ணியப் பிரசன்னபாவ குணுநுராக பிரசஸ்தப் பிரவிருத்திதபோனுபிரயோக ஞானப்பிரவிருத்தி, தியானப்பிரவிருத்தி என். திரவிய புண்ணியமென்பது—புரோட்சாகாருண்ணியாதி சுபபரிணும பரிணதமாகியசாதவேதநீய, ஹஸ்வாதிபுருஷவேதாவேதாயுசியம் மனுவாயுசியமேகதாதி சுபநாமோசைக் காத்திரம் என்னும் புண்ணியசன்மகந்தமாகும். "பாபத்ஆவேதாபவதி"; பாவாபாவமுந் திரவியபாவமுமென்க. கத்திரப்பிரதனம் சத்தவிதமாகும்—அகாருண்ணியம், அப்பிரசன்னபாவம், அகுணுநுராகம், அபுசத்தம் பிரவிருத்தி, அத்போனபுயோகம். அஞ்ஞானப்பிரவிருத்தி, அசுபத்தியானப் பிரவிருத்தி என்க. ததுவதிபம்—அகாருண்ணிய, அசுபபரிணும பரிணமிதமாகிய ஞானுவரண, தரிசனுவரணமும், அசாத்வேதநீயமும், ஹாஸ்வாதிபுருஷவேத பாச்சமோஹநீயமும், நரகாயுஷிய, நியாயுஷியமும், நரககேத்தியாத்திய

சுபநாமமும், நிசைகோத்திரமும், அந்தராயமுமென்னும் பாவ கன்மகந்தமாகும். அத்திதானதன்மாத்திகாயங், காணுத்தி தானகைத்தவதன்மாத்திகாயம். "அத்திகடத்துண்மைபடா பாவமதனுத்திகட, மத்தியென நாத்தியெனவாம்." அறமின் பமாக்கு மருந்துயரமாக்கு, மறமென்றுளத்தின்மதி" என்ப துமறிக. விண்ணென்றது—ஜீவாதிபதார்த்தாவக சதணல க்ஷணத்ததாகிய அத்திதுவாந்த பிரதேசவாதி சொருபான் னுவயசகிதமாகிய அஞ்ஞானத்துவாதி பிரவிருத்தியானு விதமாகி நின்றபதார்த்தமாம். "எல்லாப்பொருட்கு மிடங் கொடுக்கும் வானதனி, னில்லாப்பொருளேதுமில்." என்பது மறிக. புத்கலமாவது—பரிசாசுகந்தவன்ன லக்ஷணத்ததாயும் திரவியபாவம். விகற்பபூரண அலன சுபாவத்ததாயும், பர மாணுக்கடாமே ஸ்நித்தசொரூப பரிசகுணங்கள் காரணமா கப் பரிசம்பந்தத்து விஷயபோக்கியோபகரணத் திரவிய மாகும், பந்தமாவது—ஞானுவரணுதியாகும். ஞானுவர ணீயம் பஞ்சப்பிரகாரமாத்திரம். அவை மதிஞானுவரணம், சுருதிஞானுவரணம், அவதிஞானுவரணம், மனபரியாய ஞா னுவரணம், கேவல ஞானுவரணமெனவாம். தெரிசனுவர ணமே லெழுவிதமாம். அவை சக்ஷுதரிசனுவரணம், அச க்ஷுதரிசனுவரணம், அவதிதரிசனுவரணம், கேவலதரிசனு வரணம், நித்திராப்பிரசலை, நித்திரா நித்திராப்பிரசலை, ஸ் தானகந்தி எனவாம் என். வேதநீயம் துவிதபேதத்தது— சாதநீதவேதம், அசாதவேதநீயம் என். மோகநீயம் துவி விகற்பத்தது—தரிசனமோகநீயம், சாத்திரமோகநீயம் என். தகுபிரதம மித்தியாதுப் பிரகிருதியாகும். துவிதீயம் துவிப்

பிரகாரத்தது—பாஹியகாஷாயம் மனோகாஷாயம். ஆயுஷியம் சதுர்வீதபேதமாத்திரம். அவை தேவாயுஷியம், மனுஷாயுஷியம், திரியகாயுஷியம், நரகாயுஷியமெனவாம். நாமகன் மசத்துவாரிம் சத்விகற்பமாகும் இவை விரிவிற்காண்க. விரியாந்தராயம் ஷட்பிரகாரமாம். மனுபாவ பந்தமென்பது அமிர்தவிஷவிரியசத்போல புண்ணியபாவங்கட்குச் சுகதுக்கபலதே சத்திமத்து பந்தமாகும். தூவபந்தமென்பது ஆசங்காரம்விட்டு நீங்காதசொரூபத்தால் நிரந்தரபந்தமாகும். அதூவபந்தமாவது விட்டுவிட்டுப் பந்திக்கும் சொரூபத்தாற் சாந்தரபந்தமாகும். இது பந்தம். மோக்ஷமென்பதிரண்டுபிரகாரமாம், — விகற்பமோக்ஷம் . சகலமோக்ஷமென். விகற்பமோக்ஷம் சத்வாரிங் சத்கர்மபி முத்தமாத்திரம். சகலமோக்ஷ மஷ்டகன்மமும்விட் டஷ்டகுணங்களையு முடைத்தாயிருக்கை. "ஏனுடையநுண்ணுவாய்த் தூலவுடற்கே துவாங், காண்ணரியபுற்கலன்கள் காண்." "உழவாதியாறுங் கட்டோராறினையு, மொழிவதனுன் முத்தியுறுமோர்" என்பதுமறிக. இது ஞானப்பிரகாசர். . விசேஷம். மற்றொருவர், சரணமாதியோகமுதலானநூல். எ-கு. அருகசரணமுதலிய நான்குசரணத்தையுங்கூட்டுவதான பூர்வாகமம், அங்காகமம் வெகுசுருதிமுதலிய நூல்களை எ-ம். சரணம்—அருகசரணம், சித்தசரணம், ஆசாரியசரணமாகிய சாதுசரணம், தன்மசரணம் என-ச. எ-ம். தன்மாதன்மி. எ-து. தன்மதன்மி என விகாரமாய் நின்றது. தன்மாத்திகாயத்தை தன்மமென்றும், அதன்மாத்திகாயத்தை அதன்மியென்றுங் கூறியது நாமவேகதேசநாமக் கிரணம் எனவும் கூறினர்.

நிற்றலோடுதலைபோதலன்மையை நிகழ்த்துநீடுவெதி
ரேகமு, முற்றதாமிவைகணத்திலேமருவியுள்ளவாபு
ரியுமாறுதான், கற்றகாலமளவெய்திவாழுமுயிர்காய
மேவிநிறைவானதே, பெற்றுவேறுவருதன்மைநேர
றிவுபெற்றதாகியுளபேசிலே. (ரு)

(இ-ள்.) நிற்றலோடுதலை போதலன்மையை நிகழ்த்து நீடு வெதிரேசமுமுற்றதாம். எ-து. நிகழ்காலமு மிறந்த காலமு மிவையல்லாமையை விளக்காநின்ற நிலைபெற்ற வெதிர்காலமுமாகிய மூன்றையு நிலைபெற்றுப் பொருந்தியதாம்,- இவை கணத்திலே மருவியுள்ளவா புரியுமாறுதான் கற்றகாலம். எ-து. அதுவன்றியு மூன்றுகாலத்தையு மொருகணப் பொழுதிலே பொருந்தியுண்டான தகுதியைச்செய்யுந்தொழிலையு மந்தக்காலங்கற்றதாம்.—அளவெய்தி வாழுமுயிர் காய மேவி நிறைவானதேபெற்று வேறுவருதன்மைநேரறிவு பெற்றதாகியுளபேசிலே. எ-து. அக்காலத்தெல்லையைப் பொருந்திவாழுமான்மாவானது சரீரியா யந்தச்சரீரமுழுதுநிறைந்த தன்மையைப்பொருந்திப்பாலதருண விருத்தவவத்தைகளிலும் வேறுவேறாக வருந்தன்மையோடு, பொருந்தினவறிவு பெற்றதாகியுள்ளதாம், சொல்லுங்காலத்து. எ-று.

இச்செய்யுளாதிப் பொருள்பத்திற் காலத்தின் பகுதியையு முயிரின் பகுதியையுங் கூறிற்று. (ரு)

இப்பாட்டிற்கு நிற்றலோடு தலைபோதலன்னுவய நிகழ்த்து நீடு வேதிரேகமும் என முதலடியைத்திருத்தி, நிற்பனவு மோடுதலுமீளுதலு மன்னுவயமும் சொல்லாநின்ற வெதிரேகமுமெனப் பொருந்தாநிற்குமிவை கணத்திலே கூடிப்பிரிகை

யுளதாகும், வழியாங்கல்வியுங் காலமு மளவையுங்கொண்டு வழங்குமான்மாவினறிவு கரும்பினிரதம் கரும்புள்ளளவும் நின்றாற்போலச் சரீரத்தைப் பொருந்திச் சரீரமட்டு நிறைந்து நிற்கும். வேறுதருதன்மையாகிய வறிவொழியத் தரிசனக் கிரியாசைதன்னியங்களையுமுளவாம் சொல்லின். எ-று. வெதிரேக பதார்த்தவிளக்கம் என்பது கருத்து, எனக் கூறினர் ஞானப்பிரகாசர். மற்றொருவரு மிதுவேபாடமோதி, நிற்றலோடு தலைபோதலன்னுவயம். எ-து. நிலைபெறுதலோடு கூடுவதாகிய வன்னுவயமும்,—நிகழ்த்து நீடுவெதிரேகமும். எ-து. சொல்லப்படுநிலைபெற்ற வெதிரேகமுமாகிய விரண்டினையும்,—உறறவாமிவை. எ-து. பொதுவிலக்கணமாகப் பொருந்தியனவா மிப்பத்துப்பொருள்களும். அவற்றுள் அன்னுவயம்,—கற்றகாலங் கணத்திலே மருவியுள்ளவா பிரியுமாறுதான். எ-து. படித்தறியப்பட்டகாலமானதுங் கணந்தொடங்கி அநந்தமீறாகப் பதினெட்டுவகையாய்ப்பொருந்தி யுள்ளபடி வேறுபடுமுறைமையாம்,—வாழுமுயிரளவெய்தி. எ-து. உலகத்து வாழுமுயிரானது ஆயுள்வரையறையைப்பொருந்தி,—காயமேவி. எ-து. உடலினைப்பொருந்தி,—நிறைவானதேபெற்று. எ-து. கரும்பிலிடமெங்குமிரதங் கலந்திருந்தாற்போல உடம்பெங்கு நிறைந்திருக்குந்தன்மையைப் பொருந்தி,—வேறுவருதன்மை. எ-து. பாலதருண கௌமார விருத்தாவத்தையாக வேறுபட்டுவருந்தன்மையினையும்,—நேரறிவு. எ-து. ஓரறிவுமுதலைந்தறிவந்தமான நுண்ணிய வறிவினையும்,—பெற்றதாகி. எ-து. உடையதாகி,—உள. எ-து. எக்காலமுமுள்ளதாகி,—வாழும். எ-து. பந்தத்திலுமுத்தியிலும்வாழும்,—பேசிலே. எ-து. சொல்லுமிடத்து. எ-று.

தலைபோதல் கூட்டுதல். அந்நுவயம் உள்ளது. வெதிரேகம் இல்லாதது. எனவே பத்துப்பொருளுக்கும் அஸ்திநாஸ்தி வாதமாயிற்று. அஸ்திநாஸ்தி எனினும் சத்தபங்கி எனினு மொக்கும். க்ஷணமுத லநந்தமீறாகக்காலம் பதினெட்டாவன. க்ஷணமும், ஆவளியும், உயிர்ப்பும், தோகமும், இலவமும், நாழிகையும், முகூர்த்தமும், நாளும், பக்ஷமும், மாதமும், இருதுவும், அயனமும், ஆண்டும், யுகமும், பவமும், அநந்தமும், என விவையாம் இவற்றினிலக்கணம் விரிவிற்கண்டு கொள்க. உளதென்பதீறுகெட நின்றது. என்று கூறினர். இவற்றிலுள்ளபாடபேத வுரைபேதங்களை யாராய்ந்தறிந்து கொள்க.

பரந்துமீதுதருமாத்திகாயமழிவித்த நித்தமதுபண்ணிடு, நிரந்துகீழதருமாத்திகாயமது நித்தமாய்மிக நிறுத்திடும், புரந்தபுண்ணியமிதற்கு நன்மைபுகல் பாவமானவதுதீமையே, தரும்பொருட்கிடமதாகும் வானமிகு புற்கலன்களவைசாற்றுவாம். (எ)

(இ-ள்.) பரந்துமீதுதருமாத்திகாய மழிவித்த நித்தமது பண்ணிடும். எ-து. விரிந்து மேலாகத்தரப்பட்ட தன்மாத்திகாயமானது பூதகாயத்தை மேலுமோதபடி யழிவித்த தனையநித்தியத்தைச் செய்யும்,—நிரந்து கீழ்தருமாத்திகாய மது நித்தமாய் மிக நிறுத்திடும். எ-து. நிரைபட்டுக் கீழாகத் தரப்பட்ட வதன்மாத்திகாயமான தான்மாவோடுகூடி நித்தமாய் மிகவுநிலைபெறுவித்திடும்,—புரந்த புண்ணிய மிதற்கு நன்மை. எ-து. தன்மமுதலாகச் செய்யப்பட்ட புண்ணியமானதுவே இந்தத் தன்மாத்திகாயத்தைத் தருவதற்கு நன்

மையாவது,— புகல்பாவமானவது திமையேதரும். எ-து. சொல்லப்பட்ட மனவாக்குக் காயங்களாலுண்டான பாவமானதுவே தீமைகளையேதரு மதன்மாத்திகாயத்துக்கேதுவாம்,—பொருட்கிடமதாகும் வானம், எ-து. எல்லாப்பொருட்கு மிடங்கொடுத்து நிற்குமாகாயம்,—மிகு புற்கலன்களைவைசாற்றுவாம். எ-து. இதனிடத்திற்றேன்றும் புற்கலப்பொருளை மேலேசொல்லுவாம். எ-து. தன்மாத்திகாயமாவது, புண்ணியத்தாலெடுக்குந்தேகம். அதன்மாத்தியகாயமாவது பாவத்தாலெடுக்குந்தேகம்.

இச்செய்யுண்முன் னநாதியென்று கூறிய பத்தினுள்ளுந் தன்மதன்மி யறம்பாவ மாகாசமென்னு மைவகைப் பதார்த்தங்களைக் கூறிற்று. (எ)

இதனுள் முதலிரண்டு சீரையும், மீதுதருமாத்திகாயம் பரந்து அதழிவித்து அநித்தம் பண்ணிடும், கிழதருமாத்திகாயமது நிரந்து நித்தமாய் மிகநிறுத்திடும். என அன்னுவயித்து, இதனுள், மீதுதருமாத்திகாயம் பரந்து. எ-து. மேலாகிய தன்மாத்திகாயமான துலகெங்கும் வியாபித்து,-அதழிவித்து. எ-து. அதன்மாத்திகாயத்துக்குள்ள கீழ்ப்பட நிற்கு நிலையைக்கெடுத்து,—அநித்தம்பண்ணிடும். எ-து. தேகங்களுக்கநித்யத்தைப்பண்ணி யுயிர்களுக்கும் புற்கலத்துக்கும் மேலாகச் செல்லுங்கதியைப்பண்ணும்,— கிழதரு மாத்திகாயமது நிரந்து நித்தமாய் மிகநிறுத்திடும். எ-து. கிழாகியவதன்மாத்திகாயமான துலகெங்கும் வியாபித்து நித்தியமாயுயிர்களுக்கும் புற்கலத்துககு மிகவுங்கிழ்ப்பட நிற்குநிலையைட்பண்ணும். எ-ம். மிகுபுற்கலங்களவை. எ-கு. மிகுதியாகிய வணுபுற்கலமுங் கந்தபுர்கலமுமென்னு மவ்விரண்டினையும். எ-ம்.

கீழ்ப்பட நிர்குநிலையைக் கெடுத்தெனவே மேலாகச்செல்லுங் கதியைப்பண்ணுமென்பது வருவிக்கப்பட்டது. புண்ணியம் விரவ புண்ணியமுந் திரவிய புண்ணியமுமென வருவிக்கப் படும். அவற்றுள் விரவபுண்ணியமாவது—கருணையும், தெளிந்தபுத்தியுடைமையும், ஆர்வமும், தியாநமும். விரதசீலங்களை யநுஷ்டித்தலும், ஒதல் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் பிறர்க்குபதேசித்தல் என்னுமைவகையாகிய ஞானப்பிரவிருத்தியும், தவம்பண்ணுதலுமாகி எழுவகைப்படும். திரவியபுண்ணியமாவது, சாதவேதநீயமும், புருஷவேதநீயமும், சத்தியத்துவமும், உத்தமநாமங்களும், தேவராகியு மனுஷ்யராகியும் வாழு மூழும் என வைந்துவகைப்படும். இனி பாவமும் விரவபாவமும், திரவியபாவமும், என விருவகைப்படும். அவை யிருவகைப் புண்ணியங்களுக்குக் கூறியவற்றிற்கெதிர்மறையாம். எ-ம். கூறினரோருரையாசிரியர்.

ஏனுமொன்றுடையவாகி யெங்குமணுவாயிரும்புகன்மரங்களும், பூணுமங்குருவெலாமுமாகு மிவை புற்கலப்பொருள்க ளென்னலாங், காணுமங்கறுவகைத் தொழிற்களவைகட்டு விட்டநெறிகன்மமேன், மாணநின்றுவருமாறிமாறி முன்வகைந்த துண்டுவிடமாட்சியே. (அ)

(இ-ள்.) ஏனுமொன்றுடையவாகி யெங்குமணுவாயிரும்புகன் மரங்களும் பூணுமங்குருவெலாமுமாகு மிவைபுற்கலப் பொருள்களென்னலாம். எ-து. ஓர் வலியுமுடையவா யெவ்விடத்திலு முருவமாய்த்திரண்டு இரும்புகன்மரங்கண் முதலியனவுமா யிவையொழிந்தெடுத்துக்கொள்ளப்பட்ட வருக்க

ளெல்லாமுமாய்த் திரியக்கணு பூர்வமென்னு மான்மப்பெயரை யுமுடையவாய் நிற்குமவையிற்றைப் புற்கலப்பொருளென்று சொல்லலாம். — காணுமங்கறுவகைத்தொழிற் களைவகட்டு. எ-து. போல்லாங்காகிக் காணப்பட்டுள்ள வறுவகைத்தொழிற்களே பந்தம்,—விட்டநெறிகன்மம். எ-து. அந்தப் பந்தத்தைவிட்ட வொழுங்கேதவம்,— மேன்மாண நின்றுவரும். எ-து. அத்தவத்தானுடல் மென்மேல்வருந் தவமாட்சிமையுண்டாய் நிலைபெற்று வர்த்திக்கும்,—மாறிமாறிமூன் வகைந்துண்டு விடமாட்சியே. எ-து. ஆன்மாவுக்குமுன்பே புசிப்பதாக வுண்டாக்கப்பட்ட புண்ணியபாவங்களொழியப் புசித்து விட்டமாட்சிமையே வீட்டைத்தரும். எ-று. அணுபூர்வமான தெய்வகதியாவை பூர்வம், மனுஷ்யகதியாவை பூர்வம், நரககதியாவை பூர்வம், பக்ஷிமிருககதியாவை பூர்வம், திரியக்காதியாவை பூர்வம், எனவிவை. இந்நால்வகையுள் திரியக்காதியாவை பூர்வம், புற்கலப்பொருள். அறுவகைத் தொழிலாவன—கந்த, ரச, ரூப, பரிச, சத்த, பரிணமம் என விவைகாமாதியறுவகையுமாம்.

இச்செய்யுண் முறையானே முன்னர்ப்பத்தினுள் புற்கலப் பொருளும் பந்தமும் வீடுமாகிய பொருள்கண் மூன்றையுங் கூறிற்று. ஏனு - வலி.

வாசமாமலர் என்னுஞ் செய்யுண் முத லிச்செய்யுட்காறு நிகண்டவாதிமதங் கூறிற்று. (அ)

இதற்கு ஜைநாகமத்திப் பிரமாண மாவ தவருடைய நீலகேசியிற் சொன்னபடி, "காண்டலுமல்ல தெம்மளவை காண்டன்முன், பூண்டவைம் பொறிமனமவதி புண்ணிய, மாண்டகுமளப்பரியங்கேவல, நாண்டகு மரிவையாருள்ளு நண்ணி

றாய். எ-து. காண்டல், பிரத்தியக்ஷமல்லது பரோக்ஷம். இவையிரண்டுமே பொருள்களை யள்க்குமளவை. அவற்றுட் பிரத்தியக்ஷம்—இந்திரியப் பிரத்தியக்ஷம், மாநதப் பிரத்தியக்ஷம், அவதிப்பிரத்தியக்ஷம், மனப்பரியாயப் பிரத்தியக்ஷம், கேவலப்பிரத்தியக்ஷம் எனவாம். இவையிற்றி லிந்திரியப்பிரத்தியக்ஷமாவது—கண்முதலாகிய விந்திரியங்களால் நீலமுதலிய புறப்பொருள் பற்றப் பிறக்கும் ஞானம். மானதப் பிரத்தியக்ஷமாவது—சுகாதிசொரூப விஜயமாகவும் சாரண ஞானங்களுடைய சொரூப விஜயமாகவும் பிறக்கும் ஞானம். மனப்பரியாயப் பிரத்தியக்ஷமாவது. கேவலம் பிரத்தியக்ஷமாவது-ஞானவரணீயம், தரிசனவரணீயம், மோகநீயம், அந்தராயம் என்னு மநாதிகன்மங்களொழிவறக்கெட்ட வழிபிறப்பதாகி ஜீவாதி சகலபதார்த்தங்களையு நிகழ்ச்சிகளையும் க்ஷணத்திலே சாக்ஷாத் கரிக்கின்ற வருகபரமேஸ்வரனது திவ்யஞானம் கன்மங்களது நீக்கத்துக்க ணான்மாவின்கட் பிறக்கும் விசுத்தி. பரோக்ஷப்பிரமாணம் அவனீலகேசியிற் சொன்னபடி "நினைவுமீண்டுணர் வூகநேர்தருக்கம், புனைவுட்சோனுமை பொய்யன்மைமெய்யுரை, முனைவர்தம் மாகமம்மொழியுமாகுமென், றினையன காட்சியி லளவையைந்துமோ." நினைவு ஸ்மரணம். மீண்டுணர்வு பிரத்தியபிஞானம். ஊகம் தர்க்கம். புனைவுட்சோனுமை எனப்படுவது அநுமானம். பொய்யினீங்கிய மெய்யாகிய ஆப்தவாக்கியம், ஆகமமெனப் பரோக்ஷப் பிரமாணமைந்து. எ-ம். "அபரோக்ஷம் பரோக்ஷமென விரண்டாகும் பேசுவன" இவை விரிக்கிற் பெருகும். பார்க்கவேண்டின் நீலகேசியிற் காண்க. என்றார், ஞானப்பிரகாசர். அன்றியும் பூணுமங்குரு வெலாமு

மாம். எ-கு. பொன் வெள்ளி செம்புமுதலான வுருக்களு மாய். எ-ம். அறுவகைத்தொழில். எ-கு. உழவு, தொழில், வரைவு, வாணிகம், வித்தை, சிற்பமாகிய வறுவகைத்தொழில். எ-ம். கூறினர். மற்றேருரையாசிரியர் இசசெய்யுளுக்கு— ஒன்றேனு முடையதாகி யெங்கு ம்ணுவாயாகும். எ-து. முற் கூறிய வ்ணுபுற்கலங் கந்தபுற்கலமென்னு மிரண்டுபுற்கலங் களுள் அணுபுற்கலமானது வலியும், உம்மையால் நெகிழ்ந்த பரிசமுதலிய வுடையதாகி மூன்றுலகத்தினு நிறைவாயணுருப மாயிருக்கும்,-அங்குப் பூணுமிரும்புகன் மரங்களு முருவெலா முமாகும். எ-து. ஒழிந்தகந்தபுற்கலமாவது அவ்விடத்துப் பரமாணுக்களாற் பரிணமிக்குமிரும்பும் கல்லும் மரங்களுமற் றை வடிவில்பேதங்களியாவுமாயிருக்கும்,—இவை புற்க லப்பொருள்களென்னலாம். எ-து. இந்தவிரண்டினையும் புற் கலப்பொருள்களென்று சொல்லுதலாம், அங்குக்காணுமறுவ கைத் தொழில்கள் கட்டு. எ-து. இனி பந்தமாவது சம்சார மாகிய அவ்விடத்துநிகழும் உழவுந் தொழிலும் வரைவும் வா ணிசமும் வித்தையுஞ் சிற்பமுமாகிய வறுவகைத்தொழில்க ளாற் கட்டுப்படுவதாம்,—அவை விட்டநெறி. எ-து. அந்தப் பந்தங்களைவிட்டதே மோக்ஷமாவது,—மாணநின்று. எ-து. மாட்சிமைப்படத்தவமுதலிய வொழுக்கங்களினின்று,-முன் கன்மமேன் மாறிமாறிவரும். எ-து. முற்செய்தகன்மம் பின் புசெய்த முறைமையில்வாராது புசித்தற்குப் பக்குவமான படி மாறிமாறிவரும்,—வகைந்ததுண்டு விடுமாட்சியே. எ-து. அவ்வாறு கூறுபட்டுவந்த கன்மத்தைச் சமைந்தசோறுண்டு விடுவதுபோலப் புசித்துவிடு மாட்சிமையுடையதாம். எ-று. நெகிழ்ந்தபரிச முதலியனவாவன-நெகிழ்ந்தபரிசமும், சீதப

ரிசமும், ஒருவாசனையும், ஒருநிறமும் ஒருசுவையுமாம். கட்டுப்படுதலாவது ஆன்மாவினிடத்துத் திறகன்மங்கள்சென்றுசொரூபந்தெரியாமல் மறைக்கப்படுவதாம். மாட்சியுடையந்த மாட்சியென்ற அபசாரவழக்கு என விளங்கவோதியதின் பாடபேதவுரை பேதங்கள் கண்டுகொள்க.

நிகண்டவாதிமத முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—கசசு.

நிகண்டவாதி மதமறுதலை.

அருகனுக்கனந்தஞான மாதியாதியாகவே, பெருகநிற்றல்சீதமாமதிக் கடைந்தபெற்றியே, லொருவுமிட்டவொப்பவ னுயிர்த்திறத்தினுள்ளபின், மருவுமிக்க குற்றமேலறத்தின்மன்னிறனெனில். (க)

(இ-ள்.) (அருகனுக்குப்பின்வரும் அறத்தின் என்னும் இரண்டுசெய்யுளு மொருதொடர்.) அருகனுக்கனந்த ஞானமாதியாதியாகவே பெருகநிற்றல் சீதமாமதிக் கடைந்தபெற்றியேல். எ-து. அருகபரமனுக்கு ஞானாவரணியமாதியாகிய தீக்குணங்களெட்டு நீங்கப்பட்டு, அனந்தஞானமாதியாகிய நற்குணங்க ளெட்டுஞ் சந்திரனுக்குச் சைத்தியம்போல வுண்டாமென்று கூறினாய். அதுவே முறைபாடாயின்,—ஒருவுமிட்டஒப்பு. எ-து. நீ கூறியவுவமையி னீங்கப்படும்,—அஃதெங்ஙனமென்னில்,—அவனுயிர்த்திறத்தினுள்ளபின் மருவுமிக்ககுற்றம். எ-து. கத்திருகுணமின்றியே சிலகுணத்தை

விட்டுச் சிலகுணம் வந்து கூடிற்றென்ப தான்ம·குணமா கையா லவனுமான்மகுணத்தை யுடையவனாவன். ஆகவே விடப்பட்ட தீக்குணங்களெட்டு முன்புண்டாய்விட்டதாம்,—மேலறத்தின் மன்னினனெனில். எ-து. அற்றன்று, அவன் ஞானாவரணிய மாதியாகிய குணங்களை நீங்கி யநந்தஞான மாதியாகிய குணங்களைக் கூடிதன்மேலான வறத்தின்கண்ணே பொருந்துகையினால். எ-று.

அருகனெண்குணங்கள் பொருந்துதல் சையோகசம்பந்தமாதலானும் சந்திரன் குளிர்ச்சியைப் பொருந்துதல் சமவாய சம்பந்தமாதலானும் நீ கூறியவுவமை பொருந்தாது என்று வருவித்துரைத்தா ரோருரையாசிரியர்.

அறத்தின்மன் னுவித்தவன் னொருத்தனுயவன்னறத்,
திறத்தினிற்றன் மற்றொருத்தனால் விளைந்தசெய்தியா,
மறத்தினற்றவர்க்கெலாம் வணக்கமுன்னிறைக்கு
மேற், பிறக்குமிங்கவத்தை கொண்டதாரையிங்குபே
சிடே. (உ)

(இ-ள்.) அறத்தின்மன்னுவித்தவன் னொருத்தனுயவன் னறத்திறத்தினிற்றன் மற்றொருத்தனால் விளைந்தசெய்தியாம் எ-து. ஆங்கவனந்ததருமத்தினாலே பொருந்தினனாயினந்தத் தன்மத்திலேநிலைபெறுவித்தவனொருவனுளனா யவனாற்கூறப்பட்டதன்மநெறியிலே நிற்குந்தகுதி யொருவன்கற்பித்ததொழிலை யொருவன்செய்த செய்தியாம்,—மறத்தினற்றவர்க்கெலாம்வணக்க முன்னிறைக்குமேற் பிறக்குமிங்கவத்தை எ-து. கொலையைநீங்கினவர்க்கு வணக்கமாகப்பட்ட வுன்கர்த்தாவுக்கு மேலுமொருவனுளனென்பதோ ரெல்லையுண்டாமா

கையால்,—கொண்டதாரையிங்குபேசிடே. எ-து. முன்னர்க் கூறியவனையோ, அவன்கீழ்நின்றிந்திரியத் தொடக்குப்படா மற் றவஞ்செய்தவனையோ, நீ கர்த்தாவாகக்கொண்டது யா வரையென்று சொல்வாயாக. மறத்தினற்றவர்-கொலைத்தொழிலைக்கைவிட்டவர்.

இச்செய்யுள்களருகன் சிலகுணங்களைநீங்கிச் சிலகுணங்களைவந்து கூடுகையாலு மப்படியுண்டாவதற்கு றத்திறலெனின் அவ்வாறனுமொருவனுண்டாக்கிறுகை வேண்டுமாகையாலுங் கார்த்தாவல்லவென்று மறுத்துக்கூறிற்று. நீ. தலைவனாகச் சொல்லப்பட்டவன் கன்மக்ஷயம்பிறந்தவனோ, கன்மக்ஷயம் பிறவாதவனோ, பிறந்தவனாகிற் றபோபலத்தாற் பெற்றவனும், கன்மக்ஷயம்பிறவாதவனாகில் உலகத்துள்ளார்க்கொப்பாவன், அநாதியேமுத்தனாகிற் சீவவர்க் கத்தனல்லனுமெனக்கொள்க.

முடிவின்கணுனக்கின்றான் கத்தனென்பது கூடாமனீ சொல்லுமதனுக் சநவத்தையென்னுங் குற்றமுண்டாம் ஆதலால் நீசொல்லுமதாகாது என்க. "உயிர்த்திறத்தினுள்ளானுணர்ச்சியுமாதி, யுயிர்த்திறத்துன் ஞானம்போலும்." என்பதுங்காண்க என்றார் ஞானப்பிரகாசர். மற்றோருரையாசிரியர், மறத்தினற்றவர்க்கெலாம் எ-னை. மறத்திமற்றவர்க்கெலாம் எனப்பாடமோதி, மறத்தி. எ-து. இத்தன்மையை மறந்தாய்போலும்,—வணக்கம். எ-து. உன்னூலிற் கூறிய வணக்கம் யார்க்கென்னில்,—மற்றவர்க்கெலாமுமுன்னிறைக்கேல். எ-து. நூல்சொன்ன விகலாத்தர்முதலிய வுலகத்தார் யாவர்க்கும் முன்னேயுள்ள விறைவனுக்காயில், முன்னுள்ள விறைவனானவன் இகலாத்தர்க்குபதேசித்த சகலாத்தனுதலா

லவன்வணங்கியவணக்கம் நால்வகை வணக்கத்துள் சாதுசர ணமாகவேண்டும். வேண்டவே அருகசரணங் கூறுதற்கு,— இங்குபிறக்குமவத்தை கொண்டதாரையின்று பேசிடே. எ-து. இவ்விடத்துண்டான வருகாவத்தை யாரைப்பொருந் தினது இதுபொழுது சொல்வாயாக. எ-று. எனவே சக லாத்தனாகிய வருகனுக்கு மேலாகியாருகடவுளுண்டென்பதா யிற்று. இறைக்கும் என்ற உம்மையைப்பிரித்து மற்றவர்க் கெலாம் என்பதனோடு கூட்டுக. என்றார்.

கருவிகண்டிடக்கொழிந்துகண்டு வாழுமென்றியே, யுருவுகொண்டு நின்றதென்னிலுண்டுதான்மநாதிக, ளொருவிநின்றதென்னிலத்த மொன்றையுமுணர்ந்தி டான், பொருடெரிந்துபோகைகால மொன்றிலே புணர்ந்திடான். (௫)

(இ-ள்.) கருவிகண்டிடக்கொழிந்து கண்டுவாழு மென் றியேல். எ-து. உன் கர்த்தாவாகிய வருகபரமன் மனாதிக ளாகிய கருவிகளின் றறியுமறிவை நீங்கிச் சர்வமுங் கண்டிரு க்குமென்று கூறினாய். அப்படியாயின்,— உருவுகொண்டு நின்றதென்னிலுண்டுதான் மநாதிகள். எ-து. அவனைச் சரீ ரம் பொருந்திநின்றதென்று கூறின் மனமுதலாகிய கருவிக ளுண்டா மவையொழிந்து காண்டற்குவழியுமில்லை,—ஒருவி நின்றதென்னி லத்தமொன்றையு முணர்ந்திடான். எ-து. அவனைச் சரீரநீங்கிநின்றதென்றுகூறி னவனெல்லாவற்றை யுங்கண்டு வாழுமென்று சொல்லுதலு மித்தியாவாதமுமாய் மற்றொன்றையு முணர்ந்ததில்லையாவன்,— பொருடெரிந்து போகைகாலமொன்றிலே யுணர்ந்திடான். எ-து. ஒருபொரு

ளையறிதற்குக் கருவியான மூன்றுகாலத்தையு மொருகாலத்திலே யுணருந்தன்மையனல்லன். என்று.

இச்செய்யுள் அருகபரமன் கருவித் தொடக்கையொழிந்து சர்வமுங் காண்பனென்பதனையு மூன்றுகாலத்தையு மொருகாலத்திலே நின்றுணர்வனென்பதனையு மறுத்தற்குக் கூறிற்று.

ஆர்வகோபமானவையடைந்தொருப்பவர்க்கெலாஞ்,
சேர்வதின்மைசெப்பிலின்றுசிவன்மேவுகாயமா, லோ
ருமன்னர்போலவே யுயிர்க்களித்தலென்றியே, லேர்
கொள்பொன்னெயிலிடத்திருத்தல்பெற்றதென்கொ
லோ. (௪)

(இ-ள்.) ஆர்வகோப மானவையடைந்தொறுப்பவர்க்கெலாஞ் சேர்வதின்மைசெப்பிலின்று சிவன்மேவுகாயமால். எ-து. காமக்குரோதமுதலியவற்றோடுங்கூடி யதனைத் தீதென்றறிந்து நீக்கப்படுவார்க்கெல்லா மின்று முத்தியடைதலில்லையாம், உன்னருகபரமனுஞ் சிவனோடுகூடின காயமாகையால். அற்றன்று,— ஒருமன்னர்போலவே யுயிர்க்களித்தலென்றியேல். எ-து. க்ஷத்திரியதன்மமான சரித்திரத்தை யாராய்ந்தவரசரைப்போல வுயிர்க்குத்தலையளிசெய்தலேயருகபரமனுக்கு முறைமையென்று கூறுவையாயி னவ்வரசரைப்போல துஷ்டநிக்கிரகமுஞ் சிஷ்டபரிபாலனமுஞ் செய்யவேண்டும்,—ஏர்கொள்பொன்னெயிலிடத் திருத்தல்பெற்ற தென்கொலோ. எ-து. அவ்வரசரைப்போல வொருநிலத்திலிருந்து துஷ்டநிக்கிரகமுஞ் சிஷ்டபரிபாலனமுஞ் செய்யாது பொன்னெயில்வட்டத்திருக்கப் பெற்றதியாது. அதுவுமின்றி "மருவிநின்று வழிபட்டவர்க்கு மலைவுற்றவர்க்கு மனமொத்திடுங்

குரிசில்" என்று நீமுன்னர்க் கூறுகையானு மரச ரிவ்வுலகத் திருத்தலானு முன்னருகபரமனரசரை யொக்குந் தன்மையு முடைய னல்லன். எ-று.

இச்செய்யுளருகபரமன் சரீரியாகையா லவனைநோக் கித் தவஞ்செய்வார் முத்தியடைதலிலையென்றும், அரசனைப் போல வென்னின் மனமொத்திடுங்குரிசிலென்பது வழுவா மென்றும் மறுத்துக்கூறிற்று.

அருகனென்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுட்காறு மருக பரமனைக் கர்த்தாவல்லவென்று மறுத்துக் கூறிற்று. (௪)

சிவன்மேவுகாயமால். எ-னை. சிவனேகுக்ாயம் எனப் பாடமோதி வழிபட்டவர்களைச் சந்தோஷித் தநுக்கிரகம் பண்ணுதலு மொறுத்தாரைவெறுத் தநுக்கிரகம் பண்ணுதலு மிவ்விரண்டு தன்மையும் பொருந்துதலில்லாமை சொல்லின் உனது கர்த்தாபிணத்தை யொப்பவனுவன். என்றார் ஞானப் பிரகாசரு மற்றுருரையாசிரியரும்.

சொல்லதொன்று கொண்டிகலினுத்தனுடவேசொலி, னில்லையாமநாதிதானியம்பு மாறதெங்ஙனே, நல்ல வாமநாதிதானவர்க்கு நாடவேயிலை, யொல்லையூமரு மருக்குரைத்தவாறதொக்குமே. (௫)

(இ-ள்.) சொல்லதொன்று கொண்டிகலினுத்தனுடவே சொலின். எ-து. உன் அநாதியருகபரமனுகிய சகலாத்தன் ஒரு சொல்லைக்கொண் டாதியருகபரமனுகிய விகலாத்தன் கேட்கமாறுபாடில்லாத பொருளைச் சொன்னனென்றுகூறின் இல்லையாமனுதி தானியம்புமாறதெங்ஙனே. எ-து. உன்

னாதியருக பரமனுக்கு மநாதிகளில்லையென்று நீகூறுகையா லநாதியிலருக பரமனுடனொருசொல்கேட்டுப் பலவிதமாக நூல்சொன்னபடியெப்படி அஃதன்றியும்,-நல்லவாமநாதிதா னவர்க்குநாடவேயில்லை. எ-து. உன்னாதியருகபரமனுக்கு நன் றாகியமநமுதலாகிய கருவியுமறிதற்கில்லையாகையால் அவன் கேட்டபடியெப்படி,—ஒல்லைபூமருமருக் குரைத்தவாறதொக் குமே. எ-து. அநாதியருகபரமனொருசொல்சொல்ல வதனை யாதியருகபரமன்கேட்டுப் பலவிதமாக நூல்செய்தானென்று நீசொல்லுமது, ஊமர்சொல்ல ஆமர்கேட்டு நூல்செய்தாரெ ன்னுந் தன்மைக்கொக்கும். எ-று. ஒல்லை-விரைவு, ஒருமாத் திரை. சொல்லதொன்றென்பது பஞ்சாத்திமயம்

இன்பபூமிசேரிகலி னாத்தனிவ்விருநிலத், துன்பமங்கு ணர்ந்திடாமை யிங்குவந்தசொல்லிடா, னின்பபூமி யிலிருந்திருந்தி யாவுமெய்திடிற், றுன்பபூமியாமுணா ர்ந்துசொல்ல வல்லதில்லையே. (௬)

(இ-ள்.) இன்பபூமி சேரிகலினாத்தனிவ் விருநிலத்துன்ப மங்குணர்ந்திடாமை யிங்குவந்த சொல்லிடான். எ-து. புண் ணியபூமியாகிய பொன்னெயில்வட்டத்திருக்கிற மாறுபாடில் லாத வநாதியருகபரம லிந்தப்பெரிய பூமியிடத்துண்டாகிய துன்பங்களை யறியாதாகையாலு மநாதிகளில்லையாதலானு மிந் தப்பூமியிலுண்டானவற்றை நீயிப்படிச்சொல்லென்று சொல் லமாட்டான்,—இன்பபூமியிலிருந்திருந்தி யாவுமெய்திடில். எ-து. புண்ணியபூமிப் பொன்னெயில்வட்டத்திருந் தநாதிய ருகபரமன் பூமியிற்றுன்ப மியாவையுமறிந்து சாத்திரஞ்செய் யச்சொன்னானென்று சொல்லின்,—துன்பபூமியா முணர்

ந்து சொல்லவல்லதில்லையே. எ-து. புண்ணிய பூமியாகிய பொன்னெயில்வட்டமுந் தின்பபூமியாகையா னீதலைமயங் கச் சொல்லுஞ் சொல்லுக்குயாமறிந்து சொல்லுஞ்சொல்லில் லையாம். எ-று. சொல்லவல்லதில்லை. எ-து. அருகன்றலை மயங்கிக் கூறுகையா லவனையிகழ்ந்து கூறியது. இருந்திருந் தென்றது விரைவுச்சொல். சகலாத்தமாநந்த பூமியராதலா லறிந்த தெங்ஙனமென்றுயிற்று.

இச்செய்யுளிரண்டு நிகண்டவாதிசாத்திரத்தை மறுத்துக் கூறிற்று. (கூ)

இதனுற் சர்வஞ்ஞத்துவங்கூடாது. நீமூன்று மூடமென் றுசொன்னுய், அதிற்றேவமூடமென்றது சர்வஞ்ஞரல்லாதா ரையாத்தரென்கையென்ருய்; உன் சர்வஞ்ஞர் ஞானசொரு பியாயு லோகாக்கிரத் திருப்பரென்ருய் அவருடையஞான மேகதேசமாகையாற் சர்வமுமறியமாட்டார். அறியின், ஏக தேசங்கூடாதாதலா லத்தேவமூடமுமாயிற் றுனக்கெனக் கொள்க. உலோகமூடமாவ தாறுகடன்முதலானதீர்த்தமாடுத லென்ருய், உன்சமயத்து யக்ஷியானவள் பிராமணஸ்திரீயவ ளைத்தனிடமழைத்துப் பொய்கையிலாடச்சொல்ல வவள்யக்ஷி ரூபமாய்நிற்க வவளையுன்னுலயத்திலே வைத்தாய், ஆதலாலு லோகமூடமில்லை. ஸ்ரீகளானவர்க ளாரியாங்கனைகளிடத்தே தன்மோபதேசங்கேட்டா ரியாங்கனைக ளாச்சிரமங்களிலே யிருக்கவென்ருய், இந்தயக்ஷியானவள் ஜயினனிடத்தேகேட் டுன்பாழிலிருக்கையெந்தத்தர்மமாம். பாஷண்டமூடமாவது சடைகட்டல் சீவரம்போர்த்தன் மயிர்க்சயிறெனப் பணிதன் முதலாயின வென்ருய், பீலி முதலானவை பிடித்தாற் பாஷ ண்டமூடமுனக்கே. கொலையால்வருந்தோஷமுங் காரணத்

பாவத்தான்வரு மட்டசமயங்களும் ஆகாதென்றாய். நீ பௌத்தர்முதலாயினாரை வெல்லுதற்குச் சாத்திரமுமிட்டு விருதும் பேருந்தரிக்கவாசைப்படுதலா லதுதுன்மதியாம். அங்கங்களாகச் சொன்னவிடத்துங் காங்கிசையற்றிருக்கவேண்டுமென்றாய். சரிதைப்புறமும் திரவியவேசங்களாலு மிக்குப்பாழ்ப்படுப்பன். அடுப்பனவற்றாலு மற்றுள்ள தோஷங்களாலுமிக்கிருத்தலாலங்கஹீனனுமாம். பொய்யாமையானது புறங்கூறன், மயக்குரைத்தல், குறளைச்சொற் சொல்லுதன் முதலானவை. நாடுகெடவுங் குடிகெடவு மூர்கெடவுந்தான் கேட்கவும் வந்தாலுஞ் சொல்லுவானல்லவென்றாய். புறங்கூறல் புத்தரை நிந்தித்தலாவது முனக்கேயாம். மதுரையிற் சம்பந்தப் பெருமாணாயனார் மடத்து நெருப்பிட்டும், திருநாவுக்கரசுநாயனா ராசாரியராயிருக்கச் சற்றும் பாவத்துக்கஞ்சாம லங்கத்தை நீற்றறையிலடைத்தும், விஷபானம் பண்ணுவித்தும், மதயானையை முன்னேவிட்டும், கல்லிற்கட்டிக் கடலிலிட்டும், இராஜாவுடனே பொய்களைச்சொல்லி இப்படியெல்லாம் விவேகமில்லாமற் பண்ணாத மார்க்கமெல்லாம் பண்ணுவித்தீர்கள்; இப்படிச்செய்வித்ததெல்லாம் சமயநிலைநிறுத்தற் பொருட்டாமாகில் வஞ்சனைசெய்ததாம் அஃதாகாதென்க. எருது குதிரை முதலாயினவைவிற்கை கொள்ளுமிடங்காட்டல் உழவுமுதலாயின தொழில்செய்யும தரைத்தலாகாதென்றாய். உன் சமயத்தாரானவர்க ணரகத்தாராகை நிச்சயமே. அசுபச்சுருதியாகாது. அது வீக்கையும் புத்தர் கதைமுதலானவை கேட்கலாகாதென்றாய். உன் சமயத்து மகாபுராணம் சிந்தாமணி. இவை கேட்டவர்க ணரகமடைகை நிச்சயமாகும். அன்றியுமுன்னுப்தனிர்விகாரியாகிற் சாத்திர மெங்ஙு

னமோதினன். முரசைக் கடிப்பிட்டுத்தாக்கச் சத்தங்கிளம் பினாற்போலச் சகலாத்தரிடத்தி லிகலாத்தர்சென்று "தன்மம் பகவ" என்றபோது "பஞ்சாஸ்திமயம்" என்னும் சத்தங்கி ளம்ப அதனை விரித்துத் தசபதார்த்தமாகச் சொன்னாரென் னில் முரசுதாக்கின தாளமொழிய வேறொருதாள முழங்காது இவனும் "தன்மம் பகவ" என்றபோது தானும் "தன்மம் பகவ" என்னுமதொழிய "பஞ்சாஸ்திமயம்" என்னாது பிர திவசநமும் திருஷ்டாந்தமுமிட்டா யதுவுஞ்சொன்ன தொ ழியச் சொல்லாது. இவை திருஷ்டாந்தஹானியாம் "முர செவை திருமுனைவான்மொழியே" இகலாத்தர் சகலாத்தரினு ஞானமுளாராகவேண்டும், அவர் "பஞ்சாத்திமயம்" என இவர் நவபதார்த்தம் என்பது தசபதார்த்தம் என்பது சர்வப தார்த்தம் என்பது வகையறியாமற் சர்வபதார்த்தமு நித்தியா நித்தியமென்ப தொன்று நிச்சயம் பிறப்பிக்கமாட்டாமற் பித்தர்சொல்போலப் பலபிதற்றுநின்றதாம். நித்தா நித்த மொருவஸ்துவிற் கூடினபடி யெங்ஙனென்னில் திரவியத் தால் நித்தம் பரியாயத்தா லநித்தம் என்றான். அதுபேசின மண்ணானது நித்தம் கடமான தநித்தமென்னில், ஒன்றிலநே காந்தஞ் சொல்லின் மண்ணினுக்கே நித்தியமு மநித்தியமுஞ் சொல்லவேண்டும். அன்றியும் பரியாயமாய்க்கடாதிகளுக்கு மநித்தியமு நித்தியமுமாகச் சொல்லவேண்டும், அதனானித்தி யாநித்தியங் கூடாதென்பதுகருத்து. அன்றியும் பின்னுபின்ன மெங்ஙனமென்னிற் புருஷாமிருகமு நாரசிங்கமுஞ் சரப முந் தணமாவெனவுஞ் சொன்னாய். அவையொரு வவயவ த்தி லொருவவயவமில்லை. அதனா லேகாந்தமொழிய வநேகா ந்தஞ் சம்பவியாது. ஒன்றுக்கொருகுணஞ்சொல்லி னியுமே

காந்தவாதியாம். அநேகாந்தவாதஞ்சொல்லில் தன்மாத்திகாயந்தானே கமனங்கட்குந்திதிக்கு மேதுவென்னவேண்டும், அன்றியும் "கல்வியானல்லன் காமத்தாற்றியன்" என்றல் அவனதுரை. அநுவிருத்தம் வியாவிருத்தம் சுபாவம் சொல்லவேண்டும். நீயநேகாந்தஞ் சொல்லப்புகுந் தேகாந்தமாயொன்றுக்கொருகுணம் சொன்னாய் என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவர் உணர்ந்து சொல்லவல்லதில்லையே. எ-து. எல்லாப்பொருளையுமறிந்து நூல்சொல்லத்தக்க வறிவு இகலாத்தனுக் கில்லையாம். என்றார்.

நிறைந்துகாயமோடுசீவனின்றதாகிலிவ்வுடல், குறைந்தபோதுதானுமித்தொடக்கவே குறைந்திடு, மிறந்துபோகுமிக்கடமிறந்தபோது நீர்குடத், துறைந்துடைந்திடக்குட முலந்தவாறதொக்குமே. (௬)

(இ-ள்.) நிறைந்து காயமோடு சீவனின்றதாகி லிவ்வுடல் குறைந்தபோது தானுமித்தொடொக்கவேகுறைந்திடும். எ-து. இந்தச் சரீரத்தோடு ஆன்மாவானது நிறைந்து நிற்குமென்று கூறினாய், அங்ஙன நிறைந்துநின்றதாகி லான்மாநின்றகாயங் குறைந்தபோ தான்மாவுங்குறைந் தறிவுகுறையவேண்டும். அஃதன்றியும்,—இறந்துபோகு மிக்கடம். எ-து. இந்தச் சரீரமானது கெட்டுப்போம்,—இறந்தபோது. எ-து. இந்தச் சரீரங்கெட்டபோது,—நீர்குடத்துறைந்துடைந்திடக் குடமுலந்தவாறதொக்குமே. எ-து. குடத்தின்கணிறைந்து நின்ற நீர் குடமுடையவந் நீருங்கெட்டாற்போல வான்மாவுங் கூடக்கெடவேண்டுமாகையா லான்மா சரீரமுழுது நிறைந்துநிற்குமென்று சொல்வாயல்லை. எ-று.

இச்செய்யுளான்மா சரீரமுழுது நிறைந்துநிற்குமென்ப தனை மறுத்துக் கூறிற்று. (எ)

கரும்பினிரதம்போற் சரீரம் வியாத்தியென்ருய், கரும்பினிரதமுங் கரும்புள்ளமட்டுமுண்டானாற்போல வான்மாவுஞ் சரீரத்துள்ளொழிய பாஹ்யஞானமில்லா திருத்தல் வேண்டும். ஜீவசங்கோச விகாச்தன்மப்பிரதீபவதி" ஜீவன் சங்கோச விகாசதன்மத்தையுடையவனாய் விளக்குப்போலிருக்கும் என்று நீ சொல்லுதலால் பரிணாமமசேதநத்திற் கேயுள்ளது, சேதநத்துக்கில்லை. என்னை, "பரிணாமோசித்ப்பொரோக்தா சித்ரூப நயுச்சியதே" பரிணாமயோக்கியமுண்டென்கிறது சித்துக்குக் கூடாதென்று சிவாகமஞ்சொல்லுதலாலே சேதநத்துக்குப் பரிணாமமில்லையாகும். அன்றியுமாதித்தனை மேகமறைத்தாற்போல வான்மஞானத்தை ஞானாவரணமறைத்ததென்னில், ஆதித்தனை மறைத்தமேகத்தாற்கீழுள்ளவர்களுக்குத் தெரியாது தன்னளவிற் பிரகாசமுடையதுபோல ஞானந்தன்னளவிற் பிரகாசமுண்டாகவேண்டும். ஆதலாலுனக் கான்மசொரூபந் தெரியாதென்க. "நிறையினுயிருடலி னேர்ந்தபலமைந்து, மறியுமொருகாலத்தென்னாய்." என்பதுமறிக என்ருர் ஞானப்பிரகாசர்.

கண்டநூறருந்தன்மாத்தி காயமோடதன்மமு, முண்டுமீதுகீழுலாவியுற்று நின்றிடப்பொருள், கொண்டதென்னிலத்தமிவ் விரண்டுதன்மைகூடிடா, வண்டுபுட்கள்போலெனில் வழங்கிடாகணத்திலே. (அ)

(இ-ள்.) கண்டதூறருந்தன்மாத்தி காயமோடதன்மமு முண்டுமீது கீழுலாவியுற்று நின்றிடப்பொருள் கொண்டதென்னில். எ-து. ஆன்மாவானது தான்செய்தபுண்ணியத்தாலே தன்மாத்திகாயத்தை யெடுத்துக்கொண்டு மேலாகப்பொருந்தி நன்மையைப்புசித் ததிலேபாந்திடுமென்றும், தான் செய்த பாவத்தாலே அதன்மாத்திகாயத்தை யெடுத்துக் கொண்டு கீழாகப்பொருந்தித் தீமையைப்புசித் ததிலேபாந் திடுமென்று மிப்படி யிரண்டுகாயத்தை யொருகாலத்திலே மாறிமாறிக் கைக்கொண்ட தென்றருகபரமனருளிய நூல் சொல்லிற்றென்னில்,—அத்த மிவ்விரண்டுதன்மை கூடிடா. எ-து. ஆன்மாவொருகாலத்திலேகின் றிரண்டுருவெடுத்துக் கொள்ளமாட்டாது, — வண்டுபுட்கள்போலெனில். எ-து. மயிர்க்குட்டிப்புழு வண்டானாற்போலவு மற்றுள்ள புழு வேட்டு வாளியானாற்போலவும் வேறுபடக்காயமெடுத்துக் கொள்ளுமென்று நீகூறின்,—வழங்கிடாகணத்திலே. எ-து. அந்த ஜந்துக்களுங் கணப்பொழுதிற்பேதித்தனவில்லையாம். ஆகையாலான்மா வேற்றுருவத்தை விரையவெடுத்துக்கொள்ள மாட்டாது. எ-று.

இச்செய்யு ளான்மாதானின்ற தூலகாயத்தைவிட்டுப் போய்ச் சூக்குமகாயத்துடனேநின்று நன்மைதீமையை யநுபவிக்குமதொழிந்துநின்ற தூலகாயத்திலே பேதப்பட்டு, வேற்றுருவெடாதென்று மறுத்துக்கூறிற்று. அதன்மம் அதன் மாத்திகாயத்தை. பொருள், அத்தம், இரண்டும் ஆன்மா. புட்கள் என்றது விகாரம்.

தன்மாத்திகாய மதன்மாத்திகாயமென் றுள்ளவை மேலாயுங்கீழாயு முலாவுவதுநிற்பதுமாகப் பொருள்களைப் பண்

ணுமென்னில் அப்பொருள்நிற்கும் அல்லதுபோகும் அல்லதொ
ழியவிரண்டுதன்மைப்படாது. மலைக்கோட்டமில்லை, வாயு
வுக்குநிலையில்லையாதலாற் கூடாது அப்படியன்று. வண்டு
களும் புட்களும்போலப் பறக்கைக்குச்சிறகு நிற்கைக்குக்கா
லும்போல வென்னில் இரண்டுசெய்கையு மொருகாலத்தே
வழங்கா. எ-ம். தன்மாத்தி பறக்கவுமோடவும், அதன்மாத்தி
நிற்கவு முறங்கவுமென்னில், எப்பொருளும் எக்காலமும்
விரோதியாய் ஒருகுணப்படமாட்டாது. தாவரத்துக்குத்தன்
மாத்திகாயங்கூடாது, சங்கமத்துக்கிரண்டுங் கூடுமென்னிற்
சர்வத்துக்கு மொக்குமென்பதுகூடாது என்க. சங்கமங்கட்
கொருக்காலத்துங் கூடாததானுன் நித்தியத்துவமில்லையெ
ன்க. என்றார் ஞானப்பிரகாசர்.

நீடுபாவபுண்ணியங்களா னிரயவானகங், கூடுவோர்
களின்றுநின்று கூட்டுவோர்களின்மைபி, லோடுமாக
ணைத்திறத்திலுற்றவா றுரைத்தியேல், வீடுமாகணைக்
குநாடும் வில்லிபோலவேண்டுமே. (௬)

(இ-ள்.) நீடுபாவபுண்ணியங்களா னிரயவானகங் கூடு
வோர்களின்று நின்று கூட்டுவோர்களின்மையின். எ-து.
ஆன்மாக்கள்செய்த புண்ணியபாவங்களை யறிந்து நின்றவற்
றிலேசெலுத்துவிப்போ னொருகர்த்தாவில்லையென்று நீ சொ
ல்லின் மிக்கபாவங்களால் நரகங்களையு மிக்க புண்ணியங்க
ளாற் சுவர்க்கங்களையும் பொருந்திநின் றநுபவிப்பாரில்லை
யாம்,—ஓடுமாகணைத்திறத்தி லுற்றவாறுரைத்தியேல். எ-து.
விரைந்தசெலவையுடைய பெரியவம்பிலக்கிலே பட்டாற்
போலச் செய்யப்பட்ட புண்ணியபாவங்கள் செய்தவனிட

த்தே வினையத்தானே சென்று பற்றுமென்று நீ சொல்லுகின்ருயாயின்,—விடுமாகணைக்குநாடும் வில்லி போலவேண்டுமே. எ-து. அப்படிவிடப்பட்ட பெரியகணைக்கு மிலக்கைநாடி யெய்வானொருவில்லிபோலவேண்டுமாதலா லான்மாக்கள் செய்தகன்மங்களை யநுபவிக்கும்படி கூட்டுவா னொருகர்த்தா வேண்டும். எ-று. கூட்டுவோருமின்றெனெ உம்மைதொக்கது. விடுமாகணை விகாரம்.

இச்செய்யுள் நரகசுவர்க்கம் கர்த்தாவில்லையென்பதனை மறுத்துக் கூறிற்று. (கூ)

அளவிட்ற் கரிதாகிய புண்ணியபாவங்கட்கிடாக நரக சொர்க்கபலன்களைக் கர்த்தாவின்றி யான்மாக்களடைவரென்னில் கன்மம் ஜடமாதலா லறிந்து கூடமாட்டாது. ஆன்மாக்களின்னகன்மஞ் செய்தோம் நமக்கின்னது புசிப்பென்றறிய மாட்டா. எ-ம். தான்செய்தபயிரைத் தானறுத்துண்ணுமா போலத்தான்செய்தகன்மமுந்தானே யநுபவிப்பனென்னில், ஜன்மாந்திரகன்மந் தானறியான், நமக்கிப்போது தீமைவருமென்றறிந்தவிட்டு நீங்கவுமறியான், ஆதலாலவையறிந்து கன்மமுள்ளன வநுபவிப்பித்துமுத்திப் பிராரத்தராக்குவானொருகர்த்தாவுண்டெனக் கொள்க. “சகடமே தருமாதருமம் பலஞ்செய்கடனீண்— பற்றில்லைக்காண்” என்பதுமறிக என்ருர் ஞானப்பிரகாசர்.

ஏணதொன்றுபுற்கலத்தி னெய்துமென்னிலுசமே,
காணலாகுமக்கடங்கழிந்த தன்மைபில்லவை, பூண
வேணுமேலுறும்பொருத்த மின்மையொன்றினின்,
மாணவேயணுப்பொருணி கண்டவாதிவைத்ததே.

(இ-ள்) ஏணதொன்று புர்கலத்தினெய்து மென்னின். எ-து. நீகூறிய புற்கலப்பொருளாகிய கல்லுமிரும்புமரமு மோரறிவை யுடைத்தென்று நீகூறின்,—நாசமேகாணலாகு மக்கடங்கழிந்ததன்மையில்லவை. எ-து. ஓரறிவையுடைய வெல்லாந்தாமே கெடுதல்காணலாகும். அக்கல் லிரும்புக டாமே வடிவுகெடுமுறைமை காண்டலில்லை. அஃதன்றியும்,- பூணவேணுமேனுறும் பொருத்தமின்மை. எ-து. பொருந்த வோரறிவுண்டாயிற் கல்லிரும்பு மேல் நரகசொர்க்கம் பொருந்தவேண்டும் அது பொருந்தாமையுங் காணலாகும்,— ஒன்றினின் யாணவேயணுப்பொருணிகண்டவாதி வைத்ததே. எ-து. ஒன்றினுமோரறிவுடைத்தென்று சொல்லப்படாத கல் லிரும்புக ளணுப்பொருளாகமாட்சிமைப்படவைத்து நிகண்ட வாதிநீசொன்னாய் இதனைவேறுசொல்வாரில்லை. எ-று. காண லாகுமென்பதை யிரண்டிடத்தினுங்கூட்டுக. பொருத்தமும் என்னுமும்மை தொக்கிநின்றது. மாணவே. எ-து. இகழ்ச் சிக்குறிப்பு.

இச்செய்யுள் கல்லிரும்புகளணுப் பொருளென்பதனை மறுத்துச்கூறிற்று. ஏணதொன்று-பற்றினல்வலியுள்ளது. கா

ஏணதொன்று. எ-து. வலியுடைத்தாகிய நிலவணுவொ ன்றினுலும் நீரணுவொன்றினுலும் தீயணுவொன்றினுலும் வாயுவணுவொன்றினுலும், — புர்கலத்தினெய்தும். எ-து. முறையே நிலமுதலிய புர்கலமுங் கடல்முதலிய புற்கலமுந் தீபமுதலிய புற்கலமும் சண்டமாருதமுதலிய புர்கலமுமா ய்த் தாமேதோன்றும்,—என்னில். எ-து. என்று சொல்லு வையாகில், — அக்கடங்கழிந்ததன்மையில் நாசமேகாணலா கும். எ-து. அந்தநிலப்புற்கலத்தின் பேதமாகிய குடமு டைந்த முறைமையா லதன்காரணமாகிய நிலவணுக்கு மநித்

தியத்தைக் காணலாகும், ஆதலால் அணுநித்தியமென்பது கூடாது. அன்றிநிலமுதலிய நாலணுவுங்கூடி ஒருருபமாமென்னில்,—ஏனோர்நாலவை யொன்றினிற் பூணவும் பொருத்தமின்மை. எ-து. வலியுடைய நிலவணுமுதல் நான்காகிய அந்தவணுக்க ளொன்றுக்கொன்று பகையாதலால் ஒருருபத்திற் பொருந்துதற்கேற்கும் பொருத்தமில்லை, ஆதலாலவ்வாறு கூடமாட்டா. அதுவுமன்றி,-அணுப்பொருள்மாணநியாயவாதிவைத்ததே. எ-து. அணுத்தானே பரிணமிக்குமென்றது உன்கொள்கையன்று மாட்சிமைப்பட்ட நியாயவாதியான அமணரில் ஆசீவகன்கொண்ட கொள்கையாம். எ-று, எனவே உனக்கதைத் தேர்ந்தறியு மறிவில்லை என்பதாயிற்று. புற்கலத்தும் என்புழி. அத்தும் இன்னும் அல்வழிக் கண்வந்தன. என்றார் ஒருசாயாசிரியர். இதனில் பூணவேணுமேலுறும். எ-னை. பூணவேனோர் நாலுறும். எ-ம். நீகண்டவாதிவைத்ததே எ-னை. நியாயவாதிவைத்ததே. எ-ம். கூறியதூஉம் விசேஷப் பொருளுரைத்திருப்பதூஉம் காண்க. ஞானப்பிரகாசர், இந்தப்புற்கலம் சூக்குமம், சூக்குமசூக்குமம், சூக்குமதூலம், தூலம், தூலசூக்குமம், தூலதூலமெனவாறுவகைப்பட்டிருக்குமென்றாய். அவைதாம் சன்மாவரணுதியுமாதியாகி நிற்கின்றகந்தமும், ஞானவரணுதி கன்மகந்தமும், ஆஹாராவரணுதிஸ்தோ கன்மகந்தமும், ஸ்ரவணுதிந்திரிய சரசமனசாயகந்தமும், தமஸ்சாயாத்பவாயுப் பிரத்தியதிகந்தமும், அவஸ்த விஷயரைவகரண பூதலாதி கந்தமும் என்றாய் அவைவெல்லாங்கூட்டி யுருபாருபமென்னுமல் "பஞ்சாஸ்திமயம்" என்றளவிட்டுச் சொல்லியதென்னை அன்றிச்சைவரைப்போலச் சேதனுசேதனமென்று பேசுகைக்

கத்தமன்றே அறியாதவனேயெனவும். "ஏண்ணுக்கலென்று யவ்யவத்தாலீறுமுறுங், காணவற்றினித்தமில்லக்காண்" ஒன்றுதேயொன்றேடொன் றெவ்வாமையானுன்கு, மொன்றியுருவாமெய்ஙனேதி. எ-ம். அறிக. என்றார்.

ஆறுகாரியங்கண்மாற வேதவங்களாமெனின், மாறிவாணிகஞ்செயா திருக்கவந்திடாதனம், ஈறிலாதலூழதென்னினெங்கு முள்ளதூழதே, பேறுகாரியம்விடப் பிறப்பதில்லைபேசிலே. (கக)

(இ-ள்.) ஆறுகாரியங்கண்மாற வேத வங்களாமெனின். ஏ-து. அறுவகையுவர்ப்புக்களு நீங்க வே தவமாமென்று நீ கூறின்,-மாறிவாணிகஞ் செயாதிருக்கவந்திடாதனம். எ-து. பொருள்களைப்பரிவர்த்தனைசெய்து வாணிகஞ்செய்யாதிருப் பப்பொருள்வந்தடையாது அதுபோல உவர்ப்புமாறியொரு தவஞ்செய்யாதிருந்தாற் றவம்வந்துகூடாது,—ஈறிலாதலூழதென்னி னெங்குமுள்ளதூழதே. எ-து. கேடில்லாதமுன்னை வினைப்பயனாலே தவமுண்டாமென்றுசொல்லின் உவர்ப்பைக்கைவிடுதன்முதலாயினவு முன்னைவினைப்பயனுமாதலால்,—பேறுகாரியம் விடப்பிறப்பதில்லை பேசிலே எ-து. தவமாகியபேறு தவஞ்செய்தலாகிய காரியத்தை விட்டாலுண்டாகாது சொல்லுங்காலத்து. எ-று.

இச்செய்யுள் கந்த ரச ரூப பரிச சத்த பரிணமமாகிய வாறுவர்ப்புக்களையும் விடுதலே தவமென்பதனை மறுத்துத் தவவொழுக்கங்களினின்று தவஞ்செய்தாலல்லது ஆறுகாரியத்தை விடுதலினாலேயே தவஞ்சித்தியாதென்பது கூறிற்று.

ஆறுகாரியமாவது உழவு, தொழில், வரைவு, வாணிகம், சிக்ஷை, சிற்பம், என்பாருமுளர். (கக)

ஊழின் வலிதொட்டே யறுவகைத்தொழிலும் வருமெனக்கொள்க. மனோவாக்குக்காயத்தாற் செய்யப்பட்டவெல்லாமூழ்தொட்டுவரும். இவைமூன்றையுமொழிந்ததவநிலைமையடைந்தவர்க்கல்லது பிறப்பறாதென்க. "அறுதொழிலுமில்லையசரங்களுக்கு முறுதிபெறுமுத்தியுளதோ." என்பது மறிக என்றார் ஞானப்பிரகாசர். ஆறுகாரியம். எ-து. உழவுமுதலிய ஆறுதொழிலென்பதிவர்கருத்து. மற்றொருவரும் ஒருபொருளைக்கொடுத்தொருபொருளை வாணிகத்தைச் செய்யாதிருந்தாற் பொருள்வாராது அதுபோல் தவவொழுக்கங்களைச் செய்யாதிருக்கத் தவம்சித்திக்கமாட்டாது. பொருள்வந்து சேர்தலூழென்னில் பொருளகளை யார்ஜிக்குமிடத்தும் தவஞ்செய்யுமிடத்து மற்றிடத்துங் காரணமாயுள்ள தூழாதலால், உழவுமுதலிய தொழில்களை விடுதலாற் பந்தநிவர்த்தியில்லை. என்றார்.

உடல்வருந்தல்மாதவங்களுறுதியென்றுரைத்திடிற், படவருந்துநோயினோர்கள் படர்வர்பொன்னெயிலெனுய், திடவருந்தவின்பமிச்சை செய்தல் செய்தல் செய்தியேற், கெடவரிந்திடாயுனசிகேடிலின்பமுன்னியே. (கஉ)

(இ-ள்.) உடல்வருந்தல் மாதவங்களுறுதியென் றுரைத்திடில். எ-து. சரீரம்வருந்துதலே பெரியதவத்திற்குறுதியென்று நீசொல்லின்,—படவருந்துநோயினோர்கள் படர்வர் பொன்னெயிலெனுய். எ-து. துக்கமாகவுடல்வருந்தச்

சரீரவின்பத்துக்கு மாறுயாடுசெய்தலைச் செய்வதுவே கேடில்லாதமோக்ஷத்தின் செய்தியென்றமையான் நோயினுன் மனுேதுக்கிகளாய் மெலிவோர் பொன்னெயில்வட்டஞ் சேர்வரென்று நீ சொல்லாய்,—திடவருந்தவின்பமிச்சை செய்தல் செய்தல் செய்தியேல். எ-து. முத்தியின்பத்தையாசை செய்தல் சரீரம் வருந்தச்செய்தற்றன்மையே யென்னின்,—கெடவரிந்திடாயுனுசி கேடிலின்ப முன்னியே. எ-து. அந்த முத்தியின்பத்தைக்கருதியுன் மூக்கையறுத்திடுவாயாக. எ-று. திடம் திடவெனநின்றது. வருந்த. எ-து. உடல்வருந்த வென்பதாயிற்று.

இச்செய்யுள் சரீரம்வருந்துதல் மோக்ஷமென்பதனை மறுத்துக்கூறிற்று. செய்தி தன்மை. (கஉ)

உடல்வருந்தல். எ-து. தலையைப்பறித்தும் வெயிலினின்றும் அக்நியினுலே காயப்பட்ட சிலையிற்கிடந்தும் இவைமுதலான வற்றுல் சரீரம்வருந்தல். எ-ம். சரீரவருத்தமே பலமாகாது பத்தியும் ஞானமும் ஆசையறுதியுமே மேலான நன்மையைத்தரும்.பத்தியுஞ் சர்வாநுக்கிரகனுய்ச் சேதனுசேதன பாரிதனுன சிவனுடைய சீபாதப்பற்றுனேயாக வேண்டும். சீவன்கள் போலக் கன்மபலத்தாற்றேவபலமுதலானவை பெற்ற பிராணிகள்மேற் பிரபத்தியாகாது. ஞானமவனருளிச்செய்த சைவாகமப்படியே யாகவேண்டும். ஆதலாலுடல் வருத்தமும் அவனை நோற்கின்ற பலமாவதெனக்கொள்க. என்றுர் ஞானப்பிரகாசர். மற்றொருவர் கெடவரிந்திடாய். எ-னை. கெடவருந்திடாயுனுவி என்று பாடமோதி உன்னுயிர் கெடும்படிக்கு வருத்தத்தைச் செய்துகொள்வாய். என்றுரையுரைத்தனர். கெடவருந்திடாயுனுசில். என்றும் பாடம்.

பூர்வகன்மமற்றிடப்புசித்தபின்புபொன்னெயி, னேர்வதென்னிலக்கன்மத்து நிச்சயமிலாமையிற், றீர்வதின்மைதீரின்வாயில்சேர்வதின்மைதெண்கட, னீர்வறந்தபின்பு பூனைமீனருந்தநின்றதே. (கங)

(இ-ள்.) பூர்வகன்மமற்றிடப் புசித்தபின்பு பொன்னெயினேர்வதென்னின். எ-து. முன்ஜநநங்களிலுள்ள கருமந்தொலைய விந்தஜநநத்திலேபுசித்தாற் பொன்னெயில் வட்டத்தைச் சென்று பொருந்துமென்று நீசொல்லின்,—அக்கன்மத்து நிச்சயமிலாமையிற்றீர்வதின்மை. எ-து. அக்கன்மத்துக்களவின்மையால் நியமிக்க வறிவதில்லையாய்ப் புசித்துத் தொலையாதுமாம்,—தீரின் வாயில்சேர்வதின்மை. எ-து. கன்மம் புசித்துத் தொலைவுபெற்று லிந்திரியங்களுடன் சத்தாதி கூடிவதின்மையாம். அவை கூடாதொழியவே மோக்ஷவுபாயமான தவஞ்செய்தலு மில்லையாம். ஆதலாற் கன்மத்தைத் தொலையப்புசித்துப் பொன்னெயில்வட்டத்தை யடைவோமென்று நீகருதியிருத்தல்,—தெண்கடனீர்வறந்தபின்பு பூனைமீனருந்தநின்றதே. எ-து. பூனை தெளிந்த சமுத்திரத்து நீர்வற்றினவாறே மீன்றின்னக்கடவோமென்றுகருதி யதுவற்றுமளவும் பார்த்திருந்ததன்மைக்கொக்கும். எ-று. ஏகாரம் தேற்றம். தெண்கடலென்றுற் கன்மமளவில்லையென்பது கருத்து.

இச்செய்யுள் கன்மந்தொலையப் புசித்துவிட்டால் மோக்ஷமடையலாமென்பதனை மறுத்துக் கூறிற்று. (கங)

நிகண்டவாதிகூறுமுத்தி இகலமோக்ஷமென்றுஞ் சகல மோக்ஷமென்றும் இருவகைப்படும். அவற்றுள் இகலமோக்ஷம்பந்தமாதலால் ஈண்டுநிராகரித்தது சகலமோக்ஷத்தை யெனக்கொள்க. இவற்றினியல்புக்களெல்லாம் விரிவுரையிற் காண்க. என்றுமோருரையாசிரியர்.

கூறுகூவன்மன்னுமக்குடங் குறித்துநீள்கரை, யேற லுற்றதன்மைநீ யொருத்தரின்றியேறுதல், வேறொ ருத்தனக்குடத்தை மீதுநின்றெடுக்கவே, யேறலுற் றதன்மைபிற் சிவன்றிறத்துநின்றிடே. (கச)

(இ-ள்.) கூறுகூவன்மன்னுமக் குடங்குறித்து நீள்கரை யேறலுற்றதன்மை நீயொருத்தரின்றியேறுதல். எ-து. சொல்லப்பட்டகிணற்றினுட் கிடக்குங் குடங் கரையைநோக்கித் தானேயேறிஞற்போலும் ஒருகர்த்தாவின்றிப் பொன்னெயில் வட்டத்தை நீசேர்குவமென்னுந்தன்மை,— வேறொருத்தனக் குடத்தை மீதுநின்றெடுக்கவே யேறலுற்றதன்மையிற்சிவன் றிறத்துநின்றிடே. எ-து. ஒருத்த னந்தக்கிணற்றிற் கிடந்தகுடத்தைமேலேநின்றெடுக்க வக்குடங்கரையேறியதன்மையொக்கக் கர்த்தாநின்று சன்மத்தைத்தொலைவித்து மேலாகியவீடுபேற்றைக் கொடுக்கவேண்டும். அப்படிக்கொடுப்பான் சிவனேயாகையா லந்தச்சிவனையே தெய்வமாகக்கொண்டு அவனருளியவேதாகமங்களின் றிறமாகிய சரியைகிரியாயோக ஞானங்களிலே நீயுநிற்பாயாக. எ-று.

இச்செய்யுள் கர்த்தாகூட்டாமன் மோக்ஷங்கூடாதென் பதா கூறிற்று.

அருகனென்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுட்காறும் பதி ஞன்கு திருவிருத்தம் நிகண்டவாதிமதத்தை மறுத்துக் கூறி ற்று. (கச)

இதனுல் அகர்த்திருவாதம் நிஷ்பலமென்பது கருத்து என் ருர் ஞானப்பிரகாசர். மற்ருெருவர் காலமாகாசமிரண்டிற்கு மவன்கூறுமிலக்கண முடன்பாடாதலாலும் பசுவுக்குப்பெத் ததிசையிலக்கணஞ் சிறிதொத்தலானும் அந்தமூன்றினையு மறு த்திலர் என்ருர்.

நிகண்டவாதி மதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—கசுரு.

ஆசீவகன் மதம்.

என்னுயிரதற்குப்போல வெவர்க்குமொத்திருப்ப னென்று, தன்னுயிர்வருந்தத் தானுந்தலைபிணைப்பரித் துப்பார்மேன், மன்னுயிரெவற்றினுக்கும்வருந்தவே யறங்கள்சொல்லு, மன்னதோர் வாய்மையாசிவக னமணர்களிற்கூறும். (க)

(இ-ள்.) என்னுயிரதற்குப்போல வெவர்க்கு மொத்தி ருப்பனென்று. எ-து. எனதான்மாவுக்கு யான்கிருபை செய் யுந் தன்மைபோல வெல்லாவான்மாக்களுக்கும் யான்கிருபை யொத்திருப்பனென்றுசொல்லின், — தன்னுயிர் வருந்தத்தா னுந் தலையிணைப்பரித்து. எ-து. தன்னுடையவான்மாவருத்

தப்படத்தன் றலைமயிரைப்பறித்து,—பார்மேன் மன்னுயி ரெவற்றினுக்கும் வருந்தவேயறங்கள்சொல்லு மன்னதோர் வாய்மையாசீவக னமணர்களிற்கூறும். எ-து. உலகின்கணி லைபெற்ற வான்மாக்களெல்லாவற்றினுக்கும் வருத்தமுறுவ துவே யறங்களாகச் சொல்லுமென்னுந் தன்மையாகிய சொ ல்லை யமணரிருவகையரி லாசீவகன்சொல்லும். எ-று. ஓர் அசை. தலையினைப்பறித்தென்றது ஆகுபெயர், சினையுமுதலு மயங்கும்.

மேலாசீவகன்மதங்கூறுவா ரதனுளிச்செய்யுளா சீவகன தியல்பு கூறிற்று. (க)

திகம்பரமொப்பினு மநேகாந்தவாதிகளாகிய நிக்கிராந் தரல்லாத வாசீவகனென்க. என்றார் ஞானப்பிரகாசர்.

வரம்பிலாவறிவனுதிவைத்தநூற்பொருள்கடாமு, நிர ம்பவேயணுக்களைந்து நிலம்புனறீகால்சீவன், பரந்தி வைநின்றபான்மை பாரதுகடினஞ்சீதம், தரும்புனல் சுடுந்தீவாயுச்சலித்திடு முயிர்போதத்தாம். (உ)

(இ-ள்.) வரம்பிலாவறிவனுதி வைத்தநூற்பொருள்க டாமு நிரம்பவேயணுக்களைந்து. எ-து. அநந்தஞானனாகிய வருகபரமனுதியிலேயுண்டாக்கப்பட்ட நூலின் பொருடானும் பூரணமாக வான்மாக்களைந்தென்று கூறும். அவையாவன,- நிலம்புனறீ கால்சீவன். எ-து. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆன்மா,—பரந்திவைநின்ற பான்மை பாரதுகடினஞ் சீதந் தரும் புனல்சுடுந்தீ வாயுச்சலித்திடு முயிர்போதத்தாம். எ-து. அவ்வான்மாக்களைந்தும் விரிந்துநின்ற முறைமை

சொல்லிற் பிருதிவிகடினமாம், அப்பு சைத்தியமாம், அக்கினியுஷ்ணமாம், வாயுசலநமாம், ஆன்மாபோதத்தையுடைத்தாம். எ-று. ஈற்றில் நூல் கூறுமென வொருசொல் வருவித்துரைக்க. ஆமென்பதனை ஐந்திேனாடுங் கூட்டுக.

இசசெய்யுளாசிவசன்மதமாகிய வணுக்களைந்தின் பெயருங்குணமுங் கூறிற்று. (உ)

வரம்பிலாவறிவனுதி வைத்தநூற்பொருள்கடாமு நிரம்பவேயணுக்களைந்து. எ-கு. அளவிலாதவறிவினையுடைய மற்கலியென்பானெமக்காப்தன், அவனருளிச்செய்த வொன்பதுகதிர் என்பதெமக்கு நூல், அந்நூல்களிற் சொல்லப்பட்டவதிசுக்குமமாகிய வணுக்கள் நிலநீர்தீக்கால் உயிர் என்னுமைந்து. எ-ம். இப்பொருளைந்து முடனுள்ளன கெடா இல்லதுதோன்றுது. ஆழ்தல் மிதத்தல் பொருணிகழ்ச்சியெனச் சொல்லுவன். இதற்கவனுரை "என்றலுமற்கலிதானெயின்ற யினியொன்பது வாங்கதிர்நூலியாமுடையன், மன்பொருணுஞ் பொருணந்தியல்பா யவையின்ப நிகழ்ச்சியங் காட்படெனச்சொல்ல" "உரையானிறைவன் னுண்ணுகமிலனுய்த், திரையானரையான் றெரிவில்லுருவம், வளையாம்வகை வாளிடும் வில்லனையன், புரையாவறிவிற் புகழ்பூரணனே." என்பதறிக என்றார் ஞானப்பிரகாசர்.

பார்புனல்பரக்குங்கிழ்மேற் படர்ந்திடுந்தேயுவாயுச்,
சேர்வதுவிலங்கினுள்ள மவற்றொடுஞ்சேரும் வேறு,
சார்வதுபெற்றபோது சார்ந்தவப்பொருளின் றன்மை,
நேர்வதுமாகிநிற்கு மிதுபொருணிகழ்த்துமாறே. (ந)

(இ-ள்.) பார்புனல்பரக்குங்கீழ். எ-து. பிருதிவியு மப்புங் கீழே விரிவையுடைத்தாநிற்கும்,—மேற்படர்ந்திடுந் தேயு வாயு. எ-து. தேயுவும் வாயுவு மேலேவிரிவையுடைத்தாய் நிற்கும்,—சேர்வது விலங்கிலுள்ள மவற்றெடுஞ் சேரும். எ-து. ஆன்மாவானது காயத்தோடுஞ்சேருஞ் சேர்வையை நீங்கிஞற் பிருதிவி யப்புத் தேயு வாயுவுமாகிய நாலான்மாக் களோடுங் கூடிநிற்கும்,—வேறுசார்வது பெற்றபோது சார்ந்தவப்பொருளின் றன்மை நேர்வதுமாகிநிற்கும். எ-து. இவற்றை வேறுபடக் காயத்தைச் செறிவாகப் பெற்றவிடத்துக் காயத்தை விடமாகக்கொண்டு அதனது தன்மைதாஞகப் பொருந்திநிற்கும்,—இது பொருணிகழ்த்துமாறே. எ-து. இது பஞ்சான்மாக்கள் செய்தியைச் சொல்லும்வழி எ-று.

இச்செய்யுள் பஞ்சான்மாக்களு நிற்கும்வழி கூறிற்று.

பார்புனல் பரக்குங்கீழ்மேற் படர்ந்திடுந்தேயுவாயுச் சேர்வது விலங்கியுள்ள மவற்றெடுசேரும். எ-கு. பார்பரக்கும், புனல் கீழ்படர்ந்திடும், தேயுமேல் வாயுவிலங்கிச்சேர்வது உள்ளமவற்றெடுசேரும். என அனுவதித்து, பூமிவிரியும் நீர்கீழ்நோக்கிச் செல்லும் தீமேனோக்கிச்செல்லும் வாயுகுறுக்கிட்டோடும் உயிரான திவற்றேடுசேரும் என உரையுரைத்தனர் ஞானப்பிரகாசரும் மற்றேராசிரியரும். படர்ந்திடும் என்னுஞ்சொல் சிங்கநோக்காய்ப் புனல்கீழ்படர்ந்திடும் தேயு மேல் படர்ந்திடும் என நின்றது. இவைபொருளைப் பிரதிபாதிக்கும் நவகதிருட்சொல்லப்பட்ட நிலவணுமுதலைந்து மூர்த்த திரவியங்களாம். அவற்றுளறிதலு மறிவித்தலு முதலாயின வுயிரின்பாலாம். நிலமுதல் நான்கின் பாலாயினவை "மொன்றின பொருவி" என்றபாட்டில் வருவதறிக.

உணர்தராவணுக்கணுன்கு மொன்றுகெட்டொன்ற தாகா, புணர்தராவொன்றிற்புக்கொன் ருகிலும்பொ ருந்திவாழு, மணைதராபுதியவந்திங் கழிதராபழைய வான, விணைதராவொன்றொன்ருகி மாறுதலொன்று மின்றே. (௪)

(இ-ள்.) உணர்தராவணுக்கணுன்கும். எ-து. ஜீவனை யொழிந்த நான்கான்மாக்களு மொன்றையொன் றறியுந்தன் மையல்லவாம்,—ஒன்று கெட்டொன்றதாகா. எ-து. அவ்வா ன்மாக்கணுன்கு மோரொன்று கெட்டோரொன்றுமாகா,— புணர்தராவொன்றிற்புக் கொன்று. எ-து. ஓரான்மாவிலி டத்திலே புக்கோரான்மாகூடி நில்லாது,-ஆகிலும் பொருந்தி வாழும். எ-து. அப்படிக் கூடாவாயினுங் காயமாமிடத்துப் பொருந்தியுநிற்கும்,—அணைதராபுதியவந்திங்கு. எ-து. அவ் வான்மாக்களநாதியிற் கூட்டமின்றி யிவ்விடத்துப் புதிதாக வந்துகூடுவதுஞ் செய்யா,—அழிதாரபழையவான. எ-து. பழையவான்மாத்தன்மைகழிதலு முண்டாகாது,—இணைதரா வொன்றொன்ருகி. எ-து. அவ்வான்மாக்கள் கூடுமிடத்துச் சேரக்கூடுவதொழிந்து ஒரொன்ருகக்கூடுவதுஞ் செய்யா,— மாறுதலொன்றுமின்றே. எ-து. இவையிற்றின் செய்தியொ ருக்காலு மொழிவதில்லை. எ-று.

இச்செய்யு ளான்மாவொழிந்த நாலுவகையணுக்களும் வேறுபட்டு நிற்குமுறைமையு மறிவின்மையு மழிவின்மையுங் கூறிற்று.

சூரியன் விளங்கும் பகர்காலத்திற் செவ்வாய் முதலிய கிரகங்கள் மறைந்தனபோலவு மிராக்காலத்துத் தோன்றுவன போலவுங் காணினு, மந்தக்கிரகங்கள் எக்காலத்து மொருதன்மையாயிருந்தாற்போல வணுக்களுநாசமு முற்பத்தியுமுடையனபோலக் காணினு மவைநித்தியமேயாம். என்றார் ஞானப்பிரகாசரு மற்றோருரையாசிரியரும்.

கொண்டுமுன்விரித்தனீட்டல் குறுக்குதல்குவித்தலூன்ற, லுண்டுதின்றுலத்தன்மீட்ட லுடைத்திடலொன்றுமொண்ணு, விண்டுபின்புறம்பும்போகும் வேறுநின்றுள்ளுமேவும், பண்டுமின்றென்றுமெங்கும் பரந்தொருதன்மைப்பாலே. (ரு)

(இ-ள்.) கொண்டுமுன்,விரித்தனீட்டல் குறுக்குதல் குவித்தலூன்ற லுண்டுதின்றுலத்தன்மீட்ட லுடைத்திடலொன்றுமொண்ணு. எ-து. முன்கூறியவான்மாக்களை முன்னேயுண்டாக்கிக்கொண்டு பரப்புதலு மதனைவர்த்திப்பித்தலு மதனை யெல்லையிலே குறுக்குதலுஞ் சேரவெடுக்குதலு மவையிற்றிலேயுற்று நிற்றலு மதனையுண்டு தின்று கெடுத்தலு மீளவுண்டாக்குதலு மவையிற்றைப் பிளந்திடுதலுமென்னு மிவையிற்றினொன்றுஞ் செய்யவொண்ணாது,—விண்டுபின் புறம்பும்போகும். எ-து. விரிந்தவண்டகோளகைக் கப்புறத்துமுண்டாம்,-வேறுநின்றுள்ளுமேவும். எ-து. அதற்குவேற்றுமைப்பட்டுருக்களுள்ளும் பொருந்தும்,—பண்டுமின்றென்றுமெங்கும் பரந்தொருதன்மைப்பாலே. எ-து. முற்காலத்து மிக்காலத்து மெக்காலத்து மெவ்விடத்து நிறைந் தொருதன்மைப்பகுதியாயிருக்கும். எ-று. விரிதல் பரப்புதல், அஃதாவது—

சிருஷ்டி. நீட்டல் வர்த்திப்பித்தல், அஃதாவது—திதி. குறுக்கல் ஒடுக்குதல், அஃதாவது—சங்காரம். குவித்தல் ஒன்றினுட் செறித்தல், அஃதாவது—சருவசங்காரம். ஊன்றல் உற்றுநிற்றல், அஃதாவது—முத்தியின்கட் சேறல். உண்டுதின்றுலத்தல் உண்டுதின்றுகெடுதல், தின்றபகுதியு முணவாகலின் உண்டுதின்றென்று கூறிற்று. மீட்டல் மீளவிடுதல், அஃது உமிழ்தல். உடைத்திடல் சின்னப்படுதல், அஃதண்டங்களைக் கெடுத்தல்.

இச்செய்யு ளிவ்வணுக்களொருவரானியமிக்கப்பட்டதல்லவென்று கூறிற்று. (ரு)

கண்ணினிற்காணவொண்ணு சனித்தந்தக்கன்மத்தாலே, நண்ணிடுமுருக்களாகிநின்றபின் நரரோகாண்பார், விண்ணினிற்றேவர்காண்ப ரோரணுமிக்கநான்கா, யெண்ணியபொருள்களெல்லா மிசைவதென்றியம்புமின்னே. (சு)

(இ-ள்.) கண்ணினிற்காணவொண்ணு சனித்தந்தக்கன்மத்தாலே நண்ணிடுமுருக்களாகி. எ-து. முற்கூறியவணுக்களுந்தினில் ஆன்மாவென்னுமணுப்பொருள் கண்ணிற்காண்டற்கரிதாகி யக்கன்மத்தாலேஜநித் துருக்களாகப் பொருந்திநின்றிடும்,—நின்றபின் நரரோகாண்பார். எ-து. அக்கன்மவுருவொடுநின்றபின் நரரோகாண்பார் கூடநின்றபின் யாவரேகாண்கிற்பார்,—விண்ணினிற் றேவர்காண்பர். எ-து. விண்ணுகிய பொன்னெயில்வட்டத்திற் றேவராகிய வருகபரமனே காணவல்லான்,—ஓரணுமிக்கநான்காயெண்ணிய பொருள்களெல்லா மிசைவதென்றியம்புமின்னே. எ-து. ஆன்

மவணுவென்றுந் தன்னையொழிந்த வணுக்கணுன்குமா யெண்ண ணப்பட்ட வுருக்களெல்லாவற்றுள்ளு மிப்படிச்சென்றுபொருந்தும் என்றுகண்ட நூல்சொல்லும். எ-று. நான்காயென்பதனை நான்குமாயென வும்மைவிரிக்க.

இச்செய்யுளணுக்களைந்தி ருன்மவணுவினியல்பு கூறிற்று. நரரோகாண்பார் உருவங்கள்கொண்டுநின்றால், நரராற்காணலரிது. விண்ணிற்றேவர்காண்பார் சுவர்கத்திலுள்ள தேவர்காண்பாரோ, அணுவேமிக்கநான்காக நிலவணுமுதலாக வெண்ணப்படாநிற்கிற பொருள்களெல்லாம் பொருந்தியவதிப்படிக்கேபொருந்துமென்றவாறு. இவை பொருளைந்தினிலைமையெனக்கொள்க. நான்காவெண்ணியபொருள் நிலநீர் தீ வளி. (௬)

"கண்ணினுற்காணப்படாவவைகளாக்கையென, வண்ணுமறம்பாவத்தினால்." "நரர்காண்பாராக்கையினைக் காணாரந்நான்குஞ், சுரர்காண்பரென்றேதுணி." இவை பொருளைந்தினிலைமையென்பதுமறிக என்றார் ஞானப்பிரகாசர். இயம்பும். எ-து. ஒன்பது கதிரென்னு நூல்சொல்லும். எ-ம். கண்ணினிர்காணவொண்ணு எனவே அருவமென்றுயிற்று. நின்றபின். எ-து பின்னிற்றுவினையெச்சம். மிக்க. எ-து. ஒழிந்தவென்னும்பொருட்டு எ-ம். கூறினர் மற்றேருரையாசிரியர்.

ஒன்றினையொருவிமூன்றங் குற்றிடாவிரண்டுவிட்டு,
நின்றிடா திரண்டுங்கூடு நெறிநிலநான்குநீர்மூன், றின்
றிரண்டழல்காலொன்று யிசைந்திடும்பூமியிவ்வா, றெ
ன்றுநீர்திகாலாகி யீண்டுவதென்றியம்பும். (எ)

(இ-ள்.) ஒன்றினையொருவிமூன் றங் குற்றிடா. எ-து. ஆன்மாவொழிந்த நிலஞாதியான வணுக்கணான்குந் தம்மிற் கூடுமிடத்து ஒரணுவைவிட்டு மூன்றணுத்தம்மிற்கூடி நில்லா,—இரண்டுவிட்டு நின்றிடாதிரண்டு. எ-து. இரண்டணு விட்டு இரண்டணுக்கூடா (எனவே கூடுமிடத் திவை நான்குங்கூடி நிற்குமென்பதுகருத்து)—கூடுநெறி. எ-து. இவைநான்குந் தம்மிற் கூடிநிற்குமென்று சொல்லுமுறைமை யாவ தெங்ஙனமென்னில்,—நிலநான்கு நீர்மூன் றின்றிரண் டழல் காலொன்ருயிசைந்திடும். எ-து. பிருதவியில் கந்த ரசரூபபரிச நான்கும், அப்புவில் ரசரூபபரிசமூன்றும், அக்கி நியில் ரூபபரிசமிரண்டும், வாயுவிற்பரிசமொன்றுமாகிய குண ங்கள் பொருந்தியிருக்கும்,—பூமியிவ்வாறென்று நீர் தீகா லாகி யீண்டுவதென்றியம்பும். எ-து. இந்த முறைமையிலே பிருதிவி யப்புத் தேயு வாயுவென்றகூறு மணுக்களின் குணங் கள் கூடிநிற்குமென்று சொல்லு நூல்கள். எ-று.

இச்செய்யுளணுக்கள் நான்கின்குணங்களே யுருக்களிற் கூடிநிற்குமென்பது கூறிற்று. (எ)

வெண்மைநன்பொன்மைசெம்மை நீல்கழிவெண்மை
பச்சை, யுண்மையிவ்வாறினுள்ளுங் கழிவெண்மை
யோங்குவீட்டின், வண்மையதாகச்சேருமற்றிவையு
ருவம்பற்றி, யுண்மையவ்வொட்டுத்தீட்டுக் கலப்பினி
லுணருமென்ருன். (அ)

(இ-ள்.) வெண்மை நன்பொன்மை செம்மை நீல் கழி வெண்மை பச்சை யுண்மையிவ்வாறினுள்ளும். எ-து. வெண் மையுநன்ருகிய பொன்மையுஞ் சிவப்பு நீலமு மிக்கவெண்

மையும் பச்சையுமாகிய வூறுவன்னமுள, இவ்வாறு வன்னத்தினுள்ளும்,—கழிவெண்மையோங்குவீட்டின் வண்மையதாகச்சேரும். எ-து. மிக்கவெண்மையென்று கூறியவன்னமே பெரிய பொன்னெயில் வட்டத்துக்குச் சிறப்புடைத்தான வன்னமாகச்சேரும்,—மற்றிவையுருவம்பற்றி. எ-து. ஒழிந்த பொன்மை வெண்மை சிவப்பு நீலம் பச்சை யென்னுமைந்து வன்னமு மற்றையணுக்களுன்கினுன வடிவுகளைக்கூடிநிற்க,- உண்மையவ்வொட்டுத் திட்டுக்கலப்பினி லுணருமென்றுன். எ-து. அந்த வான்மாவான திவ்வுருக்களைப்பற்றுதல் இழிதல் கூடுத லிவையிற்றுலறியுமென்றுன். எ-று. உண்மையென்ற தான்மாவுக்காகு பெயர். அவ் என்ற தகரச்சுட்டு, அவ்வுண்மையெனக்கூட்டுக. இன் ஐந்தனுருபு, ஏதுப்பொருண்மைக்கண்வந்தது.

இச்செய்யுள் வன்னமாறென்பதூஉ மவற்றுள் வீட்டிலகைப்பற்றி நிற்கும்வன்ன மின்னதென்பதூஉ முருக்களைப்பற்றிநிற்கும் வன்னமின்னதென்பதூஉங் கூறிற்று. (அ)

"ஒட்டுத் திட்டுக்கலப்பிளுெரு முயிர்தானிவற்றை, பட்டபொழுதுடலின்பால்." என்றுன்யா ஒட்டுத் திட்டுக்கலப்பாலறியுமென்பதுங்காண்க என்றுர் ஞானப்பிரகாசர். கழிவெண்மையோங்கும் வீட்டின்வண்மையதாகச் சேரும். எ-து. மிகுந்த வெள்ளைநிறமானது உயர்ந்த மோக்ஷத்தின் குணமாகப் பொருந்தும்,—மற்றிவையுருவம்பற்றி யுண்மையில். எ-து மற்றவைந்து நிறங்களும் வடிவுகளைப்பற்றி யிருத்தலாவது பெத்தமாம். மோக்ஷத்தையு முருவப்பொருள்களையுமுயிரானது,—ஒட்டுத் திட்டுக்கலப்பினி லுணருமென்றுன். எ-து.

நூலைக்கேட்டலானும் விடயங்களைத் தீண்டலானு மிந்திரியங் களைக்கலத்தலானு மறியுமென் றருகன்சொன்னான். எ-று. கழிவெண்மையறிவது மோக்ஷமெனவே யொழிந்தவைந்து நிறப்பொருளையு மறிவது பெத்தமென்க. ஒட்டுத்திட்டுக்கலப் பினில். எ-கு. முன்செலத்திராந்திகன், மதத்தில் “போத முண்டுயிர்கட்கு.” என்னுஞ் செய்யுளிற் கூறியவாறேகொள்க என்றுங் கூறினர் மற்றோருரையாசிரியர்.

பேறிழவிடையூறின்பம்பிரிவிலா திருக்கைமற்றும், வேறொருநாட்டிற்சேறல்விளைந்திடுமூப்புச்சாதல், கூறியவெட்டுமுன்னேகருவினுட்கொண்டதாகுந், தேறியவூழிற்பட்டுச்செல்வதிவ்வுலகமென்றான்.

(இ-ள்.) பேறிழவிடையூறின்பம் பிரிவிலாதிருக்கை மற்றும் வேறொருநாட்டிற்சேறல் விளைந்திடு மூப்புச்சாதல் கூறியவெட்டு முன்னே கருவினுட் கொண்டதாகும். எ-து. வறுமை செல்வமுதலிய கூடுதலு மவைநீங்குதலுந் துக்கமுறுதலுஞ் சுகமுறுதலு முடலொடு நீங்காமையும் வேற்றுநாட்டுச் சேறலும் விருத்தாவத்தையு மரணமுமென்று சொல்லப்பட்ட வெட்டு முற்பிறப்பின் வினையினுள்ளவாய்க்கர்ப்பகோளகையிலே கைக்கொள்ளப்பட்டுள்ளவாம்,-தேறிய வூழிற்பட்டுச் செல்வதிவ்வுலகமென்றான். எ-து. ஆதலாற் றெரிந்து தெளியப்பட்ட முற்பிறப்பிற் செய்த வினையிலக்கப்பட்டு இம்முறைமையிலேநடந்து செல்வதிவ்வுலகமென்றான். எ-று.

இச்செய்யுள் ஊழ்வினைப்பயனெட்டுவகையாகக் கருவிலேவந்து பொருந்துமென்பதுஉ மவ்வூழ்வினைப்பயனிலகப்பட்டுச்செல்வதே யுலகமுறைமையென்பதுஉங் கூறிற்று.(கூ)

பேறிழவின்பம் பிணி மூப்புச் சாக்காடென் றுருகநிக்கிராந்தவாதிகொண்டான் அவனிற்பேதித்தவ னெட்டாகக்கொண்டான் என்றார் ஞானப்பிரகாசர். பேறிழவு. எ-சு. பேறு. எ-து. செல்வமுதலிய பொருள்களைப்பெறுதலும்,—இழவு. எ-து. பெற்றபொருளைப் பிழைத்தலும். எ-ம். பிறிவிலாதிருக்கை. எ-து. பிரியாம லொருதேசத்திலிருத்தலும். எ-ம். தெளிவுப்பொருள் கூறினா ரொருரையாசிரியர். உலகம் ஆகுபெயர். உலகமென்னுஞ்சொல்நோக்கிச்செல்வதென முடிந்தது.

புண்ணியபாவமென்னு மிரண்டினும்பொருந்தவைத்தே, யெண்ணியவிவற்றினோடு மேழெனவெங்களோடு, நண்ணியவொருவன்கூறு ஞானமிவ்வாறதென்று, கண்ணியகருத்தினோர்கள் கதியினைக்காண்பரென்றான். (கo)

(இ-ள்.) புண்ணியபாவமென்னு மிரண்டினும் பொருந்தவைத்தேயெண்ணியவிவற்றினோடு மேழென. எ-து. புண்ணியபாவமென்னு மிரண்டினோடு மணுக்களைந்தையுங் கூடவைத்திவற்றினோடு மேழெனவெண்ணி,—எங்களோடு நண்ணியவொருவன்கூறு ஞானமிவ்வாறதென்று கண்ணியகருத்தினோர்கள் கதியினைக்காண்பரென்றான். எ-து. எங்கள் சமயத்தினோடு பொருந்திக் கர்த்தாவான வொப்பற்றவருகபரமனருளிய ஞானமித்தன்மைத்தென் றதனைக்கூடக் கருதுங்கருத்தை யுடையவர்களே நற்கதியாகிய பொன்னெயில் வட்டத்தைக் காணலுறுவார். எ-று. ஏழென வொருவன் கூறுமென்க. ஊழென்பதனை ஏழாம் வேற்றுமையாக்கியுரைப்பினுமமையும். எண்ணிய என்பது வினையெச்சம்.

இச்செய்யுளனுக்கிளந்திறுடன், புண்ணியபாவத்தையுங் கூட்டி ஏழென்பதே நான்முடிவென்று முத்திமுடிவென்றுங் கூறிற்று.

என்னுயிரென்னுஞ்செய்யுண்முத லிச்செய்யுட் காறுஞ் செய்யுள்பத்தினும் ஆசீவகன்மதங்கூறிற்று. ஞானமிவ்வாறு எ-து. ஞானமிவ்வாறதென்றும் பாடம். (கo)

எங்களோடே நண்ணியவொருவன்கூறும். எ-து. யானுநிகண்டவாதியுமாகிய வெம்மோடுபொருந்திய வறுவாதி யொருவன் சொல்லுவான். அன்றியும்,—ஞாலமிவ்வாறதெ ன்று கண்ணியகருத்தினோர்கள் கதியினைக்காண்பரென்றான். எ-து. பூமி யிந்தவேழுனுவாயிருக்குமுறைமையதென்றெண் ணிய வறிவினையுடையோர்கள் மோக்ஷத்தை யறிவார்கள் என்றுசொன்னான் என்றுரையுரைத்தனர் ஒருரையாசிரியர். அறுவாதி க்ஷமணரிலொருவனென்பதை நிகண்டவாதிமதத் தில் முதலாவது செய்யுளுக்குக்கூறிய விசேடக் குறிப்பிற் காண்க.

ஆசீவகன் மதம் முற்றிற்று.

பாயிரமுட்பட செய்யுள்—களரு.

ஆசீவகன் மதமறுதலை.

வாராநெறிவீடானபின் மண்மேலவன்வந்து, தாரா மைபினாலானது தானேவுளதின்றுஞ், சேராமைபி லணுவான்வையைந்தும் மொருதேயத், தோராநெ ருகாலத்தினிலொன்று முணர்வின்றும். (க)

(இ-ள்.) வாராநெறிவீடு.' எ-து. மோக்ஷமென்று கூறப்பட்டது மீண்டுகாயமெடுத்துவாராவழியாம்,— ஆனபின். எ-து. அப்படியானவிடத்து வீடுபெற்றவன் பூமியிடத்துவாரான்,—மண்மேலவன்வந்து தாராமையினூலானது தானேவுளதின்றாம். எ-து. வீட்டுலகத்திருந்தவருகபரமன் பூமியிடத்துவந்து நூறருமுறைமையில்லையாகையால், நூலானது தானுண்டாம் வழியில்லையாம்,—சேராமையிலணுவானவை யைந்தும் மொருதேயத்து. எ-து. ஒப்பற்றதேசமாகிய பொன்னெயில்வட்டத்திலவைகையணுவுஞ் சேராவாகையால் சரீரியாந்தன்மையில்லையாகும். அதனால்,—ஓரானொருகாலத்தினில். எ-து. ஒன்றையுமொருகாலத்தில் விசாரிக்கமாட்டானும்,—ஒன்றுமுணர்வின்றாம். எ-து. அஃதன்றியுங் கீழானவணுக்களிரண்டின் செய்தியை யறியவுமாட்டான். ஆகையாலணுக்களெல்லாவற்றையுங் கூட்டியொன்றாகவு முணருமுணர்வையுமுடையனல்லன். எ-று. பின் என்றதேழாம் வேற்றுமையிடப்பொருள். ஓகாரந்தெரிநிலை. உணர்வுமின்றாம் என வும்மைவிரிக்க.

ஆசீவகன் மதத்தை மறுப்பானெடுத்துக்கொண்டாரதனுளிச்செய்யுள் பொன்னெயில்வட்டத் தைவகையணுவுஞ் சேராவாகையா லவ்வருகபரமன் சரீரியாய் நூல்சொல்லுந் தன்மையிலனென்று மறுத்துக் கூறிற்று. (க)

அவன் முன்பேசாமற் சர்வத்தையு மறிவானென்று மௌனங்கொண் டிருப்பானென்றுஞ் சொன்னாய். அவன் சர்வத்தையுமறிந்தமை யாதினாற்பெற்றாய். பேசாமையாற்பெற்றேனென்னிற் பேசாதவால மூகர் பர்வத விருக்ஷாதிகளு முழுது

ணர்ந்தனவாகும், அன்றியுஞ் சகலத்தையுமறிந்து பேசாதிருப்பனுகில் ஆன்மாக்களிடத்திற் செற்றமுடையவனுவன், அறிந்தொன்றைப் பிறர்பிழைக்கும்பொருட் டுரையானுகிலிரந்தவர்க்கெதாசத்தி தன்னிடத்துள்ளதவாதவனைப்போலவிரக்கமுமற்றுப் பாபிஷ்டனுமாவனென்க என்றுர் ஞானப்பிரகாசர். ஓராறெருகாலத்தினில். எ-து. ஒருக்ஷணப்பொழுதினில் சர்வத்தையு மறியான் என்பதாஉமாம்.

இருபான்மையரிவர்மண்டலர் செம்போதகரென்றே,
வருபான்மையரிவர்மண்டலர் மண்மேல்வருநூலுந்,
தருபான்மையரெனினீ தலமதில்வாழ்பவர்தம்போ,
லொருபான்மையி னுளராகுவ ருணராதுரைசெய்
தாய். (உ)

(இ-ள்.) இருபான்மையரிவர். எ-து. இவ்வருகசுவாமிகளிரண்டு பகுதியராயிருப்பர்,—மண்டலர் செம்போதகரென்றே. எ-து. மண்டலரென்றுஞ் செம்போதகரென்று மவ்விருவரின்,—வருபான்மையரிவர்மண்டலர். எ-து. இப்படிவரும் பகுதியையுடைய விவர்மண்டலர்,-மண்மேல்வரு நூலுந் தருபான்மையரெனினீ. எ-து. மண்டலராகிய விவருலகத்தின்கண்ணேவந் தனுக்கனந்தின்செய்தியு மொருங்கேயறிந்துலகத்தின் கண்ணடக்கு நூல்செய்த பகுதியையுடையரென்று நீசொல்லுகின்றுயாயின்,—தலமதில்வாழ்பவர்தம்போலொருபான்மையினுளராகுவர். எ-து. அம்மண்டலர் பூமியில் வாழுமான்மாக்களைப்போ லொருபகுதியிலேயாகுவர். ஆகவேயோருரு விரண்டுபேதப்பட் டதிலொன்று மானுடத்தன்மையு மொன்றுதெய்வத்தன்மையும் பெறுதலில்லையாம். ஆத

லால்,— உணராதுரைசெய்தாய். எ-று. விசாரியாமற்சொன்ளுய். எ-று. இவர் ஒருவரைக்கூறும்பன்மை. இவரிருபான்மையரெனமாறுக. மண்டலரிவரெனவுமாறுக. மண்டலர் பூமியிலுள்ளார். செம்போதகர் மிக்கவறிவுடையார்.

இச்செய்யு ளருகபரமரிருவகைப்பட்டு மண்டலத்தின் கண்வந்து நூல்சொன்னுரென்பதனை மறுத்துக் கூறிற்று. (உ)

வானத்திந்திரதநுப்போ லிவனன்னவாறுவந்தானென் றறியாமற்சொன்னுய். ஆதித்தியகிரண மேகபடலத்துத் தற்காலவிசேடத்துப்பாட்டால் வில்லுப்பிறக்கும். அஃததின்வரலாறுதலாலாப்தனுங் காரணஜந்நியனுக விசைத்தாயன்றே "இசைத்தலியன்மண்டல ரிரங்கியென்று, யிசைப்பாமவர்க்கென்மீண்டு" "மண்டலர் தாமாக்கையுற்று வாக்கிறு னூலுரைக்கின், மண்டலத்தார்க் கொப்பாமதி." "ஆக்கையிலரென்னி லறிவுமிலர்காணவர்க்கு, வாக்குமிலை யென்றேமதி." என்பதுமறிக. என்ருர் ஞானப்பிரகாசர். மண்டலர் பூமியில் வருவரெனவே செம்போதகர் பொன்னெயில் வட்டத்திருப்பாரென்பதவன்கருத்து. தலமதில் வாழ்பவர் தம்போலொருபான்மையிலுளர் எனவே மயக்கவறிவினையுடைய ரென்பதாயிற்று என்ருர் மற்ருருரையாசிரியர்.

உபிரானவைபுடறீண்டிட லொட்டுக்கலப்பெய்தும், பயில்வாலுணர்வெய்தும்மெனு மொழியானவைபழுதாங், துயிலார்தருமவர்பாலகர் தொடராரறிவினைநீ, செயிரார்தருமுரையேதருமதுவோ வுனசெயலே.

(இ-ள்.) உயிரானவை யுடறீண்டிடலொட்டுக்கலப்பெய் தும் பயில்வாலுணர்வெய்தும் மெனுமொழியானவைபழு தாம். எ-து. ஆன்மாக்களானவை யுடலைப்பற்றியு முற்றுங் கலந்துஞ் செய்யுந்தொழிலாலே யறிவைப்பொருந்துமென்று நீசொல்லுஞ்சொற் குற்றமுடைத்தாகும். அஃதெங்ஙனமென்னில்,—துயிலார்தருமவர் பாலகர் தொடராரறிவினை. எ-து மிக்கவுறக்கம் பொருந்தினவரும் பாலவவத்தையடைந்தவரும் பற்றியு முற்றுங் கலந்து மறிவினையறியமாட்டார்,—நீசெயிரார்தருமுரையேதரும். எ-து. (நீதருமுரைசெயிரார்தரும்) எனமாறுக. நீசொல்லுஞ்சொற்றானே குற்றத்தைமிகவுந்தரும்,—அதுவோ வுனசெயலே. எ-து. உன்றொழிலுமத்தனையோ. எ-று.

இச்செய்யுளான்மா வுடலிலொட்டியுந் தீண்டியுங்கலந்து மறியுமென்பதனை மறுத்துச்கூறிற்று. (ரு)

அன்றியும் ஜீவனுமக்நியு மேனோக்கியெழுந்திருக்குஞ் சிறென்றாய் இத்தனை காலந்தொடங்கிச் சந்திரமண்டலத்தளவு முயிர்போகக் கண்டிலமன்றோ இவன் கன்மத்துக்கீடாக நரக சொர்க்கங்களிலே சுழலுமென்பது மறந்தாயே அறிந்துசொல்வாயாக என்றார் ஞானப்பிரகாசர். உயிரானவையுடல். எ-து. ஆன்மாக்களுடம்பொடுகூடி,— தீண்டலொடொட்டுக் கலப்பெய்தும் பயில்வால். எ-து. விடயங்களைத் தீண்டுதலும் நாலைக்கேட்டலு மிந்திரியங்களைக் கலத்தலுமாகிய மூன்றினைப் பொருந்தும் பழக்கத்தால் என்றுரையுரைத்தன ரோருரையாசிரியர்.

அணுவானவைகீழ்மேலுள வானலவயவமு, நணுகா
வெனலாமேவரினுசம் மவையெய்து, மணுகாவெனி
னிவைதொள்ளை கொளாகம்முளவாகுந், துணிவாலி
வைகலவாபலதொகையாம் வகையிலவாம். (ச)

(இ-ள்.) அணுவானவை கீழ்மேலுள வானல் எ-து. ஆன்மாவொழிந் தணுக்களென்று கூறப்பட்ட பிருதிவிமுதலான நான்கிற் கீழே யிரண்டுளவாயு மேலே யிரண்டுளவாயு நிற்குமாயின்,—அவயவமு நணுகாவெனலாமே. எ-து. அவை காரணமான சரீரவவயவங்களுங் கூடாவாய்க்கீழுமேலுமாய் வேறுபட்டு நிற்குமென்று சொல்லலாமே. அஃதன்றியும்,—வரின். எ-து. அவ்வணுக்களுன்குஞ் சரீரவவயவத்திற் கூடி வருமாயின்,—நாசம்மவையெய்தும். எ-து. அவ்வணுக்களை நித்தியமென்று நீ முன்னர்க்கூறியது மித்தையயாம்—அணுகாவெனின். எ-து. அவை சரீரவவயவங்களினும் பொருந்தாவென்று நீ கூறின்,—இவைதொள்ளைகொளாகம் முளவாகுந் துணிவாலிவைகலவா பலதொகையாம் வகையிலவாம். எ-து. (இவைகலவாபல தொகையாம் வகையிலவாம் துணிவாலிவை தொள்ளைகொளாகம் முளவாகும்) என மாறுக. அவ்வணுக்களின் குணங்களாகிய வுதிரமாமிசாதிகளுங் கலந்திநில்லாதுமா யணுக்களுன்கின் கூறுபலவுங்கூடிய திரட்சியுங்காயத்திற் கில்லையுமாய்த் துணிந்தறியு மிடத்துச்சரீரமுறைமையாகாததுமாய்ப் புரைபட்டு நெகிழ்ந்ததில்லையாம். எ-று. ஏ ஒவிறு. வகையுமிலவாம் என்றவும்மை தொக்குநின்றது.

இச்செய்யு ணன்குஞ் சரீரத்தோடு கூடாதென்பதனை மறுத்துக் கூடுமென்பதனானே பூதசாரியநித்த மென்பதனையு மறுத்துக் கூறிற்று.

இவனும் க்ஷமணரில் பேதமாகியு மநேகாந்தஞ்சொல் லாம லேகாந்தஞ்சொல்வான். எ-ம். உள்ளதுகெடாதில்ல துண்டாகாதென்னும் பக்ஷமுடையனாதலால் சரீரம்பொருந் தியழியுமென்பது கூடா. எ-ம். கூறினர் ஞானப்பிரகாசர். தொள்ளைகொளாகம். எ-து. அந்தவணுக்கள் தொளையைப் பொருந்தியவடிவினையுடையனவாக வேண்டும். என்றுரோ ருரையாசிரியர்.

மிகையாமணுவுளவாகையினை வையாமிகவென்னிற்,
றொகைநாலிடையறலாலவை தொகு மாறிலவாகும்,
பகையாகையின்மிசைதாழ்மையினிலையாவகைபண்ணு,
நகையாமுரைகழியாயிரமவை தாணெனநண்ணு. (௫)

(இ-ள்.) மிகையாமணுவுளவாகையி னவையாமிகவென் னில். எ-து. இவ்வணுக்களன்குமன்றி வேறேயறியத்தக்க தொரு மிக்க வணுவுண்டாகையினாலே மிகவும் யோனிபேதங் களாகிய வுருக்களாமென்று நீகூறின்,—தொகைநாலிடையற லாலவை தொகுமாறிலவாகும். எ-து. அணுக்களின்கூட்ட மிகவும் பொருந்தாமல் நடுநீங்கிக்கிடக்கையா லறியுமணு விவற் றைக் கூட்டவவைகூடி நிற்கும் வழியில்லையாம். அஃதன்றி யும்,—பகையாகையின் மிசைதாழ்மையி னிலையாவகைபண் ணும். எ-து. அவ்வணுக்களு மேலுங்கீழுமாய் நிற்கையா லுந் தம்மிற்பகையாகையாலு மான்மாவோரிடத்துக் கூடாவ கையைச் செய்யாநிற்கும்,—நகையாமுரைகழியாயிர மவை

துணைநண்ணு. எ-து. (கழியாயிரமவைதுணைநண்ணு நகையாமுறை) எனமாறுக. கழிக்கோலாயிரங்கூடினுலுந் துணுகாத்தன்மைபோல வணுக்கள் கூடியதுகொண்டேயுருக்களாசாவாகையால் நீ கூறியது நகையாம். எ-று.

இச்செய்யுளணுக்கள்கூடியே யுருக்களாமென்பதனை மறுத்துக் கூறிற்று. (ரு)

மிகையாவணு வுளவாகையி னவையாமிகவென்னில். எ-து. அநேகவணுக்களுண்டாயிருத்தலாற் றேகாதிப் பிரபஞ்சங்களாகியவை மிகவுண்டாமென்னில் என்றார் ஞானப்பிரகாசருமற்றொருவரும்.

கூடாவணுவறியாமையின் வளிகூட்டுதல்கூறி, னூடாவளியணுவானவை நணுகச்செயுமவரை, நீடாவினைதன்னாலெனி னினைவின்றதுவின்றாந், தேடாயொருவனை நீ யிவைசெய்வானுளனென்றே. (சு)

(இ-ள்.) கூடாவணுவறியாமையின். எ-து. நீ கூறியவை வகையணுக்களுந் தமக்கென்னவறிவில்லாதனவாகையா லவ்வடிவெடுத்துக்கொள்ளவல்லவன்று,—வளிகூட்டுதல் கூறின். எ-து. வாயுவாகியவணுவொழிந்தவணுக்கண்மூன்றையு மான்மாவாகிய வணுச்கூடும்படிக்குக் கூட்டுமென்று நீ கூறின்,—நாடாவளியணுவானவை நணுகச்செயுமவரை. எ-து. வாயுவானதவ்வணுக்களைக்கூட்டுதற்குக் கன்மஞ்செய்யு மான்மாக்களை யறியமாட்டாது,— நீடாவினைதன்னாலெனின். எ-து. பழையகன்மத்தினாலே வாயுகூட்டுமென்னில்,— நினைவின்றது வின்றாம். எ-து. அந்தக்கன்மமு மறிவையுடையதல்லவாகையாற் றானுங்கூடமாட்டாது, வாயுவைக்கொண்டு கூட்டு

விக்கவுமாட்டாது,—தேடாயொருவனை நீ யிவைசெய்வானுள னென்றே. எ-து. இவ்வணுக்களைந்தையுங் கன்மத்தையுங் கூட்டிக் காயமுண்டாக்குவானொரு கர்த்தாவுளனென்பதனை யாராய்வாய். எ-று.

இச்செய்யுளணுக்கணூன்குங் காயமாகத்தாமே கூடுமென் பதனையும் வாயு காயத்தைக் கூட்டுமென்பதனையுங் கன்மங் கூட்டுமென்பதனையு மறுத்துக் கூறிற்று. சம்சாரரோகந் தீர்ப்பது ஞானங்காண் கன்மத்தாற் றீராதென்பது கருத்து.

வாராநெறியென்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுட்காறு மாசீவகன்மதத்தை மறுத்துக் கூறியதாம். (கூ)

உயிர்க்குந் தனக்கென்னவறிவில்லாமையா னுயிராலுமி ணவைகள் கூடாவென்க. "உணராதுயிர்வினையைப் பூதவுடலை, யுணராது தானேபுரிந்து." "ஈட்டும்வினைக்குமறிவில்லையுயிர்க் காகத்தைக், கூட்டவல்லதில்லையெனக்கொள்." "மண்ணீரவ ளிவளிக்கு மிலைமதியவைக, ளெண்ணுமுயிரினையெங்ஙன்" "உடலைச்சமைக்க வுயுருமறியா, துடலினையொன்றப் பிரிய வும்" "காட்டு மிவை சிவனே கன்மத்துடனுயிர்க்குக், கூட் டும் பிரிக்குமெனக்கொள்." என்பதுமறிக என்றார் ஞானப் பிரகாசர். நாடாவளியணுவானவை நணுகச்செயுமவளை. எ-னை. அணுவானவை நணுகச்செயுமவளை வளிநாடா, என அந்நுவயித்து, நிலமுதலிய மூன்றணுக்களையுங் கன்மத்தைப் பொருந்திச் செய்யுமுயிர்களையும் வாயுவணுவிசாரித்துக் கூட் டவறியாது. எ-ம். நீடாவினை தன்னாலெனின் நினைவின் றது வின்றும். எ-னை. அந்நுவயித்து, வினைதன்னாலெனில். எ-து. கன்மங்கூட்டுமென்னில்,—நினைவின்றுநீடா. எ-து. வினைத

னக்கறிவில்லை கூடமாட்டாது, அன்றியான்மாத்தானே கூடு மென்னில்,—அதுவின்றும். எ-து. அதற்குத்தானே யறியு மறிவில்லையாம். எ-ம். சன்மவனுவுக் கறிவில்லையெனவே அநுவாதிமதமு மொருவார்ருன் மறுத்தலாயிற்று என்ருர் மற்ருேருரை யாசிரியர்.

ஆசீவகன் மதமறுத்லை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—௧௭௬.

பட்டாசாரியன் மதம்.

வேதமேயோதிநாத னில்லையென்றுவிண்ணிலேறச், சேதமாங்கன்மஞ்செய்யச் சைமினிசெப்புநூலி, னீதியேகொண்டுபட்டா சாரியனிகழ்த்துநீர்மை, யோதநீர்ஞானத்துள்ளே யுள்ளவா றுரைக்கலுற்ரும். (௧)

(இ-ள்.) (வேதமே-உரைக்கலுற்ரும்.) எ-து. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னு நாலுவேதத்தையு மதிகரித்து, அவ்வேதமேயொழியக் கர்த்தாவில்லையென்று சுவர்க்கம் புகுதற்குத் தனச்சேதமாம்படி சோமயாகமுதலாகிய கன்மங்களைச் செய்தற்குச் சைமினிபகவானுலே யருளப்பட்ட சூத்திரத்தின் வழியைக்கொண்டு பட்டாசாரியனென்பான் பாட்டமாகச் சொல்லுமுறைமையை யொலிபொருந்தின சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமியிடத்துள்ளபடியே சொல்லாநின்றேன். எ-று.

பட்டாசாரியன்மதங்கூறுவா னெடுத்துக்கொண்டா ரத னுளிச்செய்யுள் பட்டாசாரியன்மதஞ் சொல்லுகின்றே னென் பதனைங் கூறிற்று.

(க)

சைமினிசெப்புநூலி னீதியேகொண்டு பட்டாசாரியன். எ-து. சைமினிபகவான்செய்யுஞ் சாத்திர நீதியையும் அவன் சொல்லும் பிரத்தியக்ஷம், அநுமானம், ஆகமம், அருத்தாப த்தி, உவமானம், அபாவம் என்னு மாறுபிரமாணத்தையுங் கொண்டு அவன் சிஷ்ஞன பட்டாசாரியன். எ ம். சேதமாங் கன்மயாகத்திற் கொன்றுசெய்யுங்கன்மம், இதற்கவன்வசநம் "தசியாபாபதோவதிஷ்டது மாகாயநாந்தயுச்சியதே, சதப் பிரமாணியமே வேளேயுத்த தெத்திராபுனசுருதெள" எ-ம். "வேதவாக்கியமானவை வீட்டியே, யோதுமாமறைதன்னி லுரைத்திடும், போதவாதிகடம்மிற் புறப்பொரு, ணீதிபாத நிகழ்த்தத்தொடங்குவாம்." என்ப திச்செய்யுட் கருத்தென வுங்கூறினர் ஞானப்பிரகாசர். இத்துணையும் உலகாயதனில் மிச்சிரசார்வாகன், இரணியகர்ப்ப சார்வாகன், பௌத்தரில் சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்மீகன், வைபாடி கன், அமணரில் நிகண்டவாதி, ஆசீவகன், அநுவாதி, என்னும் வேதத்திற்குப் புறத்தரான டதின்மர்மதமும் மறுப்புங்கூறி மேல்வேதத்தை யங்கீகரித்தவைதிகம், தாந்திரிகம் என்னு மிரண்டினுள் வைதிகபேதம் பட்டாசாரியன்மதம், பிரபாகர ன்மதம், மார்த்தவமதம், மீமாங்கிசைமதம், சோதிடமதம், காலேசுரவாதம், சத்தப்பிரமவாதி, நையாயிகமதம், வைசே டிகமதம், பௌராணிகமதம், ஐதிகாசிகம், சேசுரசாங்கியம தம், சித்தசைதந்நியவாதமதம், மாயாவாதிமதம், பாற்கரியன் மதம், கிரீடாபிரமவாதிமதம், நிரீச்சுரசாங்கியமதம், ஆடி பதி

னேழு. அவற்றுள் முதற்கண் பூர்வ மீமாங்கிசபேதமான பட்டாசாரியன்மதங் கூறிற்று என்றார் மற்றொருசாரியாசிரியர். அன்றியும் சேதமாங்கன்மஞ்செய்ய. எ-கு. அழிந்துபோவதற் கேதுவாகிய யாகங்கள் பண்ணுதற்கு. எ-ம். கூறினர்.

உற்றிடுங்காமமாதி குணங்கடாமுயிர்கட்குண்டா, மற்றிவை தருமேயாகின் மறைமொழிவாய்மையின்றாங், கற்றநூலளவாற்போதங்கலப்பதுகல்விபின்றேற், பெற்றிடுமழவுமூங்கு மென்னவேபேசலாமே. (உ)

(இ-ள்.) உற்றிடுங்காமமாதி குணங்கடாமுயிர்கட் குண்டாம். எ-து. ஆன்மாக்களுக் கநாதியே காமக்குரோத லோபமோக மதமாற்சரிய மாங்காரமிடும்பையாகிய குணங்கள் கூடிநிற்கும்,—மற்றிவைதருமேயாகின் மறைமொழிவாய்மையின்றாம். எ-து. மற்றிந்தக்குணங்களே ஆன்மாவுக்கறிவைத் தாரா, இவை தருமாகில் வேதவசனத்தா லொருநன்மையுமில்லையாம். ஆகையால்,—கற்றநூலளவாற் போதங்கலப்பது. எ-து. ஆன்மாக்கள் கற்றநூலெத்தன்மை யத்தன்மையறிவுண்டாம்,—கல்வியின்றேற் பெற்றிடு மழவுமூங்குமென்னவே பேசலாமே. எ-து. நூற்கல்வியில்லாத வான்மாக்களைப் பிறந்துமுதிராதபாலரென்று மூமையென்றுஞ் சொல்லலாம். எ-று.

இச்செய்யுள் கல்வியில்லாதவான்மாக்க ளறிவதொன்றில்லையெனக் கூறிற்று. (உ)

மற்றிவைதருமேயாகின் மறைமொழி வாய்மையின்றாம். எ-து இந்தக் குணங்களையுடையவுயிர்கள் வேதத்தைச் சொ

ல்லுமேயாகில் வேதவாக்கியமெய்ம்மையென்பது கூடாதாம், அன்றியும்,—கற்றிடுநூலாற்போதங்கலப்பது. எ-து. அந்நுவயம். (போதங்கற்றிடு நூலாற்கலப்பது) உயிர்களுக்கு அறிவானது கற்கப்பட்ட நூலினாலே பொருந்துவதாம். ஆதலாலவ்வுயிர்கடாமேயறிந்து சொல்லமாட்டா எனவுரையுரைத்தனர் ஒருரையாசிரியர்.

உண்டொருகடவுள்வேத முரைத்திடவுயிரின்றன்மை,
கொண்டவனல்லனென்றுங் கூறிடினுருவங்கூடிற்; ப
ண்டையவுயிரேயாகும் படித்தநூலளவுஞானங், கண்
டிடுமுருவமின்றேற் கருதுவதில்லையென்றான். (ந)

(இ-ள்.) உண்டொருகடவுள் வேதமுரைத்திட வுயிரின்றன்மைகொண்டவனல்லனென்றுங் கூறிடின். எ-து. இதனை (வேதமுரைத்திட வொருகடவுளுண் டுயிரின்றன்மை கொண்டவனல்லனென்று கூறிடின்) எனமாறுக. சுயம்புவாகிய வேதத்தைக் கூறுதற் கொருகர்த்தாவுண்டென்றும் அந்தக் கர்த்தாவான்மத்தன்மையனல்லனென்றுஞ் சொல்லின்,—உருவங்கூடிற்பண்டையவுயிரேயாகும். எ-து. வேதத்தைச் சொன்னானென்ற கர்த்தாவானவன் வேதஞ்சொல்லுமிடத்துச் சரீரியாய்ச் சொல்லவேண்டும். ஆகையாலப்படிச் சரீரியாகிலான்மத்தன்மையனுவன்,—படித்தநூலளவு ஞானங்கண்டிடும். எ-து. அப்படிச் சரீரியானவான்மா தான்கற்றநூல்களளவே யறிவையுடைத்தா மித்தனை,—உருவமின்றேல் கருதுவதில்லையென்றான். எ-து. வடிவில்லையாயின் நூலைக்கருதிச்சொல்லுந் தன்மையுமில்லையாம். ஆதலால் வேதஞ் சுயம்புவேயாம். எ-று. (ந)

கருதுவதில்லையென்றான். எ-கு. நினைக்குமனமுஞ் சொல்லும்வாயும் அந்தக்கடவுளுக்கில்லையாம். ஆதலாற் சொல்லமாட்டான் என்றுசொன்னான். எ-ம். உயிரின்றன்மைகொண்டவனல்லன் எனவே விசிட்டவைசுவரிய சம்பன்னனாய்ச் சர்வஞ்ஞனாயுள்ளவனென்பது தானேபோதரும். சொல்லும் வாய் என்பது உபலக்ஷணத்தால்வந்தது. எ-ம். கூறினரோருரையாசிரியர்.

தேவருமுனிவர்தாமுஞ் சித்தருநருமற்று, மியாவருமுரைப்பர்வேத மியம்பினரின்னரென்னப், போவதன்றென்றுநாளும் பரம்பரைபுகல்வதாகுங், கூவனீரென்னிற்கொள்ளே மறுமையைக்குறித்தலாலே. (௬)

(இ-ள்.) தேவருமுனிவர்தாமுஞ் சித்தரு நருமற்று மியாவருமுரைப்பர்வேத மியம்பினரின்னரென்னப் போவதன்றென்று. எ-து. பிரமவிஷ்ணுக்கண்முதலாகிய தேவர்களு மகத்தியர் வசிட்டராதிகளாயுள்ள ரிஷிகளுஞ் சித்தர்களு மொழிந்த வித்தியாதரர் கந்தருவர் கின்னரர் கிம்புருடர் பைசாசர் இயக்கர் முதலாயினாரு நரர்களும் வேதமின்னார் சொன்னாரென்று தம்மாலறியப்படுவதன்றென்று சொல்லாநிற்பர். ஆகையால்,-நாளும் பரம்பரைபுகல்வதாகும். எ-து. காலந்தோறும் பழையதாக வருமென்றே சொல்லப்படுவதாம்,-கூவனீரென்னிற்கொள்ளேமறுமையைக்குறித்தலாலே. எ-து. கூவலினீர்போலத் தானேவந்து தோன்றப்பட்டதென்று சொல்லுமுவமையும் பொருந்தேம், அஃதொருவனாற் செய்யப்படுதலானு மறுமையெய்தத்தக்கதாயிருத்தலானும். எ-று.

இச்செய்யுளிரண்டும் வேதமொருவராற் செய்யப்பட்டதல்ல சுயம்புவென்பது கூறின. (௪)

"ததேஷா சுருதிவாக்கிராநாம் சப்தமாத்திருஷிதேவதா" இஃதவன் வசநம் என்றார் ஞானப்பிரகாசர். நாளும் பரம்பரை புகல்வதாகும். எ-து. எக்காலமும் பெரியோர்களொருவருக்கொருவரோதுவிக்கவரும் பரம்பரையாகச் சொல்லப்படுவதாகும். அற்றன்று,—கூவலிங்கென்னில். எ-து. இவ்விடத்துவேதமொருவராற் சொல்லப்பட்டதென்னில்,—மறுமையைக்குறித்தலாலே கொள்ளேம். எ-து. வருபிறப்புகளினியல்பைக் கூறுதலாலொருவர் சொன்னாரென்பதனையங்கீகரியேம். எ-ம். ஒருவர்க்கொருவ ரோதுவிக்கும் பரம்பரையென்பது இருக்குவேதத்தைபயிலருக்கும்,எஜுர்வேதத்தை வைசம்பாயனருக்கும், சாமவேதத்தைச்சைமினிக்கும், அதர்வணவேதத்தைச் சுமந்துவுக்கும் வேதவியாச ரோதுவிக்க வந்தநால்வரு மிருஷிகள் முதலாயினோருக் கோதுவிக்க வந்தமுறைமையாம். கூவல்-கூறுதல். அஃதீண்டாகுபெயராய் வேதத்தையுணர்த்திற்று. எ-ம். கூறினரோருரையாசிரியர்.

உன்னியவங்கமாறு மூன்றுபவேதந்தானுந், தன்னுளேயடக்கிவேறு தங்கிடாவகையைச்சார்ந்து, முன்னமோர்தோற்றமின்றி முடிவின்றிநித்தமாகி, மன்னியோரியல்பேயாகி வழங்கிடுமறையதென்றான். (௫)

(இ-ள்.) உன்னியவங்கமாறு மூன்றுபவேதந்தானுந் தன்னுளேயடக்கி. எ-து. வேதமானது கருதப்பட்ட வாறங்களுங்க

ளையு மூன்றுபவேதங்களையுந் தனக்குளடக்கி,—வேறுதங்கிடா வகையைச்சார்ந்து. எ-து. அத்தங்களெல்லாந் தன்னிடத்த டங்குவதொழிந்து வேறொருநூலினத்தந் தன்னிடத்தில்லை யென்னுமையைப்பொருந்தி,—முன்னமோர் தோற்றமின்றி. எ-து. ஆதியிலுமோரிடத்திற்றோன்றிற்றென்னு முறைமையு மின்றி,—முடிவின்றி நித்தமாகி. எ-து. ஒருகாலத்திலுங்கேடி ன்றி நித்தமுமாய்,—மன்னியோரியல்பேயாகி. எ-து. நிலை பெற்றதொருதன்மையன்றிப் பேதிக்கப்படாததாய்,—வழங் கிடு மறையதென்றான். எ-து. இப்படி வழங்காநிற்கும்வேத மென்று கூறினன். எ-று. ஆறங்கமாவன—சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சோதிடம், சந்தோபசித், என்பவை. மூன்றுபவேதமாவன—ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம். முடிவின்றி-யளவிறந்து.

இச்செய்யுள்வேதந் தோற்றமுமுடிவுமின்றி யழிவின்றி யாறங்கத்தோடு மூன்றுபவேதத்தோடுங் கூடிநிற்குமென்று கூறிற்று. (ரு)

"இருக்குமுதலீரிரண்டும் வேதமெனவெண்ணு, யுரைப் பாயுபவேதமும்." "ஆயுர்வேதந்தநுர்வேதங் காந்திருவமென, வேயும்பெயரவற்றுக்கே." "கணிதநிருத்தம் வியாகரணஞ் சந்தங், கணநிகண்டுகற்பமுமங்கம்." என்பதங்கமுதலாகிய வற்றிற்குக்கண்டு கொள்கவென்றார் ஞானப்பிரகாசர். உன்னி யவங்கமாறு மூன்றுபவேதந்தானும். எ-னை. ஊன்றுபவேத மற்றும் எனப்பிரித்து வேதத்துக் குபகாரமாக நாட்டப்பட்ட உபவேதநான்கும்,—மற்றும். எ-து. இங்ஙனங் கூறியனவல் லாத வுபாங்கநான்குமாகிய பதினொன்கினையும். எ-ம். அங்க

மாறினுள்சிக்ஷையாவது வேதோச்சாரணலக்ஷணத்தைச்சொல்வது, வியாகரணமாவது வேதத்தினுடைய சங்கிதையினியல்பும் பதங்களினியல்பும் சொல்வது. நிருத்தமாவது ஒருசொல்லுக்கு அநிர்வசனமாகிய வாக்கைகூறலாம். சோதிடமாவது வைதிககர்மங்களுக்குரிய காலநிதானஞ் சொல்வது. கற்பமாவது வேதகர்மங்களைச்செய்யு முறைமையைச்சொல்வது, சந்தோபசித்தாவது வேதமந்திரங்களினெழுத்துக்களை யெண்ணுமுறைமையைச் சொல்வது, உபவேதநான்கினுள் ஆயுர்வேதமாவது, ஔஷதங்களானோய் தீர்த்தாரோக்கியமாகு முறைமையைச் சொல்வதாகி யிருக்குவேதத்திற் குபகாரமாயிருக்கும். அர்த்தவேதமாவது உயிர்கள் செய்தகன்மங்களுக்குத் தக்கபலப்பிராப்தியைச் சொல்வதாகி யஜுர்வேதத்திற்குபகாரமாயிருக்கும். தநுர்வேதமாவது பகைவரை வெல்லுமியல்பைச் சொல்வதாகி அதர்வண வேதத்திற்குபகாரமாயிருக்கும். காந்தர்வ வேதமாவது வேத சத்தங்களினிசையின் பேதங்களைச் சொல்வதாகிச் சாமவேதத்திற் குபகாரமாயிருக்கும். உபாங்கநான்கினுள் மீமாங்கிசையாவது நான்கு வேதத்தின் பொருளையு நன்றாய் விசாரிக்கு முறையைச் சொல்வது, ஞாயசாத்திரமாவது பிரமாண பிரமேய பிரமாதா பிரமிதியென்னு நான்கினியல்பைச் சொல்வது. புராணமாவது நஷ்டமாயிருக்கிற வேதசாகையின் பொருள்களைக் கதைரூபமாக வறிவுடையவர்களுக்குத் தெரியும்படிச் சொல்வது. ஸ்மிருதியாவது வருணாச்சிரமாநுகுணமாக விதிவிலக்குகளைச் சொல்வது என்றுணர்க என்றாரோருரையாசிரியர்.

செய்தியுநெறியுமேவுந் தேவரும்பொருளுமெல்லா, மெய்தியபன்மையாலேயோரியல்பியம்பாதாகு, மை யமில்காலமூன்று மறிந்தபின்னெஞ்சகத்தாய், மெய் யதாய்வந்துதோன்றி விளங்கிடும்வேதநூலே. (சு)

(இ-ள்.) செய்தியு நெறியுமேயுந் தேவரும் பொருளுமெ ல்லா மெய்தியபன்மையாலே யோரியல்பியம்பாதாகும். எ-து. படைத்தல் காத்தல் அழித்தலென்னும் பலசெய்திக ளுஞ் செய்தி செய்யும்வழியு மவ்வழியிலே மேவுந்தேவரு மவர்களாற் கொடுக்கப்பட்ட விகலோக பரலோக சாத்திய மானவத்தங்களு மிவையெல்லாம் பன்மையாகப் பொருந்தி நின்றனவாகையாலே யிவற்றைச் சொல்லவேண்டுகையால் வேதமுமொருநெறிப்படச் சொல்லாதாம்,—ஐயமில்காலமூ ன்று மறிந்தபின். எ-து. அந்த மூன்று தொழிலாலே மூன்று விதப்பட்டு இறந்தகால நிகழ்கால மெதிர்காலமென்று மெல் லாராலு மறியப்பட்டபின்,—நெஞ்சகத்தாய்மெய்யதாய் வந் துதோன்றி விளங்கிடும் வேதநூலே. எ-து. இதனை (வேத நூல் மெய்யதாய் நெஞ்சகத்தாய்வந்துதோன்றி விளங்கிடும்) என மாறுக. வேதமானதொரு வடிவைப்பொருந்தி யவ்வ டிவி னெஞ்சகத்தேபொருந்தி யுலகத்திலே விளங்காநிற்கும். எ-று. காலமூன்றுமறிந்தபின் வேதமுருவாமென்பதனு லநா தியிலருவாமென்னும் பொருள்பயந்தது.

இச்செய்யுள் வேதநிற்குமுறைமையுஞ் சொல்லுமுறை மையுங்கூறிற்று. செய்தியும்—கன்மங்களும். ஐயமில்காலம் சந்தேகமற்றகாலம். வெஞ்சகத்தாய் எனப்பாடமாகில் விள சுத்தையுடைத்தாய் என்க, (சு)

செய்தியும். எ-து. புண்ணியபாவக்கூறுபாடுகளைச சொல்லும் விதிவிலக்குகளும்,-நெறியும். எ-து. ஒன்றினியல்பைச் சொல்லுமிடத் துபசாரமாய்ச்சொல்லாது உள்ளபடிசொல்லுமர்த்தவாதமும்,—மேவுந்தேவரும். எ-து. கன்மங்களுக்கங்கமாகப்பொருந்துந் தேவர்களுடைய பெயரைச் சதுர்த்தியந்தமாகச்சொல்லு மந்திரங்களும்,—பொருளும். எ-து. யாகங்களின்பெயர்களும். எ-ம். 'தோன்றிவிளங்கிடும் வேதநூலே. எ-ன. தோன்றும் விளம்பிடின்வேதநூலே, எனப்பாடமோதி வேதநூலானது கற்பாந்தகாலங்களிலொவ்வொரு முனிவரிடத்தினின்று மபிவேதியாய்வந்துண்டாஞ் சொல்லுமிடத்து. எ-ம். கூறினரோருரையாசிரியர்.

தப்பிலாவாகுந்தாதுப் பிரத்தியந்தன்னினோடே,
யொப்பிலாதாம்பிராதி பதிகமாமுறுப்புங்கொண்டு,
செப்புமாம்வேதஞ்சொன்ன விதிப்படிசெய்யச்சேம,
வைப்பதாம்வீடுபாச மருவலாமொருவலாமே. (எ)

(இ-ள்.) தப்பிலாவாகுந்தாதுப் பிரத்தியந்தன்னினோடேயொப்பிலாதாம்பிராதி பதிகமாமுறுப்புங்கொண்டு செப்புமாம்வேதம். எ-து. வேதமானது தவறில்லாததாகிய தாதுப்பிரத்தியங்க ளிவையிற்றினோடு முவமையில்லாததாகியபிராதிபதிகமென்னுமுறுப்புக்களையுந் தன்னிடத்லே யடக்கிக்கொண்டு சொல்லுவதாம்,—சொன்ன விதிப்படிசெய்யச் சேமவைப்பதாம் வீடு பாசமருவலா மொருவலாமே. எ-து. அந்தவேதஞ்சொன்ன விதிப்படியிலே கன்மத்தைச்செய்யப் பாசக்கட்டுவிட்டுநீங்கலா மதுநீங்கவே வீட்டின்பமு மாப்த நமாகக்கூடும். எ-து. (பாசமொருவலாமருவலாஞ் சேம

வைப்பதாம்) எனமாறுக. சேமவைப்பதாம். எ-து. அறத்தி ஞகியவத்தமாய்த தநமாகக்கூடுமென்பது கருத்து.

இச்செய்யுள் சன்மஞ்செய்யவே மோக்ஷமாமென்று கூறி ற்று. தாதுவாவது ஞானத்துக்கவபோதனம். பிரத்தியம் ஏழு வேற்றுமையும். பிராதிபதிகம் கிரியாவிகற்பங்கள். (எ)

தாது வினைச்சொற்களை. பிரத்தியம் வேற்றுமைச்சொற் களை. பிராதிபதிகம் தாதுவும்பிரித்தியமுமல்லாமற் பொருளை யுடைத்தாயிருக்குஞ் சொல்லாயிருக்கும். வேதஞ்சொன்ன விதிப்படி என்றது, வேதபட்டாதாதர்மாதர்ம சிவஞாசைவ சோதநாமிலக்ஷணந்தோதர்மம். சேமவைப்பு—ஆப்ததநம், எனக்கொள்க என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவரும், தாது எனினும் வினைமுதனிலையெனினும் பகுதியெனினும் ஒக் கும். பிரத்தியமெனினுஞ் சுப்புவெனினும் மொக்கும். பிராதி பதிகமெனினும் அகண்டபதமெனினும் மகாப்பதமெனினும் ஒக்கும் என்றார்.

போக்கொடுவரவுகால மொன்றினிற்புணர்வதின்றி,
யாக்கவேறொருவரின்றி யநாதியாயணுக்களாகி, நீக்
கிடாவினையிற்கூடிநிலமுதலாகநீடி, யூக்கமாருலகமெ
ன்று முள்ளதென்றுரைக்கலாமே. (அ)

(இ-ள்.) போக்கொடு வரவுகாலமொன்றினிற் புணர்வ தின்றி. எ-து. (ஊக்கமாருலகம் போக்கொடுவரவுகால மொ ன்றினிற் புணர்வதின்றி) என மாறுக. மிகுதியையுடைய பிர பஞ்சமானது சங்காரமுஞ் சிருட்டியு மொருகாலத்திலுண்டா காததாய்,—ஆக்கவேறொருவரின்றி. எ-து. இதனை இரக்ஷிக்

கவொரு கர்த்தாவுமில்லையாய்,—அநாதியாய். எ-து. அநாதியாயுள்ளதாய்,—அணுக்களாகி. எ-து. ஆன்மாக்களுமாய்,—நீக்கிடாவினையிற்கூடி. எ-து. நீக்கப்படாதபுண்ணியபாவங்களோடுகூடி,—நிலமுதலாகநீடி. எ-து. பிருதிவி முதலாகிய தத்துவங்களாக நிலைபெற்று,—ஊக்கமாருலகமென்று முள்ளதென்றுரைக்கலாமே. எ-து. இப்படிப்பட்ட பிரபஞ்சமென்று முள்ளதென்று சொல்லலாம். எ-று. ஊக்கம்-மனவெழுச்சி மிகுதிப்பட்டது, வலி. அணுக்களாய்-அணுசம்பந்தியாய்.

இச்செய்யுள் கர்த்தாவில்லை பிரபஞ்சமநாதியென்பது கூறிற்று.

"காலந்தனிற்றோன்றிநின்று கழிவனவோ, ஞாலமுதலுண்டென்னாளும்." "வினையினுருவிதமாகிநின்றே, வினையின் பலத்தைவிளைக்கும்." என்பதனால் கருத்தாவில்லையென்பதவன் கருத்து என்றார் ஞானப்பிரகாசர். ஆக்குவோரொருவரின்றி. எ-கு. சிருஷ்டிக்கு முதல்வரொருவருமின்றி என்றுரோருரையாசிரியர்.

நித்தமாயெங்குமுண்டாய் நீடுயிரறிவுதானாய்ப், புத்திதானாதியாய கருவியின்புறத்ததாகிச், சுத்தமாயருவமாகித் தொல்லைவல்வினையின்றன்மைக், கொத்ததோருருவம்பற்றிப் புலன்வழியுணர்ந்துநிற்கும். (கூ)

(இ-ள்.) நித்தமாயெங்குமுண்டாய் நீடுயிர். எ-து. (நீடுயிர் நித்தமாயெங்குமுண்டாய்) எனமாறுக. பிரபஞ்சத்திலே நிலைபெற்ற வான்மாவான தழிவில்லாததாய் நிறைவையுமுடைத்தாய்,—அறிவுதானாய். எ-து. அறிவேதனக்கு

வடிவுமாய்—புத்திதானுதியாய கருவியின்புறத்ததாகி. எ-து புத்திமுதலாகிய தத்துவங்களிடத்துக் கலவாதுநிற்பது மாய்,—சுத்தமாய். எ-து. தத்துவங்கணீங்கினவிடத் தழுக்கற்று நிற்பனவுமாய்,—அருவமாகித் தொல்லைவல்வினையின் றன்மைக்கொத்ததோருருவம்பற்றிப் புலன்வழியுணர்ந்துநிற்கும். எ-து. அருவமுமாய்ப் பழையதாய்வரும் புண்ணியபாவங்களினது முறைமைக்கீடான காயத்துடனே கூடி யிந்திரியங்கள் வழியாகக் கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியாநிற்கும் எ-று. புத்திதானுதியாய கருவிகளாவன—இந்திரியமுதற் பிரகிருதியீருயதத்துவமிருபத்துநாலும். புறம் ஏழாம்வேற்றுமையிடப்பொருள்.

இச்செய்யுளான்மாநிற்கு முறைமைகூறிற்று. ஒத்ததோருருவம் வினைகளுக்கேற்றவடிவம். சுத்தமாகிறது கன்மவசமாயுழலுமோவென்னில் சுத்தமாகாதாகின் முத்தியிலுஞ் சுத்தனுகான், சத்காரியவாதமுங்கெடுமென்பது கருத்து. இஃது ஆன்மலக்ஷணம். (௯)

செயறருவினைகண்மாய்ந்து சிந்தையிற்சேர்ந்துநின்று,
பயனெடுபலியாநிற்கும் பலாலமுந்தழையுமெல்லாம்
வயறனின்மருவிநாசம் வந்தபின்பலத்தைவந்திங், கி
யல்பொடுந்தாற்போலவென் றும்பினியம்புகின்
றுன். (௧0)

(இ-ள்.) செயறரு வினைகண் மாய்ந்து சிந்தையிற்சேர்ந்துநின் று பயனெடுபலியாநிற்கும். எ-து. முன்ஜநநத்தின் மனவாக்குக் காயங்களின் றொழில்களாலே யுண்டாகிய புண்ணியபாவங்க ளக்தக்காயத்துடனே தூலங்கெட்டுச் சூக்கும

மாக வான்மாவோடும் பொருந்தி யிந்தஜநநத்திற் பிரயோசநத்தோடு மான்மாவுக்குண்டாகாநிற்கும். அஃதென்போலவென்னின்,—பலாலமுந்தழையுமெல்லாம் வயறனின்மருவி நாசம்வந்தபின் பலத்தைவந்திங் கியல்பொடுந்தந்தாற்போலவென்றும்பினியம்புகின்றான். எ-து. வைக்கோலுந்தழையுமுதலானவைகளெல்லாங் கழனியைப்பொருந்திநின்று தனக்குவடிவுக்கேடுவந்தபின்பு வயலிற்பயிருக்கு நன்மையைக்கொடுத்தாற்போல வென்று இத்தன்மையுங்கூறி வேறுஞ்சில சொல்லாநின்றான். எ-று.

இச்செய்யு ளும்மைவினைப்பய னிம்மையிலூட்டுமென்பது கூறிற்று. (கo)

நீதியானித்தகன்மநிகழ்த்திடச்சுபத்தைநீங்கார், நீதிலாவிச்சாகன்மஞ் செந்தழலோம்பிச்செய்ய, வேதுதான்வேண்டிற்றெல்லா மெய்தலாஞ்சோமயாக, மாதிதானதைவீசி யமைத்திடவிடதாமே. (கக)

(இ-ள்.) நீதியானித்தகன்ம நிகழ்த்திடச்சுபத்தைநீங்கார் எ-து. அவரவர் சூத்திரமுறைமையிலே சந்தியாவநுஷ்டானசாவித்திரிசெபமுதலிய பிராமணர்செய்ய வேண்டியவருணத்தாருந்தமக்குக்கற்பித்த விதிவழாமற்செய்யவே நன்மையையெப்பொழுதுங்கைவிடார்,—நீதிலாவிச்சாகன் மஞ்செந்தழலோம்பிச்செய்ய வேதுதான்வேண்டிற் றெல்லா மெய்தலாம். எ-து. குற்றமில்லாத விச்சாகன்மமாகிய வைசுவதேவபலிகரணாதிகளும், தக்ஷிணாக்னி, காருகபத்தியம், ஆகவநீயமுதலியவக்கினிகளுஞ் செய்யத்தான் விரும்பியதியாதவையெல்லாமெய்தலாம்,-சோமயாகமாதிதானதை வீசியமைத்

திட விடதாமே. எ-து. சோமயாகமுதலிய யாகங்களைச்செய் யுமிடத்து அத்தத்தைமிகவுஞ் செலவழித்துச்செய்ய வீட்டின் பமுண்டாகும். எ-று.

இச்செய்யுள் நித்தியநைமித்தியங்களாகிய கன்மங்களா லேபோகமோக்ஷம் லபிக்குமென்பது கூறிற்று. (கக)

கருதியகன்மஞானமிரண்டுங் காலாகக்கொண்டு, மரு
விடலாகும்வீடு மதிதனைமதித்துச்செய்தி, யொருவி
டிற்பதிதனாகும் பதிதனைக்கதிபினுய்க்கத், தருவதோர்
நெறிதானில்லை யென்னவுஞ்சாற்றினனே. (கஉ)

(இ-ள்.) கருதியகன்மஞானமிரண்டுங் காலாகக்கொண்டு மருவிடலாகும் வீடு. எ-து. சூத்திரவிதிகளாலே கருதப்பட்ட கன்மமும் வேதஞ்சுயம்புவென்றறியுமதேயறிவென்னுஞானமு மிரண்டையுமிடமாகக்கொண்டு வீட்டின்பத்தைப்பொருந்தலா கும், மதிதனைமதித்துச்செய்தியொருவிடிற்பதிதனாகும். எ-து. வேதஞ் சுயம்புவென்றறியுஞானமெய்ம்மையாமென்று வெகு மானித்துக் கன்மத்தைக்கைவிடிற் கன்மசண்டாளனாகும்,— பதிதனைக் கதியினுய்க்கத் தருவதோர்நெறிதானில்லை யென்ன வுஞ்சாற்றினனே. எ-து. அக்கன்மசண்டாளனை மீளநல்லநெ றியிலே யேறவிடுவதற் குண்டாவதோர்வழி வேதத்திலுமில் லையென்றுசொன்னான். எ-று. கால், ஏழாம்வேற்றுமையிடப் பொருள்.

இச்செய்யுள் கன்மங்கூடாமல் ஞானத்தான் மோக்ஷம் லபியாதென்பது கூறிற்று. இதனன் ஞானமுங்கன்மமு மிர ண்டும் வேண்டுமென்பது கருத்து. (கஉ)

பசுப்படுத்தியாகம்பண்ணப் புண்ணியமாவதென்று,
வசிப்பினன்மறைகள்சொன்ன வழக்கினல்வாய்மை
யாக, நசிப்பிலாமந்திரங்கண விற்றலினின்பமாகும்,
பசிப்புளானொருவனுண்ணப் பசியதுதீர்ந்தபண்பே.

(இ-ள்.) பசுப்படுத்தியாகம்பண்ணப் புண்ணியமாவதென்று. எ-து. எப்பொழுதும்பசுபந்தனஞ் செய்தியாகங்களைச்செய்வது புண்ணியமாமென்று,—வசிப்பினன் மறைகள் சொன்னவழக்கினல் வாய்மையாக நசிப்பிலாமந்திரங் கணவிற்றலினின்பமாகும். எ-து. குற்றமில்லாத இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னுநாலுவேதங்களுஞ்சொன்னவிதிப்படியிலே யுண்மையாகக்கொண்டு கேடில்லாதமந்திரங்களைச் சொல்லுதலாற் போகமோக்ஷமாகிய வின்பத்தைத்தரும். அஃதென்போலவென்னில்,— பசிப்புளானொருவனுண்ணப் பசியதுதீர்ந்தபண்பே. எ-து. மிகவும்பசிப்புளானொருவனுண்டல்செய்தாற் பசிதீர்ந் தின்பமுற்றதன்மைபோல. எ-று.

இச்செய்யுள் யாகங்களுக்கு யுக்த்தமான பசுபந்தனஞ் செய்து யாகஞ்செய்யவே போகமோக்ஷம் லபிக்குமென்பது கூறிற்று.

வேதமென்னுஞ் செய்யுண்முதலிச்செய்யுட்சாறும் பட்டாசாரியன்மதங் கூறிற்று. (௧௩)

பட்டாசாரியன்மத முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—௧௬௨.

பட்டாசாரியன் மதமறுதலை.

வேதஞ்சுயம்புவெனவே தந்தவாய்மொழியில் வே
றும்பிரமாணமுளதே, னீதந்துகாணிங்குமாதுங்கபா
ரதமுநேர்கண்டதாகுமதுபோ, லோதுஞ்சொலாய்
வருதலானுங்கடாதி படமோவந்திடா வொருவரா,
லேதந்ததாமறைகளாய் வந்தவாய்மொழியும் வேறி
ந்துசேகரனதே. (கரு)

(இ-ள்) வேதஞ்சுயம்புவெனவே தந்த வாய்மொழியில். எ-து. வேதஞ்சுயம்புவென்று பட்டாசாரிய நீகூறியவுண்மையொழிய நான் சுயம்புவென் றவ்வேதந்தான் கூறிற்றில்லையாம். அஃதன்றியும்,—வேறும்பிரமாணமுளதே னீதந்துகாணிங்கு. எ-து. வேத மநாதியென்பதற்கு வேறு பிரமாணமில்லை, உண்டாயி னீசொல்லிக்காணிவ்விடத்து,—மாதுங்கபாரதமு நேர்கண்டதாகும். எ-து. மிகவும் பெருமையையுடைய மகாபாரதம் பிரமாணமென்று நீசொல்லினதும் வியாசராலே சொல்லப்பட்டு வேதத்திற்கொப்பாயைந்தாம் வேதமென்று வழங்கப்படுவதாம்,—அதுபோல். எ-து. அந்தமகாபாரதம்போல,-ஓதுஞ்சொலாய்வருதலானும். எ-து. ஒருத்தனாலே சொல்லுஞ்சொல்லாய் வருதலானும், கடாதி படமோவந்திடாவொருவரால். எ-து. மண்பாவையுங் கிழிப்பாவையும் செய்வாரொருவரின்றிவந்து தோன்றாமையானும்,- தந்ததாம். எ-து. அவ்வேதமுமொருவனாலே சொல்லப்பட்டதேயாம்.—மறைகளாய்வந்த வாய்மொழியும் வேறிந்துசேகர

னதே. எ-து. வேதமொருவன்சொன்னனென்று சொல்லப்பட்டு இரகசியங்களாய்வருகிற சத்தியவசநமுஞ் சந்திரசேகரனிடத்ததே. எ-று. எனவே பரமேஸ்வரனே வேதமருளிச்செய்தாரென்பதாயிற்று. அதனாலும் என்னுமும்மை தொக்குநின்றது. ஏகாரம் தேற்றம். கடாதி எனவே மண்பாவை முதலியனவற்றை. படாதி எனவே கிழியிடத்துண்டாகிய பாவைமுதலியனவற்றை. மகாபாரதம்போல வேதமொருவன் சொல்லப்படுகையாலும் ஒருவனோத வேண்டுகையாலுங் கடபடாதிகளை யொருவனியற்றப்படுகையாலுஞ் சுயம்புவல்லவென்க. (க)

ஓதுஞ்சொலாய் வருதலானும். எ-கு. இந்தவேதமுந் தந்ததாலோஷ்ட புடவியாபாரத்தாற் சொல்லுகின்ற பதவாக்கியங்களாய் வருதலாம். சுயம்புவாகிய பரமசிவனாற் சொல்லப்பட்ட வேதத்தைச் சுயம்புவென்றது ஆகுபெயர். இப்பொருளறியாது வேதத்தைச் சுயம்புவெனமயங்கிக் கூறினனென்க. ஓதுஞ்சொலாய் வருதலானும் என்பதனாற் பிரத்தியக்ஷப்பிரமாணமும், பாரதமுநேர்கண்டதாகும். என்பதனால் அநுமானப்பிரமாணமுமாகிய விவற்றால் வேதஞ்சுயம்புவன்றென் றுய்த்துணர்க. காமிகம் அசிதமுதலிய வாகமங்களிற் சதாசிவமூர்த்தியுடைய தற்புருஷாதி நாலுமுகத்தினு நான்குவேதமுண்டாயின வென்று கூறுதலால் ஆகமப்பிரமாணத்தினுஞ் சுயம்பு அன்றென்றுணர்க எனக்கூறினரோருரையாசிரியர்.

உரைதந்திடாதொருவ னெனிலிந்தவானினிடை யொலிகொண்டுமேவியுளதாம், புரைதந்ததாமறைகளபி

வெஞ்சமாயொளிர்கை பொருடந்தீப மதுபோல்,
வரைதந்ததாலி வுரைகபிலன் சொலாகுமது மறைகி
ன்றவாறும்வரவும், விரைவின்சொலாயிதனை யெது
கொண்டுமேவுவது விடைகொண்டதாலுனுரையே.

(இ-ள்.) உரைதந்திடாரொருவனெனில். எ-து. வேதந் தானே யுண்டானதன்றி யொருவன் சொல்லானென்று நீ சொல்லின், — இந்தவானினிடையொலிகொண்டு மேவியுளதாம். எ-து. இந்த ஆகாசத்தின்கண்ணே பொருந்திய வோசையைக்கொண்டுண்டானதாகவேண்டும். ஆகையால்,—புரைதந்ததாமறைகள். எ-து. வேதங்களுஞ் சொல்லும்பொருளும் விளங்காமற் குற்றத்தையுடைத்தாம்,—அபிவெஞ்சமாயொளிர்கைபொருடந்த தீபமதுபோல். எ-து. அற்றன்று, வேதஞ்சர்வத்தையும் விளக்குவித்துத் தானேநின்று விளங்குகை பொருளைக்காட்டிநிற்கும் விளக்குத்தானே நின்று பிரகாசித்தாற்போலவென்று கூறின்,—வரைதந்ததாலிவுரைகபிலன் சொலாகும். எ-து. வேதத்தின்பெருமையில்லையாயோரெல்லைக்குள்ளகப்பட்டதாம். ஆகவே நீயுவமைகூறல் அறிவில்லாத விடையன் சொல்லுஞ் சொல்லாம்,—அது மறைகின்றவாறும் வரவும். எ-து. அவ்வேதமருவாமுறைமையுந் தோன்றுமுறைமையும் இங்ஙனமென்று, — விரைவின்சொலாய். எ-து. விரைவிலே சொல்லுவாயாக,—இதனை யெதுகொண்டு மேவுவது. எ-து. வேதமுன்னருவாய்ப் பின்னுருவாய்த்தோன்றிச் சொல்லும்பொருளும் விளங்கச்சொல்லுமென்று நீ சொல்லுகின்றவிதனை யாதுபிரமாணங்கொண்டு பொருந்துவது,—விடைகொண்டதாலுனுரையே. எ-து. ஆத,

லால், நீசொல்லுகின்றசொல் பயனற்றுப்போனதாம். எ-று. புரை-குற்றம். அபிவெஞ்சம் வடமொழிப்பெயர், அது அபி வியஞ்சகம். அதற்குப்பொருள் பொருளை விளக்கித் தானும் விளங்கிநிற்பது. ஆதலால் விளக்கிற்கு வமையாயிற்று. விரை விற்சொலாய் என்பது விரைவின் சொலாயெனமெலிந்து நின்றது. வரைதந்ததாலுனை. எ-து. விளக்குப்போலென் னையாகி லோரிடத்துண்டுமாயில்லையுமா யெல்லைகளுடைய வா யவ்வுரையின்ஞகிய சாங்கியன்மதம்போல வசற்காரிய வாதமதமாகவேண்டும். (உ)

இந்த வானினிடையொளிகொண்டு மேவியுளதாம். எ-கு. இந்தவாகாசத்தினிடத் தந்தவேதமெழுத்தில்லாத வோசை யாயொலித்துக்கொண்டு பொருந்தியுள்ளதாக வேண்டும். எ-ம். வரைதந்ததாலுனை. எ-கு. தள்ளப்பட்டதாகு முன் னுடையவார்த்தை. எ-ம் கபிலன்சொலாகுமது. எ-கு. வேத ந்தானே நின்று விளக்குமென்பது கபிலஞகிய சாங்கியன் சொல்லுமதமாம் அது உனக்குக்கூடாது, கூடுமாயின். எ-ம். மறைகின்றவாறும் வரவும் விரைவின்சொலாய். எ-கு. அவனைப்போல நாசமாகுமுறைமையு முற்பத்தியாகு முறை மையுமுண்டென்று கடிதிற்சொல்லாய், சொல்லிற்சுயம்பு வென்பது கூடாது. எ-ம். கூறினரோருரையாசிரியர்.

உருவின்கணேமருவிவரிலின்றுதேரையுரை யுள துங்கணூலின்மறையுந், தருகின்றநாதரவரிவரென் றுநாமமது தரவந்திடாமையதனுல், வருமென்றுநே டியெனில் வளர்கின்றதீபதனில் வருகின்றவாடைப லவா, லொருதந்துபாயனவனிவனென்றபோதிலிவை யுளதென்று நீடியவையே. (௩)

(இ-ள்.) உருவின்கணே மருவிவரில். எ-து. வேதமான தியாதொருருவைப்பற்றி மனத்திடத்தாய்ப் பிரகாசிக்குமென்று நீ சொல்லில்,—இன்று தேரையுரையுளதுங்கணூலின் மறையும். எ-து. (னவுருவை இப்பற்றிவருமென்னு நியமமில்லாதபடியாலே யிப்பொழுது) தேரையிடத்துண்டாகிய சத்தத்திலு முங்கணூலாகிய வேதமுண்டாகப்படும்,—தருகின்றநாதரவரிவரென்று நாமமது தரவந்திடாமையதனுல் வருமென்று நேடியெனில். எ-து. வேதத்தையுண்டாக்கியவனின்னுனென்று பேர்குறித்து வேதஞ்சொல்லாதாகையாற் ருனே தன்னை யதிகரிக்கத்தக்க வுருவைத்தேடி யஃதிடமாகத் தோன்றுமென்று நீ சொல்லில்,—வளர்கின்ற தீபதனில் வருகின்றவாடைபலவால். எ-து. பலவளங்களும் வளர்கின்ற தீவின்கண்ணின்று வருகின்றபுடைவை பலபேதங்களையுடைத்து. ஆகையால்,—ஒருதந்து பாயனவனிவனென்ற போதிலிவை யுளதென்று நீடியவையே. எ-து. பலபேதப்பட்ட புடைவைகளைக்கண்டபொழுதே தந்துபாயனென்று சொல்லப்பட்டவனுலே யிப்புடைவையுண்டானதென் றறிந்தாற்போல வேதமுஞ் சத்தார்த்தமாகையால் ஒருவனுலே செய்யப்பட்டதென் றறிவாயாக. எ-று. ஏகாரம்வினு. ஆல் அசை. உருவின்கணே மருவிவரிலின்றுதேரனுரை. எனப்பாடமாயின் உருக்களாலே யுள்ளார்களிடங்களிலேநின்று பொருந்திவருமென்னிற் சுகதனுரைபோல அநவத்தைப்பட்டு வேதத்தைத்தருவாளெரு கர்த்தா வவனிவனென்று சொல்லவில்லாமையும் காலவெல்லைபடாதென்பையாகிற் றயித்திரியமென்னு நாமமுமில்லையாம். (ரு)

தேரையுரை. எ-ன. தேரருரையுளதுங்கணூலின் மறையும், எனப்பாடமோதி உங்களுடைய நூலாகிய வினியவேதமும் புத்தருடைய பிடகநூல்போல அநவஸ்தையாக வுள்ளதாம். எ-ம். வருமென்று நேடியெனில். எ-ன. வருமென்று நீடியெனில் எனப்பாட்மோதி எக்காலமுஞ் சுயம்புவாகத்தானே நிலைபெற்று வருமென்றுசொல்லில். எ-ம். ஒருதந்துபாயன். எ-ன. ஒருதந்துவாயனவன் எனப்பாடமோதி நெய்தவனொருவனந்தத் தீபிடத்துள்ளவனும். அதென்போலவென்னில், — இவன் — இவ்விடத்துக்கண்ட வாடைகளை நெய்தவனிவனென்றாற்போல, — என்றபோதிலிவையுளது. எ-து. நீ சுயம்புவென்றகாலத்திலேதானேயிந்தவேதங்களுக்கொருவினைமுதலுண்டு. ஆதலால்,—என்று நீடியவையே. எ-து. எக்காலமும் வேதங்கள் சுயம்புவாக நிலைபெற்றனவோ, சுயம்புவல்ல. எ-ம் கூறினர் ஞானப்பிரகாசரு மற்றோருரையாசிரியரும். நீடியவையே என்ற ஏகாரமெதிர்மறை "அந்நியதீவிற்கௌசிகாதிவிதமாக்கினனை, யுன்னுவர் சாமாநியத்தை யோர்ந்து." "ஓீனும்பரங்கண்டே செய்தானுண்டென்றெனுவா, ஞானும்பரனியற்றுநாடு" என்பதுமறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

மறைநின்றுநாலுதிசையவொன்றதாகவருமுறைதந்தவாய்மையதனு, னிறைவென்றுநீடுவெனில்
வனையுங்கடாதிபல சொலவொன்றிநீடியுளதாங், குறைவின்றிநாடுமொழியவைசென்றுகூடுவதோர் குணமுண்டதாகுமலர்தா, னுறைகின்றமாலைதனிலுளதென்றதாகுமெனி னுணர்வின்றதாழியொலியே, (௬)

(இ-ள்.) மறைநின்று நாலுதிசையவரொன்றதாக வருமுரைதந்தவாய்மையதனுனிறைவென்று நீடுமெனில். எ-து. இதனை (நாலுதிசையவரொன்ற தாகவுரைதந்துவரும் வாய்மையதனுலே மறைநின்று நிறைவென்றுநீடும்) எனமாறுக. நான்குதிக்கிலும் பாஷைபேதிக்கப்பட்ட ஜாதிபேதங்களு மற்றொருநூல்போலாகாம லொருமைப்பட வோதிவருமுண்மையாலே வேதமநாதியாய் நிறைவையுடையதாய் நிலைபெற்றுமென்றுகூறின்,—வனையுங்கடாதிபல சொலவொன்றிநீடியுளதாம்குறைவின்றி நாடுமொழியவைசென்று கூடுவதோர் குணமுண்டதாகும் எ-து குலாலனுலுண்டாக்கப்படுங்கடாதிகள் பலபேதம்பொருந்தி யநாதியிலே யுள்ளதாகிறதுபோலக், குற்றமின்றி யறியப்படுஞ்சொல்லும் பொருளுங்கூடும்படிக்குக் கூட்டுவதோர் கர்த்தாவுண்டாகவேண்டும். அற்றன்று,—மலர்தானுறைகின்றமாலைதனி லுளதென்றதாகுமெனின். எ-து. மாலையினுறையும் பூவுமணமு மந்தமாலையினிடத்தினுள்ளதல்லவாய் முன்பேயுண்டா யதனைப்பின்பு மாலையாகக்கூட்டினுற்போலச் சத்தமுமர்த்தமுமுன்பேயுள்ளவாய்ப் பின்பு மூர்த்திகளாலே கூட்டப்பட்டவென்றுகூறின்,—உணர்வின்றதாழியொலியே. எ-து. அம்மூர்த்திகள் சத்தத்தையறிந்து கூட்டப்பட்டார்களல்லவாகி லுன்வேதங்கடைதலையுற்றதாழியினுேசைக்கொக்கும். எ-று. எனவேவேதஞ் சத்தார்த்தமாகையாற், சத்தந்,தந்ததாலோஷ்டத்தாலே யுண்டாகவேண்டுமாகையால் அவ்வேதஞ் சுயம்புவல்லவென்பது கருத்து.

வேதமென்னுஞ் செய்யுண்முதலிச் செய்யுட்காறும் வேதஞ்சுயம்புவென்பதனை மறுத்துக்கூறிற்று. உணர்வின்றதாழி

யொலி. எகு. சமுத்திரசத்தம்போலத்தானே யுள்ளதாமெ ன்னி லதற்கறிவில்லைகாண் எனப் பாடமோதுவாருமுளர். அதன்கணொலி வாய்வு காரணமாகவெழுமென்க. அந்தவா யும் ஜடமல்லவோவெனில், அந்தவாயுவுமொருகடவுளாற் சேட்டைப்படுமென்க. (ச)

"சுயம்புவென வேதத்தைச் சாற்றினை நீதன்னைச், சுயம் புவெனுமோவேதந்தான்." "வெவ்வேறுவேதமவ ரவருள்ளே விளங்கு, மவ்வேறநாதியென்கையாம்." "கட்டுரைத்தானே கபிலன் சாங்கியத்தையந்நூலு, மொட்டிவிளங்கும் பலருள் ளும்" "அநாதியல்லவே கபிலன் முனைறைந்தநூலு, மநாதிய நாதியல வேதமுமென்னுய்." "காரிகையுமின்றிக் கருவுருவுண் டேல் வேத, வாரியமுமேதுமின்றியாம்." அங்கங்குள்ளாரு ணின் றவ்வவர்தம் புத்திரர்பாற், றங்கிநிற்கும் வேதந்தழை த்து." "என்னிலவரவர்த மாக்கையெலாந்தன்மிகா, ணுன்னி டில்வேதந்தருமமோர்." அழியும்பொழுதுதருமிதரும மழியும வையெங்ஙனநித்தம் "செவிக்கு விடையஞ் சிதையுங்காண் வேதம், புவிப்புகல்வார் சொற்பதத்தைப்போன்று." "தோ ற்றநிலையீறுண்மையாலே சுயம்புவலத், தோற்றிவித்தானுண் டென்றுசூழ்" ஆக்குவித்து விந்துவிற்சொன் ஞன்குமவை நோக்குவித்துப், போக்குவிக்குங்காண் மெய்ப்பொருள்." என்னுந்திருவாக்குகளால் வேதஞ் சயம்புவன்றெனவறிக. வடிவின்றியருவமாயிருக்கிற வுமதிகர்த்தாவானவ ரெப்படி வேதஞ்சொன்ஞரென்னில் "ஆக்கையியக்குமருவா யருவமல, ஞக்குமுடலுரையண்டம்" என்பதனுனறிக என்முர் ஞானப் பிரகாசர்.

உடனின்றுநாமுணருமதுகண்டவாறொருவ னு
லகங்களேயுருவமா, யிடைநின்றுமாமறைகளவையன்
றுவாய்மொழிய விவைகொண்டுலோகநெறியின், கட
னின்றுவாழுமதுகருதும்பிறுணைவழி கருமஞ்செய்கா
சினியுளோர், திடமென்றுசீரரச னுரைதங்குமோலை
திரு முகமென்று சூடுசெயலே. (௫)

(இ-ள்.) உடனின்று நாமுணருமதுகண்டவா றொருவ னுலகங்களே யுருவமாயிடைநின்று. எ-து. சரீரத்தினின்று நாமுணரு மதுகண்டபடியாலே யொப்பற்றவனொருவனென்றுசொல்லப்பட்ட கர்த்தாவானவன் பிரபஞ்சமேதிருமேனியாய்ப் பிரபஞ்சத்திடையிலே யெழுந்தருளிநின்று,— மாமறைகளவையன்று வாய்மொழிய. எ-து. மிகுதியுடைய வேதங்களை யநாதியிலே யருளிச்செய்ய,— இவைகொண்டு லோகநெறியின் கடனின்றுவாழுமதுகருதும். எ-து. அவ்வநாதியைக்கொண்டு பிரபஞ்சமானதும் வேதமுறையிலேநின்று வாழுமதனைக்கருதி யநாதியென்றுஞ் சுயம்புவென்றுஞ் சொல்லாநிற்கும் அஃதென்போலவென்னின்,— பிறுணைவழிகருமஞ் செய் காசினியுளோர் திடமென்றுசீரரசனுரை தங்குமோலை திருமுகமென்று சூடுசெயலே. எ-து. மண்டலநாயகனாகிய வரசன் றனதாக்கினை வழியிலேநிற்கும் பிரபஞ்சத்தினுள்ளோர்க்கு அவ்வரசனுரை பொருந்தியவோலைவா வதனைத் திருமுகமென்று மங்கலமாபிறுர்கூறித் தலையிற்றரித் தவ்வரசனைப்போலச் சிறப்புச்செய்கைபோலவழங்குங் கிரமங் காண், எ-று.

சுவயம்புவாலே கூறப்பட்ட வேதத்தையுஞ் சுவயம்புவென்று கொண்டமுறைமையு மதனையுலகங்கொண்ட முறைமையுங்கூறிற்று. மாகனாற் சொல்லப்பட்டது மாகமானாற்போலவும், தொல்காப்பியனாற் சொல்லப்பட்டது தொல்காப்பியமானாற்போலவும்'பிரவாற்றுனுங்சொள்க. (௫)

முடிவின்றிவேதியுர்கண்முதல்வந்த மூவர்களுமொழியுஞ்சொலாரியமெனிற், கடிவின்றியேகணிதரவர்கண்டவாறது வென்வடகண்டசாதிகடியா, தொடிவின்றியோதுவதெனுரைதங்குவேதமொழி யுளதென்றுகூறுமவர்தா, மடிபின்றுதானெனுமதறிவின்றியினுமவ ரிலையென்றவாதரவதே. (௬)

(இ-ள்.) முடிவின்றிவேதியர்கண் முதல்வந்த மூவர்களுமொழியுஞ்சொலாரியமெனில். எ-து. ஆரியமாகியவேதமேகேடில்லாத பிரம க்ஷத்திரிய வைசியரென்னு மூன்று சாதியுமோதுஞ்சொல்லென்று நீசொல்லின்,—கடிவின்றியே கணிதரவர்கண்டவாறதுவென். எ-து. ஏனையவருணத்துள்ளாராய்ச் சோதிடஞ் சொல்லுமவர்கள் வேதத்துக்கங்கமாகிய சாத்திரத்தை யோதாமலறியும்படி யெங்ஙனம். அஃதன்றியும்,—வடகண்ட சாதிகடியா தொடிவின்றியோதுவதென். எ-து. இந்தத்தீவின் வடகூற்றினுள்ளார் மற்றவருணத்தார் வேதத்தையோதத் தக்காரென்று நீக்கப்படாமலெல்லாராலு மோதப்படுவானேன். ஆதலானீக்கப்படாதாயிற்று,—உரைதங்குவேதமொழி யுளதென்று கூறுமவர்தாம். எ-து. எல்லார்சொல்லுந் தன்னிடத்திலே யுடைத்தானவேதஞ் சத்தமாகவுள்ளதென்று கூறுமவர்தாமும்,-அடியின்றுதானெனுமது. எ-து.

வேதத்துக்கடியில்லையென்று சொல்லுமது.—அறிவின்றியீனு மவ ரில்லையென்றவாதரவதே. எ-து. அறிவிலாதவாய் வேதத்தையொருத்தருண்டாக்கினரில்லையென்று சொல்லு மாசைக்கொக்கும். எ-று. கடிவின்றி-நீக்கமின்றி. ஒடிவின்றி-தவிர்தலின்றி. ஈனுமவர்-உண்டாக்குமவர்.

இச்செய்யுள் வேதமெல்லாரு மோதவொண்ணுதென்பதனையு மதற்குப் பாதமில்லையென்பதனையு மறுத்துக்கூறிற்று. முடிவின்றி வேதியர்கள்-அளவிறந்த பிராமணர்கள். முதல்வந்த மூவர்களும்-பழையபிரமவிட்டுணு ருத்திரர்களும். கடிதின்றியே கணிதரவர்கண்டவாறதுவென்-கடியாது கணிதநூல்களு மொருவர் சொல்லாமல்வந்ததாம். வடகண்டசாதிகடியா. வடபூமியினுள்ளாருங் குறைபடாமல் வேதஞ்சுயம்புவென்றே சொல்லா நின்றார்கள். ஈனுமவரில்லையென்றல்-தாயின்றியிலே பிள்ளைபிறக்கும் வசநத்துக்கொக்குமென்றலுமாம்.

“காரிகையுமின்றிக் கருவுருவுண் டேல்வேத, வாரியமுமேதுவின்றியாம்.” எ-ன. காரியமின்றி வேதமுண்டாகாதென்பதற்குணர்க என்றார் ஞானப்பிரகாசர்.

அறிகின்றபான்மையவயவநின்றதாகிலணு வழியுங்கடாதியெனவே, செறிகின்வாறதிலையெனின்வந்து சேருமது திடமன்றுகூடவொருவன், குறிகொண்டு காரின்முளைவருநின்றுபீசமவை கொலையொன்றிவேனிலழியு, முறுகின்றகாலமவை யுடனின்றுபோயழியு முலகென்று நீடியிலதே. (எ)

(இ-ள்.) அறிகின்றபான்மை யவயவநின்றதாகி லணுவ ழியுங்கடாதியெனவே. எ-து. (அணுவவயவ மறிகின்றபான் மைநின்றதாகிற் கடாதியெனவேயழியும்) எனமாறுக. ஆன் மாவானது பேதப்பட்டுச் சரீரவவயவத்தைத்தானறியும் பகு தியிலே கூடிநின்றதாயி னழியுந்தகுதியையுடைய சரீரகதி போல வான்மாவுமழிந்துபோம்,—செறிகின்றவாறதிலெயெ னின் வந்துசேருமது. எ-து. ஆன்மாவந்தச் சரீரவவயவத் தைச் சேராது சரீரவவயவந்தானேசென் றான்மாவைச் சே ருமென்றுகூறின்,—திடமன்றுகூட வொருவன் குறிகொண்டு. எ-து சரீரவவயவந்தானே யான்மாவைக்கூடு நிலைமையு டைத்தன்று,கர்த்தாவொருவன்குறிகோளாகக்கூட்டுகையாலே யான்மாவுஞ் சரீரமுங் கூடிவரும்,—காரின்முளைவருநின்று பீசமவைகொலையொன்றி வேனிலழியும். எ-து. (பீசமவைகா ரின் முளைவருநின்று வேனில்கொலையொன்றியழியும்) என மாறுக. முளைகளானவை கார்காலத்து விதையினின்று முளை த்துவரும் வெனிற்காலத்துத் தகுதிவேறு பட்டழியும். அஃ தென்போலவென்னில்,- உறுகின்றகாலமவையுடனின்றுபோ யழியு முலகென்றுநீடியிலதே. எ-து. பிரபஞ்சமானது சிரு ஷ்டிதிதிசங்காரமென்று கூறப்பட்ட மூவகைத்தொழிலுற்ற காலத் துடனேகூடித்தோன்றிநின்று கெடுமாகையாற் காலத் தோடுங்கூடிவரும் பிரபஞ்சமானதெல்லாநாளு நிலைபேற்றை யுடையவல்லவாம். எ-று.

இச்செய்யுள் பிரபஞ்சமழியுமென்பதூஉம் அழிவில்லாத வான்மா பிரபஞ்சபேதத்திலல்லவென்பதூஉங் கூறிற்று.(எ)

"அவயவத்தாற் காரியமே காணனுக்களெல்லா, மவை யுமழியுமென்பாய்" சடமவைதாமே தருவாகமாட்டா, கடமாமோ மண்டானேகாண்" "ஆக்குங்காலத்தமல னுலகாய் நின்றவைகள், போக்குங்காலத்தழிந்துபோம்" காரின்முளைத்துநின்று வித்துக்கழிந்துவிடுங், கோரவுருவேனிலுறக்கூர்ந்து." என்பது மறிக என்றார் ஞானப்பிரகாசர்.

நிறைவெங்குமாகிலுயிர்நெறிநின்றுபோய்வருத லிணைவின்றதாமுடலிலே, குறைவின்றெலாமுமுள குடகந்தமாகிலவை விடநின்றவாறுகுறியா, வுறைகின்றமாதவர்களுடனின்றுபோய் வறிதோருடல்கொண்டுமீள்வதுணராய், மறைதந்தவாய்மைதனி னிறைவின்றியேயுலகின் மலைகின்றதாலுனுரையே. (அ)

(இ-ள்.) நிறைவெங்குமாகிலுயிர். எ-து. ஆன்மாவானது பிரபஞ்சமெங்குநிறைந்து நிற்குமாயின்,—நெறிநின்று போய்வருதலிணைவின்றதாம். எ-து. ஆன்மாவானது நித்திய கன்மமுதலாகிய நெறிகளிலேநின்று அந்தநெறிக்குத்தக்க சுவர்க்காதிபதங்களிலேசென்று புண்ணியத்தைப்புசித்துப் புண்ணியகன்மந்தொலைந்தால் மீளவும்வருமென்னும் வேதவாய்மையில்லையாம். அற்றன்று,—உடலிலே குறைவின்றெலாமுமுளகுடகந்தமாகில். எ-து. (எலாமுமுடலிலே குடகந்தங் குறைவின் றுளவாகில்) எனமாறுக. எல்லாவான்மாக்களுஞ் சரீரத்திலே குடத்திற்கட்டின பூமணம்போல நிறைந்து நிற்குமென்று கூறுகின்றாயாயின்,—அவைவிடநின்றவாறுகுறியா எ-து. அவ்வான்மாக்கள் சரீரங்கெட்டபோது தான்கெடாம

னுடலைவிட்டு நிற்கிறவழியைக் குறிக்கொள்ளமாட்டாவாகை யால், — உறைகின்றமாதவர்க 'ளுடலின்றுபோய்வறிதோ ருடல்கொண்டுமீள்வதுணராய். எ-து. உடலின்கணுறைத லைச்செய்யு மகாயோகிக ளவ்வுடலைவிட்டுப் பரகாயப்பிரவே சஞ் செய்வதும் வருமத்துவுமறியாய்,—மறைதந்தவாய்மை தனி னிறைவின்றியேயுலகின் மலைகின்றதாலுனுரையே. எது. வேதஞ்சொன்னசத்தியமான வத்தத்தி லுனக்குநிறைவில்லை யாதலால் நீ சொல்லுகின்றசொல்லு முலகத்தின்கண் மாறு பாடுபொருந்திற்று. எ-று. குடகந்தமாகிலென்பதற்குப் போ லவென்பதோருவமைச்சொல் வருவித்துரைக்க. வறிதோரு டல்-உயிர்போன மற்றோருடலை.

இச்செய்யு ளான்மா வெல்லாவற்றினுஞ் சரீரத்தினு நி றைந்து நிற்குமென்பதனை மறுத்துக் கூறிற்று. (அ)

"நிரையினுயிரெங்கு நீங்கியுடல்வானத், துரையுமெங் ஙன் சொன்னிரயத்தும்" என்பதுமறிக என்றார் ஞானப்பிர காசர்.

அழிகின்றதால்வினைகளாகின்றவாறெனொரு வது மங்கியானபரிசே, லொழிவின்றியோதநமு மறவுண் ணநாம்வினைக ளூறுகின்றவாறதெனலாங், கழிகின் றதாலறிவுவினைதந்திடாவினைஞர் கருமங்களுடியுறு வோர், பழுதின்றியேயுதவுமதுபண்பதாகவருள் பர மன்கணுகும்வினையே. (௯)

(இ-ள்.) அழிகின்றதால் வினைகளாகின்றவாறென். எ-து. இதனை (வினைகளழிகின்றதா லாகின்றவாறென்) எனமாறுக. ஒருவன்செய்தகன்மங்க ளிக்காயங்கெடக் கூடக்கெடுமாகை யாற் கன்மமேலைக்குவந்துண்டாம்படி யெங்ஙனம்,-எருவது மங்கியானபரிசேல். எ-து. வயலுக்கிட்டவைக்கோலுந்தழை யுந் தனதுதூலமுறைமைகெட்டுச் சூக்குமமுறைமையாகி விரி யங்கிடந்து பயிருக்குநன்மைகொடுக்குமதுபோலச் செய்த கன்மமுடலோடு தூலமுறைமைகெட்டு ஆன்மாவோடு சூக்கு மமுறைமையாகிப்பொருந்துமென்று நீசொல்லின்,-ஒழிவின் றியோதநமுமறவுண்ண நாம் வினைகளூறுகின்றவா றதென லாம். எ-து. நாடோறுநாமுண்ணுமுணவு செரித்துக் கழிந்த மல மீளவுநமக்குநன்மையைத்தருமென்பார் கூறுங்கூற்றெ னலாம்,—கழிகின்றதாலறிவு வினைதந்திடாது. எ-து. (வினை கழிகின்றதாலறிவுதந்திடா) எனமாறுக. காயத்தோடுஞ்செ ய்த வினைகெடுகையா லவ்வினை யான்மாவையறிந்து கூடமா ட்டாது. அதுகூடும்படி,—வினைஞர் கருமங்களுடியுறுவோர் பழுதின்றியே யுதவுமதுபண்பதாக. எ-து. தொழில்செய் தோர்க்குச் செய்ததொழில்கண்டு தொழில்கொள்வோரவ்வ வர்தொழிற்குத்தக்கதொத்துப் பழுதறக்கொடுக்குந் தன்மை போல,-அருள்பரமன்கணுகும்வினையே. எ-து. ஆன்மாக்கள் செய்த புண்ணியபாவங்களையறிந் தந்தப்புண்ணிய பாவத் துக் கீடான புசிப்புக்களைக்கொடுத்தருளிப் புசிப்பிக்குந்தொ ழில் பரமேஸ்வரனதாகும். எ-று.

இச்செய்யுள் கன்மமுமான்மாவுந் தாமேகூடுமென்பத னைமறுத்துக் கூறிற்று. (௬)

சன்மங்களைப்பண்ணின வான்மாவுக்கு மந்தக்கன்மங்களையு மக்கன்மங்கட்குசிதமானபல்ன்களையு மறியுஞ்சாமர்த்தியமில்லையென்பதுமறிக. இதற்கு "செய்தான்செயல்பலமுஞ் சிந்திக்கவல்லனலன், செய்திக்குஞ்சிந்திக்கையின்று." "செய்தார் செய்திப்பலத்தைச் செய்விப்பார்போலமலன், செய்விப்பன் செய்திப்பலம்" "வேலைதருமோகூலிவேலை விதங்கண்டிசைந்த, கூலிதருவான்போ லெங்கோன்" என்னுந்திருவாக்குகளுமறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

கருமங்கண்ஞானமதுவுடனின்றலான்மருவு கதிதங்கலாகுமெனினீ, தருமங்கராகமுதலவைதங்கமேலறிவு தவிரும்பின்விடுமெண்ணயா, பொருணின்றுதேடிவருபயனுண்டுபோக வினைபுரிகின்றவாரதெனவே, திருநின்றபோகம்வளரவிசென்றுமேவியது செலவுண்டுசூழ்வசெயலே. (கo)

(இ-ள்.) கருமங்கண்ஞானமது வுடனின்றலான்மருவு கதிதங்கலாகுமெனினீ. எ-து. நித்தியகன்மமுதலியகன்மங்களை ஞானங்கூடிநிற்றலாலே யழிவில்லாமையைப்பொருந்தின வீட்டின்பத்தைப்பொருந்தலாம் என்று நீகூறின்,-தருமங்கராகமுதல். எ-து. கன்மங்கள் செய்யுமிடத்துத் திரவியார்ஜிதம் வேண்டுகையாலே யாசைமுதலியனவுண்டாம்,—அவைதங்கமேலறிவுதவிரும். எ-து. அவ்வாசைமுதலியவுண்டாகவே யான்மாப்பாசஞானமாய்நிற்கும்,—பின்விடுமெணயா. எ-து. அந்தப்பாசஞானத்தாலே மோக்ஷமுமடையாது,—பொருணின்றுதேடிவருபயனுண்டுபோக வினைபுரிகின்றவாறதெனவே. எ-து. ஒருவன்பொருளைத்தேடி யதனாலுண்டாயபயனை யநு

லேநின்றுபுசித் தந்தப்பொருண்மாளவே மீளவும்பொரு டேடுதற்கு முயல்கின்றவத்னையொப்ப,—திருநின்றபோகம் வளரவிசென்றுமேவியது செலவுண்டு சூழ்வசெயலே. எ-து (வளரவிசென்று திருநின்றபோகமேவியது செலவுண்டுசூழ் வசெயலே) எனமாறுக. வெகுவான்வாகுதி செய்கையினலே யவ்வாகுதிசென்ற புண்ணியத்தால் மிக்கசுவர்க்கபோகங்க ளைப்பொருந்தி யப்புண்ணியந் தொலையுமளவும் புசித்துத் தொலையமீளவும்புண்ணியகன்மஞ் செய்ய நினைக்கின்றசெய ல்கா ணுன்செயல். எ-று.

இச்செய்யுள் கன்மஞ்செய்யவேஞானங்கூடி மோக்ஷ முண்டாமென்பதனை மறுத்துக்கூறிற்று.

வேதமென்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுட்காறும் பட் டாசாரியன் மதத்தை மறுத்துக் கூறிற்று. (௧0)

கன்மத்தால் முத்தியில்லை யென்பதற்கு. "புரிந்துமகம் புக்குவான் மீண்டும்புரிவா, ரிருந்தனஞ்செய்துண் பார்க் கொப்பென்" "வினைப்பலந்தீண்டாமலே வீடென்றிசைத்தாய், வினையினுக்கு முண்டுகொண்வேர்." "அதுமலமூலமதுநீங்குத லுமான்மா, விதமுறுமின்பம் வீடென்றெண்" "அடக்கிமலம் படுவ தாருயிர்க்கானந்தங், கொடுப்பனிது முத்தியெனக் கொள்." என்பதுமறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

பாட்டாசாரியன்மதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—உ௭௨.

பிரபாகரன்மதம்.

அருந்தவனுஞ்சைமினிபண்டாரண நூலாய்ந்தானு
ய்த், திருந்துமுலகினிற்கொண்டு செப்பியநூற்றிறமத
னைப், பரிந்துபிரபாகரன் பட்டாசானில்வேறாகிப், புரி
ந்துரைசெய்நெறியதனைப்புவனிமிசைப்புகன்றிடுவாம்.

(இ-ள்.) (அருந்தவன்—புகன்றிடுவாம்.) எ-து. அரியத
வத்தினையுடையனாகிய சைமினியென்னுமகாவிருடி முன்வேத
நூலையாராய்ந்தானாய் நல்லவுலகின்கண்ணே தான்சொல்லு
கின்றவழிக்குப் பொருந்தத்தக்கவற்றை வேதத்திலேநின்றெ
டுத்துக்கொண்டு சொல்லப்பட்டவனது சூத்திரமுறைமையி
னைப்பொருந்திப் பிரபாகரன் பட்டாசாரியனாற் சொல்லப்
பட்ட பாட்டத்தினெறியிலேவந் ததிற்சிறிது வேறுபடச்சொ
ன்னவழியதனை யெடுத்தியானும் பூமியின்கண்ணே சொல்லா
நின்றேன். எ-று.

பிரபாகரன்மதமுணர்த்துவானெடுத்துக்கொண்டாரத
னுளித்தலைச்செய்யுள் பிரபாகரனெறியைக் கூறுகின்றேனெ
ன்று கூறிற்று. (௧)

அருஞ்செயலினபாவத்தேய பூர்வமெனுமதுதோ
ன்றித், தருஞ்செயனின் றழியின்பின் பலிப்பிப்பதா
குமது, வருஞ்செயலொன்றின்றியே மண்சிலைபோலா
முத்தி, தருஞ்செயலீதெனவுணர்ந்து தாரணிமே
லவன்சாற்றும். (௨)

(இ-ள்.) அருஞ்செயலினபாவத்தே யபூர்வமெனுமது தோன்றி. எ-து. அரிதாகச்செய்யுங்கன்மத்தை யொழிந்தவிடத்திலே யபூர்வமென்பதொன்றுண்டாய்,-தருஞ்செய னின்றழியில். எ-து. (செயறருநின்றழியில்) எனமாறுக, அந்தக்கன்மத்திலே யறிவுகூடிநின்று தொழிற்பட்டுக்கன்மமுடிந்தபொழுது,-பின்பலிப்பிப்பதாகுமது. எ-து. பின்புதானின்று பிரயோஜநப்படுப்பிப்பதாம்,-வருஞ்செய லொன்றின்றியே. எ-து. அவ்வறிவுங்கன்மமுங்கூடி வருந்தொழிலொன்று மின்றியே,—மண்சிலைபோலா முத்திதருஞ்செயல். எ-து. (முத்திதருஞ்செயல். எ-து. (முத்திதருஞ்செயல் மண்சிலைபோலாம்) எனமாறுக. வீட்டுநெறியைத் தருகிறசெய்தியாவது, மண்போலவுங் கல்லுப்போலவு மறிவுந்தொழிலுமற்றிருத்தலாம்,—ஈதெனவுணர்ந்து தாரணிமேலவன்சாற்றும். எ-து. மண்போலவுங் கல்லுப்போலவு மறிவுஞ்செயலுமற்றிருப்பதே முத்தியெனவறிந்து பூமியின்கண்ணே யித்தன்மைத்தென்று பிரபாகரன் சொல்வான். எ-று.

இச்செய்யுளிரண்டும் பிரபாகரனெறி கூறின. அபூருவமென்றொரு குருசொரூபம். அருஞ்செயல். எ-து. செய்தற்கரியசோதிஷ்டோம முதலியவற்றை. (௨)

பிரபாகரன்மத முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—௨௩௪.

பிரபாகரன் மதமறுதலை.

வேறுபலந்தருவதுதான் வினையென்றுவேதங்கள்,
கூறவோரபூர்வந்தான் கொடுக்குமெனக் கொண்ட
வுரை, மாறுதருமறையோடுமுன்பின்றி வந்ததாற்,
றேறியவிண்பூமுடிமேற்சேர்ந்துமணந் திகழ்ந்தது
வாம். (௩)

(இ-ள்.) வேறுபலந்தருவதுதான் வினையென்று வேதங்கள்கூற. எ-து. முன் ஜநநத்திற்செய்த விருவினையு மிந்தஜநநத்திலே பலபேதப்பட்டுச் சுகதுக்கங்களைக் கொடுக்குமென்று உன்வேதங்கள் சொல்லாநிற்கவும், — ஓரபூர்வந்தான் கொடுக்குமெனக்கொண்டவுரை. எ.து. முன்ஜநநத்திற் செய்தவினைக் கிந்தஜநநத்திலே பலத்தைக்கொடுப்ப தபூர்வமென்பதொன்றென்று பிரபாகரா நீமெய்யாகக்கொண்டு சொல்லப்பட்டசாத்திரம்,—மாறுதருமறையோடு. எ-து. வேதத்தோடுமறுதலைப்படும்,—முன்பின்றிவந்ததால். எ-து. செய்த கன்மத்தினுடையபல மநாதியிலில்லையாய்ப் பின்பபூர்வமென்பதொன்றினாலேவந்ததாயின், — தேறியவிண்பூமுடிமேற்சேர்ந்துமணந்திகந்ததுவாம். எ-து. வாட்டமில்லாத குளிர்ந்த ஆகாயப்பூவுக்கு முன்புமணமில்லாமற் றலையிலேசேர்ந்த பின்பு மணமுண்டானதென்று சொல்லுந்தன்மைக்கொக்கும். எ-று.

பிரபாகரன்மதத்தை மறுப்பா னெடுத்துக்கொண்டா ரதனுளிச்செய்யு ளபூர்வமென்பதனை மறுத்துக்கூறிற்று. (௧)

"முன்பிலாவொன்று முளைப்பதபூர்வமெனி, லென்ப டந்தான்மண்ணுதியாதீண்டு." என்பது அபூர்வத்தாலுண்டா காதென்பதற்கறிக என்றார். ஞானப்பிரகாசர்.

ஆநந்தங்கதியென்ன வறிவழிகைவீடென்கை,
யூனம்பின் னுணர்விழந்தோர்க்குளதாகுமுயர்முத்தி,
தானிங்குச்சிவப்பொழியத் தழனிற்குமாறில்லை, ஞா
னங்கெட்டுயிர்நிற்குமெனு முறைதானண்ணுதால்.(௨)

(இ-ள்.) ஆநந்தங்கதியென்னவறிவழிகை வீடென்கை யூனம். எ-து. பரமானந்தமேவீடென்று வேதங்கள்சொல்லவு நீயான்மாவினதறிவுகெட்டு மண்போலவுங்கல்லுப்போலவு மாகையால் வீட்டின்பமென்று கூறியதுகுற்றமுடைத்து. அப்படியறிவுகெட்டவான்மா முத்தியடைவனாயின்,—பின்னுணர்விழந்தோர்க்குளதாகுமுயர்முத்தி, எ-து, மூர்ச்சைவந்தறிவுகெட்டவர்களுக்கும் மிக்க வீட்டின்பமுண்டாகவேண்டும். அஃதன்றியும்,— தானிங்குச்சிவப்பொழியத்தழனிற்குமாறில்லை. எ-து. இவ்விடத்து நெருப்பானது தன்சொரூபமாகிப் சிவப்புக்கெட்டாற்றானுங்கூடக்கெடுதலன்றியந் நெருப்பு நிற்கும் வழியில்லையாம். அதுபோல,—ஞானங்கெட்டுயிர்நிற்குமெனுமுறைதானண்ணுதால். எ-து. ஆன்மாவானது தன்சொரூபமாகிய வறிவுகெட்டாற்றானுங்கூடக்கெடுதலன்றியான்மாநின்றுவீட்டின்பத்தை யநுபவிக்குமென்று சொல்லுஞ்சொற்பொருந்தாது. ஆகையாலறிவுகெட்டுக் கல்லுப்போலவு மண்போலவுமாய் முத்தியடையுமென்னுமது குற்றமுடைத்து. எ-று. உணர்விழந்தோர் மூர்ச்சித்தோர், உணர்விழந்தோர்க்கும் என உம்மைவிரிக்க. ஊனமென்பதனைக் கடையிலுங்கூட்டுக.

இச்செய்யு ளான்மாவறிவுகெட்டு முத்தியடையுமென்ப தனை மறுத்துக் கூறிற்று.

இச்செய்யுளிரண்டும் பிரபாகரன் மதத்தை மறுத்துக் கூறின.

"வன்சிலையுமண்ணுமென வாய்ப்பதுவே முத்தியெனி, லென்கருவுமுத்தியெனுயிங்கு" "முத்திபராநந்தாறு பூதியெ னநூன்மொழியுங், கொத்தைமுத்திகாணுனது கோள்" என்பது மறிக. என்றார் ஞானப்பிரகாசர். இதன்பின்னர் ஸ்மார்த்த மதம், சேசுரமீமாங்கிசமதம், சோதிடமதம், காலேசுரவா தம் என்னு நான்குமதமுமவற்றின் மறுதலையும் ஞானுவரண விளக்கத்திற்காண்க. என்றார்மற்றோ ருரையாசிரியர்.

பிரபாகரன் மதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—உ௦௬.

சத்தப்பிரமவாதிமதம்.

உரையானதுமையலினுலுலகாம்
புரையோருணரும்பொருள்பொய்பிதனை
விரையாதுணரும்மதுவிட்டனவே
வரையாதுரைவாதிவகுத்தனனே. (௧)

(இ-ள்.) உரையானது மையலினுலுலகாம். எ-து. சத்தமானது மயக்கத்தினுலே பிரபஞ்சமென்பதாம், — புரை யோருணரும்பொருள்பொய். எ-து. அறியாதா ரத்தமுஞ்

சத்தத்துக்குண்டென்று விசாரிப்பது மெய்யல்லவாம்;—இதனைவிரையாதுணரும்மது வீடெனவே. எ-து. சத்தமேபிரமமாவது, அத்தமில்லையென்றறிவுமறிவே வீட்டின்பமாவதென்றே,—வரையாதுரைவாதிவகுத்தனனே. எ-து. சத்தப்பிரமவாதி பிரபஞ்சபேதத்தை யெல்லைப்படவறியாது சத்தமேயுள்ளதென்று வகுத்துச்சொன்னான். எ-று.

சத்தப்பிரமவாதிமதங் கூறுவா னெடுத்துக்கொண்டாரதனுளிச்செய்யுள் சத்தமே பிரபஞ்சமாகவுள்ளது அத்தமில்லையென்பதனையு, மந்தச் சத்தமேபிரமமென்பதனையுங் கூறிற்று. (க)

உரையானதுமையலினாலுலகாம். எ-து. சத்தமாகிய பிரமமானது மாயையொடு கூடிக்கொண்டு தநுகரணபுவன் சொரூபமான பிரபஞ்சமாம். மாயைக் குமையல் என்றது உபசாரவழக்கு எ-ம். சொல்லுக்குப் பொருளுண்டென்பது பொய் எல்லாஞ் சொல்லென்பதுமெய் என்றவனுட்கோளாம் என்றோருரையாசிரியர்.

பரிணமம்விவர்த்தநமாயமதிற்
றருமாமுலகுள்ளதுசத்தமதே
பொருளாவதுசொன்னலமல்லவெனின்
மருவாதுபொருட்டிறமற்றிலையே. (உ)

இ-ள்.) பரிணமம்விவர்த்தநமாயம். எ-து. சத்தத்தாலேபரிணமித்து மிகவுமுண்டாதலே மயக்கமாவது,—அதிற்றருமாமுலகு. எ-து. அந்தமயக்கமே யுலகத்தையுண்டாக்கப்படுவதுமாகையால்,—உள்ளது சத்தமதே. எ-து. உள்ளதா

கக்காணப்பட்டது சத்தமொன்றுமே,—பொருளாவது சொன்னலம். எ-து. சத்தத்துக்கத்தமென்று சொல்லப்பட்ட தச்சத்தத்தினன்மையேயாகும்,—அல்லவெனில். எ-து. சத்தத்தினன்மையல்லவத்த மத்தத்தினன்மையே சத்தமென்றுகூறின்,—மருவாது பொருட்டிறமற்றிலேயே. எ-து. சத்தங்கூடாத தொருபொருளுண்டாவதில்லையாதலாற் சத்தத்தினன்மையே அத்தமாவது. எ-று. மற்று வினைமாற்று.

இச்செய்யுள் சத்தமே பிரபஞ்சமாவதுஞ்சொன்னலமாவது மென்பது கூறிற்று. சொன்னலம் பொன்னேபணியும் என்கை.

பரிணமம் விவர்த்தநமாயம். எ-கு. பரிணமம் உண்டாவது, விவர்த்தநம் பிராந்தி, எனவே சத்தத்திலே பொருடோன்றினதென்பது பிராந்தி, சத்தமேபொருளென்ப துண்மை என்றுரோருரையாசிரியர்.

பூமாவெனவேயுரையும்பொருளு
மாமாம்பொருளொன்றிலணைந்திலதா
ஞமாதரவெய்துசொனல்கருவாயத்
தாமாம்பொருணெற்பொரிதானெனவே. (ந)

(இ-ள்.) பூமாவெனவேயுரையும் பொருளுமாம். எ-து. பூவெனவுமாவெனவு மிரண்டுசொல்லுளவா யவற்றிற்குப் பொருள்கூறுமிடத்துப் புட்பமென்றும் இலக்குமியென்றுங், கூறப்படும்,— ஆம்பொருளொன்றி லணைந்திலதால். எ-து. அப்படிக் கூறப்படும் பொருளொன்றிலே சத்தமடங்காமற் பூமியெனவும் விலங்கெனவுஞ் சொல்லப்பட்ட பொருளையுங்

கொள்ளப்படுமாதலால்,—நாமாதரவெய்துசொனன் கருவாய்த்தாமாம்பொருள். எ-து. நாம்விருப்பத்தை யெய்திக்கொண்டு சொல்லுஞ்சொல்லே கருப்பமாகக்கொண்டு பலபொருள்களுமுண்டாம். அஃதென்போலவென்னில்,-நெற்பொரிதானெனவே. எ-து. நெல்லிற்றோன்றும்பொரிக்கு நெல்லே கருப்பமானாற்போல வத்தத்துக்குச்சத்தமே கர்ப்பமாம். எ-று. பொரிக்குவன்னபேதமு நாமபேதமுமுண்டாயினு நெல்லேயதற்குக் கருப்பமானாற்போல அத்தம்பலபேதப் படினுஞ் சத்தமே கருப்பமாமென்பது கருத்து.

இச்செய்யுள் ஒருசத்தம் பலவத்தத்தைக்கொண்டு நிற்கையாற் சத்தமே பிரமமென்பது கூறிற்று. (௩)

ஆமாம்வடிவொன்றி லின்றிலவாம் எனப்பாடமோதிச் சொல்லும்பொருளு மொருவடிவினைப் பொருந்தியிராவாம். வேறுபட்டுப் பலவடிவாயிருக்குமென்னி லது கூடாது. எ-ம். நெல்லும்பொரியான தாதான்மியம்போலப் புத்தியிற்றோன்றுஞ்சொல்லே பொருளாமென்க. எ-ம். கூறினர் ஞானப்பிரகாசரு மற்றோராசிரியரும்,

---

சொல்வந்தெழலும்பொருடோன்றுதலாற்,
சொல்லேபொருளென்று துணிந்திடுநீ
சொல்லும்பொருளும்முடனின்றதெனிற்
சொல்லும்பொருளின்றுசொனின்றதுவே. (௪)

(இ-ள்). சொல்வந்தெழலும் பொருடோன்றுதலாற் சொல்லேபொருளென்று துணிந்திடுநீ. எ-து. யாதொருசொல் தந்ததாலோட்டங்களாலேயுண்டாக வந்தச்சொல்லிலே பொருளுமுண்டாமாதலாற் சொல்லேபிரதானமென்று நீதெளிந்

திடுவாயாக. அற்றன்று,-சொல்லும்பொருளு முடனின்றதெனின் எ-து. சொல்லும்பொருளுமுடனிற்கையாற் பொருளுந் தனியே யொருமுதலென்றுகூறின், — சொல்லும்பொருளின்று சொனின்றதுவே. எ-து. ஒருசொற்குப் பொருளுரைக்குமிடத்துப் பொருளுஞ் சொல்லாமாதலாற் சொல்லொழிந்து பொருளென்றொன்றுண்டாவதில்லை, அதனாற் சத்தமே பிரமமென்று கொள்வாயாக. எ-று.

இச்செய்யுள் சத்தமேயத்தமாவதென்று கூறிற்று.

உரையென்னுஞ் செய்யுண்முதலிச்செய்யுட்காறுஞ் சத்தப்பிரமவாதிமதங் கூறிற்று. (௩)

சொல்லும்பொருளின்று சொனின்றதுவே. எ-கு. சொல்லப்படும்பொருள் புத்தியிற் கனத்துக்கிடந்ததில்லை, சொல்லேபுத்தியிற்கனவாது நிலைபெற்றது என்றனரோருரையாசிரியர்.

சத்தப்பிரமவாதிமத முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—உ௧௦.

சத்தப்பிரமவாதி மதமறுதலை.

உரையானதுமையவிறுலுலகே
லுரையாதொருமையலுமுள்ளதென
வரையாதுணரும்மதுவண்கதியேல்
வரையாமறைபோடுமலைந்தனையே. (௧)

(இ-ள்.) உரையானதூமையலினுலகேல். எ-து. சத்த மானது பரிணமவிவர்த்தனமாகிய மயக்கத்திலே பிரபஞ்சமா மென்றுகூறினுய். அங்ஙனமாயின்,—உரையாயொருமை யது முள்ளதென. எ-து. சத்தமேசர்வமுமாமென்பதன்றிச் சத் தத்திலேநின்றுண்டாகத்தக்க தொருமயக்கமு முண்டென்று சொல்லாய்,—வரையாதுணரும்மது வண்கதியேல். எ-து. அஃதன்றியும் பொருளைவரையாமல் சத்தத்தைப்பிரமமென்று குறித்துணர்தலே முத்தியென்றுகூறினுய். அங்ஙனமாயின்,- வரையாமறையோடு மலைந்தனையெ. எ-து. வேதத்திற்சொ ல்லப்பட்ட கன்மத்தையு ஞானத்தையுஞ் செய்வது முணர்வ துஞ்செய்யாமன் முத்தியடையுமென்று கூறுகையால் வேத த்தோடு மறுதலைப்பட்டுக்கூறினுய். எ-று. வேதஞ்சொன்னப டியிலே கன்மஞ்செய்தானுயினு ஞானமுணராதாற்கு முத்தி யில்லையென்று வேதாகமசாத்திர புராணங்கள்சொல்லவுஞ் சத்தமேபிரமமென்றறியு மறிவால் முத்தியடையுமென்பது மாறுபாடு.

சத்தப்பிரமவாதியைமறுப்பானெடுத்துக்கொண்டா ரத னுளிச்செய்யுள் சத்தமே பிரபஞ்சமென்பதனையுஞ் சத்தத்தை யறிதலே முத்தியென்பதனையு மறுத்துக்கூறிற்று. விவர்த்த நம்புரளல். (க)

உரையானது மையலினுலகேல். எ-து. சத்தமாகிய பிரமமானது மாயையோடுகூடிக்கொண்டு பிரபஞ்சமாயிருக் குமானுல்,-ஒருமையதுமுள்ளதென ·வுரையாய். எ-து அந்தச் சத்தப்பிரமத்தோடுகூட மாயையென்றெரு பொருளுமுண் டெனச்சொல்வாயாக என்றுரோருரையாசிரியர். அன்றி யும், சேடமாகிய மாயையோடுகூடுதலாற் சத்தமுஞ் சேட மேயாம். ஆதலாலது பிரமமன்றென்க என்றூர்.

அருவம்முரையாதலினவ்வுருவாய்
மருவும்பரிணாமமறந்திடுமாம்
பருகுந்தியானதுபாலதெனி
லுருவம்மதுவாயழியும்முரையே. (௨)

(இ-ள்.) அருவம்முரையாதலினவ்வுருவாய் மருவும்பரிணாமமறந்திடுமாம். எ-து. அந்தச்சத்தமான தருபமாதலாற் பிரபஞ்சரூபமாய்ப் பரிணமித்துப் பொருந்துதலை நினைக்க மாட்டாதாம். அற்றன்று,—பருகுந்தியானது பாலதெனில். எ-து. குடிக்கும் பகுதியானபாலானது தின்னும்பகுதியாகிய தயிரா யுருப்பெற்றாற்போல வருவமாகியசத்த முருவமாகிய பிரபஞ்சமா யுருப்பெறுமென்று நீகூறின்,—உருவம் மதுவாயழியும்முரையே. எ-து. அத்தயிர் மீளவும்பாலாகுந்தன்மையின்றித் தயிராய்நின்றழியுந்தன்மைபோலச் சத்தமும் பிரபஞ்சமாயுருப்பெற்றால் மீளவுஞ் சத்தமாகுந்தன்மையின்றிப் பிரபஞ்சமேயாய் நின்றழியும். எ-று.

இச்செய்யுள் சத்தமேயுருப்பெற்றுப் பிரபஞ்சமாமென்பதனை மறுத்துக் கூறிற்று. (௨)

உருவமானபா அருவமான தயிராயது அருவமானசத்த முருவமான வுலகாயித்தென்ற திருஷ்டாந்தம் விகலதோஷமடைந்ததென்க. விகலம் குறைபாடாகும் என்றார் ஞானப்பிரகாசர்.

ஆயம்முடனந்தவிவர்த்தமு
மாயவ்வுளதென்றுசொலெவ்விடமு
மாய்நின்றமைபின்னுரையின்னலமு
மாயும்பொருளுக்கறிநாமமதே. ( )

(இ-ள்.) ஆயம்மு—னந்தவிவர்த்தநமு மாயவ்வுளதென்று சொல். எ-து. சத்தத்தின்வரவு பிரபஞ்சமாய்வருதலும் பல ரூபங்களாய்ப் பரிணமித்துவருதலுஞ் செய்கையாற் சத்தத் துக்கு மிப்போதழிவுண்டாதல் வேண்டுமென்றுசொல்லாய், அஃதன்றியும்,—எவ்விடமுமாய் நின்றமையின் னுரையின்ன லமுமாயும் பொருளுக்கறிநாமமதே. எ-து. (உரையின்ன லமு மெவ்விடமுமாய் நின்றமையினும் பொருளுக்குநாம மதேயறி) எனமாறுக. சத்தத்துக்கு நன்மையென்றபொரு ளெவ்விடமுமாய் நின்றமையி னப்பொருளையாராயுமிடத்து அப்பொருளுக்குப் பெயர்ச்சொல்லாய்நின்று பொருளைவிளக் குவதே நன்மையென்றறிவாயாக. எ-று எனவே சத்தத்தி னமர்த்தமே சிறப்பையு நிலைபேற்றையு முடைத்தென்று கூறிற்று. பரிணாமமாகி னெருப்பென்றபோது நெருப்பாயெ ழுந்திருக்கவேண்டும். விருத்தியாகி னெருப்பென்றபோது வாய்வேகவேண்டும். ஆதலால் தாதான்மியமுமன்று ததுற் பத்தியுமன்று இடுகுறிப்பெயரா மென்றதெனக்கொள்க. (௩)

ஆயம்மு—னந்த விவர்த்தநமுமாயம்முளது. எ-து. பரி ணாமத்தோடு அந்தப்பிராந்தியுமாகு முலகமென்று சொல்லு தல்பொய்யாயுள்ளதாம் ஆதலால்,—என்றுசொல். எ-து. உல கத்தின் மண்ணுங்கடமும்போலவு மிப்பியும்வெள்ளியும்போல வுஞ் சத்தத்திற் பொருடோன்றுமென்று நீ சொல்லுதலானும் எ-ம். ஆயம்-பரிணாமம். மாயம்-பொய். எ-ம். கூறினரோரு ரையாசிரியர்.

உரைபோற்பொருளுக்குருவின்மையினவ்
உரையேபொருளென்றனைபின்றரியென்
றுரையேகவிமாலவனுக்குளதா
முரையாய்கவியாகவேர்மாலினையே. (௪)

(இ-ள்.) உரைபோற்பொருளுக் குருவின்மையி னவ்வுரையே பொருளென்றனை. எ-து. சத்தத்தைப்போல வத்தத்திற்கு முருவமில்லாமையினாற் சத்தமேயர்த்தமென்று கூறினாய்,—இன்றரியென்றுரையே கவிமாலவனுக்குள தாமுரையாய் கவியாகவோர்மாலினையே. எ-து. இன்றரியென்று சொல்லப்பட்டசத்தந் திருமாலினுக்குங் குரங்குக்கு மற்றும் பலபொருட்கும் பெயராகச்சொல்லலாம். அதனைப்பொருட்டன்மையிலேநின்றுஞ் சத்தங்கொள்ளாமற் சத்தத்தின்றன்மையிலேநின்றும் பொருள்கொள்ளலாமாகிற் றிருமாலைக் குரங்காகச்சொல்வாயாக. எ-று. எனவே சொல்வேற்றுமையும் பொருள்வேற்றுமையு முண்டென்பதாயிற்று. இதனால் சத்தமும் பொருளுமொன்றுபட்டிருந்தாலு மிரண்டும் வேறென்றே காண்க. என்றதாம்.

இச்செய்யுள் சத்தத்தினன்மையே யத்தமென்பதனை மறுத்துக் கூறிற்று. (௪)

நெல்லிற்பொரியாவதுநீடழலிற்
சொல்லிற்பொருளொன்றெடுதொக்கிடலாற்
கல்வித்திறமாமுரைகாட்சியினன்
மல்லற்பொருள்சாலவளந்தருமே. (௫)

(இ-ள்.) நெல்லிற்பொரியாவது நீடழலில். எ-து. பொரிக்குநெல்லே கர்ப்பமானாற்போலப் பொருட்கெல்லாஞ் சொல்லே கர்ப்பமென்று கூறினாய். அங்ஙனமாயின் நெல்லுக்கு மிக்கநெருப்பினைச் சேர்ந்தாற் பொரியாவதாதலால் நீ கூறியதிவமையன்று,—சொல்லிற்பொருளொன்றெடு தொக்கிடலாற் கல்வித்திறமாமுரைகாட்சியினன் மல்லற்பொருள்சால

வளந்தருமே. எ-து. பூ மா வென்பனவொரு சொல்லிலே பலபொருள்கூடிநிற்றலா லதனை யறிவதாகக்கற்பனவே சத்தம். அப்பொருளைப் பிரித்தறியப்பட்டால் நல்லவளப்பத்தினையுடைய பொருடானேநின்று மிகவு நன்மையைத்தருமாதலால் நீ கூறிய சத்தத்திலுமர்த்தமே சிறப்புடைத்து. எ-று.

இச்செய்யுளுஞ் சத்தத்திலுமத்தமே சிறப்புடையதென்று கூறிற்று. (ரு)

"உரையுதித்துவாக்கிற் செவிக்குளுங்கண்ணுதிக், குருவெழுவாய்த் தோன்றிவிளங்கும்." "உரையையுணருஞ் செவியுளமான்மாவு, முரையினுதித்தோ வுணருமோது" சுல்லிவிரசங்கி கலந்தொண்டைச் செவ்வாயொருத்தி, யெல்லையுமேதப் பொரிக்கென்றெண்" "பொருளுரையிற்றோன்றும்பொழுது நிமித்தாதி, விரையவிளம்புண்டேல் விரித்து" "கருத்தினுக்குங் காட்சிக்குங் கட்டுரைக்குமென்றும், விருத்தநின் கொள்கைவிடு." என்பது மறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

முன்கண்டபொருட்பெயராதலினாற்
பின்கண்டபிழம்புணரும்பெயரா
னன்கண்டபொருட்கொருநாசமதின்
றென்கண்டனைகாரணமின்றழிவே. (சு)

(இ-ள்.) முன்கண்டபொருட்பெயராதலினால். எ-து. முன்னறிவினாற் காணப்பட்டவத்தமே சத்தமானபெயராய் நிற்கையாலும்,-பின்கண்டபிழம்புணரும்பெயரான். எ-து. பின்காணப்பட்டவுருக்களைச் சத்தமான பெயரைக்கொண்டுநிற்கையினாலும்,-நன்கண்டபொருட் கொருநாசமதின்று. எ-து.

நன்றாகக்காணப்பட்டவத்தத்துக்குக் கேடில்லையாம். எனவே சத்தத்திற்குக் கேடுண்டாம்,—என் கண்டனைகாரணமின்றழிவே. எ-து. காரியமாகிய சத்தமழிதலேயன்றிக் காரணமாகிய வத்தமழியுமென்று சொல்லுகையெங்கேயறிந்தாய். எ-று. எனவே அத்தங்காரணமென்றும் பிரதானமென்றுமாயிற்று.

இச்செய்யுளு மத்தமே பிரதானமென்று கூறிற்று. என் கண்டனை. எ-து. ஏதுகொண்டுகண்டாயென வினயது. (௬)

பொருளிந்திரியம்முணர்வோடுபுமா
னிருளின்றியிடும்மொளியித்தனையு
மருவும்பொழுதில்வருஞானமதி
னொருவும்பெயரத்தமுதித்திடுமே. (௭)

(இ-ள்.) பொருளிந்திரியம்முணர்வோடுபுமா னிருளின்றியிடும்மொளியித்தனையு மருவும்பொழுதில்வருஞானம். எ-து ஆன்மா வொருவிடயத்தை யறியும்போதறியப்படுபொருளு மதனைக்காட்டுமிந்திரியமு மதனோடு கூடியுணரு மந்தக்கரணங்களு மவற்றிற்கு மூலமாகிய பிரகிருதியு மவற்றைவெளியாகத்தோற்றுவிக்கிற திரோதான சத்தியுமாக வித்தனையுங்கூடுமளவி லான்மாவுக்கறிவுண்டாம்,—அதினொருவும் பெயரத்தமுதித்திடுமே. எ-து அவ்விடத்திற் பெயர்நீங்கப்படும்பொருள்தோற்றப்படுமாதலா லத்தமே பிரதானம். எ-று. இருளின்றியிடும்மொளி. எ-து. சன்மத்திற்கீடான புசிப்பிற்செலுத்துகையாற் றிரோதாயி ஒளியென்றாயிற்று. ஒருவும்-நீங்கும்.

அத்தமுணர்ந்தே சத்தஞ்சொல்லவேண்டுமாகையா லிச்செய்யுளுஞ் சத்தத்திலுமர்த்தம் பிரதானமென்பது கூறிற்று. (ஞானம்) பெரியோர் வசநங்களாற் குரும்பையாண்பனையினென வாண்பனையிற் குரும்பைதோன்றினது சத்ததிலே தோன்றினதல்லவோ வென்னி லிவர்கள் சிவோகம்பாவனு பலத்திலுண்டான தொழியக் கேவலஞ் சத்ததிலுண்டானதன்று உண்டாகிலெல்லா வசநங்களிலுமுண்டாகவேண்டுமெனக்கொள்க. (எ)

"பாலைநெய்தல்பாடியதும் பாம்பொழியப்பாடியதுங், காலனையன்றேவிக் காரங்கொண் - பாலன், மரணந்தவிர்த்த துவு மற்றதிவுநந்தங், கரணம்போலல்லாமைகாண்" என்பதனுற் சிவோகம்பாவனையா லுண்டானதென்றறிக. என்றுர் ஞானப்பிரகாசர்.

அத்தந்தெளிதற்கொளியானதுபோற்
சத்தம்பொருடானறிதற்குளதா
நித்தம்மதுவன்றுரைநின்றழியுஞ்
சித்தனொருவன்னுரைசெய்தனனே. (அ)

(இ-ள்.) அத்தந் தெளிதற்கொளியானதுபோல். எ-து இருளின்கட்கிடக்கும் பலபொருள்களைத்தெரிந்தறிதற்குக் கைவிளக்குண்டானதன்மைபோல,—சத்தம் பொருடானறிதற்குளதாம். எ-து. பலபேதப்பட்டபொருள்களையுமறிதற்குச் சத்தமுண்டானதாம்,—நித்தம் மதுவன்றுரைநின்றழியும். எ-து. அந்தச்சத்த நிலைபேற்றையுடைத்தல்லவாய் பொருளாகிய காரணமில்லையாயிற்றுனுங் காரியப்படாதழியுமாகை

யால்,—சித்தனொருவ னுரைசெய்தனனே எ-து. இந்தச் சத்தஞ் சித்தனாகிய பரமேசுவரனாலே யுண்டாகப்பட்டதாத லால் நீ பிரமமென்று சொல்லக்கடவையல்லை. எ-று.

இச்செய்யுளும் பிரம்பரமேஸ்வரனல்லது சத்தம் பிரமமல்லவென்று மறுத்துக் கூறிற்று.

உரையானதென்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுட் காறுஞ் சத்தப்பிரமவாதிமதத்தை மறுத்துக் கூறிற்று. (அ)

இதன்பின்னர் நையாயிகம், வைசேடிகம், பௌராணிகம், ஐதிகம், சேசுரசாங்கியம், சித்தன்சதந்ரியவாதம் என்னு மறுவகைமதமு மவற்றின் மறுதலையு ஞானாவரணவிளக்கத் திற்காண்க. என்றார் மற்றோருரையாசிரியர்.

சத்தப்பிரமவாதி மதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—உகஅ.

மாயாவாதிமதம்.

நானேபிரமமென்றுரைத்துஞாலம் பேய்த்தேரெனவெண்ணி, யூனேபுகுந்துநின்றுயிர்கட் குபதேசங்களுரைத்துவரு, மானமதிகேடனுமாயமாயாவாதிபேயாகித், தானேயுரைக்குமந்நூலி னுண்மைதன்னைச்சாற்றுவாம். (க)

(இ-ள்.) (நானே-சாற்றுவாம்.) ஆன்மாவுஞ்சிவமுமென்ஞுது அகம்பிரமமென்றுசொல்லிப் பிரபஞ்சமெல்லாம் பேய்த்தேர்போலப் பொய்யெனக்கருதிக் கருப்பாசயநீங்காமனின்று தான்மற்றுள்ளவான்மாக்களுக்குப் போதங்கள்சொலித் திரியுமிகுலச்சையில்லாத புத்திஹீனனுமாகிய மாயாவாதியென்னுஞ்சமயி பித்தேறி வேதாகமங்களுக்குப் பொருந்தாமற் றனக்குப்பொருந்தத்தானே சொல்லிக்கொள்ளுமந்நூலினதுண்மையின் றன்மையைச் சாற்றுவாம். எ-று. ஊனேபுகுந்துநின்றென்பது தான்பிரமமாயின் ஊனிற்புகுதல்வேண்டாவென்பதுகருத்து. உயிர்கட்குபதேசங்களுரைத்துவருமென்பது சர்வான்மாக்களுந் தன்னைப்போலப் பிரமமாகையால் உபதேசஞ்சொல்லவேண்டாவென்பது கருத்து.

சத்தப்பிரமவாதியை நிஷேதமாக்கி மாயாவாதிமதங்கூறுவா னெடுத்துக்கொண்டா ரதனுளிச்செய்யு ளவனித்தன்மைய னென்பது கூறிற்று. பேய்த்தேர்—கானல் ஜலம் (௧)

அநாதிமலபெத்தனாய் ஆணவமுதலெலறும்பீருன வெண்பத்துநான்கு நூறுயிரயோனிபேதங்களையுங் சன்மத்துக்கீடாக வடைந் தளவிறந்தகாலம் ஜநநமரணதுக்கப்பட்டுச் சுவர்க்க நரகாதிகளிலுள்ள வின்பதுன்பங்களைப்புசித்துச் சுதந்தரஈனனுமாய் மிகவுஞ்சிற்றறிவுடையனுமா யான்மவர்க்கத்திலொன்ருன தன்னையநாதிமலமுத்த சிற்சத்திசொரூபமாய்ச் சர்வோபாதிரகிதமாய்ச் சர்வஞ்ஞசர்வகர்த்திருத்துவ முடைத்தாய்ச் சுதந்தரமுமுடைத்தாயுள்ள பரப்பிரமமென் றறியாமலினைத்தலினாலே மதிகேடனென்றும் பேயாகியென்றும் சொன்னரென்க. என்றார் ஞானப்பிரகாசர். மற்றொருவர் தன்னைப்

பிரமமென்று கொண்டு பந்தத்திற்பொருந்துதலால் மதிகே டன். எ-ம். பிரபஞ்சத்தைச் சுத்தப்பொய்யென்றுகொண்டு வேதாதிப்பிரமாணங்கொண் டுபதேசித்தலாற் பேயாகி. எ-ம். கூறியவாறு காண்க. இந்தமாயாவாதத்திற்கு விவர்த்த மாயாவாதமென்றும் பெயர். என்றார்.

அறிவாயகிலகாரணமாய நந்தாநந்தமாயருவாய்ச், செறிவாயெங்குநித்தமாய்த் திகழ்ந்தசத்தாய்ச் சுத்தமாய்க், குறிதான்குணங்களொன்றின்றிக் கூறும் வேதந்தனக்களவாய்ப், பிறியாவநுபூதிகந்தனக்காய் நின்றதந்தப்பிரமந்தான். (௨)

(இ-ள்.) அறிவா யகிலகாரணமா யநந்தாநந்தமாயருவாய்ச் செறிவாயெங்கு நித்தமாய்த் திகழ்ந்தசத்தாய்ச் சுத்தமாய். எ-து. ஞானமே சொரூபமாய்ப் பிரபஞ்சத்துக்குக் காரணமா யெல்லையில்லாதவாநந்தமா யுருவமின்றியருவமா யெங்குநிறைந்து நிற்பதுமாய்க் கேடின்றிவிளங்கத்தக்கதுமா யசுத்தத்துடன் கூடாது சுத்தமேயாய்,—குறிதான் குணங்களொன்றின்றிக் கூறும்வேதந்தனக்களவாய்ப் பிறியாவநுபூதி கந் தனக்காய்நின்ற தந்தப்பிரமந்தான். எ-து. ஒரடையாளமு மோர்குணமுங்கூறுதற்கொன்று மில்லையாய்ச் சொல்லத்தக்க வேதங்கட்கு வரம்பாய் நீக்கமில்லாத வநுபூதி தனக்கேயுடைத்தா யிப்படிநின்றபொருள் பிரமம். எ-று.

இச்செய்யுள் பிரமநிலை கூறிற்று. பிறியாவநுபூதிகந்தனக்காய். என்றதனால், ஞாதருஞானபேதமில்லை என்பதாயிற்று. (௨)

ஒன்றுமிரவிபலபாண்டத் துண்டாமுதகத்தங்கங்கே, நின்றாற்போலவுடலுறு நிகழ்ந்துநிற்கும்பொருண்மேற்கண், சென்றாற்போலப்புலன்களுக்குஞ் சிந்தைதனக்குந்தெரிவரிதா, மென்றாற்காட்சிமுதலாய விருமூன்றளவைக்கெட்டாதால். (௯)

(இ-ள்.) ஒன்றுமிரவிபலபாண்டத் தண்டாமுதகத்தங்கங்கே நின்றாற்போல. எ-து. ஓராதித்த னாகாசத்திலேநிற்கப் பலபாத்திரங்களிலுமுண்டாகிய ஜலங்களிலே தனித்தனியே தோன்றுமாறுபோல,—உடலுறு நிகழ்ந்துநிற்கும் பொருள். எ-து. ஏகமாகியபிரம முடல்கடோறுந் தனித்தனியே தோன்றப்பட்டுநிற்கும்,—மேற்கண் சென்றாற்போலப் புலன்களுக்குஞ் சிந்தை தனக்குந்தெரிவரிதாம். எ-து. அவ்வாதித்தன் பாத்திரவுதகங்களிலகப்படாமன் மேற்படவியங்குகின்றாற்போல வந்தப்பிரமமுடலிலகப்படாது மேற்பட்டிந்திரியங்களுக்குங் கரணங்களுக்கு மறிதற்கரிதாய் நிற்கும்,—என்றாற் காட்சிமுதலாய விருமூன்றளவைக்கெட்டாதால். எ-து. இப்படிச் சொல்லப்படுகையாலே காட்சிமுதலாய வாறளவைக்குந் தெரிதற்கரிதாம். எ-று. ஆல் அசை.

இச்செய்யுளான்மாவென் றொன்றில்லை சர்வமும்பிரமமேயென்று கூறிற்று. பொருண்மேற்கண். எ-து. பாத்திரத்திடத்துக் கண்ணனதோடிக் கண்டாற்போல வறிவுகளுக்கிராவணன் பலதலையுங்கொண்டு வியாபரித்தாற்போலவுமாயிரம் பணமுடியையுடைய வநந்தனைப்போலவு மொருவனுமே பலமுகமாய் வழங்காநின்றான். இருமூன்றளவையென்றது பிரத்தியக்ஷம், அநுமானம், ஆகமம், உவமானம், அருத்தாபத்தி, அபாவம். (௯)

இதற்கவர்கள் வசநம் "அப்பிலருக்கன் போல் நின்றவர் சோபநம். எ-ம். அளவையாறுக்கும் "பொறியான்மநாதிக ளானுற் பொருளின்பேத, மறியுமறிவே காண்டலாம்" ஏதுவி னலேது மானைத்திருட்டாந்தத்தி னேனுமாதநுமானமென் றறி." "நேரியவுந் தூரியவுநின்மலன் சொல்லாலுணருங், கூருணர்வேயாகமமாகும்" "விட்டுவிபரீதம் விளங்கறிவபாவ மெனக், கட்டுரைப்பா மெய்ப்பொருளின்கண்" "அடுத்துல கோதும் பொருளருத்தாபத்தியாமதுதா, னெடுத்தமொழியி னஞ்செப்புவதாகுமிவ்வூரிலருள், படைத்தவரென்னிற்படை யாதவருளரென்று மிவன், கொடுப்பவனென்னிற் கொடா தாருமுண்டென்றுகொள்வதுவே" பகற்புசியாததேவதத்தன் பருத்திருக்கிறுனென்ற லிரவுண்பானென்றறிவது மருத்தா பத்தியென்றறிக. "பிறிதொருருப்பெற்றது போன்மற்றேரு ருவை, யறியுமறிவேயுவமையாம்" என்றறிக. அருத்தாபத்தி யைவிட் டொழிபைக்கூட்டி யாறளவையென்னலுமாம். அஃ தாவது "பிறிதோருருப்பெற்றது போன்மற்றேருருவை, யறி யுமறிவேயுவமையாம்." எனவறிக. என்ருர் ஞானப்பிரகா சர்.

இருளிற்பழுதையரவெனவே யிசைந்துநிற்குமிரு ங்கதிர்க, ளருளப்பழுதைமெய்யாகி யரவும்பொய்யா மதுவேபோன், மருளிற்சகமுஞ்சத்தாகி மருவித்தோ ன்றுமாசில்லாத், தெருளிற்சித்தேசத்தாகும் பித்தா ஞ்சகத்தின்செயலெல்லாம், (௪)

(இ-ள்.) இருளிற்பழுதை யரவெனவே யிசைந்துநிற்கு மிருங்கதிர்க ளருளப்பழுதைமெய்யாகி யரவும்பொய்யா

மதுவேபோல். எ-து. இருளின்கட்புற்றருகே யொருபழுதை கிடப்ப வதனைக்கண்டோர் பாம்பெனவே பொருந்திநிற்கு மளவி லாதித்தகிரணங்கடோன்றப் பழுதைமெய்யாய்ப் பாம்புபொய்யாமதுபோல,—மருளிற்சகமுஞ் சத்தாகி மருவித்தோன்றும். எ-து. பொய்யாகிய பிரபஞ்சத்தினுடைய செயலு மயக்கத்தாலே மெய்யாகப் பொருந்தித்தோன்றும்,—மாசில்லாத்தெருளிற் சித்தேசத்தாகும் பித்தாஞ்சகத்தின் செயலெல்லாம். எ-து. மயக்கமற்ற பிரமஞானத்தாலே விளங்கினகாலத்துப் பிரமமேயுண்மையாகப் பிரபஞ்சத்தின் செயலெல்லாம் பொய்யாம். எ-று.

இச்செய்யுள் பிரபஞ்சம்பொய்யென்பது கூறிற்று. (௪)

இதற்கவர்கள் வசநம். "பற்றியவிருட்பொழுது தாம்பில் வருபாம்பென், றற்றபயமற்றவினைமுற்று மதிலுண்டோ, சுற்றமரணப்பிறவி சூழ்வினைகளெல்லா, மற்றவிடநீயறியின்முற்று மவையுண்டோ" என்றார் ஞானப்பிரகாசர்.

உலகந்தா னுநிருவசநத் துண்டாமின்றேலுதி யாது, நிலவியுண்டேலழியாது நிற்பதாகுமித்தையா, விலகுசுத்திகனல்சேர வின்றும்வெள்ளிநின்றதாங், குலவுசகமுமவிகாரம் பரமார்த்தத்திற்கொள்ளாதால்.

(இ-ள்.) உலகந்தானு நிருவசநத்துண்டாம். எ-து. பிரபஞ்சமானது வசநரகிதமான பிரமத்திலேநின்றுந் தோன்றும்,—இன்றேலுதியாது. எ-து. அந்தப்பிரமத்தினின்றுந் தோன்றுதாகில் வேறொருபாதானமுண்டாய்ப் பிரபஞ்சந் தோன்றுவதுமில்லை,—நிலவியுண்டேலழியாது நிற்பதாகும்.

எ-து. பிரபஞ்சத்தையொருவர் தோற்றுவித்துண்டாக்காமற் றானேபிரகாசித்துண்டாமாகில் அதுவுமொருமுதலா யழியா துநிற்கத்தகும். அதுவன்றியழியக் காணப்படுமஃதியாங்ஙன மென்னில்,—மித்தையால். எ-து. பிரபஞ்சமெய்போலத் தோன்றினும் பொய்யாகை நிச்சயமாகையால்; அஃதன்றிப் பிரபஞ்சமெய்போலத்தோன்றிப் பிரகாசிக்கிறபடியும் பார மார்த்தத்திற் பொய்யாகிறபடியு மெங்ஙனமென்னில்,—இல குசுத்திகனல்சேர வின்றும் வெள்ளி நின்றதாங் குலவுசகமு மவிகாரம் பரமார்த்தத்திற் கொள்ளாதால். எ-து. வெள்ளி போலப் பிரகாசிக்கு மிப்பியையும் வெள்ளியையுங் கனலி லிட்டா லிப்பிகெட்டு வெள்ளிநின்றாற்போல மெய்போலத் தோன்றும் பிரபஞ்சமும் அவிகாரமாகிய பிரமமும் பரமார்த் தத்தி னிரூபணஞ்செய்தால் அவிகாரமாகிய பிரமமே மெய் யாய்ப் பிரபஞ்சம் பொய்யாகக் கொள்ளப்படும். எ-று. அவிகாரமும் எனவும்மைவிரிக்க. நிர்வசநம் அவிகாரமென் பன பிரமத்துக் கோராகுபெயர். சுத்தி இப்பி கிளிஞ்சல்.

இச்செய்யுள் பிரமத்திலே பிரபஞ்சந்தோன்றுமுறைமை யும் பிரபஞ்சம் பொய்யென்பதுங் கூறிற்று. (ரு)

தாங்குமுலகுக்குபாதாநஞ் சத்தாஞ்சிலம்பிநூ
றன்பால், வாங்கிவைத்துக்காப்பதுபோல் வையமெ
ல்லாந்தன்பக்க, லோங்கவுதிப்பித்துள்தாக்கி நிறுத்தி
யொடுக்கத்திலதாக்கு, மாங்குவந்தவாறதனாற் சத்
தாஞ்சகத்தினமைவெல்லாம். (சு)

(இ-ள்.) தாங்குமுலகுக் குபாதாநஞ்சத்தாம். எ-து. ஆதாரமாகிய பிரபஞ்சத்துக் குபாதாநஞ் சத்தாகிய பிரமமே யாம். அஃதென்போல வென்னில்,—சிலம்பிநூ றன்பால்

வாங்கிவைத்துக் காப்பதுபோல் வையமெல்லாந்தன்பக்க லோங்கவுதிப்பித்துளதாக்கி நிறுத்தியொடுக்கந் திலதாக்கும். எ-து. சிலம்பியானது நூலைத்தன்னிடத்திலே நின்றுந் தோற்றுவித் தந்தநூலையோரிடத்திலே யுண்டாக்கிவைத்துப் பாதுகாத்துப் பின்பந்தநூலழியும்படி த்தானீங்குந்தன்மைபோலப் பிரமமும் பிரபஞ்சபேதமெல்லாந் தன்னிடத்திலே நின்றுந் தோற்றுவித்து மவைபரிபாலிக்கும்படி யுண்டாக்கி ரக்ஷித்தும் பின்னில்லையாம்படி சங்கரித்திடும், — ஆங்குவந்தவாறதனாற் சத்தாஞ் சகத்தினமைவெல்லாம். எ-து. அப்படிப்பிரமத்திலே தோன்றிநின்று கெடுகையாற் பிரபஞ்சஞ்சேடமாதலாற் பிரமத்தினுடைய நியமமே பிரபஞ்சத்தின் செயலெல்லாம். எ-று.

இச்செய்யுள் பிரமத்திலே பிரபஞ்சந்தோன்றிநின்று கெடுமென்பதூஉம் பிரபஞ்சமநித்தியமென்பதூஉங்கூறிற்று.

மன்னும்பிரமத்தினில்வானாய் வானின்வளியா
யந்தவளி, தன்னினழலாயழலின்பாற் சலமாய்ச்சல
த்திற்றரணியாய்ச், சொன்னவிதனின்மருந்தாகித்
தோற்றுமருந்திலன்னமா, யன்னமதனிற்றுவக்காதி
யாறுதாதுவாயினவால். (எ)

(இ-ள்.) மன்னும்பிரமந் தனில்வானாய் வானின்வளியர் யந்தவளிதன்னினழலா யழலின்பாற் சலமாய்ச் சலத்திற்றரணியாய். எ-து. கேடில்லாத பிரமத்திலே யாகாசந்தோன்றி யாகாசத்திலேவாயுத்தோன்றி யந்தவாயுவிலே யக்கினிதோன்றி யக்கினியிலே ஜலந்தோன்றி ஜலத்திலே பிருதிவிதோன்றி,—சொன்னவிதனின் மருந்தாகித் தோற்றுமருந்தி

லன்னமா யன்னமதனிற்றுவக்காதி யாறுதாதுவாயினவால். எ-து. பிருதிவியிலே யோஷதியாயவ்வோஷதியிலேயுணவா யவ்வுணவிலே காயப்பகுதிப்பட்ட தாதுக்களாறுமுண்டாயின. எ-று. தாதுக்களாறுவன—தோல், எலும்பு, நரம்பு, மச்சை, சோரி, சுக்கிலம், என்பவை. இவைகாயத்தின் பகுதிக்கோர் பொருட்பெயர்.

இச்செய்யுள் பிரமத்திலே நின்றும் பிரபஞ்சந்தோன்றி வருமுறைமை கூறிற்று.

"தோலுதிரமாங்கிசமேதை டென்புமச்சையாகிய கொழுப்புமாகும்" "மண்ணீர் விரவின் மருந்துதிக்கு மம்மருந்தி லுண்ணும்பயன்களுறும்" என்பது மறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

ஆறுதாதுக்களுங்கூடி வந்தகோசமன்னமய, மாறில்பிராணகோசமயமன் னுமதனின்மனோமயந்தான்,
வேறுவரும்விஞ்ஞானமய மேவுமதனினதுதன்னிற்,
கூறிவருமாநந்தமயங்கோச மயம்பின்கூடியதால். (அ)

(இ-ள்.) ஆறுதாதுக்களுங் கூடிவந்த கோசமன்னமயம். எ-து. அவ்வாறுதாதுக்களுங்கூடி யுண்டாகவந்த தன்னமய கோசம்,—மாறில்பிராணமயகோச மன்னுமதனில். எ-து அந்தவன்னமயகோசத்திலே வாயுப்பரந்து நிடிப்புண்டானது பிராணமயகோசம்,—மனோமயந்தான். எ-து. அந்தப் பிராணமயகோசத்திலே மயக்கநீங்கிப் பழையமனங்கூடுவது மனோமயகோசம்,—வேறுவரும் விஞ்ஞானமயமேவுமதனின். எ-து. அந்தமனோமயகோசத்திலே வேறாகவருஞ் சோத்திராதிகள்கூடி யறிவாயிருப்பது விஞ்ஞானமயகோசம்

அதுதன்னிற் கூறிவருமாநந்தமயம். எ-து. அந்தவிஞ்ஞான மய கோசத்திலே வாக்காதிகள்கூடி யாநந்தமாயிருப்ப தாந ந்தமயகோசம்,—கோசமயம் பின்கூடியதால். எ-து. மய மென்னுஞ்சொல்லின் பின்னேகோசமென்னுஞ் சொற்கூடிய தாம். எ-து. மயமென்னுஞ்சொல்லின்பின் கோசமென்னுஞ் சொற்பெயர்கூருது பின்கோசமெனக்கூடியதெனத் தொகுத் தொரு சொல்லாகக் கூறினர்.

இச்செய்யுள் பஞ்சகோசங்களுங்கூடிய முறைமைகூறிற் று. கோசம் உறுப்பு. இவற்றின்விவரங்களை ஞானுவரணச் செய்யுளிற்காண்க. (அ)

கோசவுருவிற்பிரமந்தான் கூடித்தோன்றுநீடு மொரு, காசமருவுங்கடந்தோறு நின்றுற்போலக் கதிரவன்றன், வீசுகிரணமுருவின்கண் வெளிப்பட் டிடுவதிற்பற்றும், பாசமதனுக்கின்றுகு மென்றுற் பரத்திற்பற்றுண்டோ. (௯)

(இ-ள்.) கோசவுருவிற் பிரமந்தான் கூடித்தோன்றும். எ-து. பஞ்சகோசமாகிய வுருவின்கண்ணே பிரமமானதுகூ டிப் பிரகாசிக்கும். அஃதென்போலவென்னில்,—நீடுமொரு காசமருவுங்கடந்தோறு நின்றுற்போலக் கதிரவன்றன் வீசு கிரணம், எ-று. (நீடுமொருகாசமருவுங் கதிரவன்றன் வீசுகி ரணங்கடந்தோறு நின்றுபோல) எனமாறுக. எட்டுதற்கரிதா யொப்பற்றவாகாயத் தின்கண்ணே பொருந்திநிற்கு மாதித்த னது மிகுந்தகிரணமானது பூமியின்கண்வைத்த கடந்தோறுந் தனித்தனியே தோன்றுமாபோல,—உருவின்கண் வெளிப் பட்டிடுவது. எ-து. அந்தப்பிரமமு மாதித்தனைப்போல

வெட்டாதாயினு முருக்கடோறுந் தானாய்நிற்கும்,—அதிற்பற்றும்பாசமதனுக் கின்றாகும். எ-து. கிரமப்படிப் பாசத்தோடு கூடிநின்றதாயினும் பிரமத்தைப்பாசஞ்சென்று பற்றுவதில்லையாம்,—என்றாற் பரத்திற்பற்றுண்டோ. எ-து. பிரமத்தைப் பாசம்பற்றாதாகையா லந்தப்பிரமத்துக்குப் பாசத்தோடுபற்றில்லை. எ-று.

இச்செய்யுள் பிரமங் காயத்தோடு கூடிப்பற்றிடுமுறைமையுங் கூடிநிற்பினும் பாசப்பற்றில்லையென்பதூவுங்கூறிற்று. ஆகாசம்காசமெனத் தலைக்குறைந்துநின்றது. ஓ எதிர்மறை.

நீடுமொருகாசமருவுங் கடந்தோறு நின்றாற்போல. எ-து பெரியதாயொன்றாயிருக்கிற வாகாசமானது கடங்கடோறும் பொருந்திப் பலவாகநின்றாற்போல. எ-ம். கதிரவன்றன் விசுகிரணமுருவின்கண் வெளிப்பட்டிடுவத திற்பற்றும் பாசமதனுக்கின்றாகுமென்றாற்பரத்திற்பற்றுண்டோ. எ-து. விட்டுவிளங்காநின்ற வாதித்தனது கிரணமானது பதார்த்தங்களிற் பிரகாசித்திருந்து மவையிற்றிற்பற்றின்றி நிற்குமென்றாற் சரீரங்கடோறும் பொருந்திநின்றாலும் பரப்பிரமத்திற்குப் பற்றுண்டோவில்லையாம். எ-ம். கூறினர் ஞானப்பிரகாசர். பரப்பிரமம் ஜீவப்பிரமமாகவவச்சேதப்பட்டாலும் ஏகதேசமில்லையென்பதற்குக் கடந்தோறு நின்றாற்போல. எ-ம். குணதோஷமில்லையென்பதற்கு அதிற்பற்றும் பாசமதனுக்கின்றாகும். எ-ம். கூறியவாறுய்த்துணர்க. என்றார் மற்றோருரையாசிரியர்.

அலகின்மணிகளவைகோவை யடைந்தபொழுதிலங்கங்கே, நிலவுமொருநூற்பலநிறமாய் நின்றாற்போ

லநீடுருவம், பலவுமருவுபேதத்தாற் பன்மையாகிப் பிரமந்தான், குலவுபோகபோக்கியங்கள் கொள்ளும் போன்றுகொள்ளாதால். (௧0)

(இ-ள்.) அலகின்மணிகளவ்கோவை யடைந்தபொழு திலங்கங்கே நிலவுமொருநூற்பலநிறமாய் நின்றாற்போல நீடு ருவம் பலவுமருவுபேதத்தாற் பன்மையாகிப் பிரமந்தான். எ-து. எண்ணிறந்த பலவன்னமாகிய மணிகளைக் கோவை யாகக் கோத்தவிடத் தொருநிறப்பட்டநூ லம்மணிகளாலே பலநிறமாய் நின்றாற்போலப் பிரபஞ்சத்திற்றோன்றப்பட்ட யோனிபேதங்கள் பலவாகப் பேதிக்கப்படுகையா லவற்றோ டுங்கூடிய பிரமமும் பலபேதப்பட்டாற்போல வங்கங்கே தோன்றும்,-குலவுபோகபோக்கியங்கள் கொள்ளும்போன்று கொள்ளாதால். எ-து. ஆகையான் மணிகளிற்பொருந்தின நூலுந் தன்றன்மைகெடாது நின்றாற்போலப் பிரமமும் போகபோக்கியங்கள் கொள்வாரைப்போன்று கொள்ளாதாய் நிற்கும். எ-று,

இச்செய்யுள் பிரமம் பேதிக்கப்பட்டாற்போலத் தோன்றினும் பேதப்படாதென்பதுகூறிற்று. (௧௧)

"நீலமணிபச்சை பவளந்தரளநிறக், கோலவொளிநூலி னொளி யாயகுணமேபோன் மூலவுருவாகியுளநீ முழுதுமா னாற், சாலவருபேதமது நீதவிரவுண்டோ" இஃதவர்கள்வச னம். போகம் எ-து. புசிப்பும், போக்கியம். எ-து. புசித்தற் கிடமான பொருளும் என்றறிக என்றார் ஞானப்பிரகாசர்.

போற்றுஞ்செயலாற்பலநாமம் புனைந்துபோக போக்கியத்திற், றோற்றுநனவுகனவினுடன்சுழுத்திதுரியமெய்துமிதற், கேற்றகரணநிரைநிரையே யீரேழ் நாலொன்றெல்லாமு, மாற்றிநிற்குங்கேடின்றி வந்த போகமாய்ந்திடவே. (௧௧)

(இ-ள்.) போற்றுஞ் செயலார்பலநாமம் புனைந்து. எ-து. பிரபஞ்சத்தோடு பொருந்தினதொழிலாலே பரமான்மாவென்றும் ஜீவான்மாவென்று மந்தரான்மாவென்று நரசான்மாவென்றுந் திரியக்கான்மாவென்றும் பலபெயர்களையும் பொருந்தி,—போகபோக்கியத்திற்றோற்றும். எ-து. போகத்திலும் போக்கியத்திலுங் கூடியநுபவிப்பாரைப்போலத் தோன்றும்,-நனவுகனவினுடன் சுழுத்திதுரியமெய்தும். எ-து. சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியமென்னு நாலவத்தையும் பொருந்தும்,—இதற்கேற்ற கரணநிரைநிரையே யீரேழ் நாலொன்றெல்லாமு மாற்றிநிற்குங் கேடின்றிவந்த போகமாய்ந்திடவே. எ-து. அவ்வவத்தை நாலிற்குங் கூடிநிற்குங் கரண மடைவே நிரைநிரையாகக்கொள்ளுமிடத்துச் சாக்கிரத்துக்குப்பதினாலும், சொப்பனத்துக்கு நாலும், சுழுத்திக்கொன்றும், துரியத்துக்குக்கேடில்லாத வந்தப் புண்ணியபாவங்கள் கெடும்படி யெல்லாவற்றையு நீங்கிநிற்கு மிடமுமாக நிற்கும். எ-று. சாக்கிரத்திற்பதினான்கு கருவியாவன சோத்திராதியைந்தும், சத்தாதியைந்தும், அந்தக்கரணநாலும் ஆகப்பதினாலும். சொப்பனத்தினாலாவன அந்தக்கரணங்கள். சுழுத்தியிலொன்றுவது-உள்ளம் இதனையே சித்தமெனக் கூறுவர். பிரகிருதி புமான் மகான் புருடன் அவித்தை அவ்வியத்

தம் மூலப்பிரகிருதி என்பன ஒருபொருட்கிளவி. பிரமமொழிய வெல்லாநீங்கி நின்றவிடந்துரியம். போகம் புண்ணியபாவம். போக்கியம் மனம். இவையிரண்டிற்குஞ் சாக்ஷிபூதம் பிரமமென்பது கருத்து. அவத்தையென்பது பிரமமுபாதிகளோடுங் கூடினற் பேதிக்குமவதரம். சாக்கிரம் விழிப்பு. சொப்பனம் பிரகிருதியுவதரம். சுழுத்தி பிரகிருதிரூபம்.

இச்செய்யுள் பிரபஞ்சத்தோடு பிரமம்பலபேதப்பட்டுப் போகபோக்கியத்திற்கும் அவத்தைக்கும் சாக்ஷிபூதமாய் நிற்குமுறைமைகூறிற்று. போகபோக்கியமென்பது, புசிப்பும் புசிப்புக்கிடமாகிய பதார்த்தங்களும். துரியமாவது கருவிநீங்கினவிடமெனக்கொள்க. (கக)

பலநாமமாவன—சாக்கிரத்தில் விசுவன். எ-ம். துரியத்தில் புருடன். எ-ம். வழங்கிவருவனவாம். என்றாரோருரையாசிரியர்.

கருவியெல்லாநானெனவே கருதல்பந்தமக்கருத்தை, யொருவமுத்தியுண்டாகு முள்ளம்வித்தாஞ்செய்திபினன், மருவுமாயாகாரியங்க ளவித்தைமாயவேமாயை, பிரியும்பிரியாஞானமது பிறக்கும்பிறவாபேதமே. (க௨)

(இ-ள்.) கருவியெல்லா நானெனவே கருதல்பந்தம். எ-து. கருவிகள் பதினுலோடுங்கூடி அவற்றைநானென்று கருதி நிற்பது பந்தமாம்,-அக்கருத்தையொருவமுத்தியுண்டாகும். எ-து. அக்கருவிகள் பதினுலோடுங் கூடாமல்நீங்கித்துரியத் [illegible]ர்கவே தற்சொ[illegible] [illegible]சிவோசி[illegible] [illegible]பிறந்து

மூத்தியுண்டாம்,—உள்ளம் வித்தாம். எ-து. பந்தத்துக்கு வித்தாவது மூலப்பிரகிருதி,—செய்தியினுன் மருவுமாயாகாரியங்கள். எ-து. அந்த மூலப்பிரகிருதியின் செயலாலே மாயாகாரியங்களாகிய சுகதுக்கங்கள் பொருந்தும்,—அவித்தைமாயவே மாயைபிரியும், எ-து. அவித்தையாகிய மூலப்பிரகிருதியின்செயல் கெடவிருக்க மாயைநீங்கும்,—பிரியாஞானமது பிறக்கும் பிறவாபேதமே. எ-து. அம்மாயை நீங்கவே ஞானமுண்டாம். அந்த ஞானமுண்டாகியவிடத் தந்த ஞானம் பெந்தந்தோன்றுமற் சிவோகம்பாவம்பிறக்கும். எ-று

இச்செய்யுளுபாதிகளைவிட்டு நீங்குமுறைமை கூறிற்று. கருவியெல்லாமென்றது. தொண்ணூற்றாறும். உள்ளம்வித்தாஞ் செய்தியினுல். எ-து. அவித்தையாகிய வறியாமையின் காரியத்திலே பொருந்தும் என்க. (கஉ)

உள்ளமவித்தைச் செய்தியினுன். எ-ம். பாடம். பிரியாஞானமது பிறக்கப்பேதம் பிறவா. எ-கு. நீங்காத பிரமஞானந்தோன்ற ஜீவான்மாபராயா வென்னும் பேதங்கள் தோன்று என்றுரைத்தன ரோருரையாசிரியர்.

ஆனகன்மவநுட்டயங்க ளந்தக்கரணசுத்திதரு, மூனமின்றியச்சுத்தி ஞானமதனையுண்டாக்கு, ஞானமதுதான்பிரமத்தை நானென்றுணர்த்துநான் பிறந்தால், வானமதிநீர்துளக்கமெனக் காணுந்தன்னைமாயையிலே. (கங)

(இ-ள்.) அன்கன்ம[illegible]நுட்டயங்களந்தக்கரண[illegible]
[illegible]

சுத்தியாலே யந்தக்கரணத்துக்குச் சுத்தியுண்டாம்,—ஊனமின்றி யச்சுத்திஞான மதனையுண்டாக்கும். எ-து. குற்றமின்றியம் மகாவாக்கியசுத்தியானது ஞானத்தையுண்டாக்கும்,—ஞானமதுதான் பிரமத்தை நானென்றுணர்த்தும். எ-து. அந்த ஞானந்தானே யகம்பிரமமென்பதனை யறிவிக்கும்,—நான்பிறந்தால் வானமதிநீர்த்துளக்கமெனக் காணுந்தன்னை மாயையிலே. எ-து. அங்ஙனந்தானானதன்மையிலே கருத்துமுற்றினு லாகாசத்திலுண்டாகிய சந்திரன் சலத்தின் கண்ணேநின்று விளங்கித்தோன்று முருவம்போலத் தற்சொரூபமுந் தெரியும். எ-று.

இச்செய்யுள் பிரமநிஷ்டை கூடுமுறைமைகூறிற்று. அநுஷ்டயமந்தக்கரணசுத்திதரும். எ-து. கன்மாநுஷ்டானங்களானவற்று னந்தக்கரணசுத்தியுண்டாம். துளக்கப்பாடு சலத்தினலேச்சலொழியச் சந்திரபிரதிபிம்பத்துக் கலேச்சலில்லை அதுபோலக் கருவிகளுக்கொழியப் பிரமத்திற்கில்லை என்க. (௧௩)

தானேதானயநுபோகந்தன்னிற் றன்னையநுபவித்திட், டூனேயுயிரேயுணர்வேயென் றென்றுமின்றி யுரைபிறந்து, வானேமுதலாம்பூதங்கள் மாயமாயாதேநின்று, நானேபிரமமெனத் தெளியுஞானம்பிரமஞானமே. (௧௪)

(இ-ள்.) தானேதானயநுபோகந் தன்னிற்றன்னையநுபவித்திட்டு எ-து. அகம்பிரமமா யநுபூதியுந்தன்னிலேதன்னை யநுபவித்து,—ஊனேயுணர்வே யுயிரேயென் றென்றுமின்றியுரையிறந்து. எ-து. காயமென்றுங் கரணமென்றும் வாயு

வென்று மொருபேதமுமின்றி யின்னபடியென்று சொல்லு தற்கோர் சொல்லின்றி,—வானே முதலாம் பூதங்கள் மாயமா யாதேமன்னி. எ-து. ஆகாசமுதலாகிய மகாபூதங்கள்கெ டவுந் தானொருக்காலுங் கெடாதே நிலைபெற்று,—நானேபிர மமெனத் தெளியுஞானம் பிரமஞானமே. எ-து. அகம்பிரம மெனத் தெளியுஞானமே பிரமஞானம். எ-று.

இச்செய்யுள் பிரமஞானத்தினிற்குங் கருத்துக் கூறிற்று. தானேதானாய். எ-து. கருவிகரணாதிகளைநீங்கி. (௧௪)

"தன்னிற்றன்னைத்தானநுபவிக்கும் வானழிந்தநந், தன் னிலைமைகுன்றாதது" என்பது மறிக. என்றார் ஞானப்பிர காசர்.

சாற்றுமறைதத்துவமசிமா வாக்கியங்கடனையு ணர்ந்தாற், போற்றியது நீயானேயென் றறைவ தல்லாற் பொருளின்றே, தேற்றுமதனைத்தெளியாதார் தெளி யப்பஞ்சவாதநமே, லேற்றவியமநியமாதியோக மி ருநான்கியற்றுவரால். (௧௫)

(இ-ள்.) சாற்றுமறைதத்துவமசிமா வாக்கியங் கடமை யுணர்ந்தாற் போற்றியது நீயானேயென் றறைவதல்லாற் பொருளின்றே. எ-து. சொல்லப்படும் வேதத்தினுடைய முடிவாகிய தத்துவமசிமுதலாகிய மகாவாக்கியங்கள் சொல் லும் பகுதியையுணருங்காலத்து அது நீயானேயென்பதல்லாது மற்றொருபொருள் சொல்லுதற்கில்லையாம். ஆதலால்.—தேற் றுமிதனைத் தெளியாதார் தெளியப்பஞ்சவாதநமேலேற்ற வியமநியமாதியோக மிருநான்கியற்றுவரால். எ-து. இப்ப டித்துணியச்சொல்லு மகாவாக்கியத்தினுண்மையைக்கொண்டு

சோகம் பாவகமாகவறியாதா ரந்தமுறையைக்கூடித் தெளியவேண்டிப் பஞ்சவாதனமுதலாகிய பூசிக்குங்கிரியையும் இயமமுதலாகிய வட்டாங்கயோகத்தையுஞ் செய்து திரிவார். எ-று. எனவே சரிதை கிரியை யோகமாகியவை பிரமஞானங்கூடவேண்டிச் செய்யுந் தவமென்பதுகருத்து. பஞ்சவாதனமாவன-கூர்மாசனம், அநந்தாசனம், சிங்காசனம், பத்மாசனம், யோகாசனமுமாம். அஷ்டாங்கயோகமாவன-இயமம், நியமம், ஆசநம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை தியாநம், சமாதி, எனவிவை.

இச்செய்யுள் பிரமஞானங் கூடாதார் சரிதை கிரியை யோகமிவற்றைச் செய்து ஞானங்கைகூடுவரெனக் கூறிற்று. பஞ்சசாதனம் எனப்பாடமாயின் ஆசநமும், யோகபட்டமும், தண்டும், கமண்டலமும், செபமாலையும் என்க. நானேபிரமம் என்னுஞ் செய்யுண்முதல் இச்செய்யுட்காறும் மாயாவாதிமதங்கூறிற்று. (௧௫)

இயமநியமங்கள் ஒவ்வொன்று (௧௦) விதமாம். ஆசநம் (அ) விதம். பிராணாயாமம் (௩) விதம். பிரத்தியாகாரந்தாரணை (௫) விதம். தியாநம் (௧௬) விதம். சமாதி ஏகரூபமாகவுஞ் சொல்லப்படும். இவையிற்றில் இயமம்பத்தாவன— கொல்லாமை, சத்தியம், களவின்மை, பிரமசரியம், கிருபை, செவ்வியனாதல், க்ஷமை, நிலையுடைமை, அற்பபோஜநம், சௌசம், ஆ (௧௦) நியமம்பத்தாவன—தவமும், சந்தோஷமும், ஆஸ்திக்கிரமமும், தாநமும், ஈசுரபூஜனையும், அர்த்தசித்தாந்த சிரவணமும், இலச்சையும், புத்திமானாகையும், ஜயமும், ஓமமும் ஆ (௧௦) ஆசநமெட்டாவன—சொஸ்திதி

ஞாசநம், கோமுகாசநம், பத்மாசநம், வீர சிங்காசநம். பத்திராசநம். முத்தாசநம், மயூராசநம், சுகாசநம் ஆ (அ) மற்றுள்ளவை விரிக்கிற்பெருகும். விரிந்தநூல்களிற் கண்டுகொள்க. "மகாவாக்கியதத்துவமசியைக்கேட்டுப், பகாத நிலையைப் பதத்தாற்பார்த்து." "அப்பினசைவாலே மதியசைதல்போற்றன்னை, மெய்க்காரணத்தாய்ந்ததனைவிட்டு" சோகமெனத் திருந்துகள் ஜீவனும் பரமு, மேகமாமுத்தியிதுவே" "ஆதநமே யோகபடந்தண்டுசெபங்குண்டிகை யென், றேதுமைந்து சாதநமென்றோர்" "இயமநியமமிணங்காசநம்யாமம், ——பிரத்தியாகார-முயவுணுங்காற், றாரணையோடு தியாநசமாதியுமென், றேரிருநான்கங்கமெனவோர்" என்பவையுமறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

மாயாவாதிமத முற்றிற்று.
பாயிர முட்பட செய்யுள்—உ௩௩.

மாயாவாதி மதமறுதலை.

ஏகனுனெனவியம்பிபிப்படி யறிந்துமுத்தியடைமின்னென, மோகமானவுரைசோகமின்பொடு முடிந்திடாதுமலடாகிய, காகமானதுகருங்கலின்றசை பரித்தழுங்கரியகுஞ்சியின், றாகமார்பசிதவிர்க்கவாயிடைகொடுத்ததென்றுரை செய்தன்மையே.

(இ-ள்.) ஏகனுனென வியம்பியிப்படியறிந்து முத்தியடைமின்னென மோகமானவுரை சோகமின்பொடு முடிந்திடாது. எ-து. மாயாவாதி நீயேகப்பிரமமென்றுசொல்லிப்

பின்பு கருவிகளைநீங்கி யிப்படித்தரிசித்து முத்தியடையுங்கோ ளென்று மயங்கிச்சொல்லுஞ் சொல்லு நீயெடுத்துக்காட்டின சோகம்பாவனையேன் மகாவாக்கியத்தோடு கூடிமுடியாது. அஃதெங்ஙனமென்னில் அவ்வாக்கியம் அதுநானேனேன் என் கையா லிரண்டுபட்டுப் பெறுவானும் பேறுமாயொன்றுகை யால். அஃதன்றியும் பிரமத்தை விகாரமற்றதாகவுங்கூறி மீளவுமயங்கி அந்தப் பிரமஞ் சீவான்மாவாகப்பேதித்ததாக வுங் கூறினாய். அதற்குக் கன்மமென்றொரு முதலின்றியில் லாததனையு முண்டாக்கி யதனைக்கூடிற்றென்றுங் கூறியது மயக்கம். அஃதென்போலவென்னில்,—மலடாகிய காகமா னது கருங்கலின்றசைபறித்தழுங் கரியகுஞ்சியின்றுக மார்ப சிதவிர்க்க வாயிடைகொடுத்ததென்றுரைசெய் தன்மையே எ-து. ஒருமலட்டுக்காகமானது தனது கரியநிறத்தையுடைய குஞ்சினுக்கு மிக்கபசியைத்தணிப்பான் கரியகல்லுக்குண் டானவிறைச்சியைவாங்கிக் குஞ்சின்வாயிலேகொண்டுவந்து கொடுத்ததென்று, சொல்லுந்தன்மைக்கொக்கும். எ-று. என வே நிர்விகற்பமாகிய பிரமத்திற்குவமை மலட்டுக்காகம். அப் பிரமத்திலே சீவான்மாவாகப் பேதித்ததென்றதற்குவமை அக்குஞ்சு. அந்த ஜீவான்மாவுக்குக் கன்மாதிகளுண்டாக்கிக் கொடுத்தற்குவமை கல்லின்மாம்சம்.

மாயாவாதிமதங்கூறி யதனைமறுப்பா னெடுத்துக்கொ ண்டா ரதனுளிச்செய்யு ளான்மாவுண்டென்பதற்கோர் பிர மாணத்தாற் றொகுத்துக்கூறிற்று. மோகமானவுரை கொம்பு மூன்றொடு எனப்பாடம் இதன் கருத்து மூன்றுகொம்போ டுங் கூடி யழிவில்லாத மலட்டுக்காக்கையானது என்னும்ஆ க்ஷேபயுக்தியெனக் கொள்க. (க)

நீடுவேதமளவாகவேகமெனு நீதிதானிகழ்வதா குமே, ஞாடிஞாதுருவுஞானஞேயமுடனுநான்ம றையுமோதலா, லோடுமாகுமுனதேகமோதுமிவை யூனமாகியுரைமாறுகோள், கூடுமாகுமநுபூதிதானு மது கூடிடாதறிவிலாமையால். (உ)

(இ-ள்.) நீடுவேதமளவாகவேகமெனு நீதிதானிகழ்வதா குமேல். எ-து. அநாதியேயுண்டாகிய வேதமுதலாக வகம் பிரமமென்றே சொல்லுமென்று நீசொன்னாய் அப்படியா யின்,—நாடி ஞாதுருவுஞான ஞேயமுடனு நான்மறையுமோ தலால். எ-து. அந்தவேதத்திலு மாகமத்திலு ஞாதரு ஞான ஞேயமாகிய மூன்று முதலுமுண்டெனவே தெரித்துநாடோ றுஞ் சொல்லுதலால்,—ஓடுமாகுமுனதேகம். எ-து. நீயொன் றென்றுசொல்லுஞ் சொல்லவ்வேதவாக்கியங்கொண்டே பின் னிடாநிற்கும்,—ஓதுமிவையூனமாகி யுரைமாறுகோள் கூடுமா கும். எ-து. இன்னும் நீயகம்பிரமமென்று சொல்லுஞ்சொல் குற்றப்பட்டுத் தத்துவமசியென்னும் வாக்கியத்தோடு மாறு கோடலைப்பொருந்தும்,—அநுபூதிதானுமதுகூடிடா தறிவிலா மையால். எ-து. உனக்கான்மாவில்லையாகையாலே யநுபூதி தானுமுண்டாகமாட்டாது. எ-று. அறிவில்லாமையா லநுபூ திதானுங்கூடிடாது எனமாறுக. நான்மறையுமென்கையா லா கமத்துணிவும்பெற்றது. உரை மகாவாக்கியம். அறிவு ஆன்மா.

இச்செய்யுள் ஞானஞேயங்களன்றி ஞாதுருவுமுண்டென் பதனைமறுத்துக்கூறிற்று. ஞாதுரு ஆன்மா. ஞானம் ஆன்மா விற்குச் சகாயபூதமான சிவசத்தி. ஞேயம் அந்தச்சத்தியால றியப்படும் பிரமேயமான சிவம். (உ)

நீதியாலொளிகொள் பானுவானதகனீரிலேங்க
ழுமாறுபோ, லாதிதானுருவ மாயகாயமதின் மேவி
யாவதில்லையாகுமாந், தீதிலாவருவமாதலானிழல்கள்
சேரவேறிடமிலாமையால், ஓதிலோரகலினீரிலே
யொருவர்காணலாலிலதனேகமே. (௨)

(இ-ள்.) நீதியாலொளிகொள்பானுவானதக னீரிலேங்க ழுமாறுபோல். எ-து. கிரணங்களையுடைத்தாகியவாதித் தனதுசாயை பாத்திரோதகங்கள்தோறு முறைமையாலே விளங்குமாபோல,—ஆதிதானுருவமாயகாயமதின்மேவியாவதில்லையாகுமாந் தீதிலாவருவமாதலால். எ-து. (ஆதிதானருவமுருவமாதலாற் காயமேவியாவதில்லை) எனமாறுக. சர்வத்துக்கு முதலாயிருக்கிற பிரமங்குற்றமில்லாத வரூபமாகையாலும்பாதிகளோடுங் கூடியுருபமாகிய காயத்திலேபொருந்தி யுண்டாவதில்லையாம் அன்றியும்,—நிழல்கள் சேர வேறிடமிலாமையால். எ-து. பாத்திரோதக நிழலின்கண்ணிருந்தா லாதித்தகிரணஞ் செல்லாதாற்போலப் பிரமமுங்கூடாதகாயமுமுண்டாகவேண்டும். ஆகையாலும்,—ஓதிலோரகலினீரிலேயொருவர் காணலாலிலதனேகமே. எ-து. பாத்திரோதகத்திலேயாதித்தனைக்காண்பா னொருவனைப்போலக் காயத்திலே பிரமத்தைக்காண்பா னொருவனாவுண்டாகையாற் சொல்லுங்காலத் தநேகம்பிரமமென்பதில்லையாம். எ-று. அருவமாதலாலும் இடமில்லாமையாலும் ஒருவர் காணலாலும் எனவும்மை கூட்டுக.

இச்செய்யு ளாதித்தன்சாயை பாத்திரோதகங்கடோறுந் தோன்றுமாபோலக் காயங்கடோறும் பிரமநிற்கு மென்பதனைக்காண வேறோராத்மாவேண்டுமென்று மறுத்துக்கூறிற்று.

நிழல்சேரவேறி-மிலாமையால்; எ-து. பிரமமருவமாதலா னிழல்சேர்தற் கிடமில்லையாம். (௩)

"பரிதிகுடந்தோறும் பதிவதுபோனிற்கும், பிரமமுட ரேறுமெனல்பித்து" "அருவாம் வியாபகமா யாதியந்தமற்ற, துருவுடலினெங்கணுதிக்கும்" "ஏகதேசம் பருதியேயும் பிரதி விம்ப, மேகதேசக்கடத்துள்ளே" "இந்த முறை பிரமத்தில் லையேயாதலினு, லிந்தவுடற்பட்டான்வேறும்" "பரிதிகுடந் தோறும்*பதிந்ததெனப் பார்ப்பார், பரிதியையல்லாரென் றேபார்" "ஆகந்தோறு நிற்குமந்தப் பிரமமென, வூகஞ்செய் வார் வேறென்றோர்" என்னுந் திருவாக்குகளாற் பாத்திரோ தக ரவிச்சாயாநியாய மொவ்வாதென் றறிக. என்றார் ஞான ப்பிரகாசர். நிழல்கள் சேரவேறிடமில்லாமையால். எ-து. சூரியபிரதிவிம்பங்கள் பொருந்துதற்கு அகல்கடோறு நீர்கள் வேறாக விருந்தாற்போல வந்தப்பிரமமவச்சேதப்பட்டிருப் பதற்கு வேறிடமிலாமையானும் என்றுரை யுரைத்தன ரோ ருரையாசிரியர்,

---

வேறுவாயில்புலனொடுமேன்மனமு மேவிடாது பிரமாணமுங், கூறிடாதறிவுதானெனவுணர்தல் கோ டுநீமுயலினுடினு, மீறிலாதபரமேகமேயென வியம்பு நீயிசையுஞானமும், பேறதாவதில்லை பேதமானவிது பேணவேயுளதுபேசிலே. (௪)

(இ-ள்.) வேறுவாயில் புலனொடு மேன்மனமு மேவி டாது பிரமாணமுங் கூறிடாதறிவுதானெனவுணர்தல்கோடுநீ முயலினுடினும். எ-து. ஒன்றோடொன்று கூடாமலுணரும் பொறிகளும் புலன்களு மதன்மேலுண்டாகிய மனமுங்கூடாம லுடலிலோரறிவுதனித்துநின் றறியாதிருக்கவும், அறியுமென்று

சாத்திரப்பிரமாணங்களுஞ் சொல்லாதாயிருக்கவும், நீ பிரம முங் காயத்தோடுங் கூடித்தானே தானாய்நின்றறியுமென்று சொல்லியவறிவு கோடில்லாத முயலுக்குக் கோடுண்டென்ற றிந்தவறிவிற்கொக்கும். அன்றியும்,—ஈறிலாத பரமேகமே யென வியம்பு நீயிசையுஞானமும் பேறதாவதிலை. எ-து. கேடில்லாதபிரமஞ் சீவான்மாவுமாய் நிற்குமென்று சொல்லு கிறநீ பொருந்தினஞானத்தாலுனக்குப் பயனுண்டாவதுமில் லையாம். அஃதெங்ஙனமென்னிற் பரப்பிரமமுமே சீவான் மாவுமென நீசொல்லுகையால்,—பேதமான விதுபேணவே யுளது பேசிலே. எ-து. நீயிங்ஙனஞ் சொல்லுமுறைமையின் றிப் பரமான்மாவு மதனையறியப்படுஞ் சீவான்மாவுமென விர ண்டு முதலுண்டென்று சொல்லுமுறைமையே போற்றவு ளது. எ-று. நாடினாய் ஆக்ஷேபம்.

இச்செய்யு ளான்மாவுக்கொழியப் பிரமத்துச்குப் பந் தமுண்டாகாதாகையா லான்மாவென்றொன்றுண்டென்று கூறிற்று. வேறுவாயில். எ-து. வேற்றுமைப்பட்டிருக்கிற விந்திரியங்களும் புலன்களும் மனமும் பொருந்தாததாய்ப் பிரமாணங்களாலு மளவிடப்படாததாயுள்ளது ஆன்மாத்தா னெனவுணர்தல். முயலுக்குக்கொம்புண்டென்று நாடினதற் கொக்குங்காண் முடிவின்றிருக்கிற பரசொரூபமொன்றெ ன்று சொல்லும்நீபொருந்தும்ஞானமும் பேறுபொருந்துமிந் தவான்மாவும் பரமும்பேதமுண்டென்னு மிதுசொல்லுங்கால த்துக் கைக்கொள்ளத்தகுவதாயுள்ளது. எ-று. இதனாற் பர த்துக்குப்பற்றில்லை ஜீவனுக்கேபற்றுள்ளது ஆதலால் ஜீவபர பேதமுண்டென்று கொள்கவென்பது கூறிற்று. (௪)

"அறியப்படாதே லஅபிரமாணத்தா, லறியப்படாதழற் போதாம்" என்பதனானறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

இலகுசோதிமணியெனவுமேகமெனி னிதனிலே
கமதுவிலகிறுய், குலவிகாசுமொளியதுவு நீடிவளர்கு
ணமுநாடுவதோர்குணியுமாம், பலவுமானகுணமொ
ருவுமேகமது வெனவுநீபகரினிகரிலா, யுலகமானதனை
யுதவுமாறதிலையுணர் வுதானுமிலையுணரிலே. (௫)

(இ-ள்.) இலகுசோதிமணியெனவு மேகமெனில். எ-து. மிக்கவொளியுமணியும்போல வொன்ருயிருக்குமென்று நீசொல்லின்,—இதனிலேகமதுவிலகிறுய். எ-து. இந்தவுவமைதன்னிலே யொன்றென்பதனை மறுத்துக்கூறிறுய். அஃதியாங்ஙனமெனின்,—குலவுகாசுமொளியதுவு நீடிவளர் குணமுநாடுவதோர்குணியுமாம். எ-து. விளங்கப்பட்டமணியும் பிரகாசமானதுவு மிகவுமுண்டாகப்பட்டகுணமு மதனையாராய்ந்தறியத்தக்க குணியுமாகையால்,—பலவுமான குணமொருவு மேகமது வெனவுநீபகரில். எ-து. அதுவன்றியு மொன்ருன பிரமமானது இச்சாஞானக்கிரியைகளாகிய பலகுணங்களை நீங்கி நிற்குமென்று நீசொல்லின்,—நிகரிலா வுலகமானதனை யுதவுமாறதிலையுணர்வுதானு மிலையுணரிலே. எ-து. அந்தப் பிரமத்துக் கிச்சாஞானக்கிரியைகளாகிய பலகுணங்களில்லையாகில் ஒப்பில்லாத பிரபஞ்சமானதனை யுண்டாக்குந்தொழிலுமில்லையா யந்தப்பிரமத்துக்கவற்றைக் காத்தளிக்கவேண்டுமென்னு மறிவுமில்லையாம் விசாரிக்குங்காலத்து. எ-று. மணியுமொளியுங் குணமுங் குணியுமாகையா லிரண்டுபடுமென்பதுகருத்து. இச்சாஞானக்கிரியைகளை நீங்கிய நிர்விகற்பனென்னி லிச்சாஞானக்கிரியையோடுங்கூடியே பிரபஞ்சத்தின் சிருஷ்டி திதி சங்காரங்கணடத்தவேண்டுகையால். அது நீங்கிநிற்பனென்னில் அறிவுமில்லையாய்க் கர்த்தாவுமல்லவாவனென்பது கருத்து.

இச்செய்யுளான்மாவும் பிரமமு மொன்றென்று கூறிய வுவமைகொண் டொன்றல்லவென்பதூஉ மிச்சாஞானக்கிரி யைகளில்லையாயி னறிவுமில்லையாய்ப் பிரபஞ்சகிருத்தியஞ் செய்யவுமாட்டானென்பதூஉங் கூறிற்று. இராவணனையும் சகத்திரவாகுவையு மொன்றுபலவானத்துக் குவமையிட்டாய் இராவண னொருமுகத்தார்கண்ட தொருமுகத்தாற்சொல்லு மாபோல வுலகத்திலொருத்தன்கண்ட தொருத்தனறிந்துசொ ல்லக்கண்டதில்லை சகத்திரவாகுவும் பலகரங்களாலுமியற் றப்பட்ட வில்லுமம்பும் வலிக்குங்காலத்து வேறுபடுகைவழ ங்கலும் வினையொன்றின்மேலா மிதுவப்படியன்றென்றுகண் டுகொள்க. (௫)

"மணியொளிபோலேகமெனின் மாமணியுந்தேசுங், குணிகுணமென்றேபேதங்கொள்" "குணாதீதமென்று நீ கூ றுவையேயாகி, லெணுவுலகமுந்தருமாறென்" என்பதறிக என்றார் ஞானப்பிரகாசர்.

புற்றினேர்பழுதை தொக்குபோதுமயிர் புளகமா கவரவிரவிலே, யுற்றதாமதனையொக்கவேயுலகு திக் குமாறுமொருசத்திலே, பெற்றதாகுமெனி னப்பி ராந்தியுடை யோருமப்பிரமபேதமாய், நிற்பர்நீபக ரின் முற்றுமைய நிலைபெற்றுவின்பமதிலாததாம்.

(இ-ள்.) புற்றினேர் பழுதைதொக்கபோதுமயிர் புளக மாக வரவிரவிலே யுற்றதாமதனை யொக்கவே யுலகுதிக்குமா றுமொருசத்திலே பெற்றதாகுமெனில். எ-து. புற்றின்கண் ணே பழுதைகிடப்ப விருளிடத் தந்தப்பழுதையைக்கண்டவர் க்குப் பாம்பென்று மயிர்புளகித்தாற் பாம்பெனவே நினைக்கப்

படுவதாமதுபோலப் பிரபஞ்சமு மொப்பற்றதாகிய பிரமத்திலேதோன்றுமாறு மதனதயிக்கியத்தாலே யப்பிரபஞ்சமு மெய்போலத்தோன்று முறைமையும் பெற்றதென்று நீ சொல்லின்;—அப்பிராந்தியுடையோரு மப்பிரமபேதமாய்கிற்பர் எ-து. அங்ஙனமயங்கினவறிவையுடையவான்மாக்களும் இச்சாஞானக்கிரியையுண்டாய்ப் பிரபஞ்சகிருத்தியஞ் செய்வதில்லையென்று நீ கூறும்பிரமத்தின் பேதமாய் நிற்பாராம்;—நீபகரின்முற்றுமையநிலைபெற்று விண்பமதிலாததாம். எ-து. இப்படி நீ சொல்லின் நினக்கு மிக்கமயக்கவறிவேயுண்டாய்ப் பிரமமாமின்பமுண்டாகாது. எ-று.

இச்செய்யுள் பிரமத்துக்கு நிர்விகாரமென்பதனை மறுத்துக் கூறிற்று. முற்றுமைய நிலைபெற்று நின்மலமிலாததாம். எனப்பாடமாயின், முற்றுமயக்க நிலைபெற்றுநின்மலனாகை யில்லையாம். பழுதையைப் பாம்பென்று பிரமித்தது பிரமமாகவேண்டும் அதுதான் விகாரமென்னில் கரணங்களுக் கறிவில்லையாம். பிரமத்தின் சந்நிதிமாத்திரத்திலேசலிக்குமென்னிற் றெளிந்தகாலத்திற் சந்நிதியிற் சேட்டிக்கவில்லையாக வேண்டும். அதின் சலித்துத் தத்துவமூங் கூடாதெனக் கொள்க. (௬)

"இரவினர்வெண்ணப் படும்பாசமாகில், பூரமமூலகென்னப்படும்" "ஏன்றனைநீ யொன்றனைமற் றொன்றொன்றுவெண்ணுமிழுக், ன்றப்பரப்பிரமத்தின்" "ஐயம்விபரீதமென்றவிவையிர ந், ஐயவறிவுக்குண்டோசொல்." "பாசமினைபாம்பி ர்ப்பில்லர்ப்பரப்பிரமத், தேசுதனக்கொர்ப் போசகம்" ர்ந்தாற் பாம்பில்லை ிந் ை க, ம்ருவர்க் தாற்பே " "மருவர்க்காலனைத்தி ாணை ார்க்

கை, யிருடீர்ந்தாற் சிற்கனமன்றே" "நீர் நீர் கால்காலே நெருப்புநெருப்பே விண்விண், பார்பரமார்த்தத்திற்கும்" என்னுந் திருவாக்குகளாலறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

ஓதியேயுலகமதனைநீயுநிரு வசநமாகவுரை செய்வதென், பேதையோவுளது மிலதுமல்லபொருள் பேசுவாருமுளரோசொலா, யாதியேயுளதுவருதலா லில திலாவதின்மையதழிந்துபோம், நீதியாலுளதிலாமை நேர்வதெனினேர்மையா கியதுநின்றதே (எ)

(இ-ள்.) ஓதியேயுலக மதனை நீயுநிரு வசநமாகவுரை செய்வதென். எ-து. நீவேதத்தை யதிகரித்தேயிருந்தும் பிரபஞ்சத்தை முன்பில்லையென்றும் பின்பு நிருவசநமாகிய பிரமத்திலே தோன்றப்பட்டதென்றுஞ் சொல்லுதலுண்டானதென்,—பேதையோவுளதுமிலது மல்லபொருள் பேசுவாருமுளரோசொலாய். எ-து. ஒருபொருளில்லதுமல்ல வுள்ளதுமல்லவென்று சொல்லுவாருமுளரோ ஆகையா லறியாதவனே சொல்லாய். அற்றன்று,—ஆதியேயுளதுவருதலாலிலதிலாவதின்மையதழிந்துபோம். எ-து. (ஆதியேவருதலாலிலதிலாவதின்மையுளதழிந்துபோம்) எனமாறுக. ஆதிதோறுந் தோன்றிவருதலா லில்லையென்பதில்லையா யுள்ளதானதழிந்துபோம்,—நீதியாலுளதிலாமை. எ-து. பின்னில்லாமையாம்படி யழிந்துபோமுறைமையாலே யில்லாமையுண்டானது ஆகையால்,—நேர்வதென்னின். எ-து. உள்ளதுமில்லாததும் பிரபஞ்சத்துக்குப் பொருந்திற்றென்று நீ கூறின்,—நேர்மையாகியது நின்றதே எ-து. அப்படி யழிந்துபோம் பிரபஞ்ச மீளவும் பிரமத்திலே யுண்டாமிடத்து முன்புபோலத் தோன்றுகையா லதற்குமூலகாரணங்கிடந்தழியாமனிற்கும். எ-று.

இச்செய்யுள் பிரபஞ்சமநாதியினுள்ள தல்லவென்பதனை மறுத்துக்கூறிற்று. ஓதியேயுலகமதனை நீயுநிருவசநமாகவுரை செய்வதென். எ-து. உலகத்தை விவகாரமாத்திரமாய்ச் சொல்லாநின்ருய். பேதையே—போம். அறிவில்லையோ வொன்றையுண்டென்குத லில்லையென்குத லல்லாதபொருள் சொல்வாருமுண்டோ சொல்லாய் உள்ளது முன்னே யுண்டாய் வருதலாலில்லாததில்லையாயே போமாதல் நீதியாலே யுள்ளதல்லாத துண்டாமென்னிற் சுருங்கிநின்றதாம். எ-று. இவ்வுரைக்கு உலகம் விவகாரமொழியப் பரமார்த்தத்தில்லை யென்றதனை நிராகரித்ததெனக் கொள்க. (எ)

"அநிர்வசநமே யுலகமென்ருய் நின்வாக்கா லநிர்வசந மென்றுரைத்ததாம்" "உதிக்குமதனாலுலகுண் டென்றதுதானுக்கு, முதித்தழிந்ததில்லையென்கை யூறு. "உளதழிந்தின் றென்பாருயர் வாக்குணரா, ருளதழிந்து நேரியதாகும்" என்பதுமறிக. என்ருர் ஞானப்பிரகாசர்.

வேறதாகியது போலிருந்தமையில் வெள்ளிசுத் தியெனிலையமே, கூறலாமொருபரத்தோடொத்த பொருள்கொண்டுவிண்டநிலைகண்டனம், மாறிலாது நிலநீரதாகியனல் வாயுவாகியவைமாறியும், சேறிடாதுவிவகாரமன்றுபர மார்த்தமாயவைசெறிந்ததே.()

(இ-ள்.) வேறதாகியதுபோலிருந்தமையில் வெள்ளிசுத்தியெனில். எ-து. மித்தையாகிய பிரபஞ்சம் பிரமம் போலமெய்யாகத்தோன்றினமை யிப்பியானது வெள்ளியை யொக்கப்பிரேரேகித்தாற்போலுமென்று கூறின்,—ஐயமே

கூறலாம். எ-து. அந்தவிப்பியை வெள்ளியென்றையப் பட்டாற்போலப் பிரபஞ்சத்தையும் பிரம்மமோ மித்தையோ வென் றையப்பட்டே சொல்லலாம்,—ஒருபரத்தோடொத்த பொருள் கொண்டுவிண்ட நிலைகண்டனம். எ-து. முன்பிந்த ப்பிரபஞ்ச மொப்பற்ற பிரமத்தோடொத்த பொருளாகக் கைக்கொள்ளப்பட் டிப்பொழுது மித்தியையாக மாறிக்கண் டனமென்னில்,—மாறிலாது நில்நீரதாகியனல் வாயுவாகி. எ-து. நிலநீராகியு மனல்வாயுவாகியு மாறிநில்லாது,—அவை மாறியுஞ்சேறிடாது. எ-து. நீர் நிலனுகியும் வாயுவக்நியாகியு மாறியுஞ்செல்லாது,—விவகாரமன்று பரமார்த்தமாயவை செறிந்ததே. எ-து. ஆதலாலிப்பிரபஞ்சமும் விவகாரத்திலே மெய்யாதலன்றிப் பரமார்த்தத்திலு மெய்யாகச் செறிந்தது. எ-று.

இச்செய்யுள் விவகாரத்தின்மெய்யாய்ப் பரமார்த்தத்தி ற்பொய்யாமென் றதனை மறுத்துக்கூறிற்று. வெள்ளிக்கு வேற தாகிய சுத்தியானது வெள்ளிபோலத்தோன்றினதுபோற் பிரபஞ்சமெனிற் சந்தேகஞ் சொல்லலாம். (அ)

"சுத்திவெள்ளிபோலுலசென் னப்பிரமந்தோன்றுமெ ன்ற, பித்திலையும் போடாய்பிரித்து" "இருபொருளுமு ண்டே லெழும்விபரீத, மொருபொருளிற் றேன்றுதென் றோர்." என்று. பரத்தோ டொத்தபொருளில்லை யுவமையி டுதலால் வேறுநிலைபொருள்பெற்ற தெனக்கொள்க. எ-கு. உதஹரித்தனர் ஞானப்பிரகாசர்.

மாயநூலதுசில்ம்பிவாயினிடை வந்தவாறதனை மானவே, யாயவேயுலகமானதும் பிரமமதனிலே

யெனிலடங்கிநின், றேயுமாகுமொருசித்துமத்துடனி
லாததென்றுபினியம்பினீ, பேயனேகடமிருத்தில்
வந்தது பிறப்பதாவதிலேபேசிலே. (௯)

(இ-ள்.) மாயநூலது சிலம்பிவாயினிடை வந்தவாற தனை மானவேயாயவே யுலகமானதும் பிரமமதனிலேயெனில். எ-து. பொய்ந்நூலானது சிலம்பியின் வாயிடத்தே நின்று தோன்றிநின்று கெட்டவிடத்து மீளவுமதனிடத்தே யிந்தநூலாகத்தோன்றிவந்தாற்போல வுலகமானதும் பிரமத்திலே தோன்றிநின்று கெட்டபின் மீளவும் பிரமத்திலே முன்புபோலே தோன்றிவருமென்று நீ கூறின்,—அடங்கிநின்றேயுமாகு மொருசித்தும். எ-து. அரூபமா யவிகாரமாகிய பிரமமும் பிரபஞ்சத்திலே யகப்பட்டு மயங்கவுமாகுமாதலா னீ கூறியது வமையன்று,— அத்துடனிலாததென்று பினியம்பினீ. எ-து. அந்தநூலாகிய சேடத்துக்குள் ளச்சிலம்பியகப்படாது நின்றாற்போலப் பிரபஞ்சமாகிய சேடத்துக்குள்ளும் பிரமங்கூடிநில்லாது காரணமாய்நிற்குமென்று கூறின்,- பேயனேகட மிருத்தில்வந்ததுபிறப்பதாவதிலே பேசிலே. எ-து. அறியாதவனே கடத்துக்கு மண்காரணமாயிருக்கவுங் காரணமாகியமண்ணிற் கடந்தானேதோன்றாது. தோன்றுமிடத் தாதிகாரணமாகிய மண்ணும் நிமித்தகாரணமாகியகுலாலனுந் துணைக்காரணமாகிய திரிகையுங்கூடித் தொழில்செய்யக் கடந்தோன்றுமாபோலப் பிரபஞ்சத்துக்கு மாதிகாரணமுண்டாய்த் தோன்றவேண்டும். எ-று. எனவே யாதிகாரணமின்றிப் பிரமமேயாதிகாரணமாகத் தோன்றுமென்னிற் சித்திலே யசித்துத்தானே தோன்றுதென்பது கருத்து.
மிருத்து-மண்.

இச்செய்யுள் பிரபஞ்சத்துக்குக்காரணம் பிரமமென்பதனை மறுத்துக்கூறிற்று. மாயநூலென்பது இல்லாதொன்று தோன்றுமது மாயையென்பதவன் கருத்தாதலினால் மாயநூலென்றான். பேயனேபடமென்பது பாடமாயின் புடைவையானது மண்ணினிடத்துண்டாகாதென்பதாம், அஃதாவது ஒன்றின் காரணத்திலொன்றின் காரியமுண்டாகாதென்பதாம். (௯)

"சிலம்பிநூல்போலச் சகம்பரத்திற்றோன்றின், மலம் பரத்துண்டென்றேமதி" "இன்றேற் சடமண்ணிறுவாய்ப் பரத்தெழா, வின்றே படமண்ணிலே" என்பது மறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

வேறதாகுமுருவத்திலேபரம் வெளிப்படும்மெனவிளம்பினீ, யூறிலாவுருவசத்திலேபிரமமுண்டுதானுணர்விலாதுதென், மாறிவாயுவுமனுதிவானவையும் வந்திடாமைபினிலின்றெனி, லிறுதானுடையதாயதோபிரமமென் கொலோவிவைபிறப்பதே. (௧0)

(இ-ள்.) வேறதாகுமுருவத்திலேபரம் வெளிப்படும்மென விளம்பினீ. எ-து வன்னபேதமாகிய வேற்றுமைப்பட்ட வுருவத்திலே பிரமம்வெளிப்பட்டுநிற்குமென்றுநீ கூறின்,—ஊறிலாவுருவசத்திலே பிரமமுண்டு தானுணர்விலாததென் எ-து. குற்றமில்லாதஜடத்தினிடத்திலே பிரமமுண்டாயிருக்கவந்த ஜடமவத்தைப்பட்டவிடத் தறிவின்றிக்கிடப்பானேன்,—மாறிவாயுவுமனுதியானவையும் வந்திடாமையினிலின்றெனில். எ-து. வாயுவு மந்தக்கரணங்களும் நீங்கிவந்து கூடாமையினாலே யறிவில்லையானதென்று கூறின்,—

ஈறுதானுடையதாயதோ பிரமமென்கொலோ விவையிறப் புதே. எ-து. பிரமத்தினறிவுகெடத்தக்கதாயிற்றோ அதுவு மின்றிப் பிரமநிற்க வாயுவுமந்தக்கரணங்களு நீங்கியதியா தோ, ஆதலாற் பிரம மறிவுமறியாமையுமாகி யுருக்களிலே நில்லாது. எ-று.

இச்செய்யுள் பிரமமுருவையெடுத்து நிற்குமென்பதனை மறுத்துக் கூறிற்று. (கா)

ஊறிலாவொருசவத்திலே எனப்பாடமோதி ஊறுபடாத சவசரீரத்திலே என்றுரையுரைத்தனர். அன்றியும், "மாகங் கடந்தோறும் வாய்த்தமுறைபோற் பிரம, மாகந்தோறுமுறு மென்றாய்" "ஊறில் சவந்தனினு முண்டதுதான் கண்டில மேன், மாறிமனம்வராமலோ" "மாறாதேநிற்கப் பிரமமனங் காப்பொறியு, மாறிவரலென்னோ சொன்மற்று" "ஒருத்தன் கடாகாயம்போலுறினான்றேறும், விருப்பேன் வெறுப்பேன் விளம்பு" "ஊனுடன் பேதமிலரென் மற்றானுள்ளா, ரேன் கொள்கை கொளவருவாரார்" "என் கொள்கை நீகொள்ள யான்கொள்ளேனின் கொள்கை யென்கொள்கை வேறாமிய ம்பு" "நாத்திகனு மாத்திகனுமொன்றே நவின்றிடா, யோத்து ணரிற்பேதமேயுண்டு" "ஆக்கைதொறும் வெவ்வே றநுபவத் துக்கஞ்சுகமு, மாக்கைதொறும் வெவ்வேறணு" "துன்புறுவா னுங் குழியின் மேலெத்துறக்கத்தி, லின்புறுவானும் வேறென் றெண்" "அரையனும் வேறேய பராதர்வேறே, யவர்பல மும் வேறென்றறி" என்று தஹரித்தனர் ஞானப்பிரகாசர்.

பற்றதின்றியுடனின்றிடும் பரமெனப்பகர்ந்தனை பிரிந்துடனுற்றுடம்புநரைதிரைகளேய்சிறை யுருப்

பழிந்திவையுமுள்ளபின், குற்றமென்றிதனைவிட்டிடா
துவிடவென்றலுங்குலைவுகொண்டிடும், பெற்றிகண்டு
மொருபற்றறும்பரிசு பேசவேயுளதுனைசையே. (௧௧)

(இ-ள்.) பற்றதின்றியுடனின்றிடும் பரமெனப் பகர்ந்
தனை. எ-து. பிரமமானது காயத்திலே நின்றதாயினு மக்கா
யத்தோடு பற்றில்லாமனிற்குமென்று கூறினாய் அஃதங்ஙன
மாயின்,—பிரிந்துடனுற்றுடம்பு நரைதிரைகளோய் சிறை
யுறுப்பழிந்திவையு முள்ளபின் குற்றமென்றிதனை விட்டி
டாது. எ-து. பிரமமார்வத்துடனே கூடிநின்றவுடம்பு நரை
திரைநோய்சிறையிவையிற்றின் அறுப்பழிவுண்டானபின்பு
மிவ்வுடம்பைப்பொல்லாததென்று நீங்கிநிற்கமாட்டாது,—
விடவென்றலுங் குலைவுகொண்டிடும். எ-து. அவ்வுடனீங்க
வென்னுமிடத்து மிகவும் வியாகூலப்பட்டு நடுநடுங்காநிற்கும்
ஆகையால்,—பெற்றிகண்டு மொருபற்றறும் பரிசுபேசவே
யுளதுனைசையே. எ-து. இப்படிக்காயத்தோடும்பற்றி நிற்கு
முறைமையை யெவ்விடத்தினுங்கண்டிருந்துங் காயத்தோடு
பிரமத்துக்குப்பற்றில்லையென் றுன்னுசையாற் சொல்லவுள்
ளதன்றிப் பற்றுவிட்டதில்லை. எ-று.

இச்செய்யுள் காயத்தோடு பிரமத்துக்குப் பற்றில்லையெ
ன்பதனை மறுத்துக் கூறிற்று. (௧௧)

"பற்றின்றி நிற்கிற் பரமுடலிற் சாம்பருவத், திற்றிடுவ
மென்றிளைப்பதென்" என்பது மறிக. "விட்டிடும்வேலையின்
வியந்தவச்சமே, பட்டிடப்படுந்துயர் பகரலாவதே, கட்
டுவைநீங்கியே காதல்செய்யுமண், கட்டுவைதன்னையும் பின்
னைக்காமுறும்" "தனத்தினைமனைதனைத்தாவியந்தனை, நினைத்

தினி யெவரநுபவிப்பர் நீங்குநா, ளெனக்கிவையந்நியமாகு மேயெனு, மனத்துயர் மலியுவேமாயுமாவியே" "பாம்பழல் வாயினுற் பற்றமண்டுகந், தேம்பிடுந்துயருறு சீவன்றேயு நாள்" என்னும் சிவதருமோத்திரமு மறிக. என்ருர் ஞானப் பிரகாசர்.

சோதிமாமணிகளூடுபோனதொரு நூலுமான நிலைசொல்லிடு, நீதியான்மணிகள் பேதமாகியொரு நூலினின்றமைநிகழ்த்தினு, யாதிதானொருவனுகியே பலவநந்தயோனியிலமர்ந்தவன், பேதியாதநிலைபேசினு யுலகுபேதமேயிலதபேதமே. (௧௨)

(இ-ள்.) சோதிமாமணிகளூடுபோனதொரு நூலுமான நிலை சொல்லிடுநீதியான் மணிகள் பேதமாகி யொருநூலினின்றமை நிகழ்த்தினுய். எ-து. பிரசாசத்தையுடைய மிக்க பலமணிகளுக்குள்ளே யுருவியொன்றாய் நின்றநூலையுஞ் சொல்லத்தக்க முறைமையிலே கோத்தமணிகளினிறமாகப்பேதித் தொருநூலிலே பேதப்பட்டு நின்றமையும்போலப் பிரமத் துக்கும் பிரபஞ்சத்துக்கு முவமைகூறினுய் அங்ஙனங் கூறிய வுவமையால்,—ஆதிதானொருவனுகியே பலவநந்தயோனியி லமர்ந்தவன் பேதியாத நிலைபேசினுய். எ-து. கர்த்தாவான வனொருவனுய்ப் பலபேதப்பட்டெண்ணிறந்தயோனிகடோ றுநின் றவன்பேதியாதநிலையே கூறினுயாகையால்,—உலகு பேதமே யிலதபேதமே. எ-து. மணிகள்பேதம் போலப் பிரபஞ்சம்பேதமாகவுள்ளது பிரமத்துக்குப் பேதமிலதாம். எ-று. எனவே பிரமஞ் சீவான்மாவாகவும் பரமான்மாவாக வும் பேதிக்குமெனவுங்கூறி யிவ்விடத்துப் பிரமம் பேதியா தெனவுங் கூறியது வழுவாமென்பது கருத்து.

இச்செய்யுள் பிரபஞ்சமேபேதமாவது பிரமத்துக்குப்பேத மில்லையென்பதனை மறுத்துக் கூறிற்று. பேதியாதிலதுபே தமே. எ-து. உலகானது பேதமென்றபடியோ இல்லையா கிலபேதமென்றபடியோசொல்லுாய். எ-று. இதனால் நீய பேதமென்றது விருத்தமாயிற்றென்பதுகருத்து. பேதமே யுள்ளதென்க.

"பன்மணிநூல்போலப் பரமபேதம்போன்றிருக்கும், பன்மையுடற் பட்டென்றாய்பண்டு" "அந்நியமல்லவதற்குல கமென்றதுபொய், யந்நியநீகொண்டிடுகையால்" என்பது மறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

ஒத்துநின்றுடலி னின்பதுன்பமவை யுற்றுமுற் றிடுவதின்றெனும், பித்தவுன்னுரையினுற்றதேதிலது பெற்றதின்றிலதுபெற்றதேற், றுய்த்தலென்னுறுதல் சிவபாவமது சொல்லினென்றினுந்தோய்விலாமைநீ, வைத்துநித்தமன வாக்கிறந்தபரமென்னமான மிலே யின்னமே. (௬௩)

(இ-ள்.) ஒத்துநின்றுடலி னின்பதுன்பமவை யுற்று முற்றிடுவதின்றெனும்பித்த. எ-து. அஞ்ஞானமாகிய காயத் தோடுகூடிப் பிரமமுமஞ்ஞானமாய்ச் சுகதுக்கங்களை யநுப வித்துநிற்கச் சிதையும் பிரமங்காயத்தோடு கூடுவதில்லையெ ன்று சொல்லும்பேயனே நீயநுபவமில்லையென்னும் வார் த்தை,—உன்னுரையிலுற்றதே. எ-து. உன் சாத்திரத்திலே யும் பொருந்தினதே,—இலது பெற்றதின்றிலது, எ-து. சாத் திரத்தினல்ல தநுபவத்தினுமல்லாமலுண்டானதல்ல. அஃதன் றியும்,—பெற்றதேல். எ-து. அநுபவத்தினுமில்லாம லுண்'

டானதாயின்,—துய்த்தலென்னுறுதல். எ-து. பிரத்தியக்ஷத் திலே நீ யநுபவத்தையுறுவானேன்,—சீவபாவமது சொல் லின். எ-து. பரமான்மாவநுபவிப்பதில்லை ஜீவான்மாவி னுடைய பாவனையென்று நீ கூறின்,—ஒன்றினுந்தோய்விலா மை நீ வைத்து நித்தமனவாக்கிறந்த பரமென்ன மானமிலை யின்னமே. எ-து. இப்படியநுபவிக்கிற ஜீவான்மாவை ஒன் றினுந் தோய்விலாத பரமான்மாவாகக்கொண்டு நித்தமாய் மனவாக்கிறந்ததென்று மகம்பிரமமென்றுஞ் சொல்லவுமுன க்கு லச்சையில்லையின்னமும். எ-று.

இச்செய்யுள் பரமான்மா சீவான்மாவாய் நின்று புசிக் குமென்பதனை மறுத்துக் கூறிற்று உன்னுரையிலுற்றதே யிலதுபெற்றதின்றிலது பெற்றதே. எ-து. உன்னுடைய வச னத்திற்குப்பெற்றதேதெனி லதிற்பற்றற்று நிற்கையாகிய வில்லாமை பெற்றதில்லையாம், பற்றில்லாமைபெற்றதாகிற் புசிப்பற்றிருக்கவேண்டும். (௧௩)

"இன்பதுன்பத்தைக் கரணங்களெய்து முயிர்க், கின்ப துன்பமில்லையென்றதென்" "பொறியுணர்ச்சிபுந்தி யுணரு மதனை, யறியுங்காண் சீவனதனுர்ந்து" "சீவன் பிரமமெனச் செப்பினை முன்போகத்தைச், சீவியாதென்றதும் பொய்த்தோ" என்பது மறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

எங்குநின்றிடிலவத்தை யின்றிடுமிசைந்திடுங்கர ணமென்னினீ, யங்குநின்றபரமெங்கொளித்தது நின் றதேலவையடங்கிடா, விங்குநின்றதொருகாந்தமான கவிரும்புசந்நிதியங்குநேர், தங்கிநின்றதெனினீங்கி மீளும் வகைதங்கிடாதுனுரைதப்பதே. (௧௪)

(இ-ள்.) எங்குநின்றிஷ் லவத்தையின்றிடும். எ-து. பிரமம் ஜீவான்மாவாய்க் காயந்தோறு நிறைந்து நிற்குமென்று கூறி னீகூறியவவத்தையிலகப்பட் டடங்குவதில்லையாம்,— இசைந்திடுங் கரணமென்னினீ. எ-து. அப்படியவத்தைப் படுவது ஜீவான்மாவன் றந்தக்கரணங்களின்து நீக்கங்கள்காணுமென்று நீ கூறின்,—அங்கு நின்றபரமெங்கொளித்தது. எ-து. கரணங்களவத்தையைப் பொருந்தினவிடத் தவ்விடத்துநின்ற சீவான்மாவெங்கே மறைந்து நின்றது,—அது நின்றதேலவையடங்கிடா. எ-து. அந்தக்கரண நாயகனாகிய ஜீவான்மாவவ்விடத்து நின்றதாயி னவன்வழித்தாய்க் கரணங்களுமடங்கமாட்டா,—இங்குநின்றதொரு காந்தமானகலிரும்பு சந்நிதியிலங்கு சேர்தங்கிநின்றதெனில். எ-து. அற்றன்று இவ்விடத்துண்டானதொரு காந்தக்கல்லின் சந்நிதியிலே யிரும்பசைந்தடங்குந் தன்மைபோல ஜீவான்மாவின் சந்நிதியிலே யந்தக்கரணங்களுஞ் சேட்டைப்பட் டடங்கிற்றென்று நீ கூறின்,—நீங்கிமீளும் வகைதந்திடாது னுரைதப்பதே. எ-து. நீ கூறிய விரும்புகாந்தத்தோடுகூடினுற் காந்தத்தை யிரும்புநீங்கமாட்டாத தன்மைபோல அந்தக்கரணங்களும் ஜீவான்மாவோடு கூடினுல் நீங்கப்படாதாகையால் நீ கூறியவுவமையும் பிறழக் கூறினுயாம். எ-று.

இச்செய்யுள் கரணங்க ளவத்தைப்படுமென்பதனை மறுத்துக் கூறிற்று. (கச)

"எங்குநிறையி னிலையவத்தைத்தான் காணிற், றங்கிலஃதெங்கொளிக்குஞ் சாற்று" "நிற்கிற்பிரமங் கரணங்களீங்காவாங், கற்காந்தமுன் னிரும்போகாண்" "ஓடலிருத்தலுலாவு

லொடுகிடத்தல், பாடலெனப்பலவாமென்" என்பது மறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

இருள்பொதிந்ததொருபருதி யிவ்வுலகிலிசையிலின்றுடலநானெனு, மருள்பொதிந்ததொருபிரமமிங்குளது மருவிநின்றவுருவொருவியே, தெருள்பொதிந்துபரநானெனுந் தெளிவுசென்றபோதுகதியென்றிடும், பொருள்பொதிந்ததெனிலமலனுக்குமலம் வருதலாலுளதுபுன்மையே. (௧௫)

(இ-ள்.) இருள்பொதிந்ததொரு பருதியிவ்வுலகி லிசையிலின்றுடலநானெனுமருள் பொதிந்ததொரு பிரமமிங்குளது; எ-து. இருளான்மூடப்பட்டதோராதித்த னிந்தவுலகின்கணுண்டாகிநின்றதனையொக்குங் காயங்களேறு நானென்று மருட்சியாலே மூடப்பட்ட பிரமமிவ்விடத்துண்டாய் நின்றது,—மருவிநின்ற வுருவொருவியே. எ-து. அப்படி மருட்சிபொருந்திநின்றகாயம்நீங்கி, — தெருள்பொதிந்து பரநானெனுந்தெளிவு சென்றபோது கதியென்றிடும் பொருள்பொதிந்ததெனில். எ-து. அறிவு சூழப்பட்டுப் பரப்பிரமம் நானேயென்னுந் தெளிவுண்டானபொழுது முத்தியாய் நிற்கும் பொருளுந் தானுமென்று கூறின்,—அமலனுக்கு மலம் வருதலாலுளது புன்மையே. எ-து. மலரகிதமாகிய பிரமத்துக்கு மலங்கூடுதலு நீக்குதலு முண்டாகையாமென்று நீகூறியவுரை வெளிற்றுரை. எ-று.

இச்செய்யுள் பிரமந்தானே மருட்சியால் ஜீவான்மாவென்றுந் தெருட்சியாற்பரப்பிரமமென்று நிற்குமென்பதனை மறுத்துக் கூறிற்று. உளதுபுன்மையே. எ-து. நின்மலமா

யிருக்கிறபிரமத்துக்கு மலமானது கூடுதலாலாயாசமாகை யுண்டாமென்க. இது கூடாதென்பது கருத்து. (௧௫)

இருள்பொதிந்த பானுவுள தேனுடலையானென், மருள் பொதிந்த சித்துளதிம்மன்" "நின்மலமென்றேயதனை நீங்க ழ்த்திருயதற்குப், பின்னவித்தையுண்டென்கை பித்து." "போதமுறிலவத்தைப் போம்வாக்கியங்கெட்டுப், பேதமறு மென்கை பெரும்பித்து" என்பது மறிக. என்றார் ஞானப் பிரகாசர்.

சுத்தமானதுபரத்தினுக்கணைவ தின்றுசுத்தமத நாதிநீ, வைத்தமாயமுறுசித்தசுத்தமுற மற்றதற்கு மலம்வைத்தனை, யொத்தசீவன்மல கன்மமாயையுறு கின்றகாரணமுணர்ந்திடாய், பித்தனேவிறகினிற்பிற ப்பதெரியென்னில் வேறுபொருள்பெற்றதே. (௧௬)

(இ-ள்.) சுத்தமானது பரத்தினுக்கணைவதின்று சுத்தமத நாதி. எ-து. பரப்பிரமத்துக்குப் புதிதாகச்சுத்தமுண்டாய தன்றநாதியே சுத்தமுள்ளது,—நீவைத்தமாயமுறுசித்தசுத்த முறமற்றதற்கு மலம்வைத்தனை. எ-து. நீஜீவான்மாவென்று பிரமத்திலே பேதித்துச் சொல்லப்பட்ட சித்தானது மயக்க முற்று அசுத்தத்தைப்பொருந்தவே யதன்பேதமாகிய பரப் பிரமத்துக்கு மலமுண்டென்று தோற்றுவித்தனை,—ஒத்த சீவன்மலகன்மமாயை யுறுகின்றகாரண முணர்ந்திடாய் பித் தனே. எ-து. காயத்தோடு பொருந்தினவான்மாவு மலமுங் கன்மமு மாயையுங்கூடியநுபவிக்குங் காரியத்துக்குக் காரண மாகியமுதலை யறியாயாதலாற்பேயனே நீ அற்றன்று,—விற கினிற்பிறப்பதெரியென்னில். எ-து. காட்டத்திலே யக்கினி மறைப்புண்டு நின்றுதோன்றிப் பிரகாசித்தாற்போலக் காய

த்திலே மறைப்புண்டுநிற்கும்பொழுது ஜீவான்மாவென்று நின்று பிரகாசிக்கும்பொழுது பரப்பிரமமாக நின்று பிரகாசிக்குமென்றுங் கூறின்,—வேறுபொருள் பெற்றதே. எ-து. ஓரக்கினியிரண்டாகப்பிரிந்து காட்டத்திலே நிற்பதன்றி வேறொருபொருளாய்த் தோன்றுமாபோல ஜீவான்மாவும்வேறொருமுதலென் றறிவாயாக. எ-று.

இச்செய்யுளு மருட்சியான் ஜீவான்மாவுமாய்த் தெருட்சியாற் பரப்பிரமமுமாமென்பதனை மறுத்துக் கூறிற்று. என்னில் வேறுபொருள்பெற்றதே. எ-து. விறகினெருப்புத் தோன்றுந்தன்மை யென்பையாகிலந்நியப்பொருளைக் காட்டிநிற்கும். (௧௬)

"அநாதியேசுத்தமதனுக் கிலைகாணுக்கை, யநாதிபெத்தான்மாவுடற்பட்டான்" "வினைவித்ததாலாக்கை விதங்கொடுத்து நீக்கி, வினையதனவோபாகமுளவே" "அவித்தையினை நீக்கியுயிர்க்கா ரந்தநல்கு, நிமித்தஞ் சிவனின்மலன்" "நிமித்தம் பதிவுடலினின்றூர் பசுக்க, ளவத்தைமலமென்றே யறி" என்று தஹரித்துக் கூறினர் ஞானப்பிரகாசர்.

உன்னினீயுமநுபோகமென்றபொழு துற்றிடுந்துவிதமற்றதிங், கென்னிலில்லையெனிலில்லை நீயுமறிவின்மைகண்டவிடமுண்மையேன், மன்னுமோருணர்வுவந்திடும்முணர்வெலாமுமாயையெனின்மாயையே, சொன்னதோர் பிரமமாயிடும்பிரம மாயையாயறிவுசோருமே. (௧௭)

(இ-ள்.) உன்னினீயு மநுபோகமென்றபொழுதுற்றிடுந்துவிதம். எ-து. நானேநாளு யநுபவிப்பனென்னுமிடத்துப்

பெறுவானநுபவிப்பதுமுண்டாயிரண்டாம்,-மற்றதிங்சென்னிலில்லையெனிலில்லைநீயும். எ-து. பெறுவானுகவென்னிடத்திற் கண்டதில்லையென்னிற் பேருகியநீயுமில்லையாம்,—அறிவின்மைகண்டவிட முண்மையேயன் மன்னுமோருணர்வுவந்திடும். எ-து. அஞ்ஞாநங்கெட்ட விடமேயுண்மையென்றுங்கூறினந்தமயக்கறிவுகெட்டுக் கூடுமிடத்தான்மவறிவு சிறிதுண்டாயிருக்கும். அற்றன்று,-உணர்வெலாமுமாயையெனில். எ-து. அப்படியறியுமறிவெல்லாமாயா வறிவுகாணுமென்று கூறின்,-மாயையே சொன்னதோர் பிரமமாயிடும். எ-து. மாயை நீங்கினவிடத்திற்றோன்றுமறிவுமா யாவறிவென்னி னந்தப் பிரமமாயையாகவேண்டும்,-பிரமமாயையா யறிவுசோருமே. எ-து. ஆகையாற் பிரமமுமாயையா யம்மாயையாலேயறிவுங்கெடுமென்பதேயாம். எ-று.

இச்செய்யுள் பெறுவானின்றியே யநுபவமுண்டென்பதனை மறுத்துக்கூறிற்று. (கஎ)

"தன்னைத்தானே நினைக்குமென்று நீசாற்றினு, யந்நியமாங்கும் மறிவிப்பாம்" "அநுபவமென்று மநுபவியென்றும், பநுபதமேகார்த்த மலப்பார்" என்பதுமறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

ஆரணங்கடருதத்துவம் மசிபதங்களின்பொருளறிந்திடாய், காரணம்மதுவுநீயுமென்றிருமைகண்டுவேறதின்மைகருதிடாய், நாரணன் பிரமனுநாடரிய நாயகன்கழல்கண்ணிநீ, யேரணைந்துபொலி சாதநங்கள் கொடுயோகஞானமுமியற்றிடே. (கஅ)

(இ-ள்.) ஆரணங்கடருதத்துவம்மசிபதங்களின் பொருளறிந்திடாய். எ-து. வேதாந்தமாகச் சொல்லப்பட்ட தத்து

வமசியென்னுமகாவாக்கியத்தையு மதனாற்றரிசிக்கப்பட்ட பத பதார்த்தங்களையுமறியாய்,—காரணம்மஃவு நீயுமென்றிருமை கண்டு வேறதின்மை கருதிடாய். எ-து. காரணமாகிய கர்த் தாவுங் காரியமாகியவான்மாவு மிரண்டுபட்டு நின்றமையுங் கண்டு கூடிநிற்குமதுவு மறிந்திடாய். ஆகையால்,-நாரணன் பிரமனாலு நாடரிய நாயகன்கழல்கணண்ணிநீ யேரணைந்து பொலி சாதநங்கள்கொடு யோகஞானமுமியற்றிடே. எ-து. பிரமவிஷ்ணுக்களாலு நாடுதற்கரிய கர்த்தாவினுடைய திருவ டிகளைப் பொருந்துதற்கு அழகுபொருந்திப் பொலிவினையுடை த்தாகிய சிவசாதநங்களையும் பொருந்திக்கொண்டு யோகஞா னங்களையறிந்து செய்வாயாக. எ-று. எனவே யோகத்தாலே மனத்தைப்பிரித்து ஞானத்தாலே திருவடியைச் சேர்கவென் பது கருத்து.

இச்செய்யுள் மாயாவாதியை நிஷித்தமாக்கிப் பெறுவா னும் பேறுமுண்டென வறிவித்தது.

ஏகனென்னுஞ் செய்யுண்முதலிச் செய்யுட்காறு மாயா வாதி மதத்தை மறுத்துக் கூறிற்று. (௧௮)

யோகசாதநமாவது பத்திஞான வயிராக்கியமெனக் சொள்க. "அத்துவிதமென்ற சொல்லுக்கொன்றென்றலப் பொருள்வே, றற்றதெனவேமலேவின்றும்." "விண்விரவி வேறறவே நிற்கும் வேற்றுநிதமில், விண்ணலக் கார்றுநிக ளும் வேறு." "பிரமமுயிர்தோறும் பிறிவறவே நிற்கும், பிர மமு யிரன்றென்று பேணு." "ஒன்றென்னும் வேதம்பிரம மொன்றுதலினு, லன்றியிரண்டோசொல்லாய்." "ஒன்றே மனமைந்தினும் வேறறவுறையு, மொன்றே பரப்பிரமமும்." "ஒன்றியுயிர்தோறுமுறு மென்றுணர்போமுன்மல, மென்றுந் திளைப்பாய்பேரின்பு." என்பது மறிக. என்றார் ஞானப்பிர

காசர். பொருளறிந்திடாய். எ-து. பொருளையுள்ளபடி யறிந் தாயில்லை, அந்தப் பொருளையறியுமிடத்து,—காரணம் மதுவும். எ-து. தத் என்பதற்குச் சேகரகாரணமாகிய பரமசிவமும்,—நீயும். எ-து. தொம் என்பதற் கான்மாவாகிய நீயும்,—என்றிருமைகண்டு. எ-து என்றிரண்டு பொருளுண் டென்றுகண்டு,—வேறதின்மை கருதலால். எ-து. அசியென் பதற்கு அந்தப் பரமசிவத்துடனே யான்மாவேறற்கலந்து நிற்பதென்று பொருளறியப்படுதலால் என்றார் மற்றோருரை யாசியர்.

மாயாவாதி மதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—உ௫க.

பாற்கரியன் மதம்.

மன்னுமறையின்முடிவென்று மாயாவாதியுடன் மலைந்து, பின்னமாகிப்பிரமத்தைப் பேதாபேதஞ்சா தித்துப், பன்னுமொருநூலதுவாகப் பாரின்மீதுபாற் கரியன், சொன்னவிதனையிந்நூலினகத்தே தோன்றச் சொல்லுவாம். (க)

(இ-ள்.) மன்னுமறையின் முடிவென்று மாயாவாதியுடன் மலைந்துபின்னமாகி. எ-து. சுவயம்புவாக நிலைபெற்ற வேத மித்தன்மைத்தென்று மாயாவாதியோடு மாறுபட்டுநீங்கி,— பிரமத்தைப் பேதாபேதஞ் சாதித்து. எ-து. மாயாவாதி கூறிய பிரமத்தைப் பேதமாகவு மபேதமாகவு நிலைநிறுத்தி,— பன்னுமொருநூலதுவாகப் பாரின்மீது பாற்கரியன் சொன்ன

விதனையிந்நூலினகத்தேதோன்றச்சொல்லுவாம். எ.று, ஓது நூலும்வேதமுமாயிருக்க வதனுண்மையையறியாது பூமிமீதே பாற்கரியன் சொன்னமதத்தை யிந்தச்சிவஞானசித்தியிலிட த்தே தெளியச்சொல்லுவாம். எ.று

மாயாவாதிமதங்கூறிநிஷித்தமாக்கிப் பாற்கரியன்மதங் கூறுவானெடுத்துக்கொண்டாரதனுளிச்செய்யுள் வேதநூலுமா யாவாதிகொள்ளத்தக்கதாயிருக்க வவனோடுவேறுபட்டுப்பா ற்கரியன்கூறுவானென்பதுகூறிற்று. பாற்கரியனென்பானோ ரிருடி. பாற்கரியம் எனினும் பரிணமமாயாவதமெனினு மொக்குமென்றுரோருரையாசிரியர். (௧)

சித்தேயுலகாய்ப்பரிணமித்துச் சிவனாகித்திகழ்ந் தமையாற், சத்தேயெல்லாமுத்தி யினைச்சாரக்கண்ட ஞானங்கள், வைத்தேமொழியுமாமறைகள் சொன்ன மரபேவந்தக்கால், ஒத்தேகெட்டுப்பிரமத்தோ டொ ன்றாய்ப் போமென்றுரைத்தனனே. (௨)

(இ-ள்.) சித்தேயுலகாய்ப்பரிணமித்துச் சிவனாகித்திகழ ந்தமையாற் சத்தேயெல்லாம். எ-து. அறிவாகியபிரமமே பிரபஞ்சபேதமாய்த் தோன்றிவளர்ந் தான்மாக்களுமாய் விளங்குந்தன்மையாற் சர்வமுமந்தப் பிம்மமேயாம்,—முத் தியினைச்சாரக்கண்ட ஞானங்கள் வைத்தேமொழியுமாமறை கள். எ-து. வீட்டின்பத்தைச்சேர வறியுஞானங்களை வேத வாக்கியங்கள்சொல்லும்,-சொன்னமரபேவந்தக்காலொத்தே கெட்டுப்பிரமத்தோ டொன்றாய்ப் போமென்றுரைத்தனனே எ-து. அந்தவாக்கியங்களைச் சொன்னபடியேவைத்துத் தத்து வமசிபதபதார்த்தங்கண்டா லந்தப்பிரமத்தோடேயான்மாக்

கூடி யான்மத்தன்மைகெட்டொன்றிப் பிரமமாயே போமென்று பார்கரியன் கூறினன். எ-று. வாக்கியம், தத்துவமசி. சத்து நிலைநின்றது. அசத்து நிலைநில்லாதது. ஆதலாற் சத்தேசர்வமுமாமென்பதவன் கருத்து.

இச்செய்யுள் பார்கரியான்மதங்கூறிற்று.

மன்னுமறைஎன்னுஞ் செய்யுளுமிச்செய்யுளும் பாற்கரியன்மதங்கூறின. (உ)

"வித்தின்மரம்போல் விமலத்துலகமாஞ், சித்தென்றுலகைத்தெளி." "உதிக்குங்கனகத்தினொண்டொடியாதி, யுதிக்கும்பரத்தினுலகும்." "உப்புவரித்தோன்றிக்கலந்துவரியாமுலகு, மப்பரத்திற்றேன்றியதுவாம்." "கருமத்தான்ஞானத்தாற் கட்டிழியக்கெட்டுப், பிரமத்தொன்றாகையுயிர்ப்பேறு." என்பதுமறிக என்றார்ஞானப்பிரகாசர். பரப்பிரமத்திலுலகமுமான்மாவுந்தோன்றுமெனவே பரிணமமாதலும் பிரமத்தோடொன்றாய்ப்போமென்பதனால் அபேதமும்போந்தவாறு காண்க.

பாற்கரியன்மத முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—உ௫௩.

பாற்கரியன் மதமறுதலை.

இயம்புகின்றதுலகாயிடா துசட மின்றிநின்றுசடமாகியே, முயங்குகின்றமையிலில வணத்திரதமுழுதுமேகனதைமுயல்கைபோற், பயந்ததென்னிலறியப்படும்பொருளுமறிவு மென்றுபலவாகுமோ, தியங்குகின்றதெனுரைத்திடாய் கடினமாதியாகிவருசித்தனே.

(இ-ள்.) இயம்புகின்றதிலசாயிடாறு. எ-து. நீசொல்லு கின்றபிரமம் பிரபஞ்சபேதமாயி—மாட்டாது ஆகையாலே,- சடமின்றிநின்றுசடமாகியே முயங்குகின்றமையில். எ-து. பிரமம் ஜடத்தைநீங்கிநின்று ஜடந்தானுந் தானுகவேகூடி நின்றமையுண்டாகாது. அற்றன்று,—இலவணத்திரதமுழு துமேகனதைமுயல்கை போற்பயந்ததென்னில். எ-து. உப் பானது ஜலத்தோடுகூடியொரு தன்மைப்பட்டாற்போல வத்துவுமொன்றாய் நின்றதென்னில்,-அறியப்படும்பொருளு மறிவுமென்றுபலவாகுமோ. எ-து. ஜலத்தோடுகூடியலவ ணம்பேதியாது ஏகத்துவமாய் நின்றாற்போலப் பிரமமு மொன்றாய் நிற்கையின்றி யறியப்படும்பொருளாகிய ஜடமு மறிவாகிய ஞானமுமாகப் பேதித்துநிற்குமோ,-தியங்குகின்ற தெனுரைத்திடாய் கடினமாதியாகிவருசித்தனே. எ-து. இப் படிமயங்குவானேன், மாபூதங்கள் முதலானவையு நானேயா வேனென்று வருமறிவனே. எ-று. கடினம்-பூதகுணம். அது குணிமேலின்றது.

பாற்கரியன்மதத்தை மறுப்பானெடுத்துக்கொண்டாரத னுளிச்செய்யுள் பிரமமே பிரபஞ்சமென்பதனை மறுத்துக்கூ றிற்று. இலவணத்திரதமுழுது மேகனதை முயல்கைபோ லென்றது, மண்ணின் சாரமானதை ஜலமானதுகொண்டுப் பானதொழியச் சிற்சொருபந்திரண் டுப்பாய்ப்பரிணமியா தென்பது கருத்து. (க)

"உப்பு சடங்கடலிற்றேன்றி யொடுங்குமுல, கப்பரம சித்தினுதியாது." என்று தஹரித்தனர் ஞானப்பிரகாசர். மண்ணின் சாரத்தைக்கொண்டு உவரோடுகலந்து நீரானது உப்பாமென்னுமல் நீர்தானே யுப்பாமென்றது திருஷ்டாந்

தாபாசம் அதுபோல் பிருதிவியாதி பிரபஞ்சபேதமும் பிரம மல்ல வென்க. என்றுரோருரையாசிரியர்.

உன்னுகின்றபிரமத்திலே சிறிதிவ்வுலகமானதெ னவோதினீ, மன்னுகின்றசில்காலமோ டழியுமழிய வந்துதவுமாயையாற், றன்னிலொன்றுமெனில் வருத லோடிறுதிதருதலாலதுசடத்ததா, முன்னுடைச்சகமு முண்மையன்று சடமென்னவேயுறுதிமன்னுமே. (௨)

(இ-ள்.) உன்னுகின்றபிரமத்திலே சிறிதிவ்வுலகமான தெனவோதினீ. எ-து. யாவருநினைக்கப்படாநிற்கிறபிரமஞ் சேரப் பிரபஞ்சமாகாது சிறிது பேதித்துப் பிரபஞ்சமான தென்று நீ சொல்லுகின்றாயாகில்,—மன்னுகின்ற சிலகால மோடழியும். எ-து. அங்ஙனமாயிற் பிரபஞ்சஞ் சிறிதுகால நிலைபெற்று நின்றழியாநிற்கும்,-அழியவந்துதவுமாயையால். எ-து. அப்படியழிந்து மீளவுமாயையிலே தோன்றிவருகை யால் மாயையிலே யொடுங்கிமாயையிலே தோன்றும். அற் றன்று,—தன்னிலொன்றுமெனில். எ-து. ஒடுங்குங்காலத் திலும் பிரமத்திலேயொடுங்கித் தோன்றுங்காலத்திலும் பிர மத்திலே தோன்றுமென்னில்,—வருதலோடிறுதிதருதலாலது சடத்ததாம். எ-து. இப்படித்தோன்றி யொடுங்குவதாயிற் பிரபஞ்சம் பிரமத்திலேபேதமாயிற் பிரமமு மசேதநமாக வேண்டுமாகையால்,—உன்னுடைச் சகமுமுண்மையன்று சடமென்னவே யுறுதிமன்னுமே. எ-து. அகம்பிரமமென் கிறவுன்னுடனே பிரபஞ்சமுந்தோன்றுகையு மொடுங்குகையு ஞ்செய்கையால் மெய்யன்றுஜடமென்றேசொல்லுதலே மெய் யாகவுடைத்து. எ-று.

இச்செய்யுள் பிரமத்திற்சிறிதுபேதம் பிரபஞ்சமென்ப தனைமறுத்துக் கூறிற்று. அழியவந்துதவுமாயையால். எ-து. வந்து வந்துதவுமாயையால் எனவும்பாடம். (௨)

வித்தெழுந்துமரமாய்விளைந்தமை விளம்பினுயு வமைவேறுநீ, நித்தமென்றவுரைபொய்த்து நீடுசட மாயெழுந்தழியுநின்பர், மொத்தெழும்பொழுது வித் தினுக்கவனியுண்டுதாரகமுனக்கெனு, பித்தனென்று லகுரைத்திடும் பிரமமாயினுபிவைபிதற்றிலே. (௩)

(இ-ள்.) வித்தெழுந்தமரமாய் விளைந்தமைவிளம்பினு யுவமை. எ-து. மரங்கெட்டவிடத்து வித்திலே நின்றுமரமு ண்டானாற்போலப் பிரபஞ்சமழிந்தவிடத்தும் பிரமத்திலே நின்றுபிரபஞ்சமுண்டாமென்றுவமைகூறினுய் அங்ஙனமா யின்,—வேறுநீ நித்தமென்றவுரை பொய்த்து நீடுசடமாயெ ழுந்தழியுநின்பரம். எ-து. அந்தவித்து மரத்திலேயுள்ளது மாய்ப் பின்புதானே பரிணமிக்குங்காலத்து மரந்தோன்றத் தான்கெட்டுத் தோன்றினதுக்குப் பரிணுமமுண்டா யந்தம ரமீளவும் வித்தையுண்டாக்கினுற்போலப் பிரமமும் பிரபஞ் சத்துக்குவேருய் நித்தமாய் நிற்குமென்றவுரையும் பொய்யா ய்ப் பிரமமும் பிரபஞ்சத்தையுண்டாக்கியும் பிரபஞ்சமும் பிரமத்தையுண்டாக்கியும் சடத்தின் பகுதியாய்த்தோன்றிக் கெடும் நின்பிரமம் அதுவுமன்றி,—ஒத்தெழும்பொழுது வித் தினுக்கவனியுண்டுதாரக முனக்கெனு. எ-து. அந்தவித்துமர மாம்பொழுது பூமிதரிப்பாகத்தோன்றும் அதுபோல வுன்னு டைய பிரமம் பிரபஞ்சமாம் பொழுது தரிப்பதியாது,—பித் தனென்றுலகுரைத்திடும் பிரமமாயினுயிவை பிதற்றிலே.

எ-து. இதனை (பிரமமாயினுயிவைபிதற்றிலே பித்தனென் றுலகுரைத்திடும்) எனமாற்க. பிரமமாயினுய் இப்படி மயங் கக் கூறுவையாயி னுன்ணைப்பேயனென்று மிக்கோர்சொல்லா நிற்பர். எ-று. பிரமமாயினுய். எ-து. இழிவு. உலகம். எ-து. உயர்ந்தோரை. உலகமென்னும் வாய்பாடுரைத்திடு மென்னும் வாய்பாடுபெற்றது.

இச்செய்யுளும் பிரமத்திலே பிரபஞ்சந்தோன்றுமென் பதனை மறுத்துக் கூறிற்று. (ரு)

ஒரு விதை பரிணமித்துமரமானபோது அம்மரம் வேறு பட்டமரமாய்ப் பரிணமித்ததில்லை, பிரமமுஞ் சச்சிதாநந்த மாயிருந்து ஜடரூபமாகிய ஜகத்தாய்ப்பரிணமிக்குமாகி னீயி ட்டதிருஷ்டாந்தம்விகல தோஷமடையு மறியாமற்பேசினு ய்சா ணிதுபித்தர் வசநத்துக்கொக்குமெனக்கொள்க. "வித் தின்மரம்போல விமலத்துலசாமே, லொத்தழியுங்காண்பிரம மும்." என்பதறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

சூடகங்கடகமோதிரஞ்சவடி தொடரொடார முடிதோடுநா, ணாடகந்தருவதாகுமப்படி யனைத்தும ப்பிரமமாகுமே, னீடுமப்பணிகள்செய் துளோரவை புனைந்துளோர்களைநிகழ்த்திடும், நாடிடுஞ்சகமியற்று வோர்கொடு நடத்துவோருளர்நவிற்றிலே. (சு)

(இ-ள்) சூடகங்கடகமோதிரஞ் சவடிதொட ரொடார முடிதோடு நாணாடகந்தருவதாகும். எ-து. சூடகமுதல் நாணீ றுகச் சொல்லப்பட்டபேதமான பணிகளைப் பொன்னொருமு தலாக நின்று பேதித்தாற்போலப் பிரமமும் பிரபஞ்சபேத மெல்லாமாகப் பேதித்து முதல்கெடாமல் நிற்குமென்று கூ

றின்,—அப்படியனைத்தும் பிரமமாகுமேல். எ-து. அப்பணி போலப் பேதித்தெல்லாம் பிரமமாய் நிற்குமாகில்,—நீடுமப் பணிகள் செய்துளோரவைபுனைந்துளோர்களை நிகழ்த்திடும். எ-து. அப்பணிபேதஞ் செய்தோரையு மப்பணியணிந்தோரையு மப்பணிதானே யுண்டாக்கிநிற்றலா லதுபோல,—நாடிடுஞ்சகமியற்றுவோர்கொடு நடத்துவோருளர் நவிற்றிலே. எ-து. (கொடுசகமியற்றுவோர் நடத்துவோருளர் நவிற்றிலேநாடிடும்) எனமாறுக. ஒருமுதலைக்கொண்டு சகத்தையுண்டாக்குவோரையு மதனை நடத்துவோரையுஞ் சங்கரிப்போரையுஞ் சொல்லுங்காலத்தறிந்திடுந் தன்மையையுடைத்து. எ-று.

இச்செய்யுள் பொன்னும் பணியும்போலப் பிரமமும் பிரபஞ்சமாகப் பேதிக்குமென்பதனை மறுத்துக கூறிற்று.(௪)

"பொன்பணிதிபொன்னுக்கோ பூண்பார்செய்வாருமுளருன்பரத்துக்கன்னியங்களுண்டு." என்பது ,மறிக. என்றுதஹரித்தனர் ஞானப்பிரகாசர். பணிகளைச் செய்வோர்போலப் பரமசிவன், பொன்னைப்போலமாயை, பணியைப்போலப் பிரபஞ்சம், பணியையணிந்தோர்போல வான்மவர்க்கங்களுமாம் என்றொரோருரையாசிரியர்.

அறிவினோடுசெயன்மாறி விட.தனையணுகொணுதவையிரண்டினு, லுறுதியானபிரமத்தினே டழியவொன்றலாமெனவுரைத்திகா, ணிறுதியேலதனொடிசைவதின்றிசைவ துள்ளதாயிடினுமின்பமே, பெறுகிநீயுடலொடுயிர்களாயது பிறக்குமாறுசெயல்பெறுவதென். (௫)

(இ-ள்.) அறிவினோடு செயல்மாறி வீடதனை யணுகொணு தவையிரண்டினாலுறுதியான் பிரமத்தினோடுழிய வொன்ற லாமென வுரைத்திகாண். எ-து. ஞானக்கிரியைகளை மாறினால் வீட்டின்பமணைதற்கரிது. ஞானக்கிரியைகளிரண்டினாலுஞ் சென்றதற்காதாரமாகிய பிரமத்திலே யழியக்கூடலாமெ ன்று கூறினாய் காண்,—இறுதியேலதனொடிசைவதின்று. எ-து. ஞானக்கிரியைகணிற்கப் பிரமத்தைச் சென்று கூடுத லுமில்லை யந்தஞானக்கிரியைகள் கெட்டாற் பிரமத்தோடு கூடுதற் கொருமுதலுமில்லையாம் அன்றி,—இசைவதுள்ளதா யிடின். எ-து. அந்தஞானக்கிரியைகள் கெடாமலொன்றுவ துள்ளதாமாயின், — அவ்வின்பமேபெறுதி நீயுடலோடுயிர்க ளாயறிவுபிரியுமாறு செயல்பெறுவதென். எ-து. எப்பொழு துமந்தச் சுகத்தையநுபவிப்பதன்றிக் காயத்தோடுயிர்களின் மிக்கவறிவுநீங்கும்படி யவத்தையின் செய்தியைப் பெறுவா னேன். ஆதலா லான்மாவென்றொன்றுண்டுகாண். எ-று,

இச்செய்யு ளறிவுஞ்செயலுங்கெடாமற் பிரமத்திற்சென் றழியக்கூடுமென்பதனைமறுத் தான்மாவென்றொரு முதலுண் டென்றுமறிவுஞ்செயலுங்கெட்டுக் கூடவேண்டுமென்றுங் கூறி ற்று. உடலோடுயிர்களாயது பிறக்குமாறு செயல்பெற்றி யால் என்னில் இன்பத்தைப்பெற்று நிற்றலன்றி நீயுமுட லோடுயிர்களாய்வந்து பிறக்குமரபுபெற்றாய் காண் என்க. இதனாலுலகமுழுமுயிருமாய்ப் பிறந்திறந்துழலுமவனன்றோ நீயென்றதெனக்கொள்க,

இயம்புகின்றதென்னுஞ் செய்யுண்முதலிச் செய்யுட்கா றும் பாற்கரியன்மதத்தை மறுத்துக் கூறிற்று. (௫)

"ஆவிதான்கெட்டமலத்தொன்றுமென்றுயதுதான், பாவியமோ குற்றமுரைப்பாம்." "அழிந்ததுதானென்று ததனோடுறினு, மிழுந்தபிறப்பெய்தியிடுமே." "இது முத்தியல்ல விருணீங்கவுயிரின்புண், பதுமுத்தியீசனடியார்க்கு." என்பது மறிக. என்றார் ஞானப்பிரகாசர். உடலோடுயிர்களாயது பிறக்குமாறு செயல்பெற்றியால் எனப்பாடமோதி நீ மோக்ஷவின்பத்தைப் பெறினும் தேகாதிப்பிரபஞ்சமு முயிர்வர்க்கமுமாய் அந்தப்பிரமம் பரிணமிக்குமுறைமையா லதனோடுகூடிய நீயும் பிறக்குஞ் செயலைப்பெறுவாய் எனவே யவன் முத்தியடைதல் ஜநநத்துக்கேதுவாமென விகழ்ந்தவாறுயிற்று என்றுரோருரையாசிரியர்.

பாற்கரியன்மதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—௨௩௮.

நிரீச்சுர சாங்கியன் மதம்.

மூலம்புரியட்டகம்விகிர்தியாகி மூன்றாய்ப்பிரகிருதி, தூலசூக்கம்பரமாயச் சுத்தபுருடன்சந்நிதியிற், பாலன்சேட்டைபுரிந்துலகம் யோனிபலவாய்ப்பரந்தொடுங்குஞ், சாலவென்றுநிரீச்சுவர சாங்கியன்றான் சாற்றிடுமே. (௧)

(இ-ள்.) மூலம் புரியட்டகம் விகிர்தியாகி மூன்றாய்ப் பிரகிருதி. எ-து, பிரகிருதி புமானென்றிரண்டிற் பிரகிருதியானது மூலமென்றும் புரியட்டகமென்றும் விகிர்தியென்

றும் பெயரையுடைத்தாகி யம்மூன்றுவகையாய்,—தூலசூக் கம்பரமாய். எ-து. அந்தப்பிரகிருதி தூலமாயும் சூக்கமா யுஞ் பரமாயுநிற்கும்,—சுத்தபுருடன் சந்நிதியிற் பாலன்சே ட்டைபுரிந்துலகம் யோனிபலவாய்ப்பரந்து. எ-து. புமானா கிய சுத்தபுருடன் பிரகிருதியின் சந்நிதியிலே மழவின் செய் தியைப்போல வறியாமையைப் பொருந்திப் பிரபஞ்சமும் யோநிபேதங்களும் நானென விரிந்துநின்ற விடத்து,—ஒடுங் குஞ் சாலவென்று. எ-து. தனக்குவிவேக ஞானம்வந்து சர் வமும் பிரகிருதிக்குள்ளது தனக்குள்ளவல்லவென்று காண வே பிரபஞ்சவியாபார நன்றாகநீங்குமென்று,-நிரீச்சுரசாங் கியன்றான் சாற்றிடுமே. எ-து. நிரீச்சுவரசாங்கியனிப்படிச் சொன்னான். எ-று. மூலம் சித்தத்தை. புரியட்டகம் சத்தா திகளைந்தும் மனம் புத்தியாங்காரமுமாகவெட்டும். விகிர்தி தூலதேகமும் பிரபஞ்சமும். இம்மூன்றுவகையாகப் பிரகி ருதிபேதிக்க விதனைப் புமான் றனதென்று கொண்டுநிற்பன். இந்தப்பதினாறுகருவிகளோடுங் கூடிப்பிரபஞ்சத்தைப் பிரகி ருதிக்குள்ளதென்று நீங்கப்புமானென்றும் புருடனென்றும் வேறற்றுநிற்பனதுவே முக்தியாமென்பது கருத்து.

இச்செய்செய்யுள் சாங்கியன்மதங்கூறிற்று. நிரீச்சுரசா ங்கியம் கபிலன்மதம். இதில் விகிர்தியென்றமையா லாங்கா ரபேதத்திற்றோன்றியஞானேந்திரிய கன்மேந்திரியங்களுஞ் சத்தாதிகளிற்றோன்றியபூதங்களு மிருபத்துநாலுதத்துவங்க ளுமதிற்பேதமுமெனக்கொள்க. இதில் ஈசுரசாங்கியன் என் றும் நிரீச்சுரசாங்கியனென்றும் இரண்டுவகையர். இதிலே நிரீச்சுரசாங்கியன் சொல்லப்பட்டதெனக்கொள்க. சிவசாங் கியரையும் விஷ்ணுசாங்கியரையும் ஈச்சுரசாங்கியரெனக் கொள்க. (க)

பரமிவையின்கட் டோன்றுவனவின்மையின் விகுதியே யாவதல்லது பகுதியாகாதென்க. மூலப்பகுதிமானென்னும் புத்திக்குக்காரணமாய்த்தா னொன்றிற்றோன்றியதன்மையிற் பகுதியேயாவதல்லது விகுதியாகாதென்க. அதன்கட்டோன்றியமானு மதன்கட்டோன்றியவகங்காரமு மதன்கட்டோன்றியபஞ்சதன்மாத்திரைகளும் ஆகவேழுந் தத்தமக்குமுதலாயவவற்றைநோக்கவிகுதியாகலுந் தங்கட்டோன்றுவனவற்றைநோக்கப் பகுதியாகலுமாகுமென்க. புருடனொன்றிற்றோன்றுமையானுந் தன்கட்டோன்றுவனவின்மையானும் பகுதிவிகுதியென்னுமிரண்டுமல்லவென்க. பகுதியும்விகுதியுமல்லாத புருடனென்றும் பகுதியென்னுமூலப்பகுதியொன்றும் பகுதிவிகுதியென்னு மானுமகங்காரமும் தன்மாத்திரைகளுமென்னு மேழும் விகுதியென்னுமனமு மிந்திரியம்பத்தும் பூதமைந்துமிப்பதினாறுமாக விருபத்தைந்து தத்துவமுமல்ல துலகெனவேறொன்றில்லை யென்க. இப்படிக்கூறுக்கிகொள்க "சாற்றுவமேசாங்கியன்றான்றங்குமதத்தினையு, மாற்றலுறுமுள்ளத்தாலாய்." "நித்தியன்புத்திமுதனீர் நிலனீரேயாக, சுத்தன் புருடனெனச்சூழ்." "தூலமெனச்சூக்கமெனச் சூக்குமந்தானென, மூலமெனப் பாசமொருமூன்று." "சுத்தப்புருடன்சந்நிதியிற்றோன்றியுறுந், தத்துவங்கண்மூலத்திற்றாம்." "தத்துவங்களைந்து மூன்றுந்தரையிறுவாய், புத்தியெழுவாயுதித்தும்போது." "மூலத்திற் புத்திமுளைக்குமதனின் முளைக்கு, ஞாலவிறுவாய் முறையினால்." "அந்தக்கரணங்க ளப்புருடன்சந்நிதியி, லிந்திரியத்தத்துமுறுமெண்." "இந்த முறையையறிவார்தமையிந்தப், பந்தம்பிரியுமெனப்பார்." "பந்தங்கணீங்கப் பார்முகனேயிருக்கு, மிந்தநிலை முத்தியெனவெண்." என்னுந்திருவாக்கானு மறிக என்றார் ஞானப்பிரகாசர். கிரீடாப்பிரமவாதிமதமுமறுப்பும் ஞானாவரணவிளக்கத்

திற்காண்க. தத்துவங்கட்குக் காரணமாதலாற் பிரகிருதியை மூலமென்றுந் தனக்குமேற்காரணமின்மையிற் பரமென்றுங் கூறியது. புரியட்டகமாகிய சூக்குமதேகமானது மனம்புத்தி யாங்காரமாகிய வந்தக்கரணங்கள்மூன்றும் ஞானேந்திரிய மைந்தும் கன்மேந்திரியமைந்தும் தன்மாத்திரைகளைந்துமா கிய பதினெட்டுமாகும். விகிர்தியாகிய தூலதேகமானது பூத மைந்தும் அவற்றின்காரியகுணமாகிய வுலசமுமாம். ஆகவே சூக்குமம் பதினெட்டும் தூலமைந்தும் பிரகிருதியொன்றும் புருடனொன்றுமாகிய விருபத்தைந்தினையுந் தத்துவமென்று சாங்கிய நூலுட்கூறுமுறைமையை யீண்டுய்த்துணரவைத் தவாறு காண்க. நிரீச்சுரசாங்கியனென்றதனு லவனுக்குக் கர்த்தாவில்லையென்பது தானேவிளங்கும் என்றுரோருரை யாசிரியர்.

நீச்சுரசாங்கியன்மத முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—உ௫௬.

நிரீச்சுரசாங்கியன் மதமறுதலை.

சுத்தனறிவன்புருடனெனிற் சூழாதாகும்பிரகி ருதி, பெத்தநீங்கினுலும்பிற்பெத்தனுவன்பேரறிவாற் கத்தமே வும்பிரகிருதி கண்டுகழிக்க மாட்டானேன், முத்தனுகான்சுத்தனுக்கு மூலப்பிரகிருதியிலையாம்.()

(இ-ள்.) சுத்தனறிவன்புருடனெனிற் சூழாதாகும்பிரகி ருதி. எ-து. ஆன்மபுருடன் சுத்தமானவறிவை யுடையனுமா கி லவனையசுத்தமாகிய பிரகிருதிவளையாதாகும். அன்றியும்,-

பெத்தநீங்கினாலும் பின்பெத்தனாவன். எ-து. பெத்தனாய் நின்றவிடத்தினுமிவனைப்பந்தியா தஞ்ஞானங்களவை பிரகிருதிக்குள்ளவாய் நிற்குமென்னில் பெத்தநீங்கினவிடத்திலு மறியாதுநின்றானாகையால் பெத்தத்தைப் பொருந்தினவனாவன்,—பேரறிவாற்கத்தமேவும் பிரகிருதிசண்டுகழிக்கமாட்டானேல். எ-து. மிக்கவறிவாகிய பரையோடுகூடிநின்றும் பொல்லாங்கைப்பொருந்தினபிரகிருதியின் செயலைத்தெரிசித்து நீங்கமாட்டானாயி னஞ்ஞானப்பிரகிருதிக்குள்ளதென்று காணுந்தகுதியையுடைய னல்லனாகையால்,—முத்தனாகான். எ-து. பரையுடனேகூடிநின்று பிரகிருதியை நீங்கானாயின் முத்தியடையுமான்மாவாகான்,—சுத்தனுக்கு மூலப்பிரகிருதியிலையாம். எ-து. சுத்தனாயிருக்கிற பிரமத்துக்கு மூலப்பிரகிருதிகளுண்டாகா. மூலப்பிரகிருதிகூடுவது நீங்குவதுமாவதான்மாவுக்கென்றறிவாயாக. எ-று.

சாங்கியன்மதத்தை மறுப்பானெடுத்துக்கொண்டா ரதனுளிச்செய்யுள் பரமபுருடன் பிரகிருதிக்குள்ளகப்படுவனென்பதனைமறுத்துக்கூறிற்று. கத்தம்-பொல்லாங்கு. (க)

பிரகிருதியென்பது மாயையென்றாய் அப்பொழுது காலமெங்கேதோற்றிற்று. பிரகிருதியிலேயல்லாமையாலுங் காலமாயையிலேதோற்றுதலாலும் மாயைவேறு பிரகிருதிவேறெனக்கொள்வாயாக என்றார் ஞானப்பிரகாசர்.

புருடன்பிரகிருதிபெற்றாற் போதஞ்சிறிதங்குண்டாகிக், குருடன்முதுகின் முடவனிருந்தூர்ந்தாற்போலப்பிரகிருதி, யிருடனிடத்தேயிருந்தியங்குங் கன்மாவிறையன்றிரண்டினையு, மருடனுருவாய்ச்சேட்டிப்பித் தறியுமமலனரனேயாம். (உ)

(இ-ள்.) புருடன்பிரகிருதிபெற்ருற் போதஞ்சிறிதங்குண்டாகி. எ-து. சுத்தபுருடனென்ற ஆன்மபுருடன் பிரகிருதியைக்கூடினவிடத்துப் பிரகிருதியாலேசிறிதஞ்ஞான வறிவுண்டாய்,-குருடன்முதகில் முடவனிருந் தூர்ந்தாற்போலப்பிரகிருதியிருடனிடத்தே யிருந்தியங்குங்கன்மால். எ-து. அந்தகன் முதுகிலே முடவனிருந் தந்தகனைநடத்தினுற்போலக் கன்மத்துக்கீடானபிரகிருதியாலே சிறிதஞ்ஞானம் பெற்றபுருடனைப் பிரகிருதிகூடி யவனிடத்தேயிருந்து கன்மத்துக்கீடானதொழிலைநடத்தும்,- இறையன்று. எ-து. ஆகையாற்பிரகிருதியுடன் கூடிநிற்பா னான்மாவேயாம். கத்தாவன்று,—இரண்டினையு மருடனுருவாய்ச்சேட்டிப்பித் தறியுமமலனரனேயாம். எ-து அந்தவான்மபுருடனையு மவனைக்கூடிநிற்கிறபிரகிருதியையுங் கூட்டி யஞ்ஞானமேதனக்குரூபமாகக்கொண்டு நடக்கும்படியாக நடத்துவித் தான்மாக்கள்செய்தகன்மத்தையுமறிந் ததற்குத்தக்கபயனையுங்கொடுப்பான் மலரகிதனுகியவரனேகாண். எ-று. பிரகிருதிக்கஞ்ஞானமேசொரூபமாகையா லவ்வஞ்ஞானத்தைப்பொருந்திநின்றபுருடனை மருடனென்று கூறப்பட்டது அமலனெனகையால் கர்த்தாமலரகிதனென்பது கருத்து.

இச்செய்யுள் பிரகிருதியுடனேகூடிநிற்பவனுன்மாவே கர்த்தாவல்லனென்று மறுத்துக்கூறிற்று. புருடனுவான் பிரகிருதிகூடினுற்சிறிதறிவுண்டாய்க் குருடனுடையமுதகிலே முடவனிருந்துநடத்தினுற்போலப் பிரகிருதியாகியவிருட்டினிடத்தே புருடனிருந்து வழங்குங்கன்மத்தாலே வேறு கர்த்தாவாலன்றென்றென்னில் அப்பிரகிருதிபுருடனுகிய விரண்டையுமருடனுருவாய்நின்று சேட்டிப்பித்தறியாநிற்கும் அமலனு

கியபரமேசுவரனென்க. குருடன்முதகில் முடவனிருந்தூர் கையாவது ஒன்றுக்குள்ளகுணமொன்றுக்கில்லாமல் சேட்டை கூடாதாம். (உ)

பிரகிருதியிருடனிடத்தே இருந்தியங்கும். எ-னை. இருந்தியக்கும். எனப்பா—மோதி அசேதனமாகியபிரகிருதியிடத்திலான்மாவிருந்து அந்தப்பிரகிருதியைநடத்தும் என்றுநீ சொல்லில் அதுகூடாது,—என்றிரண்டினையு மிறையருடன்னுருவாய்ச் சேட்டிப்பித்துக்கன்மாலறியும். எ-து. பிரகிருதி யான்மா என்றிரண்டினுள்ளும் பிரகிருதியையிறைவன் காருண்ணியமேவடிவாகிச் சேட்டிப்பித்துக் கன்மானுகுணமாக வான்மாவையுமறிவிக்கும். அந்தவிறைவன் யாரென்னில்,—அமலனரனேயாம். எ-து. அனுதிநிருமலனுகியவரனேயாம். எ-று. அறிவின்மையாற் பிரகிருதியைக்குருடனென்றும் மலபெந்தத்தால் ஞானம்ஜீவியாமையால் ஆன்மாவைமுடவனென்றுங் கூறியவாறுகாண்க. அறிவிக்கும் என்னுதறியுமென்றது மரபுவழுவமைதி. அரசன்செய்தவாலயம் என்றாற் போல என்றுரோருரையாசிரியர்.

அறியான்புருடன்பிரகிருதி யசேதநங்காரியத்துக், குறியாய்நாதனுளனென்று கூறுமுத்திவிவேக மெனிற், செறிவாந்தளபோகாதறிபிற் சேர்த்தோன் வேண்டுஞ்செயலிற்போ, நெறியாற்பணிசெய்துடற் பாசநீக்கிக்கொண்ணீநின்மலனுல். (௩)

(இ-ள்.) அறியான்புருடன். எ-து. ஆன்மபுருடன்ருனுயொன்றையு மறியமாட்டான்,—பிரகிருதியசேதனம். எ-து. பிரகிருதியுஞ் சடம் ஆதலால்,—காரியத்துக்குறியாய் நாத

னுளனென்று. எ-து. இவைகாரியப்படுதற்குக் காரணமாகியகர்த்தா ஒருவனுளனென்று குறிப்பாயாக,—கூறுமுத்திவிவேகமெனில். எ-து. நீமுத்தியென்றுசொல்லப்பட்டதுபெந்தம்நமக்குள்ளதல்லவென்றறியும் விவேகஞானமென்னில்,-செறிவாந்தளை போகாதறியில். எ-து. எல்லாத்தையுமறியுமிடத்துப் பாசஞானமும் பசுஞானமுங் கூடியறியவேண்டுமாகையாற் பாசபந்தம்நீங்காதாம்,—சேர்த்தோன் வேண்டும். எ-து. அந்தப்பாசம்நீங்குமிடத்து முன்புகூட்டினோனீக்கவேண்டும். செயலிற்போம். எ-து.அந்தப்பாசத்தைக்கூட்டினகர்த்தாவின் காருண்ணியத்தாலே பாசம்பெந்தம்நீங்கும் அது நீங்கும்படிக்கு,—நெறியாற்பணிசெய்துடற் பாசநீக்கிக்கொண்ணீநின்மலனால். எ-து. சரியைகிரியாயோகஞானங்களாகியவழிகளிலே நின்றுதொண்டுசெய்து நீகர்த்தாவினாலே யுன் பாசபந்தத்தை நீக்கிக்கொள்வாயாக. எ-று.

இச்செய்யுள் புருடனையும்பிரகிருதியையு நடத்தவோனொருவனுளனென்று மப்படிநடத்துவோனைவழிபடுவதேமுத்தியென்றுங் கூறிற்று.

சுத்தனென்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுட்சாறு நிரீச்சுரசாங்கியன் மதத்தை மறுத்துக்கூறிற்று. (௩)

செறிவாந்தளைபோகா தறியிற்சேர்த்தோன்வேண்டும். எ-கு. பந்தித்திருக்கிற விலங்கானதறிந்துகொண்டு நீங்கிப்போகாது பூட்டினவனைவேண்டி வழிபாடு செய்துவணங்கவே யவனது செயலினாலே யவ்விலங்கானது போகாநிற்கும் அதுபோல வேதாகமஞ்சொன்ன முறைமையாற் பணிசெய்து உடலென்னும் பாசத்தை நின்மலனென்னும் பரமே

சுரனாலே நீக்கிக்கொள்வாயாக. எ-று. அன்றியுநீ பிரகிருதி விகாரங்களுக்குப் பாறயிர் நியர்யங்கொண்ட வறிவிலாதவனல்லோ உன்னுடைய தரிசனத்தைவிட்டுச் சைவாகமத்தைப் படித்தறிந்து சிவனையடைந்து வழிபாடுசெய்து பிழையாவென்பது கருத்து. "சுத்தன் புருடனெலிற் சூழுமோமூலாதி, சுத்தனலனென்றேதுணி." "சுத்தன்முன்றத்துவங்க டோன்றுமென்றாய் மீளுமென்றாய், யித்தாற்பலமேதியம்பு" "சடந்தறுவுமாதலினாற் றனேதோன்றாது, கடந்தானே தோன்றுமோகாண்." "அறியான்புருடனவ னுக்கையுமாச்கா, னறியாவினையுமாக்காது." "ஆதலினாலெல்லாமறிந்தாக்கியாக்கைவினைச், சாதகனைச்சாத்தினனுண்டு." "அவன் பரிசுத்தன்னாதிமலமுத்தன், சிவன் புருடன் பெத்தனெனத்தேறு." "புத்திமுதற்கரணங்கூட்டப்பதிபுருட, னொத்துச் சிறிதறிவுமுற்று." "மூடவன் குருடன் முதுகிருந்தூர்ந்தாற்போ, லுடலினையூர்ந்தேபயன்றுய்க்கும்." "நீங்குமோகாலிளிகளமறிந்தான்றன்னை, நீங்குமரையன் கருத்துநேர்ந்து." "பாசமுறவும்பருவமஞ்சிப்பணிந்தவற்குத், தேசிகன்றீர்ப்பன்றிமிரத்தீங்கு." என்னுந் திருவாக்குகளாலறிக. என்றார் ஞானப்பிரகாசர்.

நிரீச்சுரசாங்கியன்மதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—௨௬௨.

பாஞ்சராத்திரிமதம்.

ஆதியாயருவமாகியகண்ட பூரணமாய்ஞானச்,
சோதியாய்நின்றமாயன்சுவேச்சையா லுருவுகொ

ண்டு, நீதியார்கருணையாலே நீள்கடற்றுயின்றுநாலு, மோதினனென்றுபாஞ்ச ராத்திரியுரைப்பனுற்றே.

(இ-ள்.) ஆதியாயருவமாகி யகண்டபூரணமாய் ஞானச் சோதியாய்நின்றமாயன். எ-து; ஆதிபூதனு யரூபியாய் எவ்விடத்தினு நிறைந்துநிற்பவனாய் ஞானசொரூபியாய் நின் றவிஷ்ணுவானவன்;—சுவேச்சையாலுருவுகொண்டு. எ-து. ஆன்மாக்களை ரக்ஷிக்கவேண்டித் தனதிச்சையாலே மீனுமை டன்றி சிங்கம் வாமனமிராமர் மூவராயுங்கிருஷ்ணனாகவு மே லிகளையெடுத்துக்கொண்டும்,—நீதியார் கருணையாலே நீள் கடற்றுயின்று. எ-து. இரக்ஷிக்கவேண்டு முறைமையாகப் பொருந்தினகருணையாலே நெடியதிருப்பாற்கடலிலே யோக நித்திரைசெய்து,—நாலுமோதினனென்று. எ.து. அநாதி யாகிய வேதத்தையுமருளினனென்று,—பாஞ்சராத்திரியுரை ப்பனுற்றே. எ-து. பாஞ்சராத்திரியென்னுஞ் சமயிசொல்லு வன். எ-று. உருவுகொண்டும் துயின்றும் எனவும்மை விரி க்க.

நிரீச்சுவரசாங்கியன்மதத்தை நிஷேதமாக்கிப் பாஞ்ச ராத்திரிமதங் கூறுவானெடுத்துக்கொண்டா ரதனுளிச்செய் யுள் விஷ்ணுவே கர்த்தாவென்று கூறிற்று, ஆதியென்பதெல் லார்க்குமுதல். (க)

முன்வைதிகமதங்கூறி மறுத்துத் தாந்திரிகபக்ஷமான பிர மமதமும் இரணியகர்ப்பவேதாந்தமதமும் பாஞ்சராத்திரி மதமும் வைகாநசமதமும் பாகவதமதமும் மர்த்துவமதமும் என்னுமாறினுட் பாஞ்சராத்திரிமதங் கூறத்தொடங்கி அவற் றுளித அவன் கடவுளிலக்கணங் கூறுகின்றது என்றேதின ரோருரையாசிரியர்.

உந்தியிலயனையீன்றுமவனைக் கொண்டுலகுண்டாக்கி, யந்தநல்லுலகழிக்க வரனையுமாக்குவித்துத், தந்திடுஞ்சகத்தினுக்குத் திதிகர்த்தாதானேயாகி, வந்திடுந்தோற்றமீறு நிலைமையும்பண்ணுமாயன். (௨)

(இ-ள்.) உந்தியிலயனையீன்று மவனைக்கொண் டுலகுண்டாக்கி யந்தநல்லுலகழிக்க வரனையுமாக்குவித்து. எ-து. வைகுண்டத்திலேயிருக்கும் பரமபுருடன் சிருட்டிகாரணத் தனது திருவுந்தித்தாமரையிலே பிரமாவையுண்டாக்கியவனாலே பிரபஞ்சத்தை யுண்டாக்குவித்து அப்படியழகுபெறப்படைத்த பிரபஞ்சத்தைச் சங்கரித்தற்குப் பிரமாவினிடத்திலே நின்று முருத்திரனையுண்டாக்கி யவனைக்கொண்டு சங்கரிப்பித்து,—தந்திடுஞ்சகத்தினுக்குத் திதிகர்த்தாதானேயாகி. எ-து. தன்னாலுண்டாக்கப்பட்ட பிரபஞ்சத்துக் கிரக்ஷகர்த்தாவுந்தானேயாகி,—வந்திடுந்தோற்றமீறு நிலைமையும்பண்ணுமாயன். எ-து. இப்படிவரப்பட்ட சிருஷ்டிதிதி சங்காரங்களையுஞ் செய்வன் பரமபுருஷோத்தமனென்று பாஞ்சராத்திரிசொல்லுவன் எ-று.

இச்செய்யுள் புருஷோத்தமனே மூன்றுகாரியத்துக்குங் கர்த்தாவென்றுகூறிற்று. ஐந்துராத்திரியில்நூல் செய்கையால் பாஞ்சராத்திரமென்று பெயராயிற்று. அரனையுமாக்குவித்தென்றது பிரமாவின்முகத்திலே அரனைத்தோற்றுவித்தது.

மீனமைகேழனரசிங்கம் வாமனனாய்வென்றி, யானதவிராமர்மூவராயனு யளித்தான்கற்கி, தானையும்வருவனின்ன மென்றவன்சாற்றித்தேவர், கோனுபுநிற்பனென்று கூறுவன்குறிப்பினோடே. (௩)

(இ-ள். மீனுமைகேழனரசிங்கம் வாமனனாய். எ-து. பிரபஞ்சத்தை ரக்ஷிக்கவேண்டிமீனாகிய மாமையாகியும் பன்றியாகிய நாரசிங்கமாகியும் வாமனனாகியும்,—வென்றியாளுத விராமர் மூவராயனாயளித்தான். எ-து. வெற்றிகெடாதபரசிராமனாகியும் பலபத்திராயனாகியும் சீராமனாகியும் கிருஷ்ணனாகிய மிரக்ஷித்தான்,—கற்கிதானாயும் வருவனின்னமென்றவன்சாற்றி. எ-து. மேற்குதிரையாகியும் வந்திரக்ஷிப்பனென்று பாஞ்சராத்திரிசொல்லி,-தேவர்கோனாயு நிற்பனென்று கூறுவன் குறிப்பினோடே. எ-து. இப்படித்தசாவதாரம் பிறக்கச்செய்தேயும் முத்திதேவன் தேவர்களுக்குக் கர்த்தாவுமாயிருப்பனென் றறிவோடுஞ் சொல்லாநிற்பன். எ-று கற்கி பெட்டைக்குதிரையாவனென்றது. குறிப்பினோடே யெனவிழித்துக் கூறியது.

இசசெய்யுள் புருஷோத்தமனது தசாவதாரங்கூறிற்று.

ஏழ்கடற்செலுவிலேற்று மிருங்கிரிமுதுகிலேற்
றுந், தாழ்தலமுழுதுங்கண்டுந் தமனியனுடல்பிளந்
தும், வாழுலகளந்துமன்னாய் மன்னர்க்குமன்னராயும்,
பாழ்படவுழறிப்பாரு நோக்கும்பின் பரியுமாயே. (ச)

(இ-ள்.) ஏழ்கடற்செலுவிலேற்று மிருங்கிரி முதுகிலேற்றுந் தாழ்தல முழுதுங்கண்டுந் தமனிய னுடல்பிளந்தும் வாழுலகளந்தும். எ-து. மச்சரூபமாய்ச் சத்தசமுத்திரங்களையுமோர் செலுவிலே யடக்கியும் அமுதமர்த்தனத்திற் கூர்மரூபமாய் மஹாமேருவை முதுகிலேதாங்கியும் பிரளயத்திலேதாழ்ந்துபோன பூமியைவராகரூபமாய்ப் புகுந்தெடுத்தும் நாரசிங்கரூபமா யிரணியவதைசெய்தும் வாமனரூபமாய்த் திரு

விக்கிரமஞ்செய்தும்,-மன்னாய் மன்னர்க்கு மன்னராயும் பாழ்படவுழறிப்பாருநோக்கும். எ-து. இருபத்தொருகால் க்ஷத்திரியரைச்சங்கரித்து மண்டலநாபியாய்ப் பரசிராமனும் இராமனுயிராவணனை வதைசெய்தும் பலபத்திராமனாய் லோகரக்ஷார்த்தமாயோகத்தினின்றும் வாசுதேவனாய சுரர் மாயைபாழ்படச்சிதறியும், பிரபஞ்சத்தையிரக்ஷிக்கும்,-பின்பரியுமாயே. எ-து. இனிவரும்பிரளயகாலத்துக்குக் குதிரையாய்வந்திரக்ஷிக்குமாயன். எ-று.

இச்செய்யுள் முன்கூறியவவதாரத்துச்செய்தி கூறிற்று. மன்னர்க்குமன்னராயுமென்றது இராமவவதாரமூன்றிலும் பொருந்தாதவிராசாக்களை வென்றவர்களுக் கிராசாவாயும் என்றது. (ச)

பொய்கைவாய்முதலைவாயிற் போதகம்போத மாட்டா, தையனேநாதாவாதி மூலமேயென்றழைப்ப, வுய்யயாம்பணிமாலோல வோலவென்றோடிச் சென்று, வெய்யவாய்முதலை வீட்டிக்கரிக்கும்வீடருளினானே. (ரு)

(இ-ள்.) பொய்கைவாய் முதலைவாயிற் போதகம்போதமாட்டாது. எ-து. பொய்கையிடத்திற்றங்கிய யானையைப்பொய்கையின்கணுண்டாகிய முதலைவாயிலே யகப்பட்டுக்கரையேறமாட்டாமல்,—ஐயனே நாதாவாதிமூலமேயென்றழைப்ப. எ-து. சுவாமியே கர்த்தாவே யாதியேமூலமே யென்றுநொந்து கூப்பிட்டழைப்ப,—உய்யயாம் பணிமாலோலவோல வென்றோடிச்சென்று வெய்யவாய்முதலைவீட்டி. எ-து. யாமீடேறும்படிவணங்கப்பட்ட பரமபுருடன்கிருபைசெய்தோடிச்சென்றுகொடியவாயினையுடைய முதலைவாயினின்றும் விடு

வித்து,—கரிக்கும்வீடருளினனே. எ-து. அந்தயானைக்கு முத லைக்கும் வைகுண்டபதமளித்தருளினன். எ-று. ஓல ஓல. எ-து. விரைவு. கரிக்கும் என்றவும்மையால் முதலைக்குமென்றதாயிற்று.

இச்செய்யுளாதிமூலமே பரமபுருஷனென்பதுகூறிற்று. போதகம்போதமாட்டாது யானைமீறிப்போதமாட்டாது.

அலைகடல்கடைந்தும்வானோர்க் கமுதினையளித் துந்திய, கொலைபுரியசுரர்தம்மைக் கொன்றுலகங்கள் காத்துங், கலைமலிபொருளன்பர்க்குக்கருணையாலுரை த்துமிக்க, தலைமைபினிற்பன்மாய னென்றும்பின்சா ற்றினனே. (சு)

(இ-ள்.) அலைகடல்கடைந்தும் வானோர்க்கமுதினையளி த்தும். எ-து. தேவர்களுக்கு நித்தியத்துவமுண்டாகவே ண்டி மகாமேருமத்தாகவும் வாசுகிநாணாகவும் சமுத்திரத்தி லேயமுதமர்த்தனஞ் செய்து தேவர்களுக்கமுதங்கொடுத் தும்,-தீயகொலைபுரியசுரர்தம்மைக்கொன்றுலகங்கள்காத்தும் எ-து. பிரபஞ்சத்திலே கொடியகொலைத்தொழிலைப் பொருந் தின வசுரரைக்கெடுத்துத் தேவர்கள்முதலாகிய வான்மாக் களையிரக்ஷித்தும்,—கலைமலிபொருளன்பர்க்குக் கருணையாலு ரைத்தும். எ-து. சர்வகலைகளும் பொருந்தினவத்தத்தைத் தனதுகருணையாலே யடியவர்களுக்கருளியும்,-மிக்கதலைமையி னிற் டன் மாயனென்றும் பின்சாற்றினனே. எ-து. இப்படி மிக்ககத்திருத்துவங்குன்றுமனிற்பன் பரமபுருடனென்று சொன்னன் பின்னும் பாஞ்சராத்திரி. எ-று.

இச்செய்யுள் பரமபுருடன் கத்திருத்துவங்கூறிற்று. (சு)

மாயையாயுயிராய்மாயா காரியமாகிமன்னி, மாயையாற்பந்தஞ்செய்து வாங்கிடுமவனலன்றி, மாயைபோகாதென்றெண்ணி மாயனைவணங்கப்பின்னை, மாயைபோம்போனால் , மாயன்வைகுண்டம்வைப்பனன்றே. (எ)

(இ-ள்.) மாயையாயுயிராய் மாயாகாரியமாகிமன்னி. எ-து. பரமபுருடன்பிரபஞ்சசிருஷ்டிகாலத்தில் மாயாசொரூபியுமாய்த் தன்வழிமயக்குமான்மாக்களுமா யவ்வான்மாக்களைப் பந்திக்குந்தத்வ ஜாலங்களுந்தானேயாய் நிலைபெற்று,—மாயையாற் பந்தஞ்செய்து வாங்கிடுமவனலன்றி மாயைபோகாதென்றெண்ணி. எ-து. அம்மாயையாலே யான்மாக்களைப்பந்தித்து மீளவு நீங்குவன் மாயனாகையா லவனலன்றி மாயைநீங்காதென விசாரித்து,—மாயனைவணங்கப்பின்னைமாயைபோம். எ-து. பதிவிரதையைப்போல மற்றொரு தெய்வத்தை நினையாமற் பரமபுருடனையேவணங்கி வழிபாடுசெய்யவே யந்தப்பந்தமாகியமாயை நீங்கும்,—போனான் மாயன் வைகுண்டம் வைப்பனன்றே. எ-து. அம்மாயை நீங்கவே பரமபுருடன்விரைசை யாற்றினிடத்தாகிய நன்னீராலே யான்மாவைச் சுத்தமாக்கி வைகுண்டத்திலே சாரூப்பியமாகவைப்பனென்று பாஞ்சராத்திரி கூறினான். எ-று.

இச்செய்யுள் பரமபுருடனளிக்கு முத்திநிலைமை கூறிற்று. ஆதியென்னுஞ் செய்யுண்முதலிச் செய்யுட்காறும் பாஞ்சராத்திரிமதங் கூறிற்று.

பாஞ்சராத்திரிமத முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—உ௬௬.

பாஞ்சராத்திரி மதமறுதலை.

ஆதிதானுகிலாதிக்கந்த முண்டாகுமந்தக், கோ
திலானிறைவனென்று கூறிடும்வேதம்ஞானச், சோ
தியாய்நின்றானுகிற் றேய்ந்திடான்மாயைஞானத் தீதி
லாவுருவமென்னிற் சேர்ந்திடான்தாதுச்சென்றே. ()

(இ-ள்.) ஆதிதானுகிலாதிக்கந்த முண்டாகும். எ-து. பாஞ்சராத்திரீ நீயுன்கர்த்தாவை யாதியென்று கூறினாய் அங்ஙனமாதியாயி னாதிக்குமுடிவுண்டாய்க் கர்த்தாவுமல்லனாவன் அஃதியாங்ஙனமென்னில்,-அந்தக் கோதிலானிறைவனென்று கூறிடும் வேதம். எ-து. வேதநூலுமாதியுமந்தமு மில்லாதவனே கர்த்தாவென்று சொல்லாநிற்குமாதலால்,—ஞானச் சோதியாய் நின்றானுகிற் றேய்ந்திடான்மாயை. எ-து. ஞானப்பிரகாசமாயு மரூபியாயும் பரிபூரணமாயு நின்றானுயின் மாயையினகப்பட்டு மாயாரூபமாகான். அற்றன்று,—ஞானத்தீதிலாவுருவமென்னில். எ-து, அப்படியெடுத்துக்கொண்டதிருமேனிகளும் குற்றமில்லாத ஞானசொரூபமேயென்னில்,—சேர்ந்திடான் தாதுச்சென்றே. எ-து. அவன் ஞானசொரூபியாயி னந்தஞான ஸ்வரூபத்துக்குத் தாதுக்களுண்டாகா இவனெடுத்துக்கொண்ட வடிவெல்லாந் தாதுக்களுண்டாய்ச் சங்காரப்படுகையாற் கர்த்தாவல்லன். எ-று.

பாஞ்சராத்திரிமதங்கூறி யவனைமுறையானே மறுப்பானெடுத்துக்கொண்டா ரதனுளிச்செய்யுள் ஆதியாயரூபமாகி என்பதனை மறுத்துக்கூறிற்று. (க)

தாதுவானதுவேதென்னிற் சங்கரன்பலிக்குச் செல்லத், தீதிலாக்கோதண்டத்தைத் திறந்தவன்விட்டபோது, போதுவதுதிரமன்றே போந்துமூர்ச்சித்து வீழ்ந்தா, ஞதனுரெழுப்பப்பின்னே நடந்தனன்கிடந்தவன்றான். (௨)

(இ-ள்.) (தாது—கிடந்தவன்.) அவனுக்குத் தாதுக்களுண்டானபடி யெங்ஙனமென்னில் பரமேஸ்வரன் விஷ்ணுவினகந்தையைக் கெடுப்பதுகாரணுத் பிக்ஷாபாத்திரம் வாங்கிப் பிக்ஷைசெய்ய வநேகம்பலிகளாற் பாத்திரநிறையாதாகலானவ்விடத்துப் புருடோத்தமன் கருவத்தாலே யானிதனை நிறைப்பேனென்று நெற்றியினரம்பினைத்திறந்து விடப்புறப்பட்ட திரத்தமல்லவோ அந்தவிரத்தம் போதாமையாலே விஷ்ணுமூர்ச்சித்துக் கிடப்பப் பிரமாதிகள் தோத்திரஞ்செய்யப் பரமேசுவரனருள்செய் தெழுப்பவெழுந்திருந்து பரமேசுவரன்பிறகேநடந்துசென்றான் திருப்பாற்கடலிலே பள்ளிகொண்ட மூர்த்தியாகையாற்றாதுக்கள் பரமேஸ்வரனுலுண்டென்றறிவாயாக. எ-று.

இச்செய்யுள் புருஷோத்தமனுக்குத்தாதுகள் பரமேஸ்வரனாலுண்டாயினவென்று கூறிற்று. இதனாற்சொல்லப்பட்டது பரமேசுவரன்பிக்ஷைக்கெழுந்தருள விஷ்ணுவினம்ஸமாகிய விண்டுசேனன்துவாரத்தேநின்றுதகையப் பரமேஸ்வரர் பிருதத்தியரிற்காலவேகரென்கிறபூதர் அந்தவிண்டுசேனனைப்பிடித்தடித்துத் திரிசூலத்தே ஏற்றினா ரந்தவாரவாரத்திலே விஷ்ணுவெழுந்திருந் தீசுவரனைநமஸ்கரித்து இலாடத்தைத்திறந்து கபாலம் பூரணமாக்கக்கடவேனென் றுதி

ரம்விட்டான் விட்டவுதிரம் பாதிக் கபாலநிறைக்கப்பெற்ற தில்லை பின்பு மூர்ச்சித்துவிழ்ந்தான் ஈசுவரனிவன் பத்தி கண்டுபிரியப்பட்டுப் பலங்கொடுக்க வெழுந்திருந்து பின்னே சென்றுனென்பது கருத்து. (உ)

இச்சையாலுருவங்கொள்வ னரியெனிலிகழ்வே ள்விக்க, ணெச்சனுபுண்ணப்புக்கங் கிருந்தவன்றீசனு லே, யச்சமார்தலையறுப்புண் டான்றலையாக்கிக்கொ ள்ளா, னச்சினூர்போற்றநாத னாரணன்றலைகொடுத் தான். (௩)

(இ-ள்.) இச்சையாலுருவங்கொள்வனரியெனில். எ-து புருஷோத்தமன் சுவேச்சையாலே யுருவெடுத்துக்கொண்டா னென்னில்,—இகழ்வேள்விக்க ணெச்சனுயுண்ணப்புக்கங் கிருந்தவன்றீசனுலே யச்சமார்தலையறுப்புண்டான்றலையா க்கிக்கொள்ளான். எ-து. பரமேசுவரியையிகழப்பட்டவேள் வியிடத்தே எக்கியமூர்த்தியா யவிசுகொள்ளவிருந்தஞான்று வீரபத்திரதேவராலே யச்சமுண்டாம்படி தலையறுப்ப வந் தத்தலையிழந்தவிடத்துத் தலையுண்டாக்கிக் கொள்ளானுன தென்,—நச்சினூர்போற்றநாத னாரணன்றலைகொடுத்தான். எ-து. பக்தஜநமாகியதேவர்கடுதிப்ப நாரணனுக்குமீளவும் பரமேசுவரனே தலையையுண்டாக்கினுனதலாற் சுவேச்சை யாலுருவெடுத்தானென்று சொல்வாயல்லை. எ-று.

இச்செய்யுள் சுவேச்சையா லுருவெடுத்தானென்பதனை மறுத்துக்கூறிற்று. இகழ்வேள்வி பொல்லாங்குபட்டவேள்வி.

விஷ்ணுவிச்சையா லுருவங்கொள்வனுகில் பிரமாவும் விஷ்ணுவும் பரஸ்பரமொருவரையொருவர் விழுங்கின

போது விஷ்ணுவுந்திக்கமலத்திலே பிரமாதோன்றினாரென்றும் விஷ்ணுவைப் பிரமாவிழுங்கித் துவாரங்களையடைத்திருந்தபோது அரியானவர் பிரமாவின்பாதத்தாற் பிறந்தாரல்லது சுவேச்சையாற் பிறக்கக்கண்டதில்லை அதனால் தொஜனென்னும் பெயராயிற்றென்றறிக. வீரபத்திரதேவநாயனாரால் திருமால்முதலிய தேவர்கள் யாகத்திலாக்கினைப் பட்டார்களென்பதற்குப் பிரமாணம் "தக்கனற்றலையுமெச்சனற்றலையுந் தாமரைநான்முகன்றலையு, மொக்கவுண்டுருளவொண்டிருப்புருவநெறித்தருளிய வுருத்திரனே, யக்கணிபுலித்தோலாடைமேலாடை யாடப்பொன்னம்பலத்தாடுஞ், சொக்கனேயெவர்க்குந் தொடர்வரியாயைத் தொண்டனேன் தொடருமாதொடரே." "சாடியவேள்வி சரிந்திடத்தேவர்க, ளோடியவாபாடியுந்தீபற, வுருத்திரநாதனுக்குந்தீபற." "ஆவாதிருமாலவிர்ப்பாகங்கொண்டன்று - சாவாதிருந்தானென்றுந்தீபற - சதுர்முகன்றாதையென்றுந்தீபற." "வெய்யவனங்கி விழுங்கத்திரட்டிய கையைத்தறித்தானென்றுந்தீபற- கலங்கிற்றுவேள்வியென்றுந்தீபற." "புரந்தரனாரொருபூங்குயிலாகி - மரந்தனிலேறினாருந்தீபற - வானவர்கோனென்றேயுந்தீபற." "வெஞ்சினவேள்வி வியாத்திரனார்தலை. துஞ்சினவாபாடியுந்தீபற - தொடர்ந்த பிறப்பறவுந்தீபற." "ஆட்டின்றலையை விதிக்குத்தலையாகக் - கூட்டியவாபாடியுந்தீபற - கொங்கைகுழங்கநின்றுந்தீபற." "உண்ணப்புகுந்த பகனொளித்தோடாமே - கண்ணைப்பறித்தவாறுந்தீபற - கருக்கெடநாமெலாமுந்தீபற." "நாமகணாசி சிரம்பிரமன்படச் - சோமன்முகநெரித்துந்தீபற - தொல்லைவினைகெடவுந்தீபற." "நான்மறையோனுமகத்தியமான்பட - போம்வழிதேடுமாறு

ந்தீபற - புரந்தரன்வேள்வியிலுந்தீபற." "சூரியனார்தொ ண்டைவாயினிற்பற்களை - வாரிநெரித்தவாறுந்தீபற - மய ங்கிற்றுவேள்வியென்றுந்தீபற. "தக்கனார்ன்றே தலையிழந் தார்தக்கன் - மக்களைச்சூழ்ந்துநின்றுந்தீபற - மடிந்ததுவேள் வியென்றுந்தீபற." என்னுந்திருவாக்குகளானுமறிக. "தக்கன் வெங்கதிரோன் சலந்தரன் பிரமன் சந்திரனிந்திரனெச்சன், மிக்க நஞ்சரக்கன் புரங்கரிகருடன் மறலிவே ளிவர்மிகை செகுத்தோன், திக்கெலாநிறைந்த புகழ்த்திருவீழி மிழலை யான் றிருவடிநிழற்கீழ்ப், புக்கிருந்தவர்தம் பொன்னடிக்க டிமை விடுவனோ பூண்டுகொண்டேனே." யாகத்திலேயாக்கி னைப்பட்டபேரல்லாமன் மற்றுஞ் சிவனாலேயாக்கினைப்பட்ட பேரையுமித்திருவிசைப்பாவி லறிந்துகொள்க. தக்ஷப்பிரஜா பதியானவன் பரமேஸ்வரனே யுயிர்க்குயிராயிருந்து சகல தேவர்கட்குந்தேவனாகி யொப்புயரமில்லாத சேகர கர்த்தா வென்று பிரமதேவராகிய பிதாவினாலே யுபதேசிக்கப்பட்டுச் சிவனே மேலானகடவுளென்று நிச்சயம்பண்ணியறிந்து பின்புமஹாதேவனைநோக்கி யருந்தபசுபண்ணிச் சகலதேவர் களுந் தன்சொற்படிகேட்டு வணங்கும்படி மிகுந்தவரம்பெற் றிருந்தும் யாகத்துக்குக்கர்த்தனுமா யாவர்க்குமேலான பரம சிவனையன்றிப் பண்ணுநிற்கின்ற யாகமாகையினாலே 'இகழ் வேள்வி' என்றாரென்க. இதற்குப்பிரமாணம் "தேவரின் முதல்வராகிச் சிற்குணத்தலைவராகி, மூவரினுயர்ந்தோராகி முடிவிலாவொருவராகி, யோவறவுயிர்கடோறு முயிரென வுறைவோராகி, மேவினர்தம்மைத்தேற விளம்புதிமேலோ யென்றான்," "என்றுதன்மைந்தனிவ்வா றியம்பலுமலரோன் கேளா, நன்றிது மொழிவன்கேட்டி நாரணன்றானுநானு,

மன்றமரியற்றுமெல்லை யழலெனவெழுந்துவானிற், சென்ற தோர் சிவனேயார்க்கு மேலவன்றெளிநீயென்றான்." "செங் கண்மாறன்னையென்னைத் திண்டிறன்மொய்ம்பினல்கி, யங்க ண்மாஞாலங்காப்பு மளிப்பதுமுதவியாழு, முங்கள்பாலிருத் துமென்றே யுயிருணின் றியற்றுநின்று, னெங்களாண்முடியுஞ் செய்கை யாவையுமில்லைகண்டாய்." "கானுறுபுலித்தோலா டைக் கண்ணுதற் கடவுட்கன்ப, ரானவரென்றுமன்னார்க் கடி த்தொழில் புரிந்துவர்ழும், வானவரென்றுமெம்மை வழுத்தி னர்க்கருள்வோமல்லா, லேனையர்தம்மைத்தெய்வென றெண் ணியேயிருத்தும்யாமே." "பதியானபாசந்தன்னிற் பட்டு ழல் பசுநாமென்றே, விதியோடுமறைகள்கூறு மெய்ம்மை யைத்தெளியவேண்டி, லிதுவெனவுரைப்பன்யாங்க ளிவ்வா சியற்றவிச, னதிர்கழலருச்சித்தேத்து மாலயம் பலவுங்கா ண்டி." "அவனருளன்றிமுத்தி யடைந்தனரில்லையல்லா, அவ னருளன்றிவாழு மமரருமியாருமில்லை, யவனருளெய்திலெய் தாவரும் பொருளில்லையாணே, யவனலதிறைவனில்லை யவனை நீயடைதியென்றான்." என்னும் கந்தபுராணம் தக்ஷகாண்டத் திற்காண்க. என்றார் ஞானப்பிரகாசர்.

நூலினையுரைத்துவேத நூலினைநுவலும்வண்ண,
மாலருள்செய்தானென்றாய் மறைநீதி யுலகியற்கை,
சாலவேதெரியாதாகிக் கிடந்தநாள் சகத்தியார்க்கு,
மாலின்கீழிருந்துவேத மருளினானறைந்தானாலே.(௪)

(இ-ள்.) நூலினையுரைத்துவேத நூலினைநுவலும்வண் ணமாலருள்செய்தானென்றாய். எ-து. புருஷோத்தமன் வே தத்தையு மருளிச்செய்து அந்தவேதநூலையாராயும் பொருள்

கிளையுமருளிச் செய்தானென்றுகூறினாய்,—மறைநீதியுலகியற் கைசாலவேதெரியாதாகிக்கிடந்தநாள் சகத்தியார்க்குமாலின் கீழிருந்து வேதமருளினானைந்தானாலே. எ-து. வேதநூலொழுங்குமுலகியர்கையுந்தெரியாதாகித் தலைமயங்கிக்கிடப்பப் பிரபஞ்சத்துள்ளோர் யாவர்க்குந்தெரியவேண்டி வடவிருக்ஷத்தின்கீழிருந்து வேதநூலையுமருளிச்செய்து தெளியவேண்டி யாகமநூலுமருளினானதினாற் பரமேஸ்வரனாலேயுண்டாக்கப்பட்டதுகாண் வேதாகமபுராணம். எ-று.

இச்செய்யுள் புருஷோத்தமன் வேதமருளினானென்பதனைமறுத்துக்கூறிற்று. நூலினையுரைத்தவேதநூலயனுவலும். எ-து. சாத்திரத்திற்சொல்லியவந்தவேதநூலைப் பிரமாவோதும்படிபுருடோத்தமனருளிச்செய்தான் எனவும்பாடம்.(௬)

வடவிருக்ஷத்தின்கீழிருந்து பரமசிவம் வேதமோதியதற்குப்பிரமாணம் "நீதியைநிறைவைமறைநான்குடன்,·ஞோதியையொருவர்க்குமறியொணாச், சோதியைச்சுடர்ச்செம்பொன்னினம்பலத், தாதியையடியேன் மறந்துய்வனோ." என்னுந்தேவாரத்தும் "நன்றாகநால்வற்குநான்மறையினுட்பொருளை, யன்றாலின்கீழிருந்தங் கறமுரைத்தான்காணேடி, யன்றாலின்கீழிருந்தங்கறமுரைத்தானாயிடினுங், கொன்றான்காண்புரமூன்றுங் கூட்டோடேசாழலோ." என்னுந்திருவாசகத்தும் "வேதமேமுதலாயுள்ள வியன்கலையனைத்துந்தொன்னாளோதினானவனே யெங்கட் குரைத்திடவுணர்ந்தாமன்றே, யீது நீயவற்றிற்காண்டியாமுமொன்றாகக்கொண்டாய், பேதையோபெரிதுமென்னப் பிதாமகனினையசொற்றான்." என்னுமுபதேசப்படலத்துங் காண்க.

அயன்றனைப்பயந்தானென்று யரியயன்சிரஞ்
சேதிக்கப், பயந்திடான்றலைமாறனும்படைத்திடான்
சிரத்தைக்கிள்ளுஞ், சயந்தருமரனைத்தந்தா னயனெ
ன்கைதப்பேயன்றே, தியங்கிடாதுணராயெல்லாஞ்
சிவன்செயலென்றுதேர்ந்தே.

(இ-ள்.) அயன்றனைப்பயந்தானென்றுயரி. எ-து. பிர மாவைப் புருஷோத்தமன் படைத்தானென்று கூறினாய்,— அயன் சிரஞ்சேதிக்கப் பயந்திடான்றலைமாறனும் படைத்தி டான். எ-து. பிரமாவைப் புருஷோத்தமன் படைத்தானெ ன்றுகூறி னஞ்சுமுகமுடையனுதலாலே நாமும் பரமேசுவர னுக்கொப்போமென்று கருவித்தவிடத்துப் பிரமாவினுடைய நடுத்தலையைப் பரமேசுவரனறுக்கக்கண்டு நின்றபிதாவாகிய விஷ்ணுபயப்படானாய்ப் பிரமாவின்றலையை யுண்டாக்கமாட் டுகிலன்,—சிரத்தைக்கிள்ளுஞ் சயந்தருமரனைத்தந்தானய னென்கை தப்பேயன்றே. எ-து. பிரமாவின்றலையைக்கிள் ளிப்போடத்தக்க வெற்றியையுண்டாக்கப்பட்ட பரமேஸ்வ ரன் கர்த்தாவல்லவாய்த் தலையிழந்த பிரமாபரமேசுவரனைப் படைத்தானென்பது தவறல்லவோ,—தியங்கிடாதுணரா யெல்லாஞ் சிவன்செயலென்றுதேர்ந்தே. எ-து. ஆதலாலெல் லாம் பரமேஸ்வரன் செயலேயென்று விசாரித்து மயங்கா மலறிவாயாக வதற்குக்காரண மேலேசொல்லாநின்றேம். எ-று.

இச்செய்யுள் புருஷோத்தமன் பிரமாவைப்படைத்தா னென்பதனையும் பிரமாவுருத்திரனைப் படைத்தானென்பதனை யும் மறுத்துக் கூறிற்று. (ரு)

பிரமாவானவன் சிவனைமறந்தொருகாலத்திலே தம்மை மதித்தகங்கரித்தபடியினாலே சிருஷ்டிவாராமற் பின்பு சிவனை

நோக்கித்தவம்பண்ண வாகாசத்திலே யசரீரமாய்நின்று புத்திகொடுத்தருளப்பின்பு பூதங்களைப்படைத்து மற்றுள்ளவை படைக்கக் கைவராமன்மயங்கிப் பின்பு ருத்திரத்தானமாகிய விலாடத்தானத்திலே சிவனைத்தியானம்பண்ணி வழிபடவவ்விடத்திலே யர்த்தநாரீசுரமாகச் சுவாமி தோன்றக்கண்டு பிரமன் தோத்திரம்பண்ணச் சிருஷ்டிக்கிரமஞ்சர்வேசுரன்பிரஸ்தாபத்தாற்பெற்றுத் தக்ஷப்பிரஜாபதிகளையுந் தேவர்கள் மானுடர் விலங்கு பறவைகளாதியான வெல்லாப் பிராணிகளையுஞ் சிருஷ்டித்தானென்பதுங் கண்டுகொள்க. "மண்டியகாரியத்தான் மன்னுகாரியஞ்செய் கர்த்தா, வுண்டவனரனென்றோதவுறு பிரமாணமென்றோ, கண்டிடிற் பதியென்சொல்லுக் காவலைவில்க்கலாலே, முண்டக முந்திபூத்த முகுந்தனே கடவுளியார்க்கும்." "அரிநரசிங்கமாதி யருள்செய்தானென நாபி, வருமொருகமலத்தைந்து வதனங்கொளயன்பிறந்தான், பொருவிடைக்கொடியோனன்றான் புருவத்ினடுவெழுந்தா, னரியராசதத்தை வேதனுறுமரன்றாமதத்தை" "சாற்றுசத்துவத்தையாமேதரித்தன முலகமெல்லாந், தோற்றுவித்தழித்துக்காக்குந்தொழிலெமதாதலாலே, போற்றுமூவுலகுமெம்மைப் புங்கவர்தங்கட்கெல்லா, மேற்றம்யாமென்றானத்தாலிறையரியென்னலாமே" "மறுவறுதவத்தின்மிக்க மாதவமுனிவகங்கை, சிறுபிறைமௌலிவைத்த சிவன்கணத்தலைமைபூண்டோன், றெறுநரசிங்கந்தன்னைச் சிதைத்துரித்திடவன்றானைக், குறுகிவீழ்ந்தெழுந்துமாயன் கூறினனவற்றைக்கேண்மோ" "எப்பொழுதளியவென்பா லிசையுமஞ்ஞானம் புந்திக், கப்பொழுதொளிகொணீவந் தகந்தைதீர்த்தருள்வாயன்றே, செப்பினனின்னுங்கேட்டி சிவனிடப்புறத்தின்யானுந், தப்பறவுதித்தேன்றென்பாற் சதுமுகப்பிரமன்வந்தான்

"ஓங்குமுச்சுடருமன்ற ஞெளிகொண்மூவிழியிற்றேன்றும், தீங்கினன்மறையுமெம்மான்றிருமுகமதனிற்றேன்றும், பாங்கின்முத்தொழிலு மெந்தைபாலித்ததவன்றன்மேனி, விங்கியதூலஞ்சூக்கமெய்ப்பரமென்னமூன்றும்" "என்னனேயவர்கட்காட்சிக்கியைந்திடுந் தூலசூக்கந், தன்னிகர்யோகிகாண்பன்றற்பரனருளினலே, மன்னியபாசந்தீர்க்குமற்றையபசுக்கட்கெல்லாம், பன்னுதற்கரியவீசன் பதிபசுவெம்மனேர்கள்" "என்றறிமொழிதலானுமிந்திரன் வேதன்மாயன், வென்றிகொளமரர்யாருமெலிய நிக்கிரகமேசெய்தே, பொன்றிடவழிதலாலேயானெனப்புகறலானுங், கொன்றுநின்றவனுன்முத்திகூடிடுமாதலானும்" (வே) "அரனிறையுலகினுக்கறிவின்கொண்கனே, சுரர்பணியவனதுசொரூபலக்கணம், பரவுயிருணர்வொடுபாசபோதமும், விரவுறுதெங்கணுமேவுமுண்மையே" என்னுந் தசகாரியத்துமறிக என்ருர் ஞானப்பிரகாசர்.

சீவன்கள்சநநம்போலச் சிலர்வயிற்றுதித்தமாலைத், தேவென்றேயுலகங்காக்கச் சுவேச்சையால்சநித்தானென்பீர், பூவன்பின்படைக்கமாட்டாதரனடிபோற்றவேதக், கோவந்துமுகத்திற்றேன்றிச்சிருட்டியைக்கொடுத்தல்கூறும். (சு)

(இ-ள்.) சீவன்கள்சநநம்போலச் சிலர்வயிற்றுதித்தமாலைத்தேவென்றேயுலகங்காக்கச்சுவேச்சையால் சநித்தானென்பீர். எ-து. ஆன்மாக்களது பிறப்புப்போலே யோனிசாதனை புருஷோத்தமனைப் பிரபஞ்சத்தையிரக்ஷிக்கவேண்டிச் சுயேச்சையாலேயுருவெடுத்துக்கொண்டானென்று மவனிடத்திலே பிரமாதோன்றிப் பிரமாவாலேபிரபஞ்சந்தோன்றித்

தென்றுங் கூறுவீர், — பூவன்பின்படைக்கமாட்டாதரீனடி போற்றவேதக்கோவந்து முகத்திற்றேன்றிச் சிருட்டியைக் கொடுத்தல்கூறும். எ-து. சர்வசங்காரஞ்செய்து பரமேசுவ ரன்மீளவும் பிரமாமுதலானகாரணேசுவரரை யுண்டாக்கிப் பிரபஞ்சசிருஷ்டிசெய்விக்கப் பிரமாவும்பிரபஞ்சத்தைச்சிரு ஷ்டிக்கவறியாமல் மயங்கிப் பரமேசுவரனை நோக்கித்துதிக் கவே கர்த்தாவானபரமேசுவரன் பஞ்சகிருத்திய நடப்பதிகா ரணத் பிரமாவினிலாடத்திலேதோன்றிப்பிரமாவுக்குச்சிருஷ் டியையுண்டாக்கிக்கொடுத்தலைச் சர்வபுராணங்களுஞ் சொல் லுமாதலால் பரமேசுவரன் பிரமாவாலே தோற்றப்பட்டவ னல்லவென்றறிவாயாக. எ-று.

இச்செய்யுள் பிரமாவினிடத்திலே பரமேசுவான்றேன் றினனென்பதற்குக்காரணங்காட்டி மறுத்துக்கூறியது. (கூ)

நாரணனயனையீன்றுமய னுநாரணனையீன்றுங்
காரணமொருவருக்கங்கொருவர்தாமிருவருக்கும்
வாரணமுரித்தவள்ளல்காரணனென்றுமன்ற
வாரணமுரைக்கும்பக்கத்தவர்களுமறைந்தாரன்றே.

(இ-ள்.) நாரணனயனையீன்றும். எ-து. நாரணன்பிர மாவை யுண்டாக்கியும், —அயனுநாரணனையீன்றும், எ-து. பிரமா நாரணனை யுண்டாக்கியும்,—காரணமொருவருக்கங் கொருவர்தாம். எ-து. ஒருவருக்கொருவர்காரணமாய்க் காரிய ப்பட்டுவருவர்,—இருவருக்கும் வாரணமுரித்தவள்ளல்கார ணனென்றுமன்றவாரணமுரைக்கும். எ-து. அப்படியொரு வருக்கொருவர் காரியப்பட்டு வருவதற்குமுதற்காரணமாவா னையையுரித்துப்போர்த்த பரமேசுவரனென்றேதெரியவே தஞ் சொல்லாநிற்கும், —பக்கத்தவர்களுமறைந்தாரன்றே.

எ-து. பரமேசுவரன் காரணமாகையாலே விஷ்ணுவலப்பாகமும் பிரமாவிடப்பாகமுமாகவடங்குவார்களநாதியே. எ-று.

இச்செய்யுள் பரமேசுவரன் காரணமாகப் பிரமாவிஷ்ணுகாரியப்படுவார்களென்பதுகூறிற்று. ஆரணமுரைக்கும் பக்கத்தவர்களுமறைந்தார். எ-து. நிச்சயம். நான்குவேதமாகிய வைதிகநூலாராய்வோருஞ்சொல்லாநின்றார்என்க. (எ)

அழிப்பரியேவலென்று யரிதனையழிக்குமன்றங்
கழிப்பதுதவிர்க்கமாட்டா னங்கமுமழித்தேபூண்டா
னழிப்பரியேவலென்றங் கறைந்ததுமழிந்ததன்றே
வழித்திடுமரனேயாக்க நோக்கமுமாக்குவானே. (அ)

(இ-ள்.) அழிப்பரியேவலென்றாய். எ-து. சங்காரமும் புருஷோத்தமனுக்கினையென்று யப்படியாயின், — அரிதனையழிக்குமன்றங்கழிப்பதுதவிர்க்கமாட்டான். எ-து. சர்வசங்காரத்தைப்பிரமவிஷ்ணுக்கள் முதலாகச்சங்காரப்பட விஷ்ணு தன்மேல்வராமல்நீக்கிக்கொள்ளமாட்டான், அஃதன்றியும், — அங்கமுமழித்தேபூண்டான். எ-து. பிரமவிஷ்ணுக்களைச்சங்கரித்த வவதாரங்களின் மீன்சேல்பன்றிக்கோடு சிங்கப்பல் ஆமையோடு கொக்கிறகு அன்னத்தூவி இவைமுதலியனவணிகையாற் புருஷோத்தமனுக்கினையாற் சங்கரித்ததன்றித் தான் கர்த்தாவாய்ச் சங்கரித்தவனும், — அழிப்பரியேவலென்றங் கறைந்ததுமழிந்ததன்றே. எ-து. ஆதலாற்சங்காரமும் விஷ்ணுவினுடையவாக்கினையென்று கூறியவதுவுமழிந்ததாம், — அழித்திடுமரனேயாக்கநோக்கமுமாக்குவானே. எ-து. சங்கரிப்பிப்பதும் பரமேசுவரனேயாகையாற் சிருட்டி திதிகளுமவனாலேயுண்டாமென்றறிவாயாக. எ-று.

இச்செய்யுள்சங்கரிப்பவனே கர்த்தாவென்பதுகூறிற்று.

வானங்கீழ்மண்ணுமெல்லா மாயனேகாப்பா னென்றாய், தானஞ்சுஞ்சலந்தரன்றன் னுடல்கீண்ட சக்கரத்தை, யானைஞ்சுமாடுவான்பாற் பெற்றுலக ளித்தவார்த்தை, தானெங்குமாகுமெல்லாஞ் சங்க ரன்காப்பேயாமே. (கூ)

(இ-ள்.)வானங்கீழ்மண்ணுமெல்லாமாயனேகாப்பானென்றாய்.எ-து. ஆகாசமுதற்கீழ்ப்பிருதிவியீருகவுள்ளபிரபஞ்சமெல்லாம் புருஷோத்தமனேரக்ஷிப்பனென்று கூறினாய்,—தானஞ்சுஞ்சலந்தரன் றன்னுடல் கீண்டசக்கரத்தையானைஞ்சுமாடுவான்பாற்பெற்றுலகளித்தவார்த்தை தானெங்குமாகும். எ-து. சலந்தரனென்னுமசுரனுக்குவிஷ்ணுதான் பயப்பட்டுப்பரமேசுவரனை நோக்கித்தவஞ்செய்ய வந்தத்தவசு செய்கிறவிஷ்ணுவைத் தவத்தைக்கெடுப்பதாக வந்த சலந்தரனைச் சக்கரத்தாலேபிளந்துபோடப்பரமேசுவரனிடத்திலந்தச்சக்கரத்தைப்பெறவேண்டிப் பரமேசுவரனை நெடுங்காலமர்ச்சித்து மவனநுக்கிரகஞ்செய்யாமற்பின்பு விஷ்ணுகண்ணையிடந்துமலராகவர்ச்சிக்கப் பரமேசுவரனநுக்கிரகஞ்செய்து சக்கரங்கொடுப்ப வதனைக்கொண்டு மாலி சுமாலிமாலியவான் முதலாகிய வசுரர் செயமுடித்துப் பிரபஞ்சத்தைரக்ஷித்தானென்னும் புராணம் பிரமாவாலே சொல்லப்பட்டுப்பிரபஞ்சமெங்கு முண்டாயதாகையால்,—எல்லாஞ்சங்கரன் காப்பேயாமே.எ-து. பிரபஞ்சத்தை விஷ்ணுவாலே ரக்ஷிக்கிறது பரமேசுவரன் ரக்ஷையென்றறிவாயாக. எ-று. ஆனைஞ்சுமாடுதல் பஞ்சகௌவியம். வானங்கீழ்மண் சொர்க்கபாதாளபூமி.

இச்செய்யுள் புருஷோத்தமன் ரக்ஷையும் பரமேஸ்வரன தாக்கினை எனக்கூறிற்று. (கூ)

விஷ்ணுசக்கரம் பெற்றாரென்பதற்கு பி-ம். "சலமுடையசலந்தரன் றனுடறடிந்தநல்லாழி, நலமுடையநாரணற்கங் கருளுமது வென்னேடி, நலமுடைய நாரணன்றனயனமிடந்தரனடிக்கீ, ழலராகவிடவாழியருளினன்காண்சாழலோ." என்னுந்திருவாசகத்தானறிக என்றார் ஞானப்பிரகாசர்.

மாலினார்சேலினாராய்வாரிகளடக்கிக்கொண்டன்
றாலியாவுலகமெல்லாமழிப்பவனானேயென்னச்
சேலினார்தனைப்பிடித்துச்செலுவினையிடந்துகண்ணைச்
சூலியாமேலணிந்தான்சூலிதானாகுமன்றே. (கO)

(இ-ள்.) மாலினார் சேலினாராய் வாரிகளடக்கிக்கொண்டன் றாலியா வுலகமெல்லாமழிப்பவனானேயென்ன. எ-து. பிரளயகாலத்திலே பிரபஞ்சத்தை ரக்ஷிக்கவேண்டி மச்சவடிவைக்கொண்டு சத்தசமுத்திரங்களையுமொருசெலுவிலேயடக்கின ஞான்றுநாமாதிகாரமென்னுமல் கருவித்துப் பிரபஞ்சத்துக்குச் சங்காரகர்த்தாவும் நானே யென்றுசொல்ல,—சேலினார்தனைப் பிடித்துச் செலுவினையிடந்துகண்ணைச் சூலியாமேலணிந்தான் சூலிதானாகுமன்றே. எ-து. விஷ்ணுவின் கருவத்தை யடக்கவேண்டி யந்தமச்சத்தைப்பிடித்துச் செலுவினையுங்கண்ணினையுமிடந்து திரிசூலத்தின்மேலே யணியாக வணிந்தான் சூல்பாணியாகிய பரமேசுவரன்றானும். எ-று.

இச்செய்யுள் மச்சரூபத்தைச்சங்கரித்தது கூறிற்று சூலிக்கை கண்ணைப்பிடுங்குதல். (கா)

ஆமையாய்மேருத்தாங்கியடைகலாய்க்கிடந்த
போது, நாமெனுவுலகாதாரநாதனென்றகந்தைபண்
ண, வாமெனாரன்றுமென்னாரமரருமரனார்பார்த்துத்,
தாமனாளாமையாரைத்தகர்த்தோடுதரித்தாரன்றே.

(இ-ள்.) ஆமையாய்மேருத்தாங்கியடைகலாய்க் கிடந்த போதுநாமெனுவுலகாதாரநாதனென்றகந்தைபண்ண. எ-து. ஒருகாலத்துப் பிரளயசங்காரம் வந்தவிடத்துப் பிரபஞ்சத்துக்காதாரமாகிய மாமேருச்சலித்தலி னவ்விடத்துப் புருஷோத்தமன் கூர்மரூபமாய்மாமேருவைத்தாங்கி யாதாரசிலைபோற்கிடந்து பிரபஞ்சத்துக்காதாரமு மதற்குக்கர்த்தாவுநாமேயென்றகங்கரித்தவிடத்து, — ஆமெனாரன்றுமென்னாரமரருமரனார்பார்த்துத் தாமனாளாமையாரைத் தகர்த்தோடுதரித்தாரன்றே. எ-து. விஷ்ணுவின் கருவத்தைப்பார்த்தருளிக் கர்த்தாவாமென்று மல்லவென்றுஞ்சொல்லா ரந்தநாளிலே யாமையைத்தகர்த்தந்தவோட்டை யென்புமாலையோடணிந்தார் தேவரூபமுமாயல்லவுமாகிய பரமேசுவரனேயாதலாலிவனே கர்த்தாவென்றறிவாயாக. எ-று.

இச்செய்யுள் கூர்மரூபத்தைச் சங்கரித்தது கூறிற்று. ஆமையாயென்பது அமிர்தங்கடைகிறபொழுது மேருவைத்தாங்கியடைகல்லாய்க்கிடந்த பலத்தாலே நாமேயாதாரமென்று கெருவித்தகதைக்குமாம். ஆமெனாரன்றுமென்னாரமரருமரனார் பார்த்து எ-து. தேவர்களுமா மன்றென்று சொன்னார்களில்லையரனும் பார்த்தருளி எனப்பொருளுரைப்பினுமாம். (கக)

எழுதலமிடந்துபன்றியாயிருங்கொம்பிலேற்றுத்,
தொழுதுலகிறைஞ்சநின்றசோதிநானென்றபோதன்,
றழுதலமந்துவிழவருங்கோடுபறித்தணிந்தான்,
கழுதலம்வந்துகாட்டிலாடிடுங்கடவுளன்றே. (கஉ)

(இ-ள்.) எழுதலமிடந்துபன்றி யாயிருங்கொம்பிலேற்றுத்தொழுதுலகிறைஞ்சநின்ற சோதிநானென்றபோது. எ-து. ஒருகாலத்திகாந்தப்பிரளையமாய் விஷ்ணுவராகமூர்த்தியாய் அதல விதல சுதல நிதல தராதல இரசாதல மகாதலமென்னப்பட்ட வேழுபூமிகளையுங்கீண்டு பெரியகொம்பிலேயேற்றுக்கொண்டுநின்ற பராக்கிரமத்தினாலே பிரபஞ்சத்தாரால் வணங்கி வழிபாடுசெய்தற்கு விடுபேறாய்நின்றகர்த்தாயானல்லது வேறில்லையென்று கர்விக்க,—அன்றழுதலமந்துவிழவருங்கோடுபறித்தணிந்தான் கழுதலம்வந்து காட்டிலாடிடுங்கடவுளன்றே. எ-து. வராகமூர்த்திகருவித்தவப்பொழுதே சோகத்தினாற்றுக்கித்துப்பூமியிலேவிழும்படி யப்பன்றிக்கோட்டைப்பறித்தணியாகவணிந்துகொண்டான் பேயாடிடுங்காட்டிலாடலைவிரும்பினகர்த்தா. எ-று.

இச்செய்யுள் வராகமூர்த்தியைச்சங்கரித்ததுகூறிற்று. அலமந்து பிரமித்து. கழுதலம்வந்துபெய் உழன்று. (கஉ)

இங்கடாவுளனோமாலென் றிரணியன்றானையெ
ற்ற, விங்கடாமோதரன்றானொருநரசிங்கமாகி, யெங்கி
டாபோவதென்ன வுடல்பிளந்திறையானென்ன, வங்
கடாசிம்புளாகியெடுத்தடர்த்தானரன்றான். (கங)

(இ-ள்.) இங்கடாவுளனோமாலென்றிரணியன்றானையெற்றவுங்கடாமோதரன்றானொரு நரசிங்கமாகி யெங்கடா

போவதென்னுவுடல்பிளந்திறையானென்ன. எ-து. ஒருகாலத்திலே யிரணியனாகியவசுர னிவ்விடத்திலுங்கள் புருஷோத்தமனுளனோவென்றுதூணைத்தட்டிக்காட்ட வுங்கள்தாமோதரனாகிய புருஷோத்தமனந்தத்தூணிலே நாரசிங்கரூபமாகித்தோன்றி இரணியனை யினியெங்கேபோவாயென்றுபிடித்துடலைப்பிளந்து போடுதலாலுண்டானகருவத்தாலே பிரபஞ்சத்துக்கு நாமேகர்த்தாவென்ன,—அங்கடாசிம்புளாகி யெடுத்தடர்த்தானரன்றான். எ-து. அவ்விடத்துச் சிம்புளென்னும் வடிவைக்கொண்டு நாரசிங்கத்தைச்சங்கரித்துத் தோலையாசனமாகக்கொண்டான். பரமேஸ்வரன். எ-று.

இச்செய்யுள் நாரசிங்கத்தைச்சங்கரித்தல் கூறிற்று.(கரு)

தானமென்றிரந்துசெல்லத்தனக்குமூவடிகொடுப்ப, வானமுமளந்துகொண்டுமாபலிதன்னைப்பின்னை, யீனமாஞ்சிறையிலிட்டானிறையன்றென்றீந்தோர்தங்கட், கூனஞ்செய்திடுவோர்தாங்களுத்தமரல்லவாகும்.

(இ-ள்.) தானமென்றிரந்துசெல்லத் தனக்குமூவடிகொடுப்ப. எ-து ஒருகாலத்திலே புருஷோத்தமன் வாமனவடிவைக்கொண்டு மாபலியிடத்திலே தாநமென்றுசொல்லி யிரந்துகொண்டுசெல்ல வவன்தாநமாக மூவடிமண்கொடுப்ப,— வானமுமளந்துகொண்டு மாபலிதன்னைப்பின்னை யீனமாஞ்சிறையிலிட்டானிறையன்று. எ-து. தாநமென்று பூமியந்தரசுவர்க்கங்களையு மோரடியாலேயளந்துகொண்டு மற்றையடிக்கு விடந்தானில்லையென்று மாபலியைக்குற்றமானசிறையிலிட்டானாதலாற் கர்த்தாவல்லன், அஃதியாங்ஙனமென்

னில்.—ஒன்றீந்தோர்தங்கட் கூனஞ்செய்திடுவோர் தாங்களு த்தமரல்லவாகும். எ-து. ஒருவன்றுநஞ்செய்தா லதனையேற் றுக்கொண்டான் செய்தவனுக்கு நன்மைகொடுத்தலன்றித் தீமைகொடுத்தல் கத்ருலக்ஷணமல்லவாகையா லவன்கர்த்தா வல்லன். எ-று.

இச்செய்யுள் தாநஞ்செய்தார்க் ககிதஞ்செய்வான் கர்த் தாவல்லனென்று மறுத்துக்கூறிற்று. வாமனரூபம் கிருத்திரு மரூபம். ஊனஞ்செய்திடுகை செய்ந்நன்றிகோறல். (கசு)

மாயமான்றன்னைப்பொய்ம்மானெனவறியாதர க்கன், மாயைபிலகப்பட்டுத்தன்மனைவியைக்கொடுத் தான்றன்னை, மாயைக்குக்கத்தாவென்பைமதிகெட்ட ங்கவனைக்கொன்று, நாயனார்தமைப்பூசித்தான் கொ லைப்பாவநணுகிடாதே. (கரு)

(இ-ள்.) மாயமான்றன்னைப் பொய்ம்மானெனவறியாத ரக்கன் மாயையிலகப்பட்டுத் தன்மனைவியைக் கொடுத்தான் றன்னை மாயைக்குக்கத்தாவென்பை, எ-து. ஒருகாலத்திலே யிராமனுயவதரித் திலக்ஷுமியுந்தானும் வனசரிதராகித்திரியு நாளி லிராவண னிராமனைநீக்கி யிலக்குமியை யபகரித்துக் கொள்வா னோர்பொய்ம்மானையேவ வந்தமானிராக்ஷதமாயை யென்றறியாம லம்மானின்பின்னேபோய்த் தன்மனைவியைப் பிடிகொடுத்தானை மாயைக்குக் கர்த்தாவென்று கூறுவாய்,— மதிகெட்டங்கவனைக்கொன்று நாயனார் தமைப்பூசித்தான் கொலைப்பாவநணுகிடாதே. எ-து. இலக்ஷுமிநிங்குகை யாலே மயக்கத்தையுடையனு யிலங்கையிற்சென் றிராவண னையு மவன்சேனையையுங் கொன்றுகொன்றபாவநீங்கச் சேது

விலேவந்து பரமேசுவரனை யருச்சித்து வினைகெடுத்துக்கொண்டான் கர்த்தாவல்லன். எ-று.

இச்செய்யு ளிராமனுயிரக்ஷித்தானென்பதனை மறுத்துக் கூறிற்று. (கரு)

பரசுடன்பிறந்தான்றானும் பத்தனாய்ப்பரசினாலே, யரசறுத்தரனைநோக்கியருந்தவம்புரிந்தானன்று, பரசியபரசுராமன்பலதேவனுலகமெல்லா, முறைசெயுமுமையாள்கோனையுண்ணினைந்தியோகுநின்றான்

(இ-ள்.) பரசுடன் பிறந்தான்றானும் பத்தனாய்ப்பரசினாலே யரசறுத்தரனைநோக்கி யருந்தவம்புரிந்தானன்று. எ-து. ஒருகாலத்திலே விஷ்ணுமழுவுடன்பிறந்து பரசிராமனெனப்பெயரை யுடையனாய்ச் சிவபத்தனாய் மழுவைக்கொண் டிராசாக்களை யறுத் தந்தவிரத்தத்திலே ஸ்நானஞ்செய்து அந்தத் தோஷந்தீரப் பரமேசுவரனைநோக்கி யருந்தவம்புரிந்தானன்று,—பரசியபரசுராமன் பலதேவனுலகமெல்லா முறைசெயு முமையாள்கோனை யுண்ணினைந்தியோகுநின்றான். எ-து. பிரபஞ்சம்போற்றத்தக்க பரசிராமனும் பலபத்திராமனும் முப்பத்துமுக்கோடிதேவர்களும் பிரபஞ்சங்களும் வழிபாடுசெய்யுமுமையவள்மணாளனை ஞானக்கண்ணாலே கண்டுயோகத்திலேயிருந்தனர். எ-று.

இச்செய்யுள் பரசிராமனுயி ரக்ஷித்தானென்பதனை மறுத்துக்கூறிற்று. அன்று அந்நாளில். பலதேவன் பல பத்திராமன். உலகமெல்லாம் உயர்ந்தோரெல்லாம். (கசு)

ஓதியவாசுதேவர் தமையுபமனியதேவர், தீதிலாநோக்கஞ்செய்துசிவகரஞ்சிரத்திற்சேர்த்தி, யாதிபாலடிமையாக்கவரியுடல்பிராணனத்த, மீதெலாங்கொண்ணீயென்றங்கிறைஞ்சினனறிந்திடாயே.

(இ-ள்.) ஓதியவாசுதேவர் தமையுபமனியதேவர் திதிலாநோக்கஞ்செய்து சிவகரஞ்சிரத்திற்சேர்த்தி யாதிபாலடிமையாக்க. எ-து. புருஷோத்தமன் வாசுதேவராய் ஸ்ரீமத் துவாரகாபுரியிலேயிருக்க வியாக்கிரபாதமுனிகள் புத்திரராகிய வுபமன்னியமகாருஷிகயிலாயத்திக்கெழுந்தருள வவரை வாசுதேவர்கண்டெங்கே யெழுந்தருளுவதென்றுகேட்ப வவருங்கயிலாயத்துக்குப் போகிறேமென்ன வாசுதேவருங்கயிலாயத்திற்குச்செல்லாமலிங்கேகண்டிருப்ப அருள்செய்யவேண்டுமென்றுவணங்க வுபமன்னியமகாருஷியுங் குற்றமற்ற ஞானக்கண்ணாலே தீக்ஷிப்பித்துச்சிவஹஸ்தமும்வைத்துத்தரிசிப்பித்து அவரைச்சிவபத்தனாக்க,—அரியுடல் பிராணனத்தமீதெலாங்கொண்ணீயென்றங் கிறைஞ்சினு னறிந்திடாயே. எ-து. வாசுதேவரும் ஞானபூரணமாய் என்சரீர மத்தம் பிராணனிவையெல்லாங்கொண்டருளவேண்டுமென்று தோத்திரஞ்செய்து வணங்கிச்சிவபத்தராயிருந்தாரென் றறிவாயாக. எ-து.

இச்செய்யுள் வாசுதேவரையுங் கர்த்தாவல்லவென்று மறுத்துக் கூறிற்று. (கஎ)

பின்வரும்பரிதானகி யரியென்றாய்பின்புவந்தா, லென்வருமீசனலென் றறிகிலோமிவுளியார்க்கு, முன்வருமவதாரங்கண் முடிந்தமையறிந்தாயன்றே, பொன்வருஞ்சடையினன்றன் புகழெங்கும் புக்கதன்றே. (கஅ)

(இ-ள்.) பின்வரும் பரிதானகியரியென்றாய் பின்புவந்தாலென் வருமீசனலென் றறிகிலோமிவுளியார்க்கு. எ-து. அந்த விஷ்ணுவருகிற யுகத்துக்குதிரையாக வருவனென்று

யப்படியாகவந்தாற் பரமேசுவரனாலே யந்தக்குதிரைக்கியா திவருமென் றறிகிலோம்,—முன்வருமவதாரங்கண் முடிந்தமையறிந்தாயன்றே பொன்வருஞ் சடையினான்றன் புகழெங்கும் புக்கதன்றே. எ-து. முன்புவந்த வவதாரங்களினுண்டானமை நீகேட்டறிந்தா யாமிங்ஙனஞ் சொன்னமுறைமையால் பொன்போன்ற கொன்றையைத் தரிக்கப்பட்ட திருச்சடாபாரத்தையுடையவன் கீர்த்தியேயெங்கும் விளங்கிற்று. எ-று.

இச்செய்யுள் குதிரையாய் வந்திரக்ஷிப்பானென்பதனை மறுத்துக்கூறிற்று. பொன்வரும் பொற்பிரபைவரும் எனவுரைப்பினுமாம். என்வரும். எ-து. நிக்கிரகமோவநுக்கிரகமோ என்றது.

கைவரைமூலமேயோவெனக் கரிக்குதவுங்காட்டின், மொய்வரையெடுத்தான்மூலமாயிடவேண்டுமோதான், ஐயனேமுறையோவென்றாலரசனேவங்குச்செல்வான், வையகங்காப்பான்செய்கைவழக்கன்றேவூர்காப்பான்போல்.

(இ-ள்.) கைவரைமூலமேயோவெனக் கரிக்குதவுங்காட்டின்மொய்வரை யெடுத்தான் மூலமாயிடவேண்டுமோதான். எ-து. ஒருயானைமடுவின்கண் முதலை வாயிலகப்பட்டு மூலமேயென்று கூப்பிடவோடிச்சென்றவ் வியானையினதிடரைக்கெடுத்தது கொண்டே வரையையெடுத்தானிரையைக்காத்த விஷ்ணுகர்த்தாவாயிடவேண்டுமோ? அவன்கர்த்தாவன்று. அஃதெங்ஙனமென்னில்,—ஐயனேமுறையோ வென்றாலரசனேவங்குச்செல்வான் வையகங்காப்பான் செய்கைவழக்கன்றேவூர்காப்பான்போல். எ-து. இராஜாவைநோக்கியொருவன் முறையோவென்று கூப்பிட்டால் அம்முறைகேட்பானி

ராஜாவோவன்றே பிரபஞ்சத்தைப் பரமேசுவரனுக்கினை யினுலேரக்ஷிப்பானுகிய விஷ்ணுவோரான்மாவுக்கிடர்வந்தா லதனையொழிக்கு மதுமுறைமையன்றே. அஃதென்போல வென்னில் அரசனதாக்கினையாலே நின்றூரைக்காக்குங் காவற்காரனூரிற் காரியங்கேட்பான்போல. எ-று.

இச்செய்யுள் ஆனைமூலமென்றது பரமேசுவரனையே நோக்கியென்று கூறிற்று. (கக)

அன்றியுமானைமாலுக் கடிமையாய்மூலமேயோ,
வென்றிடுமதனுல்மாரு னிறைவனென்றியம்பவேண்
டா, வுன்றனக்கடிமையானுருன்னையெம்பெருமானெ
ன்ரு, லின்றுநீவணங்கு முன்றனெம்பெருமானே
நீயே. (உ0)

(இ-ள்.) அன்றியுமானைமாலுக்கடிமையாய் மூலமேயோ வென்றிடுமதனுல் மாருனிறைவனென் றியம்பவேண்டா. எ-து. அதுவன்றியும் விஷ்ணுவுக்கு யானையானதடிமையானபடியாலே தன்கர்த்தாவை மூலமேயென்று கூப்பிட்டதாயினதுகொண்டு விஷ்ணுவை மூலமாகியகர்த்தாவென்று சொல்லவேண்டா. அஃதெங்ஙனமென்னில்,—உன்றனக்கடிமையானுருன்னை யெம்பெருமானென்ரு லின்றுநீவணங்குமுன்றனெம்பெருமானே நீயே. எ-து. உன்னடியானுன்னை யெம்பெருமானென்றழைத்தா லிப்பொழுது நீ வணங்குகிற புருஷோத்தமனுவையோவன்றே? ஆதலா லியாவர்க்கு மூலமென்பது பரமேசுவரனைக்காண். எ-று.

இச்செய்யுளிரண்டு மொருதொடர்ச்சியாய் மூலமென்பதனையும் புருஷோத்தமனுதவிஷ்ணுவென்பதனையு மறுத்துக் கூறிற்று. (உக)

ஞாலமுண்டவனுலுண்டார் நல்லமுதமரரென்ருய், வேலைநஞ்செழமாலாதி விண்ணவர்வேந்துசென்று, காலமின்றெமக்குக்காவாய் கடவுளேயென்ன நாத, ஞலமுண்டிலனேற்றேவ ரமுதமுண்டிடுவதெங்கே. (உக)

(இ-ள்.) ஞாலமுண்டவனுலுண்டார் நல்லமுதமரரென்ருய் வேலைநஞ்செழமாலாதி விண்ணவர்வேந்துசென்று காலமின்றெமக்குக்காவாய் கடவுளேயென்ன. எ-து. பூமியை விழுங்கிய சாமர்த்தியத்தையுடையவனுலே தேவர்கள் நல்லமுதத்தைப்பொசித்தார்களென்ருய் சமுத்திரமர்த்தநத்திலே விஷம் பிறக்க விஷ்ணுமுதலாகத் தேவர்களெல்லா முஷ்ணம்பொறுக்கமாட்டாமலோடிவந்து அகாலமரணமெங்களுக்கின்று சம்பவித்திருக்கிறது எங்களையிரக்ஷித்தருளவேண்டுங் கர்த்தாவேயென்ன அரனுனவர் கிருபைபண்ணி,-நாதனுலமுண்டிலனேற் றேவரமுதமுண்டிடுவதெங்கே. எ-து. பரமேசுவர னந்தவிடத்தையமுதுசெய்யவில்லையாயின் விஷ்ணுமுதலிய தேவர்களெல்லாம் பிழைத்துப் பின்பமுதத்தையுண்டாக்கியதனை யுண்பதெங்ஙனஞ்சொல்வாய். எ-று.

இச்செய்யுள் பரமேஸ்வரனே கர்த்தாவென்பது கூறிற்று. ஞாலமுண்டவனுலுண்ணு நல்லமுதரனுரென்ருய், எனப்பாடமோதி அரனுர் புருஷோத்தமனுலே யுண்ணபட்ட வெச்சிற்றேவரென்றனையந்தப்பரமேஸ்வரன் பிருதிவிக்குளடங்கினவனன்று என்று மற்ருெர் பிரதியிலிருக்கின்றது. இதன்கருத்து மஹாவிஷ்ணுவாலுண்ணப்பட்ட பூமியிலிருப்பவர் பரமசிவனென்பதுபோலும். (உக)

அஞ்சியன்றரிதானோட வசுரனைக்குமரனாலே,
துஞ்சுவித் தொருபெண்ணாலே தாருகனுடறுணிப்
பித்,தஞ்சிடப்புரந்தீயூட்டிச்சலந்தரனுடல்கீண்டோத
நஞ்சினையுண்டுமன்றோநாயகனுலகங்காத்தான். (உஉ)

(இ-ள்.) அஞ்சியன் றரிதானோடவசுரனைக் குமரனாலே துஞ்சுவித்து. எ-து. சூரபத்மாவுக்குப்பயப்பட்டு விஷ்ணுதிருப்பாற்கடலை நீங்கிப்போய்ப் பரமேசுவரனுக்குமுறையிடச் சுப்பிரமணியனையுண்டாக்கி அவனாலேசூரபத்மாவைச்சங்கரிப்பித்தும்,—ஒருபெண்ணாலேதாருகனுடறுணிப்பித்து. எ-து. தாருகனென்னுமசுரனுக்கு விஷ்ணுமுதலாகிய தேவர்களெல்லாம் பயப்பட்டுப்போய்ப்பரமேசுவரனுக்குமுறையிட வப்போதுகாளியென்னுஞ்சத்தியைக்கொண்டு தாருகனுடலைச்சேதிப்பித்தும்,—அஞ்சிடப்புரந்தீயூட்டி. எ-து. திரிபுரத்தசுரர்க்குப்பயப்பட்டு விஷ்ணுமுதலாகியதேவர்களெல்லாரும் பரமேசுவரனுக்குமுறையிடத் திரிபுரத்தைச்சுட்டும்,—சலந்தரனுடல்கீண்டு. எ-து. ஜலந்தரனென்னுமசுரன் விஷ்ணுவைத் திருப்பாற்கடலிற் பள்ளிகொள்ளவொட்டாமலோட்டித்திரிய விஷ்ணுஜலந்தரனுக்குப் பயப்பட்டுப்போய்ப் பரமேசுவரனுக்குமுறையிடச்சக்கரத்தாலே ஜலந்தரனுடலைப்பிளந்துபோட்டும்,—ஓத நஞ்சினையுண்டும். எ-து. சமுத்திரமர்த்தனத்திலேபிறந்தவிடம் பதினாலுலகத்தையுஞ்சுட வந்தவிடத்தையமுதுசெய்தும்,-அன்றோநாயகனுலகங்காத்தான். எ-து. இப்படியன்றோபரமேசுவரன் பிரபஞ்சத்தை ரக்ஷித்தான். எ-று. உண்டும்என்றஉம்மை கடைநிலைத்தீபகம்.

இச்செய்யுள் பிரபஞ்சத்துக் கிரக்ஷகர்த்தாவும் பரமேசுவரனென்பதுகூறிற்று. (உஉ)

பார்த்தனுரிரதமேறிப்படைதனைப் பார்த்துச்சார்வைக், கூர்த்தவம்பாலேயெய்துகொன்றரசாளேனென்னத், தேர்த்தனிலிருந்துமாயைசெய்துமால்கொல்லச்செப்பும், வார்த்தைநூலாக்கிக்கொண்டாய்புரங்கொள்நூன்மதித்திடாயே. (உங)

(இ-ள்.) பார்த்தனுரிரதமேறிப் படைதனைப்பார்த்துச் சார்வைக் கூர்த்தவம்பாலே யெய்துகொன்றரசாளேனென்ன எ-து. அருச்சுனன்யுத்தஞ்செய்வதாகத் தேரிலேறிநின்று சத்துருக்களைப்பார்த்துச் சத்துருக்களாகத்தோன்றினுரெல்லாமென்னுடையமித்துருக்களாகவிருந்தவிவர்களைக் கூரியவம்பாலேகொன் றிராச்சியஞ் செய்வதில்லையென்றுசொல்ல,—தேர்த்தனிலிருந்து மாயைசெய்துமால்கொல்லச்செப்பும் வார்த்தை நூலாக்கிக்கொண்டாய் புரங்கொள் நூன்மதித்திடாயே. எ-து. அவனுக்குத் தேர்ப்பாகனுகிய கிருஷ்ணனவன் மனந்தேறிடக்சொல்வது காரணுத் சர்வமுநாமே கொல்லுவங்கா ணீயல்லவென்று மயங்கச்சொன்னசொல்லையே நூலாக்கிக்கொண்டாயாயின் திரிபுரத்துள்ளார் சிவபூசையைக்கைவிடும்பொருட்டாக விஷ்ணுபுத்தமுனியாக விருந்து தெய்வமென்றில்லையென்று மயக்குவித்துச் சிவலிங்கத்தைக் கைவிடுவித்தநூலையு நீ நூலாகக்கொள்வாயாக. எ-று.

இச்செய்யுள் ஞானநூலுரைத்தானென்பதனையுங் கிருஷ்ணன்கர்த்தாவென்பதனையுமறுத்துச்கூறிற்று. இதனுற்றிரிபுரத்தசுரர்களைச்சிவபத்திக்குலைத்துந்தேரிலிருந்து அருச்சுனனை மயக்குரையாற்பேதித்தும் ஜயித்தது கர்த்தாவுக்கியல்பல்லவென்பதுகருத்து. (உங)

மாயை தானுயிர்களாகா துயிர்கடாமாயையாகா,
மாயவனிவைதானுகா னிவைதானுமாயனுகா, வேயு
மாமனுதியாக விறைபசுபாசமென்றே, தூயவன்க
லப்பினுலே யெல்லாமாய்த்தோன்றுவன்காண். (உச)

(இ-ள்.) மாயைதானுயிர்களாகாது. எ-து. மாயையானது ஜடமாகையாலான்மாக்களாகாது,— உயிர்கடாமாயையாகா. எ-து. ஆன்மாவு மிச்சாஞானக்கிரியைகளையுடைத்தாகையால் ஜடமாகிய மாயையாகா, — மாயவ னிவைதானுகான். எ-து. புருடோத்தமன் ஞானசொரூபியென்று நீ கூறுகையால் ஜடமாகியமாயையும் சுத்தனுகியவான்மாவுமாகி நில்லான்,— இவைதானுமாயனுகா. எ-து. மாயையுமான்மாவுங் கூடிப்புருடோத்தமனுகமாட்டா,—ஏயுமாமநாதியாக விறைபசுபாசமென்றே. எ-து. மாயையாகியபாசமும் ஆன்மாவாகியபசுவும் இவையிற்றை நடத்துவாருகிய பதியுமநாதியிலே பொருந்தினவாகையால்,-தூயவன்கலப்பினுலே யெல்லாமாய்த்தோன்றுவன்காண். எ-து. நின்மலனுகிய கர்த்தா சம்பூரணனுகையாலே சர்வமுந்தானுகித் தோன்றுவனல்லது ஜடமுமான்மாவுமாய்ப் பிரிந்துநில்லான். எ-று.

இச்செய்யுள் புருஷோத்தமன் மாயையாயுமாயைக்குக் கர்த்தாவாயு நிற்பனென்பதனையு மறுத்துக்கூறிற்று. சித்து அசித்தாகாது, அசித்துச் சித்தாகாது, சித்திற்சேஷ்டிதனே கர்த்தா. மாயவனுன்மவர்க்க மென்க. (உச)

பாசத்தைப்பசுக்கள்விட்டுப் பதியினையடையமு
த்தி, யாசற்றவாகமங்க ளறைந்திடவறிவின்றிங்கே,
மாசற்றமான்மாசாகி மாயையுமுறுவனென்னிற், கூ
சிப்பின் கொள்ளார்நல்லோ ருனக்காமிக் குழம்பு
நூலே. (உரு)

(இ-ள்.) பாசத்தைப்பசுக்கள்விட்டுப் பதியினையடைய முத்தி யாசற்றவாகமங்களறைந்திட. எ-து. பாசமாகிய வஞ்ஞானங்களைப் பசுவாகியவான்மாக்கள்கைவிட்டுப் பதியாகிய கர்த்தாவைக் கூடுதலே முத்தியென்று குற்றமில்லாதவாகமங்கள் சொல்லாநிற்ப,—அறிவின்றிங்கே மாசற்றமான்மாசாகி மாயையு முறுவனென்னில். எ-து. மாலாகிய புருஷோத்தமன் அஞ்ஞானமுமா யஞ்ஞானத்தோடு கூடியவான்மாவுமாய் நிற்பனென்று நீ யறிவின்றியே சொல்லின்,— கூசிப்பின் கொள்ளார் நல்லோருனக்காமிக்குழம்புநூலே. எ-து. இப்படிவேதாகமங்களுக்குப் பொருந்தாதமயக்கநூலுனக்கேயாவதிதனை நூலென்றுசொல்ல விலச்சித்தியர்ந்தோரிதனைதர்த்தமுங்கொள்ளார். எ-று.

இச்செய்யுள் பதிபசுபாசமுந்தானேயாகி நிற்பனென்பதனை மறுத்துக் கூறிற்று. (உரு)

பிரமனென்றபோது பிரம்னேடரியுங்கூடிப்,
பரமனரிகலிடாமே பார்த்திடர்பண்ணிநின்ற, வுரம
னாழலுருபந்தன்னையு முணரமாட்டான், கரமனடி
கிரியேற்றான் கடவுளென்றறைவதென்னே. (உசு)

(இ-ள்.) பிரமனாரென்றபோது பிரமஞ்ஞேடரியுங்கூடி. எ-து. ஒருகாலத்துப் பிரமாவும் விஷ்ணுவுங்கூடித் தங்களில் மாறுபட்டுச் சிருஷ்டிக்கையாலே நானேகர்த்தாவென்று மிரக்ஷிக்கையாலே நானேகர்த்தாவென்றுஞ்சொல்ல,—பரமஞரிகலிடாமே பார்த்து. எ-து. பிரமவிஷ்ணுக்கள் தம்மில்யாறுபடாம லிவர்களகந்தையைக் கெடுப்பான்றிருவுள்ளம்பற்றி,- இடர்பண்ணிநின்ற வுரமஞ்ரழலுருபந்தன்னையு முணரமாட்டான். எ-து. உங்களில் நம்மை யடிமுடியறிந்தவன் கர்த்தர் வென்றருளி யொருதழற்பிழம்பாய்நிற்கப் பிரமாதிருமுடியைக்கண்டு வருவேனென்றன்னமாகப் பறந்துதேடியும் விஷ்ணுசீர்பாதங்காண்பேனென்று பன்றியாய்ப்பாதாளத்தைக் கீண்டுங் காணுமலிருவருக்கும் வியாகூலத்தை யுண்டாக்கிநின்ற வுரத்தையுடைய பரமேசுவரனது திருவுருவின்னபடியென்றறியமாட்டாஞனன், — கரமஞுடிகிரியேர்முன்கடவுளென்றறைவதென்னே. எ-து. சக்கரத்தைக்கையிலே யாட்சிநிலைபெறவேந்தின விஷ்ணுவைக் கர்த்தாவென்று சொல்லுவது நீயெதுகொண்டு. எ-று.

இச்செய்யுள் புருஷோத்தமன் பன்றியாயிடந்தும் பிரமாவன்னமாய்ப்பறந்துங் காண்டற்கரிய பரமேசுவரனே கர்த்தாவென்பது கூறிற்று. (உகூ)

தேரரியிறையன்றென்றே சிவமுனிதநீசிஞேடே,
போர்புரிந்திகலமாலைப் புக்கவன்பிடித்தடித்து, மார்
பினிலுதைத்துமாறன் சக்கரம்வயிற்றில் வைத்திட்,
டேர்மலி படைபடைத்திட் டரிபட வெறிந்தானன்றே. (உஎ)

(இ-ள்.) தோரியிறையன்றென்றே. எ-து. இதனை பிற்பூட்டாகப் பின்பேகூட்டிப்பொருளுரைக்க. சிவமுனிததீசிஞேடே போர்புரிந்திகலமாலே. எ-து. புருஷோத்தமனுக்குஞ் சிவபத்தனுகிய ததீசிமகாருஷிக்கு மோர்காரணத்தால் யுத்தமுண்டாய் மகாயுத்தஞ்செய்யப் புருடோத்தமனை,—புக்கவன்பிடித்தடித்து மார்பினிலுதைத்து மால்தன்சக்கரம் வயிற்றில் வைத்திட்டு. எ-து. ததீசிமகாருஷியுள்புக்குப் புருஷோத்தமனைப்பிடித்துப் பிரகரித்து மார்பிலேயுதைத்துச் சக்கரத்தையும் பறித்துமுறித்துப் *புருஷோத்தமன்வயிற்றிலேவைத்து,—ஏர்மலிபடைபடைத்திட் டரிபடவெறிந்தானன்றே. எ-து. அழகுபொருந்தின தோராயுதத்தைத்தானே யுண்டாக்கிப் புருஷோத்தமன் மயங்கிவிழ வெறிந்தான் மகாருஷியாதலாற் புருஷோத்தமன் கர்த்தாவல்லனென்று விசாரிப்பாயாக எ-று.

இச்செய்யுள் ததீசிமகாருஷிக்குப் புருஷோத்தமன் சளைப்புப்பட்டமை கூறிற்று. அவன்விட்ட சக்கரமுடைந்துபோகத் தருப்பையைப் படையாகப்படைத் தவன் ஜயந்தொலைத்தானென்றது. (உஎ)

சூலிகாணிறைமாலல்லன் சூலியைத்தொழுந்துர்
வாசன், மாலினுர்மார்மிதிப்பத் திருமறுமார்பனுகி,
நூலினுர்மார்பனேன்ருள் பட்டிடஞ் சுத்தமென்று,
பாலினுர்கடலானுங்கே பரிவொடுந் திருவைவைத்
தான். (உஅ)

(இ-ள்.) சூலிகாணிறைமாலல்லன் சூலியைத் தொழுந் துர்வாசன் மாலினுர் மார்மிதிப்பத்திருமறுமார்பனுகி, எ-து

சூலபாணியே கர்த்தா விஷ்ணுவல்லன், சூலபாணியை வழிபாடுசெய்யுந் துருவாச மகாருஷி விஷ்ணுவை யோர்காரணத்கோபித்து மார்பிலேமிதிப்ப வந்தத் துர்வாசமகாருஷி பாதம்பட்ட தழும்புகொண்டே திருமறுமார்பனென்னு பெயரையுடையனாகி,—நூலிஞர் மார்பனோன்ருள்பட் டிடஞ்சுத்தமென்று பாலினுர் கடலானுக்கே பரிவொடுந்திருவைவைத்தான். எ-து. திருப்பாற்கடலிலே பள்ளிகொள்ளுமவன் பிரமருஷியின்பாதம்பட்டவிடஞ் சுத்தமென்று பிரியத்துடனு மகாலக்ஷ்மியை யந்தமார்பிலேவைத்தானுகையால் புருஷோத்தமன் மலசம்பந்தியென் றறிவாயாக. எ-று.

இச்செய்யுள் புருஷோத்தமன் துர்வாசமகாருஷிக்குச் சளைப்படையப்பட்டமை கூறிற்று. (உ அ)

தவகுணனாய்மால்சென்று திவ்வியைச்சக்கரத்
தா, லவகுணஞ்செய்தன்ருேடப் பிருகுவந்தவனைப்
பார்த்துச், சிவனலதறியேனாகி லிதுசெய்தோன்செறி
கப்பத்துப், பவமெனமொழியமாலும் பயப்பட்டுப்
பதறிவீழ்ந்தான். (உகூ)

(இ-ள்.) தவகுணனாய் மால்சென்று திவ்வியைச் சக்கரத்தா லவகுணஞ்செய்தன்ருேட. எ-து. சிவபத்தனான பிருகுவென்னும் மகாருஷியினுடையபத்தினியாகிய திவ்வியையைப் புருஷோத்தமனுசைப்பட்டு அவளைக்கீரிடிக்கும்படியிருடியில்லாத சமயத்திலேசெல்ல வந்ததிவ்வியை யுடன்படாதபடியினாலே யவளுடம்பிலே சக்கரங்கொண்டு குணரகிதமாகிய குறிகளையிட்டுப்போக,—பிருகுவந்தவளைப்பார்த்துச் சிவனலதறியேனாகிலிதுசெய்தோன் செறிகப்பத்துப் பவமெனமொழிய மாலும்பயப்பட்டுப் பதறிவீழ்ந்தான். எ-து. பிருகு

வென்னுமகாருஷி யவனுடம்பைக்கண்டு யான்சிவனல்லாது வேறொருகடவுளில்லையென்னுஞ் சிவபத்தன் மெய்யேயாகி லிதுசெய்தவன்பத்துப் பிறப்புப்பிறக்கக்கடவனென்று சபிக்கப் புருஷோத்தமனும் பயப்பட்டுத்துக்கித்து வீழ்ந்தான். எ-று. தவகுணம் தவவேடம். அவகுணம் துற்குணம்.

பயப்பட்டுப்பரனைநோக்கித் தவம்பண்ணப்பர
னுந்தோன்றி, நயத்தஞ்சலென்றுவேண்டிற் றென்
னென்னநாரணன்றான், பெயர்த்தருள்பிருகுசாப மென
வன்பன்பிருகுவென்ன, வுயக்கொணீயவந்தோ றெ
ன்னவோமென்றானுலகநாதன். (௰)

(இ-ள்.) பயப்பட்டுப் பரனைநோக்கித் தவம்பண்ணப் பரனுந்தோன்றி நயத்தஞ்சலென்று வேண்டிற்றென்னென. எ-து. அந்தப் பிருகுசாபத்தினாலே பயப்பட்டுப்பரமேசுவரனைநோக்கித் தவசுபண்ணப் பரமேசுவரனு மநுக்கிரகித்துப் பயப்படாதே யுனக்குவேண்டியது எது என்றுகேட்ப,— நாரணன்றான் பெயர்த்தருள் பிருகுசாப மெனவன்பன் பிருகுவென்ன வுயக்கொணீபவந்தோ றென்னவோமென்றானுலகநாதன். எ-து. புருஷோத்தமன் பிருகுசாபத்தைத் தீர்த்தருள்வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யப் பரமேசுவரனும் பிருகுவென்னுடைய பத்தனென்றருள ஆனாலவன் சாபத்தாலேயெடுக்கும் பிறப்புக்கள்தோறுமென்னை ரக்ஷித்தருளவேண்டுமென்ன ஜகன்னாதனாகிய பரமேசுவரனுமப்படியே ரக்ஷிக்கிறேமென்றான். எ-று. (௩௰)

இப்படிபிருகுசாபத் தீரைந்துபிறப்பின்வீழ்ந்து, மெய்ப்படுதுயரமுற்று வருபவன்விமலனல்லன், எப்படியானுஞ்சொன்னே னிறையரியல்லனென்றே, மைப்படிகண்டனண்டன் மலரடிவணங்கிடாயே. (௩௧)

(இ-ள்.) இப்படி பிருகுசாபத்தீரைந்து பிறப்பின்வீழ்ந்து மெய்ப்படுதுயரமுற்று வருபவன்விமலனல்லன். எ-து. இந்த முறைமையிலே பிருகுசாபத்தாலே ஒன்பது பிறப்புப் பிறந்து சரீரவருத்தமுற்று மேலுங்குதிரையாகப் பிறந்தும் ஜநநமரணப்படுபவன் மலரகிதனான கர்த்தாவல்லன்,— எப்படியானுஞ் சொன்னேனிறையரியல்லனென்றே. எ-து. வேதாகமசாத்திரங்களானுஞ் சொன்னேன் மோக்ஷகர்த்தா விஷ்ணுவல்லனென்றே இனி மோக்ஷகர்த்தாயாவனென்ன வியம்புதியாயின்,-மைப்படிகண்டனண்டன் மலரடிவணங்கிடாயே. எ-து. நீலகண்டனாகிய மேலானவனே கர்த்தாவவனது தாமரைமலர்போன்ற சீர்பாதத்தைச் சரியைகிரியா யோகஞானத்தாலேவணங்கி நினதுபவத்தை நீக்கிக்கொள்வாயாக. எ-று.

தவகுணனாய் என்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுட்காறும் பிருகுவுக்குப் புருஷோத்தமன் அபசெயப்பப்பட்டமை கூறிற்று.

ஆதிதானாகியென்னுஞ் செய்யுண்முத லிச்செய்யுட்காறும் பாஞ்சராத்திரிமதத்தை மறுத்துக் கூறிற்று. (௩௧)

இதன் முன்னர் பிரமமதமும் இரணியகர்ப்ப வேதாந்த மதமும் இதன் பின்னர் வைகாநசம்பாகவதம் மாத்துவமத மென்னு மதங்களுமறுப்பு ஞானவரண விளக்கத்திற் காண்க.

பாஞ்சராத்திரிமதமறுதலை முற்றிற்று.

பாயிர முட்பட செய்யுள்—௩௦௧.

வெண்பா.

நத்துவயலொற்றியூர் ஞானப்பிரகாசனருட்
சித்திபடருரையைச்செப்பியபின்—வித்தகமாந்
தத்துவப்பிரகாசன் பதவிருத்திதான்செய்தான்
உத்தமர்சித்தத் தொருமையாய்.

சிவஞானசித்தியார் பரபக்ஷம்.

மூலமுமுரையும்

முற்றின.
